தகவல்வளங்களும் சேவைகளும்

Information Resources and Services

அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி



குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொக்குவில்

தகவல்வளங்களும் சேவைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொக்குவில்

தகவல்வளங்களும் சேவைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. 12795

தகவல்வளங்களும் சேவைகளும்

(Information Resources and Services)



அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி
கல்விசார் நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இ 12795

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 356

தகவல் வளங்களும் சேவைகளும்
அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி எழுதியது

பதிப்புரிமை ©: 2010, அ. ஸ்ரீகாந்தலட்சுமி

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது.
B 3 - G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு-10, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
B 3 - G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு-10

Takaval Vaḷankaḷum Cēvaikalum
(Information Resources and Services)
by: A. Srikanthaluxmy

First Edition : 2010

Published by **Kumaran Book House**
B 3 - G 3, Ramya Place, Colombo -10, Tel. - 2421388, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by **Kumaran Press (Pvt) Ltd.**
B 3 - G 3, Ramya Place, Colombo -10

ISBN 978 - 955 - 659 - 170 - 5

020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

நூலகச் சமூகத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவடையும் உலகுடன் இணைந்து கொள்ளும் தமிழ்

யாழ். பல்கலைக்கழக நூலகர்
திருவாட்டி. ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின்
நூலுக்கான ஒரு முன்னுரைக் குறிப்பு

இந்நூலினைப் பார்க்கும்பொழுது தமிழின் இன்றைய உலகு நிலைப்பட்ட இயைபுக்கான சிந்தனைத் தொடர்ச்சியை அறியக்கூடியதாக இருக்கிறது. தகவல் யுகம் எனப்படும் இன்றைய உலகில் தமிழ் மொழியின் பயன்பாடு தகவல் துறையில் எவ்வாறு தொழிற்படுகிறது, பயன்படுகிறது என்பன பற்றிய ஒரு தொழின்மை (Professional) கைநூலாகவே இந்நூல் மிளிர்கின்றது.

தமிழின் முக்கியத்துவம் முதலில் தென்னிந்தியப் பின்புலத்திலும் அடுத்து அனைத்திந்தியப் பின்புலத்திலும் மொழிநிலைப்பட்டும் (திராவிடம்) பண்பாட்டு நிலைப்பட்டும் நின்றது. தமிழின் வலிமை அதன் தொன்மையில் மாத்திரமல்ல அதன் தொடர்ச்சியிலும் உண்டு.

ஒரு மொழியின் தொடர்ச்சியென்பது குறித்த அந்த மொழி தனது வரலாற்று அநுபவத்திலே தான் எதிர் கொண்ட, தான் ஊடாடிய சக்திகளினூடே தன்னைப் பேணிக் கொண்டுள்ளமையாகும். நேரடியாகச் சொன்னால் தமிழின் தொடர்ச்சி ஏன் நடைபெறுகிறது, எவ்வாறு நடைபெறுகிறது என்ற வினாக்களுக்குப் பதில் வேண்டும். ஒரு மொழியின் தொடர்ச்சியிலுள்ளவொரு முக்கிய அம்சம், அந்த மொழி எல்லாக் காலங்களிலும் அன்றேல் ஒவ்வொரு காலங்களிலும் எதிர்நோக்கும் ஒவ்வொரு விடயப் பொருள்களையும் (Themes) உள்வாங்குவது மாத்திரமல்லாமல் அவற்றைத் தனதாக்கியும் கொள்வதே. அவ்வாறு தனதாக்கிக் கொள்ளாவிடில் அது அதைப் பேசுவோரிடத்தேயே இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுப் படிப்படியாக அருகிவிடும்.

சமணர், பௌத்தர் வருகையுடன் தமிழிலக்கியத்தின் பயன்பாடே மாறிவிடுகிறது. அவர்கள் இலக்கியத்தை மனவெழுச்சிச் சித்திரிப்புக்கு மேலே சென்று அறிவுக்கான தொடர்பாடல் முறைமையாக்கினர். பல்லவர் காலப்பிற்பகுதி முதல் தமிழ் 'அரசகரும மொழியாகிறது'. அதாவது அரசு தான் சொல்லவேண்டிய விடயங்களைச் சொல்வதற்கு மொழியைப் பயன்படுத்திற்று. கல்வெட்டுக்களின் பயன்பாட்டில் இதனை உய்த்துணர்ந்து கொள்ளலாம். அதாவது அக் கல்வெட்டுக்கள் ஆட்சிநிலைப்பட்ட தகவல்களைப் பிரகடனப் படுத்துவனவாகவுள்ளன.

கப்பல் சாஸ்திரம் போன்ற நூல்கள் நமக்கு இன்று கிடைக்கவில்லை. நமது இலக்கிய வரலாற்றாசிரியர்களும் சோதிட நூல்கள் போன்றவற்றை இலக்கிய வரலாற்றினுள்ளே சேர்த்துக் கொள்வதில்லை. உண்மையில் சோழராட்சிக்குப் பின்னர் மருத்துவம், சோதிடம் பற்றிய மிக நுண்ணிதான நோக்குடைய அதேவேளையில் பரந்துபட்ட தகவல்களை உள்ளடக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் பல தோன்றத் தொடங்கின. (தமிழிலக்கிய வரலாறுகளில், வரலாறு பற்றியெழுதப்படும் நூல்களில் அவர்கள் இலக்கியத்தைப் பற்றி மட்டும்தான் எழுதுகிறார்கள். ஆனால் சமஸ்கிருத இலக்கிய வரலாற்றையெழுதுவோர் அப்படிச் செய்வதில்லை. அவர்கள் சமஸ்கிருதத்தில் தோன்றிய எழுத்துக்கள் (Writings) யாவற்றையும் உள்ளடக்குவர்.)

இக்கட்டத்திலே ஓர் ஆங்கிலத் தொடரினைக் கூற வேண்டுவது அவசியமாகிறது. ஆங்கிலத்தில் பல்வேறு தொழிற்துறைகளுக்கு வேண்டிய விடயங்களை அத்தொழிற்றுறையாளரே அத்தொழிற்றுறைக்குள்ள சிறப்புப் பிரயோகங்களைப் பயன்படுத்தி எழுதுவர். இவற்றை விளங்கிக் கொள்வதற்கு ஆங்கில அறிவு மாத்திரம் போதாது. இவை ஆங்கிலத்திலே எழுதப்பட்டனவென்பதற்கு அப்பாலே அந்தத் தொழின்மை (Profession) பற்றித் தெரியாதவர்களுக்கு அந்நூலிலே கூறப்படுவன விளங்காது. (நம்மிற் பலருக்கு ஆங்கிலம் தெரியுமென்பதால் ஆய்வுநிலை பௌதிகவியல் / இயற்பியல் நூல்களை நாம் விளங்கி விட முடியாது.)

இவ்வெண்ணக்கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறுவதற்கான காரணம், இந்நூல் முற்றிலும் தகவல் சேவை சம்பந்தப்பட்ட விடயங்களை அவற்றுக்குரிய சாஸ்திரிய முறையிற் கூறுவதேயாகும். உண்மையில் இது அத்தொழின்மையாளருக்கான ஒரு நூலே. அத் தொழின்மையிலுள்ள ஒருவர் அத்தொழின்மையிலீடுபட்டோருக்கு எழுதும் நூலாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்கூற்றில் மிகப்பெருமளவிலே வளர்ந்த பயில்துறை தொடர்பாடலியல் எனும் Communication Study ஆகும். அதில் யார் யாருக்கு எதை எப்படி எவ்வாறு எத்தனை தாக்கத்துடன் எடுத்துக் கூறுகின்றாரென்பதே அடித்தளமான கருதுகோளாகும்.

நாம் ஒவ்வொருவரும் இன்னொருவருடன் பேசுகின்ற பொழுது தகவல்களை விடுக்கின்றோம்; பெறுகின்றோம். ஆரம்பநிலையில் இந்தத் தகவல் கையளிப்புக்கு நூல்களே முக்கிய இடம் வகித்தன. நூல்கள் இல்லையேல் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இதனாலேயே 'கல்வி கேள்விகளில் சிறந்தவர்' என்ற வழக்குத் தமிழில் வந்தது.

தொழில்நுட்பப் புரட்சியின் மிகப் பிரதானமான அம்சம் அது சொல்லும் முறைமையினையும் கேட்கும் முறைமையினையும் ஆழ அகலப்படுத்தியது மாத்திரமல்லாமல், சொல்லப்படுவன யாவை என்பதிலும் ஆழ அகலத்தையேற்படுத்தியமையே ஆகும். அறிவியல் வளர்ச்சியின் அடிப்படைப் பண்பு புதிய அறிவுப் பெறுகையே ஆகும். புதிய அறிவைப் பெறுகின்ற பொழுது அதனைப் பெறுபவருடைய கண்ணோட்டமே மாறிவிடுகிறது. அதாவது தகவல்கள் கிடைக்கக் கிடைக்க அறிவுடைமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவற்றை நாம் சாதாரணமாக பார்த்தல், வாசித்தல், கேட்டல் ஆகியனவற்றால் மாத்திரமே அறிந்து கொள்ளமுடியாது. மேலும் இதற்குள்ளே பாரிய அரசியலும் உண்டு. அமெரிக்கா சொல்லும் உண்மையை இன்னொரு நாடு உண்மையென்று ஏற்றுக்கொள்ளாது. இது மாறியும் நடக்கமுடியும். இப்படியான நிலைமை ஏற்படுகின்ற பொழுது இவற்றினூடே உலகநிலைப்பட்ட ஜனநாயகமயப்பாடு (Democritisation) அதாவது தகவல் பெறும் உரிமை சகலருக்குமுண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதாயிற்று. இந்த அடிப்படையானது தகவற் கையளிப்பு நடைமுறைகளையே மாற்றிவிடுகின்றது.

உண்மையில் முதலில் Library எனப்படும் நூலகங்களே தகவல் நிலையங்களாகக் காணப்பட்டன. ஆனால் தொழில்நுட்ப, மின்பொறி வளர்ச்சிகள் காரணமாகத் தகவல்கள் வரும் முறைமை நூலை மாத்திரம் நம்பியிருக்கும் நிலையை இல்லாமற் செய்தன. புதிய தொடர்புச் சாதனங்கள் வந்துவிட்டன. இவையாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல கணினி எனும் Computer ரும் வந்து விட்டது. நாம் அதற்கு வேண்டியனவற்றை ஊட்டினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மிகப்பெரிய தகவல்களை அலசி ஆராய்ந்து பகுத்து நமக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய முறையிலே தரும். இத்தகையவொரு யுகத்திலேயே நாம் வாழுகின்றோம்.

இத்தகவல் முறைமைகளும் சேவைகளும் வளர்ந்து நிற்பதன் காரணமாக தகவல்* வளங்கள் ஒரு சிறப்புத்துறையாக வளர்ந்துள்ளது. 50, 60களில் அமெரிக்கத் தூதரக வாசக நூல் நிலையம் American Center என்ற பெயரில் இயங்கிற்று. இப்பொழுது அதன் பெயர் United States Information Services.

தகவல்கள் வழங்கப்படல் அறிவூட்டலுக்கு மாத்திரமல்ல அபிப்பிராய மாற்றங்களுக்கும் அவசியமாகிறது. இத்தகைய தகவல் வளம் எவ்வாறு மக்கள் நிலைப்படுத்தப்படுகின்ற தென்பதனை இந்நூலிலே விரிவாகக் காணலாம். உண்மையில் நூலின் அத்தியாயத் தலைப்புக்களே தகவற் களஞ்சியமாக மாறிவிடுகின்றன. இந்நூலினை எமக்குத் தந்துள்ள ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் ஆவார். இந்நூலை வாசிக்கும் பொழுது நூலகம் என்பது எவ்வாறு தகவல் மையமாக மாறுகிறது என்பதனை நன்கு புரிந்து கொள்ளமுடிகிறது.

இந்நூலிலே சாதாரண வாசகருக்கு முதலிலே தெரியாத பொருள்கள் இருந்தாலும் அதற்குள் நுழைந்துவிட்டால் அதுவொரு அறிவுப் பொக்கிஷமாக இருப்பதை அவதானிக் கலாம். இத்துறையில் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களின் திறமை, இத்தகவல் வளம் சம்பந்தப்பட்ட ஒவ்வோர் அம்சங்களையும் மிகமிக நுண்ணிதாக எடுத்துக் காட்டுவதேயாகும்.

நூலகம் என்பது இப்பொழுது வெறுமனே புத்தகங்களை அவற்றின் இயைபுக்கேற்ப அடுக்கி வைத்திருக்கின்ற விடயமல்ல. அதற்கு மேலே உள்ள பரிமாணங்கள் ஒவ்வொன்றையும் ஸ்ரீகாந்தலட்சுமி வெளிக்கொணருகிறார். ஒவ்வொரு வகை எழுத்துக்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்று அவர் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்.

இந்நூல் கைதேர்ந்த மருத்துவரொருவர் வளர்ந்து வரும் மருத்துவர்களுக்கு எழுதும் மருத்துவ விளக்க நூல் போன்றே அமைந்துள்ளது. இப்படியான நூல்கள் தமிழில் வெளிவருவது மிகமிகக் குறைவு. தமிழகத்திலே கூட இத்துறையிலே இது போன்ற நூல்கள் எத்தனை வெளிவந்துள்ளன என்பதனை ஒப்புநோக்கி ஆராய்தல் அவசியமாகும்.

சுவடி, ஏடு, நூல், புத்தகம் என புத்தகங்களுக்குத் தமிழிலே இந்திய பாரம்பரியத்திலே ஒரு பிதிர்வழி உண்டு. திருவாட்டி ஸ்ரீகாந்தலட்சுமி எழுதியுள்ள இந்நூல் அந்தப் பரப்பை அகட்டுகின்றது, ஆழப்படுத்துகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் இவருக்குக் கடமைப்பட்டுள்ளது.

23 A, வெண்ட் வேர்ட் இடம்
தெகிவளை
இலங்கை

அன்புடன்
கார்த்திகேசு சிவத்தம்பி

★ தமிழின் ஆழ்ந்தகன்ற தொடர்ச்சிக்கு 'தகவல்' என்ற சொல்லே நல்ல உதாரணம். முன்னர் அறிபொருள், பொருள் (பொருட்பால், பொருளதிகாரம்) என்று கூறப்பட்டு வந்தது. இப்பொழுது தகவல் எனும் அறபு மொழிவழிச் சொல்லை பயன்படுத்துகிறது. இதற்குள் தமிழின் தொடர்ச்சியின் வலிமை காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கள் எழுதி வெளிவந்திருக்கும் 'தகவல் வளங்களும் சேவைகளும்' எனும் இந்நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். நூலக மற்றும் தகவலறிவியல் பாடத்துறையில் தமிழில் நூல்கள் போதிய அளவு வெளிவந்திருக்கவில்லை என்பது உண்மை. தமிழில் இப்பாடத்துறைக்குரிய நூலினை எழுதத் துணிந்தவர் எண்ணிக்கையில் மிகக் குறைவு. ஆசிரியரின் துணிவும், தமிழார்வமும் அளப்பரிய பாராட்டிற்குரியவை. பல நூல்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களையெல்லாம் ஒரே புத்தகத்தில் கோர்வையாகத் தந்திருக்கிறார். பொறுக்கியெடுத்து இணைத்திருக்கும் மேற்கோள்கள் யாவும் ஆசிரியரின் பரந்த வாசிப்பறிவையும் பாடத்துறை பற்றிய கருத்தாழத்தையும் வெளிப்படுத்துகின்றன.

வாசகரின் தகவல் தேவை நிறைவுறுமாறு ஆவணங்களைக் கொள்முதல் செய்வதோடு, அவை ஒவ்வொன்றுக்கும் குறியீடு அளிப்பது, விபரிப்பு அடங்கிய நூற்பட்டி தயாரிப்பது, பின்பு அடுக்குகளிலோ அல்லது கோப்புகளாகக் கணினியிலோ ஒழுங்குற அமைப்பது போன்ற அன்றாடப்பணிகள் ஒவ்வொரு நூலகத்திலும் உண்டு. இப்பணிகளெல்லாம், உசாத்துணைச் சேவையைக் குறிக்கோளாகக் கொண்டுதான் மேற்கொள்ளப்படுகின்றன. வாசகரின் தகவல்தேவை நிறைவுறுமாறு வழிநடத்தும் நூலகரின் உசாத்துணைச் சேவைக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்று குறிப்பிடுகிறார் நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படும் ரங்கநாதன். இச்சேவை முழுமை பெறத் தகவல் வளங்கள் மற்றும் சேவை பற்றிய தெளிவான அறிவு நூலகருக்கும் வாசகருக்கும் மிகவும் அவசியம் என்றும் குறிப்பிடுகிறார். இப்புத்தகம் இலக்கணமாய் விளங்குகிறது.

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க, இப்புத்தக ஆசிரியர் ஆர்வத்தோடு பயின்று, நூலகத்திலேயே பணியாற்றும் வாய்ப்பும் பெற்று, தெளிவான தகவலறிவோடு, வளமான தகவற் சேவையும் ஆற்றிவருவதன் வெளிப்பாடே இப்புத்தகம். 'பொன்மலர் நாற்றமுடைத்து' எனும் ஆற்றுப்படை வரிகளுக்கேற்ப இப்புத்தகத்தின் பொருள் பொன்மலர் என்றால் தமிழ் இதன் மணம் என்று கூறவும் வேண்டுமோ? வாசிப்போருக்கு நெருடாத வண்ணம் இனிமையான ஈழத்தமிழில் சீரான நீரோட்டமாக அகராதியின் துணையின்றிப் படிப்பதாக அமைந்திருக்கும் எளிமையான இதன் சிறப்பு வடிவம் பாராட்டுக்குரியது.

இப்புத்தகம் வாசகர்களுக்கு மட்டுமின்றி, நூலகர்களுக்கும், நூலக தகவலறிவியல் மாணவர்களுக்கும் பயனுள்ள ஒரு தகவற் களஞ்சியமாக விளங்குகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. வாசகரின் தகவல் தேடலை எளிதாக்கும் இப்புத்தகம் ஒரு சிறந்த பாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகமாகவும் விளங்குகிறது. பரிந்துரை செய்வதில் மகிழ்சியடைகிறேன். களப்புலம் சாதகமாக அமைந்திருக்கவில்லை என்றாலும் கூட, ஆசிரியரின் விடாமுயற்சி பாடத்துறைக்கு மாத்திரமல்ல, தமிழுக்குமொரு மிகப்பெரிய தொண்டு தான். இன்றுவரை தமிழில் கைகூடாத, நூலக மற்றும் தகவலறிவியல் பட்டப் படிப்பினைத் தமிழிலேயே நடத்த இயலும் எனும் எண்ணத்திற்குச் செயல் முறை வடிவம் இப்புத்தகம். ஆசிரியரின் படைப்புகள் தமிழில் தொடரவேண்டும் என்று அன்னை மீனாட்சி அருள் புரிய வேண்டி வாழ்த்துகிறேன்.

ஆ. தி. ஸ்ரீமுருகன்
துறைத்தலைவர் மற்றும் பல்கலைக்கழக நூலகர் (ஓய்வு)
நூலக மற்றும் தகவலறிவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

தகவல் யுகமொன்றில், கணினித் தொழில்நுட்பம், தொலை தொடர்புத் தொழில்நுட்பம், கட்புல செவிப்புல தொழில்நுட்பம், நுண்பிரதியாக்கத் தொழில்நுட்பம் என்பன இணைந்த தகவல் தொழில்நுட்பச் சூழலில், தகவல் கட்டுமீறல் என்ற கருத்து நிலையால் மனித சமூகம் திணறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், அறிவை ஆற்றலாகக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் காலமாற்றம் காரணமாக அன்றைய களிமண் பதிவுகள் முதற் கொண்டு இன்றைய கணினிப் பதிவுகள் வரை உருவிலும் உள்ளடக்கத்திலும் பெருகியிருக்கும் மனித சிந்தனைப் பதிவேடுகள் தொடர்பான பூரண அறிவானது இன்றியமையாதது.

எங்கும் எதிலும் சர்வசக்தியாக வியாபித்திருக்கும் தகவல் என்ற மூலவளமும், சூழலுடன் இசைந்து வாழ, சூழலைச் சரிசெய்து கொள்ள, சூழலை உருவாக்க இதனது அத்தியாவசியமும் உணரப்படும் ஒரு சமூகத்தில் தகவல் வளங்கள் என்ற பொருட்துறையானது வெறும் நூலகவியல் துறை சார்ந்தவர்களுக்கு உரியதாக மட்டுப்படுத்தப்பட முடியாது என்பது வளர்ச்சியடைந்த சமூகங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனுபவ உண்மை. நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறிந்துகொள்ள, கற்க, கற்பிக்க, கருத்தைத் தெரிவிக்க, பொழுதுபோக்க, ஆராய, புதிதாக அறிய, பிழை திருத்த, மதிப்பிட என்று பலதரப்பட்ட நோக்கங்களுக்காக நூலகத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொரு வாசகனுக்கும் உள்ளடக்கத்தின் அடிப்படையில் ஆய்வுக்குதவும் அடிப்படை வளங்கள் முதற்கொண்டு யார், எது, எங்கே, எப்போது, எப்படி, ஏன் என்ற கேள்விகளுக்கு விடை தேடுவதற்கு உதவுகின்ற உசாத்துணை வளங்கள் வரையும், உருவமைப்பின் அடிப்படையில் அன்றைய ஓலைச்சுவடிகள் முதற் கொண்டு இன்றைய இணையத்தளம் வரையும் தகவல் வளங்களின் பயன்பாட்டைப் பிரித்தறியும் அறிவு மிக மிக இன்றியமையாதது. எனவே தகவல் என்பது வெறும் நூல்களும் சஞ்சிகைகளும் தான் என்ற சராசரி வாசகனின் கருத்துநிலையை மாற்றும் முயற்சியே இந்நூல்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த குடி எனப் பெருமைப்பட்டுக் கொள்வதுடன் மட்டும் நிறுத்தி விடுவது போன்றே நாம் படித்தவர் என்று சற்று அளவுக்கதிக மாக பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடியளவுக்குத் தயார்நிலைக் கல்வியில் மட்டுமே தங்கியிருக்கும் எமது சமூகத்தை சிறிதளவாவது வாசிக்கப் பண்ண வேண்டும் என்ற அவாவும் அவ்வாறு வாசிக்கச் செய்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு அறிவு எங்கே, எப்படி, என்ன வடிவில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது? அவற்றை எவ்வாறு அணுகுவது? போன்ற சந்தேகங்களுக்கு ஓரளவாவது விடை தரக்கூடிய தகவலை இச் சமூகத்தின் முன்னே வைப்பது தான் முதலாவதும் முக்கியமானதுமான கடமை என்ற தீர்மானமுமே இத்தகையதொரு தலைப்பைத் தெரிந்தெடுக்கும் ஆவலைத் தூண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகனுக்குத் தேவைப்படும் தகவலை அவனுக்குத் தேவைப்படும் நேரத்தில் எவ்வித கால விரயமுமின்றி வழங்குவது தான் உண்மையான சேவையெனில் அத்தகையதொரு சேவையைச் செய்வதற்கு வாசகனைப் பற்றியும் தகவல் வளங்களைப்பற்றியும் பூரணமாக அறிந்து வைத்திருக்க வேண்டிய தேவை தகவல் அமைப்பின் அலுவலர்களுக்கு உண்டு. எனவே வாசகனையும் அவனுக்குத் தேவையான தகவலையும் சரியான வகையில் இணைத்து விடுவதற்கு தகவல் வளங்கள் பற்றிய அறிவும் அவற்றின் முக்கியத்துவத்தை இனங்காணும் வல்லமையும் நூலக அலுவலர்களுக்கும் இன்றியமையாதது என்ற உணர்வும் இந்த ஆவலுக்கு மேன்மேலும் உந்துக்கம் அளித்தன.

பொருட்துறையின் ஆழமும் அகலமும் சற்றுப் பெரிதாக இருந்தமை இத்துறை சார்ந்த தேடலில் கணிசமானளவு காலத்தை விழுங்கிவிட்டது. யுத்தநெருக்கடி இதன் வெளியீட்டைச் சற்றுப் பின்னடையச் செய்துவிட்ட போதும் அன்றைய நூல் தொடக்கம் இன்றைய இணையம் வரை தேடித், தொகுத்து, பகுப்பாய்வு செய்து, ஒழுங்கமைத்து பயன்பாட்டுக்காக உங்களை வந்தடைந்திருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக வளங்களும் இணையத்தளங்களும் தான் இந்த நூலுக்கான பிரதான தகவல் மூலங்கள். எத்தனையோ விடுபட்டிருக்கக்கூடும். அள்ள அள்ளக் குறையாத தகவல் வளங்களை ஒரு நூலுக்குள் உள்ளடக்குவது சாத்தியமற்றது. எனவே முக்கியமான வளங்கள் மட்டும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது.

பதினாறு அத்தியாயங்களில் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. தகவல் வளங்கள் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு தகவல் பிரபஞ்சம் பற்றிய அறிவும் தகவல் என்ற கருத்துநிலை தொடர்பான தெளிவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு முதல் இரு அத்தியாயங்களும் இவ்விரு கருத்துநிலைகளைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன. மூன்றாவது அத்தியாயம் தகவல் வளங்களின் வளர்ச்சிப்போக்கைப் பதிவு செய்யும் அதேசமயம் தகவல் வளங்கள் தொடர்பான புதிய கருத்துருவாக்கத்தையும் உள்ளடக்குகின்றது. 'தாள்களில் உருவான சாதனங்கள் மட்டுமே நூலகத்துக்குரியவை' என்ற தவறான கருத்துநிலையைக் களைந்தெறிவதற்கு உதவும் வகையில் புராதன காலம் தொட்டு இன்று வரை தகவலைத் தாங்கி வரும் ஊடகங்கள் தொடர்பான விளக்கத்தை நான்காவது அத்தியாயம் தரமுனைகின்றது. அடுத்து வரும் மூன்று அத்தியாயங்களும் தகவல் வளங்களை உள்ளடக்கத்தின் அடிப்படையில் பாகுபாடு செய்து விளக்குகின்றது. தகவல் வளங்களில் மிகப் பெறுமதி வாய்ந்தவையாகக் கருதப்படும் உசாத்துணை வளங்கள் பற்றிய அறிவு வாசகனுக்கு அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையிலும் வாசகரின் இலகுவான பாவனையைக் கருத்தில் கொண்டும் இரண்டாம் நிலைத் தகவல் வளங்களில் ஒன்றான உசாத்துணை வளங்கள் தனி அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன. இதில் உசாத்துணைக் கருவிகள், நூல் தெரிவுக் கருவிகள் ஆகிய இரண்டும் தனித்தனி அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு ஆக்கமும் தனது பிரதேச இலக்கியங்களுக்கு முன்னுரிமை அளித்தல் அவசியம் என்ற வகையில் இலங்கையில் வெளியிடப்பட்ட உசாத்துணை சாதனங்கள் பத்தாவது அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பதினொராம் பன்னிரண்டாம் அத்தியாயங்கள் ஆவணம் சாராத வளங்களான மனித வளங்களையும் நிறுவன வளங்களையும் ஆராய்கின்றது. நிறுவன வளங்களில் ஒன்றான தகவல் சேவை நிறுவனங்கள் தனி அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன. இறுதி மூன்று அத்தியாயங்களும் தகவல் சேவைகள் என்ற பொதுத் தலைப்பின் கீழ் அமைகின்றது. நூலக சேவைகள், தகவல் சேவைகள், உசாத்துணை சேவைகள், நூலக விரிவாக்க சேவைகள் என்பன இதில் ஆராயப்படுகின்றன. நூலுக்குள் நுழைவதற்கு முன்னர் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்களை வாசகர் மனதில் உள்வாங்கிக் கொள்வதன் மூலமே நூலைச் சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் பயன்படுத்த முடியும் என்ற வகையில் இந்நூலுக்கான கலைச்சொல் அகரமுதலி நூலின் இறுதிப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் உருவாக்கம் தொடர்பாக நன்றி கூறப்பட வேண்டியவர்களில் முதலாவதும் முக்கியமானதுமானநபர் 'நூலகவியல் துறை சார்ந்து கற்பித்தல் கலையில் என்னைக் கவர்ந்தவரும்' தகவல் வளங்கள் பற்றி எனக்குக் கற்பித்தவரும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் அன்றைய விரிவுரையாளரும், இன்று நூலகர், துறைத்தலைவர் என்ற இருபதவிகளையும் வகிப்பவருமான திரு சிறிமுருகன் அவர்கள். ஆங்கில மொழி ஊடகத்தில் பட்டப்பின்படிப்பை மேற்கொண்ட காலத்தில் அவரது தெளிவான, ஆணித்தரமான கற்பித்தல் பாங்கும், மதுரைத் தமிழ் உச்சரிப்பிலேயே ஆங்கிலத்தை அறுத்துறுத்துப் பேசும் அழகும் மனதில் ஆழப்பதிந்தபோதே தகவல் வளங்கள் என்ற பொருட்துறை மீதான ஆர்வமும் தேடலும் என்னுள் கருக்கொண்டது. உசாத்துணை வளங்கள் அனைத்தையும் ஓரிடத்தில் அடுக்கி வைத்துவிட்டு உசாத்துணைக் கேள்விகளுக்கு உடனுக்குடன் விடையளிக்கும் வினாடிவினா நிகழ்வைக் கூட மிகச் சிறப்பாக நடத்தி மாணவர்களின் அறிவுத்திறன் அதிகரிக்க உதவியிருக்கின்றார்.

இதே ஆர்வம் தான் 1990ம் ஆண்டில் இலங்கை நூலகச் சங்கத்தின் விரிவுரையாளராக கற்பித்தல் செயற்பாட்டில் என்னை உள்நுழைத்துக்கொண்ட காலத்தில் நான் விரும்பித் தேர்ந்தெடுத்த ஒரு துறையாக இது இருந்தது மட்டுமன்றி தகவல் வளங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பும் அக்காலத்திலேயே முனைப்புடன் தொடங்கப்பட்டுவிட்டது. இந்த முனைப்புக்குக் காரணமானவர்கள் ஆரம்ப காலத்தில் என்னிடம் கற்ற நூலகவியல்துறை மாணவர்கள். வெறும் க.பொ.த சாதாரணதர அறிவுடன் நூலகவியல் துறையில் நுழைந்து அங்கு தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நூலகவியல் துறையை கற்க வந்திருக்கும் அந்த மாணவர்கள் முழுக்கமுழுக்க ஆங்கிலத்திலேயே படைக்கப்பட்ட உசாத்துணை சாதனங்களைப் புரிந்துகொள்வதற்குப் பட்ட சிரமம் தான் நூலகவியல் துறை சார்ந்து ஒரு ஆக்கத்தை படைக்க வேண்டும், அதையும் மிக விரைவாக உருவாக்க வேண்டும் என்ற உணர்வைத் தோற்றுவித்தது. அந்த வகையில் வெளியீட்டில் இது நான்காவது நூலாக இருந்தபோதும் இது எனது முதலாவது நூல். கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்மூல பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கும் இதன் பயன்பாடு கணிசமானளவில் இருக்கும்.

ஆங்கில மொழியிலேயே எண்ணற்றுப் பரந்து விரிந்திருக்கும் தகவல் வளங்களை எவ்வித சிரமமுமின்றி ஆங்கில மொழியில் படைத்து ஆய்வு நூல் என்ற அந்தஸ்தை அதற்கு இலகுவாகப் பெற்றுக்கொடுக்கக்கூடிய யதார்த்தத்தை முற்றிலும் புறந்தள்ளி 'தமிழருக்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்' என்ற புரட்சிக் கவி பாரதிதாசனின் வரிகளில் ஏற்பட்ட ஈர்ப்பிலும் 'இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்' என்ற பாரதியின் வரிகளுக்கு உயிரூட்டும் விருப்பிலும் கடுகளவு பங்களிப்பு இது. ஆய்வு நூலாக இருந்தாலும் கூட வித்துவத் தனத்தை வித்துவ மொழியில் படைத்துப் பயனில்லை என்ற உணர்வும் எப்படி எழுத வேண்டும் என்ற வினாவுக்கு உயிர் கொடுத்து கூடிய வரையில் எளிமையும் நேர்த்தியும் மிக்கவாறு தமிழில் படைக்கும் ஆவலைத் தூண்டியது.

'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்ற ஔவையின் வரிகளின் உள்ளார்ந்த பொருளில் எனக்கு இருந்த தெளிவற்ற தன்மையை முழுமையாக தீர்த்து வைத்த பேரறிஞர் சாமுவேல் ஜோன்சனின் வரிகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டேயாக வேண்டும். 'அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இருவகை. எமக்குத் தெரிந்த அறிவு ஒருவகை. எமக்குத் தெரியாததை எங்கே தேடிப்பெறலாம் என்ற அறிவு இன்னொரு வகை' என்ற அவரது வரிகளைப் படிக்க நேர்ந் போது ஏற்பட்ட தெளிவும் எனது துறை தொடர்பாக எனக்குள் உருவான மதிப்பும் இணைந்து கல்லாத உலகளவை கரைத்துக் குடிக்க முடியாது விட்டாலும் கால்பதித்து நடப்பதற்காவது வழிகாட்டும் வளங்களை என் அறிவுக்கெட்டியவரை தேடித் தொகுத்து செப்பனிட்டு வழங்குவதனூடாக சாமுவேல் ஜோன்சன் கூறும் இரண்டாவது வகை அறிவு முயற்சியில் சிறுபங்களிப்புச் செய்வதானது எமது சமூகத்தின் மேம்பாட்டுக்கு நிச்சயம் உதவும் என்கிற எதிர்பார்ப்பினது வெளிப்பாடாகவும் இந்நூலைக் கொள்ளலாம்.

இந்நூலுக்கு அணிந்துரை தந்த எனது பெருமதிப்புக்குரிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் இந்நூலை வெளியிடும் குமரன் புத்தக இல்லத்தினருக்கும் எனது நன்றிகள்.

இறுதியாக இந்நூலை உருவாக்குவதற்கான அனுபவ அறிவைத் தந்த எனது நூலகவியல் பணிக்கும் நான் கடமை புரியும் நூலகத்துக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இந்நூலின் சில பகுதிகளை அவ்வப்போது கணினியில் தட்டச்சு பொறிக்க உதவிய திரு. சி. செந்தூரன், இந்நூலின் அச்சுப் பிழைகளைச் சரிபார்த்து உதவிய திரு. நவநீதகிருஸ்ணன், திருமதி மு.துஷிதா ஆகியோரும் நன்றிகூறப்பட வேண்டியவர்கள்.

அ.ஸ்ரீகாந்தலட்சுமி
கல்விசார் நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
10-01-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

விரிவடையும் உலகுடன் இணைந்து கொள்ளும் தமிழ் vii

அணிந்துரை x

முன்னுரை xii

1. தகவல் பிரபஞ்சம் 1

1.0 தகவல் சமூகம் 1

1.1 தகவல் தொழிற்துறை 3

1.2 தகவலும் தேசிய அபிவிருத்தியும் 3

1.3 தகவல் மதிப்பு 4

1.4 தகவல் செய்முறை 4

1.5 தகவல் உலகின் பண்புகள் 5

2. தகவல் 8

2.0 அறிமுகம் 8

2.1 வரைவிலக்கணங்கள் 9

2.2 கருத்துநிலைகளின் பல்பரிமாணத் தன்மை 11

2.3 கருத்துநிலைகளுக்கிடையிலான உறவுநிலை 14

2.4 தரவும் தகவலும் 16

2.5 தகவலின் கூறுகள் 17

2.6 தகவலின் பண்புகள் 18

3. தகவல் வளங்கள் 19

3.0 அறிமுகம் 19

3.1 வளர்ச்சிப் போக்கு 19

3.2 புதிய கருத்துருவாக்கம் 23

3.3 வகை 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தகவல் ஊடகங்கள் 34

4.1 தகவல் பதிவு ஊடகங்கள் 34

4.2 தகவல் சேமிப்பு ஊடகங்கள் 37

4.3 தகவல் பதிவேட்டு வடிவ ஊடகங்கள் 48

5. முதல்நிலைத் தகவல் வளங்கள் 66

5.0 அறிமுகம் 66

5.1 தொடர் வெளியீடுகள் 66

5.2 அறிக்கைகள் 70

5.3 ஆய்வுக்கட்டுரைகள் 73

5.4 சிறு நூல்கள் 74

5.5 ஆய்வுத் தனிப்பொருள் நூல்கள் 75

5.6 காப்புரிமை இலக்கியங்கள் 75

5.7 நியமங்கள் 77

5.8 பொருளாக்க விபரங்கள் 80

5.9 வர்த்தக இலக்கியங்கள் 80

6. இரண்டாம் நிலைத் தகவல் வளங்கள் 83

6.0 அறிமுகம் 83

6.1 இரண்டாம் நிலைப் பருவ இதழ்கள் 83

6.2 நூல்கள் 83

6.3 அட்டவணைகள் 85

6.4 மொழிபெயர்ப்புகள் 85

6.5 விபரத்திரட்டுகள் 85

6.6 தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்கள் 85

6.7 உசாத்துணை சாதனங்கள் 86

7. மூன்றாம்நிலைத் தகவல் வளங்கள் 87

7.0 அறிமுகம் 87

7.1 நூல்விபரப் பட்டியல்களுக்கான நூல்விபரப் பட்டியல் 87

7.2 இலக்கியங்களுக்கான வழிகாட்டிகள் 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உசாத்துணை வளங்கள் 89

8.0 அறிமுகம் 89

8.1 கலைக்களஞ்சியங்கள் 90

8.2 அகராதிகள் 91

8.3 சொற்கருவூலங்கள், பொருட் தலைப்புப் பட்டிகள் பகுப்பாக்கத் திட்டங்கள் 111

8.4 உடனடி உசாத்துணை வளங்கள் 127

8.5 வழிகாட்டிகள் 136

8.6 வாழ்க்கை வரலாற்று நூல்கள் 142

8.7 புவியியல் சாதனங்கள் 145

8.8 நடப்பு உசாத்துணை வளங்கள் 148

8.9 புள்ளிவிபர மூலங்கள் 150

9. தகவல் வளத்தெரிவுக் கருவிகள் 155

9.1 நூல்விபரப் பட்டியல்கள் 155

9.2 வகை 155

9.3 சொல்லடைவுகள் 177

9.4 சாராம்சங்கள் 190

10. இலங்கை உசாத்துணை சாதனங்கள் 195

10.1 அரசாங்க வெளியீடுகள் 195

11. நிறுவன வளங்கள் 207

11.1 வர்த்தக நிறுவனங்கள் 207

11.2 கல்விசார் நிறுவனங்கள் 208

11.3 உத்தியோகபூர்வ நிறுவனங்கள் 210

11.4 தொழிற்றிறன்சார், ஆய்வு நிறுவனங்கள் 212

12. மனித வளங்கள் 213

12.1 பொருட்துறை நிபுணர் 213

12.2 கட்புலனாகாக் கல்லூரிகள் 213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.3 புதுமைச்சங்கிலி 213

12.4 தகவல் இடைத்தரகர்கள் 214

13. தகவல் சேவை நிறுவனங்கள் 215

14. தகவல் சேவைகள் 218

14.0 அறிமுகம் 218

14.1 பொதுச்சேவைகள் 218

15. உசாத்துணைச் சேவை 231

15.0 அறிமுகம் 231

15.1 வரைவிலக்கணம் 231

15.2 உசாத்துணை சேவையின் நோக்கங்கள் 232

15.3 உசாத்துணை சேவையின் பண்புகள் 233

15.4 வளர்ச்சிப்போக்கு 234

15.5 உசாத்துணை சேவை ஏன்? 235

15.6 வகைகள் 238

16. சிறப்புச் சேவைகள் 242

16.1 நூலக விரிவாக்க சேவைகள் 242

16.2 பத்திரிகைத் துணுக்குகளை வெட்டி ஒட்டுதல் 245

16.3 அண்மைக்கால தகவல் அறிவிப்புச் சேவை 245

16.4 தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் 246

16.5 மொழிபெயர்ப்புச் சேவை 247

பின்னிணைப்பு

கலைச்சொல் விளக்க அகராதி 249

தெரிவு நூல் விபரப்பட்டியல் 277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஒன்று

தகவல் பிரபஞ்சம்

1.0 தகவல் சமூகம் [Information Society]

இன்று நாம் வாழும் சமூகம் தகவல் சமூகம் எனப்படுகின்றது. ஆதிப் பொதுவுடைமைச் சமூகமாக வளர்ச்சியுற்றிருந்த மனிதனது குழு வாழ்க்கை விவசாயத்தை முதன்மையாகவும் நிலத்தைப் பிரதான மூல வளமாகவும் கொண்ட நிலவுடைமைச் சமூகம் ஒன்றையும், கைத்தொழிலை முதன்மையாகவும் இயந்திரங்களைப் பிரதான மூலவளமாகவும் கொண்ட கைத்தொழில் சமூகம் ஒன்றையும், ஆய்வு நடவடிக்கைகளை முதன்மையாகவும் அறிவைப் பிரதான மூல வளமாகவும் கொண்ட கைத்தொழில் சமூகத்துக்குப் பிந்திய சமூகம் ஒன்றையும் கடந்து தகவல் தொழிற்துறையை முதன்மையாகக் கொண்டு, முழுக்க முழுக்கத் தகவல் என்ற மூலவளத்தைச் சுற்றியே பின்னப்பட்ட தகவல் சமூகம் ஒன்றில் நடைபயிலுகிறது.

தகவல் சமூகம் ஒன்றிற்கான விதை 20ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலேயே முளைவிட்டு விட்டது. கணினித் தொழினுட்பம், தொலைத்தொடர்புத் தொழினுட்பம், படவரை கலைத் தொழினுட்பம் போன்ற துறைகளில் ஏற்பட்ட புரட்சியுடன் இணைந்து 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பாதியில் உருவாகிய சமூகம் ஒன்று தகவல் சமூகம் என அழைக்கப்படுவதை அபிவிருத்தியடைந்த நாடுகளில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது. 19ம் நூற்றாண்டு கைத்தொழில் யுகம் எனவும் 20ம் நூற்றாண்டு இலத்திரனியல் யுகம் எனவும் அழைக்கப்பட்டது போன்று 21ம் நூற்றாண்டு தகவல் யுகமாகப் பரிணமித்திருக்கிறது. 1980களில் கருக்கொண்ட தகவல் யுகத்தின் தோற்றப்பாடு 1990 களில் வீச்சடைந்து இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் ஊடுருவியுள்ளது. மின்னாமல் முழங்காமல் ஓய்ந்த விவ சாயப் புரட்சிக்கும் மின்னி முழங்கி ஓய்ந்த கைத்தொழில் புரட்சிக்கும் அடுத்ததாக மனித சமூகம் சந்திக்கும் மாபெரும் புரட்சியாகக் கருதப்படுவது தகவல் புரட்சியாகும்.

தகவல் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனிநபரும் தாம் பெறும் அறிவும் திறனும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குப் போதுமானதல்ல என்பதைக் கண்டுணரத் தொடங்கி விட்டனர். புதிய அறிவையும் திறனையும் பெறும் தேவை ஒவ்வொருவருக்கும் உண்டு என்பது தெட்டத் தெளிவாக இருப்பதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சவால்களும் பெருத்துவிட்டன. இதனால் அவர்களின் வாழ்நிலையும் சிக்கல் கூடியதாக மாறியிருக்கிறது. கிராம நகரச் சனத்தொகைகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பதில் தொழினுட்ப வளர்ச்சி தனித்த பங்கை ஆற்றுகிறது. இதுவரை கிடைக்கக்கூடியதாக இருக்கும் தகவல்களைத் தனிப்பட்ட முயற்சிகளினூடாகப் பயன்படுத்துவதன் மூலம் பிரச்சனைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளும் தன்மை அதிகரித்து வருகிறது. இதுவரை காலமும் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளும் அறிவே அறிவு என்று அதனுடனேயே திருப்திப்பட்டுக்கொள்ளும் நிலை மாறி அறிவுத் துறைகளின் அபரிமித வளர்ச்சிப்போக்கையும் தமக்குத் தேவைப்படும் தகவல் எங்கே எப்படிக் கிடைக்கப்பெறலாம் என்பதையும் உய்த்துணர்ந்து தமக்குத் தேவைப் படும் நேரத்தில் அவற்றைப் பயன்படுத்தும் அறிவும் வளர்ந்து கொண்டு வருகிறது. கிடைக் கக்கூடிய தகவல்களைப் பயன்படுத்திப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தொழினுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தும் தன்மையும் வளர்ந்து கொண்டு வருகிறது. வாழ்க்கை முழுவதும் கற்றலின் முக்கியத்துவம் பற்றிய அறிவு தகவல் சமூகத்தில் வளர்ந்து வருகிறது. தாம் விரும்பியவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குத் தகவல் அவசியம் என்பதை மனித சமூகம் நம்பத் தொடங்கியிருப்பதுடன் தகவலை அடிப்படையாகக் கொண்ட சுய கற்றலிலும் மக்கள் ஈடுபடத் தொடங்கி விட்டனர். வேலை, ஓய்வு, கல்வி என்பவற்றுக் கிடையிலான எல்லைகள் தகவல் சமூகத்தில் மறைந்து கொண்டு வருகிறது. கைத்தொழில் சமூகத்தின் ஆதாரசுருதியாக அமைந்த "அறிவே ஆற்றல்" [Knowledge is Power] என்ற பிரான்சிஸ் பேகனது கூற்று இன்றைய தகவல் சமூகத்தில் "தகவலே ஆற்றல்" [Information is Power] என்ற புதுமொழியாக உருவெடுத்துள்ளது.

உலகம் சந்தித்த மாபெரும் புரட்சியாகக் கருதப்படுவது கைத்தொழில் சமூகத்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியாகும் [Industrial Revolution]. ஐரோப்பிய நாடுகளில் தொடங்கி பின்னர் உலகம் முழுவதும் பரவிய இப் புரட்சி, விவசாயத்தை முக்கிய பொருளாதார மார்க்கமாகக் கொண்ட நிலவுடைமைச் சமூகத்தைத் தலைகீழாக மாற்றியது. இயந்திரங்கள், மின்சாரம், வாகனப் போக்குவரத்து, தொழிற்சாலை உற்பத்திகள் என மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கியது இப்புரட்சியே. மனிதனின் வாழ்க்கைமுறை, கல்வி, கலாச் சாரம், பொழுதுபோக்கு போன்ற அனைத்திலும் இது மாற்றத்தை ஏற்படுத்தியது. கடந்த இரு நூற்றாண்டு கால மனித சாதனைகள் கைத்தொழில் யுகம் ஏற்படுத்திய விளைவுகளே என கொள்ள முடியும்.

கைத்தொழில் புரட்சிக்கு அடுத்து உலகம் சந்திக்கும் அடுத்த பெரும் புரட்சி தகவல் புரட்சியாகும் [Information Revolution]. தகவல் புரட்சியின் வேர் கணினியே. 1990களின் ஆரம்பத்தில் தொடங்கிய தகவல்யுகத்தின் வீச்சானது உலகின் மூலைமுடுக்கெல்லாம் போய்ச் சேர்ந்து விட்டது. தகவலால் ஆளப்படும் உலகில் பெருக்கெடுத்து ஓடும் தகவல் பாய்ச்சலைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கவேண்டிய தேவை தகவல் தொழினுட் பத்தின் தோற்றத்துக்கு மூலகாரணமாகியது. தகவல் சாதனங்களைச் சேகரித்து வைக்கும் சேமிப்புக் குதங்களே நூலகங்கள் என்ற மரபு ரீதியான கருத்துநிலையில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக மாறியது. நூலகங்கள் என்ற எண்ணக் கருவிற்குப் பதிலாக தகவல் அமைப்புகள் என்ற கருத்துநிலை தகவல் யுகத்தின் தோற்றப்பாடுகளில் ஒன்றாக மாறியி ருக்கிறது. தகவல் புரட்சியின் பிரதான பலாபலனே தகவல் சமூகமாகும். 1950களில் தோற்றம் பெற்ற இக்கருத்துநிலையின் சொந்தக்காரர் Fritz Machlup என்ற பொருளியல் அறிஞரே. இவரது கருத்துப்படி கல்வி, ஆய்வு அபிவிருத்தி, தொடர்பு ஊடகங்கள், தகவல் இயந்திரங்கள், தகவல் சேவைகள் என்ற ஐந்து துறைகளையும் உள்ளடக்கிய தகவல் தொழிற் துறையானது உழைப்புச் சக்தியை விட அதியுயர் மொத்தத் தேசிய உற்பத்தியை வழங்கும் துறையாக மாறியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

1.1 தகவல் தொழிற்துறை [Information Industry]

இன்றைய பொருளாதாரத்தில் புதிய துறையாக தோற்றம் பெற்றிருக்கின்ற தகவல் துறையின் மிக முக்கிய உள்ளீடாகக் கருதப்படுவது தகவலாகும். விசேட பாவனையாளருக்குச் சேவை செய்யும் நோக்குடன் தகவலில் தேர்ச்சி பெற்றோர், தகவல் அறிவியலாளர், தகவல் தொடர்பாளர் என்போரை உள்ளடக்கிய தகவல் தொழிற்றுறை ஒன்றின் தோற்றமும் தகவல் யுகத்தின் தோற்றப்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. தகவல் தொழிற்றுறையின் மூலக் கூறுகளாகப் பின்வரும் அம்சங்களைக் கொள்ள முடியும் [United States 1973]:

* தகவல் கண்டுபிடிப்பு, உருவாக்கம், சேகரிப்பு: அறிவியலாளர், புலமையாளர், கலைஞர், எழுத்தாளர், தரவு சேகரிப்பாளர் போன்றோரின் பணிகளை இது உள்ளடக்கும்.
* தகவல் சேமிப்பு, மீள் பெறுகை, செய்முறை, பிரதியாக்கம்: வெளியீட்டுத் தொழிற்றுறை, திரைப்பட தொலைக்காட்சித் தொழிற்றுறை, தரவுச் செய்முறை அமைப்புகள், தகவல் அமைப்புகளும் அதனுடன் தொடர்புடைய சொல்வடைவாக்க சாராம்சப்படுத்தல் சேவைகளும், ஒலி, ஒளிப்பதிவுச் செய்முறை, கணக்காய்வுப் பணிகள், பொழுது போக்குப் பணிகள் என்பவற்றை இது உள்ளடக்கும்.
* தகவல் பகிர்வு அல்லது விநியோகம்: ஒலிபரப்பு வலையமைப்பு, செய்தித்தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றின் சுழற்சி, திரைப்பட விநியோகம், தொடர்பு, தபால், தொலைத் தந்தி, தொலைபேசிச் சேவைகள் என்பவற்றை இது உள்ளடக்கும்.
* தொழினுட்ப உதிரிப்பாகங்களின் விநியோகம்: தகவல் தொழிற்றுறைக்குத் தேவையான கணினிகள், தொலைத் தொடர்பு உபகரணங்கள், காகிதாதிகள், இலத்திரனியல் பாகங்கள், மொழிபெயர்ப்பு உபகரணங்கள், ஒளிப்படக் கருவிகள், ஒளி எறி கருவிகள், திரைப்பட சாதனங்கள் என்பவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை இது உள்ளடக்கும்.
* தகவல் சந்தை: கல்வி, போக்குவரத்து, வர்த்தகம், தொழிற்றுறை, சுகாதாரம், சனத் தொகை, பொதுசனப் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு போன்ற நிறுவனங்களையும், தனிநபர்களது அடிப்படைச் செயற்பாடுகளுக்கு உதவும் தகவல் பாகங்களை பயன்படுத்தும் நிறுவனங்களையும் இது உள்ளடக்கும்.

1.2 தகவலும் தேசிய அபிவிருத்தியும் [Information and National Development]

மனிதனது உயிர்வாழ்வுக்கும் அபிவிருத்திக்கும் அவசியமாக இருப்பவை வளங்கள். வளம் என்ற வகையில் அதிலும் சக்தியுள்ள வளம் என்ற வகையில் தேசிய அபிவிருத்தியுடன் நேரடியாகத் தொடர்புபடுவது தகவல் ஆகும். எந்தவொரு நாட்டினதும் அது பெரியதோ அல்லது சிறியதோ அபிவிருத்தியடைந்ததோ அல்லது அபிவிருத்தியடைந்து வருகிறதோ- இறுதி இலக்குத் தேசிய அபிவிருத்தியாகும். தேசிய அபிவிருத்தியானது அறிவியல், தொழினுட்பம், மருத்துவம், விவசாயம், கலைத்திறன், எழுத்தறிவு, புத்தாக்கம், மொழியியல், சமயம், தத்துவம், அறவொழுக்கம், உளவியல், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், சட்டம் போன்ற துறைகளின் குழு ரீதியான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முழுமையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதொன்று. தேசிய அபிவிருத்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு தேசமும் தமக்கென தேசிய அபிவிருத்தி அமைப் பொன்றை உருவாக்குதல் அவசியமாகும். ஒவ்வொரு தேசிய அபிவிருத்தி அமைப்பும் பயன்விளைவுள்ளதாகத் தொழிற்படுவதற்குக் கைத்திறன்சார், பொறிமுறைசார், நிதிசார், பொருள்சார், புலமை சார் வளங்களை உள்ளீடாகக் கொண்டு இவ்வளங்களின் பொருளாதார ரீதியான பயன்பாட்டைக் கோரி நிற்கிறது. புலமைசார் வளத்தின் பிரதான உள்ளீடே தகவல் ஆகும்.

1.3 தகவல் மதிப்பு [Information Value]

தகவல் ஒரு சமூக பொருளாதார உற்பத்திப் பொருளாகும். தகவல் உருவாக்கம், தகவல் அனுப்புகை, தகவல் பயன்பாடு என்பன தேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை வடிவமைப்பதில் பேருதவி புரிகின்றன. சமூகத்தின் பெரியளவான துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியளவுக்குத் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள், திட்டவியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் என்போர் பயன்விளைவுள்ள தீர்மானங் களை எடுப்பதற்குத் தகவல் ஆற்றும் பங்கைச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளனர். சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகத் தகவல் இருக்க வேண்டும் என்ற கருத்துநிலையை அரசாங்கங்களும் ஊக்குவிக்கின்றன. தகவலை நிறைவுள்ள வளமாகவும், பொருளாதாரப் பகுப்பாய்வுக்கான உற்பத்திப் பொருளாகவும் பொருளியலாளர் கருதத் தொடங்கியுள்ளனர். தேசிய அபிவிருத்திக்குத் தகவலை வெற்றிகரமாகப் பிரயோகிப்பதானால் பொருத்தமான தகவல் தேவைகளை இனங்காணுதல் என்பது அடிப்படைப் பிரச்சனையாகும். இதன் காரணமாகத் தகவல் பாவனையாளர் யார் என்பதையும் இனங்காண வேண்டியிருக்கும்.

தொழினுட்பக் கலாச்சாரம் என்ற தற்காலக் கருத்துநிலையில் சக்தி அல்லது ஆற்றல், மூலப்பொருட்கள், தகவல் என்ற மூன்று அம்சங்களும் பரந்தளவில் அங்கீகாரம் பெற்றிருப்பதுடன் சிக்கல் தன்மை வாய்ந்ததாக மாறிக் கொண்டிருப்பதும் தெரிகிறது. இந்த மூன்றிலும் தகவல் மிக முக்கிய பண்டமாக, எந்தவொரு நாட்டினதும் அறிவியல் வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதெனக் கருதப்படுகிறது. இத்தகைய பரிமாண வளர்ச்சியானது தொழினுட்ப முன்னேற்றம், சமூக அழுத்தங்கள், பதியப்பட்ட அறிவின் பாரிய வளர்ச்சி என்பவற்றின் காரணமாக ஏற்பட்டதொன்றாகும். இதன் காரணமாகத் தனித்தனி ஆய்வுகளில் கவனம் செலுத்திய காலம் போய் குழு ஆய்வில் ஈடுபட வேண்டிய தேவை தகவல் வெடிப்பு அல்லது தகவல் கட்டுமீறல் என்ற கருத்துநிலையின் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்தது.

1.4 தகவல் செய்முறை [Information Process]

மனித சமூகத்தில் தகவலானது தொடர்ச்சியான முறையில் உருவாக்கப்பட்டுத் தொடர்பு ஊடகங்களினூடாகப் பயன்பாட்டுக்கு விடப்படுகிறது. இச் செய்முறை தகவல் சங்கிலி எனப்படுகிறது. தகவல் சங்கிலி ஒன்றின் எளிமையான மாதிரியை படம் 1 காட்டுகிறது.

தகவல் உருவாக்கம் → தகவல் செய்முறை → தகவல் பயன்பாடு

அறிவியலாளர், தொழினுட்பவியலாளர், பொருளியல் நிபுணர்கள், புள்ளிவிபரவியலாளர், ஊடகவியலாளர் போன்றோர் தகவலை உருவாக்குபவர்களாகக் கருதப்படுகின்றனர் [Weisman 1972].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணம் சார்ந்த வழிகளூடாகவும் கட்புல செவிப்புல வழிமுறைகளூடாகவும், வாய்மொழி மூலமும் தகவல் அடுத்தவரைச் சென்றடைகின்றது. தகவலைப் பயன்படுத்துபவர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் தகவல் உருவாக்கச் செய்முறையில் ஈடுபடும் வாய்ப்புண்டு.

1.5 தகவல் உலகின் பண்புகள்

தகவலை அணுகுவதற்கு முன்னர் தகவல் உலகின் பின்வரும் பண்புகளை நன்கு விளங்கிக் கொள்ளல் அவசியமானது:

1.51 தகவல் கட்டுமீறல் [Information Explosion]

17ம், 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முதலாவது தொழிற்புரட்சியும் அக்காலத்திலும் அடுத்து வந்த காலங்களிலும் அறிவியல் தொழினுட்ப துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியும், அறிவியல், தொழினுட்ப, தொழிற்றிறன் சார் இலக்கியங்களில் பாரிய அதிகரிப்பையும், அறிவியலாளர், தொழினுட்பவியலாளர், ஆய்வாளர் போன்றோர்களின் எண்ணிக்கையில் அதேபோன்ற அதிகரிப்பையும் ஏற்படுத்தியது. 17ம் நூற்றாண்டில் அறிவியல் தொழிற்றிறன் சார் பருவ இதழ்களின் தோற்றமும், இலட்சக்கணக்கான ரீதியில் அவற்றின் தற்போதைய அதிகரிப்பும், 19ம் நூற்றாண்டில் சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் பருவ இதழ்களின் தோற்றமும், அவற்றின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கான அதிகரிப்பும், ஆய்வுத் தொழினுட்ப அறிக்கைகள், காப்புரிமைகள், தராதரங்கள் போன்றவற்றின் தோற்றமும் மில்லியன் கணக்கிலான அவற்றின் அதிகரிப்பும் தான் ஆவண வெடிப்பு, இலக்கிய வெடிப்பு அல்லது தகவல் வெடிப்பு [Information Explosion] என்ற தோற்றப்பாட்டின் பிரதான கூறுகளைக் காட்டுகின்றன [Price, De solla 1986]. தொழினுட்ப வளர்ச்சி, சமூக அழுத்தங்கள், பதியப்பட்ட அறிவின் பாரிய வளர்ச்சி என்பன காரணமாக அறிவியல் வளர்ச்சியை விரும்பும் எந்தவொரு தேசத்துக்கும் தகவல் ஒரு பண்டமாக மாறும் அளவிற்கு மிகவும் முக்கியமாக மாறி விட்டது. தனி நபர் ஆய்வுகளிலிருந்து குழு ஆய்வுகளுக்கு மனித சமூகம் மாறியமையும் தகவல் வெடிப்புக்கு ஒரு காரணமாகும். இன்று உலகில் 12 மில்லியன் ஆய்வாளர்களால் வருடாவருடம் 2 மில்லியன் கட்டுரைகள் உருவாக்கப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. 80 ஆயிரம் அறிவியல் தொழினுட்ப பருவ இதழ்கள் வெளியிடப்படுகின்றன. நாளாந்தம் மூன்று பருவ இதழ்கள் புதிதாகத் தோன்றும் அதே சமயம் ஒரு பருவ இதழின் வெளியீடு நிறுத்தப்படுகிறது. வெளியீடு செய்யப்படும் இலக்கியங்களில் 50%மானவை தேவைக்கும் மேற்பட்டதாக உள்ளது. இவற்றில் பெரும்பாலானவை காலப் போக்கில் மறைந்து விடக் கூடியவை. அடுத்த பத்து வருடங்களில் இவற்றில் 98%மானவை பூரணமாக மறைந்து விடும்.

1.52 வெளியீடுகளின் வழக்கற்றுப்போகும் தன்மை [Obsoloscence of Materials]

துரிதமாகவும் தொடர்ச்சியாகவும் அதிகரித்துச் செல்லும் ஆய்வுச் செயற்திட்டங்கள் "ஆக்கு அல்லது அழி" என்ற தோற்றப் பாட்டுக்கு வழி சமைப்பதனால் இலக்கிய அதிகரிப்புக்கு இணையாகவோ அல்லது அதற்கும் அதிகமாகவோ அவற்றின் வழக்கற்றுப் போகும் தன்மையும் அதிகரித்துச் செல்கிறது. அதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கருத முடியும் [Line,1974]:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✶ குறிப்பிட்ட தகவல் தற்காலம் வரை பெறுமதிமிக்கதாக இருப்பினும் இவை அண்மைக்கால ஆய்வுகளுக்குள் சேர்க்கப்பட்டிருத்தல்.
- ✶ இன்றுவரை பெறுமதி மிக்கதாக இருப்பினும் கூட அண்மைக் கால ஆக்கங்களினால் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் தன்மை.
- ✶ இன்றுவரை பெறுமதி மிக்கதாகக் கருதப்படினும் ஆர்வம் குறைந்த பொருட்துறைகளாக மாறியிருக்கும் தன்மை.
- ✶ பெறுமதியை முற்றாக இழந்து விடும் தன்மை.

1.53 தகவல் தெறிப்பு அல்லது சிதறல் [Scatter of Literature]

இலக்கிய தெறிப்பு என்ற கருத்துநிலையின் தோற்றப்பாட்டுக்கு பல காரணிகள் பங்களிப்புச் செலுத்துகின்றன. இலக்கியத் தெறிப்பானது பொருட்துறை சார்ந்ததாகவோ, தகவல் சாதனங்களின் பௌதிக வடிவமைப்புச் சார்ந்ததாகவோ, மொழி சார்ந்ததாகவோ, இடம் சார்ந்ததாகவோ அதுவுமன்றி ஓர் ஆவணத்தின் உள்ளடக்கம் சார்ந்ததாகவோ ஏற்படலாம். இத்தகைய நிலையானது தகவல் சாதனத்துக்கும் அதன் பாவனையாளருக்குமிடையில் தகவல் இடைவெளியை உருவாக்கித் தகவல் மீள் வழங்கலிற் பாதிப்பை உருவாக்கும்.

1.54 தகவல் சுமை [Information Over Load]

தகவல் வெடிப்பில் ஏற்பட்ட எண்ணற்ற அதிகரிப்பு முதல்நிலைப் பருவ இதழ்களுக்கு வித்திட்ட அதேசமயம் அதேயளவிற்குப் பல சாராம்சப் பருவ இதழ்களையும், கணினி வடிவ தரவுத் தளங்களையும் உருவாக்கியது. இதன் காரணமாகக் குறிப்பிட்ட ஒரு துறையில் ஆய்வை மேற்கொள்ளும் எவருக்குமே அதிகரித்துச் செல்லும் தகவல் வெள்ளத்துக்குள் தமக்குப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் கடினமானதாக இருக்குமொரு நிலையில் தகவல் உத்தியோகத்தரும் சமாளிக்கத் திணறும் நிலையில் தகவற் சுமை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

1.55 மொழியின் பல்பயன்பாட்டுத் தன்மை [Multiplicity of the Languages]

பல மொழிகளில் வெளியீடுகளின் அதிகரிப்பானது இந்த நூற்றாண்டின் சிறப்பம்சமாகும். அந்நிய மொழியில் உருவாக்கப்படும் தகவல்களின் மிகக் குறைந்தளவு வீதமே பயன்படுத் தப்படுவதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன. கிட்டத்தட்ட 65 வீதத்துக்கும் அதிகமான உலக அறிவுப்பதிவேடுகள் ஆங்கில மொழியிலேயே வெளியிடப்படுகின்றன. உலகின் அறிவியல் சமூகங்களில் கூட இன்றும் அறிவை அணுகுவதில் தடையாக உள்ளது மொழியே. தரவுத் தளங்களில் பல ஆங்கில மொழியிலேயே உள்ளன. வேற்று மொழியில் பரிச்சயமின்மை தகவல் தேடும் ஆர்வத்தில் விரக்தி நிலையைத் தோற்றுவிப்பது மட்டுமன்றி தெளிவற்ற தன்மையையும் உருவாக்கும். கணினி யுகத்தில் மொழித் தடையானது மனிதனுக்கும் இயந்திரத்துக்குமிடையில், இயந்திரத்துக்கும் இயந்திரத்துக்குமிடையில், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில், இயந்திரத்துக்கும் மனிதனுக்குமிடையில்,பொருத்தப்பாடின்மை யையும் முரண்பாட்டையும் உருவாக்கும். இலக்கியங்களில் பயன்படுத்தப்படும் சொல்ல லங்காரங்கள், கலைச்சொற்கள் போன்றன தகவலை விளங்கிக் கொள்வதில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.56 தரத்திலும் நம்பகத் தன்மையிலும் வேறுபாடு [Difference in Quality & Reliability]

தகவல் தொழிற்துறையின் உருவாக்கம் காரணமாக ஏனைய பண்டங்களை விடவும் தகவல் சாதனங்களின் விலை ஒப்பீட்டளவில் குறைந்து கொண்டு போவதும், ஒரே நூலைத் தரங் குறைந்த தாளில் அச்சிட்டுப் பெருந்தொகையில் மலிவுப்பதிப்புகளாக விற்கக்கூடிய வசதியும், தகவல் வளத் தெரிவில் தகவல் அறிவியலாளரின் புலமை சார் அறிவைக் கோரி நிற்கின்றது. மலினப்பதிப்புகளின் உற்பத்தியானது சூழல் மாசடைதல் போல் தகவலிலும் மாசடைதலை [Information pollution] உருவாக்கியிருப்பதன் காரணமாக தீயவற்றுக்குள் நல்லதைத் தேடிப் பிடிக்க வேண்டிய அறிவை வாசகனிடம் மட்டுமன்றி தகவலைக் கையாளும் அனைவரிடமும் வேண்டி நிற்கின்றது. மனிதனின் இன்றைய ஆய்வுகள் நேற்று உண்மை என நிறுவியதை பொய்யாக்கிவிடும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதனால் நூலக சாதனங்களுக்குள் உண்மையானவற்றையும் பொய்யானவற்றையும் பிரித்தறிய வேண்டிய அறிவு தகவல் பாவனையாளருக்கு இன்றியமையாததாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் இரண்டு

தகவல்

2.0 அறிமுகம்

இன்றைய உலகில் மேலாதிக்கம் செய்யும் கருத்துநிலை தகவல். தங்குதடையற்றுப் பொங்கிப் பெருகி எங்கும் வியாபித்து நிற்கும் தகவல் வெள்ளத்துள் மனித சமூகம் சிக்குப்பட்டிருக்கிறது. புலக்காட்சியின் ஆற்றல் மூலம் ஏதாவது ஒன்றைப் பற்றியோ அல்லது ஒவ்வொன்றையும் பற்றியோ கருக்கொள்ளும் அறிவாதார அனுபவங்கள் (Facts) கருத்துள்ளது தானா என ஆராய்வதற் கிடையிலேயே அது சேகரிக்கப்பட்டு, எங்கும் பரப்பப்பட்டு, மற்றவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டு, சேமிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டு விடுகின்றது [Boostin,1979].

பரந்த ரீதியில் நோக்கின் எந்தவொரு அனுபவத்திற்கும் புதிய அர்த்தம் சேர்ப்பது அல்லது நிகழ்வு, வாழ்வு, அனுபவம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவது தகவல் எனப்படு கின்றது. சூழலுடன் தொடர்பு கொள்ள, சூழலைச் சரி செய்து கொள்ள, சூழலை உருவாக்கத் தகவல் மிக அவசியமானது. நிகழ்வுகள், அனுபவங்கள், மக்கள், இடங்கள் போன்ற அனைத் துமே தகவலை வழங்குகின்றன. பார்வை, ஒலி, தேடல், சுவை, மணம் என்பன அறிவுச் சுரங்கத்தின் பல்வேறு பரிமாணங்களைப் பார்ப்பதற்கு வழிகாட்டுகின்றன. அனுபவங்களை அவதானிக்க, கற்றுக்கொள்ள, உய்த்துணர ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருக்கும் ஆற்றல்களும் அறிவும் பலதரப்படுவது போன்று தகவலும் பரந்துபட்டது. எல்லா மனித சமூகங்களிலும் தகவல் முக்கிய பங்கை ஆற்றுவது மட்டுமன்றி அண்மைக் காலங்களில் அது மிக முக்கிய பண்டமாகவும் மாறி விட்டது. தொழினுட்ப பொருளாதார மாற்றங்கள் தகவல் சேகரிப்பு, சேமிப்பு, செய்முறை, தொடர்பு போன்றவற்றில் துரித மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன.

தகவல் என்ற கருத்துநிலை மனிதருக்கு மனிதர் வேறுபட்ட பொருள் கொண்டது. அவதானிப்பினூடாக மனித மூளையில் சேமிக்கப்படும் அனுபவங்கள், தொடர்பு சாதனங் களினூடாகக் குறியீடுகளின் வடிவில் அனுப்பப்படும் புள்ளிவிபர அம்சங்கள், பதியப்பட்ட விளக்க விபரங்கள், ஒரு பாடநூலின் உள்ளடக்கம் என தகவல் என்ற சொற்பதம் தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்துநிலை மக்களிடையே உண்டு. சொற்களுக்குப் பொருள் தரும் பணியைத் தனித்து மேற்கொள்ளும் அகராதிகள் கூட இது தொடர்பாக ஒரே மாதிரியான வரைவிலக்கணத்தைத் தரவில்லை.

சிலருக்கு தம் கண் முன்னே காணும் நிகழ்வுகள் தகவலாகலாம். சிலரைப் பொறுத்து இரு மனிதருக்கிடையில் நடைபெறும் அர்த்தமுள்ள தொடர்பாடல் தகவலாகலாம். ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளை மேற்கொள்ளும் ஒருவருக்கு தாம் சேகரிக்கும் புள்ளிவிபரங்கள் தகவலாகலாம். சிலருக்கு அன்றாடம் படிக்கும் செய்தித்தாள் மட்டும் தகவலாகலாம். வேறு சிலருக்குப் படிக்கும் புத்தகங்கள் தகவலாகலாம். சிலருக்கு தாம் படித்த நூலிலிருந்து தாம் படித்தவற்றை வைத்துக் கொண்டு தமது மனதில் புதிதாகத் தோன்றும் கருத்துரு தகவலாகலாம். அதேபோன்று ஒருவருக்குத் தரவாவது இன்னொருவருக்குத் தகவலாகவோ, அறிவாகவோ அல்லது வெறும் நிகழ்வாகவோகூடத் தென்படலாம்.

துறை சார்ந்து நோக்கும் போதும் கூட தகவல் சமூகம் என்ற துறை தகவலைத் தொழினுட்பத்துடன் தொடர்புபடுத்தித் தகவலைத் தரவாக அல்லது தகவல் பரிமாற்றத்துக்கான துணைக் கருவியாக நோக்குகிறது. பொருளாதாரத் துறை தகவலை ஒரு பண்டமாக, உற்பத்திக் காரணியாக, ஒரு மூலவளமாகக் கருதுகின்றது. சமூக அறிவியல் துறை, மனிதப் பண்பியல் துறை போன்றன தகவலை தனித்துவம் வாய்ந்த தரவாக அல்லது செய்திக்குறிப்பாகப் பார்க்கின்றன. நூலக தகவல் விஞ்ஞானத் துறையானது வாசகரின் பயன்பாட்டு நோக்கில் அறிவின் பிரதிபலிப்புகளாகத் தகவலைப் பார்க்கிறது. பொதுசனத் தொடர்புத் துறையானது தகவலை ஒரு பண்டமாகப் பார்க்கிறது. இத்தனை பார்வைகளுக்குள்ளும் ஒரு பொதுப் பார்வையை உருவாக்க முடிந்தால் அது தகவல் என்ற கருத்துநிலைக்கு மட்டுமல்ல "ஒரு சொல்லின் பொருள் எங்கே மிக இறுக்கமாக வரையறைப்படுத்தப்பட முடிகின்றதோ அங்கு அறிவியல் தொடங்குகின்றது" என தகவல் சமூகத்தின் தோற்றத்துக்கும் முன்னரேயே தகவலுக்கான அறிவியல் கொள்கையை வடிவமைப்பது பற்றிய தேடலை மேற்கொண்ட பிறிலோயினின் கூற்றுக்கும் [Brillouin, 1956]; " தகவல் அறிவியல் என்பது ஒரு அறிவியலாகப் பார்க்கப்பட வேண்டுமாயின் தகவல் அறிவியல் முழுவதையும் பரீட்சித்து மதிப்பிடக் கூடிய வகையில் தகவலுக் கான அறிவியல் கோட்பாடு ஒன்றை அது உருவாக்க வேண்டும்" என்ற டெஸ்கியின் கருத்துக்கும் [Teskey,1989] ஒரு முழுமையைத் தரும்.

2.1 வரைவிலக்கணங்கள்

அடுத்தவர்களுடன் தொடர்பு கொள்வதனூடாகவோ அல்லது பரிசோதனை, படிப்பு, அறிவுறுத்தல் என்பவற்றினூடாகவோ பெறப்படும் அறிவும், நுண்ணறிவு ,செய்தி என்ற வடிவில் பெறப்படும் குறிப்பிட்ட நிகழ்வு அல்லது நிலைமைகள் தொடர்பான அறிவும் தொடர்பாடலுக்குத் தயார்நிலையில் உள்ள நிகழ்வுகளும் அதன் வடிவங்களும் தகவல் என்கிறது 1971ம் ஆண்டின் வெப்ஸ்ரர் அகராதி [Webster,1971]. இது தகவலை அறிவாகப் பார்க்கிறது. ஒக்ஸ்போர்ட் அகராதியின் வெவ்வேறு பதிப்புகள் பின்வரும் மூன்று வகையில் தகவலை வரையறைப்படுத்துகின்றன: "ஒரு பொருளைப்பற்றியோ அல்லது ஒரு நபரைப்பற்றியோ சொல்லப்படுகின்ற, கேட்கப்படுகின்ற, கண்டுபிடிக்கப்படுகின்ற தரவுகள் தான் தகவல்" [Oxford,1995], "குறிப்பிட்ட சில விளக்க விபரங்கள் அல்லது விடயம் அல்லது நிகழ்வு சம்பந்தமாகத் தொடர்புபடுத்தப்படுகின்ற அறிவே தகவல்", "ஆய்வின் மூலம் கற்றதன் விளைவாக வழங்கப்படுகின்ற அல்லது அறிந்து கொள்ளப்படுகின்ற உண்மைகள் அல்லது அறிவே தகவல்". பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் வெளியான இப்பதிப்புகளின் படி தகவல் என்பது பயன்படுத்துபவரின் நோக்கத்துக்கமையப் பொருள் கொள்ளக் கூடியது.

"தொடர்பு கொள்ளலுக்கு ஏற்ற வகையில் தாளில் அல்லது வேறு ஏதாவது ஊடகம் ஒன்றில் புரிந்து கொள்ளக்கூடிய வடிவில் பதியப்பட்டிருக்கும் தரவுத்தொகுதியே தகவல்" என்கிறது தகவல் விஞ்ஞானத்துக்குரிய சிறப்பு அகராதி [Harrod's,1987]. "செய்முறைக்குட்படுத்தப்பட்ட தரவு தான் தகவல். இந்த செய்முறைக்குட்படுத்தப்பட்ட தரவானது தரவு அனுப்புகையாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவுத் தெரிவாகவோ, தரவு ஒழுங்கமைப்பாகவோ, தரவுப் பகுப்பாய்வாகவோ இருக்கலாம். எனவே தகவல் என்பது தரவுச் செய்முறையில் தங்கியுள்ளது" என நூலக தகவல் விஞ் ஞானக் கலைக்களஞ்சியம் கூறுகிறது [Encyclopaedia,1993]. முழுக்க முழுக்கத் தகவல் தொழினுட்பம் சார்ந்து இது தகவலை அணுகுகிறது. "மனித மூளையில், இலத்திரனியல் பதிவேடுகளில், எழுத்துப் பதிவேடுகளில், பௌதிக ரீதியாக பொதிந்து கிடக்கும் அறிவே தகவல்" என்கிறது தகவல் விஞ்ஞானத் துறைக்கான இன்னோர் கலைக்களஞ்சியம். இது தகவலை அறிவாகப் பார்க்கிறது. தன்மையையோ (எண் சார்ந்தது, எழுத்துச் சார்ந்தது), வடிவத்தையோ (நூல், கட்புல, செவிப்புல ஊடகம் போன்றன), உள்ளடக்கத்தையோ கருதிக்கொள்ளாது, அறிவியல் தொழில்நுட்ப அறிவைத் தொடர்பாடலுக்கெனப் பயன்படுத்தும் பொருட்டுப் பாவிக்கப்படுகின்ற குறியீட்டு ஆக்கக்கூறுகளே தகவல் ஆகும் என்கிறது யுனெஸ்கோ [Unesco,1979].

பொருட்துறை சார்ந்த நிபுணர்களின் கருத்துக்களில் சில இவை: முறைப்படுத்தப்பட்ட கருத்துத் தொகுதி ஒன்றினால் அல்லது அதன் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பதிலீடுகளால் தெரிவிக்கப்படுகின்ற அல்லது தெரிவிக்கும் நோக்குடன் எடுத்துச் செல் லப்படுகின்ற செய்திக் குறிப்பே [Message] தகவல் எனப்படுகின்றது. இங்கு தகவல் என்பது மனித மனத்தில் உருவாகும் சிந்தனையின் வடிவமைப்பாகப் பார்க்கப்படுகின்றது [Bhattacharya,1978]. பயன்படுத்தப்படக்கூடிய, ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப் பப்படக்கூடிய அல்லது தொடர்புபடுத்தப்படக்கூடிய அறிவு, நுண்மதி, விபரம் அல்லது தரவு" தகவல் எனப்படுகின்றது [Weisman,1972]. இது தகவலை அறிவியல், தொழினுட்பம், சமூக அபிவிருத்தி சார்ந்து நோக்குகிறது. ஓர் ஆவணத்தின் உள்ளடக்கம், அதன் பௌதீக வடிவம் இரண்டையும் குறிப்பிட இப்பதம் பாவிக்கப்படுகிறது. Anderia George என்பவரின் கருத்துப்படி தகவல் என்பது பின்வரும் நான்கு கருத்துநிலைகளின் அடிப்படையில் நோக்கப்படுகிறது [George, 1975].

1. மரபு ரீதியான அணுகுமுறை [Traditional Approach]: ஆய்வு அபிவிருத்திகளினுடைய உள்ளீடு வெளியீடு இரண்டுமே தகவல் என இது கருதுகிறது.
2. சமூக கலாச்சார அணுகுமுறை [Socio-cultural Approach]: தகவலும் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு அனுப்பீடு செய்யக்கூடிய அறிவும் ஒன்றுதான் என்ற கருத்துநிலையை இது வலியுறுத்துகிறது. இதன் அடிப் படையில் அனைத்துத் தகவல் அனுப்புகைகளும் அறிவியல் சமூகத்திற்கு சேவை செய்தல் என்பது மட்டுமன்றி தகவல் அனுப்புகை தொடர்பாக மேற்கொள்ளப்படும் பயிற்சி, கல்வி, கலாச்சாரம், பொதுசனத் தொடர்பு, மருத்துவம், ஏனைய சேவைகள் போன்ற அனைத்து செயற்பாடு களையும் கருத்தில் கொள்கிறது.
3. பொருளாதர அணுகுமுறை [Economic Approach]: இந்த அணுகுமுறை தகவலை ஒரு வளமாக, மனித சமூகத்தில் தாக்கம் விளைவிக்கின்ற அடிப்படை சக்தி அல்லது ஆற்றலாக நோக்குகிறது. புலமைசார்ந்த செயற் பாடுகளுக்கும் பொருள் சார் செயற்பாடு களுக்கும் இடையில் மிக இன்றியமையாத, மாற்ற முடியாத இணைப்பாக தகவல் கருதப்படுகிறது.
4. தத்துவார்த்த அணுகுமுறை [Philosophical Approach]: இது தகவலை பேராற்றல் என கருதுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 கருத்துநிலைகளின் பல்பரிமாணத் தன்மை

2.21 தகவல் என்பது செய்திக் குறிப்பு

கருத்து [Idea] என்ற அம்சத்தினூடாகத் தகவலைப் புரிந்து கொள்ளும் முறையாக இது அமைகிறது. ஒன்றைப் பற்றி மனதில் முதன் முதல் தோற்றம் பெறுகின்ற உணர்வினூடாகப் பெறப்படும் எண்ணப்பதிவு (புலனுணர்வுக்காட்சி), பல புலனுணர்வுக் காட்சிகளின் சேர்க்கை மூலம் பெறப்படும் ஒரு மனவிம்பம், பல புலனுணர்வுக் காட்சிகளின் சேர்க்கைகளிலிருந்து சாராம்சமாகப் பெறப்படும் பொது மனப்பிரதிவிம்பம், மனம் சார்ந்த தொழிற்பாடுகளின் விளைவுகள், காரணங்களிலிருந்து பெறப்படுபவை, கற்பனையில் உதிப்பவை, மன வெளிப்பாடுகளிலிருந்து பெறப்படுபவை, உள்ளுணர்வின் மூலம் பெறப்படுபவை போன்றவைகளில் ஏதாவது ஒன்று கருத்தாக இருக்க முடியும். ஏதாவது ஓர் ஊடகத்தின் மூலம் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்கு மேற்கூறப்பட்ட சிந்தனைகளில் ஒன்று உதவும். கருத்து என்பது சாதாரண கருத்தாக, சிக்கல் வாய்ந்த கருத்தாக, அல்லது கருத்துச்சிக்கலாக இருக்கக்கூடும். ஏனையவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டோ அல்லது தனக்குத்தானே தொடர்பு கொள்ளும் பொருட்டோ ஊடகம் ஒன்றின் பலதரப்பட்ட மட்டங்களில் இது வெளிப்படுத்தப்படுவது அவசியம். இத்தகைய ஊடகங்களில் அடிப்படை ஊடகங்களாக இருப்பவை சைகை, அடையாளம், குறியீடு, சமிக்ஞை, தூண்டுவிசை, சுட்டுக்குறி, ஒலி, படங்கள், சொற்கள், சொற்களின் சேர்க்கைகள் என்பன. இத்தகைய ஓர் ஊடகம் ஓர் சில விதிமுறைகளுக்குட்பட்டே கருத்துக்களை வெளிப்படுத்தவோ அதை இன்னோர் இடத்திற்கு அனுப்பீடு செய்யவோ முடியும். மொழி என்பது ஒரு ஊடகம் என்றால் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவை இவ் ஊடகத்தின் பலதரப்பட்ட மட்டத்திலான மூலக்கூறுகள். பலதரப்பட்ட எண்ணங்கள் இந்த மூலக்கூறுகளினூடாக வெளிப்படுத்தப் படுகின்றன [Bhattacharya,1978].

2.22 தகவல் என்பது செய்தி

பொதுமக்களுக்கு அவர்களது சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் பொதுசனத் தொடர்பு ஊடகங்களினூடாக நடப்பு நிகழ்வுகளாகவோ அல்லது விமர்சனங்களாகவோ அதுவுமன்றிப் பொழுதுபோக்கு அம்சங்கள் என்ற வகையிலோ செய்தி என்ற வடிவில் பரப்பப்படும் தகவல் வகை.

2.23 தகவல் என்பது அறிவு

மனித சமூகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கல்வி, அவதானிப்பு, பரிசோதனை என்பவற்றின் மூலமோ அல்லது மனிதனால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுபவங்களின் மூலமோ தோற்றம் பெற்றுப் பதிவேடுகளின் வடிவத்தில் பரப்பப்படும் தகவல் பொதுவாக அறிவு எனக் குறிக்கப்படுகிறது. புலமைத்துவ வெளியீடு ஒன்றை இதற்கான சரியான எடுத்துக் காட்டாகக் கொள்ள முடியும். அட்டைப் பட்டியல்கள், தரவுத் தளங்கள் போன்றவை நூல்கள், பருவ இதழ்கள் போன்ற தகவல் வளங்களில் பொதிந்திருக்கும் தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை வழங்குகின்றன. ஆரம்ப காலத்தில் அச்சு வடிவ சாதனங்களே அறிவுப் பதிவேடுகளாகத் தொழிற்பட்டன. கால மாற்றத்தில் நூலுருவற்ற சாதனங்களும் அறிவைப் பொதித்திருப்பது மட்டுமன்றி இணையத் தளங்கள் வரை அறிவு வியாபித்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இத்தகைய தகவல்கள் பொதுவாக கல்வி, ஆய்வு, சமூக பொருளாதார அபிவிருத்தி என்பவற்றின் உள்ளீடாகவும் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கும் தகவல்களிலிருந்து புதுப்புதுத் தகவல்களை உருவாக்குவதற்கான உள்ளீடாகவும் பயன்படுகின்றது.

2.24 தகவல் என்பது தோற்றப்பாடு

உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல், நடத்தையியல், கணனியியல், செயற்கை நுண்மதி, சமூகவியல், பொருளியல், மொழியியல் போன்ற பெரும்பாலான அறிவியல் துறைகளின் ஆய்வு முயற்சிகளுக்கு அடிப்படை மூலாதாரமாக கருதப்படும் தகவல் வகை.

2.25 தகவல் என்பது தரவு

பரந்த ரீதியில் மானுடத் தகவல் செய்முறை ஆற்றல்களுடன் இடைவினை புரிவதற்கு உதவும் தரவாகத் தகவலை நோக்குவோரும் உண்டு. பொருட்கள், உருவங்கள், ஒலிகள், கட்புல, தொட்டுணரக்கூடிய தோற்றப்பாடுகள், செயற்பாடுகள், இயற்கைத் தோற்றப்பாடுகள், நிகழ்வுகள் போன்றவை தரவு என்ற பதத்துக்குள் உள்ளடங்கும். அனைத்துத் தொடர்புகளும் ஏதோ ஒரு நோக்கத்தைக் கொண்டவை என்ற கருத்துநிலை முன்வைக்கப்பட்டாலும் கூட எவ்வித நோக்கங்களும் அற்று ஒரு பொருள் தொடர்பாக ஒருவர் மனத்தில் உருவாகும் புலனுணர்வின் மூலமான தொடர்பாலும் இன்னொருவருக்கு தகவல் அனுப்பப்பட முடியும். முகாமைத்துவ செய்முறைக்கான ஒரு மூலவளமாக ஒரு நிறுவனத்திற்குள்ளே நூல் விபர வடிவில் உருவாக்கப்படாமல் நிறுவனத்திற்கு வெளியே பெறப்படும் தகவல்களுடன் இணைத்து தீர்மானம் எடுத்தல் செய்முறைக்கு பயன்படுத்தப்படும் தகவல். இது பெரும்பாலும் தரவு என குறிக்கப்படுகிறது.

2.26 தகவல் என்பது துணைக் கருவி

தகவல் தொழினுட்பத் துறையில் தகவல் என்பதைவிட தகவல் அனுப்புகை, பரிமாற்றம், வழி, சேமிப்பு, மீள்வழங்கல் போன்றன முதன்மையாகவும் தகவல் இவற்றிற்கான துணைக் கருவியாகவும் கருதப்படுகிறது.

2.27 தகவல் என்பது செய்முறை

செய்திக்குறிப்பு, தரவு, குறியீடு, சைகை போன்றவற்றை அறிவாக மாற்றும் செய்முறை தகவல் என அறியப்படுகின்றது [Meadow, 1982; Hayes, 1969; Buckland,1991].

2.28 தகவல் என்பது தொடர்புச் செய்முறையின் ஓர் அங்கம்

சொற்களிலும் தரவுகளிலும் அறிவுப் பதிவேடுகளிலும் கருத்தைத் தேடுவதை விடுத்து மனிதர்களிடத்து தேடும் அம்சத்தை இது குறித்துநிற்கிறது. ஒரு நிறுவனம் சார்ந்து நோக்கும் போது இங்கு தகவல் சேகரிப்பும் செய்முறையும் அன்றாட பணிக்கும் அப்பாற்பட்டு பௌதிக ரீதியானதாகவோ அல்லது அறிவாற்றல் செயற்பாடாகவோ அன்றி வேலையுடன் வேலையாக பணிபுரிபவர்களின் தன்மை, நடவடிக்கைகள், வேலைத் திருப்தி போன்றவற்றை அவதானிப்பதை மையமாக வைத்து உருவாகும் ஒன்றாக இனங்காணப்படுகின்றது. நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும் தனிப்பட்ட ஊடாட்டங்கள், சுய ஆர்வம், அந்தரங்கம், தகவலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்முறைப்படுத்தும் பாங்கில் உள்ள தனிப்பாணி, ஒரு நிலைமை தொடர்பாக தனித்தும் கூட்டாகவும் உணர்ந்து கொள்ளும் தன்மை போன்ற அம்சங்களில் தகவல் உருவாக்கமானது தங்கியிருக்கும். தனிப்பட்ட காரணிகளும் சமூகக்காரணிகளுடனும் காலம் என்ற காரணி இணைந்து வேலைச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக தகவலை அணுகுதலில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

2.29 தகவல் என்பது உற்பத்திக்காரணி

நிலம், உழைப்பு, மூலதனம், நிறுவனம் போன்ற மரபுரீதியான உற்பத்திக்காரணிகளைப் போன்று தகவலும் ஓர் உற்பத்திக் காரணியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

2.291 தகவல் என்பது பண்டம் அல்லது உற்பத்திப் பொருள்

தகவல் சமூகத்தில் தகவல் ஓர் உற்பத்திப் பொருளாகக் கருதப்பட்டு அதற்கான செலவும் கணிப்பிடப்படுகிறது [Braman,1989]. தகவல் உருவாக்கம், செய்முறை, அனுப்புகை, பரவலாக்கம், பகிர்வு, பயன்பாடு என்பவற்றிற்கான செலவு மிக உச்சமாக போய்க் கொண்டிருப்பதுடன் அடுத்து வரும் வருடங்களில் அது இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும் எனவும் உறுதியாகத் தெரிகிறது. பொதுத் துறையிலிருந்து கணிசமான அளவு முதலீட்டையும் அது கோரி நிற்கிறது. பலதரப்பட்ட துறைகளினதும் வள ஒதுக்கீட்டில் தகவல் என்ற உற்பத்திப் பொருளுக்கான முன்னுரிமை தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது. உலகம் முழுவதிலுமுள்ள தலைசிறந்த பொருளியலாளர்களினால் தகவல் பொருளாதாரம் என்ற கருத்து நிலையும் தகவலின் பெறுமானம் தொடர்பான பகுப்பாய்வும் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய ஆய்வுகள் வள ஒதுக்கீட்டில் அரசாங்கங்களும், திட்டவியலாளர்களும் மேற் கொள்ளும் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துகிறது.

2.292 தகவல் என்பது வளம்

தனி மனிதருக்கும் நிறுவனத்துக்கும் மிக முக்கிய வளமாகத் தகவல் கருதப்படுகின்றது. இது ஒரு பண்டமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அது போன்று விற்பனைக்கானதாக இருக்கலாம் இல்லாமலும் விடலாம். ஒரு நூலகத்தில் உள்ள தகவல் வளங்கள் அனைத்தும் வளங்களேயன்றிப் பண்டமல்ல. ஏனைய மூல வளங்களைப் போலன்றி தகவல் பல்லினத் தன்மைவாய்ந்த தாகவும் உலகளாவிய தன்மையுள்ளதாகவும் அள்ள அள்ளக் குறையாததாகவும், சிக்கல் வாய்ந்ததாகவும் துரிதமாக விரி வடைந்து செல்லும் தன்மையுள்ளதாகவும் உள்ளது. ஏனைய வளங்களின் ஒதுக்கீட்டுக்கும் பயனுள்ள பாவனைக்கும் தகவல் அவசியமானதொன்றாக இருப்பதனால் புலமை சார் மூல வளமாக உள்ள தகவல் ஏனைய வளங்களை விட மிகப் பெறுமதியானதாகவும் விலைமதிப்பற்றதாகவும் உள்ளது. செல்வத்தை தரும் வடிவமாகவும் மூல வளம் என்ற கருத்துநிலை காரணமாக ஒரு நிறுவனத்தின் பெறுமதியையும், சமூகத் துக்கு அதன் பங்களிப்பையும் நிர்ணயிப்பதும், தரரீதியாகவும் தொகை ரீதியாகவும் அது உருவாக்கும் தகவலிலும் அறிவிலும் சமூகத்துக்கு அதனைப் பயன்படுத்தும் தன்மையிலுமே இது தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.3 கருத்துநிலைகளுக்கிடையிலான உறவுநிலை

மேற் கூறப்பட்ட வரைவிலக்கணங்களிலிருந்து உண்மை நிகழ்வு, தரவு, தகவல், செய்தி, செய்திக்குறிப்பு, அறிவு போன்ற சொற் பதங்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுவதைக் கண்டு கொள்ள முடியும். எனினும் இவை ஒவ்வொன்றுக்குமிடையில் கணிசமான வேறுபாடு உண்டு. "யதார்த்த உலகில் நாம் காணும் தோற்றப்பாடுகளை உண்மைநிகழ்வுகளாகக் கண்டு அவற்றைத் தரவுகள் ஊடாகப் பிரதிபலிக்கின்றோம். இந்தத் தரவுகளை நாம் செய்முறைக்குட்படுத்தும் போது தகவல் உருவாகின்றது. தகவலைப் பயன்படுத்தி அக நிலைப்பட்ட வகையில் தோற்றம் பெறுவது அறிவு எனப்படுகின்றது. இந்த அறிவு தான் தீர்மானம் எடுப்பதற்கு தகவல் பெறுநருக்கான அடிப்படையாக அமைகின்றது" (Hayes, 1993) என்ற அணுகுமுறை உண்மை நிகழ்வே தகவல், தரவும் தகவலும் ஒன்று, அறிவிலிருந்து தகவல் தோற்றம் பெற்றது, தகவலிலிருந்து அறிவு தோற்றம் பெற்றது போன்ற கருத்துநிலைக் குழப்பங்களை ஓரளவுக்குத் தீர்ப்பதில் வெற்றி கண்டிருக்கின்றது என்றே சொல்ல முடியும்.

அனுபவங்கள் அல்லது அவதானிப்புகளின் வழி அறியப் படும் உண்மை என Facts என்ற சொல்லுக்குப் பொருள் கொள்ள முடியும் [Randon House,1995]. யதார்த்த உலகிலிருந்து பிரித் தெடுக்கப்படும் கருத்துருவே அறிவாதார அனுபவம் அல்லது உண்மை நிகழ்வாகும் (Fact). பரிசோதிக்கப்பட வேண்டிய உண்மைகள் என்றும் இவற்றைப் பெயரிடலாம் [Hayes 1993]. இலங்கையில் 1981ம் ஆண்டுக்குப் பின்னர் குடித்தொகைக் கணக்கு மேற்கொள்ளப்படாத நிலையில் இலங்கைப் புள்ளிவிபர அறிக்கையின் கூற்று எப்போதுமே பரிசோதிக்கப்பட வேண்டிய கூற்றாகவே கருதப்பட முடியும். சாதாரண அவதானிப்பு, முறையான அவதானிப்பு, பொறிமுறை சார்ந்த அவதானிப்பு, அதன் மூலமான அனுபவங்களிலிருந்து அறியப்படும் உண்மைகள் அறிவின் ஒரு வகையாகவோ அல்லது தகவலின் ஒரு கூறாகவோ கருதப்பட முடியும். இந்த அறிவாதார அனுபவம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு அனுப்பப்படும் போது அல்லது தெரிவிக்கப்படும்போது அது செய்திக் குறிப்பு (Message) எனப்படுகிறது. குறிப்பிட்ட காலப்பகுதியில் மக்கள் கூட்டம் ஒன்றுக்கு விரிவுரைகள், சொற்பொழிவுகள், கட்டுரைகள் மூலம் தொடர்புபடுத்த முயல்கின்ற கருத்துநிலையே செய்திக் குறிப்பு ஆகும். இரு மனிதருக்கிடையில் தொடர்புபடுத்தப்படுகின்ற அல்லது பெருத்த அளவிலான, பலதரப்பட்ட அறிவுநிலையிலுள்ள மனிதரும் இலகுவாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எளிமைப்படுத்திப் பொது ஊடகம் ஒன்றினூடாகப் பரப்பப்படும் அண்மைக்கால நிகழ்வுகள் அல்லது மாறும் சூழ்நிலைகள் செய்தி (News)ஆகின்றது. பத்திரிகைகள் செய்திகளைத் தரும் அதே சமயம் தகவலையும் உள்ளடக்குகின்றன. மக்கள், பொருட்கள், நிகழ்வுகள், கருத்துநிலைகள் என்பவற்றைப் பிரதிபலிப்பதற்குப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு வடிவங்கள் தரவு (Data) எனப்படும். அச்சுருக்கள், காந்த நாடா, துளை அட்டை களில் பயன்படுத்தப்படும் "பிற்" (bit) எனப்படும் கணினி அளவை அலகுகள், ஒளி வடிவத் தரவுகள், பேச்சு மொழிச் சொற்கள், கட்புல விம்பங்கள் என இக்குறியீட்டு வடிவங்கள் பலதரப்பட்டவை எனினும் பொதுவான வழக்கில் தரவு என்பது எண் சார்ந்ததாகவே நோக்கப்படுகின்றது. அறிவாதார உண்மைக்கும் யதார்த்த உலகுக்கும் தொடர்பு இருப்பது போன்று தரவுக்கும் யதார்த்த உலகிற்கும் தொடர்பு இல்லை. கணித நிரூபிப்புகள், கணினிச் செய்நிரல்கள் அறிவாற்றல் மூலம் கட்டமைக்கப் படுகின்றதேயன்றி யதார்த்த உலகிலிருந்து பெறப்படுவதில்லை. உண்மை நிகழ்வுகளைப் பதிவதற்கான ஒரு வழி முறையாகத் தரவைப் பயன்படுத்தலாம். இனித் தகவலுக்கு வருவோம். தகவலை வழங்குவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்புள்ளியே தரவு. தொடர்ச்சித் தன்மை வாய்ந்த தகவலின் ஒரு பகுதியே தரவு. கருத்துள்ள தரவு அனைத்தும் தகவல் (Information) எனப்படுகின்றது. தீர்மானம் எடுத்தல் என்ற செய்முறைக்கு உதவுவதற்கு தரவுகள், புள்ளி விபரங்கள், பெறுமானங்கள், கருத்துக்கள் (அபிப்பிராயங்கள்) என்பன தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் செய்முறைக்குட் படுத்தப்படாத தரவுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இதைப் பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் விளக்க முடியும்.

12795

சாதாரண நபரைப் பொறுத்து நூலகம் என்பது நூல்களைக் கொண்டுள்ள இடம். இதுவே படிக்கும் மாணவரைப் பொறுத்து மேலதிக வாசிப்புக்கான வாய்ப்பைத் தரும் இடம். நூலக அறிவைப் பெற்ற ஒருவரைப் பொறுத்து அது அறிவுப் பதிவேடுகளின் சுரங்கம். இதுவே ஆய்வாளர்களைப் பொறுத்து தமது ஆய்வுகளுக்கான தரவுகளைத் தரும் ஓர் இடம். நூல்களைக் கொண்டுள்ள இடம் நூலகம் என்ற கருத்து நூலகத்தைப் பயன்படுத்தாத ஒருவரைப் பொறுத்து அவதானிப்பினூடாகப் பெறப்பட்ட ஓர் அறிவாதார அனுபவம். இந்த அறிவாதார அனுபவம் எவ்வித செய்முறைகளுக்கும் உட்படுத்தப்படாது நேரடியாக மனித மூளைக்குள் கருக் கொள்ளும் அறிவாகலாம். நூலகத்தைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் வாசகனைப் பொறுத்து இந்த அறிவாதார அனுபவம் மேலதிக அவதானிப்பினூடாகவோ தொடர்புச் செய்முறையினூடாகவோ பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படின் அது இன்னொருவருக்கு செய்திக் குறிப்பாகப் போய் சேரலாம் அல்லது பெருந்த எண்ணிக்கையுடைய மக்களுக்கு பொதுசனத் தொடர்பு ஊடகம் ஒன்றினால் செய்தி வடிவில் பரப்பப்படலாம். உறுதிப்படுத் தப்படாத போது இக் கருத்துநிலை தொடர்பான மேலதிக தேடல்கள் தரவாகத் தோற்றம் பெற்று இத் தரவுகள் செய்முறைப்படுத்தப்பட்டு தகவலாகத் தோற்றம் பெறலாம். இத் தகவலிலிருந்து அகநிலையில் கருக் கொள்வதே அறிவாகின்றது. இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது தகவல் என்ற கருத்துநிலை மனிதருக்கு மனிதர் வேறுபட்டது.

நிகழ்காலத்தில் தகவலை விளங்கிக் கொள்வதனூடாகவும், ஏற்கனவே எம்மிடம் உள்ள தகவலுடன் அதை இணைப்பதனூடாகவும் பெறப்படுவதே அறிவாகும். செய்முறைப் படுத்தப்பட்ட தரவைத் தகவல் எனக் கொள்வது போன்று செய்முறைப்படுத்தப்பட்ட தகவலை அறிவு எனக் கருத முடியும். அறிவு மனித மனத்தின் அகநிலைப்பட்டது. உள்ளுக்குள்ளேயே உருவாவது. வெளியிலிருந்து பெறப்பட முடியாதது. தகவலோ வெளிநிலைப்பட்டது. மிக நீண்ட காலம் உறுதியுடன் நீடித்து நிலைத்திருக்கின்ற தகவலே அறிவு என்கிறார் வெயிஸ்மன். "அறிவு என்பது இருவகை. எமக்குத் தெரிந்த அறிவு ஒரு வகை, எமக்குத் தெரியாத தகவலை எங்கே பெறலாம் என்ற அறிவு இன்னொரு வகை" என 18ம் நூற்றாண்டிலேயே அறிவு அகநிலைப்பட்டது, தகவல் வெளி நிலைப்பட்டது என அறிவையும் தகவலையும் தெளிவாகப் பிரித்துக் காட்டிய அறிஞர் சாமுவேல் ஜோன்சனின் கூற்றும் இங்கு கருத்தில் கொள்ளப்படக்கூடியது. அறிவு பலதரப்பட்ட உட்பொருட்களில் (Entites) நிலை கொண்டிருக்கும். தனிநபர் ஒருவரின் உள்ளக அறிவாற்றல் அமைப்பின் ஒரு மூலக்கூறாக நிலை கொண்டு தனிநபர் நுண்ணறிவாகத் தீர்மானம் எடுத்தல் செய்முறைக்கு இது அவருக்கு உதவலாம். சமூக நினைவகத்தில் நிலை கொண்டு சமூக நலனுக்கு உதவலாம். நூலக தகவல் நிறுவனங்களில் பதிவேடுகளின் வடிவில் நிலை கொண்டு நூலக தகவல் நுண்ணறிவாக அங்குள்ள தொழிற்திறன் சார்ந்த, சாராத அலுவலர்களின் அனுபவம் நுண்ணறிவு என்பவற்றின் தொகுப்பாக நிலைகொண்டிருக்கலாம். கணினி என்று வரும்போது நிபுணி அமைப்பில் நிலை கொண்டு அறிவுத் தளத்தின் மூலக்கூறாக இயங்கி அவற்றின் அபிவிருத்திக்கு உதவலாம். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2.4 தரவும் தகவலும் [Data and Information]

மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களில் மேலாதிக்கம் செய்யும் சொல் தரவு என்பதாகும். எனவே தரவுக்கும் தகவலுக்குமிடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல் அவசியமாகிறது.

எண்ணம் [Idea]

தகவல் என்பதை முழுமையாக விளங்கிக்கொள்வதற்கு எண்ணம் [Idea] என்ற சொல் பற்றி அறிந்து கொள்வது அவசியம். எண்ணம் என்பது ஒரு மனிதனது மனதில் தோன்றும் சிந்தனையின் உருவாக்கம் ஆகும். பின்வரும் சிந்தனைகளில் ஏதாவது ஒன்று எண்ணமாக இருக்க முடியும்:

1. ஏதாவது ஒன்றைப்பற்றி மனதில் முதன் முதல் தோற்றம் பெறுகின்ற உணர்வினூடாக பெறப்படும் எண்ணப்பதிவு (புலனுணர்வுக்காட்சி).
2. பல புலனுணர்வுக் காட்சிகளின் சேர்க்கை மூலம் பெறப்படும் ஒரு மனவிம்பம்.
3. பல புலனுணர்வுக் காட்சிகளின் சாராம்சமாக கொள்ளப்படும் பொது மனப் பிரதிவிம்பம்.
4. மனம் சார்ந்த தொழிற்பாடுகளின் விளைவுகள்.
5. காரணங்களிலிருந்து பெறப்படுபவை.
6. கற்பனையில் உதிப்பவை.
7. மன வெளிப்பாடுகளிலிருந்து பெறப்படுபவை.
8. உள்ளுணர்வின் மூலம் பெறப்படுபவை.

ஏதாவது ஓர் ஊடகத்தின் மூலம் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்கு மேற்கூறப்பட்ட எண்ணங்களில் ஒன்று உதவும். எண்ணம் என்பது சாதாரண எண்ணமாக, சிக்கல் வாய்ந்த எண்ணமாக, அல்லது எண்ணச்சிக்கலாக இருக்கக்கூடும். ஏனையவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டோ அல்லது தனக்குத் தானே தொடர்பு கொள்ளும் பொருட்டோ ஊடகம் ஒன்றின் பலதரப்பட்ட மட்டங்களில் இது வெளிப்படுத்தப்படுவது அவசியம். இத்தகைய ஊடகங்களில் அடிப்படை ஊடகங்களாக இருப்பவை சைகை, அடையாளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடு, சமிக்ஞை, தூண்டு விசை, சுட்டுக்குறி, ஒலி, படங்கள், சொற்கள், சொற்களின் சேர்க்கைகள் என்பன. இத்தகைய ஓர் ஊடகம் ஒரு சில விதி முறைகளுக்குட்பட்டே கருத்துக் களை வெளிப்படுத்தவோ அதை இன்னோர் இடத்திற்கு அனுப்பீடு செய்யவோ முடியும். மொழி என்பது ஓர் ஊடகம் என்றால் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவை இவ் ஊடகத்தின் பலதரப்பட்ட மட்டத்திலான மூலக்கூறுகள். பலதரப்பட்ட எண்ணங்கள் இந்த மூலக்கூறுகளினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

2.41 தரவு [Data]

ஒன்றுக்கொன்று தொடர்புள்ள எண்ணங்கள் தரவு எனப்படுகிறது. மக்கள், பொருட்கள், நிகழ்வுகள், கருத்துநிலைகளைப் பிரதிபலிப்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு வடிவங்கள் தரவு எனப்படும். நாளாந்த மொழிப் பிரயோகங்களில் தரவு, தகவல் என்ற இரு சொற்களும் ஒரே பொருளில் பயன்படுத்தப்படும் நிலை இருப்பினும் இரண்டிற்கும் இடையில் வேறுபாடு உண்டு.

தகவலை வழங்குவதற்கான ஆரம்பப்புள்ளியே தரவு. தீர்மானம் எடுத்தல் என்ற செய் முறைக்கு உதவுவதற்கு தரவுகள், புள்ளிவிபரங்கள், பெறுமானங்கள், கருத்துக்கள் (அபிப் பிராயங்கள்) என்பன தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் செய்முறைக்குட்படுத்தப்படாத தரவுகள் என குறிப்பிடப்படுகின்றன. அதை பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் விளக்க முடியும்:

பொது நூலகத்தின் வாசகரது எண்ணிக்கை

தரவு		தகவல்	
பெண்கள்	50	பெண்கள்	50
சிறுவர்	70	சிறுவர்	70
முதியோர்	45	மாணவர்	180
உயர்நிலைப்பள்ளி மாணவர்	30	பட்டப்பின்படிப்பு	15
வலுக்குன்றியோர்	25	பல்கலைக்கழகம்	25
ஆராய்ச்சியாளர்	15	உயர்நிலை	30
இடைநிலைப்பள்ளி மாணவர்	40	இடைநிலை	40
பல்கலைக்கழக மாணவர்	25	ஆரம்பப்பாடசாலை	70
பட்டப்பின்படிப்பு மாணவர்	15	ஆராய்ச்சியாளர்	15
ஆரம்பப்பள்ளி மாணவர்	70	வலுக்குன்றியோர்	45
		முதியோர்	45
மொத்தம்	385	மொத்தம்	385

2.5 **தகவலின் கூறுகள்** [Properties of Information]

* தகவல் இயங்குநிலைத் தன்மையுடையது
* உழைப்பு மூலதனம் போன்று தகவலும் ஓர் அடிப்படை வளமாகும் என்பதுடன் ஏனைய வளங்களை பாதுகாக்கும் வல்லமையும் கொண்டது.
* தொடர்ச்சியான பயன்பாடு காரணமாகவோ பகிர்வு காரணமாகவோ இதன் அளவு எப்போதும் குறைவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ✶ பல்பரிமாணத் தன்மை, பல் கூறுத் தன்மை, உயர் பெறுமதி என்பவற்றை உடையது.
* ✶ உள்ளீடாகவும் வெளியீடாகவும் தொழிற்படும் தன்மையுடையது.
* ✶ நிச்சயமற்ற தன்மையை குறைக்கும் பண்பு இதற்குண்டு.
* ✶ கல்வி சார் ஆய்வு நிறுவனங்கள், ஆய்வு கூடங்கள், போன்றவற்றின் வடிவில் செல் வத்தை உருவாக்கும் அடிப்படைச் சக்தியாக தொழிற்படுகிறது.
* ✶ சமூகத்தின் ஆற்றல் அமைப்பை மாற்றும் வல்லமை இதற்குண்டு.
* ✶ தகவல் உருவாக்கமும் தகவல் பரவலாக்கமும் ஒரு தொழிற்றுறையாக கருதப்படுவ தனால் தகவலுக்கு சந்தைப் பெறுமதி உண்டு.

2.6 தகவலின் பண்புகள் [Features of Information]

இயைபுத்தன்மை [Relevance]: தகவல் ஒருவரின் நோக்கத்தை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சரியானதாக இருக்க வேண்டும்.

திட்பநுட்பம் [Accuracy]: உண்மையானதாகவும், நம்பத்தகுந்ததாகவும், துல்லியத் தன்மை வாய்ந்ததாகவும், தகவல் இருக்க வேண்டும். துல்லியத் தன்மை என்னும் போது பெருத்த எண்ணிக்கையுள்ள தகவல்கள். எ-டு: நகரம் ஒன்றின் சனத்தொகை 483,966 என்றிருந்தால் அண்ணளவுப் பெறுமானமாக 5 லட்சம் எனக் குறிப்பிடலாம். அதேசமயம் ஒரு பலசரக்குக் கடையில் இருப்பு எடுக்கும் சமயத்தில் அண்ணளவுப் பெறுமானம் என்பது பொருத்த மானதல்ல.

காலந்தவறாமை [Timeliness]: ஒரு கூட்டம் தொடர்பான அறிவித்தல், குறித்த காலத்திற் கிடையில் கொடுக்கப்படாதுவிடின் முக்கிய தீர்மானம் எடுப்பதில் குழு உறுப்பினிடையே தவறு ஏற்பட வாய்ப்புண்டு. அதேசமயம் அது மிகவும் காலம் முந்திக்கிடைக்குமாயின் பயனற்றதாக சிலசமயம் கூட்டத்தின் காலத்தை மறக்கக்கூடிய வாய்ப்புண்டு. எனவே தகவல் சரியான நேரத்தில் கிடைக்க வேண்டும்.

உடனடிமதிப்பு [Currency]: தகவல் நிகழ்காலப் பெறுமதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். இந்த வாரத்தின் மொத்த வாசகர் எண்ணிக்கை என்று கேட்கப்படும் தகவலுக்கு கடந்த வாரத்து மதிப்பைக் கொடுத்தல் பொருத்தமற்றது.

பூரணத்துவம் [Completeness]: தேவைப்படும் தகவல் அனைத்தும் பூரணமாக வழங்கப்பட வேண்டும். அரைகுறை அறிவு ஆபத்தானது.

தெளிவு [Clarity]: தகவல் போதியளவு விபரத்தை உள்ளடக்கி யிருக்க வேண்டும். அதேசமயம் தேவைப்படும் தகவலைத் தேடிக்கண்டுபிடித்து பிரித்து எடுக்கக்கூடிய நிலமையில் அதிகளவு விரிவுத்தன்மையுடன் இருத்தல் கூடாது.

பயன்விளைவு [Cost- effectiveness]: குறைந்தளவு மதிப்புள்ள தகவலுக்கு அதிகளவு பணமும், அதிக நேரமும் செலவளிக்கப்படுமாயின் அது பயன்விளைவுள்ளதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் மூன்று

தகவல் வளங்கள்

3.0 அறிமுகம்

தகவல் அமைப்புகளின் வாசகருக்குப் பொருத்தமான தகவல் மூலங்களாக உள்ள அனைத்து நூல் மற்றும் நூலுருவற்ற சாதனங்களின் தொகுதி தகவல் வளங்கள் எனப்படுகின்றது. தகவல் வளங்கள் என்ற கருத்துநிலையானது பொருத்தமான நூல் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வாசகனைச் சென்றடைய வேண்டும் என்ற கோட்பாட்டுக்கமைய விருத்தி செய்யப்பட்ட தொன்று. பேராசிரியர் எஸ்.ஆர். இரங்கநாதனின் நூலகவியல் விதிகளில் "நூல்கள் பாவனைக்கே" என்ற முதலாவது விதி குறிப்பிட்ட சாதனத்தை மட்டும் தகவல் மூலமாகப் பார்க்காது நூல்கள் அனைத்தையுமே தகவல் மூலமாகக் கருத வைக்கிறது. இங்கு நூலகம் என்ற எண்ணக்கரு விரிவடைந்து தகவல் அமைப்பாக பரிணமிக்கும் அதே சமயம் நூல்கள் என்ற எண்ணக்கருவும் தகவல் வளங்கள் என்ற கருத்துநிலையாக விரிவடைகிறது. "நூலுக்கேற்ற வாசகன்", "வாசகனுக்கேற்ற நூல் ஆகிய அடுத்த இரு விதிகளும் நூலகங்களை பொது நூலகம், கல்விசார் நூலகம், விசேட நூலகம் என வகைப்படுத்தி அந்தந்த நூலகங் களுக்குரிய வாசகன் சார்ந்து சரியான நூற்சேர்க்கையை கட்டியெழுப்புவதை ஊக்குவிப்பதனால் தகவல் சாதனங்களை பயன்பாடுடையது பயன்பாடற்றது என்ற வகைப்பாட்டுக்கு இடமில் லாமல் செய்துவிடுகின்றது. அது மட்டுமன்றி சரியான நூல் சரியான வாசகனுக்கு சரியான நேரத்தில் சென்றடையவேண்டும் என்பதை வலியுறுத்தும் உசாத்துணைச் சேவையானது நூலகங்களை சேமிப்புக் கூதம் என்ற நிலையிலிருந்து மாற்றி பயன்பாட்டுக்குரிய வளம் என்ற கருத்துநிலைக்கு இட்டுச் செல்கிறது. இவ்வகையில் ஒரு தகவல் அமைப்பிலுள்ள அனைத்துமே பயன்பாட்டுக்குரிய வளமாகக் கருதப்படும் அதேசமயம் அதில் குறித்த வாச கன் தனக்குரிய வளத்தை கண்டுபிடித்து தனது தகவல் தேவையை பூர்த்தி செய்யுமிடத்து அக் குறிப்பிட்ட சாதனம் அவனுக்குரிய தகவல் மூலமாகப் பார்க்கப்படலாம்.

3.1 வளர்ச்சிப் போக்கு

தகவல் அமைப்பு ஒன்றிலுள்ள சாதனங்களை வகைப்படுத்தும் பணியில் பலவித கருத்து நிலைகள் பயன்பாட்டில் உள்ளன. நூல்கள், நூலகங்கள் என்ற எண்ணக்கரு நிலைகொண்டிருந்த காலம்வரை தகவல் சாதனங்கள் அனைத்தும் நூலக சாதனங்கள் அல்லது நூல்கள் என்றே பொதுவாக அழைக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் எழுது பொருளே முதன்மை பெற்றதன் காரணமாக எழுதப்பட்ட தகவலும் எழுது பொருளின் பெயரில் வழங்கியது என்பதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலக்கியங்களில் நாம் காணும் ஏடு என்ற பெயர் வெளிக்காட்டுகின்றது. அதே போன்று எழுது பொருளாக இருந்த ஓலையே எழுதிய நூலுக்கும் பெயராகியது. இன்றைய தகவல் சமூகத்திலும் கூட ஏடு, ஓலை ஆகிய பெயர்கள் வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே போன்று சுவடி, தூக்கு, பனுவல் போன்ற பெயர்களும் நூலுக்கு வழங்கப்பட்டிருந்தன. கருத்துச் சுவடைப்பதித்தல் என்னும் பொருள்பட சுவடி, ஆரம்ப காலத் தகவல்கள் பெரும் பாலும் செய்யுள் வடிவில் அமைந்திருந்ததால் செய்யுள் என்ற பொருள் கொண்ட தூக்கு, சொல்லுதல் என்ற பொருள் கொண்ட பனுவல், புதிய கருத்தைத் தன்னகத்தே கொண்டது என்ற பொருள் கொண்ட புத்தகம் போன்றவை நூலுக்கு பெயரானதும் எமது இலக்கியங்கள் வாயிலாக எமக்கு அறியக் கிடைக்கிறது.

ஆரம்ப காலக் கண்டுபிடிப்புகளான குகை ஓவியங்கள், பாறை ஓவியங்கள், கல்வெட்டுகள் போன்ற அசையாப் பதிவுகளிலிருந்து பைப்பிரஸ் தாள்கள், சுவடிகள், மெழுகேடுகள், தோல் நூல்கள் போன்ற அசையும் பதிவுகள் உருவான காலத்தில் தான் நூல் என்ற சொல்லின் உருவாக்கம் பிறக்கிறது. களிமண் பிரதான எழுது பொருளாக இருந்த காலத்தில் பதிவேடுகளின் ஒவ்வொரு பக்கமும் தனித்தனித் தகடுகளாக அல்லது பலகை வடிவில் இருந்தன. தகவலில் தொடர்ச்சித் தன்மையைப் பேணும் பொருட்டு பலகைகள் ஒவ்வொன்றும் ஒன்றில் எண்ணிடப்பட்டன அல்லது பரந்த பொருட்தலைப்புகளைக் கொண்டிருந்தன. பைபிரஸ், தோல்கள் போன்றவை எழுது பொருளாகப் பயன்பட்ட காலத்தில் இவற்றை ஒன்றுடன் ஒன்று ஒட்டி சுருளை வடிவில் தயார் செய்து தகவல்கள் பதியப்பட்டன. எனவே தகவலில் ஒரு தொடர்ச்சித் தன்மையைப் பேணுவது இலகுவாக இருந்தது. பைபிரசின் ஏற்றுமதி தடைப்பட்டமையும் தோலின் விலை மிக அதிகமாக இருந்தமையும் மரம், ஓலைச் சுவடிகள் போன்றவற்றை எழுது பொருளாக மாற்றியபோது இவற்றை ஒன்றுடன் ஒன்று பொருத்த முடியாததன் காரணமாக தனித்தனி பலகைகள், ஓலைகளில் எழுதி அவற்றின் ஓரத்தில் அல்லது நடுவில் துளையிட்டு இழையொன்றால் ஒன்றாகச் சேர்த்துக் கட்டும் மரபு தோன்றியது. கட்டப் பயன்பட்ட நூலே கட்டிய தொகுதிக்கும் பெயராகியது. முதன் முதல் மரக்கட்டைகளை ஒன்றாகப் பொருத்தி மெழுகு பூசி உரோமர்கள் உருவாக்கிய மர அச்சு நூலுக்கு உரோமர்கள் வழங்கிய Codex என்ற பெயர் தொகுப்பு நூல் என்னும் பொருள் கொண்டது. இன்றைய நூலின் வடிவம் கோடெக்சிலிருந்து வந்ததாகும்.

அறிவியல் தொழினுட்ப வளர்ச்சி காரணமாகத் தகவலைச் சேமிக்கும் சாதனங்களின் பௌதிக வடிவமைப்பில் ஏற்பட்ட புதுப்புது மாற்றங்கள் நூலகங்களை வந்தடைந்தபோது, நூல் என்ற எண்ணக்கரு அனைத்துச் சாதனங்களையும் உள்ளடக்குவதற்குப் பொருத்தமானதல்ல என்பது உணரப்பட்டபோது, நூலகவியல் கலைச்சொல் அகராதியானது, ஆவணம் [Document] என்ற புதிய சொல்லைத் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது. ஆவணம் என்ற சொல்லானது நூல்வடிவில் உள்ள சாதனங்களையும் நூல்வடிவில் இல்லாத சாதனங்களையும் சேர்த்துக் குறிக்கும் பொதுப்பதமாகக் கருதப்பட்டது (Harrod,L.M,1987). ஆவணம் என்ற சொல்லை தமிழ்ச் சமூகத்துக்குரிய புதிய சொல்லாட்சியாக கருத முடியாது. சட்டரீதியான ஆவணங்களும், காணி உறுதிகள் போன்றவையும் ஏற்கனவே ஆவணம் என்ற சொல்லில் வழங்கிவருவதன் காரணமாக நூலகவியல் துறை சார்ந்து ஆவணம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது கருத்துக் குழப்பத்தை ஏற்படுத்தும். அது மட்டுமன்றி தகவல் எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் தகவலை நூலுருவில் மட்டும் காணும் தன்மை அருகிக்கொண்டு வருவதும் வாசித்தல் மட்டுமன்றி பார்த்தல், கேட்டல், நுகர்தல், தொட்டுணர்தல் போன்ற செயற்பாடுகளின் மூலமும் பெறுமதி மிக்க தகவல் உருவாக்கம் பகிர்வு, அனுப்புகை போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் மேற்கொள்ளப்படலாம் என்ற நிலையை உருவாக்கியுள்ள இன்றைய தகவல் தொழினுட்ப சமூகத்தில் ஆவணம் என்ற பதத்தின் கீழ் அனைத்து தகவல் சாதனங்களையும் உள்ளடக்குவது சாத்தியமற்றதொன்று என்பதுடன் ஆவணம் என்ற பதத்தின் பொருள் கூட வாசக சமூகத்துக்கு தெளிவற்ற தன்மையை உருவாக்குவது தவிர்க்கமுடியாததாகின்றது.

தகவலை வழங்கும் சாதனங்களாக மனித வளங்கள், நிறுவனங்கள் என்பவையும் இயங்கமுடியும் என்பது கண்டுணரப்பட்டபோது, ஆவணம் என்ற சொல் பதியப்பட்ட அறிவுக்கு மட்டுமே பொருத்தமானது என்பது தெளிவாகியது. எனவே பதியப்பட்ட, பதியப்படாத தகவல் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் தகவல் மூலங்கள் [Information Sources] என்ற சொல் பரவலான பயன்பாட்டுக்கு வந்தது. இப்புதிய சொல் ஆவணம் சார்ந்த தகவல் மூலங்கள் [Documentary Sources] ஆவணம் சாராத தகவல் மூலங்கள் [Non documentary Sources] என இருவகையாகப் பிரித்து நோக்கப்பட்டது. ஆவணம் சார்ந்த தகவல் மூலங்கள் என்ற சொல்லின் கீழ் நூலுருச் சாதனங்களும் நூலுருவற்ற சாதனங்களும் ஒழுங்குபடுத்தப்பட, ஆவணம் சாராத தகவல் மூலங்கள் என்பதன் கீழ் நிறுவன வளங்களும் மனித வளங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இக்காலப் பகுதியில் தகவல் சாதனங்கள் தொடர்பான இன்னோர் வளர்ச்சியையும் அவதானிக்க முடியும். சாதனங்களின் உருவமைப்பில் மட்டுமன்றி உள்ளடக்கத்திலும் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டிய தேவையைத் தகவல் சாதனங்களின் அதிகரிப்பு நிர்ப்பந்தித்தது. இதனால் தகவல் சாதனங்கள் முதல் நிலைத் தகவல் மூலங்கள் [Primary Information Sources] இரண்டாம் நிலைத் தகவல் மூலங்கள் [Secondary Information Sources] மூன்றாம் நிலைத் தகவல் மூலங்கள் [Tertiary Information Sources] என வகைப்படுத்தப்பட்டன (Krishankumar,1984). அக்காலப் பகுதியில் நூலுருச் சாதனங்களின் அதிகரிப்பே அபரிமிதமாகக் காணப்பட்டதனால், இரண்டாம் நிலை மூன்றாம்நிலைத் தகவல்களும் கூட நூலுருவற்ற சாதனங்களில் உருவாக்கப்படவில்லை.

இலத்திரனியல் உலகிலிருந்து தகவல் தொழினுட்ப உலகுக்குள் மனித சமுதாயம் மெல்ல மெல்ல நுழைந்தபோது தகவல் புரட்சி, தகவல் கட்டுமீறல் போன்ற பதங்கள் தகவல் விஞ்ஞானத் துறையில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. தொகை ரீதியாகவும் தர ரீதியாகவும் அதிகரித்துக் கொண்டு செல்லும் தகவல் சாதனங்களின் தேடுகை மிகக் கடினமானதாக மாறியபோது, தகவல் தொழினுட்பத்தின் உதவிகொண்டு தகவலை ஒழுங்கமைக்கும் முயற்சியில் தகவல் விஞ்ஞானத் துறை மும்முரமாக இறங்கியது. தகவல் வெறும் மூலாதாரம் என்ற நிலையிலிருந்து மாறி அது ஒரு பயன்பாட்டுக்குரிய வளம் என்ற பொருளியல் சார்ந்த கருத்துநிலை மெல்ல மெல்ல உருவாகியது. எனவே பயன்பாடுடைய, பயன்பாடற்ற அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய தகவல் மூலங்கள் [Information Sources] என்ற பதத்தையும் விட தகவல் வளங்கள் [Information Resources] என்ற பதம் பொருளாதார நோக்கில் மிகப் பொருத்தமானதாகக் கண்டுணரப்பட்டது. இன்றும் கூட பெரும்பாலான இலக்கியங்கள் மூலங்கள், வளங்கள் என்ற இரண்டு சொல்லையும் ஒரே பொருளில் தான் பயன்படுத்துகின்றன.

தகவல் கட்டுமீறல் கருத்துநிலையால் வெளியீடுகளின் எண்ணிக்கை அபரிமிதமாக அதிகரித்தபோது தகவலை முதல் நிலை, இரண்டாம்நிலை என வகைப்படுத்தலும் சிரமமானதாக மாறியது. ஏனெனில் நூலுருவில் உருவாக்கப்பட்ட சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் சேவைகளை தகவல் அமைப்புகள் கணினி வடிவில் மிகச் சிறப்பாக ஆற்றத் தொடங்கின. எனவே பௌதீக வடிவமைப்பின் அடிப்படையிலும், உள்ளடக்கத்தின் அடிப்படையிலும் தகவல் சாதனங்களை வகைப்படுத்துதல் சிரமம் தருவதாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பிற்பட்ட காலப்பகுதியில் தகவல் வளங்களைப் பௌதீக அம்சங்களின் அடிப்படையில் ஆவணம் சார்ந்தவை, சாராதவை என வகைப்படுத்துவதிலும் பார்க்க அவற்றைப் பொதுவாக ஆவணம் சார்ந்த வளங்கள், மனித வளங்கள், நிறுவன வளங்கள், தகவல் சேவைகள் என நான்கு வகையாக வகைப்படுத்துவது இலகுவானதாகக் கருதப்பட்டது (Parker and Turkey 1975).

1991ல் வெளியிடப்பட்ட பல்லூடக நூலகம் [Multimedia Library] என்ற நூலானது தகவல் வளங்களுக்கான இலகுவான வகைப்பாடு ஒன்றைத் தருகிறது. தகவல் வளங்களின் உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தாது தகவல் வளங்களின் பௌதீக வடிவமைப்பையும் அவற்றைக் கையாள்வதற்குத் தேவைப்படும் உபகரணங்களின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டே இவ்வகைப்பாட்டை உருவாக்கியுள்ளது. இங்கு தகவல் வளங்கள் அனைத்தும் தகவல் ஊடகங்கள் [Information Media] என்ற பொதுப் பெயரின் கீழ் பத்துப் பிரிவுகளாகப் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன (Cabeceiras, James, 1991):

1. உருவங்கள் [Objects]: உண்மை உருவமைப்புகள், மாதிரி உருவமைப்புகள் போன்றவை இவ்வகைக்குள் உள்ளடங்கும்.
2. உபகரணத் தேவையற்ற, கட்புல, நிலையான, ஊடகங்கள் [Visual, Still, Non Mediated Media]: அச்சு வடிவத் தகவல்கள், வரைபுகள், விளக்கப்படங்கள், ஒளிப்படங்கள், ஓவியங்கள் போன்றவை இவ்வகைக்குள் உள்ளடங்கும்.
3. உபகரணத்தேவையுள்ள கட்புல, நிலையான ஊடகங்கள் [Visual, Still, Mediated Media]: படத்துணுக்குகள், காட்சி வில்லைகள், கணினித் திரையில் தோன்றுகின்ற தகவல்கள், வாசிக்க மட்டுமேயான நினைவகத்தைக் கொண்ட குறுவட்டுகளில் சேமிக்கப்படும் தகவல்கள் [CDROM] என்பவற்றை இது உள்ளடக்கும்.
4. உபகரணத் தேவையுள்ள கட்புல, அசையும் ஊடகங்கள் [Visual, Motion, Mediated Media]: தற்காலத்தில் பாவனையிலிருந்து வழக்கொழிந்துவிட்ட மௌனப் படங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.
5. உபகரணத் தேவையற்ற செவிப்புல ஊடகங்கள் [Audio, Non Mediated Media]: தகவல் அமைப்புகளினால் ஒழுங்குபடுத்தப் படும் கருத்தரங்குகள், மாநாடுகள், தனிப்பட்ட சந்திப்புகள் போன்றவற்றினூடாக மனித வளங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள். இசைக்கருவிகள் கூட இவ் வகையைச் சார்ந்தது எனினும் ஒரு சில தகவல் அமைப்புகளே இவற்றைத் தமது தகவல் வள இருப்பில் சேர்த்துக் கொள்கின்றன.
6. உபகரணத் தேவையுள்ள, செவிப்புல ஊடகங்கள் [Audio, Mediated Media]: பலதரப் பட்ட வடிவங்களிலும், வேகங்களிலும் உருவாக்கப்படுகின்ற ஒலிப் பதிவுகளும் நாடாப் பதிவுகளும் இவ்வகைக்குள் அடங்கும்.
7. உபகரணத் தேவையுள்ள கட்புல, செவிப்புல, நிலையான ஊடகங்கள் [Audio, Visual, Still, Mediated Media]: ஒலியமைப்புடன் கூடிய படத்துணுக்குகளும், காட்சி வில்லைகளும் இவ்வகைக்குள் அடங்கும்.
8. உபகரணத் தேவையுள்ள கட்புல, செவிப்புல அசையும் ஊடகங்கள் [Audio, Visual, Motion, Mediated Media]: 16 படங்கள், வீடியோப் படங்கள், வீடியோ லேசர் வட்டுகள் என்பன இவ்வகைக்குள் உள்ளடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நுகரக்கூடிய ஊடகங்கள் [Consumable Media]: சிறுவர்களுக்கான வண்ணம் தீட்டும் தகவல் வளங்கள், பாவனையாளரால் நேரடியாகப் பயன்படுத்தப்படும் பாடநூல்கள் அல்லது எழுதிப் படிக்கக்கூடிய நூல்கள் போன்றவை இதற்குள் உள்ளடங்கும். தகவல் அமைப்பின் தகவல் வளத் தொகுதியில் இவை சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.
10. மாற்றம் செய்யக்கூடிய ஊடகங்கள் [Manipulative Media]: கணினி விளையாட்டுகள், போலச் செய்தல்கள் போன்றவை இதற்குள் உள்ளடங்கும். பாவனையாளர் தனியாகவோ அல்லது சிறு குழுவாகவோ சேர்ந்து அவற்றுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தமக்கு வேண்டிய தகவல்களையோ அல்லது தமது குறிக்கோள்களையோ அடைய முடியும்.

3.2 புதிய கருத்துருவாக்கம்

கற்காலம் முதல் தற்காலம் வரை மனித சிந்தனைகளைத் தாங்கி வந்திருக்கும் சிந்தனைப் பதிவேடுகளுக்கு காலத்துக்குக் காலம் மனிதனே சூட்டிக் கொண்ட மேற்குறிப்பிட்ட சொற்பதங்களை அடிப்படையாகக் கொண்டு இன்றைய தகவல் தொழினுட்பச் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில் புதிய கருத்துருவாக்கம் ஒன்றை ஏற்படுத்துவது நூலகத் துறையின் நேரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்ற வகையில் சிந்தனைப் பதிவேடுகளுக்கு உருவாக்கப்பட்ட கடந்தகால கருத்து நிலைகளிலும் வகைப்பாடுகளிலும் பொருத்தமானவற்றை உள்ளடக்கி புதியதொரு வகைப்பாடு இங்கு தரப்படுகின்றது.

நூலக தகவல் அறிவியல் துறை சார்ந்த பெரும்பாலான இலக்கியங்களில் இன்று வரை தகவல் மூலங்கள் [Sources of Information] என்ற சொல்லே மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. நூலக தகவல் அறிவியல் துறை சார்ந்து பயன்படுத்தப்படும் இணையத் தள அகராதியிலும் தகவல் மூலம் என்ற பதமே இன்றுவரை பயன்பாட்டிலுள்ளது [Reitz 2007]. தகவல் அமைப்புகளின் வாசகர்களுக்கு தேவைப்படும் தகவலைக் கொண்டிருக்கும் எந்தவொரு ஆவணமும் தகவல் மூலங்கள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது. இங்கு ஆவணங்கள், மனித வளங்கள், உபகரணங்கள் என்று தகவல் அமைப்பு ஒன்றில் இருக்கக் கூடிய அனைத்து வளங்களையும் உள்ளடக்கும் பொதுப்பதமாக வளம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றதேயன்றி தகவல் என்ற சொல்லுடன் இணைத்துப் பயன்படுத்தப்படவில்லை. பொருளாதார நோக்கில் தகவல் ஒரு வளம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றபோது தகவலைக் கொண்டிருக்கும் அனைத்துச் சாதனங்களும் தகவல் வளம் என அழைக்கப்படுதல் பொருத்தமானது. பரந்த நோக்கில் தகவலைக் கொண்டிருக்கும் மூலாதாரங்கள் என்ற வகையிலேயே தகவல் மூலங்கள் என்ற பதம் பிரயோகப்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான இலக்கியங்கள் மூலங்கள், வளங்கள் என்ற இரண்டு சொல்லையும் ஒரே பொருளில் தான் பயன்படுத்துகின்றன எனினும் இரண்டுக்கும் இடையில் வேறுபாடு உண்டு. தகவல் மூலங்கள் என்ற சொல் பின்வரும் இரண்டு வகையாக பொருள் கொள்ளப்பட முடியும்:

1. தகவல் வளங்களின் தன்மையுடன் தொடர்புடைய கருத்து நிலை.
2. வாசகனது தகவல் தேவையுடன் தொடர்புடைய கருத்து நிலை.

மேற் குறித்த இரண்டு அணுகுமுறையும் நூலகத்திலுள்ள பயன்பாடுடைய பயன்பாடற்ற அனைத்து சாதனங்களையும் உள்ளடக்குகின்றது. முதலாவது அணுகுமுறையில் தனிப்பட்ட வாசகனது தகவல் தேவையை மையப்படுத்தாது தகவல் சாதனங்களின் அடிப்படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் மூலங்களைக் கருதுகின்றது. இம் முறையில் ஒட்டு மொத்தமாக உசாத்துணை சாதனம் ஒவ்வொன்றுமே தகவல் மூலமாகப் பார்க்கப்படுகின்றது. தகவல் வளங்களின் வளர்ச்சிப் போக்கில் தகவல் வளங்கள் சாதாரண வளங்கள் என்றும் உசாத்துணை வளங்கள் என்றும் இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. இவற்றுள் உசாத்துணை சாதனங்கள் குறித்த வாசகனை மட்டும் மையப்படுத்தாது ஒட்டுமொத்தமாக அனைத்து வாசகர்களுக்கும் தேவைப்படக்கூடிய பொதுத் தகவல்களை உள்ளடக்கி உருவாக்கப்படுவதன் காரணமாக குறித்த தகவலுக்கான உசாத்துணை மூலமாக [Sources of Information] பார்க்கப் படுன்றது.

இரண்டாவது கருத்துநிலையானது வாசகனுக்குத் தேவைப்படும் தகவல் எந்த சாதனத்தில் இருந்தாலும் அச் சாதனம் குறிப்பிட்ட அந்த வாசகனுக்குரிய தகவல் மூலம் என்ற வகையில் உசாத்துணை சாதனங்கள் மட்டுமன்றி ஏனைய சாதனங்களையும் இது உள்ளடக்குகின்றது. நூல் பாதுகாக்கப்பட வேண்டியவையாகவும் குறித்த ஒரு பிரிவினரே நூல்களைப் பயன்படுத் தலாம் என்ற நிலை இருந்தவரையும் குறிப்பிட்ட ஒரு வாசகனது தகவல் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு சாதனம் குறித்த அவ்வாசகன் சார்ந்து தகவல் மூலமாகவும் ஏனைய வாசகருக்கு பொதுவான சாதனமாகவும் பார்க்கப்பட்டது. குறித்த வாசக சமூகத்தை மையப்படுத்தாது அனைத்து நூல்களும் ஓரிடத்தில் பாதுகாப்பு நோக்கங் கருதிப் பேணப்பட்ட காலத்தில் அதாவது நூலகங்கள் சேமிப்புக் கூதங்கள் என்ற கருத்துநிலை இருந்த காலம் வரை வாச கனை மையப்படுத்தி தகவல் சாதனங்கள் எதுவும் பார்க்கப்படவில்லை.

நூலக தகவல் அறிவியல் துறையில் மட்டுமன்றி எல்லாத் துறைகளிலுமே நூல்கள், ஆவணங்கள் போன்ற பாரம்பரிய சொற் பதங்களே இன்றும் மேலாதிக்கம் செலுத்துகின்ற ஒரு நிலையில் இங்கு தகவல் வளங்கள் என்ற பதம் நூல்களைக் குறிக்கின்ற பொதுப்பதமாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த நூல் முழுவதும் எடுத்தாளப்படுகின்றது.

3.3 வகை

வெளி உடல், உள்ளுறுப்புகள், ஆத்மா என மனிதனது உடலமைப்பை வகைப்படுத்துவது போன்று உருவம், உள்ளடக்கம், உட்பொருள் என்ற மூன்று கூறுகளும் இணைந்ததே சிந்தனைப் பதிவேடு என்ற கோட்பாட்டுக்கு அமைய இப் பதிவேடுகளை அவற்றின் உருவமைப்பு, உள்ளடக்கம், உட் பொருள், தரம், தன்மை, தேவை, தகவல் பெறும் முறை ஒழுங்கமைப்பு ஆகிய பின்வரும் எட்டு அம்சங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவது பொருத்தமானது:

3.31 உருவம் (By Form)

உருவ அடிப்படையில் தகவல் வளங்களை பின்வரும் மேலும் மூன்று உபபிரிவுகளாக வகைப்படுத்த முடியும்:

- ★ தகவல் பதிவு சார்ந்தவை.
- ★ தகவல் பதிவேடு சார்ந்தவை.
- ★ தகவல் பதிவேட்டு வடிவமைப்பு சார்ந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.311 **தகவல் பதிவு சார்ந்தவை** [Information Recording Media]

பதியப்பட்ட தகவலின் வடிவ அடிப்படையில் தகவல் வளங்களை உருவப் பதிவுகள், எழுத்துப் பதிவுகள், அச்சுப் பதிவுகள், நுண் பதிவுகள், மின் பதிவுகள் என ஐந்து வகையாகப் பிரித்து நோக்க முடியும். வேட்டையாடலை பிரதான தொழிலாகவும் மனித வலுவை பிரதான மூலவளமாகவும் கொண்ட ஆதிப் பொதுவுடமைச் சமூகத்தில் இனங்காணப்பட்ட பதிவுகளாக கல் வெட்டுகள், பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள் போன்ற அசையாப் பதிவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன எனினும் நூலகம் சார்ந்து இவற்றை பதிவேடாகப் பயன்படுத்த முடியாது என்பதும் தெளிவு. விலங்குநிலையிலிருந்த காலத்தில் தனது முக்கிய தேவைகளைச் சைகை மூலம் தெரிவித்து வாழ்ந்த மனித சமூகம் காலப்போக்கில் பயன் படுத்திய உணர்ச்சியொலி, போலியொலி, குறிப்பொலி போன்றவை நாளடைவில் மொழியாக வளர்ச்சியடைந்து, அதனை வெளிப்படுத்த எழுத்தை உண்டாக்கிய காலப் பகுதியிலிருந்து எடுத்துச் செல்லத்தக்க வகையிலான சிந்தனைப் பதிவேடுகளும் தோற்றம் பெறுகின்றன.

விவசாயத்தை பிரதான தொழிலாகவும் நிலத்தைப் பிரதான மூலவளமாகவும் கொண்ட நிலவுடைமைச் சமூகத்தில் தோற்றம் பெற்றவையாக களிமண் பதிவேடுகள், பைபிரஸ் தாள்கள், தோல் நூல்கள், மெழுகேடுகள் போன்றவற்றைக் கொள்ள முடியும். இத்தகைய பதிவுகள் ஆரம்பத்தில் சித்திரப் பதிவுகளாக உருவாக்கம் பெற்ற போதும் மொழியின் கண்டுபிடிப்பால் மிக வேகமாக எழுத்துப்பதிவுகளுக்கு இவை மாறின. கைத்தொழிலை பிரதான தொழிலாகவும் இயந்திரத்தை பிரதான மூலவளமாகவும் கொண்ட கைத்தொழில் சமூகத்தின் பிரதான பதிவுகளாக நூல்கள், பருவ இதழ்கள், செய்தித்தாள்கள் போன்ற அச்சுப் பதிவுகள் கருதப்படுகின்றன. தாள்களின் கண்டுபிடிப்பும் தொழினுட்ப வளர்ச்சியும் இணைந்து மிகப் பெருந்தொகையான நூல்களை உற்பத்தி செய்யும் சமூகமாக கைத்தொழில் சமூகம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆய்வு நடவடிக்கைகளை பிரதான தொழிலாகவும் ஆய்வை பிரதான வளமாகவும் கொண்ட கைத்தொழில் சமூகத்துக்குப் பிந்திய சமூகத்தில் நுண் வடிவங்கள், படத் துணுக்குகள், காட்சி வில்லைகள் போன்ற நுண் பதிவுகள் மேலாதிக்கம் செய்துள்ளன. தகவலைப் பாதுகாத்தல் என்பது இச் சமூகத்தில் பிரதான நோக்கமாக கருதப்பட்டது. தகவல் தொழிற்துறையை பிரதான தொழிலாகவும் தகவலை பிரதான மூல வளமாகவும் கொண்ட இன்றைய தகவல் தொழிநுட்பச் சமூகத்தை சீடிக்கள், இணையத் தளங்கள், இலக்கத் தரவுகள் போன்ற மின்னியல் பதிவுகள் ஆக்கிரமித்துள்ளன.

தகவல் வெளிப்பாட்டு வடிவங்களான உரு, வரைபு, வரி, அலை ஆகிய நான்கும் அன்றிலிருந்து இன்றுவரை தகவல் வள உற்பத்தியில் தனித்தோ ஒன்றுடன் ஒன்று இணைத்தோ பயன்படுத்தப்படுகின்றன. உண்மை உருக்கள், மாதிரி உருக்கள் என்பன உருக்கள் சார்ந்த தகவல் வெளிப்பாட்டு வடிவமாக கருதப்படும். வரைபுகளுக்குள் சித்திரங்கள், ஓவியங்கள், படங்கள், ஒளிப்படங்கள், கோட்டுப் படங்கள், அட்டவணைகள், விளக்கப்படங்கள் போன்றவை உள்ளடங்கும். வரிவடிவங்களுக்குள் எண்களும் எழுத்துக்களும் உள்ளடங்கும். இவை தனித்தனி தகவல் வளமாகவோ அல்லது வரைபுகளும் வரிவடிவங்களும் இணைந்த கலவையாகவோ இருக்கலாம். அலை வடிவங்களுக்குள் பெரும்பாலான ஒலி ஒளிப்பதிவுகள் உள்ளடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.312 **தகவல் பதிவேடு சார்ந்தவை** [Information Storage Media]

தகவல் பதியப்பட்டுள்ள ஊடகத்தின் அடிப்படையில் தகவல் வளங்களை மரபு ரீதியானவை, நவீன ஊடகங்கள் என இருவகைப்படுத்தலாம். உண்மை உருவமைப்புகள், மாதிரி உருவமைப்புகள், கல்வெட்டுக்கள், களிமண் பலகைகள், பைபிரசு தாள்கள், ஓலைச் சுவடிகள், துணி நூல்கள், மர அச்சு நூல்கள் உலோக ஏடுகள், தாள் நூல்கள் மரபுரீதியான ஊடகங்களின் வகைப்பாட்டுக்குள் வருபவை. இன்றைய நவீன சாதனங்கள் அனைத்தும் Fibre என்ற பிளாஸ்ரிக் பொருளிலிருந்து உருவானவை. நுண் வடிவ சாதனங்களிலிருந்து இந்த மாற்றம் உருவானதொன்று இன்றைய இறுவட்டுக்கள் வரை இந்த பொருளே மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

3.313 **தகவல் பதிவேட்டு வடிவமைப்பு சார்ந்தவை** [Information Recording Format Media)

தகவல் வள வடிவமைப்பு சார்ந்து தகவல் வளங்களை கட்புல ஊடகங்கள், செவிப்புல ஊடகங்கள், கட்புல செவிப்புல ஊடகங்கள் என மூவகைப்படுத்த முடியும். இவை ஒவ்வொன்றும் உபகரணத் தேவையற்ற ஊடகங்கள், உபகரணத் தேவையுள்ள ஊடகங்கள் என மேலும் வகைப்படுத்தப்படும்.

3.32 **உள்ளடக்கம்** (By Content)

உள்ளடக்கத்தின் அடிப்படையில் தகவல் வளங்களை முதல்நிலைத் தகவல் வளங்கள், இரண்டாம் நிலைத் தகவல் வளங்கள், மூன்றாம் நிலைத் தகவல் வளங்கள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம்.

3.321 **முதல்நிலைத் தகவல் வளங்கள்** (Primary Information Resources)

உண்மையான ஆய்வு அபிவிருத்திகளை, அவற்றின் புதிய பிரயோகங்களின் விளக்கங்களை, அல்லது பழைய கருத்துக்களுக்கான புதிய விளக்கங்களை உடனுக்குடன் தாங்கி வரும் வெளியீடுகள் அனைத்தும் முதல்நிலைத் தகவல் வளங்கள் எனப்படுகிறது. ஆய்வாளர் ஒருவரால் உருவாக்கப்படுகின்ற புதிய தகவல்கள் அனைத்துமே இந்த முதல்நிலைத் தகவல் வளங்களின் ஊடாகக் குறிப்பிட்ட சமூகத்தைச் சென்றடைகிறது. ஒழுங்குபடுத்தப்படாத வளங்களாக இவை இருப்பதனால் இதனைப் பயன்படுத்துவது எளிதல்ல. இவற்றின் பூரண பயன்பாட்டிற்குப் பாவனையாளர் இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலேயே பெருமளவில் தங்கியிருக்க நேரிடும். மிக முக்கியமான தகவல் மூலாதாரங்களாகக் கருதப்படும் இவ் வளங்கள் புதிய அபிவிருத்திகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிவிப்பதன் மூலம் அத்துறை தொடர்பாக அதிக அறிவு நிலையில் இருக்க உதவுதல், ஒரே மாதிரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுத்தல், புதிய தகவல்களை உருவாக்குவதற்கு ஏனையோர்களுக்கு உதவுதல் என்ற வடிவில் ஆய்வாளர்களுக்கு உதவுகின்றன. ஒரு குறிப்பிட்ட துறையின் வளர்ச்சி வீதமானது அத்துறை சார்ந்து வெளிவரும் முதல்நிலைத் தகவல் வளங்களின் தொகையிலேயே பெருமளவு தங்கியுள்ளது. முதல் நிலைத் தகவல் வளங்கள் பின்வரும் வடிவங்களில் வெளியாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.322 **இரண்டாம்நிலைத் தகவல் வளங்கள்**; (Secondary Information Resources)

இவை முதல்நிலைத் தகவல் வளங்களிலிருந்து தொகுக்கப்படுவதாக அல்லது முதல் நிலைத் தகவல் வளங்களுக்கு வழி காட்டுவதாக இருக்கும். குறிப்பிட்ட தகவல் பாவனையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முதல் நிலைத் தகவல்களில் உள்ள அடிப்படைத் தகவல்கள் புதுப்பிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு, ஏதாவது ஒரு திட்டமிடப்பட்ட ஒழுங் கமைப்பில் மீள ஒழுங்கமைக்கப்பட்டுப் பொதி செய்யப்படுகின்றன. முதல் நிலைத் தகவல் வளங்களிலும் பார்க்க இலகுவாகக் கிடைக்கக்கூடியதாக இவை உள்ளன. சுருக்கமான தகவல்களை வழங்குவது மட்டுமன்றி முதல் நிலைத் தகவல் வளங்களுக்கான நூல்விபரத் திறவுகோலாகவும் இவை தொழிற்படுகின்றன.

3.323 **மூன்றாம் நிலைத் தகவல் வளங்கள்** (Tertiary Information Resources)

முதல் நிலைத் தகவல் வளங்களிலிருந்தும் இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து தொகுக்கப்படும் தகவல் வளங்கள் இவ்வகைக்குள் அடங்கும். முதல் நிலைத் தகவல் வளங்களையும், இரண்டாம் நிலைத் தகவல் வளங்களையும் பயன் படுத்தும் பயன்பாட்டில் தகவல் தேடு பவருக்கு உதவுதலே இத்தகைய வளங்களின் நோக்க மாகும். இத்தகைய வளங்களில் பெரும்பாலானவை பொருட்துறை சார்ந்த அறிவைக் கொண்டிருப்பதில்லை. இலக்கியங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக, மூன்றாம் நிலைத் தகவல் வளங்களின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டிருக்கிறது. பலதரப்பட்ட தகவல் வளங்களிலும் இறுதியாக தோற்றம் பெறுவது இத்தகைய வளங்களேயாகும்.

3.33 **உட்பொருள்** (By Concept)

ஒரு தகவல் வளமானது வாசகனுக்கு ஒட்டு மொத்தமாக எதைச் சொல்ல விழைகின்றது என்பதன் அடிப்படையில் இவற்றைப் பின்வருமாறு மூன்றுவகைப்படுத்தலாம்:

- ✶ புத்துயிர் தருபவை
- ✶ தகவலைத் தருபவை
- ✶ உயிர்ப்பூட்டுபவை

3.331 **புத்துயிர் தருபவை** (Recreative Resources)

உண்மையோ பொய்யோ, நல்லதோ தீயதோ படிப்பவருக்கு ஒரு புதிய உணர்வை, புதுவித எழுச்சியை, புதுவித கிளர்ச்சியை, பொழுதுபோக்கு உணர்வைத் தருபவை புத்துயிர் தரும் தகவல் வளங்கள் எனப்படும். சமூகத்தின் வாழ்நிலையைப் பிரதிபலிப்பவை தான் இலக் கியங்கள் என்ற உயரிய கருத்துநிலையிலிருந்து இம்மியும் வழுவாமல் படைக்கப்படும் எந்தவொரு இலக்கியமும் புத்துயிர் தரும். கவிதை, நாடகம், நாவல்கள், சிறுகதைகள் போன்ற இலக்கியங்களும், ஓவியம், சிற்பம், போன்ற கலைத்துவ ஆக்கங்களும், வாசிப்ப வருக்கு அமைதியையும் நிறைவையும் தருகின்ற ஆன்மீக வளங்களும், பழம்பெரும் இலக் கியங்களான புராண இதிகாசங்கள், திருமுறைகள் போன்றவை இவ்வகைக்குள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.332 **தகவலைத் தருபவை** (Informative Resources)

வரலாறு, அரசியல், புவியியல் போன்று எடுத்துக் கொண்ட பொருட்துறை தொடர்பாக பொதுவான தகவலை உள்ளடக்குபவை தகவலைத் தரும் வளங்கள் எனப்படும். குறிப்பிட்ட பொருட்துறையில் எழுதப்படும் தனிப்பொருள் சார்ந்த தகவல் வளங்கள், கல்வித்தேவையைப் பூர்த்தி செய்யும் பாடநூல்கள், ஆய்வுக்கு உதவும் அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், பருவ இதழ்கள் போன்ற அடிப்படைத் தகவல் வளங்கள், தேவைப்பட்ட உடனேயே குறிப்புகளை வழங்கும் உசாத்துணைத் தகவல் வளங்கள் இவ்வகைக்குள் அடங்கும்.

3.333 **உயிர்ப்பு ஊட்டுபவை** (Inspirative Resources)

மனிதனின் அறிவைத் தூண்டுகின்ற, சிந்திக்க செய்கின்ற, மனிதனையும் சமூகத்தையும் முன்னேற்றுகின்ற நூல்கள் உயிர்ப்பூட்டும் நூல்கள் எனப்படும். பொருளாதார தத்துவத்தைப் புகுத்திய அடம்ஸ்மித்தின் "தேசங்களின் செல்வம்", பொதுவுடைமைத் தத்துவத்தைத் தந்த கார்ல்மாக்ஸின் "மூலதனம்", உயிரின் உருவாக்கத்தை விளக்கிய டார்வினின் "பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு", மக்கள் தொகைப் பிரச்சனையை விளக்கிய மால்தசின் "மக்கள் தொகைக் கோட்பாடு", மனித மனத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டிய சிக்மண்ட் பிராய்டின் "மனித மன சிந்தனை", சத்திய வாழ்க்கையை எடுத்தியம்பிய "அரிச்சந்திரன் கதை", அதர்மத்துக்கும் தர்மத்துக்குமிடையிலான யுத்தத்தில் தர்மமே வெல்லும் என்பதை உணர்த்தும் "பாரத இராமாயணக் கதைகள்", ராகுல சாங்கிருத்தியானின் வால்காவிலிருந்து கங்கை வரை போன்றவை இவ்வகைப்படுவன.

3.34 **தரம்** (By Standard)

தகவல் வளங்களை தர அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- ★ தொடக்கநிலையின (Elementary Materials) சிறுவர் நூல்கள் : பாடசாலை சம்பந்தமான பாடத்திட்ட நூல்கள், ஆரம்பக் கல்வி நூல்கள்.
- ★ கருமூலம் கொண்டவை (Seminal Materials): எடுத்துக் கொண்ட பொருட்துறை தொடர்பான ஆழமான கருத்துக்களையும், விளக்கத்தையும் தருகின்ற வளங்கள், கோட்பாடு, தத்துவம் போன்றவை, படங்கள், ஓவியங்கள் சித்திரங்கள் போன்ற நுண் கலை சார்ந்த ஆக்கங்களும் இதற்குள் உள்ளடங்கும்.
- ★ ஆய்வு கொண்டவை (Research Materials): உண்மையான ஆய்வு அபிவிருத்திகளை, அவற்றின் புதிய பிரயோகங்களின் விளக்கங்களை, அல்லது பழைய கருத்துக்களுக்கான புதிய விளக்கங்களை உடனுக்குடன் தாங்கி வரும் வெளியீடுகள் அனைத்தும் இவ் வகைக்குள் அடங்கும். ஆய்வுக்கட்டுரைகள் போன்றவை.
- ★ விளக்கம் தருபவை (Research Materials): எடுத்துக் கொண்ட பொருட்துறை தொடர்பாக விரிவான தகவலைத் தருபவை பாடநூல்கள் இவ்வகையைச் சார்ந்தவை. அத்துடன் கைந்நூல்கள், கையேடுகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்ற உசாத்துணை வளங்கள், சட்ட சம்பந்தமான விளக்க ஆவணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுருக்கித் தருபவை (Condensed Materials): சாராம்சங்கள் தகவல் பகுப்பாய்வு ஒன்றி ணைப்பு ஆக்கங்கள்

★ அறிக்கை நிலையின (Reporting Materials) : அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற் பாடுகள் உள்ளடங்கிய அறிக்கைகள், செய்திக்கடிதங்கள், செய்தியறிக்கைகள் மற்றும் அரச ஆவணங்கள், ஆண்டு நூல்கள், ஐந்தொகுதிகள் போன்ற அறிக்கை வடிவிலமைந்தவை.

3.35 தகவல் தன்மை (By Usage)

தகவலின் தன்மையின் அடிப்படையில் தகவல் வளங்களைப் பொதுவாக பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. சாதாரண வளங்கள்: அறிவைப் பெறுதல், பொழுது போக்குதல், தகவலைப் பெறுதல் போன்ற தொடர்ச்சியான பாவனை கருதித் தயாரிக்கப்படும் தகவல் வளங்கள் இவ் வகைக்குள் அடங்கும். வாக்கியங்கள், பந்திகள், அத்தியாயங்கள் என வளர்ந்து செல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ச்சியும் விளக்கமும் இவற்றுக்குண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு பொருளாதார வரலாற்று நூலில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரு தொடர்புத்தன்மை பேணப்படுவதைக் காணமுடியும். ஒரு நூலகத்தின் 90 வீதமான பகுதியை நிரப்புபவை இத்தகைய வளங்களே.

2. உசாத்துணை வளங்கள்: தனித்துவமான தகவலைப் பெறும் நோக்குடன் காலத்துக்குக் காலம் குறிப்பெடுக்கவென வடிவமைக்கப்படும் வளங்கள் இவ்வகைக்குள் அடங்கும். இவற்றின் ஒழுங்கமைப்பும் பயன்பாடும் ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு அமைக்கப் பட்டிருக்கும். இவற்றை உசாத்துணைக் கருவிகள், நூல் தெரிவுக் கருவிகள் என மேலும் இருவகையாகப் பாகுபடுத்தலாம். அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், ஆண்டு நூல்கள், ஐந்தொகுதிகள், வழிகாட்டிகள், உடனடி உசாத்துணை வளங்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், புவியியல் சாதனங்கள் போன்றவை உசாத்துணைக் கருவிகள் எனவும் நூல் விபரப் பட்டியல்கள், வெளி யீட்டாளர் பட்டியல்கள், சொல்லடைவுகள், சாராம்சங்கள் போன்றவை நூல் தெரிவுக் கருவிகள் எனவும் வழங்கப்படுகின்றன.

3.36 தகவல் தேவை (Information Needs)

வாசகனது தகவல் தேவையின் அடிப்படையில்

★ என்ன? என்ற வினாவுக்கு விடை தருபவை (Know What Information). அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், சொற் களஞ்சியங்கள், ஐந்தொகுதிகள், ஆண்டு நூல்கள், வினா விடை நூல்கள் போன்றவை. எந்தவொரு ஆய்வும் என்ன என்ற வினாவிலேயே தொடங்குகின்றது. என்ன என்ற வினாவுக்கு முதலில் பார்க்கப்பட வேண்டிய வளமாக குறிப்பிட்டதுறை சார்ந்த கலைச்சொல் அகராதிகள் உதவுகின்றன. அதன் தொடர்ச் சியாக துறை சார்ந்த அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும் உதவுகின்றன. இதன் தொடர்ச்சியாக ஏன், என்ன வினாவுக்குரிய தகவல் நோக்கி நகரவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஏன்? என்ற வினாவுக்கு விடை தருபவை (Know Why Information) கோட்பாடு சார்ந்த தகவல் வளங்கள், அறிவியல் தொழினுட்ப வளங்கள், தத்துவம், வரலாறு போன்றவை. நூலகத்தின் கணிசமான பகுதியை நிரப்புபவை இந்த வளங்களே. தொடர் வெளியீடு களில் வரும் கட்டுரைகள் முதற்கொண்டு ஆய்வு சார்ந்து வெளியிடப்படும் பெரும் பாலான முதல் நிலைத் தகவல் வளங்கள் ஏன் என்ற வினாவுக்கு விடை தருபவையாக அமைகின்றன.

★ எப்படி? என்ற வினாவுக்கு விடை தருபவை (Know How Information): கைந்நூல்கள், கையேடுகள், வழிகாட்டிகள் போன்றவை .

★ யார்? எது என்ற வினாக்களுக்கு விடை தருபவை (Know Who Information): தனிநபர் வாழ்க்கை வரலாறுகள், சுயசரிதங்கள், வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புகள்.

★ எங்கே? என்ற வினாவுக்கு விடை தருபவை (Know Where Information): தேசப்படத் தொகுதிகள், பயண வழிகாட்டிகள், புவியியல் அகராதிகள் போன்ற உசாத்துணை வளங்களும் நூல் விபரப்பட்டியல்கள், சொல்லடைவுகள், சாராம்சங்கள் போன்ற நூல் தெரிவுக் கருவிகளும் உள்ளடங்கும்.

3.37 தகவல் பெறும் முறைமை (Information Obtaining Mechanism)

தகவலானது தனக்குரிய வடிவைப் பெறுவதற்கு முன்னர் ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி மூலம் பெறப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பார்த்தல், கேட்டல், முகர்தல், தொட்டுணர்தல், சுவைத்தல் ஆகிய அடிப்படை முறைகளினூடாகப் பெறப்படும் உண்மை நிகழ்வாக (Fact) தோற்றம் பெறுகின்றது. மீளப் பார்த்தல், ஒப்பு நோக்கல், அவதானித்தல், சேகரித்தல் போன்ற இரண்டாம் நிலைச் செயற்பாடுகளினால் இந்த உண்மை நிகழ்வுகள் தரவாக மாறி, ஆய்வு செய்தல், பகுத்தாய்வு செய்தல், ஒழுங்கமைத்தல் போன்ற மூன்றாம் நிலைச் செயற்பாடுகளினால் தகவலாக மாறுகின்றது. எனவே தகவலைப் பெறும் முறைகளின் அடிப்படையில் தகவல் வளங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

★ அவதானித்தலுக்குரியவை: நிலையான ஊடகங்களான படங்கள், ஒளிப்படங்கள், ஓவியங்கள், சித்திரங்கள் நுண் வடிவங்கள், படத் துணுக்குகள், காட்சி வில்லைகள், உண்மை உருவமைப்புகள், மாதிரி உருவமைப்புகள் போன்றவையும் அசையும் ஊடகங்களான மௌனப் படங்களும் இவ் வகைக்குள் உள்ளடங்கும்.

★ செவிமடுத்தலுக்குரியவை: விலங்குகள் மனிதர்களின் ஒலிகள், ஓசைகள், பாடல்கள் என்பன இவ்வகைக்குள் அடங்கும்.

★ வாசித்தலுக்குரியவை: எண்கள் எழுத்துகள் இணைந்த வரிவடிவங்களை உள்ளடக்கும் அனைத்து தகவல் சாதனங்களும் இவ்வகைக்குள் அடங்கும்.

★ தொட்டுணர்தலுக்குரியவை: உருவங்கள், விழிப்புலனற்றோருக்கான தகவல் வளங்கள் இவ்வகைக்குள் அடங்கும்.

★ முகர்தலுக்குரியவை: வாசனையூடாக அறியப்படும் பொருட்கள் அனைத்தும் இவ் வகையைச் சார்ந்தவை. எ-டு: மலர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுவைத்தலுக்குரியவை: சுவைத்தலுக்குரிய சமைக்கப்பட்ட அல்லது இயற்கையான உணவுப் பதார்த்தங்கள் அனைத்தும் இதற்குள் அடங்கும். எ-டு: கனிகள், பானங்கள், உணவுப் பதார்த்தங்கள் போன்றவை.

3.38 **ஒழுங்கமைப்பு** (By Arrangement)

அறிவுப் பிரபஞ்சத்தில் தோற்றம் பெறுகின்ற அறிவுத்துறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல அறிஞர்கள் முயன்றிருக்கின்றனர். நூலகங்களில் சிந்தனைப் பதிவேடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான பொதுவான வகுப்புகளோ, பிரிவுகளோ, குறியீடுகளோ, சொல்லடைவுகளோ இன்றி எண்ணங்களையும் கருத்துக்களையும் உதவியான வரிசையில் ஒழுங்குபடுத்தவும் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களை மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதற்குரிய ஒரு கருவியாக பாவிப்பதற்குமாக இத்தகைய வகைப்பாடு உருவமைக்கப்பட்டது. இவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:

★ உபநிடதங்களில் குறிக்கப்படுகின்ற பகுப்பாக்க முறை வேதப் பகுப்பாக்கம் எனப் பட்டது. இம் முறையின்படி உலக அறிவானது அர்த்தம், காமம், மோட்சம், தர்மம் என்ற நான்கு அடிப்படைப் பெறுமதிகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டது. அறிவுப் பகுப்பாக்கத்தின் ஆரம்ப கால பகுப்பாக்க முறை இதுவாகும். தர்மம் என்ற பிரிவின் கீழ் சட்டம், சமயம், விளக்கம், ஒழுக்கவியல், சமூகவியல் போன்றனவும் அர்த்தம் என்ற பிரிவின் கீழ் வரலாறு, அரசியல், பொருளியல், பிரயோகம், அறிவியல் என்பனவும் காமம் என்ற பிரிவின் கீழ் இலக்கியம், நுண்கலைகள், தூய அறிவியல் போன்றனவும் மோட்சம் என்ற பிரிவின் கீழ் தத்துவம், ஆன்மிக அனுபவம் போன்றனவும் ஒழுங்குபடுத்தப்படக்கூடும் என்ற அளவிற்கு இது சமூக நிலைப்படுத்தப்பட்ட ஓர் அறிவுப் பகுப்பாக்கம் எனலாம்.

★ பிளேட்டோ என்ற தத்துவ அறிஞரின் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்பானது உலக அறிவை தர்க்கம், பௌதீகம், ஒழுக்கவியல் என்ற மூன்று பிரிவுகளின் அடிப் படையில் ஒழுங்குபடுத்துகின்றது. இது பின்னர் அரிஸ்டோட்டில் என்ற தத்துவ அறிஞரினால் கோட்பாட்டு தத்துவவியல், செய்முறைத் தத்துவவியல், உற்பத்திக் கலைகள் என்ற மூன்று பெரும் பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டது. கோட்பாட்டு தத்துவவியலின் கீழ் தர்க்கம், நுண் பௌதீகவியல், கணிதம், பௌதீகவியல் போன்றனவும் செய்முறைத் தத்துவவியலின் கீழ் ஒழுக்கவியல், அரசியல், பொருளியல் போன்றனவும் உற்பத்திக் கலைகளின் கீழ் பிரயோக அறிவியல், பயன்தரு கலைகள் போன்றனவும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இது ஒரு பயன்நிலைப்படுத்தப்பட்ட ஒழுங் கமைப்பு என்பதுடன் 2000 வருடங்களாக இப் பகுப்பாக்கமே பெரும்பாலும் பாவ னையில் இருந்து வந்தது.

★ 1561-1606 காலப்பகுதயில் பிரான்சிஸ் பேகன் என்பவரால் அக்காலகட்டத்தில் நிலை கொண்டிருந்த உலக எண்ணக் கருக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட உளவியல் சார்ந்து வகைப்படுத்தப்பட்ட அறிவுப்பகுப்பாக்கமானது உலக அறிவை வரலாறு, கவிதை, தத்துவம் என்ற மூன்று பெரும் பிரிவுகளாக வகைப் படுத்துவதுடன் வரலாறு என்ற பிரிவு வரலாறு, புவியியல் என்ற இரு பொருட்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், கவிதை என்ற பிரிவு நுண்கலைகள், இலக்கியம் என்பவற்றையும், தத்துவம் ஏனைய பொருட் துறைகளையும் உள்ளடக்கின. இப்பகுப்பாக்கத்தினது நேர்மாறான அமைப்பே இன்றைய புகழ் பெற்ற பகுப்பாக்கங்களான டி.டி.சி, யு.டி.சி எனலாம்.

★ *1724 - 1804* காலப்பகுதியில் இமானுவேல் கான்ட் என்பவரால் விபரிக்கப்பட்ட இப் பகுப்பாக்க முறையில் உலக அறிவானது தத்துவம் சார்ந்தது என்று இரு பெரும் பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டது.

★ *1770 - 1831* காலப்பகுதியில் பிரடெரிக் ஹெகல் என்பவரால் உருவாக்கப்பட்ட அறிவுப் பகுப்பாக்க முறையான இம் முறையில் உலக அறிவானது தர்க்கம், இயற்கை அறிவியல், உள்ளறிவியல் என்ற மூன்று பெரும் பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டது.

★ *1798-1857* காலப்பகுதியில் அகஸ்ரி கொம்ரி என்பவரால் உருவாக்கப்பட்ட இப் பகுப்பு முறையில் உலக விடயங்கள் கணிதம், வணிகம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், சமூக பௌதீகவியல் போன்ற பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இது ஒரு தொடர் பகுப்பாக்கமாகும் இம் முறையில் ஒவ்வொரு பிரதான வகுப்பும் அதனது அபிவிருத்தியிலும் பயன்பாட்டிலும் தங்கியுள்ளது (ஒன்றின் அபிவிருத்தியிலும் பயன்பாட்டிலும் அடுத்துவரும் பிரதான வகுப்பு தோற்றம் பெறுவதாக குறிக் கப்பட்டது).

கீழைத்தேய நூல்களை ஒழுங்கமைப்பதற்கான சிறந்த அடிப்படையாகக் கொள்ளப்படும் கோலன் பகுப்புத் திட்டம் நூல்களை இயற்கை அறிவியல், மனிதப்பண்பியல், சமூக அறிவியல் ஆகிய மூன்று பிரதான பொருட்துறைகளின் கீழ் ஒழுங்குபடுத்தியிருக்கிறது. உலகம் முழுவதிலுமுள்ள பெரும்பாலான நூலகங்களால் பின்பற்றப்படும் தூயி தசமப் பகுப்புத் திட்டம் நூல்களை பொது, சமயம், சமூக அறிவியல், மொழி, அறிவியல், தொழி னுட்பம், கலை, இலக்கியம், புவியியலும் வரலாறும் என்ற பத்துப் பிரதான பிரிவுகளின் கீழ் அறிவுப் பிரபஞ்சத்தின் பொருட் துறைகளை ஒழுங்குபடுத்தியிருப்பதன் மூலம் அனைத்து நூல்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

தகவல் கட்டுமீறல் என்ற கருத்துநிலையின் வெளிப்பாடாக மட்டுமன்றி பொருட்துறை களுக்கிடையில் உள்ள இயற்கையான பிணைப்புக் காரணமாக உருவாகியிருக்கும் கூட்டுப் பொருட் துறைகளும் செயற்கையான பிணைப்புக் காரணமாக உருவாகி யிருக்கும் கலப்புப் பொருட்துறைகள் காரணமாக மனிதப்பண்பியல் என வரையறுக்கப்பட்டிருக்கும் கலை, சமயம், இலக்கியம், மொழி, தத்துவம் போன்ற பொருட்துறைகளையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் பார்க்கும் அறிவு சார் சிந்தனைக்கு மனித சமூகம் முன்னேறியிருக்கும் இக்காலகட்டத்தில் மனிதப்பண்பியல் சார்ந்த பொருட்துறைகள் அனைத்தும் மனித அறிவியல்கள் என்ற பொருட்தலைப்பில் வகைப்படுத்துவது பொருத்தமானது என்பதற் கமைய இந்தியப் பொருளியல் அறிஞர் வே. தில்லைநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்ட பின்வரும் வகைப்பாடு ஒழுங்கமைப்புச் சார்ந்து பொருத்தமான வகைப்பாடாக ஏற்றுக் கொள்ளப்படலாம்:

1. முதனிலை அறிவியல்கள் (Preliminaries) - அறிவு, ஆக்கம், நூலகவியல், மக்கள் தொடர்பு.
2. இயற்கை அறிவியல்கள் (Natural Sciences) - கணிதவியல், பௌதீகவியல், இரசாயன வியல், பொறியியல், தொழி னுட்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உயிர் அறிவியல்கள் (Biological Sciences) - உயிரியல், புவிச் சரிதவியல், விவசாயம், மருத்துவம், தாவரவியல், விலங்கியல், பயன்படு கலைகள்.

4. சமூக அறிவியல்கள் (Social Sciences) - உளவியல், கல்வியியல், நில இயல், வரலாறு, அரசியல், பொருளியல், சமூகவியல், சட்டவியல்.

5. மானுட அறிவியல்கள் (Human Science) - நுண் கலைகள், இலக்கியம், மொழி, சமயம், தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் நான்கு

தகவல் ஊடகங்கள்

தகவல் வளங்களை அவற்றின் உருவமைப்பின் அடிப்படையில் பின்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

★ தகவல் பதிவு

★ தகவல் சேமிப்பு

★ தகவல் பதிவேட்டு வடிவமைப்பு

4.1 தகவல் பதிவு ஊடகங்கள் (Information Recording Media)

தகவல் பதிவு ஊடகங்களை கால அடிப்படையில் வகைப்படுத்தின் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

★ உருவப் பதிவுகள் - ஆதிப் பொதுவுடமைச் சமூகம்

★ எழுத்துப் பதிவுகள் - நிலவுடைமைச் சமூகம்

★ அச்சுப் பதிவுகள் - கைத்தொழில் சமூகம்

★ நுண் பதிவுகள் - கைத்தொழில் சமூகத்துக்குப் பிந்திய சமூகம்

★ மின் பதிவுகள் - தகவல் சமூகம்

4.11 உருவப் பதிவுகள்

மொழியின் தோற்றத்துக்கு முன்னர் சைகைகளாலும் அங்க அசைவாலும் தனது கருத்தை புலப்படுத்திய மனிதன் கையாண்ட முதலாவது பதிவாக உருவப் பதிவுகள் காணப்பட்டன. ஓவியம், சிற்பம், சித்திரம் போன்றவை உருவப் பதிவுகளுக்குள் உள்ளடங்கும். சித்திர எழுத்து கண்டுபிடிக்கப்படும் வரை ஓவியங்கள், சித்திரங்கள் என்பவையே மேலாதிக்கம் செய்தன. கற்கால சுவரோவியங்கள், பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள் என்பன இவற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஓவியம் மனிதனது முதலாவது பதிவாகக் கருதப்படுகின்றது. கலைப்பாரம்பரியத்தின் எடுத்துக்காட்டுகளாக விளங்கும் ஓவியங்கள் மிகச் சிறந்த தகவல் சாதனங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. ஓவியங்களை வரைவதற்கு கல், துணி, தாள், மரம், கண்ணாடி போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மேற்பரப்பு சொரசொரப்புத் தன்மை வாய்ந்ததன் காரணமாக மேற்பரப்பை வழவழப்பாக்குவதற்கு ஒட்டுப்பசை, எண்ணெய், மெழுகு அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கலவை பயன்படுத்தப்படுகிறது. ஓவியங்கள் கலப்புக் கட்டமைவைக் கொண்ட பல்வேறு அடுக்குகளாலானது. ஓவியங்களின் சிதைவிற்கு இவ் அடுக்குகளில் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு அடுக்குகளின் சிதைவு காரணமாக அமையலாம்.

4.12 எழுத்துப் பதிவுகள்

இவை சித்திர எழுத்தாகவோ அல்லது Cuneiform Writing என ஆதிகாலத்தில் பின்பற்றப்பட்ட ஆப்பு எழுத்தாகவோ அமையலாம். ஆரம்பகால களிமண் பதிவுகள் அனைத்துமே சித்திர எழுத்துக்களைக் கொண்டவை. இவற்றுடன் பைபிரஸ், தோல், மரம் என்பனவும் சித்திர எழுத்துப்பதிவுகளைக் கொண்டிருந்தன. மனிதர், கடவுள், விலங்குகள் ஆகியவையே சித்திர எழுத்துகளின் கருப்பொருளாக அமைந்தன. பாறைகளில் வண்ணத்தால் வரையப்பட்டவை பாறைச் சித்திரம் (Petrogram) எனவும், பாறைமேல் செதுக்கப்பட்டவை பாறைச் செதுக்குச் சித்திரம் (Petroglyph) எனவும் கூறப்பட்டன. சித்திர எழுத்துகளில் குறிப்பிடத்தக்கவை ஐரோப்பாவில் பழங்கற்கால மனிதன் குகைகளில் வரைந்த சித்திர எழுத்துகளும் ஆபிரிக்க பழங்கற்கால சித்திர எழுத்துகளுமாகும் (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 8, பக் 915).

எழுத்துக்களை உள்ளடக்கிய பழைய நாகரீகத்துக்குப் பேர்போன இடங்கள் எல்லம் (Ellam) சுமேரியா, பாபிலோன், எகிப்து, கிரீட் (Crete), சிந்து வெளி என்பனவாகும். எல்லம் மக்கள் ஓவிய வடிவமான எழுத்துக்களைப் பயன்படுத்தினர். சுமேரியன் எழுத்துக்கள் ஆப்பு வடிவமாக இருந்தமையால் அவை ஆப்பு எழுத்துகள் எனப்பட்டன. இவ் ஆப்பு எழுத்துகள் ஓவிய எழுத்தின் சுருக்க வடிவமாகும். இந்தியாவில் 4500 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்துக் கலை வளர்ந்து விட்டது. மொஹஞ்சதாரோ, ஹரப்பா காலத்து முத்திரைகளில் காணப்படும் உருவ எழுத்துகள் எழுத்துக் கலையின் தொடக்கத்தைக் காட்டுவனவாக உள்ளன. தகவல் சேமிப்புப் பதிவேடுகளின் அடிப்படையில் உருவ எழுத்துக்களைக் கொண்ட பின்வரும் சாதனங்கள் இந்திய அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன:

★ ஓவியத்திலுள்ள உருவ எழுத்துகள்: தமிழகத்தின் தென்னார்க் காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டம் கீழ்வாலை என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய ஓவியத்தில் இத்தகைய உருவ எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதில் ஐந்து எழுத்துகள் உள்ளன. முதல் எழுத்து தென்னங் கீற்று போன்றும், இரண்டாம் எழுத்து மத்தளம் போன்றும், மூன்றாம் எழுத்து சீப்புப் போன்றும் நான்காம் எழுத்து மீண்டும் மத்தளம் போன்றும் ஐந்தாம் எழுத்து நான்கு குறுக்குக் கால்களையுடைய சக்கரம் போன்றும் எழுதப்பட்டுள்ள இவ்வெழுத்துகள் ஓவியத்தை வரைந்தவரின் பெயராக இருக்கலாம் எனவும் கி.மு 500-1000 ஆண்டுகளுக்கு உட்பட்டதாகவும் பி. எல். சாமி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

★ பானை ஓடுகளில் உள்ள உருவ எழுத்துகள்: தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் வரையப் பெற்றுள்ள உருவங்களில் 80 சதவிகிதம் மொஹஞ்சதாரோ, ஹரப்பா கால உருவெழுத்துகளை ஒத்துள்ளது என தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குனர் பி.பி லால் குறிப்பிடு கின்றார்.

★ செப்பு முத்திரையிலுள்ள உருவ எழுத்துகள்! இலங்கையில் ஆனைக்கோட்டை என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட செப்பு முத்திரையில் ஒரு வரியில் உருவ எழுத்தும் மற்றொரு வரியில் தமிழ் பிராமி எழுத்து களும் பொறிக்கப்பெற்றிருப்பதாகவும் இந்திரபாலா என்னும் வரலாற்றறிஞர் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டிருந்தார். இதில் காணப்பெற்ற உருவ எழுத்துகள் தமிழ் நாட்டின் பெருங்கற் காலப் பானையோடுகளில் பொறிக்கப்பட்ட உருவங்கள் போன்றே காணப்பட்டன (காசிநாதன் பக். 100).

4.13 அச்சுப் பதிவுகள் (Print Recording)

தாள், துணி அல்லது வேறு பொருள்களின் பரப்பில் எழுத்து, படம் அல்லது ஓவியங்களைப் பதிக்கும் கலையும் அத்தொழில்நுட்பமும் அச்சடித்தல் என வழங்கப்படுகின்றது. அச்சுக்கலை என்பது அசையும் எழுத்துக்களின் உருவாக்கத்துடன் தான் முழுமையான நிலையை அடைந்தது. இலச்சினைகளை இடுதல், முத்திரைகளைப் பொறித்தல், கல்வெட்டிலிருந்து நகல் எடுத்தல், பட்டில் அச்சடித்தல், செதுக்குத் தகடுகள், கல்லச்சுப் படிமைகள், மர அச்சுப் படிமைகள் முதலியவற்றிலிருந்து பிரதி எடுத்தல், நாணயத்தாள், சீட்டு அட்டை, வழிபாட்டுப் படங்கள் போன்றவற்றை அச்சடித்தல் ஆகிய பல வழிகளில் பல படிகளைக் கடந்த பின்னரே அசையும் எழுத்துக்களைக் கண்டுபிடிக்க நேர்ந்தது. மேலை நாட்டில் அச்சடித்தல் 15ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொடங்கியது. இது அடுக்கிக் கோக்கக் கூடிய உலோக அச்சு எழுத்துக்களின் கண்டுபிடிப்புடன் தொடங்கியதாகும். அச்சடித்த எல்லா நூல்களையும் விட மிகவும் பெயர்பெற்ற நூலாக கருதப்படுவது கூட்டன்பர்கு வெளியிட்ட விவிலிய நூலாகும். எனவே அச்சடித்தலின் கண்டுபிடிப்புப் பற்றிய செய்திகள் பெரும்பாலும் கூட்டன் பர்கை இணைத்தே பேசப்படுகின்றன.

உலோகம் அல்லது மரத்தினால் உருவாக்கப்பட்டதும், மேற்பகுதியில் புடைப்பு முறையில் இலக்கம் அல்லது எழுத்து மற்றும் ஏனைய குறியீடுகள் போன்றவற்றை கொண்டிருப்பதுமான செவ்வக வடிவிலான அச்சுருக்கள் அச்சுப்பதிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவ் அச்சுக்கள் கையால் வார்க்கப்படும் அச்சு, பொறி முறை அச்சு, ஒளிப்பட கோப்பு முறையிலான அச்சு என மூவகைப்படும். முதல் இரு வகையிலும் உலோகத்தின் ஒரு பக்க முடிவிடத்தில் மேலெழுந்த வகையில் எழுத்தின் முகப்பு அமைந்திருக்கும். மூன்றாவது வகையில் அச்சானது ஒளிப்பட முறையில் மீளுருவாக்கம் செய்யப்படுகிறது.

4.14 நுண் பதிவுகள் (Micro Recording)

கட்புல உதவிக் கருவிகளின் துணையுடன் விம்பங்களை அடையாளம் காணக்கூடிய முறையில் 16அல்லது 35 படங்களில் மிகச் சிறிய அளவில் ஒளிப்படங்களை தயாரிக்கும் செய்முறை நுண் ஒளிப்படக்கலை எனப்படும்.

ஒளிபுகக் கூடிய அல்லது ஒளி புகமுடியாத சாதனங்களில் கண்ணால் பார்த்து வாசிக்க முடியாதளவிற்கு மிகச் சிறிய விம்பங்களைக் கொண்ட ஆவண நுண் பிரதிகளை தயாரிக்கும் முறை நுண் பிரதியாக்கம் எனப்படுகின்றது. தட்டையான சுருள்வடிவப் படங்களில் அல்லது தாள்களில் பதிவு செய்யப்படுகின்ற நுண்பதிவேடுகளை குறிப்பதற்கு பாவிக்கப்படுகின்ற இனப் பொதுச் சொல்லாக இது அமைகிறது. ஓர் ஆவணம் மிகக் குறுகிய வடிவமைப்புக்கு மாற்றப்படும் போது அவை நுண் வடிவங்கள் எனப்படும்.

மரபுரீதியான மீளுருவாக்க முறைகளில் மிக முக்கியமாகக் கருதப்படுவது நுண்வடிவங்கள் ஆகும். நவீன துறைகளில் இவற்றின் தேவை அதிகரித்திருப்பதுடன் நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள், அரசாங்க வெளியீடுகள் போன்றவற்றின் இடத்தை இது அதிகளவில் கைப்பற்றியிருக்கிறது. ஆவணங்களைப் பழுதடையாமல் பாதுகாத்தல், இடத்தை மீதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல், தகவல் அமைப்புகளுக்கிடையிலான இரவல் வழங்கும் சேவையை ஊக்குவித்தல், உசாத்துணைச் சேவையை ஊக்குவித்தல், நிதி நெருக்கடியைக் குறைத்தல் போன்ற நோக்கங்களை நிவர்த்தி செய்வதே நுண்வடிவங்களாகும்.

4.15 மின் பதிவுகள் (Electronic Recording)

மனித சிந்தனைகளையும் உணர்வுகளையும் அச்சு வடிவிலோ அல்லது கையெழுத்து வடிவிலோ வழங்காது இலக்க வடிவில் வழங்கும் பதிவுகள். இவை ஒன்றில் காந்த நாடாக்கள் அல்லது காந்த வட்டுகளிலோ அல்லது இலக்கத்தரவு வட்டுகளிலோ சேமிக்கப்பட்டதாகவும் கணனியின் உதவியுடன் வாசிக்கப்படக் கூடியதாகவும் இருக்கும். இவை ஆரம்பத்தில் குறியீட்டு மொழியில் பதியப்பட்டு பின்னர் பயன்பாட்டு மொழிக்கு மாற்றப்படுகின்றது. இப்பதிவுகள் இலக்கத் தரவில் நேரடியாகப் பதியப்பட்டதாகவோ அல்லது வேறொரு மொழியில் உருவாக்கப்பட்டு இலக்கத்தரவிற்கு மாற்றப்பட்டதாகவோ இருக்கலாம்.

4.2 தகவல் சேமிப்பு ஊடகங்கள்

4.21 சுவரோவியங்கள் (Cave Paintings)

மனித சிந்தனைப் பதிவேடுகளின் தோற்றம் எழுத் தறிவுக்கு முற்பட்ட மனிதர்கள் உருவாக்கிய சுவரோவியங்களிலிருந்து தொடங்கி இன்றைய கணினிப் பதிவுகள் வரை தொடர்ச்சியான மாற்றங்களையும் வளர்ச்சிப் போக்கையும் சந்தித்துள்ளமையை வரலாறு எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மொழியின் தோற்றத்துக்கு முன்னரேயே தனது கருத்தைத் தெரிவிக்கக் கையாண்ட முதலாவது முறையாக இச்சுவரோவியங்கள் விளங்கின. உலகளாவிய ரீதியில் வேட்டையாடலுடன் தொடர்புடைய மிருகங்கள், ஆயுதங்கள் மற்றும் குறியீடுகள் சார்ந் தவையாக விளங்கிய சுவரோவியங்கள் குகைகளின் வெற்றுச் சுவர்களில் எவ்வித வேலைப் பாடும் அற்ற நிலையில் பழுப்பு, சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்களைப் பயன்படுத்தி கற்கால மனிதனால் வரையப்பட்டவை. பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று தொடர்பற்று தனித் தனியாகக் காணப்படும் இவை கற்கால மனிதன் மனத்தில் நினைத்ததை மறக்காமல் இருப்பதற்காக வரைந்த ஓவியங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஓவியங்களாகவும் குறியீடு களாகவும் வரையப்பட்ட இவை 35,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதன் பற்றிய தகவல் களஞ்சியமாகும்.

தெற்கு ஐரோப்பாவிலும் ஆசியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்த குறோமக்னோன் (Cro-Magnon) மக்கள் கூட்டத்தால் வரையப்பட்ட இக்குகை ஓவியங்கள் வட ஸ்பெயினிலுள்ள அல்டிமீரா (Altimira), தென் மேற்கு பிரான்சிலுள்ள வொன்ட் - டீ -காமி (Font- de- Gaume) லாஸ்கோ (Lascaux) போன்ற குகைகள் உட்பட 250 குகைகளில் உலகெங்கும் காணப் பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. வரலாற்றுக் காலத்தின் தொடக்ககால ஓவியங்களாகக் கருதப்படுபவை எகிப்திய சுவரோவியங்களே. கி.மு 4000 - கி.பி 333 காலப்பகுதியைச் சேர்ந்த வையாகக் கருதப்படும் இவை மக்களுக்குச் சமய அறிவை ஊட்டுவதற்காகப் படைக் கப்பட்டவை. பபிலோனியர், அசிரேயர், கல்தேயர், பாரசீகர் ஆகியோரிடமும் இச் சுவரோ வியங்கள் நிறைந்து காணப்பட்டன. ரோமானியரின் ஓவியங்கள் சுவரிலிருந்து புடைப்பாகத் தோன்றும் வகையில் புதிய முறையில் அமைந்தவை. தாவரங்கள், மிருகங்கள், மக்கள் உருவங்களைச் சித்திரிப்பவையாக இவை விளங்கின. பாம்பி நகரின் புகழ்பெற்ற ஓவியங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது அலெக்சாந்தரும் தேரியசும் செய்த போர் பற்றிய ஓவியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியர் காலத்து ஓவியங்கள் இயற்கை சார்ந்தவையாக இல்லாமல் வடிவக்கணித உருவங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவ்வகை ஓவியங்கள் எருசலேம், கெய்ரோ, தமாகசு ஆகிய இடங்களிலுள்ள மசூதிகளில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வகை ஓவியங்களில் கிரனடா நகரில் உள்ள அல்காம்பிரா அரண்மனை ஓவியங்கள் புகழ் பெற்றவை. இங்கிலாந்தில் காண்டர்பரிக் கிறிஸ்தவக் கோவில் மண்டபச்சுவரில் உள்ள புனித பால் ஓவியம் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே சுவரோவியங்கள் இருந்திருக்கின்றமையை வரலாறு எடுத்தியம்புகின்றது. மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், தமிழ்நாடு ஆகிய இடங்களிலுள்ள சுவரோவியங்கள் கற்காலத்தைச் சார்ந்தவை. வரலாற்றுக்காலச் சுவரோவியங்கள் அஜந்தா, எல்லோரா, பாகு, காஞ்சிபுரம், பனமலை, சித்தன்னவாசல், தஞ்சாவூர், உத்தரமேரூர் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. திருவிதாங்கூர், கொச்சி ஆகிய கேரளப்பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. இலங்கையில் சிகிரியாவிலுள்ள ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுக்கு இணையானவை (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 9. பக்.269).

4.22 **கல்வெட்டுகள்** (Inscriptions)



பண்டைய மனிதனின் வரலாற்று அறிவைத் தரும் முதல்நிலைத் தகவல் வளங்களாக கல்வெட்டுகள் கருதப்படுகின்றன. கிரேக்கம், மெசப் பத் தேமியா, நைல் நதிக்கரை, சினா, மாயன், தோல் தெக்கு, அக தெக்கு, இந்தியா போன்ற பகுதிகளிலிருந்த நாகரிகங்களை அறிய கல்வெட்டுகள் பேருதவி புரிகின்றன. கல்வெட்டுகளுக்கு இந்தியாவே புகழ்பெற்றது என்பது இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ள பெருந்தொகையான கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது. பண்டைக் கால மனித வாழ்வின் சமூக, பொருளாதார, அரசியல், மத, பண்பாட்டு அம்சங்களை இதில் பெறமுடியும். அரசர்களின் வரலாறு, குடும்ப விபரம், நாட்டின் பரப்பளவு, வெற்றி பெற்ற நாடுகளின் விபரங்கள், புவியின் அமைப்பு, ஊர்களின் பெயர், அரச அலுவலர்கள் ஆட்சிமுறை, கிராம நிர்வாகம், அவைகள், தொழிற் குழுக்கள், வாணிகக் குழுக்கள், கொடைகள், நில அமைப்பு, கல்விச்சாலைகள், கோவில்கள், மடங்கள், வேளாண்மை, பொருளாதாரம், நாணயம், சட்டம் போன்றவற்றை அறிய முடிகிறது. கல்வெட்டுகள் பொதுவாக அரசர் அளித்த கல்வெட்டுகள், தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் அளித்த கல்வெட்டுகள் என இருவகைப்படும்.

கற்கள் எரிமலைக்கற்கள் அல்லது பாறைக்கற்கள், மடிப்புமலைக் கற்கள், படிவக் கற்கள் என மூவகைப்படும். பெரும்பாலும் பாறைக் கற்களே நீடித்துழைக்கக்கூடியவை என்பதால் இவையே அதிகம் பயன்பட்டிருக்கின்றன. வீர வழிபாட்டைப் போற்றுவதற்கு கருங்கற்களில் பொறிக்கும் பழக்கம் இருந்ததாக புறநானூறு (335) தெரிவிக்கின்றது. பல்லவர்களும் சோழர்களும் நிறுவிய குகைக்கோயில்களில் கல்லில் பொறிக்கப் பட்ட எழுத்துக்கள் பெருமளவில் காணப்பட்டன. கி.பி 7ம் நூற்றாண்டளவில் தமிழில் கல்வெட்டுக்களைச் செதுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறக்கொடைகளும் நன்கொடைகளும் இத்தகைய எழுதப் படு பொருட்களிலேயே பொறித்து வைக்கப்பட்டிருந்தன. மலைப் பாறைகள் கல்தூண்கள், கோவில் சுவர்கள் போன்றவை எழுத்துக் களைப் பொறித்து வைக்கப்பயன்பட்டிருக்கின்றன. இந்தியா விலுள்ள கல்வெட்டுக்களில் அசோகரின் கல்வெட்டுகளே மிகப் பழமையானவை. அவை பிராமி, கரோசுதி ஆகிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. வட இந்திய கல்வெட்டுகளில் புகழ் பெற்றவை அசோகரின் கல்வெட்டுகள், காரவேலனின் அதிரும்பா கல்வெட்டு, பெசுநகர் கல்வெட்டு, உருத்திர தாமனுடைய சுனாகத்துப் பாறைக்கல்வெட்டு, அலகாபாத்துக் கற்தூண் கல்வெட்டு, தாளகுண்டாக் கற்றூண் கல்வெட்டு, மாண்டசோர் கற்றூண் கல்வெட்டு அய்கொளே கல்வெட்டு போன்றவையாகும்.

4.23 களிமண் பலகைகள் (Clay Tablets)



மனித சிந்தனைகளைச் சுமந்த முதலாவது நூல் களிமண் பதிவேடாகவே இருந்துள்ளமையை அங்கொன்றும் இங்கொன்றுமாக எஞ்சியிருக்கும் களிமண் பலகைகள் எடுத்துக்காட்டுகின்றன. களிமண் பலகைகளின் தோற்றம் கி.மு 4000 ஆண்டளவில் சுமேரியர் காலத்துடன் தொடங்குகின்றது. குகை ஓவியங் களிலிருந்து ஏற்பட்ட அடுத்த வளர்ச்சிப்போக்காக இது கருதப் பட்டது. ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் காவிச் செல் வதற்கு ஏற்ற வகையிலும், ஓரிடத்தில் சேகரித்து வைக்கப்படக் கூடியதாகவும் உருவாக்கப்பட்ட முதலாவது மனித சிந்தனைப் பதிவேடாக இது காணப்படுகின்றது. ஈரமான களிமண்ணைத் தட்டையாக்கி கூரான தடி கொண்டு முக்கோண வடிவங்களில் குறியீடுகளாகத் தகவல்கள் பதியப்பட்டு பின்னர் இது வேகவைத்துக் கடினமாக்கப்பட்டது. சால்டியா, சிரியா நாடுகளில் களிமண் எழுதப்படும் பொருளாக இருந்திருக்கிறது. களிமண் பலகையில் எழுதப்பட்ட எழுத்துகள் கூனிபார்ம் எழுத்துக்கள் (Cuneiform Writings) எனப்பட்டன. இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஸ் மியூசியத்தில் இவை இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகின் முதற் காவியம் எனக் கருதப்படும் கில்கமேஷ் காவியம் (Gilgamesh Epic) களிமண் தட்டில் படைக்கப்பட்டது.

புராதன மெசப்பத்தேமியாவின் பாபிலோனிய, அசிரிய, பாரசீக மக்களால் பயன்படுத்தப்பட்ட ஆப்பு வடிவ எழுத்து முறையைப் பின்பற்றி மெல்லிய சிறிய ஈரமான களிமண்ணில் stylus எனப்படும் மெல்லிய கூரான எழுத்தாணி கொண்டு இவை பதியப்பட்டது. இந்த எழுதுபலகைகளின் வடிவமும் பரிமாணமும் பலதரப்பட்டதாக இருந்தபோதும் பொதுவான வடிவமாக இருந்தது ஐந்து அங்குல நீளமுள்ள மெல்லிய நாற்கோண களிமண் தட்டுக்களே. ஆப்பு வடிவ எழுத்துமுறையைப் பின்பற்றி ஒரு பலகையில் கணிசமானளவு தகவலைப் பதியக் கூடியதாக இருந்தது. தற்காலத்தில் பதியப்படுவது போன்று எண்களை அல்லது முதன்மைச் சொற்களைப் பயன்படுத்தி மிக நீளமான விடயங்களைப் பதிவது வழக்கில் இருந்தது. ஒரு நூலை உருவாக்குவதற்கு கிட்டத்தட்ட அறுபதுக்கும் மேற்பட்ட பலகைகள் தேவைப்பட்டன. ஆரம்பத்தில் சூரிய ஒளியில் காய வைத்துப் பயன்படுத்தப்படுதலே வழமையாக இருந்தது எனினும் இந்தத் தகடுகள் விரைவில் உடையும் தன்மை வாய்ந்ததாக இனங்காணப்பட்டமை காரணமாக பிற்காலங்களில் வேக வைத்துக் கடினமாக்கப்பட்டன என ஆய்வுகள் கூறுகின்றன. பெறுமதி மிக்க தகவல்கள், சட்டக் கோவைகள், அரச ஆவணங்கள், பாதுகாக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது எனக் கருதப்படுகின்ற பழம்பெரும் இலக்கியங்கள் நீண்டகால பாதுகாப்பு நோக்கில் வேக வைத்துக் கடினமாக்கப்பட்டன. புதைபொருள் ஆய்வு மூலம் கிட்டத்தட்ட பத்து இலட்சத்துக்கும் அதிகமான களிமண் பலகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கி.மு 600 ஆண்டளவில் யூபிரற்றீஸ் ரைகிறிஸ் ஆற்றுப் பள்ளத்தாக்கில் செழித்தோங்கியிருந்த கலாசாரத்திலிருந்து தோற்றம் பெற்றதாக மட்டுமன்றி மனித சமூகம் அதிகம் அறிந்திருந்த பெரிய நூலகம் எனவும் கருதப்படுவது நினவே என்னு மிடத்தில் அமைந்திருந்த நூலகமாகும். கி.மு 669 - 626 காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த அசிரிய மன்னன் அசர் பனிபல்லினால் (Ashurbanipal) நினவே (Nineveh) என்னுமிடத்திலுள்ள அவனுடைய அரண்மனையில் இவை சேகரிக்கப்பட்டன என்பதையும் இங்கு கிட்டத்தட்ட 22,000 களிமண் தட்டுகள் பொருட்துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்தன என்பதையும் அகழ்வாராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. மனித சமூகம் அதிகம் அறிந்த முதலாவது நூலகமாக இது கருதப்பட இடமுண்டு. இலக்கணம், கவிதை, வரலாறு, அறிவியல், சமயம் ஆகிய பொருட்துறைகள் சார்ந்த மிகப் பெரிய நூற்சேகரிப்பை இது கொண்டிருந்தது. அசிரிய சாம்ராஜ்யத்தின் முடிவுடன் களிமண் பதிவேடுகளின் பாவனையும் முடிவுக்கு வந்தது.

வைசாலிக் குடியரசின் பிரதம சேனாதிபதி சிம்மனது வாழ்க்கை வரலாற்றை எடுத்துச் சொல்லும் சிந்து முதல் கங்கை வரை என்ற நூல் நூலாசிரியர் ராகுல சாங்கிருத்தியாயனின் சொந்த முயற்சியில் அகழ்வாராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவின் பாட்னா அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டிருக்கும் 1600 செங்கற்களிலிருந்து உருவாக்கப்பட்டதே என அந்நூலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் ராகுலசாங் கிருத்தியாயன் குறிப்பிடுகின்றார் (சாங்கிருத்தியாயன்).

களிமண் தகடுகளை எழுது பொருளாகக் கொண்ட நூல் உற்பத்தியானது ஆப்பு எழுத்துகள் பயன்பாட்டில் இருந்த காலப்பகுதியில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் நிலை கொண்டிருந்திருக்கிறது (Encyclopdia Britannica, 1990). கி.மு 6ம் நூற்றாண்டளவில் அரபு எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டபின்னர் இவற்றின் பாவனை மெல்ல அருகிக் கொண்டு சென்றது. களிமண் பலகைகளை விட பைபிரஸ் தாள்கள் அரபு எழுத்துக்களைப் பதிவதற்கு பொருத்தமாக இருந்தமையால் களிமண் பலகைகளின் இடத்தை பைபிரஸ் தாள்கள் எடுத்துக் கொண்டது.

4.24 பைபிரஸ் (Papyrus)



இன்றைய நூலின் வடிவத்தை ஒத்ததாக கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எகிப்தியர்களால் பயன்படுத்தப்பட்ட எழுது பொருளாக இவை உள்ளன. எகிப்து தேசத்து சதுப்பு நிலங்களிலும், தண்ணீர் தேக்கமுள்ள இடங்களிலும் பைபிரஸ் எனப்படும் கிட்டத்தட்ட பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வரை வளரும் கோரை போன்ற ஒரு வகையான புல்லை அறுத்துப் பட்டை உரித்து, ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி, வெயிலில் உலர்த்தி, ஒவ்வொரு தாளையும் ஒன்றோடொன்று ஒட்டிச் சேர்த்து நீண்ட சுருளையாக்கி எழுதப் பயன்படுத்தினர். ஒரு பெரிய சுருளை சுமார் 20 தாள்களைக் கொண்டதாக இருந்தது. இரண்டு அங்குலம் முதற்கொண்டு பதினைந்து அங்குலம் வரையில் இந்தப் பைபிரஸ் தாள்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. 6 அங்குல நீளத்தில் வெட்டப்பட்ட நாணற்குழாய்களின் முனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூராகச் சீவப்பட்டுமை தொட்டு எழுது கருவியாக பயன்பட்டு வந்திருக்கிறது. எகிப்தியரைப் போன்றே எகிப்துக்கு அண்மையிலிருந்த கிரேக்கர், பினிஷியர், உரோமர், எபிரேயர், ஆர்மீனியர், அராபியர் ஆகியோருக்கும் பைபிரஸ் தாள்கள் எழுது பொருளாகப் பயன்பட்டதாக வரலாறு கூறுகின்றது. கிட்டத்தட்ட கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7ம் நூற்றாண்டு வரை பைபிரஸ் தாள்களில் எழுதும் வழக்கம் நீடித்திருக்கிறது. பாலஸ்தீனத்தில் கி.மு. 6ம் நூற்றாண்டிலும், கிரேக்கர்கள் கி.மு. 5ம் நூற்றாண்டிலும், உரோமர்கள் கி.மு. 3ம் நூற்றாண்டிலும் இது எழுது பொருளாகப் பயன்பட்டுள்ளது (சீனி வேங்கடசாமி 1948).

எழுதுவோர் ஓரிடத்தில் அமர்ந்து பைபிரஸ் சுருளையை வலது பக்கம் வைத்துக்கொண்டு இடது கையினால் பிரிக்கப்பட்ட தாளைப் பிடித்துக் கொள்வார்கள். விரிந்த தாள் மடியில் படிந்திருக்கும். அதன் மேல் வலது கையினால் விரிந்த பகுதியில் நாணல் பேனாவினால் மை தொட்டு எழுதுவார்கள். ஒரு பத்தி எழுதியவுடன் எழுதப்பட்ட பகுதியை இடது கையினால் சுருட்டிப் பிடித்துக்கொண்டு அடுத்த பகுதியை எழுதுவார்கள். இவ்வாறு சுருளை முழுவதும் பத்தி பத்தியாக எழுதப்பட்டு நன்றாகச் சுருட்டி கயிற்றினால் கட்டி வைப்பார்கள்.

இந்த பைபிரஸ் என்ற சொல்லில் இருந்தே Paper என்ற சொல் உருவானது என வரலாறு கூறுகின்றது. கிரேக்க மொழியில் பைபிரஸ் சுருள்கள் "Biblion" என அழைக்கப்பட்டன. உரோம மொழியில் (இலத்தீன்) இது பைபிள் என வழங்கப்பட்டது. பைபிரஸ் தாள்களை ஒரேயளவாக இரண்டிரண்டாக மடித்து ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து அடுக்கிக் கட்டப்பட்ட புத்தகத்துக்கு "கோடெக்ஸ்" எனப் பெயரிட்டு அழைத்தனர். இதற்கு இலத்தீன் மொழியில் மரப்பலகை என்று பெயர் (சம்பந்தன், 1976).

கி.மு 4ம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியா நகரில் கிரேக்க மன்னன் முதலாம் தொலமியால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய நூலகத்தின் சேகரிப்புகளுக்கு பைபிரஸ் தாள்களே ஊடகமாக இருந்திருக்கின்றன. கிட்டத்தட்ட ஏழு இலட்சம் பைபிரசு சுருள் களைக் கொண்டதாக இந் நூலகம் இருந்திருக்கிறது.



நூலகவியல் துறை சார்ந்து நோக்கும் போது சுலபமாகக் காவிச் செல்வதற்கு ஏற்ற வகையிலும் ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துப் பராமரிப்பதற்கு ஏற்ற வகையிலும் உருவாக்கப்பட்ட பதிவேடு என்ற வகையில் களிமண் பலகைகளே மனித சிந்தனைகளைச் சுமந்த முதலாவது பதிவேடு எனப்படுகின்றது. எனினும் "நூலகங்களின் வரலாறு என்பது நாகரீகங்களின் தொட்டில் எனப்படும் சுமேரியர் காலத்திலேயே ஆரம்பித்ருக்கக் கூடும் எனினும் முதலாவது நூலகம் எது என்பது தொடர்பான தேடலுக்கு நாம் முதலில் புராதன எகிப்தினது நினைவுச் சின்னங்கள் பற்றி அறிதல் அவசியம்" எனக் குறிப்பிடும் Jesse H. Shera என்னும் நூலக அறிஞரின் கூற்றையும் கவனத்தில் கொண்டேயாக வேண்டும். இவரது கருத்துப்படி பைபிரஸ் தாள்களே முதலாவது எழுதப்படும் பொருளாக இருந்திருக்க வேண்டும். இதற்கு இவர் கூறும் காரணம் பின்வருமாறு அமைகின்றது. யூலியஸ் சீசர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் கி.மு. 1ம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க வரலாற்றாசிரியரான Diodorus Sicily என்பவர் எகிப்தில் உள்ள திபிஸ் பழங்குடி மக்கள் வாழும் பிரதேசத்தில் உள்ள நினைவுச் சின்னங்களை விபரிக்கும் போது இச்சின்னங்கள் அமைந்துள்ள இடத்திலுள்ள நூலகம் ஒன்றின் நுழைவாயிலில் பொறிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்ற "ஆத்மாவுக்கான மருத்துவம்" என்ற வாசகம் நூலகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தொன்மையைக் குறிப்பிடப் போதுமானதென்றால் நூல்களின் தோற்றமோ அதற்கும் பல நூற்றாண்டுகளுக்குமுன் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் எனக் குறிப்பிடுகின்றமையை ஆவணங்கள் வாயிலாக அறியக்கிடைக்கிறது. அதுமட்டுமன்றி, கி.மு 1200 அளவில் Ramses என்னும் அரசனின் கீழ் பதவி வகித்த மியாமுன் (Miamun) என்ற பெயருடைய தகப்பன் மகன் ஆகிய இரு நூலகர்களின் கல்லறைகள் நைல்நதிக்கு குறுக்கே கர்னாக் (Karnak) என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எது எவ்வாறாயினும் எட்பூ (Edfu) என்னுமிடத்தில் அமைந்துள்ள "பைபிரஸ் வீடு" (House of Papyrus) எனப்படும் நூலகக் கட்டிடத்தில் நூல்கள் எதுவும் இல்லாத போதும் நூலகக் கட்டிடம் தற்போதும் இருக்கிறது. இக்கட்டிடத்தின் ஒரு பக்கச்சுவரில் நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த நூல்களுக்கான நூலகப் பட்டியலானது பொறிக்கப்பட்டிருந்தது. இப்பட்டியல் இரு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அரச நிர்வாகமும் தொழிற்பாடுகளும் என்ற பொருட்துறை உட்பட பலதரப்பட்ட பொருட் துறை சார்ந்த நூல்களின் விபரங்கள் 12 பெட்டிகளில் பட்டியற் படுத்தப்பட்டுள்ளன. மாந்திரீகம், புதிர்கள், சோதிடம், மருத்துவம் போன்றவையும் ஊர்வனவற்றிலிருந்து பாது காக்கும் முறைகள் போன்றவையும் தொடர்பான விபரங்களைக் கொண்டுள்ள இரண்டாவது பட்டியலானது 22 பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. கர்னாக் (Karnak) என்னும் இடத்திலிருந்து நைல்நதிக்குக் குறுக்கே புராதன எகிப்தியர்களின் ஏகபோக உரிமையாக இருந்த பைபிரஸ் என்னும் புல்லை எழுதப்படும் பொருளாகக் கொண்டே இவை படைக்கப்பட்டதாக இருப்பதால் முதலாவது சிந்தனைப்பதிவேடுகள் பைபிரஸ் தாளிலிருந்தே உருவாகியிருக்க வேண்டும் (Shera, 1976). எவ்வளவு தான் பொருத்தமான காலநிலையில் பைபிரஸ் தாள்கள் பேணப்பட்டாலும் கூட அவை விரைவில் உடையக் கூடியவையாக இருந்தமையால் தான் களிமண் பலகைகளில் எழுதும் வழக்கம் வந்திருக்கலாம் எனப்படுகின்றது. இருந்தபோதும் ஒரே காலப் பகுதியிலேயே வெவ்வேறு பிரதேசத்தில் இவை இரண்டும் ஒரே சமயத்தில் பாவனையிலிருந்திருக்கவும் கூடும்.

4.25 தோல் நூல்கள் (Leather Books)



Parchment, Vellum என பலதரப்பட்ட தோல்கள் எழுது பொருளாக இருந்திருக்கின்றன. Eumenes II என்ற சொல்லானது ஆசியாவின் மேற்குக் கரையில் அமைந்த புராதன நகரம் ஒன்றின் பெயரான Pergamen என்ற சொல்லிலிருந்து உருவாக்கப்பட்ட பொதுப் பெயராகக் கருதப்படுகின்றது. Eumenes II என்ற அரசனால் எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியா என்ற இடத்தில் உருவாக்கப் பட்ட மிகப் பெரிய ஆய்வு நூலகமொன்று நிறுவப்பட்ட இடமாக இந்த நகரம் விளங்குகின்றது.

தொன்று தொட்டே எகிப்து தவிர்ந்த ஏனைய மத்தியதரைக் கடல் ஓரத்திலுள்ள நாடுகள் தோலை எழுது கருவியாகக் கொண்டிருந்த போதும் அதன் விலை அதிகம் என்பதால் பைபிரஸ் தாள்களை இறக்குமதி செய்து அதைப் பயன்படுத்தின. பைபிரஸ் தாள்கள் மேலாதிக்கம் செய்திருந்த எகிப்து நாட்டை விட கிரேக்கம், இத்தாலி முதலிய தேசங்களில் பைபிரஸ் தாள்கள் விரைவில் கெட்டுப் போனபடியால் தோல்கள் எழுது கருவிகளாக மேலாதிக்கம் பெற்றன.

பார்ச்மென்ட் என அழைக்கப்படும் பதப்படுத்தப்பட்ட விலங்குத்தோல் மத்திய ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவின் இஸ்லாமிய நாடுகளில் 199 B.C காலத்திலிருந்தே எழுதப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பைபிரஸ் தாள்கள் எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தப்பட ஆரம்பித்தபோது இதன் பாவனை வீழ்ச்சியடைந்தபோதும் பைபிரஸ் தாள்களின் ஆயுட்காலம் மிகக் குறைவானது என்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கிட்டத் தட்ட கி.பி 2ம் நூற்றாண்டிலிருந்து தாள்கள் அதிக பயன்பாட்டுக்கு வரும்வரை தோல்களே எழுது பொருளாக அதிகம் பயன்பட்டிருக்கின்றன.

சாதாரண மிருகங்களின் தோலைக் காட்டிலும் வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் தோல் சிறந்ததாகக் கருதப்பட்டது. ஆட்டுத்தோலைச் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்து, மயிர்களைக் களைந்து, மறுபுறத்திலுள்ள சதைகளை நீக்கி, மரச்சட்டத்தின் மேல் உலர வைத்து, சீமைச் சுண்ணத்தினாலும், ஒரு வகைக் கல்லினாலும் தேய்த்துப் பளபளப்பாக்கி எழுது பொருளாகப் பயன்படுத்தினர். இது நேர்த்தியான எழுது பொருளாகவும் இருபுறத்திலும் எழுதக்கூடியதாகவும் இருந்தது. இதற்கு "மெம்பரேனா" Membrana எனப் பெயரிடப்பட்டது (வேங்கடசாமி பக்).

ஆட்டுத் தோலை விடவும் மிக நேர்த்தியான எழுது பொருளாகக் கருதப்பட்டது Vellum என அழைக்கப்பட்ட இளம் கன்றின் தோலாகும். ஆறு வாரங்களுக்கு மேற்படாத கன்றின் தோலை எடுத்துச் சுத்தப்படுத்தி, பாதுகாத்து, பளபளப்பாக்கி இளங்கன்றுத்தோல் பயன்படுத் தப்படுகிறது. தோலின் மீதுள்ள உரோமங்கள் உட்புறமுள்ள சதைகள் என்பன அகற்றப்பட்டு இவற்றின்மீது சுண்ணாம்பு தடவப்படுகிறது. பின்னர் ஒரு சட்டத்தில் பரத்தி வைக்கப்பட்டுக் கத்தியால் இருபுறமும் நன்கு சுரண்டப்படுகிறது. இது படிப்படியாக உலர்ந்ததும் நன்கு இறுகிப் போகிறது. இவை உடனே சுடுநீரில் ஈரப்படுத்தப்பட்டு வழவழப்பான கல்லினால் தேய்க்கப்படுகிறது. உலர்ந்ததும் இவை வழவழப்பாகவும் எழுதுவதற்கேற்ற வகையில் படிந்தும் இருக்கும். உயர்கலையம்சம்மிக்க கையெழுத்துப் பிரதிகளுக்கான எழுதப்படும் பொருளாக மட்டுமன்றி நூல்கட்டுதலுக்கும் இது பயன்படுகிறது.

சீசரியா (Caesarea) என்னுமிடத்தில் சிதைந்த நிலையிருந்த இரு நூலகங்களிலுள்ள சிதைந்த பைபிரஸ் தாள்களை தோல்களில் எழுதி வைக்கும் படி இரு பாதிரிமார்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள் என்ற தகவலும்கான்ஸ்டன்டின் என்னும் சக்கரவர்த்தி தனது கான்ஸ் டான்டிநோபிள் என்னும் நகரத்திலிருந்த 50 கிறிஸ்தவக் கோவிலுக்கு 50 விவிலிய நூல்களை வெல்லம் என்னும் தோல்களில் எழுதி வைக்கும்படி உத்தரவிட்டதாக ஆய்வுகள் கூறுவதி லிருந்து கி.பி 4ம் நூற்றாண்டில் பைபிரஸ் தாள்களைவிட தோல் நூல்களே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது (சீனி வேங்கடசாமி, 1948).

இடைக்கால நூல்களில் பெரும்பாலானவை தோலில் உருவாக்கப்பட்ட நூல்களேயாகும். இவை மிகவும் தடிப்பான நூல்களாகக் காணப்பட்டன. தோல்களின் மயிர் உள்ள பகுதி சதையுள்ள பகுதியை விட இருண்டதாகவும் மென்மையான தாகவும் இருந்தமையால் நிறத்திலும் தன்மையிலும் சீரமைவுத் தன்மையைப் பேணும்பொருட்டு மயிர் உள்ள பகுதி மயிருள்ள பகுதியை பார்க்கத்தக்கதாகவும் சதைப்பகுதி சதைப்பகுதியைப் பாரக்கத்தக்க தாகவும் தோல் தாளினது பக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

4.26 ஓலைச்சுவடிகள் (Ola Leaves)

தாள்களின் கண்டுபிடிப்புக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட எழுது பொருள்களில் ஓலைச் சுவடிகள் முக்கிமானவை. எகிப்தியர், கிரேக்கர் போன்றோரால் பண்டைக் காலத்தில் களிமண் பலகைகள், பைபிரஸ் தாள்கள், தோல் கருவிகள் போன்றன எழுது கருவிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழங்கி வந்த காலத்திலேயே ஓலை எழுது கருவியாகப் பயன்பட்டிருப்பதை தென் மற்றும் கிழக்காசியா மத்திய ஆசியாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் காட்டுகின்றன. தெற்கு மற்றும் தென்கிழக் காசிய நாடுகளில் நாட்டுப்பனையின் பழுப்பு நிறம் பெற்ற பழுத்த ஓலைகளை எடுத்து, அதன் குறுகிய அடி நுனிகளை நீக்கி, நரம்புகளை வார்ந்தெடுத்து, உலரவைத்துச், சில மணி நேரம் நீரில் கொதிக்க வைத்த பின்னர் பதப்படுத்தி அவற்றை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். பனையோலையின் நீளம் 1-3 அடிவரையிலும் அகலம் 1.75 அங்குலம் வரையிலும் இருந்தன. எம்மிடையே பாவனையில் இருக்கும் ஓலைச் சுவடிகள் தனித்தனி ஓலைகளில் கூர்மையான உலோகத்தினாலான எழுது கோல் கொண்டு பொறிக்கப்பட்டு, அல்லது பேனாவின் மை கொண்டு எழுதப்பட்டு, பனையோலைகளின் நடுவில் அல்லது இரு முனைகளிலும் துளையிடப்பட்டு, அவற்றினூடாக நூலைக் கோர்த்து ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, ஓவியங்கள் தீட்டப்பட்ட அல்லது வேலைப்பாடுகள் செய்யப்பட்ட இரு கனமான, மரத்தினாலான கட்டைகளை ஓலைக் கட்டின் மேற்புறம் ஒன்றும் கீழ்ப்புறம் ஒன்றுமாக வைத்துப் பிணைத்து உருவாக்கப்பட்டவையாகும். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஓலைகளை ஒன்றாகச் சேர்த்துத்தைத்து அகலமாக்கியும் எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள்.

இதைவிடவும் பதப்படுத்திய வாழை இலை எழுது பொருளாகப் பயன்பட்டிருக்கிறது. வங்கத்தின் கிராமப்பகுதிகளில் பள்ளி மாணவர்களால் இது பயன்படுத்தப்படுவதாக கூறப்படு கின்றது. தாழை மடலில் பித்திகை மொட்டுக் கொண்டு எழுதியதாக சிலப்பதிகாரம் கூறுகின்றது. தாமரை இலையில் நகத்தின் நுனியால் காதல் கடிதம் தமயந்தியால் அனுப்பப் பட்டதாக நளவெண்பா கூறுகின்றது. ஆல் எருக்கு முதலியவைகள் எழுதப்பயன்பட்டதாக யோகினி தந்திரம் கூறுகின்றது.

4.27 பூர்ச்சமரப் பட்டைகள் (Birch Bark)



அலெக்சாண்டரின் படையெடுப்புக் காலத்தில் இந்திய மக்களால் வட இந்தியாவின் சில பகுதிகளில் போஜ பத்ரா என அழைக்கப்படும் பூர்ச்ச மரத்தின் பட்டைகள் எழுதப்படும் ஒரு பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மரப்பட்டையின் உட்புறப் பகுதி தாள் வடிவில் உரிக்கப்பட்டு இரண்டரை அடி நீளமும் ஒரு சாண் அகலமும் உடையனவாக நறுக்கப்பட்டு அவை மெதுவாக உலர விடப்பட்டன. பின்னர் எண்ணெய் தடவப்பட்டு அவை மெரு கேற்றப்பட்டன. இயற்கைப் பசை கொண்டு ஒட்டுவதன் மூலம் இவற்றின் எழுதும் பரப்பு அகலமாக்கப்பட்டது. இவை மெல்லிய குச்சிகளால் கோர்க் கப்பட்டு, மரத்தாலான இரண்டு மரக்கட்டைகளின் நடுவில் வைத்து தாள்களின் குறுக்காக நூலினால் சுற்றிக் கட்டப்பட்டவையாகும். காஸ்மீரிலுள்ள பண்டிதர்களின் நூலகங்களிலும் ஒரிசாவிலும் இவ்வகை நூல்கள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.28 மெழுகேடு அல்லது மர அச்சு நூல் (Codex)



மெழுகேட்டின் அடிப்படை வடிவமானது கி.மு 3ம் நூற்றாண்டில் பேக்கமன் (Pergamon) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. எகிப்திலிருந்து பைபிரஸ் தாள்களின் ஏற்று மதி தடை செய்யப் பட்டதன் விளைவாகவே மெழுகேட்டின் தோற்றம் அமைகிறது. (Wikipedia) சிறு துண்டுகளாக அறுக்கப்பட்ட மெல்லிய மரப் பலகை களை நன்றாகப் பொருத்தி அதன் மேல் மெழுகைப் பூசி கூரிய ஆணி கொண்டு எழுதப்பட்ட பலகைகளுக்கு இப் பெயர் வழங்கப்பட்டது. இலக்கிய ஆக்கங்களுக்கு சுருளை வடிவில் தயார் செய்யப்பட்ட எழுது பொருட்களே மேலாதிக்கம் செய்திருந்த கி.பி முதலாம் நூற்றாண்டில் தான் குறிப்பெடுப்பதற்கும் எழுத்து சம்பந்தப்பட்ட சாதாரண பாவனைக்குமென உரோமர்களால் பயன்படுத்தப்பட்ட மெழுகேடு முதன் முதல் இலக்கிய ஆக்கங்களுக்கென பயன்படுத்தப்பட்டது. பின்னர் இச்சொல்லே நூல் வடிவில் அமைக்கப்பட்ட சுவடிகளுக்கும் வழங்கப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் பைபிரஸ் தாளில் உருவாக்கப்பட்ட மெழுகேடானது கிறிஸ்தவர்களால் அதிகம் விரும்பப்பட்ட எழுது பொருளாக இருந்தது. இந்தியாவில் புத்த குருமார் போதனைகளை மாணாக்கர் பார்த்துப் பயிலும்படி மரப் பலகையில் எழுதினார்கள் என விநயபிடகம் என்னும் நூல் கூறுகின்றது. நாகபாணன் என்னும் அரசன் காலத்தில் கடன் சம்பந்தமான ஆவணங்கள் மரப்பலகைகளில் எழுதப்பட்டன என்று பட்டயங்களில் காணப்படுகின்றது. வழக்கு முறைப்பாடுகள் மரப்பலகைகளில் சுண்ணாம்பினால் எழுதப்படல் வேண்டுமென கார்த்தி யானர் கி.மு 400 ஆண்டளவில் கூறியுள்ளார். அரச கட்டளைகள் மை பூசப்பட்ட மரப்பட் டைகளில் எழுதப்பட்டன என்று தண்டி என்னும் சமஸ்கிருதப்புலவர் கூறியுள்ளார். இவ்வகை மரப்பலகை ஒன்று அசாமில் கண்டுபிடிக்கப்பட்டது. வடமேற்கு எல்லைப் புறங்களில் வாழும் வறிய மக்கள் சமய சம்பந்தமான நூல்களை மரப்பலகைகளில் சுண்ணாம்பினால் எழுதுகின்றனர் என நூலகங்கள் என்ற நூலில் ந.சி கந்தையா பிள்ளை அவர்கள் கூறுகின்றார் (கந்தையாபிள்ளை. ந.சி 1948).

4.29 மூங்கில் சுவடிகள் (Bamboo books)



சீன நாட்டில் சௌ பரம்பரையினரின் ஆட்சி கி.மு 255இல் முடிவடைந்தபோது, சீன இலக்கியங்களெல்லாம் மூங்கில் எழுது கோலால், மரச் சாற் றினால் தயாரிக்கப்பட்டமையில் தோய்த்து மூங்கில் பத்தைகளிலோ மரத் துண்டின் மீதோ எழுதப்பட்டு வந்தன. சிறு செய்திகள் மரத்துண்டின் மீதும் நீண்ட செய்திகளும் நூல்களும் பெரும்பாலும் மூங்கில் பத்தைகள் மீதும் எழுதப்பட்டு வந்தன. மூங்கில் பத்தைகள் 9 அங்குல நீளமும் ஒரேயொரு வரிசைச் சீன எழுத்துக்களை வரையக் கூடிய அளவு அகலமும் கொண்ட சிறுசிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டன. மூங்கிற் பத்தைகளை சீர்படுத்தி ஒரு முனையில் துளையிட்டுப்பட்டுக் கயிற்றினால் அல்லது தோலின் நரம்பினால் கட்டி புத்தகமாக்கப்பட்டன (சம்பந்தன், பக். 15). மே-தீ (Me-Ti) என்னும் சீன தத்துவ அறிஞர் ஒரு இடத்திலிருந்து மற்றொரு பிரதேசத் துக்கு பிரயாணம் செய்தபோது தம்முடன் மூன்று வண்டிகள் நிறைய மூங்கில் நூல்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்றார் என வரலாறு கூறுகிறது. மூங்கிலான நூல்கள் கனமாகவும் நிறைய இடங்கொள்ளக் கூடியனவாகவும் இருந்தது என்பதை இக்குறிப்பு சுட்டிக் காட்டுகிறது.

4.291 துணி (Cloth)



மூங்கில் நூல்கள் போல் அதிகக் கன மில்லாமலும் எளிதாகவும் கொண்டு செல்லத்தக்க வகையில் சீனர் கண்டு பிடித்த இன்னோர் எழுது கருவியாக பட்டுத் துணி அமைகிறது. பச்சைப் பட்டிலிருந்து இன்றைய காகிதத்தைப் போன்ற அளவில் இது உருவாக்கப்பட்டது. காகிதம் என்ற வரையறைக்குள் வரக்கூடியவாறு உருவாக்கப்பட்ட இப் பொருள் கிபி 100ல் நடைமுறையில் இருந்தது என்பதற்கு அந்த நூற்றாண்டில் முடிவான ஷூ - வென் அகராதியே சான்று பகர்கிறது. அரச ஆவணங்களும் தனிப்பட்டவர்களின் ஆவணங்களும் நன்கு அடித்துத் தயாரிக்கப்பட்ட துணியில் எழுதப்பட்டன என்று ஆந்திர நாட்டுப் பட்டயங்கள் கூறுகின்றன. துணியின்மீது புளியம் விதைப் பசையைத் தடவி அதன் மேல் கரி பூசி சுண்ணாம்புக் குச்சியினால் எழுத்துகள் எழுதப் பட்டன. இவ் வகைக் கையெழுத்துப்படிகள் யெசல்மீர் (Jesalmir) முதலிய இடங்களில் காணப்படுகின்றன (கந்தையா பிள்ளை 1948). துணிகளில் பருத்தித் துணி பட்டுத்துணி என்பவை எழுதப்பயன்பட்டிருக்கிறது. இது கடிதம் என அழைக்கப்பட்டது.

4.292 உலோகத் தகடுகள் (Metals)



செம்பு, பித்தளை, தகரம், வெண்கலம், இரும்பு. வெள்ளி, தங்கம் முதலிய உலோகத் தகடுகள் எழுதப்படு பொருளாகப் பயன்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டின் இடைக்கால வர லாற்றை அறிவதற்கு பெரிதும் உதவியவை செப்பேடுகளே. அரச வம்சத்தின் பிரதான எழுதுபொருளாக செப்புத் தகடுகள் பயன்பட்டிருக்கின்றன என்பது வரலாறு மூலம் அறியக்கிடைக் கிறது. மவுரிய அரசர் காலத்தில் அரச கட்டளைகள் செப்புத் தகடுகளிலேயே பொறிக்கப்பட்டன. செப்பேடுகளின் ஒரு பக்கத்தில் துளையிட்டு செம்பு வளையத்தில் இவை கோர்க்கப்பட்டன. எழுத்துக்கள் பழுதடையாமல் இருக்கும் வகையில் செப்புத் தகட்டின் ஓரங்கள் உயரமாக்கப்பட்டிருந்தன. பட்டிப் புரோலு என்னும் இடத்தில் வெள்ளி இதழ்களில் எழுதப்பட்ட கையெழுத்துப் படி ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஸ் அரும்பொருட் காட்சியகத்தில் வெள்ளித் தகட்டில் எழுதப்பட்ட கையெழுத்துப் படிகள் சேமிக்கப்பட்டுள்ளது (கந்தையாபிள்ளை 1948).

தந்தம் மிகக் குறைந்த அளவில் எழுது பொருளாகப் பயன்பட்டிருக்கிறது. தந்தச் சட்டங் களில் எழுதப்பட்ட நூல் ஒன்று பர்மாவில் கிடைத்துள்ளது. ஆமை ஓடு, சங்கு, சிப்பி முதலியவைகளும் சிறு அளவில் எழுதப்படு பொருளாகப் பயன்பட்டிருக்கின்றன. பங்களா தேசத்தின் டக்கா அரும்பொருட் காட்சியகத்தில் இவற்றின் மாதிரிகள் பாதுகாக்கப்படு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.293 தாளுருச்சாதனங்கள் (Paper Based Materials)



களிமண் பலகைகளைப் படைத்த சுமேரியர் போன்று அல்லது அவர்களுக்கு அடுத்ததாக பைபிரஸ் தாள்களை உருவாக்கிய எகிப்தியர் போன்று நூல் உற்பத்தி சார்ந்து வரலாற்றில் பதியப்படுகின்ற மூன்றாவது இனமாக சீனர்கள் கருதப்படுகின்றனர். சீன நூல் உற்பத்தியின் காலம் கிட்டத்தட்ட கி.மு. 1300 என புதைபொருள் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன (Encyclopedia Britanica 1990). இதற்கு முன்னர் மரம், துணி, மூங்கில் பட்டைகள் என்பன எழுது பொருளாக இருந்திருக்கின்றன. தகவல் அமைப்பொன்றின் தகவல் வளங்களில் கணிசமான அளவு பகுதியை நிரப்புபவை தாள்களை பிரதான மூலப்பொருளாகக் கொண்ட நூலுருச் சாதனங்கள் ஆகும்.

"20ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயே தகவல் தொழினுட்ப உலகுக்குள் மனித சமூகம் நுழைந்துவிட்டபோதும் வடிவம், எழுத்து இரண்டிலும் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக, சிறியதாக, பாரமற்றதாக, விரும்பிய இடத்துக்கு எடுத்துச் செல்லக் கூடியதாக, முக்கிய அம்சங்களை வெட்டிச் சேகரிக்கக் கூடியதாக, பல பிரதிகள் எடுக்கக்கூடியதாக, தேவை முடிந்ததும் தூக்கி வீசக் கூடியதாக இருக்கக் கூடிய ஒரேயொரு சாதனம் நூலாகத்தான் இருக்க முடியும்" என்ற கூற்று தாளை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களின் பயன்பாடு தகவல் யுகம் ஒன்றில் சுலபமாக மறைந்துவிடக் கூடிய அல்லது மறக்கப்பட்டு விடக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது (Gopinath 1984).

அச்சிடப்படக்கூடிய தன்மையை ஒரு தாள் பெறுவதற்கு அதற்கு பின்வரும் நான்கு பண்புகள் அவசியமாகும்:

1. அச்சிடவும், மடிக்கவும், கட்டவும் கூடிய வகையில் அது காத்திரமானதாக இருக்க வேண்டும்.
2. நிறம், பிரகாசம், ஒளி புகவிடாத்தன்மை போன்ற பண்புகள் கொண்டிருக்க வேண்டும்.
3. தாளின் மேற்பரப்பு வழவழப்பாக இருக்க வேண்டும்.
4. திரவத்தைச் (அச்சிடும் மை) சரியான அளவில் உறுஞ்சும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

தகவல் வளங்களில் பாதிப்பு ஏற்படுத்தும் பிரதான காரணியாகத் தரங்குறைந்த தாள்கள் கருதப்படுகின்றன. அதிகரித்த சனத்தொகை, சிறந்த கல்வி வாய்ப்பு, எழுதப் படிக்கத் தெரிந்தோரின் துரித பரவல் என்பன காரணமாக 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நூல்களுக்கான கேள்வி அதிகரித்த போது அதுவரை நீண்ட நார்ப் பொருள் கொண்ட, நீண்ட வாழ்வுடைய, உயர்தரமுள்ள தாள்களின் பாவனையைக் கைவிட்டு மேற்குலகம் தரங்குறைந்த, உடனடித்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய, தமக்குள்ளேயே அழிவை ஏற்படுத்தும் மூலகங்களைக் கொண்ட தாள்களின் உற்பத்தியில் கவனஞ்செலுத்தத் தொடங்கியது. தாள் உற்பத்தியானது தாவர நார்கள், இரசாயனச் சேர்க்கைகள், நீர் என்பன கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. பருத்திக் கந்தைத் துணிகள், மரக்கூழ், வைக்கோல், சணல், மணிலாக்கயிறு, கழிவுதாள், எஸ்பாட்டோ புல் என்பன தாள் உற்பத்திக்கு வேண்டிய நார்ப்பொருளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பினும் இன்றைய நூலுருச் சாதனங்களில் கிட்டத்தட்ட எல்லாமே மரக்கூழிலிருந்து தயாரிக்கப்பட்டவை. பருத்திக் கந்தைத் துணிகளிலிருந்து பெறப்பட்ட உயர்தரமிக்க தாள்களின் உற்பத்தி 1850 அளவில் மலிவான மரக்கூழுக்கு மாறியது.

மரக்கூழானது பொறிமுறை மூலமும், இரசாயன முறையிலும் தயாரிக்கப்படுகின்றதெனினும் இரசாயன முறையிலும் பார்க்கப் பொறிமுறை மூலமான கூழ் தயாரிப்பில் அதிகளவு தாள் உற்பத்தி செய்யப்பட முடியும் என்பதனால் கூடுதல் பலனைத் தரக்கூடிய பொறிமுறை மூலம் தயாரிக்கப்படும் மரக்கூழே அதிக பாவனையில் உள்ளது. மரம் கிட்டத் தட்ட 45% செலுலோசையும் 20 - 25% செலுலோசின் பாதிப்பண்புகளையும் 25-30% லிக்னின் என்னும் பொருளையும் 5% ஏனைய மூலகங்களையும் கொண்டது. தாவர கலங்கள் லிக்னின் என்னும் பொருள் மூலம் ஒன்றிணைக்கப்பட்டுப் பலப்படுத்தப்படுவதன் மூலமே மரமாக மாறுகிறது. பொறிமுறை மூலமான கூழ் தயாரிப்பில் இந்த லிக்னின் எவ்வித பாதிப்பிற்கும் உட்படாது அப்படியே அழியாமல் இருக்கும். வெள்ளை அல்லது கிறீம் நிற தாள் தயாரிப்பதற்கு மரக்கூழுக்கு வெளிறச் செய்யும் இரசாயனம் சேர்க்கப்படுகிறது. ஒளியை ஊடுருவ விடாத தன்மையை அதிகரிக்கும்பொருட்டு களிமண் அல்லது சுண்ணாம்பு கலக்கப்படுகிறது. காத்திரத் தன்மையை அதிகரிப்பதற்குக் கஞ்சிப்பசை கலக்கப்படுகிறது.

4.294 ஒளிப்படச் சாதனங்கள் (Photographic Materials)



ஒளித்தாக்கத்திற்குட்படும் இரசாயன மூலகங்களில் ஒளிச் செயற்பாடு மேற் கொள்வதன் மூலம் ஒளிப்பட விம்பங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த விம்பங்களைத் தாங்கும் குழம்பு ஆரம்பத்தில் முட்டை வெள்ளைக் கருவாகவோ, கொலோடியன் கரைசலாகவோ, கஞ்சிப்பசையாகவோ இருந்து பின்னர் வச்சிரமாக மாறியிருக்கிறது. விம்பங்களைத் தாங்கும் பின்பல பொருட்களில் தாள்கள், ஒளிப்பட இழைகள், கண்ணாடி, உலோகங்கள் என்பன முக்கியமானவை. பொதுவாக நூலகங்களில் காணப்படும் ஒளிப்பட சாதனங்களில் 1840-1860 காலப் பகுதிகளில் பயன்பட்ட உப்புத்தாள் அச்சுகள், 1850-1920 காலப் பகுதிகளில் பயன்பட்ட அல்புமின் அச்சுகள், 1890-1910 காலப்பகுதிகளில் பயன்பட்ட கொலோடியன் அச்சுகள், 1870களில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை மேலாதிக்கம் செய்யும் வச்சிர அச்சுகள் என்பன உள்ளடங்குகின்றன.

4.3 தகவல் பதிவேட்டு வடிவ ஊடகங்கள் (Information Recording Format Media)

தகவல் பதிவேடுகளின் வடிவம் சார்ந்து தகவல் வளங்களை கட்புல ஊடகங்கள், செவிப்புல ஊடகங்கள், கட்புல செவிப்புல ஊடகங்கள் என மூன்று வகையாக நோக்கலாம்.

- ★ கட்புல ஊடகங்கள்: கட்புல சாதனங்களை கட்புல நிலையான ஊடகங்கள் அசையும் ஊடகங்கள் என இருவகைப்படுத்த முடியும். உண்மை உருவமைப்புகள், அச்சு வடிவத் தகவல்கள், வரைபுகள், விளக்கப்படங்கள், ஒளிப்படங்கள், ஓவியங்கள் போன்ற உபகரணத் தேவையற்ற பாரம்பரிய ஊடகங்களாகவோ படத்துணுக்குகள், காட்சி வில்லைகள், கணினித் திரையில் தோன்றுகின்ற தகவல்கள், வாசிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமேயான நினைவகத்தைக் கொண்ட குறுவட்டுகளில் சேமிக்கப்படும் தக வல்கள் [CDROM] என்பவற்றை உள்ளடக்கும் உபகரணத் தேவையுள்ள நவீன ஊடகங்களாகவோ அமையலாம். தற்காலத்தில் பாவனையிலிருந்து வழக்கொழிந்து விட்ட மௌனப்படங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

★ செவிப்புல ஊடகங்கள்: பலதரப்பட்ட வடிவங்களிலும், வேகங்களிலும் உருவாக் கப்படுகின்ற ஒலிப் பதிவுகளும் நாடாப் பதிவுகளும் இவ்வகைக்குள் அடங்கும்.

★ கட்புல செவிப்புல ஊடகங்கள்: கட்புல ஊடகங்களைப் போன்றே கட்புல செவிப்புல ஊடகங்களும் உபகரணத் தேவையுள்ளவை உபகரணத் தேவையற்றவை என இரு வகைப்படும். வகுப்பறைக் கற்பித்தல், தனிநபர் சந்திப்புகள், குழு உரையாடல்கள் போன்றவை உபகரணத் தேவையற்ற நிலையான கட்புல செவிப்புல ஊடகங்கள் என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடங்கும். அதே போன்று ஒலியமைப்புடன் கூடிய படத்துணுக்குகளும், காட்சி வில்லைகளும் இவ் வகைக்குள் அடங்கும். தகவல் அமைப்புகளினால் ஒழுங்கு படுத்தப்படும் கருத்தரங்குகள், மாநாடுகள், தனிப்பட்ட சந்திப்புகள் போன்றவற்றினூடாக மனித வளங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் உபகரணத் தேவையுள்ள நிலையான ஊடகங்கள் எனப்படும். இசைக் கருவிகள் கூட இவ் வகையைச் சார்ந்தது எனினும் ஒரு சில தகவல் அமைப்புகளே இவற்றைத் தமது தகவல் வள இருப்பில் சேர்த்துக் கொள்கின்றன. 16 mm படங்கள், வீடியோப் படங்கள், வீடியோ லேசர் வட்டுகள் என்பன உபகரணத் தேவையுள்ள கட்புல, செவிப்புல அசையும் ஊடகங்கள் என்ற வகைக்குள் உள்ளடங்கும்.

4.31 கட்புல ஊடகங்கள்

ஆதி மனிதன் பயன்படுத்திய உருவப் பதிவுகளில் தொடங்கி இன்றைய தகவல் தொழினுட்ப யுகத்தை ஆக்கிரமித்திருக்கும் மின் பதிவுகள் வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் கட்புல ஊடகங்களே மேலாதிக்கம் பெற்றவையாக உள்ளன. தொகையளவில் பார்க்கும் போது தாளுருச்சாதனங்களே மிக அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்ட கட்புல ஊடகமாகக் கருதப்படு கின்றது. ஓவியத்தில் தொடங்கி உருவ எழுத்துகளாக வளர்ச்சி பெற்று அச்சுப் பதிவாக மாறி, நுண் பதிவுகளாக சேமிக்கப்பட்டு இன்று மின் பதிவுகளாக மேலாதிக்கம் செய்வது கட்புல ஊடகங்களே. படங்கள், ஓவியங்கள் போன்ற சித்திரப் பதிவுகள், கையெழுத்துப் பிரதிகளை உள்ளடக்கும் எழுத்துப் பதிவுகள், நூல்கள், சஞ்சிகைகள் போன்ற அச்சு வடிவத் தகவல்கள், நுண் வடிவங்கள் படத்துணுக்குகள் போன்ற நுண் பதிவுகள், இறுவட்டுகளில் வெளியாகும் மின் பதிவுகள் போன்றவை இதற்குள் உள்ளடங்கும்.

4.311 உண்மை உருவமைப்புகள் [Realia]

இவற்றை பின்வரும் நான்கு பிரிவுகளுக்குள் உள்ளடக்க முடியும்:

★ கலை பிரயோக அறிவியல் சார்ந்த உண்மை உருவ மைப்புகள். தொழிற்சாலைகள், வீடுகள், உடல்நலம், மருத்துவம், இராணுவ அறிவியல், பொழுது போக்கு சார்ந்த உண்மை உருவமைப்புகள் இவ்வகைக்குள் அடங்கும். எ-டு: சிறுவர்க்கான அனைத்து விளையாட்டுப் பொருட்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ மனிதப்பண்பியல் சார்ந்த உண்மை உருவமைப்புகள். கலை, இசை, நாடகம் சார்ந்த உண்மை உருவமைப்புகள் இவ் வகைக்குள் அடங்கும். எ-டு: இசைக்கருவிகள்.
- ★ அறிவியல் சார்ந்த உண்மை உருவங்கள், உயிரியல், இரசாயனவியல், சூழலியல், புவிச்சரிதவியல், இயற்கை அறிவியல், பௌதீகவியல் சார்ந்த உண்மை உருவமைப் புகள் இவ்வகைக்குள் அடங்கும். எ-டு: மனித எலும்புத் தொகுதி.
- ★ சமூக அறிவியல் சார்ந்த உண்மை உருவமைப்புகள். மானுடவியல், புவியியல், இனவியல், வரலாறு, உளவியல், தத்துவம் சார்ந்தவை இவ்வகைக்குள் அடங்கும். எ-டு: புதைபொருள் கண்டுபிடிப்புகள்.

4.312 மாதிரி உருவமைப்புகள் [Models]

மக்களைச் சுற்றியுள்ள உலகம் பற்றி அறியும் ஆவலை நிறை வேற்றும் ஒரு தகவல் சாதனமே மாதிரி உருவமைப்புகளாகும். தகவல் அமைப்புகளில் காட்சிக்கு வைக்கப்படும் மாதிரி உருவமைப்புகள் பாவனையாளரின் கவனத்தை ஈர்ப்பதாகவும், கருத்தைக் கவர்வதாகவும் மட்டுமன்றி அவற்றிலிருந்து நிறைய கற்றுக் கொள்ளவும் உதவுபவையாகும். குழந்தைகள் பயன் படுத்தும் பொம்மைகள், வண்டிகள், மிருகங்கள் போன்ற மாதிரி உருவமைப்புகள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது போல் வேறு எதுவுமே கற்றுக் கொடுப்பதில்லை. இவ்விதியே வளர்ந்தோருக்கும் பொருந்தும். செய்முறைக் கல்வி அதிக முக்கியத்துவம் பெறும் தற்காலக் கல்வி முறையில் எழுத்து வடிவான சாதனங்களை விட மாதிரி உருவமைப்புகள் பயனுள்ள தகவல் சாதனங்களாக இருப்பதை மறுக்க முடியாது. வீடுகளில் அழகுக்காக செலவிடப்படும் பணத்தில் கணிசமான பங்கை ஆக்கிரமித்து நிற்பவை மாதிரி உருவ மைப்புகளே. மாதிரி உருவமைப்புகளை வாங்கிக் கொள்வதற்கு விசேடதிறன்கள் தேவைப்படு வதில்லை. எனினும் கீழைத்தேச தகவல் அமைப்புகள் மாதிரி உருவமைப்புகளை தமது தகவல்வளச் சேகரிப்பில் உள்ளடக்குவது மிகக் குறைவு.

ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள், ஒலி ஒளிப்பதிவுகள் என்ற மூன்று வகைக்குள்ளும் வகைப்படுத்தமுடியாத நூலுருவற்ற தகவல் வளங்களில் ஒன்றே மாதிரி உருவமைப்புகள் ஆகும். உண்மையான உருவங்களை தகவல் அமைப்பில் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் மாதிரி உருவமைப்புகள் சிறந்ததொரு தகவல் வளமாகக் கருதப்படு கின்றன.

மாதிரிகளின் வகைகளாவன:

- ★ எளிமையான மாதிரி [Simplified Model]: கற்றல் அவதானிப்பு நோக்கங்களுக்காக ஒரு பொருளின் மூலவடிவத்தின் ஒரு பகுதியை மட்டும் எளிமையான உருவில் வடிவமைத்தல் எ-டு மனித நுரையீரலின் புறஅமைப்பு.
- ★ சரிநுட்ப மாதிரி [Exact Models]: ஒரு பொருளின் உருவமைப்பை அதே அளவுத் திட்டத்திலோ அல்லது பெரிய சிறிய அளவிலோ அப்படியே.
- ★ நிலையான மாதிரி [Static Model]: அசையக்கூடிய பகுதிகள் எதுவுமின்றி ஒரு பொருளின் மூல வடிவத்தை அப்படியே பிரதிபலிப்பது போல் செய்யப்படும் மாதிரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலவடிவம் எப்படி இருக்கும் என்பதைப் பிரதிபலிப்பதே இதன் நோக்கமேயன்றி அது எப்படி இயங்குகின்றது என்பதைக் காட்டுவதல்ல.

★ இயங்கும் மாதிரி [Dynamic Model]: நிலையான மாதிரி போலன்றி மூல வடிவத்தின் பௌதீக வடிவமைப்பில் கவனஞ் செலுத்தாது அதன் இயக்கத்தில் கவனஞ் செலுத்தி வடிவமைக்கப்படும் மாதிரி.

12795

மாதிரி உருவமைப்புகளின் பண்புகள்

மாதிரி உருவமைப்பின் பண்புகளில் முக்கியமானது அதன் துல்லியத்தன்மையாகும். பூகோளம் ஒன்றை தகவல் அமைப்புக்கு வாங்க முயற்சிக்கும் போது அதன் துல்லியத்தன்மையைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். ஆனால் துல்லியத்தன்மையைப் பேணமுடியாத சந்தர்ப்பங்களும் தவிர்க்கமுடியாதவை. ஒரு இடத்தின் அமைவிடம், திசை, அதன் பொதுவான வடிவம் போன்ற முக்கிய தகவல்களை வெளிக்காட்ட வேண்டின் துல்லியத்தன்மையில் ஓரளவாவது தியாகம் செய்ய வேண்டியேற்படும். அதேசமயம் ஆறுகள், நதிகளின் பரம்பலைக் காட்டும் செயற்பாட்டில் துல்லியத்தன்மையைப் பேணுவதில் சிரமம் ஏற்படுவதில்லை. துல்லியத்தன்மையின் அளவு மாதிரி உருவமைப்பின் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக ஒளிபுகுவடிவத்தில் (பிளாஸ்ரிக்) உருவாக்கப்பட்ட மனித உடலமைப்பு ஒன்றின் நோக்கம் அதன் உள்ளுறுப்புகளைக் காட்டுவதாக இருப்பின் அங்கு குருதிச் சுற்றோட்டம் பிரதிபலிக்கப்படுவது அவசியமற்றது. ஏனெனில் இது உள்ளுறுப்புகள், அதன் கட்டமைப்புகள் தொடர்பான ஒரு தெளிவான பார்வையைக் குழப்பிவிடும். பொதுவாக சிறுவர்களோ அல்லது வளர்ந்தோரோ உண்மை உருவங்களை விடவும் எளிமையான வடிவில் கட்டமைக்கப்பட்ட மாதிரி உருவமைப்புகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவர்கள் பொதுவாக வடிவமைப்பின் கட்டமைப்புகளில் கவனம் செலுத்துவதைவிடவும் வடிவமைப்பின் தன்மை, அதன் தொழிற்பாடு என்பவற்றிலேயே கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

4.313 அச்சு வடிவ ஊடகங்கள்

4.3131 நூல்கள்

அனைவருக்கும் மிகப் பழக்கமான தகவல் வளமாகக் கருதப்படும் இத்தகைய வளங்கள் தான் நூலக இருப்பின் கணிசமான பகுதியை நிரப்புபவையாகக் கருதப்படுகிறது. அச்சிடப்பட்ட அல்லது எழுதப் பட்ட தாள்களின் பக்கங்களைச் சுலபமாகத் திருப்பிப் பார்க்கக்கூடிய வகையில் நூலால் கோர்த்துக் கட்டி, அதற்கு மட்டையும் இடப்பட்டு உருவாக்கப்படுவதே நூல் என் கிறது ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி. இது பௌதீக வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு நூலை வரையறை செய்கிறது.

குறைந்தது 49 பக்கங்களைக் கொண்ட பருவ வெளியீடு அல்லாத அச்சிடப்பட்ட வெளியீடுகள் அனைத்தும் நூல் என்ற பெயர் பெறும் என்கிறது யுனெஸ்கோ. பக்கங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையின் அடிப்படையில் இது நூலை வரையறுக்கிறது. 48 பக்கங்கள் வரையுள்ள எந்த நூலும் சிறு நூல் என வரையறைப்படுத்தப்படுகின்றது.

பொதுவாக, அறிவியல் தொழினுட்ப நூல்கள் பின்வரும் மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

★ பாடநூல்கள் (Textbooks): குறிப்பிட்ட ஒரு பொருட் துறையைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கென உருவாக்கப்படும் நூல்களே பாடநூல்கள் ஆகும். இவை பொதுவாகப் பரந்த பொருட்துறையை உள்ளடக்குபவை. வாசிப்பு நோக்கம் என்பதே இங்கு முக்கியமானதாக இருப்பதனால் தகவல் வழங்கப்படும் விதம் இங்கு மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. வண்ணப்படங்களும், போதிய விளக்கப் படங்களும், கவர்ச்சிகரமான வடிவமைப்பும் வாசிப்பில் தூண்டலை ஏற்படுத்துபவை. நல்லதோர் பாடநூலானது வாசிப்பை மட்டுமன்றி நல்லதோர் கற்பித்தலுக்கும் வழி காட்டக் கூடியது. புதிய அபிவிருத்திகள், மாறிவரும் கற்பித்தல் முறைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இவை அடிக்கடி மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளன.

★ பொழிப்புகள் (Treaties): ஒரு குறிப்பிட்ட பொருட்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளை முறையாகவும் விளக்க மாகவும் தருவதே பொழிப்புகள் ஆகும். இது பெரும்பாலும் முதல் நிலை இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலிருந்து பெறப்பட்ட பல உசாத்துணைக் குறிப்புகளையும் உள்ளடக்கியிருக்கும். அவை உள்ளடக்கியிருக்கும் தகவலின் காத்திரத் தன்மைக்கேற்ப அவற்றின் பெறுமதியும் தங்கியிருக்கும். பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டதாக இருக்கும் இவ்வகை ஆக்கங்கள் பிரதானமாக உசாத்துணை நோக்கத்துக்காகவே பயன்படுத்தப்படுகிறது. பல பகுதிகளாக வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், ஆக்கம் முழுமைப்படுத்தப்படும் காலத்தில் அதன் முதல் பகுதிகள் வழக்கற்றுப்போன தகவலாக மாறக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.

★ தனிப்பொருள் நூல்கள் (Monographs) குறித்த ஒரு பாடத்துறையில் விளக்கமாக எழுதப்பட்டு வெளியிடப்படுவதே தனிப்பொருள் நூல்கள் எனப்படும். இவை ஒரு ஆசிரியரால் தனித்தோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்தோ எழுதப்பட்டவையாக இருக்கும். பல்கலைக் கழக சமூகத்தின் ஆய்வுத் தேவைகளையும், பாடவிதானம் சம்பந்தப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இவற்றின் பாவனையானது ஏனைய அறிவுசார் சாதனங்களையும் விட ஒப்பீட்டளவில் அதிகமானது. எனினும் நவீன தொழிநுட்ப வசதிகளின் விளைவால் பில்லியன் கணக்கில் வெளியாகும் நூல்களின் எண்ணிக்கையும் நூலகங்களின் இடவசதியின்மையும் இந்நூல்களின் அதிகரிப்பிற்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. தனிப்பொருள் நூல்களில் தொகுப்பாக்கங்கள், கருத்துரைகள் என்பன முக்கியமானவை.

★ தொகுப்பாக்கங்கள் (Composite Works): இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் உருவாக்கப்படுகின்ற தனிப்பொருள் சார்ந்த ஆக்கங்கள் இவையாகும். இதில் ஒவ்வொரு ஆசிரியரின் பங்களிப்பும் தனித் தனிப் பகுதியாக அல்லது முழு ஆக்கத்தின் ஒரு பகுதியாக வெளிவரும்.

★ கருத்துரைகள் (Compendia): ஒரு பொருட் துறையின் முக்கிய கருத்துக்களை மட்டும் தொகுத்து வெளியிடப்படுகின்ற சிறிய சுருக்கப் பதிப்புகள். இவை பொழிப்புரை, சாரம் எனவும் அழைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு சம்பந்தப்பட்ட நூல்கள் பெரும்பாலும் ஆய்வு அறிக்கைகளாகவோ அல்லது ஆய்வுக் கட்டுரைகளாகவோ அமையலாம்.

குறிப்பெடுக்க உதவும் நூல்கள் என்ற வரையறைக்குள் அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், வாழ்க்கைச் சரிதங்கள், புவியியல் அகராதிகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

4.3 132 தொடர் வெளியீடுகள்

ஒழுங்கான கால இடைவெளியில், சீரான வடிவத்தில், நிலையான தலைப்புடன் கூடியதாக, பகுதிகளாகவோ, தொடராகவோ வெளியிடப்படும் எந்தவொரு வெளியீடும் பருவ வெளியீடுகள் எனப்படும். செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், வருடாந்த வெளியீடுகள், தொடர் நூல்கள், மாநாட்டுக் குறிப்பேடுகள், நிறுவன வெளியீடுகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. வருடாவருடம் வெளியிடப்படும் உசாத் துணை சாதனங்கள் அனைத்தும் தொடர் வெளியீடாகவே கருதப்படும். எஸ்.ஆர் இரங்கநாதனின் கருத்துப்படி பருவ இதழ்கள் என்பவை சொல்லடைவாக்க, சாராம்சப் பருவ இதழ்கள் உட்பட பருவ இதழ்களையும், தொடர் வெளியீடுகளையும் உள்ளடக்குகின்றன. ஸ்ரீலங்கா ரெலிகொம் தொலைபேசி வழிகாட்டி போன்ற வழிகாட்டிகளும், Europa ஆண்டு நூல் போன்ற ஆண்டு நூல்களும் தொடர் வெளியீடுகள் என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன. அமெரிக்காவில் ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளியிடப்படும் பருவ இதழ்களும் இச்சொல்லால் குறிக்கப் படுகிறது.

4.314 நுண்வடிவங்கள் [Microforms]

மரபுரீதியான பிரதியாக்க முறைகளில் மிக முக்கியமாகக் கருதப்படுவது நுண்வடிவங்கள் ஆகும். நவீன துறைகளில் இதன் தேவை அதிகரித்திருப்பதுடன் நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள், அரசாங்க வெளியீடுகள் போன்றவற்றின் இடத்தை இது அதிகளவில் கைப்பற்றியிருக்கிறது. ஆவணங்களைப் பழுதடையாமல் பாதுகாத்தல், இடத்தை மீதப்படுத்தல், தகவல் அமைப்புகளுக்கிடையிலான இரவல் வழங்கும் சேவையை ஊக்கு வித்தல், உசாத்துணைச் சேவையை ஊக்குவித் தல், நிதி நெருக்கடியை குறைத்தல் போன்ற நோக்கங்களை நிவர்த்தி செய்வதே நுண் வடிவங்களாகும். நுண்வடிவங்களை நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

i. நுண்படங்கள் [Microfilms]: 1852ல் ஜே.பி டான்சர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இது, பதிவேடுகளைப் பாதுகாத்து வைப்பதற்கான மலிவானதும் பலரால் அறியப் பட்டதுமான பிரதியாக்க சாதனமாக விளங்குகிறது. ஒளிப்பட முறையில் விம்பங்களை உருவாக்குவதில் ஒளியின் பங்கு முக்கியமானது. நுண்படச் சுருளானது ஒளிப்படக்கருவியின் துணை கொண்டு உருவாக்கப்படு வதுடன் தொடர்ச்சித்தன்மை வாய்ந்த படங்களை எடுப்ப தற்கான சிறந்த வடிவமாகக் கருதப்படுகிறது. இந் நேரான நிரைகளைக் கொண்ட படச்சுருள்களை பின்வரும் நான்கு வகைகளாக பிரதியாக்கம் செய்யப்படக் கூடியதாக உள்ளது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு கட்டத்தில் ஒரு பக்கம் பிரதி செய்யப்படல் [24mm x 36mm].
2. பாதிக் கட்டத்தில் ஒரு பக்கம் பிரதி செய்யப்படல் [24mm x 18mm].
3. ஒரு கட்டத்தில் ஒரு சோடிப்பக்கங்கள் பிரதி செய்யப்படல்.
4. பாதிக்கட்டத்தில் ஒரு சோடிப்பக்கங்கள் பிரதி செய்யப்படல்.

நுண்படச்சுருள் பின்வரும் நான்கு வித அளவுகளில் கிடைக்கிறது:

★ 16mm படச்சுருள்: இது அனேகமாக திறந்த சுற்றுக்களிலேயோ [Open Reel] அல்லது தடித்த தாள்களிலேயோ [Cartridge] அல்லது ஒளிப்பட நாடாக்களின் வடிவிலேயோ அமைந்திருக்கலாம். சுழல் வதற்கு உதவுகின்ற பற்களின் அமைப்பிலான துளைகள் இதற்கு இல்லை. இப்படச் சுருள் Comic Mode, Cine Mode ஆகிய இரு வடிவங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

★ 35 mm இது அனேகமாக துளைகள் அற்றதாக, ஒன்றோ இரண்டோ விளிம்புகளைக் கொண்டதாக இருக்கும். திறந்த சுற்றுக்களிலும் தடித்த தாள்களிலும் அமைந் திருக்கும். கட்டங்களில் உள்ள விம்பங்கள் கிடை நிலையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். துளை உள்ள சுருள் Cine Film என அழைக்கப்படுவதுடன் 35 mm கமராவினால் எடுக்கப்படக் கூடியவையாக இருக்கும். துளைகள் அற்ற சுருள்கள் அதற்கென பிரத்தியேகமாக உள்ள கமராவின் மூலமே எடுக்கப்படுவதுடன் இவற்றை பற்கள் வடிவில் அமைந்த சக்கரங்கள் நிறைந்த வாசிப்புக் கருவியின் மூலமே இயக்கவும் முடியும். 35mm படச்சுருள் தகவல் அமைப்பினால் விரும்பப்படுவதுடன் இது சிக்கன மானதும் 16 mm படச்சுருளை விட உபயோகிப்பதற்கு சுலபமானதாகவும் உள்ளது. துளைகளற்ற படச் சுருளுக்கு 24 x 36mm, 26 x 16mm அளவுள்ள கட்டங்களும் துளைகள் உள்ள சுருள்களுக்கு பலதரப்பட்ட அளவுகளில் உள்ள கட்டங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

★ 70mm , 105mm படச்சுருள்கள்: இவை இரண்டும் தேசப் படங்கள் வரைபடங்கள் போன்ற நீண்ட வடிவிலான ஆவணங்களை பிரதி செய்வதற்கு உகந்தவை. இதற்குப் பயன்படுத்தப்படும் Stripes ஒளிப்பதிவு நாடா வடிவில் அமைந்திருக்கும். நுண் வடிவங்கள் இரண்டு சுற்றுக்களைக் கொண்டிருக்கும். படம் ஒன்றிலிருந்து இன் னொன்றிற்கு ஏதாவது ஒரு இயக்கத்தில் தானாகவே இடம் மாறிக் கொண்டிருப்பதனால் இங்கு ஒவ்வொரு படத்தையும் நாமே சுற்றிப் புதிதாகப் போடவேண்டிய அவசிய மில்லை. ஆனால் தடித்த தாள்களில் உள்ள படங்களை மாற்ற நாமே செயற்பட வேண்டியுள்ளது. ஒரு நூலின் ஒரு பக்கத்தையோ அல்லது சோடிப் பக்கத்தையோ பிரதி செய்ய Stripes தேவையாகும். இப்படச் சுருளில் ஆறு கட்டங்கள் உள்ளதுடன் முதலாவது கட்டத்தில் நூலின் தலைப்பு பகுதியைக் கொண்டிருக்கும். இதை வெற்றுக்கண்களால் பார்க்க முடியும். ஒரு கட்டத்தில் இரண்டு பக்கங்கள் வீதம் மொத்தம் பத்து பக்கங்களைப் பிரதி செய்ய முடியும். தொடர்ச்சியான பிரதியாக் கத்துக்கு இது உகந்ததல்ல எனினும் ஏனைய படச்சுருள்களைவிடப் படிப்பதற்குச் சுலப மானவை.

ii. நுண்தாள்கள் [Microfiches]: கலாநிதி கோபெல் [Dr.Goebel] என்பவரின் கண்டுபிடிப்பான இது ஒளிபுகக்கூடிய தட்டையான செவ்வக வடிவிலமைந்த ஒரு ஒளிப்படத்தாளாகும். இது நிரைகளில் ஒழுங்கு செய்யப்பட்ட நுண்ணிய விம்பங்களை உடையது. இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாதாரண அளவு 5"x3" [125x75mm] அல்லது 6"x4" ஆகும். இது ஒரே நிரையில் 60 முதல் 100 வரையிலான விம்பங்களை உள்ளடக்கக் கூடியது. இது தாள் வடிவில் இருப்பதனால் அட்டவணைப்படுத்துவது இலகுவான தாகும். சில சமயங்களில் ஒரு ஆவணத்தை ஒரு தாளிலேயே பிரதி பண்ண முடியும். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் நூல்விபரத் தரவு நுண்தாளின் மேற்புற விளிம்பில் கொடுக் கப்பட்டிருப்பதுடன் இத்தரவை மட்டும் கருவியின் உதவி யின்றியே வாசிக்கமுடியும். சாதாரணமாக ஒரு நுண்தாள் 5 நிரைகளையும் 60-100 வரை யிலான விம்பங்களையும் உள்ளடக்கக்கூடியது. இவற்றிலுள்ள விம்பங்களை நுண் தாள் வாசிப்புக் கருவியின் உதவி கொண்டே வாசிக்கமுடியும். இன்று நூலகங்களில் பாவனை யில் இருக்கும் நுண் வடிவங்களில் மிகவும் புகழ் பெற்ற வடிவமாக இது உள்ளது.

iii. நுண் அட்டை [Micro Card]: 'Fronent Rider' என்ற நூலகரின் கண்டுபிடிப்பான இதன் பொதுவான அளவு 5"x3", 8.5" x 6.5" ஆகும். ஒளி புகமுடியாத சாதாரண தாள்களில் உருவாக்கப்படும் நுண் அட்டைகள் பாவனை குறைந்த நூல்களைப் பிரதி செய்வதற்கு மிகவும் உபயோகமானது. இவ் அட்டையில் நூல் விபரத் தரவுகளை வெற்றுக் கண் கொண்டே பார்க்க முடியும். இதில் இரண்டு அட்டைகள் இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியும் 200 பக்கங்களைக் கொண்டிருக்கும். இதிலுள்ள விம்பங்களை நுண் அட்டை வாசிப்புக் கருவியின் துணை கொண்டு வாசிக்க முடியும்.

iv. நுண் அச்சு [Micro Print]: அல்பேட் போண் என்பவரின் கண்டுபிடிப்பான இதன் சாதாரண அளவு 5"x3" ஆகும். இவற்றின் விம்பங்கள் நுண் அச்சு முறையில் இருப்பதுடன் நேர்த்தியான ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். ஏனைய நுண் வடிவங்கள் போன்று இவை அதிக பாவனையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பயன்பாடு

★ நுண்வடிவ செய்முறை அதிக பக்கங்கள் கொண்ட ஆவணத்திற்குச் செலவு குறைந்த தாகும்.

★ நுண்வடிவத் தயாரிப்பில் தரம், சரியான சேமிப்பு வசதி, கவனமான கையாள்கை என்பன பின்பற்றப்படின் 1000 வருடங்களிற்கு மேல் பாவிக்கக்கூடியது.

★ மூலப்பிரதி எடுத்தபின்னர் அதிலிருந்து மிகவும் இலகுவாகவும், மலிவாகவும் மேலதிக பிரதிகளை உருவாக்க முடியும்.

★ நுண்வடிவ வாசிப்புக் கருவிகள் இருக்குமாயின் அதன் மூலம் அச்சுப் பிரதிகளை எடுக்கலாம்.

வரையறைகள்

★ நிதி வசதி குறைந்த சிறிய நூலகங்களால் பயன்படுத்தப்படுவது.

★ ஒரே நேரத்தில் ஓரிரு பாவனையாளர்களே பயன்படுத்த முடியும்.

★ உற்பத்தி, சேமிப்பு, கையாள்கை என்பவற்றின் தரம் பேணப் படாதுவிடின் மிகச் சுல பமாகப் பழுதடையும், நொருங்கும் தன்மையுடைய நூல்கள், சிறு நூல்கள், செய்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்கள், குறைந்த தரமுள்ள தாள்களில் உருவாக்கப்பட்ட தொடர் வெளியீடுகள், அரசாங்க அறிக்கைகள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றை நகல் எடுப்பதற்கு இது சிறந்த வழிமுறையாகக் கருதப்படுகிறது.

4.3 15 படத்துணுக்குகள், காட்சி வில்லைகள் [Filmstrips and Slides]



படத்துணுக்குகள்

அச்சு வடிவற்ற ஊடகங்களின் ஆரம்பகால வடிவங்களில் ஒன்றாக இவைகருதப்படுகின்றன. குழுரீதியான காட்சிப்படுத்தலுக்கான ஆரம்ப கட்டங்களுக்கு இவை பொருத்தமானவையாகக் கருதப்படுகின்றன. படத் துணுக்குகள் 35mm ஒளிப்படச்சுருளில் நிலைப்படுத்தப்பட்ட படத்தொகுதியை இவை கொண்டிருக்கின்றன. காட்சிவில்லைகள் 2"´ 2" அளவுள்ள கட்டங்களில் தனித்தனி ஒளிப்படச்சுருள் துண்டுகளில் எடுக்கப்படுபவை. இரண்டுமே ஒரேவகையான ஒளிப்படக்கருவியையும், படச் சுருளையும், தகவலையும் கொண்டிருப்பவை. படத் துணுக்குகள் தொடர்ச்சியான படச்சுருள் ஒன்றில் எடுக்கப்பட, காட்சிவில்லைகளோ தனித்தனி துண்டுகளாக வெட்டப்பட்ட படச்சுருளில் எடுக்கப்படுகின்றமைதான் இரண்டுக்குமுரிய வேறுபாடு ஆகும்.

எல்லாப் படத்துணுக்குகளும் 35mm படச்சுருளில் ஒளிப்பட மெடுக்கப்படுவதுடன் ஒற்றை அல்லது இரட்டைக் கட்ட வடிவங்களில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஒற்றை



காட்சி வில்லைகள்

கட்ட வடிவமைப்புகள் நிலைக்குத்து வடிவில் ஒளிப்படமெடுக்கப்படுவதுடன் படக்கட்டத்தின் உயர அகலமானது 3:4 என்ற விகிதத்தில் ஒளிப்படம் எடுக்கப்படுகிறது. இரட்டைக் கட்ட வடிவங்கள் 2:3 என்ற விகிதத்தில் எடுக்கப்படுகிறது. பொதுவாக வியாபார ரீதியில் ஒற்றைக்கட்டப் படத்துணுக்குகளே அதிகம் வழக்கில் உள்ளது.

காட்சி வில்லைகள் பலவித அளவுகளில் கிடைக்கிறது. மிக அதிக பாவனையில் இருப்பது 2"´ 2" அளவாகும். 35mm ஒற்றைக் கட்டப்படங்கள் 35mm இரட்டைக்கட்டப் படங்கள் 127அஅ படங்கள் அனைத்தும் ஒரே அளவுள்ள படச்சுருளில் எடுக்கப்படுவதனால் மூன்று அளவுகளையும் ஒரே உபகரணத்தின் துணை கொண்டு பார்க்க முடியும்.

பாதுகாப்பு நோக்கில் காட்சிவில்லைகளைவிட படத்துணுக்குகளே சிறந்தது. ஏனெனில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு தர்க்கரீதியான ஒழுங்கமைப்பில் பாவிக்கும் நோக்குடன், திட்டமிட்டு ஒரே தொடர்ச்சியான சுருளில் எடுக்கப்படுபவையாகப் படத்துணுக்குகள் இருப்பதனால் பௌதீகரீதியான பாதுகாப்புச் சுலபமாகும். இவற்றை மீள ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை இல்லை. அத்துடன் இவற்றின் விலையும் காட்சி வில்லைகளைவிட 4 அல்லது 5 மடங்கு குறைவாகும். காட்சி வில்லைகள் தனித்தனியாகக் கருத்தில் கொள்ளப் படுவதனால் தனித்தனியாக விநியோகிக்கப்படுவதுடன் இவற்றின் சேமிப்புக்கு கூடுதலான கவனமும் கையாள்கையும் தேவைப்படுகிறது. ஆனால் பாவனை நோக்கில் படத்துணுக்குகளை விட காட்சி வில்லைகளை பாவனையாளருக்கு ஏற்றவகையில் ஒழுங்கு படுத்தவோ புதிதாகச் சேர்க்கவோ விலக்கவோ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு

- ★ படவரைகலை சம்பந்தப்பட்ட தகவல்களை யதார்த்தமான வகையில் மீளுருவாக்கம் செய்வதற்கான சிறந்த வழிமுறை ஒளிப்படப் பிரதியாக்கமே. ஒரு நூலில் உள்ள எழுத்துக் களைவிட படம் தெளிவான விளக்கத்தைத் தரும். அதேசமயம் ஒளிப்படமாக்கப்பட்ட படத்துணுக்குகளோ தாள்களில் உள்ள அச்சுக்களிலிருந்து பெறப்படமுடியாத அம் சங்களை மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் காட்டும்.
- ★ படத்துணுக்குகளை உபகரணம் ஒன்றின் உதவியுடன் ஒரே நேரத்தில் பலர் பார்க்க முடியும்.
- ★ அசையும் தன்மை தேவைப்படாத தகவல்களுக்கு சலனப் படங்களைவிடவும் மிகச் செலவு குறைந்த படத் துணுக்குகளே பொருத்தமானவை.
- ★ சலனப்படங்களைப் போலன்றி படத்துணுக்குகளைப் பார்வையாளனின் தேவைக்கேற்ப நிறுத்தி நிறுத்திப் பார்க்கமுடியும்.

4.32 செவிப்புல சாதனங்கள்

ஒலிப் பதிவுகள் [Sound Recordings]

ஒலிப்பதிவின் வரலாறு அமெரிக்க அறிவியல் அறிஞரான தோமஸ் அல்வா எடிசனின் phonograph என்னும் ஒலிப்பதிவுக்கருவியுடன் தொடங்கி இன்றைய குறு வட்டுகள் வரை நீள்கிறது. வட்டுப் பதிவுகள் நாடாப் பதிவுகள் என இருவகையாக ஒலிப்பதிவுகள் வகைப் படுத்தப்படுகின்றன.

- ★ வட்டுப்பதிவுகள் : 1887ல் எமில் பேளினர் என்ற அமெரிக்க வாழ் ஜேர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்ட கிராமபோன் எனப்படும் தட்டை வட்டுக்களின் வளர்ச்சியே இன்று நாம் பயன்படுத்தும் வட்டுப் பதிவுகளாகும். ஒலிப்பதிவுகளின் அடுத்த மைல் கல் எனப்படுவது 45 rpm 331/3 rpm அளவுகளில் 1988ல் வெளிவந்த நீண்ட நேரம் இயங்கும் பதிவுகளாகும். லேசர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குறுவட்டுகள் 1980களில் பிரபல்யம் பெறத் தொடங்கிவிட்டன.



செவிப்புலச் சாதனங்கள்

- ★ நாடாப்பதிவுகள் [Tape Recordings] கணினிகளாலும் ஏனைய பொறிகளாலும் அறியப்படக்கூடிய, தகவல் பதிவு செய்யப்படுகின்ற, காந்தப் பொருட்களினால் மேற் பூச்சிடப்பட்ட பிளாஸ்ரிக் நாடாக்கள் காந்த நாடாக்கள் எனப்படுகின்றன. 1898ல் Valdemar Poulson என்ற பொறி யியலாளரால் Telegraphone என்ற பெயரில் நாடாப்பதிவு முறை பயன்படுத்தப்பட்டது. 2ம் உலகப்போரின் போது ஜேர்மன் பொறியியலாளர்கள் பிளாஸ்ரிக்காலான காந்த நாடாக்களை விருத்தி செய்தனர். இன்று நாம் பயன்படுத்தும் நாடாக்கள் இவ்வகையைச் சார்ந்தது. ஆரம்ப காலத்தில் திறந்த சுற்றுகளிலான நாடாக்கள் பயன்படுத்தப்பட்டன. இம்முறை மூலம் நாடா பதிவாக்கியில் ஒலி நாடாவைகையினால் சுற்றவேண்டியிருந்தது. 1960களில் ஒலிப் பதிவுகள் கசற் வடிவில் வெளிவரத் தொடங்கிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.33 கட்புல செவிப்புல சாதனங்கள்

4.331 வீடியோ பதிவுகள் [Video Recordings]

வீடியோ என்ற சொல் vision என்ற சொல்லின் முதல் இரு எழுத்தையும் Audio என்ற சொல்லின் இறுதி மூன்றெழுத்தையும் கொண்டு உருவாக்கப்பட்டதொன்று. இதனை ஒளிப்பதிவு என்று தமிழ் விளக்கம் செய்வது சாத்தியமற்றது. ஏனெனில் ஒலி, ஒளி இரண்டும் இணைந்ததே இப் பதமாகும். எனவே வீடியோப் பதிவுகள் என்ற பெயரே இங்கு பயன்படுத்தப்படுகிறது.

4.332 சலனப் படங்கள் [Motion Pictures]

சலனப்பட உருவாக்கம் 1894ல் ஆரம்பித்தது. முதலாவது சலனப்படங்கள் மௌனப்படங்களாகவே தயாரிக்கப்பட்டன. 1895 மார்ச் மாதம் லூமியர் தமது திரைப்பட ஒளிப்பதிவுக் கருவியை பிரான்ஸிசில் செய்து முடித்தனர். அதற்கு 12 மாதங்களுக்கு பின்பே இவை புதிய வெளிப்பாட்டு சாதனமாக அமெரிக்காவில் தோன்றியது. ஆரம்ப கால சலனப்படங்கள் தீப்பற்றக்கூடிய நைற்றோஸ் பொருளிலேயே தயாரிக்கப்பட்டது. எனவே இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட தீயெதிர்ப்பு வழிமுறைகளைப் பயன்படுத்தியே சலனப்படங்களை போட்டுக்காட்ட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வந்தது.

தகவல் வளங்களின் முக்கிய அங்கமாக கருதப்படும் இவை தற்காலத்தில் 70mm, 35mm, 16mm அளவுகளில் விற்பனையில் உள்ளன. 35mm அளவானது மிகப் பெரும்தொகையாக மக்கள் கூட்டத்துக்கு தியேட்டரில் போட்டுக் காட்டுவதற்கென தொழிற்திறன்சார் ரீதியில் தயாரிக்கப்படுபவையாகும். அதேபோல் 70mm வடிவமும் இத்தகைய பயன்பாட்டுக்கென்றே தயாரிக்கப்படுகிறது. 16mm வடிவமைப்பே தகவல் அமைப்புக்கு உகந்த தாகும். இவை வேகம் குறைந்தவை. சிறியவை. ஒரு சுற்று கிட்டத்தட்ட ஓரிரு நிமிடங்களை மட்டுமே கொண்டவை. கேலிச் சித்திரங்கள் வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான பொழுதுபோக்கு அம்சங்களை இவை ஆரம்பத்தில் உள்ளடக்கின. 1940களிலிருந்து கல்விசார் படங்களின் உருவாக்கத்துடன் இவை மதிப்பு வாய்ந்த ஊடகமாக அங்கீகரிக்கப்பட்டன. ஒலி, ஒளி, அசைவு ஆகிய மூன்று அம்சங்களும் இணைந்த வகையில் தகவலைத் தரும் ஒரேயொரு வடிவமாக இவை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பராமரிக்க இலகுவானதாகவும் பொருளாதார ரீதியில் சிக்கனமாகவும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

4.333 பல்லூடகத் தொகுதி (Multimedia Kits)

ஒலி ஒளியுடன் கூடிய படத்துணுக்குகள், காட்சி வில்லைகள் இதற்குள் உள்ளடங்கும். ஒலி நாடாக்களை விடவும் கசற் வடிவம் விரும்பத்தக்கது. அது போன்று படத்துணுக்குகளைவிடவும் காட்சி வில்லைகள் விரும்பத்தக்கது.

ஒளிபுகுவடிவங்கள் (Transparencies)

பாடசாலை நூலகங்களுக்கான சிறந்த தகவல் வளமாக இவை கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.334 இலத்திரனியல் ஊடகங்கள்

இலத்திரனியலை அடிப்படையாகக் கொண்ட தகவலானது 20ம் நூற்றாண்டின் மிக முக்கியமான தகவல் வளமாக அடையாளங் காணப்பட்டிருக்கிறது. இலத்திரனியல் வெளியீட்டினுடைய வரலாற்று முக்கியத்துவமானது எதிர்கால நூலகர்கள், தகவல் வழங்குனர்கள், தகவல் சேகரிப்பாளர்கள், அனைவரதும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். தொலைக்காட்சியானது எவ்வாறு வானொலியின் இடத்தை நிரப்ப முடியாதோ அதேபோன்றே இலத்திரனியல் சாதனமும் அச்சு ஊடகங்களின் இடத்தை நிரப்ப முடியாது. எனினும் இந்தப் புரட்சியானது எதிர்காலத்தில் தகவல் கிடைக்கக் கூடிய வடிவத்தை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

4.3341 இலத்திரனியல் நூல் [Electronic Book]



தனிநபர் கணினியில் அல்லது இலத்திரனியல் நூலுக்கான வாசிப்புக் கருவியில் வாசிப்பதற்கு ஏற்றவகையில் இலக்க வடிவிற்கு மாற்றப்பட்ட அச்சு வடிவ நூல் இதுவாகும். மைக்கல் ஜோய்ஸ் அவர்களின் 'மதியநேரம்' (Afternoon) என்ற முதலாவது மிகைபாட நாவலானது 1987 இல் வெளியிடப்பட்டபோதும் 2000ம் ஆண்டு ஸ்ரீபன் கிங்கினது Riding the Bullet என்ற நாவல் வரும் வரை இலத்திரனியல் நூல் பெருமளவில் பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கவில்லை. 24 மணி நேரத்துக்குள் நான்கு இலட்சம் கணினி பாவனையாளர்களால் அது பதிவிறக்கம் செய்யப்பட்டது. கணினி நேர்முகப் பட்டியலினூடாக சில நூலகங்கள் இலத்திரனியல் நூல்களுக்கான அணுகுகையை வழங்குகின்றன. (Odlis,2006)

4.3342 சீடிரோம் [CDROM]:

லேசர் கதிர்கள் மூலம் பெருமளவு தகவல்களைச் சேமிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்படும் 43/4" விட்டமுள்ள வட்டவடிவ பிளாஸ்ரிக் தட்டு சீடிரோம் எனப்படுகின்றது. வாசிக்க மட்டுமேயான நினைவகத்தைக் கொண்ட இறு வட்டு [Compact Disk Read Only Memory] என இதற்கு பொருள் கொள்ள முடியும். இதன் சேமிப்புத் திறன் எளிமையான வார்த்தையில் கூறுவதாயின் ஒரு சீடிரோம் 3 இலட்சம் பக்கங்களைச் சேமிக்கும் திறன் கொண்டது. இந்த சீடிரோமைப் பயன்படுத்தி நூல்விவரப் பட்டியல்கள், செய்நிரல்கள், கணினி கணிமம்கள், உலகப் படங்கள், இசைத் தட்டுகள், கலைக்களஞ்சியங்கள், தரவுத் தளங்கள், கற்பித்தல் செயற்திட்டங்கள் வீடியோப் படங்கள் போன்றன உருவாக்கப்பட்டு வெளிவருகின்றன. இணையம் என்பது நூலகம் ஒன்றைவிடச் செயற்திறன் கூடியது போன்று சீடிரோம் ஒரு நூலை விடக் கூடுதல் திறனைக் கொண்டது எனக் கருதப்படுகின்றது.

4.3343 கணினி கணிமங்கள் [Computer Software]

ஒரு கணினிப் பொறியமைவின் செயற்பாட்டையும் வன்பொருள்களின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் செய்நிரல்கள் மென் பொருளனை என அழைக்கப்படுகின்றன. கணனி மென் பொருள் அமைப்பு கணிமம் பயன்பாட்டு கணிமம் இரு பெரும் வகைக்குள் உள்ளடக்க முடியும். அமைப்பு கணிமம் பின்வரும் ஐந்து வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.33431 **முறைமைக் கணிமம்** [System Software]

* செயற்படு பொறியமைவு கணிமம் (Operating Systems Software) கணினியின் பெரும்பாலான செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் ஏனைய மென் பொருள்களை மேற்பார்வை செய்யவுமென வடிவமைக்கப்பட்டவை. வட்டுச் செலுத்தியில் செய்நிரல் வட்டு செலுத்தப்படும் போது பொறியமைவு கணிமம்களும் அத்துடன் வட்டுக்களை வடிவமைத்தல் (Format) கோப்புக்களை அழித்தல், வட்டுக் களை பிரதிபண்ணல், கோப்புக்களைப் பாதுகாத்தல், வட்டிலுள்ள கோப்புக்களை ஒழுங்கு படுத்தல், கணினிக்கு விசேட பாவனையாளர் கட்டளைகளை வழங்குதல் போன்ற பின்னணிப் பணிகளையும் இது மேற்கொள்கிறது.
* இணைப்பி, தொகுப்பி, மொழிமாற்றி (Assembler, Compiler, Interpreters): இயற்கை மொழியில் அமைந்த செய்நிரல்களை கணினி விளங்கக்கூடிய செயற்கை மொழிக்கு மாற்றுவதற்கு இவை உதவுகின்றன. கணினி செய்நிரல் தயாரிப்பதற்கு இவை மிகவும் இன்றியமையாதவை.
* புறநிலை கணிமம் [Peripheral Software]:- கணினியிலிருந்து கணினியுடன் இணைக் கப்பட்ட சாதனங்களுக்கு செலுத்தப்படும் அறிவுறுத்தல்களை கட்டுப்படுத்தும் பணியை மேற்கொள்கின்றன. கணினிக்கு அமைக்கப்பட்ட படிக்கட்டுமான நினைவக zip இல் சேமிக்கப்படுகிறது.
* தவறு போக்கும் கணிமம் (Debugging Software): செய்நிரல்களில் தவறுகளை கண்டறிவதற்கு செய்நிரல்களுக்கு இன்றியமையாத மென்பொருளாக இது கருதப் படுகிறது.
* தொகுக்கும் கணிமம் [Editing Software]: செய்நிரலின் தவறுகளை திருத்தவும் மாற்றங்களை மேற்கொள்ளவும் பாவனையாளருக்கு உதவுபவை.

4.33432 **பயன்பாட்டு கணிமம்** [Applications Software]

பின்வரும் வகைப்படும்

* சொல் செயலாக்கும் கணிமம் [Word Processing Software]:- மிகவும் பிரபல்யமான பாவனையாளருக்கு முதன்முதலில் அவசியமாக கருதப்படும் கணிமம். ஆவணங்களை புதுப்பித்தல், திருத்தல், மாற்றியமைத்தல், வடிவமைத்தல் போன்ற பணிகளை இலகுவாக்குகின்றது. தற்காலத்தில் பாவனையிலுள்ள இத்தகைய கணிமம்களில் எழுத்து பிழை திருத்தங்கள், சொற்கருவூலங்கள், கலைச்சொல் அகராதிகள் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* தரவுத்தள கணிமம் [Data Base Software]:- இது சக்திவாய்ந்த மின்னணுவியல் கோப்பு பேழையாகும். (நூலகருக்கு இன்றியமையாத தகவல் வளமாக கருதப்படும்) பதிவேடுகளை பராமரிப்பதற்கு மட்டுமன்றி தகவலை கண்டு பிடிப்பதற்கும் மீட் பதற்கும் உதவுகிறது. கணினி மயப்படுத்தப்பட்ட தரவுத் தளங்களில் உள்ள சொல்ல டைவுகள் மரபுரீதியான அட்டைப் பட்டியல் பாவனையை மெல்ல மெல்ல குறைத்துக் கொண்டு வருகிறது.
* விரிதாள் கணிமம் (Spread Sheet Software) தரவுகளை கட்டுப்படுத்தல், பகுத்தாய்வு செய்தல், பட்டியலாக்கல் போன்றவற்றிற்கு உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தொலைத்தொடர்பு கணிமம் [Telecommunication Software]:- தொலைபேசி ஊடாக தொலைதூரத்தில் உள்ள கணினிகளுடன் தொடர்பு கொள்வதன் பொருட்டு மொடம் ஒன்றை பயன்படுத்துவதற்கு இந்த வகை கணிமம் பாவனையாளருக்கு அவசியமாக கருதப்படுகிறது. மொடத்திற்கு இணைப்பு கொடுப்பதற்கும், தொலைபேசி எண்ணை சுழற்றுவதற்கும், தரவை அனுப்புவதற்கும், பெறுவதற்கும், கோப்புக்களை ஏற்றி இறக்குவதற்குமான அறிவுறுத்தல்களை கணினிக்கு வழங்குகிறது.
* ஒருங்கிணைந்த கணிமம் [Integrated Software]:- சொல் செயலாக்க செய்நிரல், Spread Sheet செய்நிரல், தரவுத்தள செய்நிரல், தொலைத்தொடர்பு செய்நிரல், வரைகலை செய்நிரல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒற்றை மென் பொருள் உற்பத்தி சாத்தியமாகி சகாப்தங்கள் கடந்துவிட்டது. இதன் மூலம் ஒரு செய்நிரலுக்கு பயன்படும் கட்டளையை இன்னொரு செய்நிரலுக்கு சமப்படுத்தவும், ஒரு செய்நிரலில் உள்ள தகவலை இன்னொன்றுக்கு மாற்றவும், இன்னொரு தகவலுடன் இணைக்கவும் முடியும். அதே சமயம் ஒரு செய்நிரலை பயன்படுத்திக் கொண்டே இன்னொரு செய் நிரலை பயன்படுத் தவும் முடியும்.
* வரைகலை கணிமம் [Graphic Software] :- இதற்குள் கட்புலம், உயிரூட்டல், கோட்டுப்படங்கள், விளக்கப்படங்கள், ஓவியங்கள், சித்திரம் தீட்டுதல் என்பன உள்ளடங்குகிறது.
* பயிற்சி கணிமம் [Drill and Practice Software]:- கணிதம், எழுதுதல் போன்ற திரும்பத் திரும்ப செய்துபார்க்கும் செயற்பாடுகளில் திறனை வளர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்டவை.
* கற்பித்தல் கணிமம் [Tutorial Software]:- இவை பாவனையாளர் ஒருவருக்கு புதிய திறன் ஒன்றை கற்பிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியரின் உதவியின்றி அறிவை பெறும் முயற்சியில் தனித்தியங்கும் கற்கையாளரை இவை உருவாக்குகிறது.
* விளையாட்டு கணிமம் [Game Software] கணினி விளையாட்டுக்கள் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள், கல்விசார் பயிற்சிக்கான விளையாட்டுக்கள் வரை பலதரப்பட்டதாக அமைகிறது. விளையாட்டுக்கள் பாவனையாளரை அதற்குள் மூழ்கடிப்பதுடன் சுற்றுப்புறச் சூழலிருந்து முழுவதாக விடுபட்டு கணினியின் முன்னிலையில் தாம் இருக்கும் நினைப்பே இல்லாமல் செய்கிறது. விளையாட்டுக்களிலேயே மூழ்கச் செய்கிறது.
* தூண்டல் கணிமம் [Simulation Software]: கணினி விளையாட்டு போன்றே தூண்டலும் உண்மையான வாழ்க்கை செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்பை தருவதுடன் புதிதாகப் பெறுகின்ற அறிவை பிரயோகிக்கவோ, முயற்சிக்கவோ, பரிசோதிக்கவோ உதவுகிறது.
* ஆசிரிய கணிமம் [Authoring Software]: பாவனையாளரின் குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்யக்கூடிய கணிமம் உற்பத்தி வர்த்தகரீதியில் இல்லாத காரணத்தால் ஆசிரிய கணிமம் கணினி செய்நிரல் ஒன்றை உருவாக்குவதற்கான உறைபொதியை (Shell) வழங்குகிறது. தனிப்பட்ட ரீதியில் ஒரு செய்நிரலை உருவாக்குவதற்கு பாவனையாளர் ஒரு கணினி செய்நிரலாளராக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் பண்ணுவதே இந்த மென்பொருளில் கிடைக்கும் நன்மையாகும். சில ஆசிரிய செய்நிரல்கள் ஒலி, ஒளி தகவல்களை உருவாக்கவும் பயன்படுத்தவும் ஏற்ற ஆற்றலை கொண்டிருக்கின்றன.

* மேசைப்பதிப்பு வெளியீட்டு கணிமம் [Desktop Publishing Software]: தொழில் திறனுடன் கூடிய தரம் வாய்ந்த செய்திக் கடிதங்களை உருவாக்கவோ பல தந்தி ஆவணங்களை உருவாக்கவோ பாவனையாளருக்கு உதவுகிறது.
* ஒலி - ஒளி கணிமம் [Audio / Video Software]: ஒலி, ஒளிப்பதிவுகளை உருவாக்கவோ, கட்டுப்படுத்தவோ, இயக்கவோ பயன்படும் கணிமம். கணினியின் Versatility ஐ இது கணிசமான அளவு அதிகரிக்கிறது.
* பல்லூடக கணிமம் [Multimedia Software]:- அச்சுக்கள் வரைபுகள், வண்ணங்கள், படங்கள், காட்சி வில்லைகள், ஒலி, அசைவு போன்ற அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்படும் செய்நிரல்களாக இவை இருக்கின்றன.

4.3344 **தரவுத் தளங்கள்** [Databases]

தகவலை வேகமாகவும் இலகுவாகவும் தேடவும் மீள்பெறுகை செய்யவும் ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும், தரவுத்தள முகாமைத்துவ முறைமை மென்பொருளின் உதவியுடன் நிர்வகிக்கப்படுவதாகவும் உள்ள சீரான வடிவமைப்பைக் கொண்ட சிறப்புத் துறைசார்ந்த அல்லது பொருட்புலம் சார்ந்த பதிவேடுகளை உள்ளடக்கிய நூல்விபரப் பதிவேடுகள், சாராம்சங்கள், முழு விடயத்தையும் உள்ளடக்கிய ஆவணங்கள், வழிகாட்டிப் பதிவுகள், விம்பங்கள், புள்ளிவிபரங்கள் போன்ற அவ்வப்போது ஒழுங்காகப் புதுப்பிக்கப்படும் இலத்திரனியல் தகவல்களின் மிகப் பெரிய கோவை தரவுத் தளங்கள் எனப்படுகின்றது (Odlis).

பட்டியல்கள், பருவ இதழ் சொல்லடைவுகள், சாராம்சச் சேவைகள், பதிவு செய்யப்பட்டவர்களும் நூலக அலுவலர்களும் மட்டுமே பயன்படுத்தக்கூடிய வகையில் வரையறுக்கப்பட்ட அணுகுகையைக் கொண்டதாக வருடாவருடம் உரிம ஒப்பந்தங்களின் கீழ் வெளியிடப்படுகின்ற உசாத்துணை வளங்கள் போன்றவையே பெரும்பாலும் நூலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற தரவுத்தளங்களாகக் கருதப்படுகின்றன.

4.3345 **விளையாட்டுகளும் போலச் செய்தல்களும்** [Games and Simulations]

கட்டமைக்கப்பட்ட ஒரு செயற்பாட்டினூடாக அறிவு, தகவல் அனுபவம் போன்றவற்றைப் பெறும் பொருட்டு விளையாட்டுகளும் போலச் செய்தல்களும் தெரிவு செய்யப்படுகின்றன. இவற்றைத் தெரிவு செய்வதற்கான பிரதான காரணம் பொழுது போக்கே எனினும் கற்றல் அனுபவங்களை வழங்குவதற்கான மிகச் சிறந்ததோர் ஊடகமாகவே இவை கருதப்படுகின்றன. விளையாட்டுகளையும் போலச் செய்தல்களையும் மதிப்பீடு செய்வதற்கு இவற்றின் பண்புகளையும் தொழிற்பாடுகளையும் விளங்கிக் கொள்வதன் மூலமே இத்தகைய சாதனங்களின் நோக்கங்களை அறிந்து அதற்கேற்ப இவற்றின் தெரிவில் கவனம் செலுத்த முடியும்.

விளையாட்டு என்பதன் மூலம் அமையப்பெறும் பிரதான அம்சம் எதிர்பாராத நிகழ்வு அல்லது வாய்ப்பு. விளையாட்டில் பங்கு கொள்பவருக்கு திறமை இருக்கிறதோ இல்லையோ இந்த வாய்ப்பினை அல்லது எதிர்பாராத நிகழ்வினைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவருக்கு இல்லை. விளையாட்டு முடிவுக்கு வரும்போது அல்லது எதிர்பாராத திருப்பத்தை அடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வெற்றியாளரும் தோல்வியாளரும் இனங்காணப்படுகின்றனர். விளையாட்டுகள் மகிழ்வை மட்டும் தருவதில்லை. அவை ஒரு பொருட்துறையை அல்லது ஒரு தரவை அதுவுமன்றி ஒரு கருத்து நிலையைக் கற்றுக்கொள்ளவும் திறனை விருத்தி செய்யவும் திறனில் தேர்ச்சி அடையவுமான சிறந்த வழிமுறையாக கருதப்படுகின்றன.

போலச் செய்தல் [Simulations]

போலச் செய்தலானது உண்மை வாழ்க்கைநிலையை அடிப்படையாகக் கொண்டது. விளையாட்டுப் போலன்றி இங்கு பங்கு பெறுபவரின் நடவடிக்கையே அனைத்தையும் தீர்மானிக்கின்றது. பங்கு பெறுபவரின் ஆற்றலும் திறனும் நேரடியாக போலச் செய்தலின் முன்னேற்றத்தைப் பாதிப்பதுடன் அதன் இறுதிப் பலனிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. தனிநபர் ஒருவர் இன்னொரு தனிநபருடன் வாய்மொழி மூலமோ உபகரணத்தினூடாகவோ ஒரு செயற்பாட்டை நிகழ்த்திக்காட்டும் செய்முறையில் ஊடாட்டம் மேற்கொள்வதை இது கருத்தில் கொள்கிறது.

போலச் செய்தல் என்ற பதம் 2ம் உலகப்போரில் தோற்றம் பெற்ற ஒரு கருத்து நிலையாகும். விமானிகளுக்குப் பயற்சியளிக்கும் நோக்குடன் விமான ஓட்டுதலின் முக்கிய செய்முறைகளை விபரிப்பதற்கு இராணுவத்தினரால் இது பயன்படுத்தப்பட்டது. பயற்சியின் ஒரு பகுதியாக விமானி விமானத்தை மிக மோசமான காலநிலையும் இருட்டும் உள்ள ஒரு சூழலில் தரையிறக்க வேண்டியிருக்கும். இத்தகைய பாதிப்பான சூழலில் விமானம் ஓட்டும் செய்முறை ஆபத்தானதும் உயிரிழப்பை ஏற்படுத்துவதுமாகும். இத்தகைய அபாயத்தை தடுக்கும் முகமாக அபாயச் சூழல் ஒன்றை செயற்கையாக உருவாக்கி சாதாரண ஒரு நிலையிலேயே பாதிப்பு மிக்க சூழல் ஒன்றில் தரையிறக்கம் எந்தளவுக்கு பாதிப்பு மிக்கதாக இருக்குமோ அப்படியொரு பாதிப்புமிக்க தரையிறக்கமொன்றை விமானியால் ஏற்படுத்த முடியும். பெரும்பாலான விளையாட்டுப் பூங்காக்களில் இன்று நாம் காணும் சிறு மோட்டார் வாகனங்கள் போலச் செய்தலின் ஒரு வடிவமே. சிறுவரோ அல்லது வளர்ந்தோரோ மோட்டார் வாகனம் ஒன்றை ஓட்டும் அத்தனை அனுபவங்களையும் இதன்மூலம் பெறுகின்ற அதே சமயம் மோட்டார் வாகன ஓட்டுதல்களின் போது ஏற்படக்கூடிய விபத்துகளின் பாதிப்பு எதையுமே எதிர் கொள்ளமாட்டார்கள்.

4.3346 **இணையம்** [Internet]

Interconnection Network என்ற ஆங்கிலப் பதத்தின் சுருக்கமான இன்டர்நெட் எனப்படும் இணையமானது ஒரு தகவல் தொடர்பு வலையமைப்பு ஆகும். இலத்திரனியல் தபால், இணையத் தளங்கள், இணைய வர்த்தகம் என்ற முப்பெரும் வசதிகளைக் கொண்டது இணையமாகும். இதிலுள்ள இணையத் தளங்கள் கிட்டத்தட்ட நூலகத்துக்குச் சமமானதாகும். இதில் ஒரு தனி நபரோ, நிறுவனமோ தாம் விரும்பும் செய்திகளை வடிவமைத்து உலகம் முழுவதும் பாவனைக்கு விடலாம். எழுத்து மூலத் தகவல் மட்டுமன்றி புகைப்படங்கள், உருவங்கள், ஒலிப்பதிவுகள், வீடியோப் பதிவுகள் போன்றவையும், பத்திரிகையில் வெளிவரும் செய்திகள், அறிக்கைகள், ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் இணையத்தில் பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தின் பிரதான வசதிகள்

1. இ - கொமர்ஸ் எனப்படும் மின்னியல் வர்த்தகம்
2. இ - மெயில் எனப்படும் மின்னியல் தபால்
3. வெப் எனப்படும் வலைத் தளங்கள்

மின்னியல் வர்த்தகம்

இணையத்தில் எதிர்காலத்தில் அதிக தாக்கத்தை விளைவிக்கக்கூடியதும், பெரும் இலாபத்தை அளிக்கக்கூடியதுமான தொழினுட்பம் எதுவென 2001ம் ஆண்டு நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்துக் கணினி உலகின் முதன்மை நிறு வனமான மைக்றோ சொவ்ற் நிறுவனத்தின் உரிமையாளர் பில் கேற்ஸிடம் கேட்டபோது அவர் அளித்த பதில் மின்னியல் வர்த்தகம் என்பதே. தகவல் தொழினுட்பத் துறையில் உயர்நிலை வகிக்கும் நாடுகளின் முதலீட்டின் பெரும்பகுதி இவ்வர்த்தகத்துக்கே செலவிடப்படுகின்றது. புத்தகமோ, சீடீக்களோ, ஆபரண வகைகளோ, சாப்பாட்டுச் சாமான்களோ வீட்டிலிருந்து கொண்டே இணையத்தினூடாக வாங்கவோ, விற்கவோ முடியும்.

மின்னியல் தபால்

ஆரம்பகாலத்தில் ஒருவருக்கோ அல்லது ஓரிடத்திற்கோ வேறு பிரதேசத்திற்கோ, வேறு நாட்டிற்கோ தகவலைத் தெரியப்படுத்துவதாயின் அதற்கான காலம், செலவு என்பன அதிகமாகவும், குறிப்பிட்ட தினத்தில் சேர்க்க முடியாத நிலைகளும் காணப்பட்டன. அவற்றினை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல புதிய புதிய பரிமாறல் நடைமுறைக்கு வந்தன. அதாவது கால் நடை தொடக்கம் 'ரயில், கப்பல், விமானம்' புதிய பரிமாறல்களின் உச்ச வெளிப்பாடே இந்த இலத்திரனியல் தபால். இவற்றின் செயற்பாடு அளப்பரியது, செய்தியையோ அல்லது படங்களையோ உரிய வடிவில் குறித்த நேரத்தில் உரியவர்களுக்குத் தெரிவிக்க முடியும்.

இதற்கு அதிகளவு நேரத்தை வீணாக்கத் தேவையில்லை, தகவல் உரியவர்களிடம் சென்றடைந்திருக்குமோ என்றெல்லாம் யோசிக்கத் தேவையில்லை. அனுப்பிய சில நிமிடங்களிலேயே தகவல் கிடைத்ததற்கான பதிலையும் பெறமுடியும். இதன் மூலம் செய்தியினைப் பரிமாறுவதற்கு மொழி ஒரு தடையல்ல. இதிலுள்ள இணைத்து அனுப்பும் (Attachment) வசதியைப் பயன்படுத்தி தெரிவிக்க வேண்டிய தகவலைத் தமிழில் வடிவமைத்து தனிக் கோவையாக இணைத்து தகவல் சேரவேண்டியவர்களின் முகவரிக்கு அனுப்பி அதற்கான பதிலையும் உடனே பெறக்கூடியதாக இருக்கும்.

வலைத் தளங்கள்

இணையத்தின் நூலகம் எனப்படக்கூடியளவுக்கு பலதரப்பட்ட தகவல்களையும் சேமித்து வைத்திருப்பது வலைத் தளம் எனப்படுகின்றது. நூல்களை வாசிப்பது நாகரிகமற்றது என்ற கருத்து மெல்ல மெல்ல உருவாகும் காலம் இது. புத்தகப்பூச்சி என்ற சொல்லுக்குப் பதிலாக இணையபூச்சி? என்ற புதிய சொல்லைத் தேடும் காலத்தை எமக்கு உருவாக்கி இருப்பது வலைத் தளங்களின் அதிகளவான பயன்பாடு என்றே கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கிலுமுள்ள நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், தனிப் பட்ட நபர்கள் போன்றோர் தத்தமது விபரங்களை இணையத்தில் தங்களுக்கெனத் திறந்துள்ள ஒரு பிரிவில் பதிந்து வைத்திருப்பார்கள். இப்பக்கங்களே வலைத் தளங்கள் எனப்படு கின்றது.

வலைத் தளங்கள் என்பதைக் கிட்டத்தட்ட ஒரு நூலகம் என்றே கூற முடியும். சாதா ரணமாக ஒரு நூலகத்தில் எமக்குத் தேவையான நூலின் ஒரு பிரதி மட்டுமே இருக்கும். இதையும் யாராவது இரவல் பெற்றுச் சென்று விடுவர். அல்லது இன்னொரு வாசகர் நூலகத்திலேயே வைத்துப் படித்துக் கொண்டிருப்பார். இந் நிலையில் நாம் அதைப் பயன் படுத்த முடியாமல் இருக்கும். இணைய நூலகத்தில் ஒரு நூலை எத்தனை பேர் வேண்டு மென்றாலும் படிக்கலாம்.

எரிமலை, சூரியன், ஆனந்தவிகடன், யூனியர் விகடன், பதிவுகள், கல்கி, அரும்பு, மங்கையர் மலர், கணையாளி, தாயகம், மகிழ்இனி போன்றவை இணையத்தினூடாகப் படிக்கக் கூடிய சஞ்சிகைகளில் சிலவாகும். உலகத் தமிழர், தென்றல், பி.பி.சி. தமிழோசை போன்றவை இணையத்தினூடாகச் செய்தி வழங்கும் வானொலிகளில் சில. உதயன், வீரகேசரி, புதினம், தினக்குரல், ஈழமுரசு, சுடரொளி, தினகரன், தினத்தந்தி, விடுதலை போன்றவை இணையத்தினூடாகப் பார்க்கப்படக்கூடிய பத்திரிகைகளில் சில. ரி.ரி.என், தமிழ், தீபம், சிகரம், சக்தி தொலைக்காட்சி போன்றவை இணையத்தினூடாக நாம் பார்க்கும் தொலைக்காட்சி சேவைகளில் சில.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஐந்து

முதல்நிலைத் தகவல் வளங்கள்

5.0 அறிமுகம்

உண்மையான ஆய்வு அபிவிருத்திகளை, அவற்றின் புதிய பிரயோகங்களின் விளக்கங்களை, அல்லது பழைய கருத்துக்களுக்கான புதிய விளக்கங்களை உடனுக்குடன் தாங்கி வரும் வெளியீடுகள் அனைத்தும் முதல்நிலைத் தகவல் வளங்கள் எனப்படுகிறது. ஆய்வாளர் ஒருவரால் உருவாக்கப்படுகின்ற புதிய தகவல்கள் அனைத்துமே இந்த முதல்நிலைத் தகவல் வளங்களின் ஊடாகக் குறிப்பிட்ட சமூகத்தைச் சென்றடைகிறது. ஒழுங்கு படுத்தப்படாத வளங்களாக இவை இருப்பதனால் இதனைப் பயன்படுத்துவது எளிதல்ல. இவற்றின் பூரண பயன்பாட்டிற்குப் பாவனையாளர் இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலேயே பெருமளவில் தங்கியிருக்க நேரிடும். மிக முக்கியமான தகவல் மூலாதாரங்களாகக் கருதப்படும் இவ் வளங்கள் ஆய்வாளர்களுக்குப் பின்வரும் வகைகளில் உதவுகின்றன:

* புதிய அபிவிருத்திகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிவிப்பதன் மூலம் அத்துறை தொடர்பாக அதிக அறிவு நிலையில் இருக்க உதவுதல்.
* ஒரே மாதிரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுத்தல்.
* புதிய தகவல்களை உருவாக்குவதற்கு ஏனையோர்களுக்கு உதவுதல்.

ஒரு குறிப்பிட்ட துறையின் வளர்ச்சி வீதமானது அத்துறை சார்ந்து வெளிவரும் முதல்நிலைத் தகவல் வளங்களின் தொகையிலேயே பெருமளவு தங்கியுள்ளது. முதல் நிலைத் தகவல் வளங்கள் பின்வரும் வடிவங்களில் வெளியாகின்றன.

5.1 தொடர் வெளியீடுகள் (Serials)

ஒழுங்கான கால இடைவெளியில், சீரான வடிவத்தில், நிலையான தலைப்புடன் கூடியதாக, பகுதிகளாகவோ, தொடராகவோ வெளியிடப்படும் எந்தவொரு வெளியீடும் பருவ வெளியீடுகள் எனப்படும். செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், வருடாந்த வெளியீடுகள், தொடர் நூல்கள், சங்க நடவடிக்கைக் குறிப்பேடுகள், நிறுவன வெளியீடுகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. எஸ்.ஆர் இரங்கநாதனின் கருத்துப்படி பருவ இதழ்கள் என்பவை சொல்லடைவாக்க, சாராம்சப் பருவ இதழ்கள் உட்பட பருவ இதழ்களையும், தொடர் வெளியீடுகளையும் உள்ளடக்குகின்றன. ஸ்ரீலங்கா ரெலிகொம் தொலைபேசி வழிகாட்டி போன்ற வழிகாட்டிகளும் Europa ஆண்டு நூல் போன்ற ஆண்டு நூல்களும் தொடர் வெளியீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன. அமெரிக்காவில் ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளியிடப்படும் பருவ இதழ்களும் இச்சொல்லால் குறிக்கப்படுகிறது.

5.11 தொடர் (Series)

குறிப்பிட்ட பொருட்துறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொகுதிகள் கால அடிப் படையில் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே வெளியீட்டாளரினால், ஒரே விலையில், ஒரே வடி வத்தில், ஒழுங்கற்ற கால இடைவெளியில், தொடர்த் தலைப்புகளை நூலின் முன்பக்கத்திலோ அல்லது தலைப்புப் பக்கத்திலோ கொண்டதாக வெளியிடப்படும் தொகுதிகள் தொடர் எனப்படுகின்றது.

5.12 பருவ இதழ்கள் (Periodicals)

குறிப்பிட்ட தலைப்பினை உடையதாகவும் ஒழுங்கான கால இடைவெளியில் வெளியீடு செய்யப்படுவதாகவும் இறுதி இதழ் எப்போது வெளிவரும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாததுமான வெளியீடே பருவ இதழ் எனப்படுகிறது [Harrod]. செய்தியறிக்கைகள், சஞ்சிகைகள், செய்திக் கடிதங்கள், மாநாட்டு குறிப்பேடுகள் போன்ற பெயர்களில் வெளியாகும் வெளியீடுகள் அனைத்தும் பருவ இதழ்கள் என்ற பொதுப் பெயருக்குள் அடங்குகின்றன. பெரும்பாலான ஆரம்ப இலக்கியங்கள் யாவும் பருவ இதழ் வடிவிலேயே வெளியாகின்றன. அறிவியல் ரீதியான தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கான பிரதான தொடர்பு சாதனமாகக் கருதப்படும் இவை உண்மையான ஆய்வுகளை உடனுக்குடன் அறிக்கைப்படுத்துகின்றன. இவற்றில் வெளிவரும் தகவல்கள் நூல்களில் உள்ளவற்றிலும் பார்க்கப் புதியவையாகும்.

பருவ இதழ்களை அவற்றின் உள்ளடக்கத்தைக் கொண்டு பொதுப்பருவ இதழ்கள், பொருட்பருவ இதழ்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். குறிப்பிட்ட ஒரு பொருட்துறை சார்ந்ததாக இல்லாமல் அரசியல், ஆக்க இலக்கியங்கள், விளையாட்டு, சினிமாச் செய்திகள், விளம்பரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி வெளிவருபவை பொதுப்பருவ இதழ்களாகும். எ-டு: இந்தியா ருடே, தாயகம், மல்லிகை போன்றவை. காத்திரமான ஆக்கங்களைக் கொண் டிராது செய்தித் துணுக்குகள், பொழுது போக்கு அம்சங்கள் போன்றவற்றைத் தாங்கி வரும் பருவ இதழ்கள் சஞ்சிகைகள் என அழைக்கப்படுகின்றன.

பருவ இதழ்களை அவற்றின் கால அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

நாளிதழ்கள்	:	உதயன், ஈழநாடு
வார இதழ்கள்	:	சண்டே ரைம்ஸ் வீரகேசரி வாரமலர்
இருவார இதழ்கள்	:	சரிநிகர், தமிழ் கம்பியூட்டர்
மாத இதழ்கள்	:	மல்லிகை, தாயகம், பொருளியல் நோக்கு
இரு மாத இதழ்கள்	:	நான், நூலகவியல்
காலாண்டு இதழ்கள்	:	ஜீவ சக்தி
அரையாண்டு இதழ்கள்	:	புவியியலாளன்
ஆண்டு இதழ்கள்	:	செந்தழல், நுட்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு

- ★ குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த அண்மைக்காலத் தகவல்களை வழங்குதல்.
- ★ பருவ இதழ்களுக்கெனத் தயாரிக்கப்படும் வருடாந்தச் சொல்லடைவுகளினூடாகக் குறிப்பிட்ட காலப்பகுதியில் குறித்த பருவ இதழானது எந்தெந்தப் பொருட்துறை சார்ந்த ஆக்கங்களை உள்ளடக்கியது என்ற விபரத்தை அறிவதற்கு உதவுதல்.
- ★ குறிப்பிட்ட சில பருவ இதழ் வெளியீட்டாளர்கள் தாம் வெளியிடும் தமது பருவ இதழ்கள் தொடர்பாகப் பாவனையாளரது கோரிக்கைகளுக்குப் பதிலளிப்பதற்கான நூலக/ தகவல் சேவைகளை வழங்குகின்றனர்.

வரையறைகள்

- ★ மிக ஆழமான பொருட்துறை சார்ந்து வெளிவரும் பருவ இதழ்கூட அத்துறை சார்ந்த அனைத்துத் தகவலையும் உள்ளடக்குமென எதிர்பார்க்க முடியாது.
- ★ பருவ இதழ் ஒன்றின் பெயரில் மாற்றங்கள் ஏற்படலாம். ஒரு பருவ இதழ் பல்வேறு புதிய பருவ இதழ்களாக உருவாகலாம். பருவ இதழ் வெளியீடு இடைநிறுத்தப் படலாம்.
- ★ ஆய்வுத் தகவல்களை வழங்கும் முதல்நிலைப் பருவ இதழ்கள் என்ற வகையில் எமது சமூகத்தில் வெளிநாட்டு ஆய்வு முயற்சிகளை வெளிக் கொணருகின்ற வெளியூர்ப் பருவ இதழ்களின் ஈட்டலே அதிகமாக உள்ளது. உள்ளூர் ஆய்வு முயற்சிகளுக்கான அடிப்படையை வழங்குதல், வழிகாட்டுதல் என்பவற்றுடன் இவற்றின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது.
- ★ உள்ளூர் பருவ இதழ்களைப் பொறுத்து பெரும்பாலானவை ஆய்வு முயற்சிகளைப் பெரிதும் உள்ளடக்காத, தகவல்களைத் தொகுத்து வழங்குகின்ற இரண்டாம் நிலைப் பருவ இதழ்களாகவோ அல்லது இலக்கிய வெளியீடுகளாகவோ இருப்பதனால் ஆய்வு முயற்சிக்கு இவை வழங்கும் பங்களிப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இனங் காணப்பட்டிருக்கிறது.

5.13 செய்தித்தாள்கள் (News Papers)



நாளாந்த அல்லது வாராந்த ரீதியாக மிக அண்மைக் காலச் செய்திகளைத் தாங்கி வரும் வெளியீடுகள் இவ் வகைக்குள் அடங்கும். செய்தித்தாள் என்ற சொல்லானது 1670ம் ஆண்டு முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு முன்னர் 'கொரன்ரோ' என்ற பெயரிலும் பின்னர் செய்திநூல் எனவும் அழைக்கப்பட்டது. தமிழ்ச்சமூகத்தின் மிக முக்கியமான வாசிப்புச் சாதனமாகக் கருதப்படுவது செய்தித்தாள்களாகும். நேற்றைய நாட்டு நடப்புகளை இன்றைய நாளிதழில் பார்க்கக்கூடியதாக இருக்கும் என்பதால் காலையில் எழுந்ததுமே நாளிதழும் கையுமாக இருப்பவர்களை எம்மிடையே அதிகம் பார்க்கலாம். இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அச்சிடுதல் தொழினுட்பம் மிகவும் செலவு கூடியதாக இருப்பதனால் எமது சமூகத்தில் இன்றைய செய்தித்தாள் நாளைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைத் தாள் என்ற மேலைத்தேய கருத்துநிலை பொருத்தமானதல்ல. ஏனெனில் இத்தகைய செய்தித்தாள்கள் உடனே படித்துவிட்டுப்போகும் செய்திகளை மட்டுமன்றி மாணவரின் பாடவிதானம் சார்ந்த தகவல்களையும் ஆய்வு முயற்சிகளுக்கு உதவுகின்ற பலதரப்பட்ட பொருட்துறை சார்ந்த கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றையும் உள்ளடக்கும் தகவல் வளமாகவே காணப்படுகின்றன. எனவே இவற்றை கிழித்து எறியாது இவற்றிலுள்ள முக்கியமான தகவல்களையும் செய்திகளையும் வெட்டியெடுத்துப் பொருட்துறை சார்ந்து ஒழுங்குபடுத்தி வைக்கும் போது இதனது ஆய்வுப் பெறுமதி அதிகரிக்கும் என்பது சிலருக்கே தெரிந்த உண்மையாக இருக்கிறது. இலங்கைத் தேசிய நூலகமானது பத்திரிகைத் துணுக்கு களுக்கென கணிசமான சேகரிப்பை மிகக் கவனமாகப் பராமரிப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

5.14 ஆண்டு இதழ்கள் (Annuals)



குறிப்பிட்ட துறை சார்ந்த நிறுவனங்களால் வருடாவருடம் வெளியாகும் ஆண்டு இதழ்கள் பருவ இதழ்களாகக் கருதப்பட்டு பருவ இதழ்களுடன் சேர்க்கப்படக் கூடும். எமது பிரதேசத்தில் சமூக அறிவியல் துறை சார்ந்தும், கல்வி நிறுவனம் சார்ந்தும், இந்து சமய ஆலயங்கள் சார்ந்தும் வெளியிடப்படும் ஆண்டு மலர்கள் மிக முக்கிய ஆய்வு வளமாகக் கருதப்படுகின்றன. பொது ஆண்டு மலர்களில் கணிசமானவை சனசமூக நிலையங்கள் சார்ந்தவையாகும். இதழியல், இலக்கியம் ஆகிய துறைகள் சார்ந்த ஆண்டு மலர்களும் கணிசமான அளவில் காணப்படுகின்றன.

5.15 சிறப்பு மலர்கள் (Souvenirs)



ஆராய்ச்சி நோக்கில் பார்க்கும் போது ஆய்வுக் கட்டுரைகளுக்கு அடுத்ததாக வாசகரின் பயன் பாட்டுக்கு உதவும் இன்னோர் உள்ளூர் சார்ந்த முக்கிய வளமாகச் சிறப்பு மலர்கள் காணப்படுகின்றன. தனிப்பட்ட மனிதர் கள் அல்லது நிறுவனங்கள் சார்ந்து கொண்டாடப்படும் ஆண்டு விழா, பொன் விழா, வெள்ளி விழா போன்ற விழாக்களுக்கான சிறப்பு மலர்களாகவோ அல்லது நினைவு மலர்களாகவோ இவை இருக்கலாம். பொது ஆண்டு மலர்களில் கணிசமானவை சனசமூக நிலையங்கள், இதழியல் துறை சார்ந்தவை. இலக்கிய ஆண்டு மலர்களும் கணிசமான அளவுக்குக் காணப்படுகின்றன. ஆண்டு மலர்கள் பலதரப்பட்ட அறிஞர்களது கட்டுரைகளையும் உள்ள டக்கியிருப்பதனால் ஆராய்ச்சியாள ருக்குப் பெரிதும் பயன்படுவதாய் உள்ளன. பெருந் தொகை செலவழித்து அச்சுவடிவில் கொண்டு வருவதற்கான பொருளாதார மார்க்கமோ அதைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்போ குறைவாக இருத்தல், தனது ஆய்வு முயற்சி ஒன்று அந்த ஆய்வுத்துறை சார்ந்த பருவ இதழ்களில் வெளியிடப்பட்டால் தான் அதற்கு மதிப்பு உண்டு என்ற கருத்துநிலை கட்டுரையாசிரியருக்கு இல்லாதிருத்தல், தத்தமது துறைசார்ந்த செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவதிலும் பார்க்க சமூகத்தின் மதிப்பு மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களின் ஆக்கங்கள் தமது சிறப்பு மலரில் வருவது தான் தமக்குச் சிறப்பு என்ற கருத்துநிலையில் சிறப்பு மலர்களின் வெளியீட்டாளர் விடாப்பிடியாக இருத்தல் போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கின்ற சமூகம் ஒன்றின் ஆய்வு முயற்சிகளில் கணிசமான அளவைப் பதிவாக்கும் வாய்ப்பை இத்தகைய சிறப்புமலர் வெளியீடுகளே வழங்குகின்றமை யால் இவற்றைத் துறை சார்ந்தவை என ஒதுக்கிவிடுவது பயன்பாட்டு நோக்கில் பாதகமானது. எடுத்துக்காட்டாக சனசமூக நிலையம் ஒன்றின் சிறப்புமலர் சனசமூகநிலையத்தின் செயற்பாடுகளைத் தான் பேசும் என்று அதனை ஒதுக்கிவிடமுடியாது. அதில் பட்டப் பின்படிப்புக்கு உதவக்கூடிய ஆய்வுக் கட்டுரைகளே அதிகம் காணப்படும். எனவே இவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய வளமாக நூலகத்துறையால் இனங்காணப்பட்டிருக் கின்றன.

5.16 செய்திக் கடிதங்கள் (News Letters)

நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பருவரீதியாகத் தாங்கிவரும் வெளியீடுகள். இவை மாத ரீதியாகவோ அல்லது காலாண்டு ரீதியாகவோ வெளியிடப்படலாம்.

5.17 மாநாட்டுக் குறிப்பேடுகள் (Conference Proceedings)



ஒரு சமூகத்தின் அல்லது நிறுவனத்தின் சந்திப்புகள் அல்லது கூட்டங் களின் அறிக்கையாகவோ அல்லது சுருக்கமாகவோ வழங்கப்படுகின்ற அல்லது படிக்கப்படுகின்ற கட்டுரைகளின் வெளியிடப்பட்ட பதிவேடு இதுவாகும். இது நூல் வடிவிலோ அல்லது பருவ இதழ் ஒன்றில் கட்டுரை வடிவிலோ அதுவுமன்றி கையெழுத்துப் பிரதி வடிவிலோ இருக்கலாம். பெரும்பாலான மாநாட்டுக் குறிப்பேடுகள் பருவ இதழ்க் கட்டுரை வடிவில் அமைந்திருக்கும்.

5.2 அறிக்கைகள் (Reports)



குறிப்பிட்ட செயற்திட்டம் ஒன்றில் மேற்கொள்ளப் பட்ட பணிகள் தொடர்பான தகவல்களை ஆய்வுப் பணியாளர்கள் தமது துறைசார்ந்த ஆர்வலர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் தொகுத்துத் தயாரிக்கப்படும் வெளியீடே அறிக்கைகள் எனப்படுகிறது. நடைமுறை யில் இருக்கும் ஆய்வு அபிவிருத்தித் திட்டங்களின் முடிவுகளை வெளியிடுவதே அறிக்கைகளாகும். ஒரு நாட்டில் அரசாங்கத்தின் அதிகாரத்துடன் வெளியிடப் படும் நம்பகரமான, அதிகாரபூர்வ வெளியீடுகளாக இவை இருப்பதுடன் உள்ளூர், பிரதேச, தேசிய, சர்வ தேசிய ரீதியாகக் குறைந்த விலையில் வெளியீடு செய்யப்படுகின்றன. பெரும்பாலான அறிக்கைகள் வெளியீடு செய்யப்படுவதோ அல்லது பருவ இதழ்க் கட்டுரைகளின் தரத்திற்குப் பதிப்பிக்கப்படுவதோ இல்லை. அறிக்கைகளில் தொகுக்கப்படும் பெறுமதி வாய்ந்த தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்கள் பின்னர் பருவ இதழ்க் கட்டுரைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதன் காரணமாக அறிக்கைகளின் காலம் ஒருசில வருடங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் அந்த ஒருசில வருடங்களுக்கும் மிகப் பெறுமதி மிக்க தகவல் வளமாக இவை கருதப்படுகின்றன. ஏனெனில் பருவ இதழ்க் கட்டுரைகள் பூரணப்படுத்தப்பட்ட பணிகளையும் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பணிகளையும் மட்டுமே சேர்த்துக் கொள்ளும் அதேசமயம் அறிக்கைகளோ ஆய்வுகளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் பிரதிபலிப்பதுடன் நின்றுவிடாது இடைநிறுத்தப்பட்ட ஆய்வுப் பணி களையும், தோல்வியில் முடிவடைந்த ஆய்வுப் பணிகளையும் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான முக்கிய தகவல் மூலமாகக் கருதப் படுகின்றன.

ஆண்டறிக்கைகள், ஆய்வறிக்கைகள், இடைக்கால அறிக்கைகள், சட்ட அறிக்கைகள், மதநிறுவன அறிக்கைகள், செயற்றிட்ட அறிக்கைகள், தேச அறிக்கைகள், தொழினுட்ப அறிக்கைகள், நிபுணத்துவ அறிக்கைகள், நிறுவன அறிக்கைகள், முடிவு அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள், இயல்வாய்ப்பு அறிக்கைகள், பொருட்படிநிலை அறிக்கைகள் என அறிக்கைகளைப் பலவகைப்படுத்தலாம் எனினும் இவை அனைத்தையும் பின்வரும் மூன்று பரந்த பிரிவுகளுக்குள் உள்ளடக்க முடியும்:

- அரச உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கான அறிக்கைகள் (இராணுவ விஞ்ஞானத்துறை சார்ந்த அறிக்கைகள்)
- தொழிற்துறை உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கான அறிக்கைகள். இவை வர்த்தக பாதுகாப்புக்கு உட்பட்டவையாகவும் நிறுவனத்துக்கு வெளியே கிடைக்க முடியாதவையாகவும் உள்ளன.
- கல்விசார் ஆய்வுகளுக்கான அறிக்கைகள். இவை எந்த வொரு பாதுகாப்பு அம்சங் களுக்கும் உட்பட்டவையல்ல.

பயன்பாடு

- குறிப்பிட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற உதவுதல்.
- குறிப்பிட்ட செயற்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்களைப் பெற உதவுதல்.
- குறித்த துறையில் தோல்வியில் முடிவடைந்த செயற்திட்டங்களின் விபரங்களை வழங்குதல்.
- குறித்த துறையில் அண்மைக்கால முன்னேற்றங்களை அறிய உதவுதல்.

வரையறைகள்

- அறிக்கைகள் பொதுவாகத் தொடரெண்களின் மூலம் இனங்காணப்படுவதன் காரணமாக, கொள்வனவுச் செயற்பாட்டுக்கோ அல்லது இரவல் வழங்கும் செயற்பாட்டுக்கோ இவற்றை நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியம் உண்டு.
- பெரும்பாலான அறிக்கைகள் பருவ இதழ்த் தரத்துக்குப் பதிப்பிக்கப்படுவதில்லை என்பதனால் தகவல்கள் தவறாக இருப்பதற்கு அல்லது தவறவிடப்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அறிக்கைகள் மிக விபரமாகத் தொகுக்கப்படுவதன் காரணமாக, சுருக்கமான தக வல்களைப் பெறுவது சிரமம் தருவதொன்றாகும்.

எடுத்துக்காட்டுகள்

Human Development Report [New York: UNDP,1990-]

வரலாறு: ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மனித அபிவிருத்தி அறிக்கை அலுவலகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றுகின்ற முதன்மை அறிவாளர்களையும், நிபுணர்களையும், அபிவிருத்தித் தொழில் வல்லுனர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட தெரிவுக்குழு ஒன்றினால் தொகுக்கப்படும் இவ்வறிக்கையானது அபிவிருத்தி பற்றி ஒவ்வொரு ஆண்டும் முக்கியமானதாக விவாதிக்கப்படுகின்ற ஆய்வுப்பொருள் பற்றிய விபரங்களை முழுமையாகத் தொகுத்து வெளியிடப்படுகின்ற ஒரு வெளியீடாகும். அபிவிருத்தி என்ற குறுகிய வரைவிலக்கணத்திலிருந்து விலகி மக்களின் நீண்டகால நல்வாழ்வு என்ற பரந்த கருப்பொருளை மையமாகக் கொண்டு 1990ம் ஆண்டு முதன்முதல் தொடங்கப்பட்டது.

உள்ளடக்கம்: ஒவ்வொரு ஆண்டும் தொகுக்கப்படும் பொருட் துறைகள் பின்வருமாறு:

1990	-	மனித அபிவிருத்தி பற்றிய கருத்துநிலையும் அளவையும்
1991	-	மனித அபிவிருத்திக்கான நிதி
1992	-	மனித அபிவிருத்தியின் உலகளாவிய பரிமாணங்கள்
1993	-	மக்கள் பங்கேற்பு
1994	-	மனித பாதுகாப்பின் புதிய பரிமாணங்கள்
1995	-	பால்நிலையும் மனித அபிவிருத்தியும்
1996	-	பொருளாதார அபிவிருத்தியும் மனித அபிவிருத்தியும்
1997	-	வறுமையை இல்லாதொழிப்பதற்கான மனித அபிவிருத்தி
1998	-	மனித அபிவிருத்திக்கான நுகர்வு
1999	-	மனித முகத்துடனான உலகமயமாக்கம்

2000ம் ஆண்டுக்கான இவ்வறிக்கையானது மனித உரிமைகளுக்கும் மனித அபிவிருத்திக்குமிடையிலான தொடர்பில் கவனம் செலுத்துகிறது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு ஆண்டும் உள்ளடக்கப்படும் கட்டுரைகள் போதிய விளக்கப் படங்கள், வரைபடங்கள், வரிப்படங்கள், அட்டவணைகள் என்பவற்றை உள்ளடக்கும் அதேசமயம் முக்கியமான தகவல்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் கட்டமிடப்பட்டுப் பெட்டிச் செய்திகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் உசாத்துணைக் குறிப்புகளை உள்ளடக்கியுள்ளது. மனித அபிவிருத்தியின் பல்வேறு அம்சங்களையும் அளப்பதற்கான பல சுட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் புள்ளிவிபரச் சொற்களின் விளக்கங்களும் மனித அபிவிருத்தித் தொகையின் அடிப்படையில் நாடுகளுக்கான பகுப்பாக்கப்பட்டியும் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.3 ஆய்வுக்கட்டுரைகள் (Theses / Dissertations)



வழிகாட்டுபவரின் மேற்பார்வையின்கீழ் முதுநிலைப்பட்டத்துக்காக அல்லது கலாநிதிப் பட்டத்துக்காக பல்கலைக்கழகத்தை அல்லது கல்வி சார்ந்த நிறுவனமொன்றைச் சேர்ந்த மாணவர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் ஆய்வின் முடிவில் எழுதப்படும் அறிக்கை எனப்படுகின்றது.

உண்மையான ஆய்விற்கான சான்றுகளை இக்கட்டுரை உள்ளடக்க வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட துறை சார்ந்த ஆய்வாளர்களுக்கு வேண்டிய முக்கிய ஆவணங்களாக இவை வடிவமெடுக்கின்றன. ஆய்வுக்கட்டுரையில் உள்ள சில முக்கிய தகவல்கள் பின்னர் முதல்நிலைப்பருவ இதழ்களில் அல்லது நூல்களில் வெளியிடப் படுகின்றபோதிலும் குறிப்பிட்ட சில தரவுகளுக்கு மூல ஆய்வுக்கட்டுரையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பதனால் இவை முக்கியமான முதல்நிலைத் தகவல் வளங்களாகக் கருதப்படுகின்றன.

பயன்பாடு

* ஏனைய தகவல் சாதனங்களில் உள்ள தகவல்களின் பொருட்துறை சார்ந்த அனுபந்தமாகத் தொழிற்படல்.
* குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்து மிக ஆழமான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையை வழங்குதல்.
* குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்து வெளிவந்த பருவ இதழ் கட்டுரை ஒன்றிலிருந்து மிக விரிவான தகவல்களைப் பெற வழிகாட்டுதல்.

வரையறைகள்

* முழுக்க முழுக்க கல்வி சார்ந்ததாக இருப்பதனால் இதன் பயன்பாடு குறைவானதாகும்.
* தனி நபரால் எழுதப்படும் பெரும்பாலான ஆய்வுக் கட்டுரைகள் சரியான முறையில் சொல்லடைவுபடுத்தப்படுவதில்லை. எனவே முக்கிய தகவல்களின் அமைவிடத்தைக் கண்டு பிடிப்பதற்கான கருவியாக இது தொழிற்படுவது கடினமானதாக உணரப் பட்டுள்ளது.
* ஆய்வுகள், பருவ இதழ்க் கட்டுரையாக அல்லது தனிப் பொருள் நூலாக வெளியீட்டுக்கு அனுப்பப்பட்ட பின்னரும் ஆய்வை திருத்தியமைக்கும் வாய்ப்புகள் உண்டு. எனவே இத்திருத்தங்களை உள்ளடக்கிய மூல ஆவணமே பயனுள்ளது.
* வெற்றிகரமான ஆய்வுகளே எழுத்தில் வருவதனால் ஏனையவை பற்றி அறிவதற்கு வாய்ப்பு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.4 சிறு நூல்கள் (Pamphlets)



நிரந்தரமாகக் கட்டப்படாத அச்சு வடிவ ஆக்கம் எதுவும் சிறுபிரசுரம் அல்லது சிறுநூல் என்ற பதத்தால் குறிப்பிடப்படுமெனினும் சர்வதேச பட்டியலாளர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தன்படி ஆகக்குறைந்தது 5 பக்கங்கள் உடையதாகவும் 48 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் உள்ள பருவ இதழ் அல்லாத வெளியீடுகள் அனைத்தும் இவ்வகைக்குள் அடங்குகின்றன. கட்டப்படாத போதும் சில சிறு நூல்கள் அதிக பக்கங்களைக் கொண்டமைந்ததாகவும் நிரந்தரப் பெறுமதியுடையதாகவும் இருக்கக் கூடும். செய்தித்தாள் துணுக்குகள் முதல் அச்சிடப்பட்ட புலமைத்துவ அறிக்கைகள்வரை இவை பலதரப்பட்டதாக அமையும். பருவ இதழ்க் கட்டுரைகள், சிறிய செயற்திட்ட அறிக்கைகள், விசேட உற்பத்திப் பொருட்களுக்கான துண்டுப் பிரசுரம் போன்றவற்றை இவற்றுக்கான எடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிடலாம். இவ்வகை வெளியீடுகள் தாளில் மட்டையிடப்பட்டுப் பெரும்பாலும் விலை குறைந்ததாகவோ அல்லது இலவசமாகவோ பெறப்படக் கூடியதாக உள்ளன. இவை குறுங்காலப் பெறுமதியுடையவை, நீண்டகாலப் பெறுமதியுடையவை என இருவகையாகத் தரம் பிரிக்கப்பட்டுக் குறுங்காலப் பெறுமதியுடையவை நிலைக்குத்துக் கோப்புகளிலும், நிரந்தரப் பெறுமதியுடையவை தொடர் வெளியீடாகக் கருதப்பட்டு தனிநூலாகவோ அல்லது பட்டியலாக்கம் செய்யப்பட்டு பகுப்பாக்க சேகரிப்புகளுடனோ சேர்க்கப்படுகின்றன. உள்ளடக்கம், குறைந்த விலை, குறித்த காலப்பகுதிக்குள் உடனடியாகக் கிடைக்கும் தன்மை, உள்ளூர் ஆர்வம், நூல்கள் பருவ இதழ்களுக்கான மேலதிக பிற்சேர்க் கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு இவை தெரிவு செய்யப்படுகின்றன.

நிரந்தர பெறுமதியுடையதாக இருப்பதைவிட குறுங்கால பயன்பாட்டைக் கருத்தில் கொண்டதாகவும், பொருள்துறை சார்ந்து வரையறையற்றதாகவும், நூல்வடிவில் வெளிவராத நிகழ்கால தகவல்களைக் கொண்டதாகவும், நூல்கள் அல்லது ஏனைய சாதனங்களில் இலகுவில் கண்டறியப்படாத தகவலைத் தாங்கி வருபவையாகவும் வெளிவரும் இப்பிரசுரங்கள் பொருட் துறைசார்ந்து ஒழுங்குபடுத்தப்படுகிறது. இவை கையெழுத்துப் பிரதிகளாகவோ அச்சிடப்பட்டவையாகவோ இருக்கலாம்.

பயன்பாடு

* செய்முறைத் தொழினுட்பம், தொழிற்பயிற்சி, பிரயாணம், ஆராய்ச்சி முடிவுகள், புகழ்பெற்ற சொற்பொழிவுகள், செய்தி அறிக்கைகள், கருத்து முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கட்டுரைகள், நிகழ்கால விவகாரங்கள், அரசியல் விவகாரங்கள் போன்ற முக்கிய அம்சங்களைத் தாங்கிவரும் இவை ஆய்வாளர்களுக்கு மிகப் பெறுமதி வாய்ந்த தகவல் மூலங்களாக இருப்பதுடன் விசேட நூலகங்களில் இவற்றிற்கே கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
* மிகக் குறைந்தளவு நூல்களே கிடைக்கக்கூடியதாக உள்ள பொருட்துறை சார்ந்த தகவல்களை வழங்குவதற்கு மிகப் பயனுள்ள தகவல் மூலமாக இவை உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறைகள்

* சிறுநூல்களில் பெரும்பாலானவை விளம்பரம், பிரச்சாரம், வியாபாரம் போன்ற நோக்கங்களுக்காக வெளியிடப்படுபவை. எனவே இவற்றை இனங்கண்டு சரியான முறையில் தகவல் வளத் தொகுதியில் சரியான சிறுநூல்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தேர்ந்த புலமை அவசியம்.
* அண்மைக்கால தகவல்களைத் தரும் சாதனமாக இவை கருதப்படுவதனால் வழக்கற்றுப் போன தகவல்களை வருடாவருடம் இருப்பிலிருந்து நீக்குதல் அவசியமானதாகும்.

5.5 ஆய்வுத் தனிப்பொருள் நூல்கள் (Research Monographs)

உண்மையான ஆய்வுகளிலிருந்து உருவாக்கப்பட்டு அறிக்கைகளாக வெளியிடப்படும் வெளியீடுகள் இவையாகும் . இவை நீளமானதாகவும், சிறப்புத்துறை சார்ந்ததாகவும், தரமிக்க பருவ இதழ்களில் கட்டுரை வடிவில் வெளியீடு செய்வதற்குப் பொருத்தமற்றதாகவும் இருக்கும். ஒவ்வொரு ஆய்வுத் தனிப் பொருள் நூலும் ஏற்கனவே வெளியிடப்படாத ஆக்கமாக அல்லது ஏற்கனவே நிலை கொண்டுள்ள கோட்பாடுகளை அடிக்கடி சுருக்கப்படுத்துகின்ற ஆக்கமாக இருக்கும். இது தனித்த ஒரு பொருள் பற்றிய அல்லது பொருட்துறையில் மேற்கொள்ளப் படுகின்ற ஒரு சுருக்கமான ஆய்வுக்கட்டுரை [Treatise] வடிவில் அமைந்திருக்கும். சில சமயங்களில் ஒரு நபரைப்பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுக்கட்டுரையாகவும் இருக்கும். அறிக்கைகள், தொகுப்பாக்கங்கள், கருத்துரைகள் என்பன ஆய்வுத் தனிப்பொருள் நூல்களின் வகைகளே.

5.6 காப்புரிமை இலக்கியங்கள் (Patents)

குறிப்பிட்ட காலப்பகுதிக்கு ஒரு புதிய உருவாக்கத்தை அல்லது கண்டுபிடிப்பை மேற்கொள் ளவோ, பயன்படுத்தவோ, விற்கவோ அரசினால் வழங்கப்படுகின்ற பிரத்தியேக உரிமையே காப்புரிமை எனப் பிரித்தானியக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. ஒரு பொருளை உருவாக்குபவருக்கு அல்லது வடிவமைப்பவருக்கு அதிகூடிய இலாபத்தைத் தரக்கூடிய வகையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற, குறித்த உருவாக்கம் ஒன்றின் உற்பத்தி, வடிவமைப்புத் தொடர்பான பாதுகாப்பை எழுத்துவடிவில் வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்படுகின்ற பொருளாக்க விபரக்குறிப்பே காப்புரிமை இலக்கியங்கள் எனப்படுகிறது. இவை ஒவ்வொரு நாடுகளிலும் இதற்கென உருவாக்கப்பட்ட காப்புரிமை அலுவலகங்களினால் உருவாக்கத்தின் பெயர், அது தொடர்பான சுருக்க விளக்கம், உருவாக் கத்திற்குப் பயன்பட்ட பிரயோகங்கள் தொடர்பான விபரக் குறிப்புகள், உருவாக்கத்தின் பின்னணி போன்ற விபரங்களை உள்ளடக்கி வெளியிடப்படுகிறது.

காப்புரிமை மூன்று வகைப்படும்

* புதிய உருவாக்கங்கள் அல்லது கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமை.
* புதிய பயன்பாடுடைய இயந்திரங்கள், உற்பத்திப் பொருட்கள், தொழிற்சாலைச் செய்முறைகள், ஏற்கனவே உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டிலுள்ள பொருட்கள் தொடர்பான அடுத்த கட்ட வளர்ச்சிகள், இரசாயன மூலகங்கள் போன்றவை இதற்குள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வடிவமைப்புகளுக்கான காப்புரிமை.
* தாவரங்கள், விலங்குகள் என்பவற்றின் புதிய இன உருவாக்கங்களுக்கான காப்புரிமை.

பெரும்பாலான நாடுகளில் புதிய உருவாக்கங்களுக்கான காப்புரிமைக் காலம் பொதுவாக 16-20 வருடங்களாக உள்ளது. பிரான்ஸ் போன்ற நாடுகளில் அதிக பயன்பாடுள்ள கண்டு பிடிப்புகளுக்குக் காப்புரிமைக்காலம் மிகக் குறைவாகும். கிட்டத்தட்ட 6 வருடங்களுக்குப் பின்னர் அது பொதுப்பயன் பாட்டுக்கு விடப்படுகிறது. சோஸலிஸ நாடுகளில் காப்புரிமை வழங்கப்படுவதில்லை. காப்புரிமைக்குப் பதிலாக இங்கு கண்டு பிடிப்பாளருக்கு உதவு தொகை பெறுவதற்கான தகுதிப் பத்திரமே விநியோகிக்கப்படுகிறது. பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின்,சுவிஸ் போன்ற நாடுகளில் பெறப்படும் அனைத்து விண்ணப்பப் பத்திரங்களுக்கும் காப்புரிமை வழங்கப்படுகிறது. ஏற்கனவே உள்ள காப்புரிமைகளுடன் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து அவை நீதிமன்ற நடவடிக்கைக்கு விடப்படுகிறது. சுவீடன், ஜேர்மனி, அவுஸ்திரியா, யப்பான் போன்ற நாடுகளில் விண்ணப்பப் பத்திரங்கள் 1836ம் ஆண்டின் US சட்டத்தின் அடிப்படையில் நன்கு பரிசீலிக்கப்பட்டு புதிய உருவாக்கம் என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரேயே காப்புரிமை வழங்கப்படுகிறது.

19ம் நூற்றாண்டிலிருந்து புதிய உருவாக்கங்கள் நடை முறைப்படுத்தப்படவேண்டும் என்ற சட்டவிதி கட்டாயமாக அமுலில் உள்ளது. காப்புரிமை பெறுபவர் ஒன்றில் அப்பொருளை உற்பத்தி செய்யவேண்டும் அல்லது அதனைச் செய்யக்கூடிய யாருக்காவது அனுமதி வழங்க வேண்டும். சில சமயங்களில் ஒரு பொருளின் உருவாக்கத்திற்கான காப்புரிமை ஒருவரிடமும், அதை உருவாக்குவதற்குத் தேவைப்படும் மூலப் பொருட்களுக்கான காப்புரிமை இன்னொருவரிடமும் இருக்குமாயின் பிரதான காப்புரிமையாளர் அதன் உரிமையைத் தான் தங்கியிருக்க வேண்டிய காப்புரிமையாளருக்கு வழங்கவேண்டிய கட்டாயம் இருக்கும்.

பயன்பாடு

* குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த தேசிய தகவல் வளமாகக் கருதப்படல்.
* ஒரே மாதிரி இன்னொரு பொருளை உருவாக்கும் முயற்சிகளைத் தடுத்தல்.
* புதிய உத்திகளிலுள்ள புதுமையை பரிசோதித்தல்.
* கண்டுபிடிப்பாளரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
* போட்டியாளர்களின் கண்டுபிடிப்புகள் மீது ஒரு கண் வைத்திருக்க உதவுதல்.

வரையறைகள்

* கண்டுபிடிப்புகளுக்குக் கொடுக்கப்படும் தலைப்புகள் பெரும்பாலும் தெளிவற்றதாக இருக்கும் சமயங்களில் கண்டுபிடிப்பு எந்தப் பொருட்துறையைச் சார்ந்தது என்பதை தெளிவாகக் குறிப்பிடுவது கடினம்.
* காப்புரிமை தொடர்பான விளக்கங்கள் அவற்றுக்கேயுரிய இறுக்கமான மொழிநடையில் எழுதப்படுவதனால் அதனை விளங்கிக் கொள்வது கடினமானதாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

5.7 நியமங்கள் (Standards)

ஒவ்வொரு நிறுவனமும் அதனது நோக்கங்களையும் கொள்கைகளையும் பூர்த்தி செய்வதற்கென மேற்கொள்கின்ற செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு உருவாக்குகின்ற சட்ட திட்டங்கள் அடங்கிய விபர ஏடு இதுவாகும். நவீன சமூகம் ஒன்றின் முன்னேற்றமானது நியமங்கள் இன்றிக் கடினமானது என்பதிலிருந்தே நியமங்களின் முக்கியத்துவத்தை உணர முடியும். குறிப்பிட்ட உற்பத்தியாளரின் உற்பத்திகளை இலகுவாக்குதல், அவற்றை விநியோகித்தல் என்பவற்றுடன் இவை தொடர்புபடுகின்றன. நுகர்வோரைப் பொறுத்து அவர்களுக்கு நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துபவையாக இவை உள்ளன. நியமப்படுத்தல் காரணமாக நியமங்கள் எதுவுமின்றிச் சந்தைக்கு வரும் பொருட்கள் யாவும் குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயே தமது மதிப்பை முற்றாக இழந்து விடுவது கண்கூடு.

நியமங்கள் இருவகையில் பயன்படுத்தப்படுகின்றன:

* தேசிய ஆய்வுகூடத்தில் பொதுவாகப் பராமரிக்கப்படுகின்ற, நியமப்பிரிவினால் பின்பற்றப்படுகின்ற நீளம், தொகை, காலம், வெப்பநிலை போன்ற அளவைகள். எ-டு: National Bureau of Standards in America.
* உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சாதனங்களின் தரம், பொருத்தப்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய நியம அளவைகளின் அச்சு வடிவ வெளியீடுகள்.

பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டும், நிரூபிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளினடிப்படையில் ஒரு பொருளை எவ்வாறு உற்பத்தி செய்தல், வரைவிலக்கணப்படுத்தல், அளத்தல், பரிசோதித்தல் போன்ற விபரங்களை நியமங்கள் தருகின்றன.

ஒரு சராசரி நியம நூலானது வரைவிலக்கணம், செய்யும் முறைகள், மூலப்பொருட்கள், அளவுத் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி சிறுநூல் வடிவில் வெளிவருபவையாக இருக்கும். அட்டவணைகள், விளக்கப்படங்கள் என்பவற்றை உள்ளடக்கி இவை வெளியிடப்படவும் கூடும். இந்திய நியமவியல் நிறுவனமானது வருடாவருடம் கிட்டத்தட்ட 300 நியமங்களை வெளியிடுகிறது.

சர்வதேச ரீதியில் நியமங்களுக்குப் பொறுப்பான நிறுவனங்கள் பின்வருமாறு:

* International Organisation for Standardisation[ISO]
* International Electrotechnical Commission[IEC]
* International Commission on Rules for the Approval of Electrical Equipment [CEE]

பயன்பாடு

* ஒரு பொருளை உருவாக்குவதற்கான, பரிசோதிப்பதற்கான, அளப்பதற்கான விதிமுறைகளை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறைகள்

- ✶ நியமங்கள் தொடர்ச்சியான மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதனால் மிக விரைவாக வழக்கற்றுப் போய்விடும் தன்மை உடையவையாக உள்ளன. எனவே மிகப் பிந்திய நியமங்களை கொள்வனவு செய்வது அவசியமாகும்.
- ✶ நியமங்கள் பொதுவாக அவற்றின் தொடரெண்ணின் அடிப்படையிலேயே இனங் காணப்படுவதனால் சில சமயங்களில் அவை எந்த நாட்டுக்குரியவை என்ற தகவலை கண்டறிவது சிரமமானது.

எடுத்துக்காட்டுகள்

Standards for Public Libraries [Pullach/Munchen: Verlag Documentation, IFLA, 1973]

வரலாறு: சர்வதேச நூலகச் சங்கங்களின் சம்மேளனத்தின் [IFLA] உருவாக்கமான இந்த நியமம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தற்போது பல நாடுகளிலும் பின்பற்றப் பட்டு வருவதுமான நியமமாகக் கருதப்படுகின்றது. 1956-1958 வரை சர்வதேச நூலகச் சங்கங்களின் சம்மேளனத்தின் பொது நூலகப் பிரிவானது பொதுநூலக சேவை பற்றிய இரண்டு ஆவணங்களை வெளியிட்டது. இஃப்லாவின் சபையினால் அங்கீகாரம் பெற்ற இந்த ஆவணங்களில் கூறப்பட்டுள்ள நியமங்கள் ஒரு திறமையான பொது நூலக சேவைக் கான ஆகக்குறைந்த அடிப்படை நியமங்கள் பற்றிய தெளிவான அறிக்கையாகும். ஸ்ரீலங்கா நூலகச் சங்கம் இதனைத் தமிழில் மொழிபெயர்த்து 1993ல் வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

உள்ளடக்கம்: நூலகங்களும் ஏனைய சாதனங்களும், அலுவலர்கள், தேவைகள் கிட்டுவதற் கான நிலை, வசதிகளும் வாய்ப்பு களும், நூலகக் கட்டிடம் ஆகிய ஐந்து பிரதான அம்சங்களின் கீழ் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Sri Lanka Standard Year Book. [Colombo: Sri Lanka Standard Institution, 1986]

வரலாறு: 1964ம் ஆண்டின் 38வது இலக்க இலங்கை நியமச் சட்ட சபையினால் உருவாக்கப் பட்ட தேசிய நியம அமைப்பே ஸ்ரீலங்கா நியமங்களுக்கான நிறுவனமாகும். 1984ன் 6வது இலக்கச் சட்டத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்கா நியம நிறுவனம் என்ற பெயரைப் பெறும் வரை இலங்கை நியம சபை (Ceylon Standard Board) என்ற பெயருடன் இயங்கியது. கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம் என்பவற்றுக்கான தேசிய நியமங்களை உருவாக்கு வதும், பிரகடனப்படுத்துவதும் இதன் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும். குறிப்பிட்ட பொருட் துறையில் ஆர்வமுள்ளவர்கள் ஒரு குழுவாக இணைந்தே நியமங்களுக்கான தொகுப்பு நடைபெறுகின்றது. சொற்களுக்கான கலைச் சொல்லகராதி, அதன் வரைவிலக்கணம், பொருட்களுக்கான அலகுகளும் எண் குறியீடுகளும், அளவை முறைகள், பரிசோதனை முறைகள், பாதுகாப்பு, செயற்பாட்டு ஒழுங்கு ஆகிய பொருட்தலைப்புகளை இது உள்ளடக் கியுள்ளது. உற்பத்தியாளர், பாவனையாளர், ஆய்வு அமைப்புகள், அரச திணைக்களங்கள், தொழில்சார் நிறுவனங்கள், தனிப்பட்ட நிபுணர்கள், நுகர்வோர் ஆகிய அம்சங்களை இது உள்ளடக்குகின்றது. நியமங்கள் வெளியிடப்பட முன்னர் அபிப்பிராயங்கள் கருத்துக்களுக்காக இது விடப்படுகின்றது. இந்த அபிப்பிராயங்கள் குழுவின் கவனத்துக்கு எடுக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட 700க்கும் மேற்பட்ட உற்பத்திகள், பொருட்கள், செய்முறைகள் என்பவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மீளாய்வுக் குட்பட்டவை.

ஒழுங்கமைப்பு: கால ஒழுங்கே இவ்வெளியீட்டுக்குப் பின்பற்றப்படுகின்றது. நூலின் இறுதியில் அகரவரிசைப் பொருட் சொல்லடைவு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் தொடரெண், ஆண்டு, பொருளின் பெயர், மீளாய்வுக்குட்பட்ட விபரம், பொருள் தொடர்பான விளக்கம், பக்கம், அளவு, தரம் போன்ற விபரங்களை உள்ளடக்கியுள்ளது. மாதிரிப் பதிவு:

SLS 275:1980.
Tooth Paste
(first revision)
Prescribe the minimum requirements, methods of sampling and test methods.
(Amendments AMD 58:1982)
30 pages, A5 size Gr.8

பிரித்தானிய நியம ஆண்டுநூல் [London Annual]

இது பிரித்தானியாவில் உள்ள அண்மைக்கால நியமங்களை உள்ளடக்கி ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் வெளியிடப்படும் பட்டியலாகும். தொடரெண் வரிசையில் பதிவுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவும் நியமத்தின் தலைப்பு, அது உருவாக்கப்பட்ட வருடம், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், அதன் விலை, பக்க அளவு, நியமம் தொடர்பான சாராம்சம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. சர்வதேச நியமத்தை ஒத்திருக்கும் பிரித்தானிய நியமங்களும், அவுஸ்திரேலியா நியூசிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படும் பிரித்தானிய நியமங்களும் இந்நூலில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் பிரித்தானியாவிலும் வெளி உலகங்களிலும் பிரித்தானிய நியமங்களைப் பேணிப் பாதுகாக்கும் நூலகங்களின் விபரங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

Standards for Fats and Oil [vol.5. by Harry. W.Lawson. Westport: AVI Publishing Company, 1985].

வரலாறு: Food Service Standard Series என்ற நூலின் 5வது தொகுதி இதுவாகும். உணவு விடுதிகள், நிறுவன முகாமைத்துவப் பள்ளிகள் போன்றவற்றின் அடிப்படை உசாத்துணை வளமாக இது கருதப்படுகின்றது. அத்துடன் சமையற்காரர்கள், உணவுச் சேவையை வழங்கும் முகாமைத்துவ அலுவலகங்கள், சமவிகித உணவாளர் போன்றோருக்கான அடிப்படை வழிகாட்டியாகவும் இது தொழிற்படுகின்றது. குறிப்பிட்ட சில கொழுப்பு வகைகளும், எண்ணெய் வகைகளும் எவ்வாறு உணவுச் சேவையில் விசேட பயன்களை வழங்குகின்றன என்பதை விளங்கிக் கொள்வதற்கான தொழிநுட்பப் பின்னணியை வழங்கும் பொருட்டு இவை தயாரிக்கப்பட்டவையாகும்.

ஒழுங்கமைப்பு: இது மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி கொழுப்பு மற்றும் எண்ணெய் தொடர்பான இரசாயன தொழிநுட்பப்பின்னணியைத் தருகின்றது. இரண்டாவது பகுதி உணவுச் செய்முறை தொடர்பான தகவல்களை வழங்குகின்றது. மூன்றாவது பகுதி போசாக்கு, சமவிகித உணவு முதலியவற்றின் உற்பத்தி முறைகளை விருத்தி செய்யும் தொழிநுட்பங்கள், தூய்மைப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாட்டுச் செய்முறை என்பன தொடர்பான தகவல்களை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.8 பொருளாக்க விபரங்கள் (Specifications)

தனியுரிமையாகக் கருதப்படுகின்ற துறைகளின் முழுச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் முறை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடு இதுவாகும். எ.டு சிற்பவேலை.

5.9 வர்த்தக இலக்கியங்கள் (Trade Literature)

பொதுவாக வியாபார நோக்குடைய நிறுவனங்களினால் இலவசமாக விநியோகிக்கப்படுகின்ற, குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்கள், அவற்றின் அபிவிருத்தி பற்றிய தகவல்களைக் கொண்ட விளம்பரங்கள், பட்டியல்கள் போன்றவையும், உற்பத்தியாளருக்குரிய சேவைகள், செய்முறைகள், உற்பத்தி உபகரணங்களின் விளக்கப் படங்கள் போன்றவையும் இவ்விலக்கியங்களில் உள்ளடக்கப் படுகின்றன. உற்பத்தியாளரின் உற்பத்திகளை விற்பது அல்லது அவர்களின் உற்பத்திகளை முன்னேற்றுவதே இத்தகைய இலக்கியங்களின் முக்கிய நோக்கமாகும். விற்பனை நோக்கில் இல்லாது தகவல் சார்ந்ததாகவும், உற்பத்திப் பொருட்கள் சார்ந்து புதிய பிரயோகங்களை வாசகன் கண்டுபிடிக்க ஊக்கு விப்பதாகவும் இருக்கும் இத்தகைய இலக்கியங்கள் தொழினுட்ப அறிக்கைகள், விலைப்பட்டியல்கள், தரவுப் பட்டியல்கள், தரவுத் தளங்கள், பராமரிப்பு வழிகாட்டிகள் போன்ற பல வடிவங்களில் உற்பத்தியாகின்றன. பொதுவாக இத்தகைய வெளியீடுகளைக் கையாள்வதில் நூல் விற்பனையாளர் ஆர்வம் காட்டுவது குறைவாகும்.

பயன்பாடு

- மக்களின் தேவைக்கேற்ப பொருத்தமான உற்பத்திகள், உபகரணங்கள், பொருட்கள், சேவைகளைத் தெரிவு செய்ய உதவுதல்.
- ஏற்கனவே எம்மிடம் இருக்கின்ற உற்பத்திகள் உபகரணங்கள், பொருட்கள் போன்றவற்றின் பயன்பாடு தொடர்பாகவும் பராமரிப்புத் தொடர்பாகவும் விபரமான தகவல்களைத் தருதல்.
- பொருட்கள் சேவைகளை விளம்பரப்படுத்தல்.
- குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளுக்கு மாற்றாகக் கிடைக்கக் கூடிய பொருட்கள் சேவைகள் பற்றிய விபரங்களை அறிய உதவுதல்.
- பயன்பாடு பற்றி வாசகனுக்கு அறிவுறுத்தல்.

வரையறைகள்

- மிக விரைவில் வழக்கற்றுப்போகும் பண்பு இத்தகைய இலக்கியங்களுக்கு உண்டு.
- பொருட்கள் சேவைகளுக்குரிய விலைகள் அடிக்கடி மாறுவதனால் இத்தகைய இலக்கியங்களில் விலைகள் குறிப்பிடப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள்

R.S. Components

வரலாறு: உயர்தர பொறியியல் உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கின்ற உலகின் முதன்மை நிறுவனமாக தொடர்ந்து நிலை கொண்டிருக்கும் R.S பிரித்தானிய நியம நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக விளங்குகிறது. அவுஸ்திரேலியா, கொங்கொங், பெல்ஜியம், டென்மார்க், ஜேர்மனி, இந்தியா, இத்தாலி, மலேசியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, சுவீடன், ஐக்கிய இராச்சியம், சிலி, பிரான்ஸ், அயர்லாந்து, யப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர, ஸ்பெயின், தாய்வான் ஆகிய இடங்களில் கிளைகளையும் உலகம் முழுவதிலுமிருந்து 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொறியியலாளரையும் இது கொண்டிருக்கிறது.

உள்ளடக்கம்: 1999ம் ஆண்டிற்கான இப்பட்டியல் மின்னணு வியல், மின்னியல், இயந்திரவியல் சார்ந்து கிட்டத்தட்ட 55,500 உற்பத்திப் பொருட்களை உள்ளடக்குவதுடன் பொறியியல் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் 5000 புதிய உற்பத்திகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பொருட்களுக்கு வேண்டுகோளின் அடிப்படையில் தரவுத்தாள்கள் இலவசமாக அனுப்பப்படுகின்றன. சீடீ ரோமில் வெளிவரும் இப்பட்டியல் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வேக அணுகுகையை வழங்குகிறது. இதன் மூலம் உடனுக்குடன் கொள்வனவுக் கட்டளை அனுப்புவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஒழுங்கமைப்பு: உற்பத்திப் பொருட்கள் பின்வரும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன:

- Anti Static Products
- Batteries and Charges
- Cable / Cable Accessoriers
- Calculaters / Organizers
- Capacitors
- Computer Accessories
- Conduit / Trunking
- Audio / Video

ஒவ்வொரு பதிவும் உற்பத்திப்பொருளின் வண்ணப் படத்துடன் உற்பத்தி விபரம், பரிமாணம், தொழினுட்ப விபரம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. நூலின் ஆரம்பத்தில் புதிய உற்பத்திகள் பற்றிய விளம்பரமும் நூலின் இறுதியில் அகரவரிசைச் சொல்லடைவும் RS இருப்பு எண் பற்றிய விபரப்பட்டியும் கொடுக்கப்பட்டுள்ளது

COPE: Laboratory Equipment, Scientific Glassware & Instrument [London:COPE,]

வரலாறு: கிட்டத்தட்ட 11,000 உபகரணங்கள் பற்றிய தகவல்களை அகரவரிசையில் தந்து நிற்கும் ஒரு வர்த்தக இலக்கியமாக இது கருதப்படுகிறது. 150 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இக் கம்பனியின் ஆரம்ப காலம் மருந்துப் பொருட்களுக்கான அளவைகளை உற்பத்தி செய்வதாக இருந்தது. 1870களில் இன்றைய கம்பனியின் உரிமையாளரின் பாட்டனாரான A.J.Cope என்பவரால் கண்ணாடிப் பொருட்களின் உற்பத்தியுடன் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த சில வருடங்களில் தரம்மிக்க அறிவியல் சார்ந்த கண் ணாடிப்பொருள் உபகரணங்களின் உற்பத்தியாகத் தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைப்பு: பட்டியலின் இறுதிப்பகுதியில் உற்பத்திகளின் பொதுப் பெயர்கள், மாற்றுப் பெயர்கள் போன்ற விபரமடங்கிய சொல்லடைவும் இணைக்கப்பட்டுள்ளது. குறுக்கு நோக்கீட்டுக் குறிப்புகள் போதியளவில் கொடுக்கப்பட்டுள்ளன.

5.91 **அரசாங்க வெளியீடுகள்** (Government Publications)

அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற உத்தியோக பூர்வமான வெளியீடுகள் அரசாங்க வெளியீடுகள் எனப்படும். எந்த ஒரு நாட்டிலும் ஓர் அரசாங்கம் அதிகாரபூர்வமான வெளியீட்டாளராக இருந்து அரசாங்க அறிக்கைகள், சட்டங்கள், விசேட ஆணைக் குழு அறிக்கைகள் போன்றவற்றை வெளியிடுகின்றன.

5.92 **தடை செய்யப்பட்ட ஆவணங்கள்** (Restricted Documents)

அரச ஆதிக்கத்திற்கு எதிராகச் செயற்படுகின்ற, அரசாங்கத்தினால் தடை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற, பொதுவாக அந்தரங்கமாக அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்ற அரசியல் சார்ந்த தணிக்கை செய்யப்பட்ட ஆவணங்கள்.

5.93 **வெளியிடப்படாத ஆவணங்கள்** (Unpublished Documents)

ஆய்வுகூடக் குறிப்பேடுகள், நாட்குறிப்பேடுகள், தனிப்பட்டவர்களுக்கு எழுதப்படும் முக்கிய கடிதங்கள், நிறுவனங்களின் கோப்புகள், உள்ளக ஆய்வு அறிக்கைகள், உருவப் படங்கள், வாய்மொழி வரலாறுகள், நாணயங்கள் போன்ற வெளியிடப்படாத தகவல் வளங்களும் முதல்நிலைத் தகவல் வளங்களாகக் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஆறு

இரண்டாம் நிலைத் தகவல் வளங்கள்

6.0 அறிமுகம்

இவை முதல்நிலைத் தகவல் வளங்களிலிருந்து தொகுக்கப்படுவதாக அல்லது முதல் நிலைத் தகவல் வளங்களுக்கு வழி காட்டுவதாக இருக்கும். குறிப்பிட்ட தகவல் பாவனையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முதல் நிலைத் தகவல்களில் உள்ள அடிப்படைத் தகவல்கள் புதுப்பிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு, ஏதாவது ஒரு திட்டமிடப்பட்ட ஒழுங்க மைப்பில் மீள ஒழுங்கமைக்கப்பட்டுப் பொதி செய்யப்படுகின்றன. முதல் நிலைத் தகவல் வளங்களிலும் பார்க்க இலகுவாகக் கிடைக்கக்கூடியதாக இவை உள்ளன. சுருக்கமான தகவல்களை வழங்குவது மட்டுமன்றி முதல் நிலைத் தகவல் வளங்களுக்கான நூல்விபரத் திறவுகோலாகவும் இவை தொழிற்படுகின்றன.

6.1 இரண்டாம் நிலைப் பருவ இதழ்கள் (Secondary Periodicals)

எல்லாப் பருவ இதழ்களுமே மூல ஆக்கங்களை அறிக்கைப்படுத்துவதில்லை. முதல்நிலைத் தகவல் வளங்களில் உள்ள அபிவிருத்திகள் தொடர்பான அபிப்பிராயங்களை வழங்குதல், அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுதல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பருவ இதழ்கள் அனைத்தும் இரண்டாம் நிலைப் பருவ இதழ்கள் எனக் கருதப்படுகின்றன. எ-டு: சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் பருவ இதழ்கள்.

6.2 நூல்கள் (Books)

அனைவருக்கும் மிகப் பழக்கமான தகவல் வளமாகக் கருதப்படும் இத்தகைய வளங்கள் தான் நூலக இருப்பின் கணிசமான பகுதியை நிரப்புபவையாகக் கருதப்படுகிறது. அச்சிடப் பட்ட அல்லது எழுதப்பட்ட தாள்களின் பக்கங்களைச் சுலபமாகத் திருப்பிப் பார்க்கக்கூடிய வகையில் நூலால் கோர்த்துக் கட்டி, அதற்கு மட்டையும் இடப்பட்டு உருவாக்கப்படுவதே நூல் என்கிறது ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி. இது பௌதீக வடிவமைப்பை அடிப்படை யாகக் கொண்டு நூலை வரையறை செய்கிறது.

குறைந்தது 49 பக்கங்களைக் கொண்ட பருவ வெளியீடு அல்லாத அச்சிடப்பட்ட வெளி யீடுகள் அனைத்தும் நூல் என்ற பெயர் பெறும் என்கிறது யுனெஸ்கோ. பக்கங்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் இது நூலை வரையறுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, அறிவியல் தொழினுட்ப நூல்கள் பின்வரும் மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன:

6.21 பாடநூல்கள் (Text Books)

குறிப்பிட்ட ஒரு பொருட்துறையைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கென உருவாக்கப்படும் நூல்களே பாடநூல்கள் ஆகும். இவை பொதுவாகப் பரந்த பொருட்துறையை உள்ளடக்குபவை. வாசிப்பு நோக்கம் என்பதே இங்கு முக்கியமானதாக இருப்பதனால் தகவல் வழங்கப்படும் விதம் இங்கு மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. வண்ணப்படங்களும், போதிய விளக்கப்படங்களும், கவர்ச்சிகரமான வடிவமைப்பும் வாசிப்பில் தூண்டலை ஏற்படுத்துபவை. நல்லதோர் பாடநூலானது வாசிப்பை மட்டுமன்றி நல்லதோர் கற்பித்தலுக்கும் வழிகாட்டக்கூடியது. புதிய அபிவிருத்திகள், மாறிவரும் கற்பித்தல் முறைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளன.

6.22 பொழிப்புகள் (Treaties)

ஒரு குறிப்பிட்ட பொருட்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளை முறையாகவும் விளக்கமாகவும் தருவதே பொழிப்புகள் ஆகும். இது பெரும்பாலும் முதல் நிலை இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலிருந்து பெறப்பட்ட பல உசாத்துணைக் குறிப்புகளையும் உள்ளடக்கியிருக்கும். அவை உள்ளடக்கியிருக்கும் தகவலின் காத்திரத் தன்மைக்கேற்ப அவற்றின் பெறுமதியும் தங்கியிருக்கும். பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டதாக இருக்கும் இவ்வகை ஆக்கங்கள் பிரதானமாக உசாத்துணை நோக்கத்துக்காகவே பயன்படுத்தப்படுகிறது. பல பகுதிகளாக வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், ஆக்கம் முழுமைப்படுத்தப்படும் காலத்தில் அதன் முதல் பகுதிகள் வழக்கற்றுப்போன தகவலாக மாறக்கூடிய வாய்ப்புகளும் உண்டு.

6.23 தனிப்பொருள் நூல்கள் (Monographs)

குறித்த ஒரு பாடத்துறையில் விளக்கமாக எழுதப்பட்டு வெளியிடப்படுவதே தனிப்பொருள் நூல்கள் எனப்படும். இவை ஓர் ஆசிரியரால் தனித்தோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்தோ எழுதப்பட்டவையாக இருக்கும். பல்கலைக்கழக சமூகத்தின் ஆய்வுத் தேவைகளையும், பாட விதானம் சம்பந்தப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இவற்றின் பாவனையானது ஏனைய அறிவுசார் சாதனங்களையும் விட ஒப்பீட்டளவில் அதிகமானது. எனினும் நவீன தொழிநுட்ப வசதிகளின் விளைவால் பில்லியன் கணக்கில் வெளியாகும் நூல்களின் எண்ணிக்கையும் நூலகங்களின் இடவசதியின்மையும் இந்நூல்களின் அதிகரிப்பிற்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. தனிப்பொருள் நூல்களில் தொகுப்பாக்கங்கள், கருத்துரைகள் என்பன முக்கியமானவை.

* தொகுப்பாக்கங்கள் (Composite Works) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் உருவாக்கப்படுகின்ற தனிப்பொருள் சார்ந்த ஆக்கங்கள் இவையாகும். இதில் ஒவ்வொரு ஆசிரியரின் பங்களிப்பும் தனித்தனிப் பகுதியாக அல்லது முழு ஆக்கத்தின் ஒரு பகுதியாக வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கருத்துரைகள் (Compendia): ஒரு பொருட்துறையின் முக்கிய கருத்துக்களை மட்டும் தொகுத்து வெளியிடப்படுகின்ற சிறிய சுருக்கப் பதிப்புகள். இவை பொழிப்புரை, சாரம் எனவும் அழைக்கப்படுகின்றன.

6.3 அட்டவணைகள் (Tables)

எழுதப்பட்ட சொற்கள், குறியீடுகள், எண்கள் அல்லது இவற்றின் சேர்க்கைகளை நிரல் ஒழுங்கில் தரும் ஒரு உசாத்துணை சாதனம் அட்டவணையாகும். கைந்நூல்களில் பெரும் பாலானவை அட்டவணைகளின் வடிவமைப்பில் பெருந்தொகையான தகவல்களை உள்ள டக்குகின்றன. சில கைந்நூல்கள் அதன் பொருட் துறையிலும் பார்க்கக் கணிசமானளவு அட்டவணைகளுக்கு ஒதுக்குகின்றன. பாட விளக்கங்களை விட அட்டவணைகளின் மூலம் ஒரு தகவலை விளங்கிக் கொள்வது இலகுவானது. குடித்தொகைத் தரவுகள், அறிவியல் துறையில் குறிப்பாக பௌதீக தொழினுட்பத் துறைகளில் அட்டவணைகள் மிகுந்த பயன் பாடுள்ளவையாக கருதப்படுகின்றன.

6.4 மொழிபெயர்ப்புகள் (Translations)

தகவல் வளங்களின் எந்த நிலையிலிருந்து (முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை) மொழி பெயர்ப்புச் செய்யப்படினும் அந்த நிலைத் தகவல் வளங்களுக்குள்ள பண்புகளையே மொழி பெயர்ப்புகள் கொண்டிருக்குமாதலால் மொழி பெயர்ப்புகளும் இரண்டாம் நிலை தகவல் வளங்களின் முக்கிய பிரிவாக கருதப்பட இடமுண்டு.

6.5 விபரத்திரட்டுகள் (Profiles)

தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்க சேவையை வழங்கும் பொருட்டு, தனிப்பட்டவர் களின் அல்லது ஒரு குழுவின் சிறப்புத்துறை சார்ந்த விபரங்களை தொகுத்து ஒழுங்குபடுத்தி வைத்திருக்கின்ற தொகுப்பேடுகள். இவை ஆக்கச் செய்முறை விபரத்திரட்டுகள், கழக விபரத் திரட்டுகள், தேச விபரத் திரட்டுகள், தேடுதல் விபரத் திரட்டுகள் என வகைப்படுத் தப்படுகின்றன.

6.6 தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்கள் (Information Analysis & Consolidation Products)

தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு நிலையங்களின் தகவல் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பலதரப்பட்ட துறைசார் நிபுணர்களைக் கொண்ட குழுக்களின் ஒன்றிணைந்த கூட்டு முயற்சியின் பலனாக உருவாக்கப்படுவதே தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்களாகும். தகவல் வளத் தெரிவு, ஈட்டல், மதிப்பீடு, பகுத்தாய்வு, தொகுப்பு, மீள்வடிவமைப்பு, பொதியிடல், மீள்பொதியிடல் போன்ற செய்முறைகளுக்கூடாகப் பெறப்படும் புதிய உற்பத்திகள் அனைத்தும் இப் பெயர் கொண்டழைக்கப்படும். பொதுவாக இத்தகைய ஆக்கங்களின் பாவனையாளர் இவ்வாக்கங்களிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தும் முடிவுப் பாவனையாளராக இருப்பதில்லை. இவ்வாக்கங்களில் உள்ள தகவலைப் பயன்படுத்துபவர் தகவல் அமைப்பின் அலுவலர்கள் அல்லது விரிவாக்கப்பணி அலுவலர்கள், நிறுவனம் ஒன்றின் பொது அலுவலர் போன்ற இடைத்தரப் பாவனையாளரே. இவ் இடைத்தரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையாளர் இவ்வாக்கங்களில் உள்ள தகவலை எடுத்து அவற்றைப் பொருத்தமான வடிவத்தில், புரியக்கூடிய விதத்தில் விவசாயிகள், தொழிற்சாலைப் பணியாளர், நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் போன்ற முடிவுப்பாவனையாளருக்கு வழங்குகின்றனர். இத்தகைய ஆக்கங்கள் மேலதிக பயனை பாவனையாளருக்கு கொடுக்கும் ஆக்கங்களாகவோ அல்லது ஏனைய தகவல் உற்பத்திப் பொருட்களை அல்லது சேவைகளை உருவாக்கும் போது அதிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற உருவாக்கமாகவோ இருக்கக்கூடும். தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்கள் பலவகைப்படும்.

6.61 பொருட்படிநிலை அறிக்கைகள் (State- of-The-Art-Reports)

குறிப்பிட்ட துறை சார்பாக வெளியிடப்படுகின்ற அண்மைக்கால வெளியீடுகளைத் தேடிக் கண்டுபிடித்து, சேகரித்து, ஒழுங்குபடுத்தி, அத்துறையின் வளர்ச்சிநிலை பற்றிய மதிப்பீட்டை புதிய ஆக்கமாக ஆய்வாளருக்கு வழங்கும் வெளியீடுகள் இப் பெயர் கொண்டு அழைக்கப் படுகின்றன.

6.62 திறனாய்வு மதிப்புரைகள் (Critical Reviews)

ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த வெளியீடு ஒன்றை அத்துறை சார்ந்து அதற்கு முன்பு வெளியிடப்பட்ட வெளியீடுகளுடன் ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்து எழுதப்படும் மீளாய் வுகள்.

6.63 போக்கு அறிக்கைகள் (Trend Reports)

குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்து, குறிக்கப்பட்ட காலப்பகுதியில் வெளிவந்த ஆய்வு இலக்கியங்களின் விபரங்களைச் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, தொகுத்து வழங்குவதன் மூலம் அத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளரின் ஆரம்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெளியீடுகளாக இவை கருதப்படுகின்றன. இவ் அறிக்கைகள் வெறுமனே நூல்களில் உள்ள தகவல்களைத் தொகுத்து வழங்குவதுடன் நின்றுவிடாது குறிப்பிட்ட காலப் பகுதியில் அத்துறையின் வளர்ச்சி பற்றிய நூலாசிரியர் கருத்தையும் உள்ளடக்கும்.

6.64 இயல்வாய்ப்பு அறிக்கைகள் (Feasibility Reports)

ஒரு நிறுவனத்தின் தொழிற்திறன்சார் நடவடிக்கைகளையும் அந்நடவடிக்கைகளின் தகைமை களையும் பரீட்சித்துப் பார்ப்பதன் பொருட்டு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட முடியும் எனக் கருதப்படும் செயற்பாடுகள் உள்ளடங்கிய அறிக்கைகள்.

6.7 உசாத்துணை சாதனங்கள் [Reference Sources]

(தனி அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஏழு

மூன்றாம்நிலைத் தகவல் வளங்கள்

7.0 அறிமுகம்

முதல் நிலைத் தகவல் வளங்களிலிருந்தும் இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து தொகுக்கப்படும் தகவல் வளங்கள் இவ்வகைக்குள் அடங்கும். முதல் நிலைத் தகவல் வளங்களையும், இரண்டாம் நிலைத் தகவல் வளங்களையும் பயன்படுத்தும் பயன்பாட்டில் தகவல் தேடுபவருக்கு உதவுதலே இத்தகைய வளங்களின் நோக்கமாகும். இத்தகைய வளங்களில் பெரும்பாலானவை பொருட்துறை சார்ந்த அறிவைக் கொண்டிருப்பதில்லை. இலக்கியங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக, மூன்றாம் நிலைத் தகவல் வளங்களின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டிருக்கிறது. பலதரப்பட்ட தகவல் வளங்களிலும் இறுதியாகத் தோற்றம் பெறுவது இத்தகைய வளங்களேயாகும்.

7.1 நூல்விபரப் பட்டியல்களுக்கான நூல்விபரப் பட்டியல் [Bibliography of Bibliographies]

ஆசிரியர், பொருட்துறை, நிறுவனம் போன்ற அம்சங்களின் ஊடாக, பயனுள்ள நூல்விபரப் பட்டியலுக்கு வாசகரை வழிப்படுத்துகின்ற நூல்விபரப்பட்டியல்களை அட்டவணைப்படுத்தி வெளியிடப்படுவதே இத்தகைய நூல்விபரப் பட்டியல்களாகும். இப்பட்டியல்களில் குறிப்பிடப்படும் நூல்விபரப் பட்டியல்கள் தனிநூலாகவோ, நூலின் ஒரு பகுதியாகவோ, பருவ இதழ்க் கட்டுரையின் ஒரு பகுதியாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு வடிவில் வெளியிடப்படும் ஆவணமாகவோ இருக்கக்கூடும்.

எடுத்துக்காட்டுகள்

Bibliography of Bibliographies [A Guide to Catalogue, Indexes, Bibliographies and Bio Bibliographies in Sri Lanka. Compiled by Leelangi Wanasundara. Colombo: National Library, 1990. ISBN 955-9011-55-3]

உள்ளடக்கம்: இலங்கை நூலக விஞ்ஞானத் துறைக்குக் கிடைத்த அரிய பங்களிப்பாகவே இது கருதப்படுகின்றது. 1832-1987 காலப் பகுதியை உள்ளடக்கியது எனினும் 1948க்குப் பிற்பட்ட இலக்கியங்களே கூடுதல் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. நூலகங்களினால் வெளியிடப்படும் நூல்வரவுப் பட்டிகளோ அல்லது இலங்கை நூலகச் சங்கத்தினால் பரீட்சை அடிப்படையில் தொகுக்கப்படும் நூல்விபரப் பட்டியல்களோ இதில் உள்ளடக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. இத்தொகுப்புக்கான பிரதான உசாத்துணை வளமாக H.A.I குணதிலகாவின் Bibliography of Ceylon பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைவிட ஆரம்பகால நூல்களின் விபரங்கள் கொழும்பு மியூசிய நூலகத்திலும் தேசிய ஆவணக் காப்பக நூலகத்திலும் பெறப்பட்டிருக்கின்றன.

ஒழுங்கமைப்பு: இது நான்கு பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பிரிவு 1. பொருட்சொல்லடைவு. UN Macro Thesaurus இல் உள்ள சொற்களைப் பயன்படுத்திப் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சொற்கருவூலச் சொற்களுடன் பொருந்தி வராத தலைப்புகளுக்கு விசேட சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பதிவுகள் அனைத்தும் UN பொருட் தலைப்புகளின் கீழ் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பொருட் தலைப்பின் கீழும் நூல்விபரப்பட்டியலின் சுருக்கத் தலைப்பு, அகர வரிசையில் குறிக்கப்பட்டுள்ளது.

பிரிவு 2. பட்டியல்களும் சொல்லடைவுகளும்

பிரிவு 3 நூல்விபரப் பட்டியல்கள்

பிரிவு 4 சுய நூல்விபரப் பட்டியல் தனிநபர்களதும் நிறுவனங்களதும் வெளியீடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பதிவுகள் ஆங்கில அமெரிக்க விதியைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டுள்ளன.

Indiana: A Bibliography of Bibliographical Sources [by M.K.Jain.-New Delhi:Concept Publishing Company, 1989.- ISBN: 81-7022-230-3]

வரலாறு: Concept in Communication Information & Librarianship [CICIL] என்ற தலைப்பில் வெளியான 9 தொடர்களில் இது 4வது தொடராகும். இந்தியாவில் ஆங்கில மொழியில் வெளியான நூல்விபரப்பட்டியல்களுக்கான நுழைவாயிலாகவும் ஆராய்ச்சியாளர், புலமை யாளர், நூல்விபரப் பட்டியலாளர் போன்றோருக்குப் பெறுமதிமிக்க உசாத்துணை மூலமாகவும் இது கருதப்படுகிறது.

உள்ளடக்கம்: நூல்விபரப் பட்டியல்கள், நூலகப் பட்டியல்கள், ஆவணவாக்கப் பட்டிகள், சாராம்சங்கள், ஆய்வுக் கட்டுரைகளின் பட்டிகள், தொடர் வெளியீடுகளின் பட்டிகள் என்பன இத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு பொருட்துறை சார்ந்தும் பொருட் தலைப்புகள் தெரிவு செய்யப் பட்டு அதன் கீழ் அகர வரிசையில் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் நூலின் இறுதியில் சொல்லடைவும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், பெயர், தலைப்பு, வெளியீட்டு விபரம், பக்கம், குறிப்பு போன்ற விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

7.2 இலக்கியங்களுக்கான வழிகாட்டிகள் [Guide To Literatures]

ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த இலக்கியங்களை பாவனையாளர் பயன்படுத்துவதற்கு உதவுவதற்கென இவை உருவாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பொருட்துறையொன்றை மதிப்பீடு செய்து அதிலுள்ள இலக்கியங்களை அறிமுகம் செய்வதே இவற்றின் நோக்கமாகும். குறிப்பிட்ட பொருட்துறையின் உள்ளடக்கத்தை விட அத்துறை சார்ந்த இலக்கியங்களிலேயே இவை கவனம் செலுத்துகின்றன. பெரும்பாலும் இரண்டாம், மூன்றாம் நிலைத் தகவல்களே இவற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் எட்டு

உசாத்துணை வளங்கள்

8.0 அறிமுகம்

வாசகரது பாவனையினடிப்படையில் தகவல் வளங்களை பொதுவாக பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. சாதாரண தகவல் வளங்கள்: அறிவைப் பெறுதல், பொழுது போக்குதல், தகவலைப் பெறுதல் போன்ற தொடர்ச்சியான பாவனை கருதித் தயாரிக்கப்படும் நூல்கள் இவ் வகைக்குள் அடங்கும். வாக்கியங்கள், பந்திகள், அத்தியாயங்கள் என வளர்ந்து செல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ச்சியும் விளக்கமும் இவற்றுக்குண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு பொருளாதார வரலாற்று நூலில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரு தொடர்புத்தன்மை பேணப்படுவதைக் காணமுடியும்.
2. உசாத்துணைத் தகவல் வளங்கள்: தனித்துவமான தகவலைப் பெறும் நோக்குடன் காலத்துக்குக் காலம் குறிப்பெடுக்கவென வடிவமைக்கப்படும் நூல்கள் இவ் வகைக் குள் அடங்கும். இவற்றின் ஒழுங்கமைப்பும் பயன்பாடும் ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கும்.

பண்புகள்

1. ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு வடிவமைக்கப்பட்டதே உசாத்துணை வளங்களாகும். சாதாரண நூல்களைப் போன்று தொடர்ச்சியான முறை யில் இவற்றை வாசிக்க முடியாது.
2. ஒன்றிற்கொன்று தொடர்பில்லாத, தனித்துவ தகவல்களைக் கொண்டதாகவும், ஒரு குறிப்பிட்ட ஒழுங்கமைப்பில் வடிவமைக்கப்பட்டதாகவும் இவை இருக்கும். எடுத்துக் காட்டாக ஒரு அகராதியையோ அல்லது கலைக்களஞ்சியத்தையோ ஒருவர் தொடர்ச் சியாக நூலின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை வாசிக்க முடியாது.
3. உசாத்துணை நூலொன்றின் ஒரு பதிவிற்கும் அடுத்த பதிவிற்குமிடையே தொடர்புத் தன்மை பேணப்படுவதில்லை. அகரவரிசைப்படுத்தும் பொருட்டு ஒன்றிற் கொன்று தொடர் பற்ற தகவல்கள் ஒன்றாக ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும்.
4. குறிப்புகள் எடுக்கும் பொருட்டு இவை உடனுக்குடன் தேவைப்படுவதன் காரணமாக இத்தகைய வளங்களைத் தகவல் அமைப்புகள் இரவல் வழங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இவற்றில் உள்ள தகவல்கள் சரியாகவும், முறையாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதனால் தேவைப்படும் தகவல்களை உடனுக்குடன் எவ்வித காலவிரயமுமின்றிப் பெற்றுக் கொள்ள முடியும்.

வகை

உசாத்துணை வளங்களை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் தகவலை நேரடியாக வழங்குபவை, தகவலுக்கு வழிகாட்டுபவை என இருவகையாகப் பாகுபடுத்தலாம். தகவலை நேரடியாக வழங்குபவை உசாத்துணைக் கருவிகள் எனவும் தகவலுக்கு வழிகாட்டுபவை தெரிவுக் கருவிகள் எனவும் வழங்கப்படுகின்றன.

தகவலை நேரடியாக வழங்குபவை [Source Types]:

* கலைக்களஞ்சியங்கள் [Encyclopaedias]
* அகராதிகள் [Dictionaries]
* சொல்லிசைவுத் தொகுதிகள் [Concordances]
* ஆண்டு நூல்கள் [Yearbooks]
* வழிகாட்டிகள் [Directories]
* கைந்நூல்கள் [Handbooks]
* கையேடுகள் [Manuals]
* புவியியல் சாதனங்கள் [Manuals]
* வாழ்க்கை வரலாற்று நூல்கள் [Biographies]
* ஐந்தொகுதிகள் [Almanacs]
* நடப்பு உசாத்துணை வளங்கள் [Current References Sources]
* அரசாங்க ஆவணங்கள் [Government Documents]

தகவலுக்கு வழிகாட்டுபவை [Directional Types]

* நூல்விபரப்பட்டியல்கள் [Bibliographies]
* சொல்லடைவுகள் [Indexes]
* சாராம்சங்கள் [Abstracts]

8.1 கலைக்களஞ்சியங்கள் [Encyclopaedias]

காலங்காலமாக மனிதனது அறிவுத் தேடலும் ஆன்ம முயற்சியும் உடலுழைப்பும் இணைந்து சாதிக்கப்பட்டவைகளை எழுத்து வடிவில் ஒன்றுதிரட்டித் தரும் ஒரு உசாத்துணை நூலே கலைக் களஞ்சியமாகும். மானுட வரலாற்றின் கூறுகள் அனைத்தையும் ஓரிடத்தில் பார்த்து அறிந்துகொள்ளும் வாய்ப்பை இந்நூல் தருகிறது. கலைக்களஞ்சியம் என்ற சொல்லானது அதன் நீண்டகால வரலாற்றில் கணிசமானளவு மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. தற்காலத்தில் பெரும்பாலானோருக்கு கலைக்களஞ்சியம் என்பது உலக அறிவின் தொகுப்பைப் பல பகுதிகளாகக் கொண்டு படங்கள், சொல்லடைவுகள் என்பவற்றை உள்ளடக்கி நூல்விபரப் பட்டியல்கள், விளக்கப்படங்கள், புவியியல் விபரங்கள், சுருக்க விளக்கங்கள் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் இணைத்து வெளிவரும் நூலாகக் கருதப்படுகிறது. ஆனால் இவை அனைத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொண்டு தனிநபரால் தொகுக்கப்பட்ட ஒரு தொகுதிக் கலைக் களஞ்சியம் முதற்கொண்டு ஆயிரக்கணக்கான பங்களிப்பாளர்களின் உதவியுடன் உருவாக்கப்படும் பலதொகுதிக் கலைக்களஞ்சியம் வரை இன்றைய நூலகங்களை அலங்கரிக்கின்றன. வெளியிடப்பட்ட இடம், காலம் என்பவற்றுக்கமைய அறிவின் உள்ளடக்கப் பரப்பானது வேறுபடுகிறது. விளக்கப்படங்கள், தேசப்படத் தொகுதிகள், நூல்விபரப் பட்டியல்கள் என்பன பல கலைக்களஞ்சியங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. உயிருடன் இருக்கும் நபர்களின் வாழ்க்கை வரலாறுகள் பொதுவாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. சொல்லடைவுகளும் அண்மைக்காலத் திலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கி.மு 339 அளவில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பிளேட்டோவின் மருமகளான Speusippus என்பவரால் வரலாறு, தத்துவம், கணிதம் போன்றவை தொடர்பாக அவரது மாமனது சிந்தனைகள் தொடராக எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டதை கலைக்களஞ்சிய வரலாற்றின் ஆரம்பப் படிகள் எனக் கருத இடமுண்டு. அதேபோன்று அரிஸ்ரோட்டலினால் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட தொடர் விரிவுரைகளுக்கும் கலைக்களஞ்சியப் பண்பு உண்டு. கலைக் களஞ்சிய வரலாற்றின் மூலகர்த்தாக்களாக இவர்கள் இருவரையும் கொள்ள முடியும்.

கிரேக்கர்களின் அணுகுமுறை பேசப்பட்ட சொற்களைப் பதிவு செய்வதாக இருந்த அதேசமயம் ரோமர்களின் முயற்சியோ நிலைகொண்டிருந்த அறிவை வாசிக்கக்கூடிய வடிவத்தில் பதிவு செய்வதாக இருந்தது. ரோமர்களின் பங்களிப்பில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது கி.பி 23 - 79 காலப்பகுதியில் வாழ்ந்த Plinty என்பவரின் Historia Naturalis என்ற பகுப்பாக்க ரீதியிலான தகவல் தொகுப்பாகும். கிட்டத்தட்ட 1500 வருடங்கள் வரை ஏனைய கலைக்களஞ்சியங்களுக்கான பிரதான மூலமாக இது பயன்பட்டிருக்கிறது. இன்றுங் கூட ரோமானிய, சிற்ப, ஓவிய தகவல்களுக்கான முக்கிய பதிவேடாக இது கருதப்படுகிறது. 100 ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கிட்டத்தட்ட 20,000 தகவல்கள் இதில் தொகுக் கப்பட்டுள்ளன.

கிரேக்க ரோமானிய கலைக்களஞ்சியங்கள் உலக அறிவை அறிவியல், வாழ்வியல் என இரண்டாக வகைப்படுத்தி, வானவியல், புவியியல் தொடர்பான தகவல்களை அறிவியலின் கீழும், நுண்கலைகளை வாழ்வியலின் கீழும் வகைப்படுத்தின. அரபுக் கலைக்களஞ்சியங்களும், இடைக்கால ஐரோப்பிய கிறிஸ்தவ அறிஞர்கள் தயாரித்த கலைக்களஞ்சியங்களும் கடவுள், படைப்பு, மனிதன், மொழிகள், ஒழுக்கம், தொழில்கள் என்ற வரிசையில் ஒழுங்குபடுத்தின. இந்தப் பழைய அமைப்பை மாற்றி முதன்முதலில் அறிவியல் அடிப்படையில் புறஇயற்கை மனிதன், மனிதனால் உருவாக்கப்பட்ட புற இயற்கை எனப் பாகுபடுத்தி கலைக்களஞ்சியங்களின் அமைப்பைப் புதுப்பித்த பெருமை 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸிஸ் பேகன் என்ற அறிஞரையே சாரும். பொருட் கலைக்களஞ்சிய உருவாக்கம் இவருடனிருந்தே ஆரம்பிக்கிறது.

வாசகனின் இலகுவான பாவனையைக் கருத்தில் கொண்டு தகவலை அகரவரிசையில் ஒழுங்குபடுத்திய முதலாவது கலைக்களஞ்சியம் 11ம் நூற்றாண்டில் தோன்றிய Suidas கலைக்களஞ்சியமாகும். பொருட்பாகுபாடே சிறந்தது என்ற கருத்து நிலைகொண்டிருந்தபோதும் இன்றுவரை அகர வரிசையே முதன்மையாக உள்ளது. தமிழ்க் கலைக்களஞ்சியத்திலும் தொல்காப்பிய கால நெடுங்கணக்குமுறையில் அகர வரிசை பின்பற்றப்பட்டபோதும்கூட ஒன்றிற்கு மேற்பட்ட பொருட்துறைகளை ஆழமாக விளக்குமிடத்து பொருட்பாகுபாட்டு முறையே பின்பற்றப்பட்டது. 1594ல் தோன்றியதாகக் கருதப்படும் இரேவேண சித்தரின் அகராதி நிகண்டில் தான் தமிழில் அகரவரிசை முதன்முதலில் பின்பற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை

கலைக்களஞ்சியங்கள் பருமன், வியாபகத்தன்மை, வாசகரின் தன்மை என்பவற்றுக்கமைய வகைப்படுத்தப்படுகின்றன.

பருமன்: கலைக்களஞ்சியங்கள் அவற்றின் பருமனின் அடிப்படையில் 200 பக்கங்கள் கொண்ட ஒருதொகுதிக் கலைக் களஞ்சியம் முதல் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட பல தொகுதிக் கலைக்களஞ்சியங்கள் வரை பலதரப்பட்டதாக அமைகின்றன.

வியாபகத்தன்மை: இதனடிப்படையில் கலைக்களஞ்சியங்களை பொதுக் கலைக்களஞ்சியம், பொருட் கலைக்களஞ்சியங்கள் என இருவகைப்படுத்தலாம்.

வாசகரின் பயன்பாடு: இதனடிப்படையில் கலைக்களஞ்சியங்கள் குழந்தைகள் கலைக்களஞ் சியங்கள், இளையோர் கலைக் களஞ்சியங்கள், வளர்ந்தோர் கலைக்களஞ்சியங்கள் என அமைகின்றன.

பயன்பாடு

* ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த பின்னணித் தகவல்களை வழங்குதல்.
* குறிப்பிட்ட காலப்பகுதி தொடர்பான ஒரு கருத்தைப் பெற உதவுதல்.
* குறிப்பிட்ட பொருட்துறை தொடர்பாக பலதரப்பட்டோரின் வெவ்வேறு அணுகு முறைகளை அறிய உதவுதல்.
* போதியளவு விளக்கப்படங்கள், புள்ளிவிபரங்கள் என்பவற்றைத் தருதல்.
* குறிப்பிட்ட துறை சார்ந்த முழுமையான நூல்விபரப் பட்டியலை அறிய உதவுதல்.

வரையறைகள்

* கலைக்களஞ்சியங்கள் மிக அண்மைக்காலத் தகவல்களைத் தரும் என எதிர்பார்க்க முடியாது.
* அறிவுப் பிரபஞ்சமானது இயக்கரீதியாக விரிவடைந்து செல்லும் தன்மை வாய்ந்தது என்பதால் கலைக் களஞ்சியங்கள் மிகவிரைவிலேயே அதன் அண்மைத்தன்மையை இழந்து விடுகின்றன. அதே சமயம் கலைக்களஞ்சியங்களை ஆண்டு தோறும் பதிப்பித்து வெளியிடுவது என்பது சாத்தியமற்ற தொன்று. எனவே கலைக்களஞ்சியங்களுக்கான அனுபந்தங்கள் ஆண்டுதோறும் வெளியிடப்படுதல் அவசியமானது.
* ஒவ்வொரு பதிப்பு வெளிவரும் போதும் இடப்பிரச்சனை காரணமாக மிகச் சிறந்த கட்டுரைகளைக்கூட உள்ளடக்கும் வாய்ப்பு இன்மையால் இவற்றை அடுத்த பதிப்பில் உள்ளடக்கும் பொருட்டு பதிப்பாசிரியர்கள் விலக்கி விடுவதுண்டு. எனவே ஒரு நூலகமானது கலைக் களஞ்சியத்தின் பலதரப்பட்ட பதிப்புகளையும் கொள்வனவு செய்வது தவிர்க்கமுடியாததாகின்றது.
* சில கலைக்களஞ்சியங்கள் அதன் இறுதிப்பகுதியில் சொல்லடைவை உள்ளடக்காத சந்தர்ப்பங்களில் இது பாவனைக்குக் கடினமானதாக இருக்கக்கூடும்.
* கலைக்களஞ்சியங்களுக்கென வெளியிடப்படும் அனுபந்தங்கள், ஆண்டு நூல்கள் என்பவற்றை நூலக இருப்பில் சேர்த்துக் கொள்வதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள்

i. பிரித்தானிய கலைக்களஞ்சியம்

[New Encyclopaedia Britannica, 15th ed. Chicago: Encyclopaedia Britannica, 1974, 30 Vols]



வரலாறு: இக் கலைக் களஞ்சியத்தின் முதலாவது பதிப்பானது 1768-71 காலப் பகுதியில் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. இதில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள் மிகவும் சுருக்கமானதாக இருந்தது. முதல் ஐந்து பதிப்புகளின் கட்டுரைகளும் வரலாற்று ரீதியான தகவல்களையே கூடுதலாகக் கொண்டிருந்தன. 9ம், 11ம், 14ம் பதிப்புகளும், அவற்றிற்கான அனுபந்தங்களும் இன்றும் குறிப்பிட்ட தகவல்களுக்குப் பயனுள்ளதாக இருக்கின்றன. இதனது 15வது பதிப்பு 1974ம் ஆண்டு Encyclopaedia Britannica என்ற பெயருடன் வெளியானது. பதிப்பு வேலைக்கென 100க்கும் மேற்பட்ட அலுவலர்களையும், 200க்கும் மேற்பட்ட வாசகர்களையும், 4000க்கும் மேற்பட்ட பங்களிப்பாளர்களையும் உள்ளடக்கிய பணியாக இது உள்ளது.

உள்ளடக்கம்: உலக அறிவுத்துறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தகவல் வளமாக இது கருதப்படுகிறது.

ஒழுங்கமைப்பு: 15வது பதிப்பானது Micropaedia, Macropaedia, Propaedia என 3 பிரிவுகளைக் கொண்டது.

Micropaedia: இது தகவல்களைச் சுருக்கமாகத் தருகிறது. இதில் குறிப்பிடப்படும் விடயங்கள் பற்றி மேலதிகமாக அறியவேண்டுமெனில் 'மேலும் பார்க்க' (See also) என்ற மேற்கோள் மூலம் Macropaedia வில் அறிந்து கொள்ளலாம். இதில் 10 தொகுதிகள் காணப்படுகின்றன. உடனடி உசாத்துணைத் தொழிற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும், உசாத்துணை வினாக்களுக்கு மிகவும் சரியான விடையை அணுகுவதற்கும் இது உதவுகிறது. மேலும் பிரித்தானிய கலைக்களஞ்சியத் தொகுதிக்கு இது ஓர் அட்டவணையாக அல்லது சொல்லடைவாகத் தொழிற்படுகிறது.

Macropaedia: இதில் 19 தொகுதிகள் உள்ளன. எந்த ஒரு விடயத்தையும் மிக ஆழமாக அறிய விரும்புவோருக்கு நீண்ட விரிவான கட்டுரைகளின் ஊடாகச் சிறந்த முறையில் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 4707 தனிப்பொருள் சார்ந்த கட்டுரைகள் பரந்த பொருட்தலைப்புகளின் கீழ் 22,000 பக்கங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரைகளும் அதற்கு உரிமையுள்ளவர்களினால் ஒப்பமிடப்படுகின்றன. சில கட்டுரைகள் நூல் அளவுக்கு மிக நீண்டவையாகக் காணப்படுகின்றன.

Propaedia: இதிலுள்ள பொருட்துறைகள் பொருளும் சக்தியும், பூமி வாழ்க்கையும் பூமியும், வாழ்க்கையில் மனிதன், மனித சமூகம், கலை, தொழினுட்பம், மதம், மனித வாழ்வு, அறிவுத்துறைகள் எனப் 10 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பத்துப் பிரிவுகளும் மேலும் 42 பிரிவுகளாகவும் 189 உபபிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. Propaedia வில் நாம் எடுத்துக்கொண்ட பொருட்துறை Micropaedia வில் அல்லது Macropaedia இல் எத்தொகுதியில், எந்தப் பகுதியில் இருக்கின்றது என்று அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலைக்களஞ்சியம் பின்வரும் வடிவங்களில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது:

1. அச்சு வடிவம்
2. இறுவட்டு வடிவம்
3. இணையத்தள வடிவம் (http://www.britannica.com)

இணையத்தள வடிவம் (ttp://www.britannica.com):: இத்தளமானது Britannica வின் தந்தையர் என போற்றப்படும் தோமஸ், ஜோன் என்ற இருவரால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட பிரித்தானிய கலைக்களஞ்சியத்தின் Online வடிவமாக காணப்படுகிறது. நாள்தோறும் புதுப்பிக்கப்படும் இத்தளம் பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில் திறவுச் சொல் ரீதியான தேடலுக்கும் விடய அகரவரிசை, சுட்டி ரீதியான தேடலுக்குமான வாய்ப்பைக் கொண்டுள்ளது. நாளாந்த புதிய விடயங்கள் உடனுக்குடன் மின் அஞ்சலில் பெறும் வசதி காணப்படுகிறது. கைத்தொலைபேசியின் துணையுடன் தேடுதல் செய்யும் வழிமுறை பற்றியும் விளக்கப் பட்டுள்ளது.

ii. **அமெரிக்க கலைக்களஞ்சியம்**

[Encyclopaedia Americana. 30 Vols. New York Grolier, 1976. 30 Vols]



வரலாறு: இது ஒரு பொதுக்கலைக் களஞ்சியம் ஆகும். இது 1829-1833 காலப்பகுதியில் முதல் முதல் வெளியிடப்பட்டது. இந்த முதல் தொகுதியில் உள்ள கட்டுரைகள் ஜேர்மன் ஆக்கங் களிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டவை ஆகும். இதனது முதலாவது பதிப்பு 1903-1904 காலப் பகுதியில் உருவாக்கப்பட்டது. 30 தொகுதிகள் கொண்ட புதிய பதிப்பு ஒன்று 1978ல் பிரசுரிக்கப்பட்டது. இக் கலைக்களஞ்சியம் தகவல் அடிப்படையில் அமெரிக்க சார்புடையதாகக் காணப் படினும் போதிய தகவல்களைக் கொண்டுள்ளதால் நூலகங் களின் பயன்பாட்டிற்கு முக்கியமான ஓர் உசாத்துணை வள மாகக் கொள்ளப்படுகின்றது.

உள்ளடக்கம்: இப்பதிப்பில் பல்வேறு பொருட்துறைகள் சார்ந்த ஏறக்குறைய 6000 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு நூற்றாண்டையும் உள்ளடக்கக்கூடிய வரலாற்று ரீதியான கட்டு ரைகளின் தொடரையும் இது கொண்டுள்ளது. இலக்கியம், தத்துவம், பொருளாதாரம் போன்றவற்றுடன் தொடர்பான முக்கிய ஆக்கங்கள் தனிக் கட்டுரைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. 1923ம் ஆண்டிலிருந்து புதிய பொருட்துறைகளைச் சேர்த்துக்கொள்ளும் நோக்குடன் அமெரிக்காவின் ஆண்டுநூல் (Americana Annual) தயாரிக்கப்பட்டு, அதன் மூலம் மேலதிக தகவல்கள் சேர்க்கப்பட்டு வருடாந்த ரீதியாக வெளியிடப்படுகின்றது.

ஒழுங்கமைப்பு: இதிலுள்ள முதல் 29 தொகுதிகளும் நீண்ட கட்டுரைகளாகவும், 30வது தொகுதியானது ஏனைய தொகுதிகளுக்கு ஒரு சொல்லடைவாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு கட்டுரைகளுடனும் தொடர்பான கலைச்சொற்கள் (Glossary) கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்படுகின்றன. பிரதான கட்டுரைகளுக்கு நூல்விபரப் பட்டியல்கள் தரப்பட்டுள்ளன. சங்கீதம், நுண் கலைகள், கட்டிடக்கலை போன்ற பொருட் துறைகள் மிகக் குறைந்தளவே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. McGraw - Hill Encyclopaedia of Science and Technology. [NewYork: McGraw Hill, 1960]



வரலாறு: 1960ல் முதன்முதல் வெளியிடப்பட்ட இக் கலைக் களஞ்சியம் தொடர்ந்தும் மீளாய்வுக்குட்பட்டும் திருத்தியமைக் கப்பட்டும் வந்திருப்பதுடன் இதன் 4வது பதிப்பானது 1977ம் ஆண்டு 15 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. நோபல் பரிசு பெற்றவர்கள் உட்பட கிட்டத்தட்ட 2,700 அறிவியலா ளரின் பங்களிப்புகள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அறிவியலாளர், ஆசிரியர்கள், பொது வாசகர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மிகப்பயனுள்ள உசாத்துணை சாதனமாக இது கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: அறிவியல் தொழினுட்பம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை இது கொண்டிருக்கின்றதேயன்றி இத்துறை களின் வரலாற்று அம்சங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. வரைவிலக்கணத் துடன் ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு கட்டுரையும் போதுமானளவு பின்னணித்தகவல்களை உள்ளடக்கி மிக ஆழமான வகையில் எடுத்துக்கொண்ட பொருட்துறையை விபரிக்கின்றது. அறிவியல், பொறியியல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மாணவர் களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய ஒரு உசாத்துணை வளமாக இது உள்ளது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு கட்டுரையும் அதன் இறுதியில் நீண்ட நூல்விபரத் தரவுகளை உள்ளடக்கியிருக்கிறது. விளக்கப்படங்கள், வரைபுகள் போதுமானளவு உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையும் பல பொருட்தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொருட்தலைப்புகளின் கீழும் குறுக்கு நோக்கீட்டுக் குறிப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 72 முழுப்பக்க ஒளிப்படத் தகடுகள் இணைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

iv. Encyclopaedia of Library and Information Science. [New York :Marcel Dekker, 1968- vol.1]



வரலாறு: இக் கலைக்களஞ்சியமானது புகழ் பெற்ற துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளைக் கொண்ட ஒரு வெளியீடாகும். கட்டுரைகள் ஓரிரு பக்கங்களிலிருந்து சிறு நூல் அளவுக்கு நீண்டவையாகவும் இருக்கின்றன. நூலக தகவல் அறிவியல் சார்ந்து முதலாவதும் பூரணப் படுத்தப்பட்டதும் அதிகாரம் வாய்ந்ததுமான வெளியீடாக இது கருதப்படுகின்றது.

உள்ளடக்கம் : பலதரப்பட்ட நாடுகளின் நூலகவியல் தொடர்பான தகவல்கள், நூலகவியல் சார்ந்த புகழ் பெற்ற நபர்களின் வாழ்க்கை வரலாறுகள், வரலாற்று ரீதியான தகவல்கள் போன்றவற்றை இக் கலைக்களஞ்சியம் உள்ளடக்குகிறது. தேவையான இடங்களில் அட்டவணைகளும் குறுக்கு நோக்கீட்டுக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டுரைகள் மிக விரிவான நூல்விவரக் குறிப்புகளைக் கொண்டுள்ளன. நூலக தகவல் விஞ்ஞான வரலாற்றில் இவ் உசாத்துணை நூலானது ஒரு மைல்கல் என்றே கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைப்பு: இக் கலைக்களஞ்சியத்துக்குப் பங்களிப்புச் செய்த பங்களிப்பாளர்களின் பட்டியல் ஒவ்வொரு தொகுதியின் ஆரம்பத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது. 6 வது தொகுதியில் தொகுதி 1-5 வரைக்குமான அகரவரிசைச் சொல்லடைவு கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதித் தொகுதிகளுக்கு சொல்லடைவுகள் உருவாக்கப்படாமை இதன் மிகப் பெரும் குறைபாடாக இருந்தது.

v. Encyclopaedia of Information and Library Science 10 vols. [ed.by Isvari Korea,Gad David Ojuando and Khalid Kamal Faruqi.- New Delhi: Akashdeep Publishing House,1993. ISBN 7158 - 285-0 (Set)]



தகவல் அமைப்பொன்றில் பணி புரியும் தகவல் அறிவியலாளர் தமது பணியைத் திறம்பட ஆற்றுவதற்கு அவசியமானதாகக் கருதப்படுகின்ற துறைகளான பதிப்புக் கலை, காகித உற்பத்தி, வெளியீடு, நூல் கட்டல், கணினிப் பயன்பாடு, தரவுச் செய்முறை போன்றவற்றில் பயன்படும் சொற்களைக் கணிசமானளவில் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்யப்பட்டுள்ளது. சில சொற்களுக்கு மிகச் சுருக்கமான வரைவிலக்கணங்களும், சிலவற்றுக்கு விரிவான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. நூலகவியல் மாணவர்களுக்கு உதவும் வகையில் இது தொகுக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் போன்றவற்றுக்குப் பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

vi. International Encyclopaedia of Social Science. [16 Volumes &Index / edited by L. Sills.-New York: Collier & Macmillan, 1967]



வரலாறு: சமூக அறிவியல் தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்ட மிக நீண்ட கட்டுரைகளின் தொகுப்பே இக்கலைக் களஞ்சியமாகும். மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவுமுறைகள் தொடர்பான பல அம்சங்களை இக்கட்டுரைகள் உள்ளடக்கியிருக்கின்றன.

உள்ளடக்கம்: மானுடவியல், பொருளாதாரம், புவியியல், வரலாறு, சட்டம், அறிவியல், உளவியல், சமூகவியல், புள்ளி விவரவியல் போன்ற பல துறைகளுடன் தொடர்புடைய கட்டுரைகளை இக் கலைக் களஞ்சியம் கொண்டுள்ளது. பொதுவான வாசகர்களை விடவும் சமூக அறிவியலாளருக்குப் பயன்படும் விதத்தில் இக் கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: எழுத்தொழுங்கிலான அகரவரிசையில் கட்டுரைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. கடைசித் தொகுதி மூன்று வகையான சொல்லடைவைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. **அபிதான சிந்தாமணி, இரண்டாவது மீளாய்வுப் பதிப்பு. [புதுடெல்கி: ஆசிய கல்விச் சேவைகள், 1981]**



வரலாறு: இதன் முதலாவது பதிப்பு 1050 பக்கங்களை உள்ளடக்கி 1910ல் வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு 1934ல், சிங்காரவேலு முதலியாரின் மகன் சிவப்பிரகாச முதலியாரினால் புதிய சொற்கள் திருத்தங்களுடன் 1634 பக்கங்களை உள்ளடக்கி வெளிவந்தது.

உள்ளடக்கம்: வேதப் பொருள் விளக்கம், மகா புராணக் கதைகள், இதிகாசங்கள், ஸ்மிருதி இலக்கியங்கள், பரதம், மருத்துவம் , சோதிடம், ஆழ்வார்கள், வித்துவான்களின் வாழ்க்கை வரலாறுகள், சமய வரலாறுகள், சைவ ஆலயங்கள், மடங்கள், ஆதீனங்களின் வரலாறுகள், இந்து தேசங்களை ஆண்ட அரசர்களின் வரலாறுகள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

viii. **வாழ்வியல் களஞ்சியம். [தஞ்சாவூர் : தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1986]**



வரலாறு: கடந்த இருபது ஆண்டுகளாக உலகில் வளர்ந்து வந்துள்ள பல்வேறு அறிவு வளர்ச்சித்துறைகளையும் உள்ளடக்கிப் பரந்த அளவில் இக்கலைக் களஞ்சியத்தை 14 தொகுதிகளில் வெளியிடுவதென 1983இல் திட்டமிட்டு அதன் முதலாவது தொகுதியும் 1986இல் வெளியிடப்பட்டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட கலைக்களஞ்சியத்தையும் விட விரிவானதாகவும், இன்றைய காலப் பகுதி வரை வளர்ந்திருக்கின்ற கோட்பாடுகள், கொள்கைகள், கருத்துக்கள், செய்திகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் இது இருக்கிறது. அகர எழுத்தில் மட்டும் 1000 பக்கங்களில் 900 தலைப்புக்களைத் தாங்கி முதலாவது தொகுதி வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்: மொழி, மொழியியல், கல்வியியல், மெய்ப்பொருளியல், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், உளவியல், சமூகவியல், மேலாண்மையியல், பொருளியல், வணிகவியல், மக்கள் தொகையியல், மானிடவியல், அரசியல், சட்டவியல், புவியியல், கவின்கலையியல், நாட்டுப்புறவியல், விளையாட்டியல் போன்ற வாழ்வியல் கூறுகளை ஆழமாகவும் விரிவாகவும் திட்பநுட்பத்துடனும் ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கியது.

ஒழுங்கமைப்பு: புதிய கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்கும் தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அரிய முயற்சியில் உருவானவை அறிவியல் களஞ்சியம், வாழ்வியல் களஞ்சியம் என்ற இரு கலைக்களஞ்சியங்களாகும். இத்தொகுதியை உருவாக்கும் போது கருத்தில் எடுக்கப்பட்ட அம்சங்கள்.

- *ஆங்கில சமன் சொற்கள் தரப்பட வேண்டிய தலைப்புக்களுக்குக் கட்டுரைத் தலைப்பின் தொடக்கத்தில் அவை தரப் பெறாமல் கட்டுரையின் உட்பகுதியில் பொருத்தமான இடத்தில் தரப்பெற்றுள்ளன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கிரந்த எழுத்துக்கள் கூடியவரை தவிர்க்கப்பட்டுள்ளன. வேற்றொலிச் சொற்களுக்குக் கூடியவரை தமிழ் மரபுக்கேற்ப ஒலிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
* பிற மொழிச்சொற்களுக்குத் தமிழிலக்கண மரபுப்படி சொல்லுக்கு முதலிலும் ஈற்றிலும் தமிழ் எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ரூபா - உரூபா
* 'கள்' விகுதி சேர்ந்த வன்றொடர் குற்றியலுகரச் சொற்கள், வல்லினம் மிக்கு வரும் விதியினைப் பெறாமல் ஆளப் பட்டுள்ளன (எழுத்துக்கள்).
* கட்டுரையின் பெயர் ஒலிமாற்றம் செய்யப்படாது உள்ளவாறே கொடுக்கப் பட்டுள்ளது.
* கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள துணை நூல்கள் ஆசிரியர் பெயர், தலைப்பு, வெளியீட்டகம், ஆண்டு என்ற ஒழுங்கில் கொடுக்கப்பட்டுள்ளன.
* இத்தொகுதியில் கையாளப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்கள் தொகுதியின் இறுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.
* கட்டுரைகள் இடம்பெற்றுள்ள புள்ளிவிபரங்கள் 1984ம் ஆண்டு வரை கிடைத் தவையாகும்.

சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தாரால் 1947-1954 வரையில் வெளியிடப்பட்ட முதல் தொகுதியில் உள்ள வாழ்வியல் தலைப்புக்கள் அனைத்தும் இக்கால வளர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ இரு மடங்கு புதிய தலைப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்காங்கு பொருத்தமான நிழல்படங்கள், வண்ணப் படங்கள், வரைபடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ix. அறிவியல் களஞ்சியம். [தஞ்சாவூர்: தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1986]



வரலாறு: அறிவியல் உலகில் பன்மடங்கு வேகமாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை உள்ளடக்கியதாக பரந்த அளவில் இக் கலைக்களஞ்சியத்தை 20வது தொகுதிகளில் வெளியிடுவது என 1983ல் திட்டமிட்டு அதன் முதலாவது தொகுதியில் 1986ல் வெளியிடப்பட்டது. இதுவரை 16 தொகுதிகள் இக்கலைக் களஞ்சியத்தில் வெளிவந்துள்ளது.

உள்ளடக்கம்: இயற்பியல், வேதியல், வானியல், கணிதம், புள்ளியியல், மக்கள் தொகையியல், நிலவியல், நிலவரையியல், வானிலையியல், கடலியல், பொறியியல், தொழில்நுட்பத் துறைகள், தாவரவியல், வேளாண்மையியல், தோட்டக்கலை, சூழலியல், விலங்கியல், உடல் இயங்கியல், உயிர்வேதிகள், மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்தமருத்துவம்.

x. பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் [சென்னை : விகடன் பிரசுரம், 2007]

புகழ் பெற்ற Encyclopaedia Britannica உருவாக்கியவர்களின் கைவண் ணத்தில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்ட தகவல்களுடன் இந்த பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் களஞ்சியத்தில், தொழில் நுட்பம் மற்றும் உலக நடப்பு களின் மிகச் சமீபத்திய முன்னேற்றங்கள் இடம் பெற்றுள்ளன. கிட்டத்தட்ட 28000 கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கொண்ட மூன்று தொகுதிகளில், இந்தியா குறித்தான 2000 கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இலங்கை, மலேசியா போன்ற தமிழர் வாழும் பகுதிகளைப் பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட புகைப்படங்கள், ஓவியங்கள், அட்டவணைகள் மற்றும் விளக்கப்படங்களும் இடம் பெற்றுள்ளன. புவியியல், வரலாறு, அறிவியல், வணிகம், அரசியல், மக்கள், கலை இலக்கியம், கலாசாரம் மற்றும் பல தலைப்புகளில் செறிவான தகவல் கட்டுரைகளும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. மேலும் தமிழ் நெடுங்கணக்கான அ - ன வரையான எளிய வரிசை முறையும் இத் தொகுதியில் பின்பற்றப்பட்டுள்ளது.

கலைக்கவஞ்சியங்களுக்கான தெரிவு செய்யப்பட்ட சில இணையத் தளங்கள்

http://www.wikipedia.org

இத்தளம் Wikipidia என்ற இணைய கலைக் களஞ்சியத்தளம் ஆகும். இதில் 40ற்கும் மேற்பட்ட மொழிகளில் தேடல் செய்யும் வசதி காணப்படுவதுடன் ஆங்கில மொழியிலமைந்த 1.8 மில்லியனுக்கும் அதிகமான பின்னணி தகவல்கள் இணைப்பிலுள்ளன. Wikimedia Foundation ஆல் பராமரிக்கப்படும் இத்தளம் Wiktionary , wiki books, wikiversity, wikinews, wiki species, wiki quote, wiki source, Meta wiki ஆகிய உபதளங்களை உள்ளடக்கியுள்ளது.

8.2 அகராதிகள் [Dictionaries]

ஒரு மொழியில் வழங்குகின்ற சொற்களை அகரவரிசையில் நிறுத்தி அவற்றிற்கு பொருள் கூறும் நூல்கள் அகராதிகள் எனப்படும். ஒரு மொழியின் சொல் வளம், அதன் பொருள் நயம், அவை பயன்படுத் தப்படும் விதம், அவற்றின் இலக்கணக் கூறுகள், அவற்றின் வர லாற்று மூலம் முதலிய இன்னோரன்ன அம்சங்களை அகரவரிசையில் தந்து நிற்பது அகராதி என்கிறார் திரு. அகத்தியலிங்கம் அவர்கள்.

அகராதிகள் பொதுவாக மொழி அகராதிகள், பொருள் அகராதிகள் என இரு வகைப் படும்.

8.21 மொழி அகராதிகள் [Linguistic Dictionaries]

மொழி அகராதிகள் வரலாற்று அகராதிகள், தற்கால விளக்க அகரா திகள் என மேலும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

8.211 வரலாற்று அகராதிகள் [Historical Dictionaries]

சொல்லின் வடிவம், அதன் பொருள் என்பவற்றின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கும் அகராதி வகை இதுவாகும். இவை ஒப்பியல் அகராதிகள், சொற்பிறப்பியல் அகராதிகள், வரலாற்று முறைப்பொருள் அகராதிகள் என மூவகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒப்பியல் அகராதிகள் [Comparative Dictionaries]: ஒப்பியல் பண்புகளை சிறப்பாக எடுத்துக்காட்ட உதவும் அகராதி வகை இது. எ.டு: Hunter இன் ஒப்பியல் அகராதி (1968)
* சொற்பிறப்பியல் அகராதிகள் [Etymological Dictionaries]: ஒரு மொழியில் வழங்கும் சொல்லின் பிறப்பைக் கண்டறிய உதவுவது சொற்பிறப்பியல் அகராதியாகும். எடுத்துக் காட்டாக, தமிழ் மொழியில் பயன்படுத்தப்படும் விறாந்தை என்ற சொல் போர்த்துக்கீச மொழிச் சொல்லாகும்.எ.டு: திராவிட சொற்பிறப்பியல்பு அகராதி (1961).
* வரலாற்று முறைப்பொருள் அகராதிகள் [Historical Dictionaries]: ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்பட்ட சொல்லின் வடிவிலும் பொருளிலும் காணும் மாற்றங்களைப் பதிவு செய்வது வரலாற்று முறைப்பொருள் அகராதிகள் ஆகும்.

8.212 **தற்கால விளக்க அகராதிகள்**

தற்கால விளக்க அகராதிகள் பொது அகராதிகள், சிறப்பு அகராதிகள் என இரு வகைப்படும்.

8.2121 **பொது அகராதிகள்** [General Dictionaries]

எல்லாச் சொற்களுக்கும் பொதுவாகப் பொருள் கூறுவது பொது அகராதிகள் ஆகும். இது நிலை மொழி அகராதிகள், பெருவிளக்க அகராதிகள் என இரு வகைப்படும்.

* நிலை மொழி அகராதிகள் [Standard Descriptive Dictionaries]: பொது அகராதியில் தகுதி வழக்கை மட்டும் விளக்கும் அகராதிகள் நிலை மொழி அகராதிகள் ஆகும். எ - டு அகராதி மோனைக்ககராதி எதுகை.
* பெருவிளக்க அகராதிகள் [Overall Description Dictionaries]: மொழியில் வழங்கும் கிளைமொழி, குறுமொழி, திசை மொழி, கொச்சைமொழி முதலியவற்றை விளக்குவன பெருவிளக்க அகராதிகள் ஆகும். எ-டு : வைணவவுரை அருஞ்சொல் அகராதி (17ம் நூற்றாண்டு), மீவிளக்க அகராதிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

8.2122 **சிறப்பு அகராதிகள்** [Special Dictionaries]

இவை வரைவில்சேர்க்கை அகராதிகள், மரபுச்சேர்க்கை அகராதிகள் என மேலும் இருவ கைப்படும்.

* வரைவில் சேர்க்கை அகராதிகள் [Dictionaries of True Combination]: இவை கிளை மொழி அகராதிகள், கலைச்சொல் அகராதிகள், நூல் அகராதிகள், சொல்லடைவுகள் [Indexes] சொற்பொருள் குறிப்பு அகராதிகள் 'சொல் இசைவுத் தொகுதி', குறுக்க விளக்க அகராதிகள் [Dictionaries of Abbreviation] என மேலும் பல வகைப்படும்.
* கிளை மொழி அகராதிகள் [Dialect Cictionaries] ஒரு மொழியில் காணப்படும் பல்வேறு கிளைமொழிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மொழி வேறுபாட்டை விளக்க உருவாக்கப்பட்டவை கிளைமொழி அகராதிகள் ஆகும். எ-டு வீரமாமுனிவர் இயற்றிய தமிழ்-இலத்தீன் அகராதி(1882)
* கலைச்சொல் அகராதிகள் [Glossaries]: அருஞ்சொல்லகராதி என்பது குறித்த துறை சார்ந்த, விடயம் சார்ந்த நிலையில் வழக்கிலிருக்கும் கலைச்சொற்களைச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தும் அகரவரிசையிலமைந்த பட்டியல் எனப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Reitz 2006] புதிய அறிவுத்துறைகளின் வளர்ச்சியில் மொழி சார்ந்த கலைச் சொற்கள் விசேட விளக்கத்திற்குரியன. துறைசார்ந்த அனைவருக்கும் தேவைப்படும் குறித்த மொழி சார்ந்த துறைசார் கலைச்சொற்களை இத்தகைய அருஞ் சொல்லகராதிகள் அறிமுகம் செய்கின்றன. இவை ஒருமொழி சார்ந்ததாகவோ அல்லது இரு மொழி சார்ந்ததாகவோ இருக்கும். எ-டு: ALA Glossary of Library Terms – தமிழ் ஆங்கில கலைச்சொற்றொகுதி - சமூக விஞ்ஞானம். (இருமொழி)

* நூல் அகராதிகள் [Exegetic / Text Dictionaries]: நூல்களில் பயன்பட்ட சொற்களின் பொருளைக் கண்டறிய உதவுவது நூல் அகராதிகள் ஆகும்.
* சொல்லிசைவுத் தொகுதிகள் (Concordances): குறிப்பிட்ட தலைப்பில் கையாளப்பட்ட அல்லது குறித்த நபரொருவரின் ஆக்கங்களில் இடம்பெற்ற தலையாயசொற்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களின் அகரவரிசைப்படுத்தப்பட்ட சொல்லடைவு இதுவாகும் (Reitz 2006). குறித்த மொழியில் எழுதப்பட்ட இலக்கத்தை அடிப் படையாகக் கொண்டோ அல்லது அதன் ஆசிரியரை அடிப்படையாகக் கொண்டோ அம் மொழியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அனைத்துச் சொற்களையும் அகரவரிசை ப்படுத்துவன சொல்லிசைவுத் தொகுதிகளாகும். மொழியியலாளர்களுக்கும் மொழி கற்கும் மாணவர்களுக்கும் சொற்களின் பயன்பாடு தொடர்பான ஆய்வாளர்களுக்கும் இவை அகராதியைப் போலப் பயன்தரவல்லன.

பயன்பாடு

* சொற்களின் அல்லது சொற்றொடர்களின் பொருளைக் கண்டுபிடிக்க உதவுதல்.
* ஒரு சொல்லின் எழுத்தாக்கம் (Spelling) அசையொலிப்பு (Syllabication) ஒலிப்பின் அசையிடையே நிகழும் இடைத் தயக்கநிலை (Hyphenation) போன்றவற்றைச் சரிபார்ப்பதற்கு உதவுதல்.
* ஒரு சொல்லின் உச்சரிப்பைச் சரிபார்ப்பதற்கு உதவுதல்.
* ஒரு சொல்லின் மூலம், அது பெறப்பட்ட முறை போன்ற விபரங்கள் உட்பட்ட வரலாற்றை அறிவதற்கு உதவுதல்.
* தொன்மை வாய்ந்த சொற்கள், வழக்கற்றுப்போன சொற்கள், அரிய சொற்கள், கொச்சைச் சொற்கள், புதிய சொற்கள் போன்றவற்றின் பயன்பாட்டைத் தீர்மானிக்க உதவுதல்.
* பேச்சு வழக்குச் சொற்களைச் சுட்டுவதற்கு உதவுதல்.
* ஒத்தசொல், எதிர்ச்சொல், ஒரு பொருள் பல சொல் போன்ற வற்றை அறிவதற்கு உதவுதல்.
* ஒரு சொல்லின் குறுக்க விளக்கம், தலைப்பெழுத்துச் சொற்கள், குறியீடுகள், அடையா ளங்கள் போன்றவற்றை அறிவதற்கு உதவுதல்.
* ஆறு, மலை, நகரம் போன்ற பிரதான இடப்பெயர்களைச் சுட்டுவதற்கு உதவுதல்.
* பிரதான நபர்களின் வரலாற்றை அறிய உதவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அந்நிய மொழிப் பதங்களை அறிய உதவுதல்.
* மேற்கோள்களை வழங்குதல்.

வரையறைகள்

புதிய சொற்களின் பிறப்பு மிக வேகமானது. அதேசமயம் அகராதிகளை மீளாய்வு செய்யும் பணி கடினமானதும் காலம் கூடியது மாகும் என்பதனால் அகராதிகளில் புதிய சொற்களைப் பெறும் முயற்சி அரிதாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டுகள்

i. Oxford English Dictionary. [1st Edition / ed. by A.H. Murray.- Oxford:Oxford University Press,1933- 12vols]



வரலாறு: இதன் முதலாவது பதிப்பு James A.H.Murray, Henry Bradley,W.A.Craigie, போன்றோரால் பதிப்பிக்கப்பட்டு 1933ல் 12 தொகுதிகளாக அனுபந்தத்துடன் வெளியிடப்பட்டது. முதலாவது பதிப்பும் அதனுடன் தொடர்ந்து நான்கு தொகுதி களாக வெளியிடப்பட்ட அனுபந்தங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, அதனுடன் புதிய சொற்களும் சேர்க்கப்பட்டு 20 தொகுதிகள் அடங்கிய 2வது பதிப்பு 1989ல் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: பிரதான துறைகளான மருத்துவம், அறிவியல், கணினித் தொடர்புத் தொழினுட்பம் போன்றவை சார்பான புதிய சொற்கள், அமெரிக்க பிரித்தானியச் சொற்றொடர்கள், உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் ஏனைய ஆங்கில மொழிச் சொற்கள் போன்றவை உட்பட 5000 புதிய சொற்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: சர்வதேச அகரவரிசை உச்சரிப்பைப் பயன் படுத்தி சொற்களின் உச்சரிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் அகராதியானது A.D 1150 காலப்பகுதி வரையிலான ஆங்கில மொழிச் சொற்றொகுதிகளை உள்ளடக்குவதுடன் ஒரு சொல்லின் கருத்து அக்கருத்தில் ஏற்படும் மாற்றம் பற்றிய வரலாற்று ரீதியான தகவல்களைக் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் சொற்கள், சொற்றொடர்களுக்கான பதிவுகளை இவ் அகராதி உள்ளடக்குகின்றது. இவற்றில் சொற்களின் வரைவிலக்கணம் உட்பட இலக்கியம், தொழினுட்பம் முதலிய தகவல் வளங்களிலிருந்து பெறப்பட்ட இரண்டு மில்லியன் மேற்கோள்களும் அடங்கும்.

ii. WEBSTER'S Third New International Dictionary of the English Language. [1st Edition.- Springfield: Mass Marriam,1909-]

வரலாறு: இதன் இரண்டாவது பதிப்பு 1934ம் ஆண்டிலும் மூன்றாவது பதிப்பு 1961லும் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: கிட்டத்தட்ட 6 இலட்சம் பதிவுகளைக் கொண்டிருந்த 2வது பதிப்பில் தேவையற்ற வழக்கற்றுப்போன சொற்கள் நீக்கப் பட்டு 4,50,000 பதிவுகளாகக் குறைக்கப்பட்ட போதும், அறிவியல் தொழினுட்பம் சார்ந்த 1,00,000 புதிய சொற்கள் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன. 1976ல் மூன்றாவது பதிப்புக்கு ஒரு அனுபந்தம் வெளியிடப்பட்டது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம், கணிதம், தொழினுட்பம், அரசியல், விளையாட்டு போன்ற துறைகளிலிருந்து எடுக்கப்பட்ட 6,000 புதிய சொற்களை உள்ளடக்கியுள்ளது.

ஒழுங்கமைப்பு: இதன் ஒவ்வொரு பதிவும் சொல்லின் உச்சரிப்பு, அசை வாக்கம், சொற்பிறப்பு, வரைவிலக்கணம், விளக்க மேற்கோள்கள் என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் சில பதிவுகள் விளக்கப்படங்களையும் உள்ளடக்குகின்றது. http:// www. m-w. com இத்தளம் Marriam Webster inco என்ற நிறுவனத்தில் பராமரிக்கப் படும் online ஆங்கில அகராதி தளம் ஆகும். இதிலும் சுமார் 59,000 சொற்கள் குறுக்கு உசாத்துணையுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறித்த சொல்லை உள் நுழைத்து தேடல், அகர வரிசைத் தேடல், வகைப்படுத்தப்பட்ட தேடல் என்பவற்றிற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அகராதித் தளங்களுக்கான தெரிவுசெய்யப்பட்ட சில இணையத்தளங்கள்

http://www.lu.com/odlis

இத்தளமானது Joan M. Reitz என்பவரால் உருவாக்கப்பட்டது. Odlis என்ற பெயரில் உடன் நிகழ் அகராதியை இத்தளம் கொண்டுள்ளது. நூலகத்தகவல் விஞ்ஞானம் சார்ந்தது 1997ல் இத்தளம் உருவாக்கப்பட்டது. 4200 சொற்கள் குறுக்கு உசாத்துணைகளுடன் அகரவரிசையில் பட்டியலிடப்பட்டுள்ளன. நூலகத்துறை சார்ந்தவர்களுக்கு மிகப்பயனுள்ள தளமாகும்.

http://www.a-z-dictionaries.com

இத்தளமானது அகராதி தளங்களின் வழிகாட்டித் தொகுப்பாக அமைகிறது. பிரசித்தி பெற்ற அகராதிகள், அகராதி தொகுப்புக்கள் அகராதி தொடர்பான கட்டுரைகள் ஆகிய வகைப் படுத்தலின் கீழ் அவற்றை Access செய்வதற்கான வழிகள் இணைக்கப்பட்டுள்ளன. 100ற்கு மேற்பட்ட online அகராதிகள் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஆங்கிலத்திலிருந்து 20ற்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யும் வசதி காணப்படுகிறது. Marriam Websters, Franklin, Oxford, Cambridge, Chambersபோன்ற பிரசித்தி பெற்ற அகராதிகள் இத்தளத்தில் உள்ளன.

http://www.onelook.com

இத்தளம் ஒரே சொல்லை பல அகராதிகளில் தேடல் செய்யும் வசதியைக் கொண்டுள்ளது. சுமார் 937 அகராதிகளில் உள்ள 8,853,196 சொற்களை தேடல் செய்யும் வசதி காணப்படுகிறது. இதில் wild card pattern முறையில் பின்வருமாறு தேடல் செய்ய முடிகிறது: சொல் ஒன்றில் வரையறுத்து கூற முடியாத எழுத்துக்களில் தனி எழுத்தெனில் '?' குறியீட்டையும் வரையறுக் கப்படாத எண்ணிக்கைக்கு "*" குறியையும் பயன்படுத்தல்.

உ+ம்: BLUE BIRD என்ற சொல்லைத்தேடுவதற்கு பின்வரும் முறைகளைப் பயன் படுத்தலாம்:

*BIRD
BLUE*
BL????RD

பொது நூலகம்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அகராதிகள்

i. அபிதான கோசம். [யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம், 1902]

வரலாறு: யாழ்ப்பாணத்து மானிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்டு இலங்கை இராஜ மந்திர சபை அங்கத் தவருள் ஒருவரான ஸ்ரீமான் பொ.குமாரசாமி முதலியார் அவர்களின் ஞாபகச் சின்னமாக வெளியிடப்பட்ட இந்நூல் தமிழ் அகராதி வர லாற்றில் என்றும் நினைவில் வைத்திருக்கவேண்டிய ஒரு சாதனமாகக் கருதப்படுகிறது. நூலின் தலைப்பில் தமிழ் இதிகாச அகராதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் கலைக் களஞ்சியப்பண்பே இதில் அதிகம் காணப்படுகிறது.

உள்ளடக்கம்: வேதாகம புராண இதிகாசங்களில் கூறப்பட்ட தெய்வங்கள், தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், அசுரர், அவதார புருஷர் போன்ற வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களையும், நதிகள், புண்ணிய தீர்த்தங்கள் போன்ற இடங்களின் வரலாறுகள், தமிழ்நாட்டின் பண்டைய அரசர், புலவர், வள்ளல்களின் வரலாறுகள் போன்றவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இந்நூலில் உள்ளவை பெரும்பாலும் பல நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவை. பல பதிவுகள் உள்ளதை உள்ளபடியே கூறுபவை, இன்னும் சில சுருக்கமாக்கப்பட்டவை, சில விரிவாக்கப்பட்டவை. பல பதிவுகள் கலைக்களஞ்சியம் போன்று விரிவான தகவலை உள்ளடக்கியவை.

ii. தமிழ்ச்சொல்லகராதி. [கதிரவேற்பிள்ளை – மறுபதிப்பு – சென்னை – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1910]



வரலாறு: யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கு. கதிரவேற்பிள்ளையின் அரும்பணியில் உருவான இவ்வகராதி மூன்று பகுதிகளைக் கொண்டதாக 1910, 1912, 1923 காலப்பகுதிகளில் தமிழ்ச் சொல்லகராதி என்னும் பெயருடன் வெளிவந்த போதும் மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டமையால் தமிழ்ச்சங்க அகராதி என்றே வழங்கியது. சொற்பொருளுக்கு அடிப்படை ஆதாரமாக நூற்சான்று களைப்பயன்படுத்தியமை இந்நூலின் புதிய முயற்சியாகும்.

ஒழுங்கமைப்பு: சொற்பொருளுக்கு இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள்களை வழங்கிய முதலாவது தமிழ்-தமிழ் அகராதி என்ற சிறப்பு இவ்வகராதிக்கு உண்டு. 344 நூல்களிலிருந்து இவ் அகராதிக்கு மேற்கோள்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சொல்லின் மூலம் கொடுக்கப் பட்டுள்ளதுடன் முன்னைய அகராதிகளில் இல்லாத பல புதிய சொற்களும் திருந்திய விளக்கங்களும் காணப்படுகின்றன. ஒரு சொல் பல பொருள்களுக்கு விளக்கம் தரும்போது 1, 2 என எண் குறியிட்டுக் காட்டியிருப்பது ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள் என்பதை அடையாளங் காண உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. **கழகத் தமிழ் அகராதி. [திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1964–]**

இது முதலில் கழகத் தமிழ்க் கையகராதி என்ற பெயருடன் 1940 ல் வெளியிடப்பட்டது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணி மேகலை, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கியங்கள், அரிச்சந்திர புராணம், பெரியபுராணம் போன்ற புராணங்கள், இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள், சதகங்கள் ஆகியவற்றில் காணப்படும் அருஞ்சொற்களும் மாணவர்கட்குப் பயன்படும் வழக்காற்றுச் சொற்களுமே இதில் எடுத்தாய்ந்து சுருக்கமாக வெளியிடப்பட்டது. பின்னர் பல காலம் பெரிய தமிழ் அகராதி ஒன்றைத் தொகுக்க வேண்டும் என்ற முயற்சியினடிப்படையில் திரு.சு.அ. இராமசாமிப்புலவர் அவர்களின் அரும்முயற்சியில் 884 பக்கங்களைக் கொண்ட இவ்வகராதி 1964ல் முதற்பதிப்பாக வெளியானது. 15ம் பதிப்பு 1999ல் வெளிவந்தது.

iv. **தமிழ் – தமிழ் அகரமுதலி. [தொகுப்பாசிரியர் – மு.சண்முகம்பிள்ளை –சென்னை. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1985]**

இவ்வகராதி 1975ல் உருவாக்கப்பட்டது. இத்தொகுப்பில் இலக்கிய இலக்கண வழக்குச் சொற்களும், எல்லாத்துறைகளுக்கும் பயன்படத்தக்க பொதுமைச் சொற்களும் உள்ளடக் கப்பட்டன. கொச்சைச் சொற்களாகிய திருந்தாப் பேச்சும், சிதைவுச் சொற்களும் மாணவர் உள்ளத்தில் புகாமல் தடுப்பதன் மூலமே உண்மைச் சொல்லுருவம் காண்பதில் ஊக்கம் கொள்வர் என்பதை மனதில் கொண்டு கொச்சைச் சொற்களுக்கு இவ்வகராதி இடமளிக் கவில்லை. அதுபோல் நூற்பெயர், ஆசிரியர் பெயர், காவிய மாந்தர் பெயர், ஊர்ப்பெயர் முதலிய இடப்பெயர் போன்ற சிறப்புப் பெயர்களும் உள்ளடக்கப்படவில்லை. தமிழில் வழங்கும் வடசொற்களுள் இலக்கிய ஆட்சி பெற்றனவும், இன்றைய வழக்கில் தமிழுருவில் மாறி வழங்குவனவுமான சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

அகராதிச் சுருக்கம், இளைஞர் தமிழ்க்கையகராதி, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, கழகத் தமிழ்க் கையகராதி, மாணவர் தமிழகராதி, நவீன தமிழகராதி, கழகத் தமிழகராதி, கோனார் தமிழ்க் கையகராதி ஆகிய எட்டு சிற்றகராதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் சேர்க்கப் பட்டிருக்காத சொற்கள், புதிய சொற்கள் என்பவை இதில் உள்ளடக்கப்பட்டிருப்பது இவ் வகராதியின் சிறப்பம்சமாகும். தமிழில் உள்ள ஒரு மொழி அகராதிகளுள் மிகப்பெரியதான தமிழ்ச்சங்க அகராதியையும், அதைவிடப் பெரிதான இருமொழி அகராதியான சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான தமிழ் லெக்சிகனையும் வைத்து இவ்வகராதியின் சொற் பொருட்கள் சரிபார்க்கப்பட்டன. அகராதி என்ற வட சொல்லுக்கு இணையான பொருள் தரும் அகரமுதலி என்ற தமிழ்ச்சொல்லில் வெளிவரும் முதல் அகராதி இதுவாகும். இப் பதத்தை உருவாக்கியவர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களாவர்.

v. **சதுரகராதி. [வீரமாமுனிவர், மதுரை: இ.மா. கோபாலகிருஷ்ணக்கோன், 1928]**

பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு வகை அம்சங்களைக் கொண்டு முதன்முதல் தமிழ் உரைநடையில் சொற் பொருள் விளக்கங்களை உள்ளடக்கித் தொகுக்கப்பட்ட அகர முதலியே இச்சதுரகராதியாகும். நிகண்டுகளில் செய்யுள் வடிவில் அமைந்த சொற்பொருள் விளக்கங்களை உரைநடையில் மாற்றியமைக்கும் இம்முயற்சி 1732ல் ஆரம்பிக்கப்பட்டாலுங் கூட இது அச்சிடப்பட்டது 1824ம் ஆண்டில் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. **மதுரைத் தமிழ்ப் பேரகராதி. [மதுரை: இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன், 1937: புதிய பதிப்பு – சென்னை : சந்தியா பதிப்பகம், 2004]**

இப்பேரகராதியின் முதற்பதிப்பு 1937இல் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு இரு தொகுதிகளாக (முதற்தொகுதி 1229 பக்கங்களுடனும் 1058 பக்கங்களுடனும்) 1956 இல் வெளியாயிற்று. மதுரையைச் சேர்ந்த இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களால் வெளியிடப்பட்ட இவ் அகராதி தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட சமஸ்கிருத, உருது, அராபி, பர்ஷியன் போத்துக்கீஸ், ஆங்கிலச் சொற்களுக்குமான பொருளையும் வழங்குகின்றது.

vii. **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. [விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு – சென்னை: க்ரியா பதிப்பகம், 1992–]**

தற்காலத் தமிழுக்கென்று உருவாக்கப்பட்ட முதல் அகராதியாகக் கருதப்படும் இவ் அகராதியின் முதற்பதிப்பு 1992 இல் வெளிவந்தது. 16முறைகள் மீள் பதிப்பிக்கப்பட்ட பின் 2008 ஆம் ஆண்டு விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு வெளியாகியுள்ளது. தற்காலத் தமிழில் உள்ள சொற்களை எடுத்துக் காட்டு வாக்கியங்களோடு விளக்கும் முதல் அகராதியான இது தற்காலத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல் / விளக்கத்தையும் தந்திருக்கின்றது. 1990ற்குப்பின் தமிழ் சொற்களுக்கு நிகழ்ந்த மாற்றங்களை பதிவு செய்யும் இவ் அகராதி 75 இலட்சம் தமிழ்ச் சொற்களைக் கொண்ட சொல் வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. தற்கால மொழியியல், அகராதி யியல் அறிவையும் தற்காலத் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இவ் அகராதியில் 21 தலைச்சொற்களும் 38 ஆயிரம் எடுத்துக்காட்டு வாக்கியங்களும், 1700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களும், 342 சொற்களுக்கான படங்களும் காணப்படுகின்றன.

இருமொழி அகராதிகள்

i. **வின்சுலொவின் ஆங்கில – தமிழ் அகராதி. [3வது திருத்திய பெருப்பிக்கப்பட்ட பதிப்பு– நியூடெல்லி: ஆசிய கல்விச் சேவைகள், 1996]**

இவ்வகராதி J.Knight என்பவரால் இலங்கை தேவாலய சபையில் ஆரம்பிக்கப்பட்டு அவர் இங்கிலாந்துக்குச் செல்லுமுன் 1838ல் 128 பக்கங்களுடன் வெளியானது. இதன் முதல் பதிப்பு 1844ம் ஆண்டிலும் இரண்டாம் பதிப்பு 1852ம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது. 1000 புதிய சொற்கள் உட்பட 37,737 சொற்கள் உள்ளன. ஒத்த பொருளுள்ள சொற்கள், இலங்கைக்கே பிரத்தியேகமான மரபுச் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சரியான உச்சரிப்பைப் பேணும் முகமாக தமிழ் உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்குமான ஆங்கில எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Malalasekera English - Sinhala Dictionary. (Colombo: M.D. Gunasena, 1948)

வரலாறு: இது இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியான 1948இல் பேராசிரியர் மலல சேகராவினால் முதன் முதல் வெளியிடப்பட்டது. புதிய தேசத்தின் இளம் கல்வியாளருக்கு ஆங்கிலத் திறனை வளர்ப்பதற்கான சிறந்த மூலமாகக் கருதப்படுகின்றது. 2000ம் ஆண்டு வெளியிடப்பட்ட இதன் நான்காவது பதிப்பானது மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு, புதிய தகவல்களை உள்ளடக்கிய பதிப்பாக வெளிவந்திருக்கிறது. இலங் கையில் வெளியிடப்பட்ட வேறு எந்த வெளியீடும் பெற்றுத்தராத அதிக விற்பனையை இது கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

உள்ளடக்கம்: நூற்றுக்கணக்கான புதிய சொற்கள், அதற்கான வரை விலக்கணங்கள், சமகால சுருக்கங்கள் இந்தப்பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

iii. **சொற்பிறப்பு – ஒப்பியல் தமிழ் அகராதி** [An Etymological and Comparative Lexicon of the Tamil Language – **நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்**]

இப் புதிய தமிழ் - ஆங்கில - தமிழ் அகராதி சொற்பிறப்பியலையும் படிப்படியாய் மாற்ற மடையும் சொற் கருத்தியலையும் ஆராயும் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. பழைய இலக்கியங்களில் காணப்படும் சொல்லுருவங்களுடன் தமிழ்ச் சொற்கள் யாவும் ஒப்பு நோக்கப்படுவதுடன் பதினெண் திராவிட மொழிகளுடன் குறிப்பாக மலையாளம், கன்னடம், தெலுங்கு என்பவற்றுடன் தமிழ் மொழியின் ஒப்பு ஆராயப்படுகிறது.

வடஐரோப்பாவிலுள்ள பின்லாந்து தேசம் முதல் வடகீழ் ஆசியா விலுள்ள மொங்கோலியா தேசம் ஈறாகக் கிட்டத்தட்ட 42 மொழிகள் காணப்பட்டன. அதுபோல் மேற்கு ஆசியாவில் அராபிய, எபிரேய, கல்டேய, சிரிய, பபிலோனிய மொழிகளும் ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளிலும் ஈரான், இந்தியா விலும் 45 இந்து ஐரோப்பிய மொழிகளுமென வழங்கப்பட்ட 96 மொழிகளுடன் ஆதித் திராவிட மொழிக்கிருந்த தொடர்புகள் துலக்கமாகவும், தெளிவாகவும், இதில் காட்டப்பட்டுள்ளன. இதன் முதல் 6 பகுதிகளும் 1938-1946 காலப்பகுதியில் வெளியானது. இரு பெரும் தொகுதிகளில் ஒவ்வொன்றும் 1000 பக்கங்களுடன் 20 பகுதிகளாக வெளியிட திட்டமிடப்பட்ட போதிலும் 1947 ல் ஞானப்பிரகாசர் மறைவின் பின்னர் 7வது பதிப்பு தும்பளைக் கலாநிதி சிங்கராயர் தாவீது அடிகளால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த 7வது பதிப்பு துப்பறியும் நாவல் போன்று இயற்றப்பட்டமையால் இது லீலா கதை எனவும் அழைக்கப் படுகிறது. இதன் முதலாம் பாகம் 1970 ல் வெளியிடப்பட்டது.

iv. **ஆங்கில தமிழ்ச் சொற்களஞ்சியம்** ; [English – Tamil Dictionary.- 1st. ed. by Dr.A. Chidamparanatha Chettiar. Madras: University of Madras. 1965]

வரலாறு: நல்லதோர் ஆங்கில தமிழ்ச் சொற் களஞ்சியம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என 1955ம் ஆண்டு ஒக்டோபர் 27ம் திகதி சென்னைப்பல்கலைக்கழக மூதவைக்கூட்டத் தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய நல்ல தொரு பதிப்புக் குழுவினால் நிறை வேற்றி முடிக்கப்பட்ட அரிய பணியின் பெறுபேறாக இது உள்ளது. ஆங்கிலப் பதத்திற்கு சரியான தமிழ்ச் சொல் கிடைக்காமல் தவிக்கும் எவருக்கும் பயன்படக் கூடிய சிறந்த அகராதியாக இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முன்னைய அகராதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர்த்துக் கொள்ளாத பல ஆங்கிலச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் இச் சொற்களஞ்சியத்தில் காணலாம். அத்துடன் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்குமாயின் அவை அத்த னையும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் இடம் நோக்கி வேண்டிய பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு இச்சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்துவோருக்கு உண்டு.

உள்ளடக்கம்: 1958இல் வெளியான ஒக்ஸ்போர்ட் ஆங்கில சுருக்க அகராதியை அடிப்படையாகக் கொண்டு சொற்கள் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லினின்றும் விரியும் ஒவ்வொரு வடிவமும் தனித்தனிச் சொல்லாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பெருவழக்கிலுள்ள சொற் கள், பிரஞ்சு, இலத்தீன்,ஜேர்மன் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு வந்துள்ள சொற்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறப்புரிமை பெற்ற கலைச் சொற்கள் உள்ளடக்கப்படவில்லை. அதேசமயம் அறிவியல் தொழினுட்பத் துறைகளில் போதுமான தமிழ்ச் சொற்கள் இல்லை என்பதை மனதில் கொண்டு ஆங்கிலச் சொற்களை அப்படியே எழுத்துப்பெயர்ப்புச் செய்யாமல் பல புதிய சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இயன்ற இடங்களில் வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: ஆங்கில அகர வரிசையில் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. நூலில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச்சுருக்க வடிவங்களின் பட்டியல் நூலின் ஆரம்பத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளது. அத்துடன் நூலைப்பயன்படுத்துவோருக்கான சில குறிப்புகளையும் இது உள்ளடக்கியிருக்கிறது. ஆங்கிலத்தில் வெவ்வேறு உறுப்புகளாக அமைந்துள்ள ஒரே சொல் லை எடுத்தாளும்போது பெயர்ச் சொல், மறுபெயர்ச்சொல், பெயருரிச் சொல். வினைச் சொல், வினையுரிச்சொல், முன்னீடு, இணைப்புச் சொல், வியப்பிடைச் சொல் என்ற வகையில் ஒழுங்கமைப்பு உள்ளது. ஒக்ஸ் போர்ட் ஆங்கில அகராதியை அடிப்படையாகக் கொண்டு அசையழுத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ் முதலிய மொழிகளிலிருந்து ஆங்கிலம் கடன்வாங்கியுள்ள சொற்கள் அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளன. அந்நிய மொழிச் சொற்கள் பிரதான சொற்களாக வருமிடத்து அவை சாய்வெழுத்தில் காட்டப் பட்டுள்ளன. கலைச்சொற்கள் எவ்வெத் துறைக்குச் சிறப்பாகப் பொருந்தியுள்ளது என்பது அவ்வவ்விடத்து சில சுருக்கக் குறியீடுகளால் காட்டப்பட்டுள்ளது. சொல்லின் பொருள் ஒவ் வொன்றும் காற்புள்ளியால் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது. சிறு இணைப்புக்கோடு உடைய ஆங்கில தொகைச் சொற்கள் தனித் தனிச் சொற்களாகக் கருதப்பட்டு அகர வரிசை யில் அமைக்கப்பட்டுள்ளன.

v. Tamil Lexicon (Tamil - English - Tamil Dictionary, 1st ed., University of Madras, 1982)



தமிழ் மொழி தொடர்பாக வந்த மிக முக்கிய அகராதியாக கருதப்படும் இவ் அகராதி 1936ஆம் ஆண்டு முழுமையாக வெளிவந்தது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையை பதிப்பாசிரியராகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் அகராதி ஏழு பகுதிகளையும் 104,405 சொற்களையும் கொண்ட மைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.22 பொருள் அகராதிகள் [Subject Dictionaries]

The New Palgrave Dictionary of Economics. [4vols. Ed.by Jogn Eatwell, Murray Migate and Peter Newman.- London: Macmillan, 1987. ISBN:0 - 935859 - 10 -1]

வரலாறு: 1894,1896,1899 காலப்பகுதிகளில் மூன்று தொகுதிகளாக R.H.Inglis Palgrave என்பவரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட Dictionary of Political Economy என்பதன் புதிய வடிவமே இவ் அகராதியாகும். திருத்தங்கள், சேர்க்கைகள் என்பவற்றுடன் மீள் பதிப்பு செய்யப்பட்டு Palgrave Dictionary of Political Economy என்ற பெயரில் 1923-26 காலப்பகுதியில் இது வெளியீடு செய்யப்பட்டது. பொருளியல் துறையில் இன்று பெரு வளர்ச்சியுற்றதாக கருதப்படும் நகரப் பொருளியல், குடிசனப் பொருளியல், கணிதப் பொருளியல், பேரினப் பொருளியல் போன்ற துறைகளின் முக்கிய அம்சங்களை உள்ளடக்குவதற்கான தயாரிப்பு வேலைகள் 1983ல் தொடங்கி 100க்கும் மேற்பட்ட தலைசிறந்த பொருளியல் நிபுணர்களின் ஆலோசனையுடன் கிட்டத்தட்ட 2000 பதிவுகளுடன் 900 க்கும் மேற்பட்ட பங்களிப்பாளர்களுடன் இப்புதிய அகராதி பயன் பாட்டுக்கு வந்துள்ளது. அகராதி என்ற பெயர் கொண்டிருப்பினும் இதற்குக் கலைக்களஞ்சிய பண்புகள் அதிகம் உண்டெனலாம்.

உள்ளடக்கம்: புதிய பழைய பதிப்புகளுக்கிடையில் ஒற்றுமைத் தன்மையைப் பேணுமுகமாக இதன் மூல வடிவமான Dictionary of Political Economy இலிருந்து 50 பதிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணிதவியல் பொருளாதாரம், பொருளியல் கோட்பாடும் பகுத்தறிவுக் கருதுகோளும் என்ற இரு பதிவுகள் மட்டும் பருவ இதழ்களில் வெளிவந்த பதிவுகளாகும். 1916 ஜனவரி 1ம் திகதிக்கு முன் பிறந்த பொருளியல் நிபுணர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் மட்டும் இணைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டுரைகளுக்கு நூல்விபரப்பட்டியல் ஆசிரிய அகர வரிசையில் கொடுக்கப் பட்டுள்ளது. நான்கு வகையான பின்னிணைப்புகளை இவ் வெளியீடு உள்ளடக்கியுள்ளது.

* ஆசிரிய அகர வரிசையிலமைந்த கட்டுரைகளின் தலைப்புகள்
* வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளின் பட்டியல்
* பழைய புதிய பதிப்புகளுக்கிடையிலான முரண்பாடுகள்
* அனைத்து பொருட்பதிவுகளது பகுத்தாய்வும் பகுத்தாய்வு முறைச் சொல்லடைவும்

ஒழுங்கமைப்பு: பொருட்துறையில் வழங்கும் பரந்துபட்ட சொற்களை உள்ளடக்குமுகமாக ஒரு பிரதான தலைச்சொல்லைத் தெரிவு செய்வதைத் தவிர்த்து இலகுவான பாவனைக்கான தலைச் சொற்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக வரி என்ற ஒற்றைத் தலைப்பின்கீழ் பல உப தலைப்புகளை தெரிவு செய்வதை விடுத்து மறைமுக வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, மொத்த வரி போன்றவற்றுக்குத் தனித்தனி பதிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட தலைச் சொற்களுக்கான முழுமையான பட்டியல் ஒவ்வொரு தொகுதியின் ஆரம்பத் திலேயே கொடுக்கப்பட்டுள்ளது. அந்நிய மொழிச் சொற்கள் கூடுதலான வரையில் குறைக்கப்பட்டுள்ளன. தரப்பட்ட சொற்களுக்கான ஆங்கில மொழியின் விளக்கம் வளையடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.23 சிறப்பு அகராதிகள்

The Oxford Dictionary of Quotations [5th ed. Crptkak; by Elizabeth Knowles.- Oxford: University press, 1999.]



உலகின் மேற்கோள்களுக்கான மிகப் பெரும் தரவு வங்கியாக இது கருதப் படுகின்றது. 50 வருடங்களுக்கும் மேலாக ஒக்ஸ் போர்ட் அகராதித் திணைக் களம் சர்வதேச ரீதியில் ஆய்வு செய்து சேகரித்த மேற்கோள்களின் தொகுப்பே இவ் அகராதி ஆகும்.

கலைச்சொல் அகராதிகள்

i. ALA Glossary of Library Terms with a Selection of Terms in Related fields. [by Elizabeth H. Thompson. Chicago: American Library Association, 1943]



வரலாறு: நூலகர்கள், நூலகவியல் மாணவர்கள், நூலக ஆசிரியர்கள் ஆகியோருக்கான பெறுமதி மிக்க உசாத்துணை சாதனமாக இது கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: அமெரிக்க நூலகங்களினால் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களை இது உள்ளடக்கியுள்ளது. நூல்களின் வரலாறு, ஆவணக்காப்பகம், நூல்விபரப்பட்டியல், அச்சிடுதலும் வெளியீடும், தாள், நூல் கட்டுதல், விளக்கப்படங்கள், அச்சுகள் போன்ற நூலகவி யலுடன் நெருங்கிய தொடர்புடைய துறைகளுக்கான கலைச்சொற்கள் போதுமானளவு உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்நிய மொழிப்பதங்கள் விலக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: பதிவுகள் அகர ஒழுங்கைப் பின்பற்றியுள்ளன. ஒத்த பொருளுள்ள சொற்களுக்குப் பெருமளவில் வழிகாட்டிக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளில் நூல்கள் எழுத்துகளின் அளவுகள், சுருக்கக்குறியீடுகள் என்பன கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ii. HARROD'S Librarian' Glossary of Terms Used in Librarianship, Documentation and the Book Crafts and Reference Books. [6th edition, Compiled by Ray Prytherch . - England: Gower,1987. ISBN: 0 566 03538 3]

வரலாறு: உலகம் பூராகவும் நூலகவியல், ஆவணவாக்கம், தகவல் அறிவியல், நூல் வர்த்தகம், அச்சிடுதல், வெளியிடுதல், ஆவணக் காப்பகப் பணிகள் போன்ற துறைகளில் பயன்படுத்தப் படும் சொற்களிற்கான விளக்கங்களைத் தரும் தரம்மிக்க உசாத்துணைக் கையேடாகப் பயன் படுகிறது.

உள்ளடக்கம்: நூலக தகவல் அறிவியல் துறைகளில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான அபிவிருத் திகளைப் பிரதிபலிக்கும் வகையில் 6வது பதிப்பு இருப்பதுடன் ஆசிரியத்துறை, பதிப்பு, அச்சிடுதல், அடிப்படை வெளியீடு, ஆவண விநியோகம், தகவல் வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கண்காட்சி, ஆலோசனை போன்ற சிறப்புத் திறன்களும் (இத்துறைக்கு தேவை எனக் கருதப்படும்) உள்ளடக்கப்பட்டுள்ளன. நூலக தகவல் அறிவியல் துறையிலும் அதனுடன் தொடர்புடைய துறைகளிலும் வரலாற்று ரீதியான உடனடித் தகவல்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரபூர்வ வரை விலக்கணங்கள், விபரங்கள், மதிப்பீடுகள் என்பவற்றிற்கான தனித்த மூலமாக இது கருதப்படுகிறது.

ஒழுங்கமைப்பு: அகரவரிசையிலான ஒழுங்கமைப்பில் பதிவுகள் வழங்கப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் வழிகாட்டிக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

iii. **தமிழ் ஆங்கில கலைச்சொற்தொகுதி – சமூக விஞ்ஞானம் [கொழும்பு: அரசகரும மொழித் திணைக்களம், 1961]**

ஆசிரியருக்கும் மாணவருக்கும் பயன்தரக்கூடிய வகையில் தமிழ்ச் சொற்களுக்கு ஒத்த ஆங்கிலச் சொற்களை அகரவரிசையில் தரும் அகராதி இதுவாகும். புவியியல், குடியியல், ஆட்சியியல், பொருளியல், கணக்கியல் போன்ற துறைகளிலிருந்து போதுமானளவு சொற்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப் புதிய பதிப்பில் பழைய சொற்தொகுதியில் இடம்பெற்றுள்ள சில முரண் சொற்கள் நீக்கப்பட்டுள்ளன. புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சொற்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

iv. **அறிவியல் கலைச்சொல்லகராதி [தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம், 1997]**

அறிவியல், கல்வி, அறிவியல் ஆய்வு முதலிய பொருட் துறைகள் சார்ந்த கலைச்சொற்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பதிவுகள் தலைமைப் பதிவு, துணைப் பதிவு என இரு நிலைகளில் தரப்பட்டுள்ளன. சில பதிவுகள் குறுக்கு நோக்கீட்டுக் குறிப்புகளைக் கொண்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட சில கலைச்சொல்லகராதித் தளங்கள்

http://www.matisse.net/ files/glossary

இத்தளம் இணைய கலைச் சொற்களைப்பட்டியலிடும் அருஞ் சொல் அகராதியாகும். Matisse Enzer என்ற அறிஞரால் உருவாக்கப்பட்ட இவ்வருஞ்சொல்லகராதி அகர வரிசையில் தேடல் செய்யும் வசதியைக் கொண்டுள்ளது.

http://www.glossarist.com

இத்தளம் அருஞ்சொல்லகராதிகளின் தொகுப்பாகும். விடய ரீதியாக அருஞ்சொல் அகராதியை தேடும் வசதி இதில் காணப்படுகிறது. பிரதானமாக 21 வகையில் இவை வகைப்படுத்தப் பட்டுள்ளன. இத்தகைய 6142 உபவகை சார்ந்த 22000ற்கும் மேற்பட்ட தரவுத்தளங்கள் இதில் இணைப்பைப் பெற்றுள்ளன.

8.3 சொற்கருவூலங்கள், பொருட் தலைப்புப் பட்டிகள் பகுப்பாக்கத் திட்டங்கள் [Thesauri , Subject Headings and Classification Schemes]

8.31 சொற்கருவூலம்

சொற்கருவூலம் என்ற பதம் கிரேக்க இலத்தீன் மொழிகளிலிருந்து பெறப்பட்ட "Treasury" என்ற கருத்தைக் குறிக்கின்ற சொல்லாகும். தகவல் தொழினுட்ப யுகமொன்றில் நூல்விபரத் தகவல்களை மீட்பதற்கான இலகுவான சொற்றொகுதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகத் தகவல் மீள்பெறுகைச் சொற் கருவூலங்கள் (Information Retrieval Thesauri) கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடுகளின் அடிப்படையில் நோக்கும் போது, "சொல்லடைவாளர்கள் அல்லது தகவல்" பாவனையாளர்கள் இயற்கை மொழியில் அமைந்த ஆவணங்களை மிகவும் இறுக்கமான அமைப்பு மொழிகளுக்கு மாற்றுவதற்குப் பயன்படுகின்ற பயனீட்டுச் சொற்றொகுதிக் கட்டுப்பாட்டுக் கருவியே (Terminological Control Device) சொற்கருவூலம் ஆகும்.

கட்டமைப்பின் அடிப்படையில் நோக்கும் போது, சொற் கருவூலம் என்பது 'அறிவுத் துறையொன்றில் காணப்படுகின்ற சொற்பொருள் சார்ந்ததும் இனப் பொதுவானதுமான சொற்களின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்குவிசையுள்ள சொற்றொகுதியாகும்' (UNESCO - 1971).

8. 312 வரலாறு

சொற்கருவூலம் ஒன்றின் நவீன பாவனையானது பீற்றர் மாக் றொஜற் (Peter mark Roget) என்பவரால் 1852ம் ஆண்டு வெளியிடப்பட்ட Thesaurus of English Words and Phrases என்ற நூலுடன் ஆரம்பிக்கின்றது. இது மொழி சார்ந்தது. ஒரு மொழியில் வழங்குகின்ற சொற்களில் ஒன்றுக்கொன்று நேர்க்கணியமாகவோ எதிர்க் கணியமாகவோ தொடர்புபடுகின்ற சொற்களை ஒன்றாகத் தொகுத்து வழங்கும் செய்முறையை இது கொண்டது.

இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக, வாசகனின் தகவல் தேடுகையை இலகுவாக்கும் பொருட்டு குறிப்பிட்ட துறைசார்ந்த கலைச் சொற்களைக் கட்டுப்படுத்தி இச்சொற்களுக்கிடையிலான உறவுமுறைகளைப் பிரதிபலிக்கும் செய்முறையுடன் தொடர்புபடும் ஒன்றாக தகவல் அமைப்புகளின் சொற்கருவூல உருவாக்கம் அமைகின்றது. நூலகங்களிலும் கூட சொற் கருவூலங்களின் பாவனை புதிது எனக் கொள்ள முடியாது. ஏற்கனவே பாவனையிலுள்ள சியர்ஸ் பொருட் தலைப்புகள் அல்லது காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புப் பட்டிகளின் புதுப்பிக்கப்பட்ட அல்லது சீரமைக்கப்பட்ட வடிவமாகவும் இதனைக் கொள்ள முடியும்.

8.313 குறிக்கோள்கள்

1. நவீன சொற்கருவூலங்களின் அடிப்படை நோக்கம் தகவல் சேமிப்பு, மீள்பெறுகை போன்றவற்றுக்கான சொல்லடைவாக்க மொழியாகத் தொழிற்படல்.
2. குறிப்பிட்ட பொருட்துறையொன்றின் கட்டமைப்பை விளங்கிக் கொள்வதற்கு உதவக் கூடிய வகையில் அத்துறை தொடர்பான கருத்துநிலைகளும் (Concepts) அக்கருத்து நிலைகள் பற்றிய எண்ணங்களும் (Ideas) எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்பு படுகின்றன என்பதைக் காட்டக் கூடிய வகையில் அத் துறை சார்ந்த தோற்றப்பாட்டைச் சொல்லடைவாளருக்கு அல்லது தகவல்' பாவனையாளருக்கு வழங்குதல்.
3. தகவல் சேமிப்பு மீள்பெறுகை அமைப்புக்கு சொல்ல டைவுப் பதிவுகளைத் தயாரிக்கின்ற செய்முறையில், சொல்லடைவுப் பதிவுகளில் நெருக்கமான அல்லது நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உதவக்கூடிய வகையில் சொல்லடை வாளருக்கு அத்துறை தொடர்பான தரப்படுத்தப்பட்ட சொற்தொகுதியை வழங்குதல்.
4. ஒரு கருத்துநிலையைச் சொல்லடைவுபடுத்துகையில் ஒரு பொருள் குறிக்கின்ற பல சொற்கள் காணப்படக் கூடும். இச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்துநிலைக்கு ஒரு சொல் என்ற விதிமுறையின் அடிப்படையில் அத் தொகுதியிலிருந்து ஒரு சொல்லை மட்டும் தேர்ந்தெடுத்து அச் சொல்லை முன்னுரிமைச் சொல்லாகக் கருதி ஒரு கருத்துப் படிவத்தைச் சொல்லடைவுபடுத்துவதற்கு ஒரு சொல் தான் பயன்படுத்தப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உறுதி செய்வதுடன் சொல்லடை வாளருக்கும் தகவல் பாவனையாளருக்கும் அத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் பற்றிய தகவலை வழங்குமுகமாகச் சொற்களுக் கிடையில் குறிப்புகளை வழங்குதல்.

5. பொருட்துறை சார்ந்த தகவல் தேடுகையில் பாவனையாளர் சரியான சொல்லைத் தெரிவு செய்யும் பொருட்டு அவர்களுக்கு வழிகாட்டியாகத் தொழிற்படல்.
6. குறிப்பிட்ட பொருட் துறையில் ஏற்கனவே நிலை கொண்டிருக்கும் கருத்துநிலைத் தொகுதிகளுக்குள் புதிதாகத் தோற்றம் பெறும் கருத்துநிலைகளுக்கான சரியான அமை விடத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல்.
7. பரந்த ரீதியிலோ அல்லது ஆழமான தேடுதலையோ மேற் கொள்வதற்கு உதவியாகப் பகுப்பாக்க முறையிலான படிநிலையமைப்பு முறைகளை வழங்குதல்.
8. குறிப்பிட்ட பொருட் துறையில் பயன்படுத்தப்படுகின்ற சொற்களின் பாவனையை மேலும் தரப்படுத்துவதற்குரிய வழிவகைகளை வழங்குதல்.

8.314 சொற்கருவூல வகைகள்

8.3141 மூலாதாரச்சொற்கருவூலங்கள் [Source Thesauri]

இது ஒரு தரவு வங்கியாகும். இதிலிருந்தே சொல்லடைவாக்கக் கருவி [Indexing Tool] பெறப்படுகிறது. இது பகுப்பாக்க முறையிலான அல்லது பயனீட்டு முறையிலான, பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டியாய் அமைகின்ற கட்டமைப்பை உள்ளடக்கியது. இத்தகைய சொற்கருவூலங்கள் குறிப்பாக நிறுவனங்களிடையிலான கூட்டுறவைப் பேணுவதற்குப் பயனுடையதாகும். சில தனிப்பட்ட பிரயோகங்களுக்கென ஒவ்வொரு நிறுவனங்களும் புதிய சொல்லடைவாக்க மொழிகளை உருவாக்க வேண்டிய தேவையை இவை குறைக்கின்றன. இத்துடன் புதிய சொல்லடை வாக்க மொழிகளின் தரத்தை அதிகரிப்பதற்கு உதவுவதுடன் இம் மொழிகளிலிருந்து கட்டியெழுப்பப்படுகின்ற புதிய மொழிகளில் ஓர் ஒற்றுமைத் தன்மையையும், ஒத்தியல்பையும் அதிகரிக்கவும் உதவுகின்றன.

8.3142 இணைப்புச் சொற்கருவூலங்கள் [Adjunct Thesauri]

இத்தகைய சொற்கருவூலங்கள் ஒரு கருத்துக்கூறின் உள்ளேயும் வெளியேயும் காணப்படுகின்ற கருத்துப்படிவங்களுக்கிடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தாத, சிறப்புக் கருத்துக் கூறுகளை மட்டும் கொண்டமைந்ததாகும். இவை தனித் தியங்குபவையல்ல. எனினும் கருத்துப் படிவங்களுக்கிடையிலான தொடர்புகளிலும் அதன் கட்டமைப்பிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தாமலே பிரதான சொற்கருவூலத்துடன் இணைத்து இதனைப் பயன்படுத்தலாம்.

8.3143 திரள்ச் சொற்கருவூலங்கள் [Cumulative Thesauri]

பல்வேறுபட்ட சொற்கருவூலங்கள், பகுப்பாக்கத் திட்டங்கள் போன்றவற்றிலுள்ள தக வல்களை ஒன்றாகத் தொகுத்து உருவாக்கப்படுகின்றவையாக இவை உள்ளன.

சொற்கருவூல காட்சி அமைவுகளின் அடிப்படையில் சொற்கருவூலங்களை இரு வகையாக வகைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✱ அகரவரிசைச் சொற்கருவூலங்கள்.
- ✱ பகுப்பாக்கச் சொற்கருவூலங்கள்.

8.3144 அகரவரிசைச் சொற்கருவூலங்கள் [Alphabetical Thesauri]

பொதுவாக வழக்கிலுள்ளதும் பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்படுவதுமான இச் சொற்கருவூலத்தில் தலைச் சொல்லும் [Descriptor] அதன் உறவு முறைகளும் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். எவ்வித தகவல் மீள்பெறுகைச் சொற்கருவூலங்களிலும் இவ்வித காட்சியமைவு முறையே பொதுவானதாகக் கருதப்படுவதுடன் தகவல் பாவனையாளர்களுக்கும் சொல்லடைவாளருக்கும் இலகுவில் பயன்படுத்தக் கூடியதுமாகும். எ-டு:

நூலகங்கள்

BT தகவல் அமைப்புக்கள்
NT கல்விசார் நூலகங்கள்
சிறப்பு நூலகங்கள்
தேசிய நூலகங்கள்
பொதுசன நூலகங்கள்
RT ஆவணக்காப்பகங்கள்
அரும்பொருளகங்கள்
தகவல் நிலையங்கள்

8.3145 பகுப்பாக்கச் சொற்கருவூலங்கள் [Classified Thesauri]

இவற்றை மேலும் பின்வருமாறு ஏழு வகையாகப் பிரிக்கலாம்:

- ✱ பரந்த பொருட் பகுப்பாக்கத்துடன் கூடிய அகரவரிசைச் சொற்கருவூலங்கள்: இம் முறையில் பகுப்பாக்கச் சொற் கருவூலத்தின் தலைச் சொற்கள் பரந்த பொருட் தொகுதிகளின் கீழ் அகரவரிசைப்படுத்தப்பட்டிருக்கும். பொருட் தொகுதியின் குறியீட்டு எண் அகரவரிசைச் சொற்கருவூலத்தின் சொல்லடைவுச் சொல்லிற்கு எதிராகக் காட்டப்பட்டிருக்கும். இம் முறை MeSH, NASA, போன்ற சொற்கருவூலங்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- ✱ தொகுப்பு, அம்புக்குறியுடன் கூடிய அகரவரிசைச் சொற் கருவூலங்கள்: இத்தகைய ஒழுங்கமைப்பில் முறைப்படுத்தப்பட்ட பகுதியானது சொற்களுக்கிடையிலான உறவு முறைகளை வரைபட வடிவில் காட்டுகின்ற அம்புக்குறிகள், பயனீட்டுச் சொற்றொகுதி, அட்டவணைகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். ஒரு பெரிய தாளில் ஒவ்வொரு பிரதான உபபிரிவுகளையும் சார்ந்ததாக உள்ள சொல்லடைவுச் சொற்கள், தொடர்புச் சொற்கள் என்பன ஒன்றுக்குப் பக்கத்தில் மற்றொன்று வரக்கூடிய விதமாக எழுதப்படும். தொகுப்பாளரினால் பரந்தசொல்லிலிருந்து சுருங்கிய சொல் அம்புக்குறிகள் மூலம் காட்டப்படுவதுடன் பரந்த சொல் பொதுவாக மேல்நிலையிலும் சுருங்கிய சொல்லிலிருந்து மேல்நோக்கிய அம்புக்குறியினால் இணைக்கப்படுவதாகவும் காட்டப்பட்டிருக்கும். அதேபோல் சுருங்கிய சொல் பரந்த சொல்லுக்குக் கீழே காட்டப்பட்டு கீழ் நோக்கிய அம்புக்குறியினால் இணைக் கப்பட்டிருக்கும். தொடர்புச்சொற்கள் இருவழி அம்புக் குறியினால் இணைக்கப்படுகின்றன. முதலாவது சுற்றுவட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுள்ள சொற்களிலிருந்து ஒருவர் அதே வழியில் தொடர்ந்து செல்லலாம். வெவ்வேறு பட்ட சுற்றுவட்டங்களைச் சார்ந்த சொற்களுக்கிடையிலான எண் வடிவ உறவு முறைகள் காட்டப்படுவதுடன் இவற்றிற்கிடையிலான தொடர்புகளின் வலையமைப்பும் காட்டக்கூடியவாறு அமைந்திருக்கும். IRRD Thesaurus இவ் வகையைச்சார்ந்தது.

* படிநிலையமைப்பு முறைக்காட்சியமைவுடன் கூடிய அகரவரிசைச் சொற்கருவூலங்கள்: அகரவரிசைச் சொற்கருவூலங்களில் உள்ள பரந்த சுருங்கிய சொற்களிலிருந்து படிநிலையமைப்பு முறையிலான காட்சியமைவை உருவாக்குவதற்கு கணினி வாசிப்பு உருவில் அமைந்த சொற்கருவூலங்களே உதவியாக இருக்கும். பொதுவானதோர் அகரவரிசைச் சொற்கருவூல ஒழுங்கமைப்பில் படிநிலையமைப் பின் பல நிலைகளையும் ஒரேதடவையில் காட்ட முடியாது என்பதுடன் இப்படி நிலைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுதலும் சாத்தியமில்லை. எனவே படிநிலையமைப்பு முறையிலான காட்சியமைவு இக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதுடன் பரந்த கருத்துப் பொருளைத் தருகின்ற சொற்களை முதலில் வைப்பதன் மூலம் படிநிலைய மைப்பு முறையிலான மரவடிவ ஒழுங்கமைப்பை (Tree Structure) உருவாக்கவும் இத்தகைய காட்சியமைவு உதவுகின்றது.

  எ-டு : Commonwealth Agricultural Bureaux (CAB) Theaurus

* படிநிலையமைப்பு முறைப்பகுப்பாக்கத்துடன் கூடிய அகரவரிசை சொற்கருவூலங்கள்: இம்முறையில் அகரவரிசைச் சொற்கருவூலத்திற்கும், பகுப்பாக்க திட்டத்தில் சொல் அமைந்திருக்கும் இடத்திற்கும் இடையிலான இணைப்பு விபரக்குறியீட்டினால் காட்டப்படுகிறது. ஒரு சொல்லானது ஒன்றுக்கு மேற்பட்ட படிநிலைகள் வரக்கூடிய இடங்களில், பொருத்தமான இடங்களில் மரவடிவ ஒழுங்கமைப்பில் இவை அட்ட வணைப்படுத்தப்படுவதுடன் அகரவரிசைச் சொற்கருவூலத்தில் ஒவ்வொரு சொல் லுக்கும் எதிரில் வகுப்பு எண்ணால் இவை காட்டப்படுகின்றன.

  எ-டு : Mesh Thesaurus

* கருத்துக்கூறு பகுப்பாக்கத்துடன் கூடிய அகரவரிசைச் சொற்கருவூலங்கள்: இம் முறையில் விரிவான கருத்துக்கூறு பகுப்பாக்க முறையைச் சொற்கருவூலத்துடன் ஒருங்கிணைத்தல் அவசியமாகிறது. இதற்கு அகரவரிசைச் சொற் கருவூலமும், கருத்துக்கூறு பகுப்பாக்கமும் சம காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். சொற்கருவூலம் பகுப்பாக்கத் திட்டத்திற்கான சொல்லடைவாகச் செயற்படும் அதேநேரம் சொல் வடிவம், இணைபொருட் சொற்கள் போன்றவற்றையும் கட்டுப்படுத்துவதுடன் பகுப்பாக்கத் திட்டத்தில் காட்டப்பட முடியாத சொற்களுக்கிடையிலான உறவு முறையைக் காட்டவும் உதவுகிறது. எ-டு ROOT Thesaurus

* அகரவரிசைச் சொல்லடைவுடன் கூடிய முறைப்படுத்தப் பட்ட சொற்கருவூலங்கள்: இம் முறையில் இணைபொருட் சொற்கள், பரந்த, சுருங்கிய, தொடர்புச் சொற்கள் போன்றவற்றுடன் கூடிய தலைச் சொற்கள் பகுப்பாக்க ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும். எ-டு : Environmental Studies Thesaurus

* சுழல்முறைக் காட்சியமைவுடன் கூடிய அகரவரிசைச் சொற்கருவூலங்கள். இம் முறையில் பல்வேறுபட்ட படிநிலை யமைப்பு நிலைகளும் பொதுமையத்தைக் கொண்ட சுற்று வட்டங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். ஒரு தொகுதியிலுள்ள பரந்த சொல் வட்டத்தின் மையத்திலும் சுருங்கிய சொல் வட்டத்தின் உட்பகுதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்பட்டிருக்கும். இவற்றுக்குரிய இணைப்புகள் அம்புக்குறியினால் காட்டப் பட்டிருக்கும்.

பயன்பாடு

* பொருட்துறை சார்ந்த ஒழுங்கமைப்பே பிரதானமாக இருப்பதனால் குறிப்பிட்ட தகவலைத் தேடுபவருக்கு மொழித் தடையை நீக்குகிறது.
* பகுப்பாக்கம் செய்பவருக்கு சொல்லடைவாக்கச் சொற்களைத் தெரிவு செய்ய உதவுகிறது.

வரையறைகள்

* பெரும்பாலான சொற்கருவூலங்கள் அமெரிக்க உருவாக்கங்களாக இருப்பதனால் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய முழுமைத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை.
* பெரும்பாலான கணினி அமைப்புக்கள் வெவ்வேறு வகையான சொற்கருவூலங்களைப் பின்பற்றி சொல்லடைவுச் சொற்களை தெரிவு செய்வதனால் சொல்லடைவுச் சொற்களில் ஒரு சீரமைவைப் பேணுவது கடினமானதாக உள்ளது.

எடுத்துக்காட்டுகள்

i. Unesco: IBE Education Thesaurus, 1971

இச் சொற்கருவூலத்தில் கல்வியியல் சார்ந்த சொல்லடைவுச் சொற்கள் அனைத்தும் பின்வரும் ஏழு பரந்த பொருட்துறைகளாகவும் (Fields) கருத்துக் கூறுகளாகவும் (Facets) பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கருத்துக் கூறும் பல தலைச் சொற்களை உள்ளடக்குவதுடன் இத் தலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டே பதிவுகள் அகர வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. துணைத் தொடர்புகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் RS என்ற குறியீடு தலைச் சொல்லில் இருந்து கருத்துக் கூறுக்கென ஒதுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு வழிகாட்டும் பணியை மேற்கொள்கிறது.

ii. CAB Thesaurus [Wallingford,CABI Publishing]

வரலாறு: இது பிரயோக வாழ்க்கை அறிவியலுக்குரிய சொற்கருவூலமாகும். மிகப் பெரும் தரவுகளைத் தேடுவதற்கும், மீளப் பெறுவதற்கும், கல்விசார், அரச, தகவல் தொழிற் திறன் சார்ந்தவர்களுக்கு உதவுகின்ற முக்கிய கருவியாக இது கருதப்படுகின்றது. உள்ளக தரவுத் தளங்களை ஒழுங்குபடுத்தவும், பட்டியலாக்கம் செய்யவும் கூட இது பயன்படுத் தப்படலாம். 48,000 சொற்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட சொற் தொகுதி வளமாக இது தொழிற்படுகின்றது.

உள்ளடக்கம்: விவசாயம், பழச் செய்கை, காடுவளர்ப்பு, மண் அறிவியல், விலங்கு மருத்துவம், போசாக்கு, கிராமியக் கல்வி, காளான் வளர்ப்பு, ஒட்டுயிர் அறிவியல் போன்றதுறைகளை இது உள்ளடக்குகின்றது. கல்வி, ஆய்வு நிறுவனங்கள் போன்ற இலாப நோக்கமற்ற நிறுவனங்களுக்கு இதனை இலவசமாகப் பயன்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி உண்டு. வியாபார நோக்கங்களுக்குப் பயன் படுத்தும் அமைப்புகள் அனுமதிப் பத்திரம் பெறும் பொருட்டு வெளியீட்டாளர்களிடம் நேரடியாகவோ அல்லது Cabthe Saurus@cabi.org என்ற இ - மெயில் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம். இணையத்தள முகவரி www.cabthesaurus.info ஆகும்.

8.32 பொருட்தலைப்புப் பட்டிகள்

Library of Congress Subject Headings [Washington: Library of Congress, 1909-1914]



வரலாறு: உலகளாவிய ரீதியில் தரம் வாய்ந்ததாகக் கருதப்படும் ஒரேயொரு பொருட்தலைப்புப் பட்டியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இப் பொருட் தலைப்புப்பட்டியானது சரியான பட்டியலாக்கத்துக்கும், பொருள் சார்ந்த தேடுகைக்கும், நூலகர்களின் அருகில் எப்போதும் இருக்க வேண்டிய ஒரு கருவியாகக் கொள்ளப்படுகின்றது. இதன் முதலாவது பதிப்பானது Subject Headings used in the Dictionary Catalogues of the Library of Congress என்ற பெயரில் 1990-1914 இடையில் பல பகுதிகளாக வெளியிடப்பட்டது. இதன் பின்னர் ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளிவந்த இந்த வெளியீடு இதனது 8வது பதிப்பில் Library of Congress Subject Headings என்ற தற்போதைய பெயரில் 1975இல் முதன்முதல் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: காங்கிரஸ் நூலகத்தின் பொருள் அதிகாரக் கோவையிலுள்ள பொருட் தலைப்புகள், வழிகாட்டிக் குறிப்புகள், உப தலைப்புகள் அனைத்தும் அகர ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு பட்டியாகும். 29வது பதிப்பு 2006ல் வெளியிடப்பட்டுள்ளது. 28ம் பதிப்பானது தற்போது அச்சுருவில் இல்லை. 2,80,000இற்கும் மேற்பட்ட பொருட் தலைப்புகளையும் வழிகாட்டிக் குறிப்புகளையும் உள்ளடக்கி 5 தொகுதிகளாக இது வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒழுங்கமைப்பு: இது அகர வரிசையில் அமைந்த ஒரு பட்டியலாகும். வைது தொகுதியின் ஆரம்பத்தில் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட பொருட்தலைப்புகளின் பட்டியல் உள்ளடக்கப் பட்டிருக்கிறது. தலைப்புகள் தடித்த எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இடரீதியாகவோ வகுப்பெண் ரீதியாகவோ தலைப்புகள் மேலும் உப பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம் எனக் கருதப்படும் இடங்களில் தலைப்புக்கருகே வளையடைப்புக்குறிக்குள் அதற்கான விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் தலைப்பு, வகுப் பெண்கள், வியாபகக் குறிப்பு, சமநிலைத் தொடர்புகள், பரந்த சுருங்கிய சொற்கள், சார்புச் சொற்கள் பொதுவான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பொருட்தலைப்புகளில் உப பிரிவுகள் காட்டப்பட வேண்டின் அது - என்ற குறியீட்டினால் காட்டப்படுகின்றது. எ-டு: Education – Curricula இரண்டு உப பிரிவுகள் காட்டப்பட வேண்டிய இடங்களில் அது - இரண்டு குறியீடுகளினால் காட்டப்படுகின்றது. Education – Curricula – Laws and legislation. பொருட்துறை, உருவம், காலம், புவியியல் பிரதேசம் ஆகிய நான்கு வகையான உப பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டு:

Women- Employment	-	பொருட்துறை
United states-History	-	உருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Philosophy - French -18th century - காலம்
Construction Industry – Italy - இடம்
Five volumes. Hardbound. Published annually.
ISSN 1048-9711
Price: 2006 Subscription (5 vols.)
$295 North America, $345 outside North America

Sears List of Subject Headings

[New York: Wilson,1923-]

வரலாறு: கிட்டத்தட்ட 80 வருடங்களாக பட்டியல்களின் பாவனைக்கு உதவக் கூடிய பொருத்தமான பொருட்தலைப்புகளையும் தேவைப்படும் போது புதிய பொருட்தலைப்புகளை சேர்த்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கி சிறிய நடுத்தர அளவிலான நூலகங்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற ஒரு வெளியீடாக இது உள்ளது. அமெரிக்க நூலக சங்க பொருட் தலைப்புப் பட்டி, காங்கிரஸ் நூலக பொருட்தலைப்புப் பட்டி ஆகிய இரண்டும் அமெரிக்க நூலகங்களில் பயன்பாட்டில் இருந்த காலப்பகுதியில் சிறிய நூலகங் களுக்கான பொருட் தலைப்புப்பட்டி ஒன்றின் தேவையை உணர்ந்து Minnie Earl Sears என்பவரால் இது உருவாக்கப்பட்டது. மிக நன்றாகப் பட்டியலாக்கம் செய்யப்பட்ட ஒன்பது சிறிய நூலகங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு The List of Subject Headings for Small Librariesஎன்ற பெயருடன் 1923ல் முதலாவது பதிப்பாக வெளியிடப்பட்டது. முதலாவது பதிப்பில் 'பார்க்க' வழிகாட்டிக் குறிப்புகளும் Refer from வழிகாட்டிக் குறிப்புகளும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பட்டியை பாடநூலாகக் கற்பித்த பட்டியலாக்க ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கேற்ப இரண்டாவது பதிப்பில் 'மேலும் பார்க்க' வழிகாட்டிக் குறிப்புகள் இவரால் சேர்க்கப்பட்டன. இந்தப் பட்டியின் பயன்பாட்டை மேம்படுத்து முகமாக 1933ல் வெளியிடப்பட்ட 3வது பதிப்பில் பொருட் தலைப்புப் பணியில் ஈடுபடுகின்ற ஆரம்பப்பணியாளருக்கான ஆலோசனைகள் என்ற பகுதியும் இவரால் சேர்க்கப்பட்டது. பிந்தி வந்த பதிப்புகள் அனைத்தும் பலதரப்பட்ட நிபுணர்களால் பதிப்பிக்கப்பட்டதுடன் இப் புதிய பதிப்பானது Joseph Miller என்பவரால் பதிப்பிக்கப்பட்டு 804 பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது.

உள்ளடக்கம்: 2004ல் வெளியிடப்பட்ட இதன் 18வது பதிப்பில் பின்வரும் மூன்று அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

* கணினித் தொழினுட்பம், உளவியல், கைவேலை ஆகிய துறைகள் சார்ந்து 500 புதிய பொருட்தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* 2004ல் வெளியிடப்பட்ட தூயி தசம பகுப்பாக்கத்திட்டத்தின் 14வது சுருக்கப்பதிப்பைப் பின்பற்றி பொருட்தலைப்புகளுக்கான வகுப்பெண்கள் மீள் வடிவமைக்கப் பட்டுள்ளன.
* Sears List இன் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய அம்சங்கள் இணைக் கப்பட்டுள்ளன.

முன்னைய பதிப்பில் நீக்கப்பட்டிருந்த உபபிரிவுகளுக்கான பட்டியல் புதுப்பிக்கப்பட்டு இப்புதிய பதிப்பில் மீளவும் சேர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைப்பு: இது சொற்கருவூல வடிவமைப்பைக் கொண்டது. ஒவ்வொரு பதிவும் மூலச் சொல், வகுப்பு எண், ஒத்த சொல், வியாபகக் குறிப்பு, பரந்த, சுருங்கிய சொற்கள், தொடர்புச் சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. பொருத்தமான இடங்களில் 'பார்க்க' வழிகாட்டிக் குறிப்புகளும் 'மேலும் பார்க்க' வழிகாட்டிக் குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன. மூலச் சொற்கள் அனைத்தும் தடித்த எழுத்துகளில் காட்டப்பட்டுள்ளன. 23 பக்கங்களில் Sers list இன் கொள்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (www.hwwilson.com accessed on 17-09-2008)

8.33 பகுப்பாக்கத் திட்டங்கள்

i. Dewey Decimal Classification [Dewey Decimal Classification and Relative Index/ by Melvil Dewey. 1st edition. New York: Forest press, 1876-.]

வரலாறு: அறிவுப் பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்துவதற்கெனப் பல ஒழுங்கமைப்பு முறைகள் பயன்படுத்தப்பட்ட போதும் இன்று பெரும்பாலான நாடுகளால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவது தூயி தசமப் பகுப்புத் திட்டமாகும். 135க்கும் மேற்பட்ட நாடுகளால் இது பின்பற்றப்படுவது மட்டுமன்றி 30க்கும் மேற்பட்ட மொழிகளில் இது மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் கிட்டத்தட்ட 95 வீதத்துக்கும் அதிகமான பொதுசன நூலகங்கள், பாடசாலை நூலகங்களும், 25 வீதத்துக்கும் மேற்பட்ட கல்லூரி நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்களும், 20 வீதம் சிறப்பு நூலகங்களும் இத்திட்டத்தைப் பின்பற்றுகின்றன. 1873இல் மெல்வில் தூயி (Melvil Dewey) என்பவரால் வடிவமைக்கப்பட்ட இத்திட்டம் முதன் முதல் 1876இல் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

தூயி தசமப்பகுப்புத்திட்டத்தின் முதலாவது பதிப்பானது 44 பக்கங்களை மட்டுமே கொண்ட ஒரு சிறு நூலாக வெளிவந்த அதேசமயம் அதன் இரண்டாவது பதிப்பானது முதலாவது பதிப்பை விட ஏழு மடங்கு பெரியதாகும். 15வது பதிப்பானது தேவையற்ற அம்சங்கள் நீக்கப்பட்ட தரமான ஒரு பதிப்பாகும். 16வது பதிப்பானது உருவப் பிரிவுகள், பிரதேச அட்டவணை, சொல்லடைவு என்பவற்றை உள்ளடக்கி முதன் முதல் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டது. இதன் சுருக்க வடிவமே இன்று எமது பிரதேசத்திலுள்ள பெரும்பாலான பொதுநூலகங்களை ஒழுங்குபடுத்தப் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் 18வது பதிப்பானது முதன்முதல் மூன்று தொகுதிகளாக வெளியிடப் பட்டது. 20வது பதிப்பு பிரதான அட்டவணையை இரு தொகுதிகளில் கொண்டு 4 தொகுதிகளாக வெளிவந்தது. இன்று எம்மிடையே 22வது பதிப்பு பயன்பாட்டில் உள்ளது.

உள்ளடக்கம்: அராபிய எண்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எண் கட்டுமானம் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தில் பொருட்துறைகள் பின்வரும் பத்துப் பிரதான துறைகளாகப் பிரிக்கப்படுகின்றன. பிரதான துறைகள் ஒவ்வொன்றும் மேலும் 10 பிரிவுகளாக பிரிக்கப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவும் மேலும் 10 பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது.

பிரதான வகுப்புகள்	
பொது	000
மெய்யியல்	100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம்	200		
சமூக அறிவியல்	300		
புள்ளிவிபரவியல்	310		
அரசியல்		320	
பொருளியல்		330	
சட்டவியல்		340	
பொதுநிர்வாகம்		350	
சமூக சேவைகள்		360	
கல்வி		370	
பாடசாலைகள்			371
ஆரம்பக் கல்வி			372
இடைநிலைக் கல்வி			373
வளர்ந்தோர் கல்வி			374
பாடத்திட்டம்			375
உயர்கல்வி			378
கல்விக் கொள்கை			379
வர்த்தகம்		380	
பண்பாடும் பழக்கவழக்கமும்		390	
மொழி	400		
அறிவியல்	500		
தொழினுட்பம்	600		
கலை	700		
இலக்கியம்	800		
புவியியலும் வரலாறும்	900		

ஒழுங்கமைப்பு: தூயி தசமப் பகுப்புத் திட்டத்தின் 22ம் பதிப்பானது 4 தொகுதிகளில் 11 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

தொகுதி 1

A. புதிய அம்சங்கள்: 22ம் பதிப்பின் புதிய அம்சங்களும் மாற்றங்களும் தொடர்பான சுருக்க விளக்கத்தைக் கொண்டிருக்கிறது.

B. அறிமுகம்: பகுப்பாக்கத் திட்டத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை பாவனையாளருக்கு வழங்குகிறது.

C. கலைச்சொல் அகராதி.

D. சொல்லடைவு: அறிமுகம், கலைச்சொல் அகராதி ஆகியவற்றுக்கான சொல்லடைவு.

D. வழிகாட்டி: வெவ்வேறுபட்ட பொருட்துறைகளைப் பகுப்பாக்கம் செய்வதற்கான வழிகாட்டுதலை பகுப்பாளருக்கு வழங்குகிறது. கடந்த பதிப்புகளில் இந்த வழிகாட்டி தொகுதி நான்கின் இறுதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

E. அட்டவணைகள்: குறிப்பிட்ட பொருட்துறையைத் தனித்துவமாக வெளிப்படுத்திக் காட்டும் பொருட்டு பிரதான அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளுடன் இணைக்கக் கூடிய இணைப்பெண்களைக் கொண்ட ஆறு அட்டவணைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

F. வகுப்பெண் மாற்றங்கள்: 21ம் பதிப்பையும் 22ம் பதிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவகையில் பொருட்துறையின் அமைவிட மாற்றங்கள், கைவிடப்பட்ட வகுப்பெண்கள், மீளப் பயன்படுத்தப்படும் வகுப்பெண்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொகுதி 2

G. தசமப் பகுப்புத் திட்டத்தின் முதல் மூன்று சாராம்சங்களும்.

H. பிரதான அட்டவணை: 001-599 வரை ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட்துறைகளும் தனிமக் கருத்துக்களும்.

தொகுதி 3

I. பிரதான அட்டவணை: 600-999 வரை ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட்துறைகளும் தனிமக் கருத்துக்களும்.

தொகுதி 4

K. சார்பு அட்டவணை: பிரதான அட்டவணையிலும் துணை அட்டவணைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட் துறைகள் தனிமங்களுக்கான அகரவரிசை அட்டவணை வழங்குகிறது.

தூயி தசமப்பகுப்புத் திட்டத்தில் ஒவ்வொரு வகுப்பையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அராபிய எண்கள் பயன்படுத்தப்படுகின்றன. முதல் மூன்று இலக்கங்களிலும் முதலாவது இலக்கம் பிரதான வகுப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இரண்டாவது இலக்கமானது பிரதான வகுப்பின் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மூன்றாவது இலக்கமானது உப பிரிவுகளில் உள்ளடங்கும் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. குறிப்பிட்ட ஆவணத்துக்கு முழுமையானதும் விரிவானதுமான வகுப்பெண்ணைக் கொடுக்கும் பொருட்டு மூன்றாவது இலக்கத்துக்கு அடுத்ததாகத் தசமப் புள்ளி பயன்படுத்தப்படுகின்றது. இந்தத் தசமப் புள்ளிக்கு அடுத்ததாக வரும் இலக்கங்கள் ஒன்றில் பொருட் துறையாகவோ அல்லது தனித்து இயங்க முடியாத தனிமக் கூறுகளாகவோ இருக்கலாம். தசமப் புள்ளிக்கு அடுத்ததாக எந்தவொரு வகுப்பெண்ணும் பூச்சியத்தில் முடிவடையக் கூடாது என்பதையும் ஒரு வகுப்பெண் ஆகக்குறைந்தது மூன்று இலக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் பகுப்பாளர் கவனத்தில் கொள்வது அவசியம்.

ii. Universal Decimal Classification



வரலாறு: உலக அறிவின் எல்லாத்துறைகளையும் உள்ளடக்குகின்ற பொதுப்பகுப்பாக்கத் திட்டமான இது பெல்ஜியத்தை சேர்ந்த லாவொன் ரெயின், போல் ஒட்லெட் எனும் இரு ஆசிரியர்களினால் அனைத்துலக ஆவண தொகுப்பு நிறுவனத்தின் (FID) உதவியுடன் 1985ம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1905ம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் முழுப் பதிப்பாக வெளியீடு செய்யப்பட்ட பகுப்பாக்கத் திட்டமாகும். இதனது இரண்டாவது பதிப்பானது 1927-33 காலத்துக்கிடைப் பகுதியில் பிரெஞ்சு மொழியிலும் மூன்றாவது பதிப்பு 1934 - 53 காலப்பகுதியில் ஜேர்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலும் நான்காம் பதிப்பு 1943இல் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. சுருக்கப் பதிப்புகள் கிட்டத்தட்ட 17 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு என மும்மொழியில் தயாரிக்கப்பட்ட சுருக்கப்பதிப்பானது 1958இல் வெளியிடப் பட்டது. சுருக்கப் பதிப்புகளுக்கான பத்து வருட அனுபந்தம் 1969இல் வெளியிடப்பட்டது. உலகின் பெரும்பாலான நாடுகளால் பின்பற்றப்படும் பகுப்பாக்கத் திட்டமாக இது உள்ளது. ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகளில் இது பிரபல்யம் பெற்றதொன்றாக உள்ளதுடன் அறிவியல் தொழிநுட்ப நூலகங்களுக்கான உத்தியோகபூர்வ பகுப்பாக்கத் திட்டமாக இது ரஷ்யாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

உள்ளடக்கம்: DDC யின் 5வது பதிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட தொன்று தான் UDC. தற்காலப் பதிப்புகள் DDC யின் பின்னைய பதிப்புகளிலிருந்து கணிசமானளவை உள்வாங்கியிருக்கிறது. மாதிரியமைப்பில் இரண்டும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றது எனினும் குறியீடுகளின் பயன்பாட்டின் அடிப்படையில் இது வேறுபடுகின்றது. 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பிரதான கட்டமைப்புகளில் ஒற்றுமைத்தன்மை இருந்ததன் காரணமாக DDCயைப் பயன்படுத்தும் நூலகங்கள் UDC யையும் பின்பற்றும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்று இரு பதிப்புகளுமே கணிசமானளவு புதிய மாற்றங்களை உட் புகுத்தியிருப்பதனால் ஒருமுகப்படுத்தப்பட்ட DDC/UDC திட்டமொன்றை உருவாக்கும் வாய்ப்பு இல்லை. UDC பிரதான அட்டவணை, சிறப்பு அட்டவணை, துணை அட்டவணை என மூன்று அட்டவணைகளைக் கொண்டது. பிரதான அட்டவணையில் உலக அறிவானது பத்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகுப்புகள் ஓர் இலக்கத்தால் மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

UDC தரவுத் தளமானது கிட்டத்தட்ட 61,000 பதிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதன் கையடக்கப்பதிப்பானது தேவையற்ற பதிவுகள் நீக்கப்பட்டு, சிறிய அளவுத்திட்டத்தில் பயன்படுத்தப்படக்கூடிய கிட்டத்தட்ட 4000 முக்கியமான பதிவுகளை மட்டும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் நெகிழ்வுத் தன்மை வாய்ந்த கட்டமைப்பானது விளக்கமான சொல்லடைவாக்கத்துக்கும் பரந்தளவு தேடுகைக்கும் அனுமதிக்கிறது. தொழினுட்ப நூலக தகவல் சேவைகளுக்கு மிகப் பொருத்தமானதாகக் கருதப்படும் இத் திட்டமானது மரபுரீதியற்ற ஆவணங்களையும், பல்லூடக சாதனங்களையும் ஒழுங்குபடுத்துவதற்குச் சிறந்த தொன்றாகும்.

ஒழுங்கமைப்பு: DDCயைப் போன்றே குறியீட்டு முறையிலும் அதனது அமைப்பிலும் இப்பகுப்புத்திட்டம் படிநிலையமைப்புத் தன்மையைக் கொண்டது. குறியீடானது அறிவுத் துறையின் ஒவ்வொரு அலகிற்கும் அதன் உப பிரிவுகளுக்குமிடையிலான உறவு முறையைப் பிரதிபலிக்கின்றது. பொருட்துறைக்கான வகுப்பெண் பரந்த பொருட்துறையில் தொடங்கி சிறப்புத் துறை நோக்கி விரிவடைகின்றது.

எ - டு

3	சமூக அறிவியல்
33	பொருளியல்
336	நிதிப் பொருளியல்
336.7	பணம், நிதி முறைமை, வங்கி
336.71	வங்கிகளும் வங்கித்தொழிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை அட்டவணைகள்

1a தொடக்கம் 1k வரையிலான 9 பொதுத்துணை அட்டவணைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

* அட்டவணை 1a: இது விரிவு சேர்வு என்ற இரு அம்சங்களை எடுத்துக்காட்ட உதவும் வீச்சுக்கோடு (/), சக (+) என்ற இரு குறியீடுகளைக் கொண்டது. வீச்சுக்கோட்டுக் குறியீடு (/) வகுப்பெண்ணின் விரிவாக்கத்துக்கு உதவுகின்றது. அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்துறைகளை உள்ளடக்குகின்ற பரந்த பொருட்துறையை காட்டுவதற்கு உதவுகின்றது. 592/599 என்ற வகுப்பெண்ணானது உப பிரிவுகள் உட்பட விலங்கியலில் உள்ளடக்கப்பட்ட அனைத்துத் துறைகளையும் காட்டுகின்றது. + என்ற குறியீடு இரண்டு பொருட்துறைகளை அல்லது தனிமங்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. எ-டு அரசியலும் பொருளியலும் - 32 + 33.
* அட்டவணை 1b. இரு பொருட்துறைகளுக்கிடையிலான உறவுநிலையைக் காட்டுவதற்கென கோலன் குறியீடு (:) பயன் படுத்தப்படுகின்றது. எ-டு இயற்கை வளங்களின் அடிப்படை யிலான விவசாயம். 631 : 502.4.
* அட்டவணை 1c: மொழிகளைக் குறிப்பதற்குச் சமன் என்ற குறியீடு (=) பயன்படுத்தப்படுகின்றது. எ-டு இந்தோ ஐரோப்பிய மொழிகள் = 1 / = 2.
* அட்டவணை 1d. உருவப் பிரிவுகளைக் காட்டுவதற்கு வளைஅடைப்புக்குறிக்குள் 0 - 9 வரையிலான எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.
* அட்டவணை 1e: இது இடங்களை அட்டவணைப்படுத்துகின்றது. வளை அடைப்புக் குறிக்குள் எண்கள் உள்ளடக்கப்படுகின்றன. 1 தொடக்கம் 9 வரையிலான எண்கள் முறையே பொதுவான இடங்கள், பௌதிக பிரதேசங்கள், புராதன உலகம், நவீன உலகம், ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஏனைய இடங்கள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட DDCயின் பிரதேச அட்டவணை போன்று அமையும் இது வகுப்பெண்ணிலும் ஒற்றுமைத்தன்மையைக் கொண்டுள்ளது.
* அட்டவணை 1f: இது இனக்குழுமங்களுக்கான அட்டவணையாக உள்ளது.
* அட்டவணை 1g: இது கால அட்டவணையாகும். இது "??" என்ற குறியீட்டால் காட்டப்படுகின்றது.
* அட்டவணை 1h: இது UDC அல்லாத குறியீடுகளை UDC வகுப்பெண்ணுடன் பயன்படுத்தும் வாய்ப்பை வழங்குகின்றது.
* அட்டவணை k: பொருட்களுக்கு இருக்கும் பொதுவான சிறப்புப் பண்புகளைக் காட்ட பயன்படுத்தப்படுகின்றது. இது - 0 என்ற குறியீட்டுடன் தொடங்குகின்றது. எ-டு இயற்கை வாயு - 032.31

இந்தோ அராபிய எண்களையும் ஒருசில சிறப்புக் குறியீடுகளையும் உள்ளடக்கிய பகுப்புத் திட்டமாக இது உள்ளது. வகுப்பெண்கள் தசமப் பிரிப்புகளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. Colon Classification Scheme [Colon Classification Scheme/by S.R. Ranganathan.- 1st ed. Bangalore: Sarada Ranganathan endowment for Library Science, 1933-]



வரலாறு: மேலைத்தேய சார்புடைய பகுப்பாக்கத் திட்டங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டு கீழைத்தேச நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் இந்தியாவை சேர்ந்த கலாநிதி எஸ். ஆர். இரங்கநாதனால் 1933ம் ஆண்டு 1ம் பதிப்பாக வெளியிடப்பட்ட இப்பகுப்பாக்கத் திட்டமானது இதுவரை 7 பதிப்புகளாக வெளிவந்துள்ளது. கருத்துக் கூறுகளை வேறுபடுத்துவதற்கு கோலன் என்ற குறியீட்டைப் பயன்படுத்தியமையால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது. கீழைத்தேய நாடுகளின் சிறப்புத் துறைகளாக கருதப்படுகின்ற தத்துவம், சமயம், மொழியியல், வரலாறு, சட்டம் போன்றவற்றிற்குத் தனித்தனி வகுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். ஏனைய பகுப்பாக்கத் திட்டங்களில் இவற்றிற்கு முக்கிய இடம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளடக்கம்: இம்முறையில் பொருட் துறை ஒவ்வொன்றினதும் உட்பொருளை அறிந்து அதற்கமையவே அதற்குரிய வகுப்பெண் வழங்கப்படுகின்றது. ஏனைய பகுப்பாக்கத் திட்டங்கள் போன்று ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட தயார் நிலை வகுப்பெண்களை வழங்காது பகுப்பாளர் தாம் விரும்பியவாறு பொருட்துறைகளுக் கேற்ப மிக நுண்ணிய வகுப் பெண்களை உருவாக்க முடியும். கோலன் வகுப்பு முறையில் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட பிரதம வகுப்புகள் இயற்கை அறிவியல், மனிதப்பண்பியல், சமூக அறிவியல் என்ற மூன்று பெரும் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்டன. CC 7வது பதிப்பிலுள்ள பிரதம வகுப்புகள் பின்வருமாறு:

இயற்கை அறிவியல்

B	கணிதவியல்	(Mathematics)
C	பௌதிகவியல்	(Physics)
D	பொறியியல்	(Engineering)
E	இரசாயனவியல்	(Chemistry)
F	தொழினுட்பம்	(Technology)
G	உயிரியல்	(Biology)
H	புவிச்சரிதவியல்	(Geoplogy)
I	தாவரவியல்	(Botany)
J	விவசாயம்	(Agriculture)
K	விலங்கியல்	(Zoology)
L	மருத்துவம்	(Medicine)
M	பயன்தரு கலைகள்	(Useful Arts)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பண்பியல்

△ பேரின்ப நெறியும், ஆன்மீக அனுபவங்களும்

(Mysticism and Spiritual Experiences)

N	கலைகள்	(Fine Arts)
O	இலக்கியம்	(Literature)
P	மொழியியல்	(Linguistics)
Q	சமயம்	(Religion)
R	தத்துவம்	(Pholosophy)
S	உளவியல்	(Psychology)

பொது நூலகம் கொக்குவில்

சமூக அறிவியல்

T	கல்வி	(Education)
U	புவியியல்	(Geography)
V	வரலாறு	(History)
W	அரச அறிவியல்	(Political Science)
X	பொருளியல்	(Economics)
Y	சமூகவியல்	(Sociology)
Z	சட்டம்	(Law)

மேற்குறிப்பிட்ட பொருட்துறைகளுடன் Z - பொது, 1 - பொருட் துறைகளின் பிரபஞ்சம், 2 - நூலகவியல், 3 - நூலகவியல், 4 - பொதுசனத் தொடர்பு, 5 - பொருட்காட்சித் தொழினுட்பம், 6 - அரும்பொருளகவியல், 7 - அமைப்புகள், 8 - முகாமைத்துவ அறிவியல் போன்றவை பிரதம பொருட்துறைகளாக சேர்க்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி இந்தப் பொருட் துறைகளிலிருந்து புதிதாகத் தோன்றும் பெரும்பாலான அடிப்படைப் பொருட்துறைகளுக்கான பட்டியல் ஒன்றையும் 7வது பதிப்பு கொண்டிருக்கிறது.

ஒழுங்கமைப்பு: கோலன் பகுப்புத் திட்டமானது பகுப்புத் தொகுப்பு முறையிலான பகுப்பாக்கத் திட்டமாக இருப்பதன் காரணமாக அதன் ஒவ்வொரு பதிப்பிலும் பகுப்புத் தொகுப்பு முறை விரிவடைவது தவிர்க்கமுடியாதது. இம்முறையில் பாவிக்கப்படும் குறியீடு கலப்புக் குறியீடு எனப்படும். இதில் பத்து இந்தோ அராபிய எண்களும், 26 பெரிய உரோமன் எழுத்துகளும், J.Mills தவிர்ந்த ஏனைய சிறிய எழுத்துகளும் மற்றும் நிறுத்தற் குறியீடுகள், முற்றுப்புள்ளிகள், அம்புக்குறிகள், வளையடைப்புக்குறிகள் ஆகியன உபயோகிக்கப்படுகின்றன.

iv. Bibliographic Classification

நூல்விவரப் பகுப்பாக்கம்

வரலாறு: நியூயோர்க் நகரக் கல்லூரியில் நூலகராகப் பணி புரிந்த ஹென்றி எவ்லின் பிளிஸ் என்பவரால் 1908ல் உருவாக்கப்பட்டு 1910இல் Library Journal என்ற பருவ இதழில் இதன் சுருக்கம் வெளியிடப்பட்டது. 1940இல் இதன் முதலாவது பதிப்பு வெளியிடப்பட்டது. 1967இல் உருவாக்கப்பட்ட பகுப்பாக்கச் சங்கமானது இப்பகுப்பாக்கத் திட்டத்தின் ஊக்குவிப்புக்கும் வளர்ச்சிக்கும் பொறுப்பாக உள்ளது. முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரிவுபடுத்தப்பட்ட இத்திட்டத்தின் இரண்டாவது பதிப்பு J.Mills என்பவரால் பல தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: இதுவரை வெளி வந்த தொகுதிகளின் படி நூலகப் பகுப்பாக்கத்தின் நவீன கோட்பாடுகள் அனைத்தையும் பிரயோகித்துள்ள பகுப்பாக்கமாகக் கொள்ளமுடியும். முதலாவது தொகுதியானது அறிமுகத்தையும் துணை அட்டவணைகளையும் கொண்டிருக்கிறது. துணை அட்டவணைகள், பொது உருவப் பிரிவுகள், பொதுப் பொருட்துறைப் பிரிவுகள், நபர்கள், இடங்கள், மொழிகள், இனக்குழுமங்கள், காலம் என்பவற்றுக்கான பொதுப் பிரிவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இது ஒரு கருத்துக்கூறுப் பகுப்பாக்கத் திட்டமாகும். முதலாவது பதிப்பைப் போலன்றி இதில் கருத்துக்கூறுப் பகுப்பாய்வு மிக ஆழமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: 26 ரோமன் பெரிய எழுத்துகள், பூச்சியம் தவிர்ந்த 9 அரேபிய எண்கள் உள்ளடங்கிய கலப்புக் குறியீட்டை இது பயன்படுத்துகின்றது. கருத்துக்கூறுகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கு UDC யில் கோலன் (:) பயன்படுத்தப்படுவது போல் இதில் - பயன்படுத்தப்படுகின்றது. நினைவாம்சத் தன்மை குறைவாக இருப்பினும் குறித்த ஒரு ஆவணத்துக்கு ஆகச் சுருக்கமான வகுப்பெண்ணைக் கட்டியமைப்பதில் இத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

v. Library of Congress Classification

காங்கிரஸ் நூலக பகுப்பாக்கம்

வரலாறு: அமெரிக்க தேசிய நூலகத்தில் உள்ள ஆவணங்களைப் பகுப்பாக்கம் செய்வதற்கு வடிவமைக்கப்பட்டதும், காங்கிரஸ் நூலகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான செயல் துறைப் பயன்நாட்டமுடைய அணுகுமுறையைக் கொண்டதுமான பகுப்பாக்கத் திட்டம். ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட 20 பிரதான வகுப்புகளை இது கொண்டது. இது பின்வருமாறு:

A - பொது (General Works)

B - தத்துவம் (General Works)

C - வரலாற்றின் துணை அறிவியல்கள் (Auxiliary Sciences of History) (Archaeology, Genealogy, etc.)

D - வரலாறு -அமெரிக்கா தவிர (History Except America)

E - F - வரலாறு (History: America and United States)

G - புவியியலும் மானுடவியலும் (Geography and Anthropology)

H - சமூக அறிவியல்கள் (Social Sciences)

J - அரசியல் (Political Science)

K - சட்டம் (Law)

L - கல்வி (Education)

M - இசை (Music)

N - நுண் கலைகள் (Fine Arts)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P - மொழியும் இலக்கியமும் (Language and Literature)
Q - அறிவியல் (Science)
R - மருத்துவம் (Medicine)
S - விவசாயம் (Agriculture)
T - தொழினுட்பம் (Technology and Engineering)
U - இராணுவ அறிவியல் (Military Science)
V - Naval science
Z - நூல் (History of Books, Library Science, Bibliography)

8.4 உடனடி உசாத்துணை வளங்கள் [Ready Reference Sources]

ஆண்டு நூல்கள், ஐந்தொகுதிகள், கலைக்களஞ்சியங்களுக்கான அனுபந்தங்கள் போன்றவை விரிவான தகவல்களைத் தராது உண்மைத் தரவுகளைக் கண்டறிவதற்கென தொகுக்கப்படுபவை. சொல்லப்பட வேண்டிய தகவலை ஓரிரு வரிகளில் தரும் ஆற்றல் கொண்டவை.

8.41 ஆண்டு நூல்கள் [Yearbooks]

பொதுத்துறை சார்ந்தும், சில சமயங்களில் சிறப்புத் துறை சார்ந்தும் உருவாகும் அண்மைக்காலத் தகவல்களை விவரண ரீதியிலும் புள்ளிவிபர ரீதியிலும் ஆண்டு ரீதியாகத் தொகுத்துத் தருபவை ஆண்டுநூல்கள் என்கிறது அமெரிக்க நூலகச் சங்கத்தின் கலைச்சொல் அகராதி. குறிப்பிட்ட வருடத்தில் இடம்பெற்ற தகவல்களைத் தொகுத்துத் தருவதே இவற்றின் நோக்கமாகும். சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரு பொருட்துறை சார்ந்ததாக அல்லது ஒரு நாடு அல்லது பிரதேசத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இவற்றின் தகவல்கள் இருக்கக் கூடும்.

ஆண்டு நூல்களை பொது ஆண்டு நூல்கள் சிறப்பு ஆண்டு நூல்கள் என இரு வகையாகப் பாகுபடுத்தலாம்.

* பொது ஆண்டு நூல்கள்: இவை பொதுவாக எல்லா நாடுகளதும் அண்மைக்காலத் தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுபவை.

  எ - டு: Statemen's Yearbook
  Europa Yearbook

* சிறப்பு ஆண்டு நூல்கள்: இவை கல்வி சார்ந்ததாகவோ அல்லது ஒரு நாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது கலைக் களஞ்சியங்களின் அனுபந்தங்களாகவோ இருக்கக் கூடும்.

  எ - டு: Commonwealth University yearbook - கல்வி சார்ந்தது
  Manorama Yearbook - நாடு சார்ந்தது
  Encyclopeadic Yearbook - அனுபந்தம்

பயன்பாடு

* நடப்பு ஆண்டின் முக்கிய நிகழ்வுகளை கால அடிப்படையில் பட்டியல்படுத்தித் தருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குறித்த ஆண்டின் அரசியல், சமூக, கலாசார நிகழ்வுகளின் விபரங்களை சுருக்கப் படுத்தித் தருதல்.
* அறிவியல் தொழினுட்பத் துறை உட்பட குறித்த ஆண்டில் இடம்பெற்ற பலதரப்பட்ட துறை தொடர்பான பிரதான அபிவிருத்திகளையும் நவீன போக்குகளையும் வழங்குதல்.
* புகழ்பெற்ற மனிதர்களின் வாழ்க்கை தொடர்பான சுருக்க விபரங்களை மட்டுமன்றி அவர்களின் மரண நிகழ்வுகள் தொடர்பான தகவலையும் உள்ளடக்குதல்.
* நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
* விளையாட்டு நிகழ்வுகள், பரிசுகள், சனத்தொகை விபரங்கள் உட்பட பலதரப்பட்ட துறை தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களை வழங்குதல்.
* ஒரு நபர் தொடர்பான அல்லது நிறுவனம் தொடர்பான அல்லது பொருட்துறை தொடர்பான அண்மைத் தகவல்களை சுருக்கமாக வழங்குதல்.

மாதிரி உசாத்துணை வினாக்கள்

* உலக சுகாதார தாபனம் தொடர்பான சுருக்க விபரம்.
* ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உறுப்பு நாடுகளின் பெயர் விபரங்கள்.
* இந்தியாவில் நூலகவியல் கற்பிக்கப்படுகின்ற பல்கலைக் கழகங்கள்.
* உலக தொழிலாளர் தாபனத்தின் தொழிற்பாடுகள்.
* UNESCO வின் செயற்பாடுகள் பற்றிய விபரம்.
* இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகள் பற்றிய புள்ளி விபரம்.

எடுத்துக்காட்டுகள்

i. Statesmen Yearbook [London:Macmillan,1864- annual]



வரலாறு: Statement ஆண்டு நூலானது 1864ம் ஆண்டு இலண்டனில் உள்ள மக்மிலன் அச்சகத்தாரால் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இதன் 127வது பதிப்பு 1990ம் ஆண்டு வெளியானது. இது ஒரு வருடாந்த வெளியீடாகும். இது உலகிலுள்ள நாடுகளின் புள்ளி விபர வரலாற்று விபரங்களை ஆண்டு அடிப்படையில் தரும் ஓர் உசாத்துணை மூலமாகும். ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபர அட்டவணைகள் நூலின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்: இந்நூலினது தகவல்கள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

பகுதி 1 சர்வதேச நிறுவனங்கள்
பகுதி 2 பொதுநலவாய நாடுகள்
பகுதி 3 அமெரிக்கா
பகுதி 4 ஏனைய நாடுகள்
பகுதி 5 சொல்லடைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 1: ஐக்கிய நாடுகள் பற்றியும் அதனுடன் தொடர்புடைய முகவர் நிலையங்களின் தகவல்களையும் கொடுக்கின்றது. எ-டு:- ஐக்கிய நாடுகளுடன் தொடர்புடைய முகவர் நிலையங்களான IAEA, ILO, FAO, UNESCO, WHO, IMF போன்றவற்றின் விபரங்களை இங்கு பெறலாம்.

பகுதி 2 : பொதுநலவாய நாடுகள் பற்றிய விபரங்கள், உலக மாதா கோவில்களுக்கான சபை, சர்வதேச வர்த்தக தொழிற்சங்கம், ஐரோப்பிய நிறுவனங்கள் போன்றவற்றின் விபரங்களைத் தருகின்றது. இவ்வமைப்புக்கள் பற்றிய தகவல்கள், அவற்றின் வரலாறு, தொழிற்பாடுகள், ஒழுங்கமைப்பு, தலைமை அலுவலகங்கள், தலைவர், செயலாளர், இவ்வமைப்புக்களின் வெளியீடுகள் போன்ற விபரங்களை உள்ளடக்கியது. நாடுகளதும் அவற்றின் அரசியல் பிரிவுகளினதும் தகவல்கள் பின்வரும் விபரங்களைக் கொண்டுள்ளன:

* வரலாறு,
* பிரதேசமும் சனத்தொகையும்,
* அரசியல் அமைப்பும் அரசும்,
* பாதுகாப்பு,
* சர்வதேச தொடர்புகள்,
* பொருளாதாரம் (நாணயம், வங்கி, அளவைகளும் நிறுவைகளும்),
* சக்தியும் இயற்கை வளங்களும் (மின்சாரம், எண்ணெயும் இயற்கை வாயுவும், கனிப் பொருள், விவசாயம், கடற் றொழில், காட்டுத்தொழில்)
* வர்த்தகமும் தொழிலும், தொழிற்சாலை, உழைப்பாளர், வர்த்தகம், சுற்றுலா.
* தொடர்புகள் (பாதைகள், நகரத் தங்குமிடங்கள், புகையிரதப் பாதைகள், கப்பல் தொடர்புகள், எல்லைப் பாதுகாப்பு, அஞ்சல், ஒலிபரப்பு, திரைப்படங்கள், செய்தித் தாள்கள்) போன்றவை.
* நீதி, மதம், கல்வி, நலன் போன்றவை,
* அயல்நாட்டு பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள்.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு தகவலின் கீழும் அத்தகவல்கள் பெறப்பட்ட நூல்விபரக் குறிப்புக்கள், உசாத்துணை நூல்கள் போன்றவை தரப்பட்டுள்ளன. ஆசிரிய, விடய, இட வாரியாக அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட சொல்லடைவு நூலின் இறுதியில் கொடுக் கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நூலானது எல்லா வகையான நூலகங்களுக்கும் பயன் தரக்கூடிய ஓர் உசாத்துணை மூலமாகும்.

http://www.statesmansyearbook.com

இத்தளம் Statesmans year book என்ற நூலின் online தளமாகும். 2007 ம் ஆண்டிற்கான உலக தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. Dr. Barry Turner என்பவரால் தொகுக்கப்பட்ட இத்தளத்தில் கடவுச்சொல் (Password) மூலம் உள்நுழைந்து திறவுச் சொல் (Key Word) மூலம் தேடல் செய்யும் வசதி காணப்படுகிறது. இதன் பதிப்புரிமை நிறுவனம் Palgrane Mac millan ஆகும் 2007ல் Update செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Europa World Yearbook [Oxford: Routledge, 1959-]

வரலாறு: புகழ் பெற்ற வெளியீட்டாளர்களில் ஒன்றான Routledge வெளியீட்டாளரின் இன்னொரு பெறுமதி மிக்க வெளியீடாக இது உள்ளது. 2006ம் ஆண்டுக்குரிய இதனது 47வது பதிப்பானது 2006 யூனில் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற முன்னணி வெளியீட்டாளர்களில் ஒன்றான இலண்டனிலுள்ள Europa வெளியீட்டாளரினால் 1959ம் ஆண்டு முதன்முதல் வெளியிடப்பட்ட இது அதனது 45வது பதிப்பு வரை Europa வெளியீடாக இருந்து, 2005ம் ஆண்டு Taylor & Francis Group வெளியீட்டகமானது Routledge இன் இன்னொரு வெளியீட்டகமான Routledge இனால் முழுமையாக உள்வாங்கப்பட்ட பின்னர் 2005 இலிருந்து Routledge வெளியீடாக வெளியிடப்படுகின்றது. கிட்டத்தட்ட 250க்கும் மேற்பட்ட நாடுகளது சமூக, அரசியல், பொருளாதாரத் தகவல்களைத் தந்து நிற்கும் இவ் உசாத்துணை நூலானது அதன் திட்ப நுட்பம், நம்பகத்தன்மை, நடுநிலைமை, கொள்கை மாறாமை போன்றவற்றில் புகழ் பெற்ற, உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களில் ஒன்றாகும். அரசியல், வரலாறு, பொருளாதாரம், புள்ளிவிபரம் மற்றும் ஏனைய நூல்விபரத் தகவல்களுக்கான மிக நம்பகரமான மூலம் இது என International affairs என்ற பருவ இதழ் இதற்கு மகுடம் சூட்டியிருக்கிறது.

உள்ளடக்கம்: பின்வரும் அம்சங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

* உலகளாவிய தகவல் முழுமைத்தன்மை.
* புவியியல், பொருளியல், அரசியல் தகவல்களில் முழுமைத் தன்மை.
* 250க்கும் மேற்பட்ட நாடுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அத்தியாயங்கள்.
* முழுமையான காலத்துடன் ஒட்டிய வெளிநாட்டுத் தகவல்.
* 4500 பக்கங்களில் பாரபட்சமற்ற தரவு.
* 1650க்கும் மேற்பட்ட சர்வதேச நிறுவனங்களுக்கான பட்டியல்.
* தொடர்புகளைப் பேணுவதற்கு உதவும் பட்டியல்.
* ஒப்பீட்டு ஆய்வுக்கு உதவும்வகையில் அண்மைக்காலப் புள்ளிவிபரங்களுடன் அதற்கு முந்திய வருடங்களுக்கான புள்ளிவிபரங்கள்.
* பதிப்புத் தரமும் பயன்படுத்துவதற்கு இலகுவான வடிவமும்.
* சாத்தியமான இடங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள்.

ஒழுங்கமைப்பு: இது பின்வரும் இரு தொகுதிகளை உடையது:

தொகுதி 1: இது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதியானது அகரவரிசையில் ஒழுங்கமைக்கப்பட்ட கிட்டத்தட்ட 1,700 சர்வதேச நிறுவனங்கள் பற்றிய தகவல்களைக் கொண் டுள்ளது. முதலாவது தொகுதியின் இரண்டாவது பகுதியானது ஆப்கானிஸ்தான் தொடக்கம் ஜோர்தான் வரையிலான நாடுகள் பற்றிய விபரங்களை அகரவரிசையில் தரு கின்றது. முதலாவது தொகுதியின் இறுதியில் சர்வதேச நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய சொல்லடைவொன்று கொடுக்கப்பட்டுள்ளது.

தொகுதி 2: இது கஸகஸ்தான் முதல் சிம்பாவே வரையிலான நாடுகள் பற்றிய விபரங்களைத் தருகின்றது. ஒவ்வொரு நாடுகள் பற்றிய தகவல்களும் பின்வரும் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அறிமுக ஆய்வு: இதில் நாடுகளின் அண்மைக்கால வரலாறு, பொருளியல் விவகாரங்கள், அமைவிட விவரம், காலநிலை மொழி, மதம், கொடி, தலைநகரம், அரசாங்கம், பாதுகாப்பு, கல்வி, பொது விடுமுறை தினம், நிறைகளும் அளவைகளும் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* புள்ளிவிபர ஆய்வு: இதில் சனத்தொகை, சுகாதாரம், நலன், விவசாயம், காட்டுத் தொழில், நிதி, வெளியக வர்த்தகம், மீன்பிடி, சுரங்கத்தொழில், கைத்தொழில், போக்குவரத்து, சுற்றுலா, தொடர்பு ஊடகம், கல்வி போன்றவற்றில் உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* விளக்க வழிகாட்டி: இதில் தொடர்பு கொள்பவரின் பெயர், முகவரி, தொலைபேசி, தொலைநகல். இ-அஞ்சல், இணைய முகவரி போன்றவையும் வரலாறு, பொருளாதார புள்ளிவிபர தகவல்கள், அரசாங்கம், அரசியலமைப்பு, அரசியற் கட்சிகள், சட்ட அமைப்பு, சமயம், சமூகநாடுகள், கல்வி, பாதுகாப்பு போன்ற ஏனைய பயனுள்ள தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாட்டிற்கும் அந்நாட்டிலுள்ள செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், நாட்டிலுள்ள வெளியீட்டாளர்கள், வானொலி, தொலைக்காட்சி, வங்கிகள், காப்புறுதி, வர்த்தகம், வியாபார அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வான் பாதைகள், புகையிரதப் பாதைகள், கப்பற் பாதைகள், பல்கலைக்கழகங்கள் போன்றவை பற்றிய பயனுள்ள தகவல்களையும் அவற்றின் முகவரிகளையும் தருகின்றது. ஒப்பீட்டு ரீதியில் இந்த ஆண்டு நூலை விட Statement ஆண்டுநூல் மிக விரிவான தகவல்களைத் தருகின்றது. எனினும் சர்வதேச நிறுவனங்கள் பற்றிய பெயர்களையும் நிறுவனங்களையும் தருவதற்கு இது ஒரு சிறந்த உசாத்துணை மூலமாகும்.

http://www.europaworld.com

இத்தளமானது Europa World Year Book என்ற உலகப்புகழ் பெற்ற வெளியீட்டின் Online வெளியீடாக அமைகிறது. முதன் முதலாக 1926 ல் பதிப்பிக்கப்பட்ட இந்த உசாத்துணை நூல் ஆப்கானிஸ்தான் முதல் சிம்பாவே வரையான சுமார் 250ற்கும் மேற்பட்ட நாடுகளின் பொருளாதார அரசியல் சார்ந்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கி தனது இணையப் பதிப்பைப் பராமரித்து வருகிறது. கொடுப்பனவு முறை மூலம் பார்வையிடும் வசதியைக் கொண்ட இத்தளம் உடனடிச் செய்திகளையும் தகவல்களையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனையவை

i. http://www.unep.org/geo/yearbook

Global Environment out look என்ற பெயரில் GEO ஆண்டு நூலை இத்தளம் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் சூழல் திட்டத்தின் கீழ் வெளியிடப்படும் இவ்வாண்டு நூல் கடந்த 5 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஆண்டு நூல்களையும் 2007ம் ஆண்டுக்கான நூலினையும் உள்ளடக்கியுள்ளது. உலகளாவிய சூழலியல் நிபுணர்களின் கருத்துக்கள் ஒரே பார்வையிலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. http://www.oldyearbooks.com

இத்தளம் உலகளாவிய ரீதியில் ஆண்டு நூல் வெளியீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் பராமரிக்கப்படுகிறது. வாரந்தோறும் புதிய ஆண்டு நூல்கள் இத்தளத்தில் இணைக்கப் படுகின்றன. 238 ஆண்டு நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச ரீதியில் தேடல் செய்யும் வசதியும் காணப்படுகிறது.

iii. Commonwealth University Yearbook [London: Association of Commonwealth Universities, 1914 - Annual.]



வரலாறு: இவ் ஆண்டு நூலானது கல்வி சார்பான ஒரு நூலாகும். பொதுநலவாய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களையும், அதனது செயற்பாடுகளையும் நாடு வாரியாக ஒழுங்குபடுத்தித் தருகின்றது. இதனது 1991வது வெளியீடானது 04 தொகுதிகளாக வெளியிடப் பட்டுள்ளது. 04வது தொகுதியில் பல்கலைக்கழக அனுமதி பற்றிய விபரங்கள் கொண்ட பின்னிணைப் புகளும் (Appendices) பெயர், பொருட் சொல்லடைவு களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டிலு முள்ள பல்கலைக்கழகங்கள் பற்றிய தகவல்கள் அக்குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் அல்லது செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு நாடுகளின் கீழும் அந்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் கீழும் அப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் பொருட்துறைகள் பற்றிய விபர அட்டவணை ஒன்று பதிவின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அப் பல்கலைக் கழகத்தின் வேந்தர், துணை வேந்தர், பதிவாளர், நூலகர் போன்றோரின் பெயர் களையும், முகவரி, தரம், அப்பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு போன்ற தக வல்களைக் கொண்டிருக்கும். அத்துடன் அப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் துறைகள் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டு துறைத்தலைவர்களின் பெயர்களும், அத்துறையின் கீழுள்ள கல்விசார் ஊழியர்களின் பெயர்களும், கொடுக்கப்பட்டிருக்கும். பதிவுகளின் இறுதியில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விபரங்கள், பட்டங்கள், கடமை புரியும் நிர்வாக ஊழியர் போன்ற விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

8.42 ஐந்தொகுதிகள் [Almanacs]

நாட்காட்டிகள், வானியல் தரவுகள் உட்பட முக்கிய தகவல்களைத் தொகுத்துத் தரும் ஒரு வருடாந்த வெளியீடு இதுவாகும். சில சமயங்களில் குறித்த ஒரு துறை சார்ந்த புள்ளிவிபரங் களையும், தகவல்களையும் தருகின்ற ஆண்டு நூலாகவும் இது தொழிற்படும். (ALA Glossary) கோள்களின் இடமாற்றம், நீரோட்டங்களின் வேகங்கள், விடுமுறை தினங்கள் என்ப வற்றைக் காலரீதியாகத் தொகுத்துத் தருவதாகவே ஐந்தொகுதிகளின் ஆரம்ப கால வடிவம் இருந்தது. எமது வீடுகளில் நாம் பயன்படுத்தும் பஞ்சாங்கங்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. எனினும் காலப்போக்கில் இவை பயனுள்ள புள்ளி விபரத் தரவுகளையும், உள்ளூர், தேசிய, சர்வதேச ரீதியில் இடம் பெறும் அண்மைக்காலத் தகவல்களை மட்டுமன்றி பழைய தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்களையும் தொகுத்துத் தரும் சாதனமாக மாறியது. ஆண்டு நூல்கள் அண்மைத் தகவல் களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் அதேசமயம் ஐந்தொகுதிகளோ புதிய தகவல்களை மட்டுமன்றி பழைய தகவல்களையும் உள்ளடக்குவதுடன் வானியல் சம்பந்தப்பட்ட தகவல் களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன.

கி.மு 1000 ஆண்டளவிலேயே கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் சந்திர உதயம் மறைவு, நீரோட்டங்களின் உயர் மற்றும் தாழ்நிலைக் காலங்கள், விடுமுறை நாட்கள் உட்பட பல நானாவித தகவல்களை தரும் நூலாக இது கருதப்பட்டது.

பயன்பாடு

* ஒரு வருடத்தில் இடம்பெறக்கூடிய முக்கிய நிகழ்வுகளைக் கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வழங்குதல்.
* குறிப்பிட்ட ஆண்டின் அரசியல், சமூக, கலாசார நிகழ்வுகளைச் சுருக்கமாக வழங் குதல்.
* அறிவியல் தொழினுட்பத்துறை உட்பட குறித்த ஆண்டின் பலதரப்பட்ட துறை களினதும் வளர்ச்சிகளையும் அவற்றின் போக்குகளையும் வழங்குதல்.
* வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரபல்யம் வாய்ந்த நபர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைச் சுருக்கமாக வழங்குவதுடன் முக்கிய தலைவர்களின் இறப்புத் தக வல்களையும் வழங்குதல்.
* முக்கிய நிறுவனங்களின் தகவல்களை வழங்குதல்.
* விளையாட்டு, பரிசுகள், கௌரவிப்புகள், குடித்தொகை உட்பட பல்வேறுபட்ட துறை சார்ந்த புள்ளவிபரத் தரவுகளை வழங்குதல்.
* குறிப்பிட்ட பொருட்துறை அல்லது தனிநபர் அல்லது நிறுவனம் அல்லது நிகழ்வு தொடர்பான அண்மைத் தரவுகளை மிகச் சுருக்கமாக வழங்குதல்.

மாதிரி உசாத்துணை வினாக்கள்

* இலங்கையின் தேசிய பறவை
* நைல்நதியின் நீளம்
* இமயமலையின் உயரம்
* உலகின் ஏழு அதிசயங்களின் பெயர்கள்
* நோபல் பரிசுக்கு சன்மானமாகத் தரப்படும் தொகையின் அளவு
* இந்தியாவிலுள்ள தேசிய ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை
* மருத்துவத்துறையில் நோபல் பரிசைத் தட்டிய விற்பன்னர்களின் பெயர்ப்பட்டியல்
* டெல்கியிலுள்ள சினிமாத் திரையரங்குகளின் தொகையும் அதன் இருக்கை அளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. Whitaker's Almanac. [London:The Stationary office,1869 - Annual]

வரலாறு: இவ் உசாத்துணை சாதனத்தின் ஆரம்பகர்த்தாவாகக் கருதப்படும் Joseph Whitaker என்ற ஊடகவியலாளரின் குறிப்புகளிலிருந்து 1868ல் தொகுக்கப்பட்டது. ஆங்கில மொழியிலுள்ள மிகவும் நம்ப கரமான பெறுமதி மிக்க உசாத்துணை நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்நூலானது அதன் திட்ப நுட்பத்துக்குப் பெயர் பெற்றதொன்றாகும். 2000ம் ஆண்டுக்குரிய ஐந்தொகுதியானது 132வது பதிப்பாகக் காணப்படுவதுடன் இது Lauren Hill என்பவரால் பதிப்பிக்கப்பட்டதாகும்.

உள்ளடக்கம்: வானியல் தகவல்களைக் கணிசமாக உள்ளடக்குவது மட்டுமன்றி உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளின் அரசாங்கம், நிதி, வர்த்தகம், சனத்தொகை முதலியவை தொடர்பான புள்ளிவிபரங்களையும் உள்ளடக்குகின்றது. இருந்த போதிலும் உலகின் அண்மைக்கால நிகழ்வுகளை சுருக்கமான வடிவத்தில் தருவதே இதன் பெரும் பணியாகும். பெரிய பிரித்தானியா தொடர்பான தகவல்கள் மிக விரிவாக உள்ளடக்கப்பட்டிருப்பதனால் பிரித்தானிய நிறுவனங்கள், நூலகங்கள், ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் பிரித்தானியா பற்றி அறிய விரும்பும் எவருக்கும் மிகவும் பெறுமதிமிக்க உசாத்துணை சாதனமாகக் கருதப் படுகின்றது.

ஒழுங்கமைப்பு: வருடத்தின் முக்கிய நிகழ்வுகள் கால ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. நூலின் தொடக்கத்திலேயே மிக விரிவாக பொருளடக்க அட்டவணை தரப்பட்டுள்ளது.

ii. World Almanac and Book of Facts [New York: Newspaper Enterprise Association, 1868- Annual]



வரலாறு: ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப்படும் ஐந்தொகுதிகளுள் மிகப் பிரசித்தம் வாய்ந்ததும் அண்மைக்காலத் தகவல்களை உள்ளடக்குவதும் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான ஐந்தொகுதியாக இது கருதப்படுகின்றது. 80 மில்லியன் பிரதிகள் விற்பனையாகின்றதுடன் அமெரிக்க அதிபர்கள் உட்பட பல பிரமுகர்களின் முக்கிய பயன்பாட்டு வளமாகவும் இது கருதப்படுகின்றது. 1000 இற்கும் மேற்பட்ட பக்கங்களில் உண்மைகள், புள்ளிவிபரங்கள், வரைபடங்கள், செய்திகள், புகைப்படங்கள், தேசியக் கொடிகள் போன்றவற்றை உள்ளடக்கி வெளிவருகின்றது.

உள்ளடக்கம்: சமூகவியல், பொருளாதாரம், அரசியல், கைத் தொழில், நிதி, கல்வி, கலா சாரம் போன்ற துறைகள் தொடர்பான மிகச் சுருக்கமாக தகவல்களையும், புள்ளிவிபரத் தரவுகளையும் தருகின்ற உசாத்துணை சாதனமாகும். வானிலை, காலநிலை சார்ந்த தகவல்கள், அரும்பொருளகங்கள், கலைக்கூடங்கள், வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள், பேரழிவுகள், பூகம்பங்கள், விளையாட்டு போன்ற நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான தகவல்கள் ஐக்கிய அமெரிக்கா சார்ந்ததாகும். ஐக்கிய அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அங்குள்ள நாடுகளுக்கும் சனத்தொகை உட்பட தகவல்களும் தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளுக்கு அந்நாடுகளின் பிரதான நகரங்களது சனத்தொகை தரப்பட்டிருக்கிறது. ஐக்கிய அமெரிக்க அதிபர்கள் அவர்களது மனைவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சுருக்கமான வாழ்க்கை வரலாறு உள்ளடக்கப்பட்டிருக்கிறது. 1789ம் ஆண்டி லிருந்து அமைச்சரவை அதிகாரிகளது பெயர்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

ஒழுங்கமைப்பு: பொருட்துறை, தொழில், பதவி ஆகிய பொருட்தலைப்புகளின் கீழ் பதிவுகள் பட்டியலிடப்பட்ட சொல்லடைவு நூலின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. புகழ் பெற்ற நபர்களாயின் அவர்களின் பெயர்களும் இச் சொல்லடைவில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

iii. Britannica Book of the Year. [Chicago: Encyclopaedia Britannica,1938-, Annual]

மிகவும் பிரசித்தம் வாய்ந்த Encyclopaedia Britannica வெளியீட்டாளரின் அதிகாரபூர்வ வெளியீடாக இது உள்ளது. பிரித்தானிய கலைக் களஞ்சியத்துக்கு இது அனுபந்தமாகத் தொழிற்படுகின்றது. கடந்த வருடத்தில் இடம்பெற்ற மக்கள், இடங்கள், நிகழ்வுகள் தொடர் பான தகவல்களை நடப்பு ஆண்டில் தருவதுடன் பரந்த ஆர்வத்துறைகள் சார்ந்த வளர்ச்சிகளை மீளாய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது. தேசிய, சர்வதேசிய மட்டத்தில் முக்கிய நிகழ்வுகளைச் சுருக்கமாகத் தருவதே இதன் பிரதான பணியாகும்.

iv. The Cambridge Fact Finder. [Ed. by David Crystal. New Delhi : Foundation Books]



வரலாறு: பலதரப்பட்ட வினாக்களுக்கும் மிக விரைவாகவும், சரியா கவும் விடையளிப்பதை இலக்காகக் கொண்ட புதிய வகை உசாத் துணை நூலாக இது விளங்குகிறது.

உள்ளடக்கம்: விலங்குகள், பொருட்கள், மனிதர், காலங்கள் தொடர் பான உண்மையான எண் சார்ந்தும், எழுத்துச் சார்ந்தும், அட்டவணை கள் மூலம் விளங்கப்படுத்தும் செயற்பாட்டில் வெற்றிபெற்ற உசாத் துணை சாதனம் இதுவாகும். கிட்டத்தட்ட 180,000 உண்மைகளை உள்ளடக்கி பாவனையாளரின் சுலபமான கையாள்கைக்கு ஏற்றவிதத் தில் ஒழுங்கமைக்கப்பட்டு வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள் என்பவற்றினால் அதிகம் பயன் படுத்தும் உசாத்துணை சாதனமாக கருதப்படுகிறது.

ஒழுங்கமைப்பு : பிரபஞ்சம், பூமி, சூழல், இயற்கை வரலாறு, மானுட வரலாறு, மானுடப் புவியியல், சமூகம், சமயம், கற்பனை வாதம், தொடர்பாடல், அறிவியல் தொழினுட்பம், கலையும் கலாசாரமும், அறிவு, விளையாட்டு ஆகிய பரந்த பொருட்துறைகளின் கீழ் பல உப பொருட் தலைப்புகளை உள்ளடக்கி உள்ளடக்கம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் விளக்கப்படங்கள், கோட்டுப்படங்கள், வரை படங்கள், தேசப்படங்கள், அட்டவணைகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் விரிவான அகரவரிசைசொல்லடைவு இணைக்கப்பட்டுள்ளது.

v. Guinness World Record. [Gullane- 2003. ISBN 085112- 1470]

வரலாறு: ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய பதிவுகளும், புதிய ஆர்வத்தைத் தூண்டும் நூற்றுக்கணக்கான படங்களுமாக மிகச் சிறந்த பதிப்புகளில் ஒன்றாக இது உருவெடுத் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளடக்கம்: நவீன சமூகம், கட்டிடங்களின் கட்டமைப்புகள் போன்ற துறைகளில் புதிய அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் விளையாட்டுப் பகுதியானது ஒவ்வொரு செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. வியப்பூட்டும் உண்மைகள், மனித சாதனைகள், மனித உடல், ஆற்றல்மிகு உலகம், வியப்பூட்டும் இயற்கை, சமூகமும் அரசியலும், வியப்பூட்டும் பொருட்கள், கட்டிடங்களும் கட்டுமானங்களும், வானூர்திகள், புகையிரத வண்டிகள், ஓட்டோக்கள், இராணுவ சேவை, தொழினுட்பம், அறிவியலும் பொழுதுபோக்கும், விளையாட்டு போன்ற பிரதான தலைப்புகளில் பல உப பிரிவுகளுடன் ஒவ்வொரு பதிவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் சொல்லடைவு கொடுக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சில ஐந்தொகுதித் தளங்கள்

http://www.earthcalendar.net

இத்தளமானது உலகின் நாட்காட்டியாகும். லாப நோக்கற்ற இணையதளமாக விளங்குகிறது. உலகளாவிய ரீதியில் விடுமுறை நாட்கள் மற்றும் விழாக்கள் எவ்வெத் திகதிகளில் வருகின்றன என்ற தகவலை இது வழங்குகிறது. விடுமுறைகள் விழாக்கள் என்பன கலாச்சார ரீதியாக முதன்மை பெற்றவை என்ற வகையில் இத்தளம் பராமரிக்கப்படுவதாக இதனை பராமரிப்போர் கூறுகின்றனர். நாடு ரீதியாக சமய ரீதியான விடுமுறை நாட்களையும் தேடல் செய்ய முடிகிறது.

http://www.guinnessworldrecords.com

இத்தளம் கின்னஸ் புத்தகத்தின் உலக சாதனைகளை வகைப்படுத்தித் தரும் தளமாகும். புவியியல் ரீதியாக வகைப்படுத்தப்பட்ட பிரதான வழிகாட்டியை முகப்புப் பக்கத்தில் கொண்டிருப்பதுடன் உள் நுழைந்து தேடும் வசதியும் காணப்படுகிறது.

http://www.infoplease.com

இத்தளம் "Information please Almanac" என்ற நூலின் online வடிவமாகும். இவ்வைந்தொகுதியில் விடய ரீதியிலும் அகர வரிசையிலும் தேடல் செய்யும் வசதி காணப்படுவதுடன் Highbeam தேடல் வசதியும் உள்ளது. இதிலுள்ள குறிப்பிடத்தக்க மற்றோர் வசதி சுமார் 2600 வகை சார்ந்த 28 மில்லியன் ஆவணங்களை வகைப்படுத்தி வைத்திருக்கும் Key word என்ற தரவுத் தளமாகும். இறுதியாக இது 2007ல் Update செய்யப்பட்டுள்ளது.

8.5 வழிகாட்டிகள் [Directories]

தனிநபர்களது பெயர், முகவரி போன்ற விபரங்களையும், நிறுவனங்களது பெயர், முகவரி, அலுவலர் விபரம், தொழிற்பாடுகள் போன்ற தரவுகளையும் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் பட்டியல் வழிகாட்டி எனப்படுகிறது. குறிப்பாக பொதுசன நூலகங்களில், வழிகாட்டுதலுடன் சம்பந்தப்பட்ட தகவல்களே அதிகம் தேவைப்படுவதனால் இவை மிக முக்கியமான உசாத்துணை வளமாகக் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபகத் தன்மை

ஏனைய உசாத்துணை சாதனங்களை விடவும் வழிகாட்டிகள் பயன்படுத்துவதற்கு இலகுவானவை. பொதுவாக இவற்றின் தகவல்கள் மட்டுப்படுத்தப் பட்டதாகவும், அனைவரும் இலகுவில் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் அகரவரிசை ஒழுங்கமைப்பைக் கொண்டதாகவும் இருப்பதே இந்த இலகுத்தன்மைக்குக் காரணமாகும்.

வழிகாட்டிகளை பின்வரும் ஆறு பெரும் பிரிவுகளுக்குள் வகைப்படுத்தலாம்:

1. உள்ளூர் வழிகாட்டிகள்: தொலைபேசி நூல்கள், நகர வழிகாட்டிகள், உள்ளூர் பாடசாலைகளின் வழிகாட்டிகள், சங்கங்கள், சினிமாத் தியேட்டர்கள், சமூகக் குழுக்கள் போன்றவற்றின் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.
2. அரச வழிகாட்டிகள்: தபாலகங்கள், இராணுவ கடற்படைப் பிரிவுகள் என்பவற்றின் வழிகாட்டிகளும் உள்ளூர், மாநில, நகர அரசாங்கங்களினால் ஆயிரக்கணக்கான அளவில் வழங்கப்படும் சேவைகளுக்கான வழிகாட்டிகளும் இவ் வகைக்குள் அடங்கும்.
3. நிறுவன வழிகாட்டிகள்: பாடசாலைகள், நூலகங்கள், மருத்துவ நிலையங்கள், அரும்பொருளகங்கள் போன்ற நிறுவனங்களின் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.
4. முதலீட்டுச் சேவைகள் : பொதுசன தனியார் நிறுவனங்கள், கம்பனிகள் போன்றவற்றின் விபரங்களைத் தருகின்ற வர்த்தக வியாபார வழிகாட்டிகளை இது குறிக்கும்.
5. தொழிற்றிறன்சார் வழிகாட்டிகள்: சட்டம், மருத்துவம், நூலகவியல் போன்ற தொழிற்றிறன்சார் நிறுவனங்களின் தகவல்களை விரிவாக வழங்கும் வழிகாட்டிகளை இது குறிக்கும்.
6. வர்த்தக வியாபார வழிகாட்டிகள்: உற்பத்தியாளர், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், சேவைகள் பற்றிய தகவலை வழங்கும் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.

பயன்பாடு

* தனிநபரின் அல்லது நிறுவனத்தின் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்ற தகவல்களை வழங்குதல்.
* தனிநபரின் அல்லது நிறுவனத்தின் முழுப்பெயரை வழங்குதல்.
* குறிப்பிட்ட ஒரு உற்பத்தியாளரின் உற்பத்திகள் சேவைகள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
* நிறுவனத்தின் இயக்குனர், பாடசாலை அதிபர் போன்ற முக்கிய பதவிகளில் உள்ளோரின் விபரங்களை வழங்குதல்.
* முக்கியமான நபர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான தகவல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்குதல்.
* நிறுவனம், அரசியல் குழுக்கள் போன்றவற்றின் வரலாறு, அவற்றின் நடப்புத் தகவல்கள் போன்றவற்றை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறைகள்

* சில வழிகாட்டிகள் அதன் இறுதிப்பகுதியில் சொல்லடைவை உள்ளடக்காத சந்தர்ப்பங்களில் இது பாவனைக்குக் கடினமானதாக இருக்கக்கூடும்.
* வழிகாட்டிக்கென வெளியிடப்படும் அனுபந்தங்கள் ஆண்டு நூல்கள் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.
* வழிகாட்டிகள் மிக அண்மைக்காலத் தகவல்களை தரும் என எதிர்பார்க்க முடியாது.

மாதிரி உசாத்துணை வினாக்கள்

* வியாபார நிறுவனம் ஒன்றின் உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் பெயரும் முகவரியும்.
* நபர்களின் முகவரிகள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள்.
* ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பல்கலைக் கழகங்களது பெயரும் முகவரியும்.
* கொழும்புப் பல்கலைக்கழக நூலகர் பெயர்.
* களனிப் பல்கலைக்கழகத்தில் நூலகவியல் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் பெயர்.
* பிரித்தானிய நூலகத்தில் உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை.
* சர்வதேச நூலகச் சங்கங்களின் சம்மேளனத்தின் நோக்கங்கள்.
* இலண்டன் தேசிய ஆவணக்காப்பகம் ஆரம்பிக்கப்பட்ட திகதி.
* இந்திய தேசிய அறிவியல் ஆவணவாக்க நிலையத்தால் (INSDOC) வழங்கப்படும் சேவைகள்.
* அமெரிக்க வேதியியல் சமூகத்தால் வெளியிடப்படும் பருவ இதழ்த் தலைப்புகள்.
* இந்தியாவில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பெயர்.
* கொழும்பிலுள்ள நூல்விற்பனையாளர்களின் பெயரும் முகவரியும்.

எடுத்துக்காட்டுகள்

i. Europa World of Learning [London:Europa,1950- annual]



வரலாறு: புகழ் பெற்ற வெளியீட்டாளர்களில் ஒன்றான Routledge வெளியீட்டாளரின் இன்னொரு பெறுமதி மிக்க வெளியீடாக இது உள்ளது. 2006ம் ஆண்டுக்குரிய இதனது 56வது பதிப் பானது 2005 ஒக்டோபரில் வெளியிடப்பட்டது. 55வது பதிப்பு வரை உலகப் புகழ் பெற்ற Europa வெளியீட்டாளர்களின் பெறுமதி மிக்க வெளியீடுகளில் ஒன்றாக World of Learning என்ற பெயருடன் இது இருந்துள்ளது. 2005ம் ஆண்டு Europa வெளியீட்டகமானது Taylor & Francis Group இனால் உள்வாங்கப்பட்டபின்னர் தற்போது Routledge வெளியீடாக Europa World of Learning என்ற பெயருடன் வெளிவருகின்றது. உலகளாவிய ரீதியில் 30,000 நிறுவனங்களதும், 200,000 தனிநபர்களதும் பயனுள்ள பின்னணித் தகவல்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள கல்விசார் வழிகாட்டியாகவும் இந்தப் பதிப்பு கருதப்படுகிறது. பொது சன, கல்விசார் நூலகங்கள், வர்த்தக அரச திணைக்களங்கள், ஊடகங்கள், தூதரகங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், சர்வதேச நிறுவனங்கள், வெளியீட்டாளர்கள், கல்விசார் நிறுவனங்கள், தொழிற்திறன்சார் அமைப்புகள், அறக்கொடை நிறுவனங்கள் போன்றவற்றிற்கு மிகப் பெறுமதி வாய்ந்த ஓர் உசாத்துணை சாதனமாக இது கருதப்படுகிறது.

உள்ளடக்கம்: 2006ம் ஆண்டுக்குரிய 56வது பதிப்பானது கிட்டத்தட்ட 30,000 நிறுவனங்களையும், 200 நாடுகளிலிருந்து 200,000 அலுவலர்கள், அதிகாரிகள் பற்றிய விபரங்களையும் தருகிறது. 6,200 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், 3,300 கலை, இசை, கட்டடக்கலை சார் கல்விக் கூடங்கள், 6,600 ஆய்வு நிறுவனங்கள், 3,500 நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள், 3000 அரும்பொருளகங்கள் கலைக் கூடங்கள் போன்ற அனைத்து கல்விசார் நிறுவனங்களையும் இது உள்ளடக்குகிறது. 26,000 வெளியீடுகள் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன. யுனெஸ்கோ போன்ற உயர்கல்வியுடன் தொடர்புடைய 500க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகளின் விபரங்கள் அடங்கிய தனிப்பகுதி ஒன்றும் இதில் உள்ளடக் கப்பட்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: இது இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. நாடு வாரியான பதிவுகள் நாடுகள் வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஒவ்வொரு நிறுவனத்தின் பதிவும் நிறுவனத்தின் பெயர், தொலைபேசி எண், தொலைநகல் எண், இ-அஞ்சல் முகவரி, முதுநிலை நிர்வாக அலுவலர், பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர், நிறுவனத்தின் ஆரம்பத் திகதி, கல்வியாண்டு, நூலக வளங்களின் அளவு, விரிவுரையாளர் மாணவர்களது எண்ணிக்கை, வெளியீடுகள், இணைந்த நிறுவனங்களது பெயர், முகவரி போன்ற தகவல்களை உள்ளடக்கியுள்ளது. கிட்டத்தட்ட 2000 பக்கத் தகவல்களுக்கு 100 பக்கச் சொல்லடைவு கொடுக்கப்பட்டுள்ளது. இது பின்வரும் வடிவங்களில் கிடைக்கும்:

1. அச்சு வடிவம்
2. கணினி வடிவம் [www.worldoflearning.com]

www.worldoflearning.com

இத்தளம் Europa World of Learning என்ற நூலின் இலத்திரனியல் தளமாகும். இந்நூலின் online வழிகாட்டி மிகச் சிறந்த சர்வதேச வழிகாட்டியாக கல்வி சார் சமூகத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது குறித்த இலவச online விளக்கவுரை இணைக்கப்பட்டுள்ளது.

அச்சு வடிவில் உள்ளடங்கியுள்ள அனைத்துத் தகவல்களையும் வழங்கும் அதே சமயம் பல அண்மைத் தகவல்களையும் பல்பரிமாணத் தேடுதல் வசதிகளையும் இது உள்ளடக்கியுள்ளது. 2000 மேலதிக இணையத்தள இணைப்புகளையும், நிறுவனங்கள் தொடர்பான விரிவான தகவல்களையும் இது தருகிறது.

உலகளாவிய தேடுதல், நாடு நகர, பட்டண ரீதியான தேடுதல், நிறுவனத்தின் பெயர், வகை, உருவாக்கப்பட்ட திகதி, வெளியீடு போன்றவற்றின் அடிப்படையிலான தேடுதல், தனிநபர் பெயர், பொருள், ஆர்வத்துறை சார்ந்த தேடுதல் போன்ற பல் பரிமாணத் தேடுதல் வாய்ப்புகளை வழங்குகிறது. இறுதியாக 2007ல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. The Europa International Foundation Directory [London Europa, 1992 -]



வரலாறு: புகழ் பெற்ற வெளியீட்டாளர்களில் ஒன்றான Routledge வெளியீட்டாளரின் இன்னோர் பெறுமதி மிக்க வெளியீடாக இது உள்ளது. 2006ம் ஆண்டுக்குரிய இதனது 15வது பதிப்பானது 2006 மே மாதம் வெளியிடப்பட்டது. 13வது பதிப்பு வரை உலகப் புகழ் பெற்ற Europa வெளியீட்டாளர்களின் பெறுமதி மிக்க வெளியீடுகளில் ஒன்றாக The International Foundation Directory என்ற பெயருடன் இது இருந்துள்ளது. 2005ம் ஆண்டு Europa வெளியீட்டகமானது Taylor & Francis Group இனால் உள்வாங்கப்பட்ட பின்னர் தற்போது Routledge வெளியீடாக மேற்குறித்த பெயருடன் வெளிவருகின்றது.

உள்ளடக்கம்: சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்ற சர்வதேச ஆதார அமைப்புகள், நம்பிக்கை நிதியங்கள், அறக்கொடை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளை அறிந்து கொள்ள உதவும் வழிகாட்டியாக இது தொழிற்படுகிறது. இந்தப் புதிய பதிப்பானது மேற்குறித்த துறைகளில் தொடர்பு கொள்ளக்கூடியவர்களின் பெயர், முகவரி கள், விபரங்களை அறியக்கூடிய ஏனைய தகவல் சாதனங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தனித்துவ வழிகாட்டியாகத் தொழிற்படும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டு விரிவாக்கப்பட்டு, காலத்துடன் ஒட்டிய வகையில் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் 2,300 நிறுவகங்கள், நம்பிக்கை நிதியங்கள், அறக்கொடை நிறுவனங்கள், நிதி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய இலாப நோக்கற்ற நிறுவனங்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: பதிவுகள் ஒவ்வொன்றும் நாடுகள் வாரியாக அகரவரிசையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவும் நிறுவனத்தின் பெயர், முகவரி, இ-மெயில் முகவரி, இணைய முகவரி, தொலைபேசி, தொலை நகல் எண்கள், நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு, அதன் செயற்பாடுகள், நன்கொடை வழங்குவதற்கான நிபந்தனைகள், பிரதேச ரீதியான செயற்பாடுகள், நிதி, வெளியீடுகள், நிறைவேற்றதிகார அலுவலகங்களின் விபரம் போன்ற தகவல்களை உள்ளடக்கியுள்ளது. நிறுவகங்களுக்கான சொல்லடைவு, புவியியல் பிரதேசங்களினதும், இவற்றின் பிரதான செயற்பாடுகளின் அடிப்படையிலும் அகரவரிசையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கான நிதியுதவி, சூழமைவு, கலையும் மனிதப்பண்பியலும், பொருளாதார விவகாரங்கள், ஆதார நிறுவகங்கள், ஒருங்கிணைக்கும் அமைப்புகள், சர்வதேச விவகாரங்கள், சட்டமும் மனித உரிமைகளும், கல்வி, மருத்துவம், சுகாதாரம், அறிவியலும் தொழினுட்பமும், சமூக நலன் ஆகிய பொருட் தலைப்புகளினடிப்படையில் இவற்றின் பரந்தளவான செயற்பாடுகள் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

iii. Kelly's Post Office London Directory. [London: Kelly's, 1800 -]

வரலாறு: தனித்த ஒரு தொகுதியிலேயே பரந்துபட்ட தகவலை உள்ளடக்கியிருக்கும் விதத்தில் தகவல் தொடர்பான வியாபகத் தன்மையிலும், தரத்திலும் தனித்துவம் மிக்க ஒரு வழிகாட்டியாக இது கருதப்படுகிறது. கைத்தொழில், வர்த்தகம், மொத்த சில்லறை விற்பனைகள், பலதரப்பட்ட தொழில்கள், அரச அமைச்சுகள், நீதிமன்றங்கள், தேவாலயங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகின் மிகப்பெரும் நகரங்கள் என்பவற்றின் விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உயர் துல்லியத் தன்மை, நம்பகத்தன்மை என்பவற்றைப் பேணுவதற்காக அனைத்து முயற்சிகளும் இதில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இறுதித் தருணம் வரையுள்ள மாற்றங்களும் அபிவிருத்திகளும் கூட இதில் பதியப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

ஒழுங்கமைப்பு: பதிவுகள் 18 பொருட்துறைகளின் கீழ் ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருட்துறையின் கீழும் பிரதான மூலச் சொல்லின் கீழ் நிறுவனத்தின் பெயர்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் பதிவுத் தொடரெண், நிறுவனத்தின் பெயர், மூலச் சொல் ஒழுங்கமைப்பு, தலைப்பெழுத்துச் சொல், முகவரி, தொலைபேசி எண், இயக்குனர் விபரம், நிறுவனத்தின் தொடக்கத் திகதி, உறுப்பினர் எண்ணிக்கை, அலுவலர் எண்ணிக்கை, நிதி ஒதுக்கீடு, நிறுவனம் பற்றிய சுருக்க விபரம், பிராந்திய மாநில உள்ளூர் குழுக்கள் விபரம், தொலைத் தொடர்பு சேவைகள், கணினி மயப்படுத்தப்பட்ட சேவைகள், குழுக்களும் அதன் பிரிவுகளும், இணைந்து செயலாற்றும் நிறுவனங்கள், குழுக்களின் மாற்றுப் பெயர்கள் நடைமுறைப்படுத்தப்படும் மாநாடுகள், கூட்டங்கள், வெளியீடுகள் ஆகிய விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சில வழிகாட்டித் தளங்கள்

http://www.infolistings.com

இத்தளம் இணைத்தளங்களை வகைப்படுத்தி வழிகாட்டுகின்றது. ஆயினும் இது வழிகாட்டிகளின் தொகுப்பாக மட்டுமன்றி அவற்றினை மனிதனுக்குரிய தேவைகளின் அடிப்படையில் கல்வி சுகாதாரம், மருத்துவம், பொழுதுபோக்கு, வர்த்தகம், விளையாட்டுக்கள் என பயன்பாட்டு ரீதியில் வகைப்படுத்தியுள்ளது. இத்தகைய தளங்களை மேலும் தேடல் செய்ய வசதியாக பிரதேச ரீதியிலும் வகைப்படுத்தியுள்ளது.

http://www.infowebworld.com

இத்தளம் 'Brain Stream" என்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகிறது. சிறந்த வழிகாட்டித் தளமாக விளங்கும் இதில் 16 உபதலைப்புக்களின் கீழ் இணைய தளங்கள் வகைப்படுத் தப்பட்டுள்ளன. வழிகாட்டியில் புதிய தளங்களை இணைக்கும் வசதியும் காணப்படுகிறது.

http://www.searchsystems.net

1997ம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டுவரும் இத்தளம் பொதுத் தகவல்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டிகளின் வழிகாட்டியாக உள்ளது. பிறப்பு, இறப்பு, திருமணம், சட்ட ஆவணங்கள் முதலிய பல்வேறு பொதுப்பதிவுகள் சார்ந்த தேடலுக்கேற்ற சுமார் 38,672 தரவுத் தளங்களை உள்ளடக்கிய பெரும் வழிகாட்டித் தளமாகவும் உள்ளது.

தெரிவு செய்யப்பட்ட சில புள்ளிவிபர வழிகாட்டித் தளங்கள்

http://www.internetworldstats.com

இணைய புள்ளிவிபர தளமாக விளங்கும் இது உலக சனத்தொகை வர்த்தகம் இணைய பயன்பாடு முதலிய பல அம்சங்கள் சார்ந்த புள்ளி விபரங்களை தொகுத்துத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Miniwatts Marketing Group என்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் இத்தளம் பிரதேச ரீதியிலும் புள்ளிவிபர தரவுகளை ஒழுங்குபடுத்தி தரவல்லது.

http://www.browserwatch.world.com

இணையத்தளங்களின் வழிகாட்டியாக உள்ள இத்தளம் இணையத்தளங்களை உலகம் சர்வ தேசங்கள், உலக செய்திகள், உலகபயணம், உலக வர்த்தகம், உலக கொடிகள், உலக சமயங்கள், உலக வரலாறுகள், உலக நூல்கள் என வகைப்படுத்தி பல தளங்களுடனான இணைப்பிற்கு வழிகாட்டி நிற்கிறது.

http://www.geohive.com

இத்தளம் உலகளாவிய புள்ளிவிபர தளம் ஆகும். நாளாந்த சனத்தொகை அறிக்கையுடன் எதிர்கால சனத்தொகை குறித்த மதிப்பீடுகளும் உள்ளடக்கப்படுகின்றன. உலகளாவிய புவியியல் சார் புள்ளிவிபர தரவுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

8.6 வாழ்க்கை வரலாற்று நூல்கள் [Biographical Sources]

வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களுக்கென பலதரப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஐந்தொகுதிகள், வாழ்க்கை வரலாற்று அகராதிகள், அகராதிகள், வழிகாட்டிகள், கலைக் களஞ்சியங்கள், கைந்நூல்கள், செய்தித்தாள்கள், வரலாற்று நூல்கள், விமர்சனங்கள் போன்றவை வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன. மேற்குறிப்பிட்ட தகவல் வளங்களில், வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைத் தரும் முக்கிய தகவல் வளமாக வாழ்க்கை வரலாற்று அகராதிகள் கருதப்படுகின்றன. இது முழுக்க முழுக்க வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை அகரவரிசையில் தொகுத்துத் தருகின்றது.

பண்புகள்

* சர்வதேச ரீதியில் வெளியிடப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் அவை வெளியிடப்படும் நாடுகளுக்குச் சார் பானவையாக இருப்பதே பொதுவான நடைமுறையாகும். தமது நாட்டைச் சார்ந்த தகவல்களே அதில் அதிகமாக இருக்கும்.
* சர்வதேச ரீதியிலான வாழ்க்கை வரலாற்று நூல்களைவிட தேசிய ரீதியில் வெளியிடப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் அதிகமான தகவல்களைக் கொண்டிருக்கும்.
* பொதுவான வாழ்க்கை வரலாற்று நூல்களை விட சிறப்பு வாழ்க்கை வரலாற்று நூல்கள் கூடுதலான தகவல்களைத் தரக் கூடியவை.

Routledge வெளியீட்டாளரின் முக்கியமான வாழ்க்கை வரலாற்று நூல்கள்

* International Who's Who Women 2006.- Hb 1-85743-325-4, 725pp; £300.00
* International Who's Who of Authors and Writers 2006.- Hb 1-85743-311-4, 864pp; £200.00
* International Who's Who -2007.- Hb 1-85743-366-1, 2250pp; £345.00
* International Who's Who in Popular Music 2005.- Hb 1-85743-296-7, 728pp; £175.00
* International Who's Who in Classical Music 2005 .- Hb 1-85743-295-9, 1200pp; £205.00
* International Who's Who in Poetry 2005.- Hb 1- 85743-269-X, 400pp; £165.00
* Who's Who in International affairs 2005.- Hb 1- 85743-272-X, 816pp; £300.00

தொடர்புகளுக்கு: 2 Park Square, Milton Park, Abingdon,Oxon,OX14 4RN

Email: referenceroutledge.co.uk

Internet: www.routledge.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தேசிய ரீதியிலான வாழ்க்கை வரலாற்று நூல்களை விட கிராமிய ரீதியில் அல்லது மாவட்ட ரீதியில் அல்லது மாநில ரீதியில் வெளியிடப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் கூடுதலான தகவல்களைத் தரக்கூடியவை.
* மிகப்பிரபலமான நபர்களின் இறப்பின் பின்னர் வெளியிடப்படும் சுருக்க வரலாறுகள், அவர்களின் முக்கிய சாதனைகள், பங்களிப்புகள் அவர்களைப் பற்றிய விமர்சனங்கள் போன்றவற்றிற்கு செய்தித்தாள்கள், பருவ இதழ்ச் சொல்லடைவுகள் போன்றவை முக்கிய தகவல் வளங்களாகும்.
* இறந்து போனவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்வதற்கான மிக முக்கிய தகவல் வளமாக கலைக்களஞ்சியங்கள் கருதப்படுகின்றன. வாழ்ந்து கொண்டிருப் பவர்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு வாழ்க்கை வரலாற்று அகராதிகளே சிறந்த தகவல் வளமாகக் கருதப்படுகின்றன. சுய சரிதைகளும் சிறந்த வளமாக கொள்ளத்தக்கவை.
* எழுத்துத் துறையில் இருப்பவரை விட அத்துறையில் இல்லாத பிரபலமான நபர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கண்டு கொள்வது மிகவும் கடினமானதாகவே கருதப் படுகிறது.
* நன்கு பதிப்பிக்கப்பட்ட வாழ்க்கை வரலாற்று வளங்கள் விளக்கமும் மதிப்பீடு மிக்க தகவல்களைத் தந்துதவுகின்றன.

எடுத்துக்காட்டுகள்

i. International Who's Who [Oxford: Routledge, 1935-]



வரலாறு: ஐரோப்பாவின் மிக அனுபவம் வாய்ந்த பதிப்புக் குழுவின் நீண்ட கால ஆய்வின் பலாபலனே இந்த உசாத்துணை சாதனமாகும். ஒவ்வொரு பதிப்பினதும் நோக்கம் அதன் முந்திய பதிப்பை திருத் தியமைப்பதே என்பதால் ஒவ்வொரு பதிப்பும் மீளாய்வுக்கும் விரிவாக் கத்துக்கும் உட்பட்டதாக அமைகிறது. புகழ் பெற்ற வெளியீட்டாளர் களில் ஒன்றான Europa வெளியீட்டாளரின் இன்னோர் பெறுமதி மிக்க வெளியீடாக இது உள்ளது. 2007ம் ஆண்டுக்குரிய இதனது 70வது பதிப்பானது 2006 யூனில் வெளியிடப்பட்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற முன்னணி வெளியீட்டாளர்களில் ஒன்றான Europa வெளியீட்டாளரினால் 1935ம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட இது அதனது 68வது பதிப்பு வரை Europa வெளியீடாக இருந்து, 2005ம் ஆண்டு Europa வெளியீட்டகமானது Taylor & Francis Group இனால் உள்வாங்கப்பட்ட பின்னர் தற்போது Routledge வெளியீடாக வெளிவருகின்றது. கலாசார, அறிவியல், தொழிற் திறன்சார் அமைப்புகள், ஊடகங்கள், பொதுசன கல்விசார் நூலகங்கள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், கடற்றொழில் அமைப்புகள், வான் சேவைகள், சர்வதேச அமைப்புகள், தூதரகங்கள் போன்றவற்றுக்கு மட்டுமன்றி தனிப்பட்ட ஒவ்வொரு நபரும் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஏற்ற மிகச் சிறந்த உசாத்துணை சாதனமாக இது கருதப்படுகிறது. அச்சிட்ட பிரதியைக் கொள்வனவு செய்வோருக்குக்கு இணையத் தளத்தில் அணுகுகை இலவசமாக்கப்பட்டுள்ளது. இணையத்தள முகவரி www.worldwhoswho.com ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்: 2006ம் ஆண்டுக்குரிய பதிப்பானது உலகின் மிகப் பெரும் புகழ் பெற்ற 20,000க்கும் மேற்பட்டவர்களின் வாழ்க்கை வரலாற்று விபரங்களை உள்ளடக்குகிறது. மிக அண்மைக் காலத்தில் சர்வதேச முக்கியத்துவம் பெற்ற நபர்களது வாழ்க்கை வரலாற்று விபரங்களை இது உள்ளடக்குவது இதன் சிறப்பம்சமாகும். இந்தப் பதிப்புக்கு மட்டும் 1000 புதிய பதிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே சேர்க்கப்பட்ட பதிவுகளும் கூட புதுப்பிக்கப்பட்டுள்ளன. பதிவுக்குரியவர்கள் அனைவருக்கும் வினாக்கொத்துகள் வழங்கப் பட்டு அதன்படி தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் தலைவர் முதற்கொண்டு விளையாட்டுத் துறை சார்ந்த நபர்வரை ஒவ்வொரு துறையிலும் ஆண் பெண் இருபாலாரதும் சாதனைகளையும் வாழ்க்கை விபரங்களையும் இது பதிவு செய்திருக்கிறது. தத்தமது துறை களில் உயர்நிலையில் இருப்பவர்களையும் பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் இடம் பிடிப்பவர்களையும் உள்ளடக்குவதே பதிப்புக் குழுவின் இலக்காக உள்ளது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அனைத்து துறையிலிருந்தும் பதிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு தொகுதிக் குள்ளேயே அறிவியல், வர்த்தகம், நிதி, அரசியல், இராஜதந்திரம், சட்டம், நிர்வாகம், மருத்துவம், மதம், கலை, இலக்கியம், பொழுதுபோக்கு, இசை போன்ற துறைகளில் புகழ் பெற்றவர்களின் விபரங்களை இது வழங்குகிறது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு பதிவும் பெயர், தேசிய அடையாளம், பிறந்த இடமும் திகதியும், குடும்ப விபரம், தொழில், கல்வி, பரிசுகள், கௌரவ பட்டங்கள், வெளியீடுகள், ஓய்வு நேர ஆர்வங்கள், முகவரி, தொலைபேசி எண், தொலை நகல், இ-மெயில் இணைய விபரங்களை உள்ளடக்குகிறது.

இந்தப் பதிப்பு முதன் முதலில் கணினி நேர்முக வடிவிலும் வெளிவந்திருக்கிறது.

www.worldwhoswho.com

இத்தளம் International Who's Who வழிகாட்டியின் Online தளமாகும். இது முழு அளவுத் தேடுகைக்கு உதவுவதுடன் மிக விரைவாகத் தகவல்களைக் கண்டுபிடிக்கவும் உதவுகின்றது. ஆழமான தேடுகை வசதியானது பெயர், தேசிய அடையாளம், இடம், பிறந்த திகதி, தொழில் போன்ற அம்சங்களினூடாக, குறிப்பிட்ட நபர் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது. பிரபுக்கள் குடும்பத்தவர் பற்றிய தகவல்கள் நாடு வாரியான ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கின்றன.

ii. Chamber's Biographical Dictionary. [Rev. ed. by Jo. Throne and T.C Colocoh. Edinburg: Chambers,1988.]



வரலாறு: தத்தமது துறைகளில் உலகப் பிரசித்தி பெற்ற நபர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கும் சர்வதேச அகரா தியாக இது கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: சாதாரண வாசகர் தாம் தேட விழையும் நபர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களில் 15,100 பதிவுகளை இது உள்ளடக் கியுள்ளது. கொலைகாரர், வழிப்பறிக் கொள்ளைக்காரர், மோசடிக்காரர் உட்பட திரைப்பட இயக்குனர்கள், தத்துவவியலாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள் போன்ற பல பொருட்துறை சார்ந்த புகழ் பெற்றவர்களின் வாழ்க்கை வரலாறும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைப்பு: நபர்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்ட அகரவரிசை ஒழுங் கமைப்பைப் பின்பற்றுகின்றது. ஒவ்வொரு பதிவும் பெயர், உச்சரிப்பு, பிறந்த திகதி, பதவி, பிறந்த இடம், வாழ்க்கைக் குறிப்பு போன்ற விபரங்களை உள்ளடக்கியுள்ளது. நூலின் இறுதியில் பொருட் சொல்லடைவு கொடுக்கப்பட்டுள்ளது.

8.7 புவியியல் சாதனங்கள் [Geographical Sources]

தான் வாழும் உலகத்தைப் பற்றி அறியும் அவாவே புவியியல் சார்ந்த தகவல்களின் தேவை அதிகரித்துச் செல்ல காரணமாயிற்று. பாவனையாளரின் அதிகரித்த வேண்டுகோளுக்கமைய புவியியல் வளங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்துக்கு தகவல் அமைப்புகள், குறிப்பாக பல்கலைக்கழகங்கள், பொதுசன நூலகங்கள் போன்றவை தள்ளப்பட்டிருக் கின்றன.

புவியியல் வளங்கள் பொதுவாக வரைபுகளை உள்ளடக்குபவை. பெரும்பாலான புவியியல் வளங்கள் கூட்டுமுயற்சியின் மூலமே உருவாக்கப்படுபவை. இவற்றை பின்வரும் மூன்று பிரிவுக்குள் உள்ளடக்கலாம்:

* தேசப்படங்கள், தேசப்படத் தொகுதிகள் [Maps & Atlases]
* புவியியல் அகராதிகள் [Gazetteers]
* வழிகாட்டி நூல்கள் [Guide Books]

8.71 புவியியல் அகராதிகள் [Gazetteers]

இடங்களை அகர வரிசையில் ஒழுங்குபடுத்தித் தருகின்ற புவியியல் அகராதியே இப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றது. நகரங்கள், பட்டினங்கள், சமுத்திரங்கள், ஆறுகள், மலைகள், மலைத் தொடர்கள் போன்ற புவியியல் சார்ந்த இடங்களின் அமைவிடம், அவற்றின் குடித்தொகை, பிரதேசம், சமூக, பொருளாதார, வரலாற்றுத் தகவல்கள் போன்றவை தொடர் பான சுருக்க விவரணம் போன்றவற்றைக் கண்டறிவதற்கான சாதனமாக இவை தொழிற் படுகின்றன. ஒரு தேசப்படத் தொகுதியொன்றிற்கான சொல்லடைவை நாம் Gazetteer என அழைக்கலாம். எனினும் தரமான ஒரு தேசப்படத் தொகுதியின் இறுதியில் தரப்பட்டிருக்கும் சொல்லடைவு தரமுடியாத இடங்கள் பற்றிய அமைவிடத் தகவல்கள் நிச்சயம் புவியியல் அகராதிகளில் இருக்கும் என்பதே இவற்றின் சிறப்பம்சமாகும். பெரும்பாலான புவியியல் அகராதிகள் அகலக்கோடுகள் நெடுங்கோடுகள் பற்றிய விபரங்களையும் தருவதனால் பெரிய அளவுத் திட்டத்தில் வரையப்படும் ஒரு தேசப்படத்தில் தேவைப்படும் இடத்தைக் கண்டு பிடிப்பது இலகுவாக இருக்கும்.

8.72 வழிகாட்டி நூல்கள் [Guide Books]

தொடர்பு வழிமுறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி உலகம் பூராவும் சுற்றுலாத் துறையை வளர்த் தமையே இத்தகைய சாதனங்களின் தோற்றத்துக்குக் காரணமாய் அமைந்தது. நகரங்கள், பிரதேசங்கள், நாடுகள் பற்றிய தகவல்களைச் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு தரும் நூல் வழிகாட்டி நூல் என்கிறது ஏ.எல்,ஏ கலைச் சொல் அகராதி. ஒரு பிரயாணி தான் சுற்றிப் பார்க்கச் செல்லும் நாட்டில் எதைப் பார்க்க வேண்டும், எங்கே உணவு கிடைக்கும், எப்படி அவ்விடத்துக்குச் செல்வது போன்ற தகவல்களை சுற்றுலாப் பயணிக்குத் தருவதே வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி நூல்களின் நோக்கமாகும். இவை பொதுவாக கையடக்கமாகவும் கொண்டு செல்ல சுலபமானவையாகவும் தயாரிக்கப்படுகின்றன. நாடுகள், இடங்கள், சுற்றிப் பார்ப்பதற்குப் பெறுமதியான இடங்கள், பொழுதுபோக்கிடங்கள், வழிப் பாதைகள், தங்கக்கூடிய இடங்கள், நாணயமாற்று வீதங்கள், பயணம் செய்வதற்கான செலவுகள், காலநிலை போன்ற உள்ளூர்த் தகவல்களை போதியளவில் உள்ளடக்கி இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவை மிக விபரமான தகவல்களைத் தரும் சாதனமாக இருப்பதனால் புவியியல் அகராதிகளை விடவும் பயன்கூடியவையாகும். இவற்றின் உற்பத்தியானது எண்ணற்ற அளவில் அதிகரிப்பதன் காரணமாக தகவல் அமைப்புகள் இவற்றின் தெரிவில் மிகக் கவனமாக இருக்கவேண்டியுள்ளது.

8.73 நிலவுருவப் படங்கள் [Maps]

படங்களின் பௌதிக வடிவமைப்பு பலதரப்பட்ட அளவுகளிலும், வடிவங்களிலும் கிடைக்கிறது. இது முப்பரிமாண பூகோள படத்திலிருந்து இரு பரிமாண தாள் அல்லது பிளாஸ்ரிக் காலான மாதிரி வரை வேறுபடுகிறது.

பூமியின் அல்லது அதன் ஒரு பகுதியின் மேற்பரப்பளவின் தட்டை வடிவ பிரதிபலிப்பே தேசப் படங்களாகும். பௌதிக அம்சங்கள், அரசியல் எல்லைகள், சனத்தொகை, இயற்கை வளங்கள் போன்றவற்றை சுட்டுகின்ற பூகோளமும் தேசப் படமும் பூமியின் அம்சங்களையும் பண்புகளையும் வெளிக்காட்டும் சாதனங்களாக இருப்பினும் இவை இரண்டிற்குமிடையே பெரியளவிலான வேறுபாடுகள் உண்டு.

* பூகோளம்: பூமியின் சரியான வடிவமைப்பை மிகச்சிறிய உருவாக காட்டுகிறது. பூமியின் விட்டம் 500 மில்லியன் அங்குலங்கள் (1.27 பில்லியன் cm) என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே 50'' (127cm) விட்டமுடைய ஒரு பூகோளமானது 50 : 500 மில்லியன் விகிதத்தை கொண்டிருக்கும். இந்த வீதம் 1 : 10 மில்லியன் எனக் குறைக்கப்பட்டு 1 : 10,000,000 என்ற அளவுத்திட்டத்தில் பூகோளப்படத்தின் எங்காவது ஓர் இடத்தில் குறிக்கப்பட்டிருக்கும். அதாவது 1 அங்குலம் 10 மில்லியன் அங்குலங்களுக்கு சமனானது. 50'' விட்டமுடைய பூகோளம் நூலகத்தைப் பொறுத்து அளவில் பெரியளவாகும். தற்போது வியாபார ரீதியில் கிடைக்கக்கூடிய பூகோளங்கள் 8" x 24" அளவுகளில் கிடைக்கிறது. இதில் 12"x16" அளவுள்ள பூகோளங்களே பிரபல்யமாக விளங்குகின்றன.
* தேசப்படங்கள்: 40" - 65" அங்குல அகலத்திலும் உருவாக்கப்படும் கட்டப்படாத தனித்தனி தேசப்படங்கள் சுவர்ப்படங்கள் எனப்படுகின்றன. ஒருவர் நின்ற நிலையில் வாசிக்கக்கூடிய அளவுத் திட்டத்தில் சுவர்ப்படம் இருத்தல் அவசியம். பொதுவாக இவை காட்சிப்படுத்தலுக்கும் குழுரீதியான பாவனைக்கும் ஏற்றவை. இவை மடிக்கப்படவும், சுருள் உருளைகளில் பொருத்தப்படவும், கையால் சுருட்டி வைக்கக்கூடிய வகையில் உலோக, மரக்கட்டைகளில் பொருத்தக் கூடியதாகவும் இருக்கும்.
* கட்டப்பட்ட சுவர்ப்படங்கள்: நிலைச்சட்டங்களில் பொருத்தப்பட்டு தட்டிப் பார்க்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்படக் கூடியனவாகும்.
* ஊடுகாட்டும் படங்கள்: இவை ஒளி எறிவு கருவி மூலமே பயன்படுத்தப்பட முடியும். படத்துணுக்குகளிலும் இழைகளிலும் ஒளிப்பட செய்முறை மூலம் எடுக்கப்படும் நிலப்படங்கள் இருட்டறையில் திரையில் காண்பிக்கப்படக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புடைப்பியல் நிலப்படங்கள் (Relief map) : பூமியின் மேற்பரப்பளவின் முப்பரிமாணத் தோற்றத்தை விளக்குகிறது.

பயன்பாடு

* நாட்டின் தலைநகரம், சனத்தொகை, பரப்பளவு போன்ற விபரங்கள்.
* நகரங்கள், பட்டினங்கள், மலைகள், ஆறுகள், ஏரிகள், காடுகள், போன்றவற்றின் அமைவிடம், தூரம், சனத்தொகை போன்ற விபரங்களைத் தருதல்.
* வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்.
* சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடங்கள்.
* போக்குவரத்துப் பாதைகளுக்கிடையிலான தூரங்களும் அவற்றிற்கான கட்டணங் களும்.

வரையறைகள்

* புவியியல் சாதனங்களில் பெரும்பாலானவை சரியான அடிப்படைகளைக் கொண் டிருப்பதில்லை. எடுத்துக் காட்டாக சரியான எழுத்துப்பெயர்ப்பு முறையைப் பின்பற்றாதுவிடின் குறிப்பிட்ட இடத்தின் பெயரானது பலதரப்பட்ட எழுத்தாக்கங் களைக் கொண்டிருப்பது தவிர்க்கமுடியாததாகும்.
* குறிப்பிட்ட ஆறு ஒன்று பலதரப்பட்ட கிளை ஆறுகளைக் கொண்டிருப்பின் அதன் சரியான மூலத்தை வரையறுத்துக் கூறுவது கடினமானதாகும்.

i. Chambers World Gazetteer - 1988 [Cambridge: Chambers, 1895-]

வரலாறு : நகரங்கள், பிரதேசங்கள், நாடுகள், பௌதிக அம்சங்கள் போன்றவற்றை மட்டுமன்றி தேசிய பூங்காக்கள், சர்வதேச பொருளாதார, கலாசார பிரதேசங்களையும் இது உள்ளடக்கு கின்றது. வியாபகத்தன்மையில் உலகளாவியதாக இருப்பினுங்கூட உள்ளடக்கப்பட்ட இடங்களும் தகவலின் விரிவுத்தன்மையும் இப்பதிப்பில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

உள்ளடக்கம்: ஒவ்வொரு பதிவும் இடத்தின் உத்தியோகப் பெயர், உச்சரிப்பு, சனத்தொகை, மொழி, மதம், நாணயம், சர்வதேச நிறுவன அங்கத்துவம், காலநிலை, மழைவீழ்ச்சி, பௌதிக விவரணம், அரசும் அரசியலமைப்பும், கைத்தொழில், விவசாயம், பொருளாதாரம், நிர்வாகப் பிரிவுகள் போன்ற தகவல்களை உள்ளடக்குகின்றன. வரலாறு, மதம், கைத்தொழில், சுற்றுலா போன்ற அம்சங்களில் முக்கியத்துவம் பெற்ற அமைவிடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: உலகிலுள்ள புவியியல் பிரதேசங்களை அகர வரிசையில் ஒழுங்குபடுத்தித் தரும் அகராதி இதுவாகும். நாட்டின் நிர்வாகப் பிரிவுகளுக்கு தனித்தனிப் பதிவுகள் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு நிர்வாகப் பிரிவின் கீழும் நாடுகள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. நகரங்களும் பட்டினங்களும் முதலில் அவற்றின் நிர்வாகத் தொழிற்பாடுகளின் அடிப்படையிலும் இரண்டாவதாக சனத்தொகை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Sri Lanka National Atlas [Colombo: Survey Department,1988]

வரலாறு: 142 பக்கங்களில் 59 நிலவுருவப் படங்களை உள்ளடக்கி ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ள இந்த வெளியீடானது இலங்கை பற்றிய விபரங்களுக்கான மிகச் சிறந்த உசாத்துணை சாதனமாகக் கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: பௌதிக வடிவமைப்புகள், மக்கள், விவசாயம், கைத்தொழில், சக்தி, போக்குவரத்து, வர்த்தகம், அரச நிர்வாகம், ஆகியவை தொடர்பான விபரங்கள் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட சில புவியியல் சாதனத் தளங்கள்

http://www.atlapedia.com

இத்தளமானது online ல் பெறக்கூடிய புவியியல் சாதனங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது நிலவுருவ வரைபடங்கள் மற்றும் அரசியல், பொருளியல், புள்ளிவிபரவியல், ரீதியான நாடுகளின் வரைபடங்களும் சமயம், காலநிலை, மக்கள் மொழி ரீதியான நாடுகளின் படங்களும் இதில் காணப்படுகின்றன. பாடசாலைகளுக்குரிய வரைபடங்களும் இதில் உள்ளன. 1993 முதல் 2006 வரை Latunar Cleak Corporatim Ltd. என்ற நிறுவனத்தினால் இத்தளம் வடிவமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

http://www.geographynetwork.com

இத் தளம் புவியியல் தரவுத் தளங்ளின் தொகுப்பாகும் கோள்களின் வரைபடங்கள் சுவரொட்டி வரைபடங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை வகுப்பறைச் சாதனங்கள் பொதுச் சாதனங்கள் பிரசித்தி பெற்ற சாதனங்கள் என்ற வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளடக்க ரீதியிலும் சாதனத்தின் பண்பின் அடிப்படையிலும் Key word இன் அடிப்படையிலும் தேடுதல் செய்யும் வசதி காணப்படுகிறது.

http://www.wikimapia.com

புவியியல் சாதனங்களுக்கான சிறந்த தொகுப்பாக இது அமைகிறது. பிரதேச ரீதியான உலக வரைபடங்களையும் online நிலவுரு வரைபடங்களையும் செய்மதி வரைபடங்களையும் உள்ளடக்கியுள்ளது. நெடுஞ்சாலை வரைபடங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்மதிப் புகைப்படங்களும் இதில் உள்ளன.

8.8 நடப்பு உசாத்துணை வளங்கள் [Current Reference Resources]

நடப்பு உசாத்துணை வளங்கள் என்பவை நிகழ்வுகள், உண்மைகள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தருபவை. பொதுவாக உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளிலும் இடம் பெறும் தகவல்களை உடனுக்குடன் தரக்கூடியவை அந்தந்த நாடுகளில் வெளியிடப்படும் நாளிதழ்களே என்பது அனைவரும் அறிந்த விடயம். உள்ளூரில் நடைபெறும் நிகழ்வுகளை உள்ளூரில் வெளியாகும் நாளிதழ்களும், அதே போன்று தேசிய சர்வதேசிய அளவில் நடைபெறும் நிகழ்வுகளை அங்கங்கே வெளியிடப்படும் நாளிதழ்களும் உடனுக்குடன் அறியப்படுத்தும். நடப்பு உசாத்துணை வளத்துக்கான மிகச் சரியான, பொருத்தமான எடுத்துக் காட்டாக இணையத் தளங்களைக் கருதலாம். எனினும் உலகிலுள்ள அனைத்தையும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் பெற்றுக் கொள்வது என்பதோ பொருள்வாரியான ஒழுங்கமைப்போ அல்லது சொல்லடைவோ இல்லாத நாளிதழ்களிலிருந்து வாசகன் கேட்கும் வினாவுக்குரிய விடையை காலதாமதமின்றி வழங்குவதோ, இணையத்தளத்தை வாசகர் ஒவ்வொருவரும் செலவின்றிப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளோ நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும். இதனைக் கருத்தில் கொண்டு இத்தகைய நாளிதழ்களிலிருந்து அல்லது வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற எந்தவொரு சாதனத்திலிருந்தும் தொகுக்கப்படும் மிக முக்கிய அண்மைக்காலத் தரவுகளையும் தகவல்களையும் உள்ளடக்கி வெளியிடப்படும் எந்தவொரு சாதனமும் பொதுவாக நடப்பு உசாத்துணை வளங்கள் எனப் பெயரிடப்படுகின்றன.

பயன்பாடு

உலகில் இடம்பெறும் மிக அண்மைக்காலத் தகவல்களை அறிய உதவுதல்.

எடுத்துக் காட்டுகள்:

Keesing's Records of World Events. [London: Keesings,1931- Monthly]



வரலாறு: 1981ம் ஆண்டுவரை Keesings Contemporary Archives என்ற பெயருடனும் பின்னர் மேற்குறித்த பெயரிலும் வெளிவந்து கொண்டிருக்கும் இந்த உசாத்துணை சாதனமானது மிக முக்கிய உலக நிகழ்வுகளை மாத ரீதியாகத் தொகுத்துத் தரும் வெளியீடு ஆகும். சர்வதேச விவகாரங்களை உடனுக்குடன் அறிய விரும்புகின்றவர் களுக்கான சரியான உசாத்துணைக் கருவியாக இது தொழிற்படு கின்றது. கிட்டத்தட்ட 70 வருடங்களாக உலகம் முழுவதிலுமுள்ள ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், நூலகங்கள் போன்றவை சர்வதேச அபிவிருத்திகளைப் பற்றி அறிவதற்கு இந்த ஆக்கத்திலேயே தங்கியிருக்கின்றனர். உலகின் வெளியீட்டகங்கள், தகவல் சேவைகள் போன்றவற்றிலிருந்து அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளை வடித்தெடுத்து விபரமான அறிக்கைகளாக்கித் தருவதில் இதற்கு நிகர் வேறெதுவுமில்லை. ஒவ்வொரு மாத இதழும் 48 பக்கங்களில் ஒரு மாதத்தின் முக்கியமான நிகழ்வுகளை உள்ளடக்கி வருகிறது. அச்சு வடிவில் மட்டுமன்றி இணையத் தளத்தில் சந்தா அடிப்படையிலும், ஆண்டு ரீதியான தக வல்கள் சீடிரோம் வடிவிலும் கிடைக்கிறது.

உள்ளடக்கம்: தேசிய சர்வதேசியரீதியில் அரசியல், பொருளா தாரம் சார்ந்த முக்கிய வளர்ச்சி நிலைகளைப் பதிவு செய்யும் ஓர் உசாத்துணை வளமாகத் தொழிற்படுகின்றது. அரசியல் படுகொலைகளும் அதன் தொடர் விளைவுகளும், வெள்ளப்பெருக்கும் பூகம்பமும், பயங்கரவாதச் செயற்பாடுகள், கிளர்ச்சிகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், தேர்தல்கள், புதிய அமைச்சரவைக்கான அங்கத்தவர்கள், பிரதான அரசியல் நியமனங்கள், பொருளாதார போக்குகளும் ஒப்பந்தங்களும், தேசிய வரவுசெலவுத் திட்டமும் துண்டுவிழும் தொகையும், சர்வதேச அமைப்புகளின் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள், மற்றும் வேறு வெளியீடுகளில் வெளிவராத எந்தச் செய்திகளுக்கும் மிகச் சரியான உசாத்துணை சாதனம் இதுவாகும். உலகில் வெளியாகும் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், அச்சகங்கள். உத்தியோகபூர்வ அரச ஆவணவாக்க செயற்திட்டங்கள், தகவல் சேவைகள் போன்றவற்றிலிருந்து முக்கிய நிகழ்வுகளைச் சுருக்கப்படுத்தித் தருகின்றது. இவ்வாறு வெளியிடப்பட்ட தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமைத்தன்மை வாய்ந்தவை எனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அனுபவம் வாய்ந்த ஆய்வுப் பதிப்பாளர் குழுவினால் பாரபட்சமற்ற முறையில் சரியாக அறிக்கைகளாக உருவாக் கப்பட்டுச் சொல்லடைவு படுத்தப்படுகின்றது. நிபுணர் குழுவினால் தயாரிக்கப்படுகின்ற பொருட்துறை சார்ந்த விபரமான அறிக்கைகள் இடையிடையே உள்ளடக்கப்படுகின்றன. முக்கிய உரைகளின் முழு விபரங்களும் உள்ளடக்கப்படுகின்றன. விளையாட்டு, சினிமா, கலைகள் போன்றவை பெரும்பாலும் சுருக்கமாகவே உள்ளடக்கப்படுகின்றன.

ஒழுங்கமைப்பு: ஒவ்வோர் ஆண்டும் வாராந்த அடிப்படையில் விநியோகிக்கப்படும் இந்த வெளியீட்டுக்கு அதன் இரண்டாவது இதழிலிருந்தே பொருட் சொல்லடைவு தயாரிக் கப்படுகின்றது. காலாண்டு ரீதியில் இச் சொல்லடைவுகள் ஒன்றாகத் தொகுக்கப்படுவதுடன் ஆண்டு முடிவில் முழுமையான தொகுதிக்கான சொல்லடைவும் தயாரிக்கப்படுகின்றது. நாடுகள், பிரதேசங்கள், கண்டங்கள் ரீதியாகப் பரந்த பொருட்தலைப்புகளின் கீழ் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

http://www.keesings.com

Keesing's Record of World Events என்ற நூலின் இலத்திரனியல் வடிவம் இதுவாகும். 1931ம் ஆண்டு முதல் வெளிவரும் இந்நூலின் 75வருட கால ஆவணச் சேகரிப்பை அத்தளத் தில் online ல் பெறக்கூடியதாகவுள்ளது. தேடல் செய்வதற்கு கட்டண அனுமதி முறை காணப்படுவதுடன் மாதாந்த வெளியீட்டைப் பார்வையிடும் வசதியும் காணப்படுகிறது.

http://www.nobelprize.org

இத்தளம் நோபல் பரிசு தொடர்பானது. Nobel Foundationஆல் பராமரிக்கப்படுகிறது. 1901 ஆண்டு முதல் வழங்கப்பட்ட நோபல் பரிசு தொடர்பான விபரங்களையும் அவற்றைப் பெற்றோரின் விபரங்களையும் ஓரளவு உள்ளடக்குகிறது. வாராந்தம் புதுப்பிக்கப்படு கிறது.

8.9 புள்ளிவிபர மூலங்கள் [Sources of Statistics]

புள்ளிவிபரச் சேவை என்பது மிக முக்கிய சேவையாக இனங் காணப்பட்டிருக்கிறது. மிக அதிகமான தகவல் மூலங்களை அறிந்திருக்கவேண்டியது இத்தகைய சேவைக்கு அவசியமாகும். புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் இவற்றைச் செய்முறைப்படுத்தல் ஆகியவை தொடர்பான அறிவு இதற்குப் பெரிதும் வேண்டப்படுகின்றது.

பயன்பாடு

- தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையான வருட மழைவீழ்ச்சியும் உயர் தாழ் வெப்ப நிலைகளும்.
- பிரதான ஆறுகள், சிகரங்கள் என்பவற்றின் நீள உயரங்கள்.
- ஆண்டு வாரியாகவும், மாவட்ட, பட்டின, நகர, கிராம ரீதியாகவும் இன, மத அடிப்படையிலும் சனத்தொகை.
- எழுத்தறிவு வீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✶ பால் ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் வேலைவாய்ப்பு.
- ✶ அரசாங்க ஆஸ்பத்திரிகள், படுக்கைகள், ஊழியர்கள், சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளிகள், சுகாதார சேவைக்கான செலவு போன்ற விபரங்கள்.
- ✶ பாடசாலைகளின் எண்ணிக்கை, தரரீதியான வகைப்பாடு, ஆசிரியரின் தரம், பாடசாலைக்கான அரசின் மொத்தச் செலவு போன்றன.
- ✶ உயர் கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் ஆராய்ச்சியாளர் விபரமும் மாணவர்களதும் அவர்கள் பெற்ற பட்டங்களதும் விபரமும்.
- ✶ சமூக சேவை நிறுவனங்களது வகைப்பாடும், மொத்த எண்ணிக்கையும்.
- ✶ ஊடகங்கள் பற்றிய விபரங்கள்.
- ✶ விவசாயத் தகவல்கள்.
- ✶ போக்குவரத்துப் பாதைகள், பதிவிலுள்ள மோட்டார் வாகனங்கள், தபால் சேவை, ஒலிபரப்பு தொலைக்காட்சிச் சேவைகள்.
- ✶ உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடங்கள்.

வரையறைகள்

- ✶ புள்ளிவிபரத் தகவல்கள் நம்பகத் தன்மை வாய்ந்தவையாக இருப்பது கடினமானது.
- ✶ இவை வருடாவருடம் மீளாய்வுக்குட்படும்போது தான் தகவல்கள் அண்மைப்படுத்தப் படுவதற்கு வாய்ப்புண்டு.

எடுத்துக்காட்டுகள்

i. **புள்ளிவிபரச் சுருக்கம்** [Statistical Abstract] [**கொழும்பு: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், 1949**]



வரலாறு: அமைச்சுகள், அரசதிணைக்களங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடன் வெளியிடப்படும் இது 1938ம் ஆண்டுடன் இடை நிறுத்தப்பட்ட இலங்கை Blue book இல் உள்ள தகவல்களை உள்ளடக்கும் அதேசமயம் அதில் இல்லாத தகவல்களையும் உள்ளடக்கி வெளியிடப்படும் ஒரு புள்ளிவிபர வெளியீடு ஆகும். இதன் முதலாவது பதிப்பு 1937 - 48 காலப் பகுதியை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. 1961ல் வெளியிடப்பட்ட 13வது பதிப்பிலிருந்து சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுகிறது.

உள்ளடக்கம்: சனத்தொகை, வேலைவாய்ப்பு, விவசாயம், கல்வி, வர்த்தகம் கைத்தொழில், தட்பவெப்பநிலை, தொடர்பு ஊடகம், சமூக நிலைமைகள் போன்ற பரந்துபட்ட பொருட்துறைகளின் புள்ளிவிபரத் தகவல்களை இது உள்ளடக்குகிறது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு வருடமும் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டு, சமகாலப் படுத்தப்பட்டு, இயன்றளவு கடந்த வருடத் தகவல்களை நடப்பு வருடத்தில் தர முயற்சி செய்கிறது. ஆய்வாளர்களுக்கு உதவும் பொருட்டு சாத்தியமான இடங்களில் தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வருட தொடராக வழங்கப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில் புள்ளிவிபர இலக்கங்கள் அண்மித்த இறுதி இலக்கத்துக்கு முழுத்தானமாக்கப்பட்டுள்ளது. சகல புள்ளிவிபரங்களும் டிசம்பர் 31ல் முடிவடைந்த கலண்டர் வருடங்களுக்கு உரியவையாகும்.

ii. **இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் புள்ளிவிபரக் கையடக்க நூல்** [Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka] (**கொழும்பு: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்க அமைச்சு,** 1967- ISBN: 955-577-032-8]



வரலாறு: புள்ளிவிபரத் தரவுகளைப் புதுப்பித்து இன்றைய நிலைக்கேற்பத் திருத்தியமைத்து கூடியவரை அண்மைக்காலத் தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுகிறது.

உள்ளடக்கம்: இதிலுள்ள தகவல்கள் புவியியல், சனத்தொகையும் வாழ் நிலைப் புள்ளிவிபரங்களும், சமூக நிலைமைகள் - வீட்டு வசதி, வேலை வசதி, சுகாதாரம், கல்வி, உயர்கல்வி, சமூக சேவை கிராம அபிவிருத்தி போன்றன, விவசாயம், கைத்தொழில், வியாபாரம், போக்குவரத்தும் செய்தித் தொடர்பும், தேசிய கணக்குகள், பொதுநிதி, உள்ளூராட்சி, பிரயாணம், பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், விசேட அம்சங்கள் என 13 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இதனது ஒழுங்கமைப்பு பரந்த பொருட் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. இப் பொருட் தலைப்புகள் நூலின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

iii. UNESCO Statistical Yearbook [Paris: Unesco:1991]

வரலாறு: இவ் ஆண்டு நூலானது யுனெஸ்கோவின் தேசிய ஆணைக் குழு, புள்ளிவிபரப் பிரிவு, ஐ.நாவின் குடித்தொகைப் பிரிவு ஆகிய மூன்றும் இணைந்து தயாரிக்கப்பட்ட ஓர் உசாத்துணை சாதனமாகும். யுனெஸ்கோவின் கிட்டத்தட்ட 200 அங்கத்துவ நாடுகளின் தரவுகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளும் அவற்றின் சட்டவிதிகள், ஒழுங்கு முறைகளுக்கமைய கல்வி, அறிவியல், கலாசார செயற்பாடுகளுடன் தொடர்புடைய புள்ளி விபரங்களை யுனெஸ்கோவின் அரசியலமைப்புக் கட்டுரை VIII இற்கு அமைய அனுப்புதல் வேண்டும். இதிலுள்ள தகவல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஸ் ஆகிய மூன்று மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்: உசாத்துணை அட்டவணைகள், கல்வியும் கல்விசார் செலவுகளும், அறிவியலும் தொழினுட்பமும், நூலகங்கள், நூலுற்பத்தி, பத்திரிகைகளும் தகவல்களும், கலாச்சாரத் தகவல்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படத் தகவல்கள், சர்வதேச வர்த்தகம் சார்ந்த தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.91 கைந்நூல்கள் [Hand Books]

கைந்நூல்கள் என்பவை கையடக்க வடிவில் நானாவிதத் தகவல்களைத் தொகுத்துத் தருபவை. தரவுகள், செய்முறைகள், கோட்பாடுகள் போன்றவற்றை இவை வழங்குவதுடன் அட்டவணைகள், வரைபடங்கள், விளக்கப்படங்கள் போன்றவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. அறிவியலாளர், தொழினுட் பவியலாளர் மத்தியில் கைந்நூல்களின் பாவனை மிக அதிகளவில் காணப்படுகிறது.

பயன்பாடு

* தரவுகள், புள்ளிவிபரங்கள் போன்றவற்றை வழங்குதல்.
* ஏதாவது ஒரு விடயத்தை எப்படி உருவாக்குவது என்ற தகவல்களைத் தந்து அவற்றைச் சுயமாகத் தயாரிக்க உதவுதல்.
* மறக்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட காலத்துக்குப் பயன் படுத்தப்படாத பொருள் தொடர்பான சரியான தகவலை நினைவூட்ட உதவுதல்.
* பழக்கமற்ற ஒரு பொருட் துறைக்குள் நுழைவதற்கான ஆரம்பக் கட்டமாகத் தொழிற் படல்.

வரையறைகள்

* உள்ளடக்கப்படும் தரவுகள் உயர்மட்ட ஆய்வுகளுக்குப் போதுமானதாக இருக்காது.
* தகவல்கள் ஆழமற்றதாகவே பெரும்பாலும் இருக்கும்.
* கைந்நூல்களை விடவும் தரவுத் தொகுப்புகள் அதிகமான தரவுகளைக் கொண்டிருக்கும்.
* பெரும்பாலும் கைந்நூல்களில் உள்ள தரவுகள் நீண்ட காலத்துக்கு மீளாய்வுக்குட் படாததாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டுகள்

i. Hand Book of Chemistry [Compiled and Edited by N.A Lange, Revised 10th Edition, New York: McGraw - Hill,1967.]

ஆய்வுகூட பணிகளுக்கும், அவை தொடர்பான உற்பத்திகளுக்கும் தேவைப்படும் வேதியியல், பௌதிகவியல் தரவுகளை வழங்குகின்ற ஓர் உசாத்துணை சாதனம் இதுவாகும். மிக அதிகமான தரவுகளை உள்ளடக்கியிருப்பதன் காரணமாக உடனுக்குடன் தேவைப்படும் தகவல்களை இதிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மாணவர்களுக்கும் வேதியியல் துறை சார்ந்த தொழில் நிபுணர்களுக்கும் மிகச் சிறந்த பயன்பாடுடைய சாதனமாக இது கருதப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Famous First Facts [5rd edition./ by Joseph Nathan Kane.- New York: Wilson,1998]

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கும் மேலாக அமெரிக்க கல்வி சார் மற்றும் பொது நூலகங்களின் வரலாற்றுச் சேகரிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய உசாத்துணை சாதனமாக இது கருதப்படுகின்றது. அமெரிக்க வரலாற்றின் முதற் கண்டு பிடிப்புகள், புதுமைகள், நிகழ்வுகள் என்பவற்றை பதிவு செய்துள்ள ஓர் உசாத்துணை சாதனம் இது. இது பொருள் வாரியாக அகர ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மிக விபரமான சொல்லடைவையும் கொண்டிருக்கிறது. இச்சொல்லடைவானது விபரங்களை புவியியல் ரீதியாகவும், கால ரீதியாகவும், தனிநபர் பெயர் களின் அடிப்படையிலும் தேடுதலை மேற்கொள்ள உதவுகின்றது. வருடாந்த ரீதியில் புதுப்பிக்கப்படுகின்றது. கிடைக்கக்கூடிய வடிவங்கள்

* அச்சு வடிவம்
* இணையத்தள வடிவம்

தெரிவுசெய்யப்பட்ட சில கைந்நூல் தளங்கள்

http://www.handbooks.uwa.edu.au

கைந்நூல் தளத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும் இது "The University of Australia" பல்கலைக்கழகத்தினால் பராமரிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழக உத்தியோகபூர்வ வெளியீடான 2008ம் ஆண்டிற்கான கைந்நூல்கள் இதில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான கைந்நூல் குறிப்பிடத்தக்கது.

http://www.engnetbase.com

இத்தளம் CRC Press என்ற வெளியீட்டாளரின் பொறியியல் கைந்நூல்களின் வழிகாட்டித் தளமாகும். இது கல்வி சார் பல்கலைக்கழக நூலகங்களுக்கும் பொறியியல் ஆய்வு நிறுவனங்களுக்கும் மிகப் பொருத்தமான கைந்நூல் தளம் என விதந்து கூறப்படுகிறது.

8.92 **கையேடுகள்** [Manuals]

கையேடு என்பது ஒரு வேலையை எவ்வாறு நிறைவேற்றுவது, தெளிவான தனித்துவமான வழிகாட்டுதலினூடாக ஒன்றை எவ்வாறு செய்வது என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குகின்ற ஓர் அறிவுறுத்தல் நூலாகும்.

8.93 **மீளாய்வுகள்** [Reviews]

முதல் நிலைத் தகவல் வளங்கள் பற்றிய ஒரு மதிப்பீடே மீளாய்வு எனப்படுகிறது. குறிப்பிட்ட துறை சார்ந்து குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளை சுட்டிக் காட்டுவதே மீளாய்வுகளின் நோக்கமாகும். இவை மாதாந்த, காலாண்டு வருடாந்த ரீதியில் தோன்றுகின்ற கட்டுரைத் தொகுதிகளாகவோ அல்லது பருவஇதழில் வெளிவரும் கட்டுரையாகவோ இருக்கலாம். புதிய பிரச்சனைக்கான பின்னணித் தகவல்களைப் பொருத்தமான வடிவத்தில் வழங்குவதுடன் இலக்கியத்துக்கான திறவுகோலாகவும் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஒன்பது

தகவல் வளத்தெரிவுக் கருவிகள்

9.1 நூல்விபரப் பட்டியல்கள் [Bibliographies]

நூல்களையும் ஏனைய சாதனங்களையும் முறைப்படுத்தப்பட்ட வகையில் விபரித்து, பகுப்பாக்கம் செய்து, படிப்பதற்கு ஏற்ற வகையிலும், குறிப்பு எடுப்பதற்கு உதவும் வகையிலும், தர்க்க ரீதியாகவும், பயனுள்ள வகையிலும் பதிவுகளை ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் வெளியீடு நூல்விபரப் பட்டியல் எனப்படும். தகவல் சாதனங்களுள் ஒன்றான நூல்கள் தொடர்பான விபரங்களை அதாவது நூல் விபரத் தரவுகளை யாதாயினும் ஓர் ஒழுங்கில் இவை தொகுத்து பட்டியலிடுகின்றன.

ஆசிரியர், விடயம், மொழி, இடம், வடிவம், காலம், இடம் முதலிய யாதாயினும் ஒன்றின் அல்லது பலவற்றின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட எழுத்துருவில் வெளியான ஆவணங்களின் விபரப்பட்டியல் எனப்படுகிறது Reitz (2006). இவை வெளியீட்டாளர்களாலும் நூலகங்களாலும் நூல் விற்பனையாளர்களாலும் உருவாக்கப்படுகின்றன. இவை குறித்த பொருட் துறை சார்ந்ததாக, ஆசிரியருடையதாக, மொழி சார்ந்ததாக, குறித்த காலப்பகுதிக் குரியதாக, குறித்த வடிவம் சார்ந்ததாக, குறிப்பிட்ட வெளியீட்டாளர் சார்ந்ததாக இருக்கலாம். இணையத்தில் இத்தகைய நூல் விபரத்தரவுகளை உள்ளடக்கிய Online தரவுத்தளங்கள் நூல்விபரப்பட்டியல் தளங்களாக இனங்காணத்தக்கன. இவற்றில் நூல்கள் மட்டுமன்றி, நூலுருவற்ற சாதனங்களின் விபரத்தரவுகளின் அடிப்படையில் தேடல் செய்யும் வசதியினையும் சில தளங்கள் கொண்டுள்ளன.

9.2 வகை

நூல்விபரப்பட்டியல்களை முறைப்படுத்தப்பட்ட நூல் விபரப்பட்டியல்கள், பகுத்தாய்வு முறை நூல் விபரப்பட்டியல்கள், வரலாற்று நூல்விபரப்பட்டியல்கள் என மூன்று பிரதான பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

* முறைப்படுத்தப்பட்ட நூல்விபரப்பட்டியல்கள் [Systematic Bibliographies]

  ஒவ்வொரு தனி ஆவணத்தினதும் அதனுடன் தொடர்பான ஆவணங்களினதும் தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்து, தர்க்கரீதியாக அல்லது பயனுள்ள ஒழுங்கில் பட்டியல் படுத்தும் செய்முறையே முறைப்படுத்தப்பட்ட அல்லது திட்டமிடப்பட்ட நூல்விபரப் பட்டியலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பகுத்தாய்வுமுறை நூல்விபரப் பட்டியல்கள் [Analytical Bibliographies]

  கையெழுத்துகள், பிரதான சொற்கள், நீர்வரிக்குறி போன்ற நூலின் பௌதிக இயல்புகளை ஆராய்ந்து அது பற்றிய பதிவுகளை மேற்கொள்ளும் முறைசார்ந்த நூல்விபரப் பட்டியல். ஆசிரியரின் முழுப்பெயர், தலைப்பு, பதிப்பு விபரம், நூலின் வடிவம், பக்கங்கள், அச்சுவிபரங்கள், விளக்கப் படங்கள், விலை, நூலுக்குப் பயன்படுத்தப்பட்ட தாள்வகை, நூல் கட்டுவகை போன்ற முழுமையான நூல்விபரத் தரவுகளை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் நூல் விபரப் பட்டியல்கள் விவரண நூல்விபரப் பட்டியல் என அழைக்கப்படுகின்றது.

* வரலாற்று நூல்விபரப்பட்டியல்கள் (Historical Bibliographies)

  ஒரு நூலை உருவாக்குவதற்குத் தேவையான தாள்களின் உருவாக்கம், அச்சுக் கலை, வெளியீடு, விளக்கப்படங்கள், வரைபடங்கள் உருவாக்கம், நூல்கட்டு, நூல் பாதுகாப்பு உட்பட நூலின் உற்பத்தி முறைகளையும் அதன் வரலாற்றையும் உள்ளடக்கித் தயாரிக்கப்படும் நூல்விபரப் பட்டியல்கள்.

9.21 முறைப்படுத்தப்பட்ட நூல்விபரப்பட்டியல்கள் [Systematic Bibliographies]

பொதுவாக நூலகவியல் துறையில் மிக அதிகமாக தொகுக்கப்படுபவையாக இவை உள்ளன. முறைப்படுத்தப்பட்ட நூல் விபரப் பட்டியல்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

* அனைத்துலக நூல்விபரப்பட்டியல்கள்
* தேசிய நூல்விபரப்பட்டியல்கள்
* வர்த்தக ரீதியிலான நூல்விபரப்பட்டியல்கள்
* தெரிவு செய்யப்பட்ட நூல்விபரப்பட்டியல்கள்
* அரிய நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல்கள்
* பெயர் அறியப்படாத, புனைபெயர் ஆக்கங்களுக்கான நூல் விபரப்பட்டியல்கள்
* பருவ இதழ்களின் பட்டியல்கள்
* ஆய்வுக்கட்டுரைகளுக்கான பட்டியல்கள்
* பொருள் நூல்விபரப்பட்டியல்கள்
* ஆசிரிய நூல்விபரப்பட்டியல்கள்
* நூல்விபரப்பட்டியலுக்கான நூல்விபரப்பட்டியல்கள்

பயன்பாடு

* வெளியீடுகளின் தலைப்புகளையும் ஏனைய விபரங்களையும் சரிபார்க்க உதவுதல்.
* ஒரு குறிப்பிட்ட பொருட்துறையில் அல்லது மொழியில் அதுவுமன்றி குறிப்பிட்ட ஆசிரியர் அல்லது வெளியீட்டாளரினால் வெளியிடப்பட்ட நூல்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிவதற்கு உதவுதல்.
* பொதுவாக நூல்விபரப்பட்டியல்கள் மீளாய்வுகளை உள்ளடக்கியிருப்பதனால் ஒரு வெளியீட்டின் மதிப்பையும் அதன் பெறுமதியையும் மதிப்பிட உதவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒரு வெளியீடு எந்தெந்தப் பதிப்புகளில் வெளியானது போன்ற ஒரு வெளியீட்டின் வரலாற்று ரீதியான, நூல்விபரம் சார்ந்த பின்னணித் தகவல்களைப் பெறுவதற்கு உதவுதல்.
* ஆசிரியர் தொடர்பான நூல்விபரத் தரவுகளைப் பெற உதவுதல்.
* ஒரு குறிப்பிட்ட பொருட்துறையில் உள்ள சிறந்த நூல்களை அறிய உதவுதல்.
* ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி சார்ந்து அல்லது குறித்த ஒரு வடிவம் சார்ந்து வெளியான வெளியீடுகள் தொடர்பான தகவலைப் பெற உதவுதல்.

9.211 அனைத்துலக நூல்விபரப்பட்டியல் [Universal Bibliography]

பொருட்துறை சார்ந்தோ அல்லது புவியியல், பிரதேச அடிப்படையிலோ அதுவுமன்றி மொழி, வடிவம் போன்றவற்றின் அடிப்படையிலோ மட்டுப்படுத்தப்படாமல் எல்லா மொழிகளிலும், எல்லா பொருட் துறைகளிலும், எல்லா நாடுகளிலும் உருவாகின்ற எல்லா ஆவணங்களையும் பட்டியல் படுத்தும் செய்முறை அனைத்துலக நூல்விபரப்பட்டியல் எனப்படுகிறது. நூல்விபரப்பட்டியலின் தந்தை என அழைக்கப்படும் Konrad Gesner என்பவரின் புகழ்பெற்ற Bibliotheca Universalis - Zurich 1545 என்ற நூலில் அகரவரிசையில் ஆசிரியரின் கிறீஸ்தவ பெயரின் கீழ் முதன்முதலில் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. 1548இல் இவர் இதனை மீளத்தொகுத்ததுடன் 1555ல் 3000 நூல்களைக் கொண்ட மேலதிக இணைப்பொன்றையும் வெளியிட்டிருந்தார். இவை கிரேக்க, இலத்தீன், பாளி மொழிகளிலிருந்து 300 ஆசிரியர்களின் 15000 நூல்களைத் தனது குறிப்புரைகளுடன் வெளியிட்ட இந்த நூலே முதலாவது அனைத்துலக நூல்விபரப் பட்டியலின் ஆரம்பமாக அமைந்தது. 1564 - 1749 காலப்பகுதியில் Frankfort இலும் 1595-1860 Leipzig இலும் நடத்தப்பட்ட நூல் கண் காட்சியின் பட்டியல்கள் (Messleatuloge) அனைத்துலக நூல் விபரப்பட்டியல்களின் இன்னுமொரு வடிவமாகும். இக்காலப் பகுதியில் ஐரோப்பிய பதிப்பகங்களினால் விநியோகிக்கப்பட்ட நூல்களின் விபரங்களை இது கொண்டிருந்தது. ஆரம்பத்தில் ஐரோப்பிய மொழி நூல்களையே கொண்டிருந்த இவை 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் வெளியேயிருந்து விநியோகிக்கப்பட்ட சில நூல்களையும் உள்ளடக்கியது. 17 ம் நூற்றாண்டின் முடிவில் மத ஆலோசகரான பரிஸ் பாராளுமன்றத்தின் Abbe Drouyn என்ற பிரஞ்சுக்காரரால் ஏனைய பட்டியல்களை அடிப்படையாகக்கொண்ட அனைத்துலக நூல்விபரப்பட்டியல் தொகுப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவரால் 321 கையெழுத்துப் பிரதிகளாலான தொகுதிகளை உருவாக்க முடிந்தது. 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் Abbot Marucelli அருட்தந்தை Savanarola என்ற இரு இத்தாலிய ஆய்வாளர்கள் இம்முயற்சியில் இறங்கியமை குறிப்பிடத்தக்கது. எனினும் இதன் ஒரு சில பகுதிகளே அச்சு வடிவில் வந்தன. 19 ம் நூற்றாண்டில் Robert wahs Jacquest Charles Brunet, Schrettinger, Petzholdt, Danjoru, Bonnanges, Dilke, Barnvell, Cole, Crestadora, Hottinger Erman போன்றோர் இதனை முழுமையாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய அரும் பொருளகத்தின் பட்டியலை வெளியிடுவதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. சர்வதேச ஆவணவாக்க சம்மேளனத்தினால் [FID] இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 12 மில்லியன் பதிவுகள் உருவாக்கப்பட்டபோதும், இத்தகைய பெரியதொரு செயற்திட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் ஏற்பட்ட சிரமங் காரணமாக இது கைவிடப்பட்டது. தேசிய அடிப்படையிலேயே இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு சாத்தியப்படும் என இரண்டாம் உலகப் போர் தொடக்கம் யுனெஸ்கோ வலியுறுத் தியதுடன் தேசிய நூல்விபரப் பட்டியல் தொகுப்பை உலகளாவிய ரீதியில் ஊக்குவித்தது.

9.212 தேசிய நூல்விபரப் பட்டியல்கள் [National Bibliographies]

தேசிய நூல்விபரப் பட்டியல் என்ற பதம் குறிக்கும் உண்மையான கருத்து நூலின் வடிவம், மொழி, பொருள், வெளியீட்டு நிறுவனம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது வெளியிடப் பட்ட, வெளியிடப்படாத, வியாபார ரீதியான, வியாபார ரீதியற்ற அனைத்து ஆவணங்களுக் குமான பதிவேடு என்பதாகும். ஒரு தேசத்தின் வெளியீடுகள் அனைத்துக்குமான நூல்விபரக் கருவியாக இது தொழிற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் நடைமுறையில் இது பின்வரும் அம்சங்களில் வரையறைப்படுத்தப்படுகிறது:

* சாதனங்களின் வடிவம் (நூல்கள், பருவ இதழ்கள், சிறு நூல்கள், நுண் வடிவங்கள்)
* கால அளவு (தற்கால , காலத்தால் முந்திய வெளியீடுகள்)
* புவியியல் பிரதேசம் (நாடு, மாநிலம், மாவட்டம், நகரம் போன்றவை)
* உள்ளடக்கம் (பெயர் அறியப்படாத ஆக்கங்கள், புனைபெயர் ஆக்கங்கள்)
* மூலம் (விநியோக நிறுவனங்கள்)

அமெரிக்காவில் அனைத்து வெளியீடுகளையும் உள்ளடக்கக்கூடிய தகவல் சாதனம் ஒன்று இல்லை என்றே கூறவேண்டும். ஆரம்ப கால அச்சிடுதல் தொட்டு கிட்டத்தட்ட முழுக் காலப் பகுதியையும் உள்ளடக்கக்கூடிய வகையில் தொடர்ச்சியான வகையில் நூல்விபரப் பட்டியல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1898 தொடக்கம் Cumulative Book Index இத்தகைய நல்லதொரு பணியைச் செய்கிறது. அத்துடன் காங்கிரஸ் நூலக அச்சிடப்பட்ட பட்டியல் சுலபமாகத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத வெளியீடுகளுக்கான குறிப்பிடத் தக்க கருவியாகத் தொழிற்படுகிறது. R.R. Bowker ன் வெளியீடுகள் ஒரு பூரணமான நூல்விபரப்பட்டியல் தொகுப்புக்கு நல்ல பங்களிப்புச் செய்திருக்கிறது.

பயன்பாடு

* ஒரு தேசத்தின் இலக்கிய சாதனைகளைப் பற்றி வாசகருக்குத் தெரியப்படுத்தல்.
* புலமைத்துவத்தையும் கலாசாரத்தையும் அடுத்த தலை முறையினருக்குக் கடத்த உதவுதல்.
* ஒரு தேசத்தின் இலக்கிய வெளியீடுகளின் நூல்விபரக் கட்டுப்பாட்டுக் கருவியாகத் தொழிற்படல்.
* நூலகர்கள், புலமையாளர்கள் போன்றோருக்கு நூல் தெரிவுக் கருவியாகத் தொழிற் படுதலும் நூல் வர்த்தகத்துக்கான வழிகாட்டியாக இயங்குதலும்.

வரையறைகள்

* அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் உருவாக்கப்படும் நூல்விபரப் பட்டியல்கள் ஓரளவிற்கு அந்நாடுகளின் வெளியீடுகளை உள்ளடக்கி வெளிவருகின்றது எனினும் முழுமையான தேசிய நூல்விபரப் பட்டியல் தொகுப்பு என்பது எங்குமே நடைமுறையில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நூல்விபரப்பட்டியல் உருவாக்கத்தில் ஒவ்வொரு நாடும் தனக்கெனத் தனித்துவமான வடிவத்தைப் பின்பற்றுகின்ற மையால் இவற்றை உருவாக்குவதற்குத் தேவைப்படும் திறன்களும் இவை உள்ளடக்கும் காலப்பகுதிகளும், தேர்ந்தெடுக்கும் தகவல் வளங் களின் வகையும் வேறுபடுவது தவிர்க்கமுடியாததாகின்றது.
* வளர்முகநாடுகளில் தேசிய நூல்விபரப்பட்டியல் உருவாக்கம் பெரும்பாலும் திருப்தி கரமானதாக இல்லை என்பதுடன் சில நாடுகளில் தேசிய நூல்விபரப் பட்டியலே தயாரிக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டுகள்

Sri Lanka National Bibliography. [Colombo: Sri Lanka National Library Services Board, Bibliographic Services, 1962-]



வரலாறு: இலங்கை தேசிய நூல்விபரப்பட்டியலின் ஆரம்ப வடிவமானது 1885ம் ஆண்டின் அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள் போன்றவற்றின் அதிகாரபூர்வ பதிவேடாக அரச வர்த்தமானியின் பகுதி -5ல் வெளியிடப்பட்டது. 1962ல் தேசிய சுவடிக்காப்பகத் திணைக்களத்தின் தேசிய நூல் விபரப்பட்டியல் பிரிவு அமைக்கப்பட்டதன் பின்பு 1963ம் ஆண்டில் முதலாவது தொகுதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் வெளியிடப்பட்டது. இது ஒரு காலாண்டு வெளியீடாகும். 1973ம் ஆண்டிலிருந்து இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை இப்பணியை மேற்கொண்டு மாதாந்த வெளியீடாக வெளிவருகிறது.

உள்ளடக்கம்: கட்டாய நூல்வைப்புச் சட்டத்தின் அடிப்படையில் பெறப்படுகின்ற இலங்கை வெளியீடுகளை உள்ளடக்கமாக கொண்டிருக்கிறது. நூல்களுடன் பருவ இதழ்களின் முதலாவது இதழும், பத்திரிகையின் முதலாவது வெளியீடும் இதில் சேர்க்கப்பட் டுள்ளது.

ஒழுங்கமைப்பு: இப்பட்டியல் முறையே சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நூலின் ஒவ்வொரு பகுதியும் பகுப்பாக்கப் பகுதி ஒன்றையும் அதனுடன் இணைந்த வகையில் ஆசிரிய, தலைப்பு, பொருட் சொல்லடைவுகளையும் கொண்டிருக்கும். பகுப்பாக்கப் பகுதி தூயி தசமமுறைப் பகுப்புத்திட்டத்தை பின்பற்றுகிறது. பொருள் வகுப்புப் பகுதியில் நூலின் விபரங்கள் யாவும் தூயி தசமப் பகுப்புத் திட்டத்துக்கமைய ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளன. அதேசமயம் இந்த நாட்டின் வரலாறு, புவியியல், சிங்கள தமிழ் இலக்கியங்கள், சமயம் என்பவற்றைப் பதிவு செய்வதனால் ஏற்படும் சிறப்புத் தேவைகளுக்கமைய சில மாற்றங்களுடன் இவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வகுப்பெண் போதியளவு தெளிவில்லாத விடத்து சதுர அடைப்புக் குறிக்குள் [1] என்னும் இலக்கம் தூயியின் வகுப்பெண்ணுடன் இணைக்கப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 301.44/1/ - சாதிகள், கரவர், இலங்கை என்னும் பதிவில் 301.44 சமூக வகுப்புகளையும், 1 இலங்கையிலுள்ள கரவர் சாதியையும் குறிக்கும். பதிவுகள் அனைத்தும் ஆங்கிலோ அமெரிக்கன் பட்டியலாக்க விதி - 2 ஐப் பின்பற்றுகின்றது. பொருட் சொல்லடைவு சங்கிலித் தொடர் சொல்லடைவைப் பின்பற்றுகிறது. நூல்விபரப் பட்டியலின் இறுதியில் இலங்கை பற்றி வெளி நாடுகளில் வெளியிடப்படுகின்ற நூல்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அத்துடன் வாசகரின் இலகுவான பாவனையைக் கருத்தில் கொண்டு நூலின் பிற்பகுதியில் ஆசிரிய, பொருட் சொல்லடைவும் கொடுக் கப்பட்டுள்ளது.

ii. **இந்திய தேசிய நூல்விபரப்பட்டியல்** [Indian National Bibliography, Calcutta: Central Reference Library of Indian National Library,1957-]

வரலாறு: இந் நூல்விவரப்பட்டியலானது இந்திய தேசிய நூலகத்தின் நூல்கள் பத்திரிகை களுக்கான விநியோகச் சட்டவிதி [Delivery of Books and Newspapers Act] இன் மூலம் பெறப்படுகின்ற வெளியீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. இந் நூல்விவரப் பட்டியலானது 1957--1963 காலப்பகுதி வரை காலாண்டுக்கு ஒருமுறையும் 1964 தொடக்கம் மாதம் ஒரு தடவையும் வெளியிடப்படுகிறது. 2000 ம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து இது முழுமையாகக் கணினிமயப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு Libsys 4.0 கணினி மென்பொருளைப் பயன்படுத்தி இந்தியாவில் வெளியிடப்படும் பலதரப்பட்ட மொழி ஆக்கங்களும் அதே மொழி வடிவத்தில் பதியப்பட்டுள்ளன. 1968 - 70 காலப்பகுதிகளில் இந்த நூல்விபரப்பட்டியல் தொகுப்பு நடைபெறவில்லை என்பதும் 1994 - 99 காலப்பகுதியில் மாதாந்தத் தொகுதிகளுக்குப் பதில் ஆண்டுத் தொகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் 2000ம் ஆண்டிலிருந்து இது ஒழுங்காக மாத ரீதியில் வெளிவந்து கொண்டிருப்பதுடன் பலதரப்பட்ட மொழிகள் சார்ந்தும் கிட்டத் தட்ட ஆறு இலட்சம் பதிவுகள் தேசிய நூலகத்தில் பதிவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளடக்கம்: இந்தியாவிலுள்ள எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் ஆங்கிலத்திலும் ஏனைய மொழிகளிலும் வெளியிடப்படுகின்ற நூல்களின் விபரங்களை இது கொண்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: அரச சார்பற்ற வெளியீடுகள், அரச வெளியீடுகள் என இரு தொகுதிகளாக இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியும் பகுப்பாக்கப் பகுதி, அகர வரிசைப் பகுதி என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பகுப்பாக்கப் பகுதியின் பதிவுகள் தூயி தசமமுறைப் பகுப்பாக்க முறையிலும் கோலன் பகுப்பு முறையிலும் ஒழுங்குபடுத்தப்பட்டி ருக்கின்றன. அகர வரிசைப் பகுதி, ஆசிரியர், தொடர் என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றது.

iii பிரித்தானிய தேசிய நூல்விபரப் பட்டியல் [British National Bibliography.- London: Council of the British National Bibliography,1950-]



வரலாறு: இவ்வெளியீடானது ஆரம்பத்தில் பிரித்தானிய அரும்பொருளகத்தின் பத்திரிகைச் சட்டத்தின்மூலம் பெறப்படுகின்ற நூல்களின் அடிப்படையில் உருவாக் கப்பட்டு தற்போது பிரித்தானிய தேசிய நூலகத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்ற நூல்விபரப் பட்டிய லாக்க சேவைப் பகுதியினால் வெளியிடப்படுகின்றது. இது வார அடிப்படையில் பொறிமுறை வாசிப்புப் பட்டியலின் பரிமாற்றக் கோவையிலும் (Marc Exchange File) அச்சு வடிவிலும், மாதாந்த அடிப்படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

National Bibliographies
India

Current Bibliography
- *Indian National Bibliography*
- *Accession list: India*
- *Monthly list: Supplement to the catalogue of civil publications of the Government of India*
- *Indian Science Abstracts*

Retrospective Bibliography
- *National Bibliography of Indian literature, 1901-1953*
- *Catalogue of Government of India civil publications corrected up to 31st Dec. 1959*
- *Indian Books in Print*
- *Reference Catalogue of Indian Books in Print*
- *Bibliography of Doctoral Theses in arts and sciences accepted by Indian Universities, 1954-58*
- *Social Sciences: a bibliography of doctoral dissertations accepted by Indian Universities 1857-1970*

சீடிரோம் வடிவிலும் கிடைக்கிறது. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2004ம் ஆண்டுக்குரிய பிரித்தானிய நூல்விபரப் பட்டியலின் அச்சு வடிவ வார வெளியீட்டுக்குரியது.

உள்ளடக்கம்: ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் புதிதாக வெளியிடப்படுகின்ற நூல்கள், பருவ இதழ்களில் பாராளுமன்றத்தின் பலதரப்பட்ட சட்டங்களினால் வழங்கப் படும் சட்ட வைப்பின் அடிப்படையில் பிரித்தானிய நூலகத் தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நூல்களையும் தொடர் வெளியீடுகளையும் பட்டியலாக்கி வரும் ஒரு வாராந்த வெளியீடாகும். அத்துடன் பிரித்தானிய தேசிய நூலகத்தின் ''வெளியீடுகளில் பட்டியலாக்கம்'' என்ற திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படவிருக்கும் நூல்களின் விபரங்களையும் உள்ளடக்குகிறது. இந்த வார வெளியீடுகள் வருடா வருடம் தொகுக்கப்பட்டு இரு தொகுதிகளில் வெளியாகிறது. விலக்குக் கொள்கை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படுகின்றதெனினும் இந்தப் பதிப்பில் பின்வரும் வெளியீடுகள் விலக்கப்பட்டுள்ளன:

- பிரித்தானிய, ஐரிஸ் வெளியீட்டு விபரங்கள் அற்றவை, நேரடி மறுபதிப்புகள், பருவ வெளியீடுகள், உள்ளூரில் விற்பனை செய்யப்படாமல் ஏற்றுமதிக்கென வெளியீடு செய்யப்படுபவை, ஆய்வு அறிக்கைகள், வியாபார ரீதியற்ற தனிப் பொருள் நூல்கள் போன்ற அச்சிடப்பட்ட பொது வெளியீடுகள்.
- பாராளுமன்றம் சார்ந்த, சாராத வெளியீடுகள், பாடசாலை, காவற்துறை போன்ற தனிப்பட்ட நிறுவனங்களின் அறிக்கைகள்.
- உள்ளூராட்சி அரசின் நிர்வாகம் சார்ந்த வெளியீடுகள், நகர வழிகாட்டிகள் போன்றவை.
- இசை, தேசப்படங்கள், சீ.டி, விளையாட்டு நூல்கள், காப்புரிமைகள், கலண்டர்கள், சுவரொட்டிகள் போன்றவை.
- வர்த்தக இலக்கியங்கள், பாடவிதானம் சார்ந்த நூல்கள், புராதன நூல்கள் போன்றவை.
- ஒழுங்கமைப்பு: வார வெளியீடுகள் இரு தொடராக வெளியிடப்படுகின்றன. அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளியீடுகளும் இனி வரவிருக்கின்ற வெளியீடு களும் பகுப்பாக்க ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொகுதியில் உள்ள தலைப்புகள் தூயி தசமமுறைப் பகுப்பாக்கத்திட்டத்தின் 22ம் பதிப்பிற்கமையவும் ஏ.ஏ.சி.ஆர் - 2ன் மீளாய்வுக்கமையவும் (1998) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள பதிவுகள் மூன்று முறைகளில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
- ஆசிரிய தலைப்புச் சொல்லடைவு: பகுப்பாக்கப் பகுதியில் உள்ளடக்கப்பட்ட அத்தனை பதிவுகளின் ஆசிரிய, தலைப்பு விபரங்கள் இதில் அகர வரிசையில் சொல்ல டைவுபடுத்தப்பட்டுள்ளன. ஆசிரிய தலைப்புச் சொல்லடைவுகள் பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், தனித்த, கூட்டு ஆசிரியர் பெயர்களையும் உள்ளடக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாத இறுதியிலும் அந்த மாதத்தில் வெளியான நூல்விபரப்பட்டியலுக்கான திரள்ச் சொல்லடைவும் தயாரிக்கப்படுகின்றது. பதிவுகள் காங்கிரஸ் நூலக பொருட் தலைப் புகளின் அடிப்படையிலும் அமெரிக்க நூலகச் சங்கத்தால் 1990ல் வெளியிடப்பட்ட புனை கதைகள், நாடகம் போன்ற தனித்தனி ஆக்கங்களுக்கான பொருள் சார் அறிவுறுத்தல்கள் (Guidelines on Subject Access to Individual Works of Fiction, Drama, etc.) உள்ள சொற்களை அடிப்படையாகக் கொண்டும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

9.2 13 **வர்த்தக நூல்விபரப் பட்டியல்கள்** [Trade Bibliographics]

நூல் விநியோகஸ்தர்கள், நூல் விற்பனையாளர்கள், வெளியீட்டாளர்கள், அச்சிடுபவர்கள் போன்ற வர்த்தக நிறுவனங்களினால் குறித்த நாட்டுக்கென வெளியிடப் படுகின்ற நூல்விபரப் பட்டியல்கள் இவ்வகைக்குள் அடங்கும். வியாபாரிகள் நூல்களை இலாபம் தரும் ஒரு பண்டமாகக் கருதுவதனால் நூல் விபரப் பட்டிய லுக்கான சிறப்பம்சங்களைப் பெரிதும் கருத்தில் கொள்வதில்லை. மிகக் குறைந்தளவிலான நூல்விபரத் தரவுகளை மட்டுமே இவை கொண்டுள்ளதுடன் குறிப்புரைகள் எதுவும் உள்ளடக்கப்படுவதில்லை. இவை தேசிய அளவில் வெளியீடுகளை உள்ளடக்கு வதாகக் கூறப்படினும் பெரும்பாலானவை சாதாரண மாக நூல் வர்த்தக வழிமுறைகளினூடாகப் பெறப்படக் கூடிய நூல்கள், சிறுநூல்களை மட்டுமே உள்ளடக்கு கின்றன. எனவே சிறிய நூலகங்களுக்கே இத்தகைய நூல்விபரப்பட்டியல்கள் சிறந்தவை. சிறப்பு நூலகங் களைப் பொறுத்த வரை இவை உகந்தவையல்ல.

Trade Bibliographies
USA

Bowker publications
- **Publishers' Weekly**
- **Weekly record**
- **American books publishing record**
- **Forth coming books**
- **Subject guide to following books**
- **Publishers trade list annual**
- **Books in Print**
- **Books in print supplement**
- **Subject gude to books in print**
- **Paper bound books in print**
- **LC Catalogues**

State publications
- **Monthly checklist of state publications**
- **Monthly catalog of US Govt. publications**
- **Dissertation Abstracts International**
- **Vertical file index**
- **Cumulative book index**

எடுத்துக்காட்டுகள்

i. Cumulative Book Index: A World List of Books in the English Language. [New York: H.W.Wilson, 1898- Monthly]

வரலாறு: இது உலகம் முழுவதிலும் வெளியிடப்படுகின்ற அனைத்துப் பொருட்துறைகள் சார்ந்த ஆங்கில மொழி நூல்களின் விபரங்களை உள்ளடக்குகின்ற வியாபார நூல்விபரப் பட்டியலாகும். அத்துடன் ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப்படும் ஆங்கில மொழியில் இல்லாத நூல்களையும் இது உள்ளடக்குகின்றது. ஆகஸ்ட் மாதம் தவிர வருடாந்த ரீதியில் தொகுக்கப்படும் ஒரு மாத வெளியீடாகும். தற்போது தரவுத்தளத்தில் இதனைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

உள்ளடக்கம்: ஒவ்வொரு வருடமும் 50,000 - 60,000 பதிவுகள் சொல்லடைவுபடுத்தப்படு கின்றன. அந்நிய மொழி அகராதிகள், இலக்கண நூல்கள், வாசிப்பு நூல்கள், பழம்பெரும் இலக்கியங்களுக்கான பதிப்புகள் என்பவை ஏதோ ஒரு வகையில் ஆங்கில மொழியை உள்ளடக்கியிருப்பின் அவையும் உள்ளடக்கப்படுகின்றன. அரச ஆவணங்கள், சிறு நூல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படங்கள், இசையாக்கங்கள், 500 பிரதிகளுக்குக் குறைவாக அச்சிடப்படும் பதிப்புகள், உள்ளூர் வழிகாட்டிகள், நாளிதழ்கள் போன்றவை உள்ளடக்கப்படுவதில்லை.

ஒழுங்கமைப்பு: இவற்றிலுள்ள பதிவுகள் காங்கிரஸ் நூலக பகுப்பாக்க எண்களினடிப் படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஆசிரிய தலைப்பு தொடர் போன்ற அனைத்து அம்சங்களும் ஒரே அகரவரிசை ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

Cumulative Book Index Database

இத்தரவுத்தளமானது வருடாந்தம் 61,800 பதிவுகளை உள்ளடக்குகின்றது. 1982ம் ஆண்டு தொடக்கம் இன்றுள்ள வரையான தகவல்களை இத் தரவுத்தளம் கொண்டிருப்பதுடன் காலாண்டு ரீதியில் இது புதுப்பிக்கப்படுகின்றது. வளர்ந்தோர், இளையோர் இருவருக்குமான புனைகதை நூல்களும், புனை கதையற்ற நூல்களும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், பதிப்பாசிரியரின் முழுப் பெயர், தலைப்பு, உப தலைப்பு, விளக்கப்பட உருவாக்குனர், மொழிபெயர்ப்பாளர், தொகுப்பாளர், பதிப்பு, தொடர் விபரம், நூலின் அளவு, பக்கங்கள், விளக்கப்படங்கள், நூலின் கட்டு, விலை, வெளியீட்டிடம், வெளியீட்டாளர், திகதி, விநியோகஸ்தர், ISBN, ISSN, காங்கிரஸ் நூலகக் கட்டுப்பாட்டு எண் ஆகிய விபரங்களை உள்ளடக்குகின்றது.

ii. Book Review Digest [New York: H.W.Wilson, 1908- Monthly]

ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் பெரிய பிரித்தானியாவில் வெளியிடப்படுகின்ற 90 தலையாய நூல் மீளாய்வுப் பருவ இதழ்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 125,000க்கும் அதிகமான மீளாய்வுகளை இது கொண்டுள்ளது. இதன் இணையத் தளமானது 1983ம் ஆண்டு வரையான மீளாய்வுகளை உள்ளடக்குகின்றது.

இணையத் தளத்தில் வார அடிப்படையிலும், இறுவட்டுக்களில் காலாண்டு அடிப் படையிலும் தகவல்கள் புதுப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், பதிப்பு, வெளியீட்டாளர் பெயர், திகதி, விலை போன்ற விபரங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் சுருக்கப்பட்ட தூயி தசமப் பகுப்புத் திட்டத்தின் அடிப்படையிலான வகுப்பெண், பொருட் தலைப்புகள், ISBN இலக்கம், காங்கிரஸ் நூலக எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. www.hwwilson.com

iii. Bookwise CD ROM [London:Book Data ltd]

வரலாறு: ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் வெளியிடப்படுகின்ற அல்லது விநியோகிக் கப்படுகின்ற 1.8 மில்லியன்களுக்கும் மேலான ஆங்கில நூல்களுக்கான நூல்விபரத் தரவுகளையும் பொருளடக்க விபரங்களையும் வழங்குகின்ற ஐக்கிய இராச்சியத்தின் புகழ் பெற்ற நிறுவனமான Book Data நிறுவனத்தின் சேவையாக இது உள்ளது.

உள்ளடக்கம்: அச்சிலுள்ள நூல்கள் மட்டுமன்றி அச்சிலில்லாத நூல்களின் விபரங்களையும் ஒரு வருடத்திற்குள் வெளியிடப்படவிருக்கின்ற நூல்களின் விபரங்களையும் இது உள்ளடக்கி யிருக்கிறது. அத்துடன் சீடிரோம், ஒலி, ஒளிப் பதிவுகள் போன்ற வெளியீடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் இதிலுள்ள தகவல்கள் புதுப்பிக்கப்படுகின்றன. தேவைப்படின் 24 மணி நேரங்களுக்குள் இதிலுள்ள விபரங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய இராச்சியத்தினதும் அயர்லாந்தினதும் பிரதான மொத்த விற்பனையாளர்களின் இருப்பு விபரங்களைக் கொண்டமைந்துள்ளது. இதைவிட ஐக்கிய இராச்சியத்தினதும் அயர்லாந்தினதும் வெளியீட்டாளர்களின் விபரங்களைத் தேடிப் பெறுவதற்கான தரவுத்தளத்தையும் இது கொண்டிருக்கிறது.

ஒழுங்கமைப்பு: இந்தத் தரவுத்தளமானது வெளியீட்டாளரின் பெயர், முகவரி, தொலைபேசி எண், தொலைநகல் எண், தாய் நிறுவனம், வெளியீட்டிடம், விநியோகஸ்தர் அதன் அமைவிடம், ISBN, இணையத்தள முகவரி போன்ற விபரங்களை உள்ளடக்கியுள்ளது. இது மாதாந்த, இருமாத, காலாண்டு, அரையாண்டு அடிப்படையிலான சந்தா வசதியையும் கொண்டிருக்கிறது.

iv. Indian Books in Print (New Delhi: Indian Biliographies Bureau, 1967 -)



வரலாறு: ஆங்கில மொழியில் வெளிவரும் இந்திய நூல்களின் விபரங்களைக் கொண்ட நம்பகரமான நூல் தெரிவுக் கருவியாக இது கருதப்படுகிறது. 1952-1967 காலப்பகுதியை உள்ளடக்கிய முதலாவது பதிப்பானது 1967க்குப் பின்னர் புதுவடிவில் தயாரானது. இப்பட்டியலுக்கான தரவுத்தளமானது நூல்விபரத் தகவல்களின் சேர்ப்பு, அளிப்பு, மீளாய்வு, திருத்தம் போன்ற செயற்பாடுகள் மூலம் புதுப்பிக்கப்படுவதுடன் நூலகர்கள், ஆவணவாக்கவியலாளர், வெளியீட்டாளர்கள், தகவல் அறிவியலாளர், ஆராய்ச்சியாளர்கள், நூல் விற்பனையாளர், பதிப்பாசிரியர் போன்றோருக்கு காலத்தால் பிந்திய நூல்விபர தகவல்களை பெறுவதற்கான பூரணத்துவம் வாய்ந்த மூலமாக மாறியுள்ளது. நூல்களின் தற்போதய விலையும் கிடைக்கக்கூடிய தன்மையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இணையத்தளத் தகவலின் படி இதன் ஆகப் பிந்திய பதிப்பானது 2003இற்குரியது என்பதுடன் இப் பதிப்பானது Sher singh and Bhawna singh ஆகியோரால் பதிப்பிக்கப்பட்டு 3 தொகுதிகளாக 3552 பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது.

உள்ளடக்கம்: ஆங்கில மொழியில் வெளியாகும் அனைத்து நூல்களும் இதில் உள்ளடக்கப்படுகின்றன. 2003ம் ஆண்டு யூன் வரையும் கிட்டத்தட்ட 3,75,000 பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. சிறுநூல்கள், பருவஇதழ்கள், நாட்காட்டிகள், குறுங்கால நூல்கள், தேசப்படங்கள், நுண் வடிவங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வெளியீடுகள் போன்றவை சேர்க்கப்படுவதில்லை.

ஒழுங்கமைப்பு: இப்பதிப்பானது மூன்று தொகுதிகளைக் கொண்டது. ஆசிரிய தலைப்புப் பதிவுகள் அகரவரிசையிலும் பொருட்பதிவுகள் தூயிதசம பகுப்பு திட்டத்தினதும் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுதியின் இறுதியில் இந்திய வெளியீட்டாளர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் உண்டு. கிட்டத்தட்ட 2300 வெளியீட்டாளர்களிடமிருந்து தனிப்பட்ட கூட்டு ஆசிரியர்களின் பதிவுக்கு பகுப்பாய்வு பட்டியல் விதி (ccc) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரிய சொல்லடைவு, தனிப்பட்ட ஆசிரியர், கூட்டாசிரியர், நிறுவனம், பதிப்பாசிரியர், இணைப் பதிப்பாசிரியர், மொழி பெயர்ப்பாளர், தொகுப்பாளர் என்பவற்றைக் கொண்டுள்ளது. தலைப்பு சொல்லடைவு அகரவரிசையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் சுருக்கங்களின் பதிவுகள் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வழிகாட்டியானது தூயிதசம வகுப்பின் அடிப்படையில் பொருள்வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு பொருளின்கீழும் ஆசிரியரின்கீழ் அகரவரிசையில் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவும் வகுப்பெண், ஆசிரியர், இணையாசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், முழுத் தலைப்பு, பதிப்பு, வெளியீட்டு விபரம் பக்கங்கள், விலை போன்றவற்றைக் கொண்டுள்ளன. தொடர்புகளுக்கு: Vedams eBooks (P) Ltd. Vardhaman Charve Plaza IV, Building # 9, K.P Block, Pitampura, New Delhi 110 034, India Fax: 91-11-27310613 e-mail: vedams@vedamsbooks.com

12 795

v. British Books in Print. [The Reference Catalogue of Current Literature - 1982, 2vols. Edited by J;Whitaker. London:Whitaker,1867- irregular]



வரலாறு: ஐக்கிய இராச்சியத்தில் வெளியாகும் ஆங்கில நூல்களை மட்டுமன்றி உலகம் முழுவதும் வெளியாகி ஐக்கிய இராச்சியத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஆங்கில நூல்களையும் உள்ளடக்கும் ஒரு வெளியீடாக இது உள்ளது. உலகப் புகழ்பெற்ற Whitaker Almanac என்ற ஐந்தொகுதியை உருவாக்கியவரான Whitaker ஆல் 1874 ம் ஆண்டில் Reference Catalogue of Current Literature என்ற பெயரில் பிரித்தானிய வெளியீடுகளின் பட்டியல் உருவாக்கப்பட்டது. 1967 தொடக்கம் இது வருடாந்த வெளியீடாக மாறி 1971இல் இருந்து கணினிமயப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதில் உள்ளடக்கப்படும் தரவுகள் அனைத்தும் நூல் வெளியீட்டாளர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்டவையாகும். உள்வாங்கப்படும் ஒவ்வொரு புதிய தலைப்பும் பதிப்புக்குழுவின் தீவிர பரிசீலனைக்குப் பின்பே தரவுத்தளத்தில் பதியப்படுகின்றது.

உள்ளடக்கம்: ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்படும் நூல்கள், கேட்பொலிப் பதிவுகள் சீடிகள் அனைத்தும் இதில் உள்ளடக்கப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத்துக்கு வெளியே வெளியிடப்படும் எந்த நூலும் அது ஆங்கில மொழியில் எழுதப்பட்டதாக இருந்து ஐக்கிய இராச்சியத்தில் கிடைக்கக்கூடியதாக இருப்பின் இந்தப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. பொதுசன ஆர்வத்தை பெறுகின்ற அரச ஆவணங்கள் வெளியீட்டாளர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய தேசப்படத் தொகுதிகள், இதில் உள்ளடக்கப்படுகின்றன. பருவ இதழ்கள், தொடர் வெளியீடுகள், மட்டுப்படுத்தப்பட்ட வெளியீடுகள், சந்தாவுக்கென மட்டும் வெளியிடப்படும் வெளியீடுகள் இதில் உள்ளடக்கப்படுவதில்லை. கிட்டத்தட்ட 100 வருடங்களாக இந் நூலானது ஆசிரிய தலைப்பு பொருள் பட்டியலை உள்ளடக்கியிருந்தது. கணினிமயப்படுத்தப்பட்ட பின்னர் இதிலுள்ள மொத்தப் பதிவுகளை கணக்கிடுவது சாத்தியமாக உள்ளது. 1ம் பதிப்பிலிருந்து (1874) 82ம் ஆண்டுவரை 9470 வெளியீட்டாளர்களின் 347487 தலைப்புக்கள் பதியப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: ஆசிரியர் தலைப்பு, பொருள் சார்ந்த பதிவுகள் அனைத்தும் ஒரே அகரவரிசை ஒழுங்கில் ஒன்றாக தொகுக்கப்பட்டுள்ளன. ஆசிரிய தலைப்பு பதிவுகளில் ஆசிரிய தலைப்பு முதலிலும் தலைப்புப் பதிப்பு அதற்கு அடுத்ததாகவும் பதியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பதிவும் ஆசிரியர் தலைப்பு, உபதலைப்பு, தொகுதி அல்லது பகுதி எண், அளவு, பக்கங்கள், பதிப்பு விபரம், தொடர், நூல்கட்டின் வகை, விலை, வெளியீட்டு விபரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN என்பவற்றை கொண்டுள்ளதுடன் ஆசிரிய பதிவாகஉள்ள பிரதான பதிவு தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ளது. தலைப்புப் பதிவுக்கு சொல்லொழுங்கு பின்பற்றப்பட்டுள்ளது. நூலின் ஆரம்பப்பக்கங்களில் இந் நூலைப் பயன்படுத்துவது எவ்வாறு, நூலின் அளவுகளும் சுருக்க விளக்க அட்டவணைகளும் வெளியீட்டாளர், பட்டியல் ISBN பற்றிய தகவல்கள் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொடர்புகளுக்கு: J. Whitaker & Sons Ltd., Colin Bethell, Library Sector Manager Woolmead House West, Bear Lane Farnham, Surrey GU9 7LG, England Telephone: (44) 01252 742529 Fax: (44) 01252 742 501 E-Mail: colin. bethell@whitaker.co.uk

vi. BOOKS IN PRINT [New York: Bowker,1948-, Annual]

வரலாறு: 50 வருடங்களுக்கும் மேலாக நூலகங்களுக்கும் நூல் வர்த்தக சமூகங்களுக்கும் அவசியமான முக்கிய நூல் விபரக் கருவியாக இது தொழிற்படுகின்றது. வேறு எந்தவொரு ஆக்கமும் இதற்கு இணையாகாது என American Reference Book Annual இதற்கு மகுடம் சூட்டியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள 5500க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்களிடம் அச்சில் உள்ள இனி வெளிவரப்போகின்ற நூல்கள் அனைத்தினதும் விபரங்களைக் கொண்ட ஓர் ஆண்டு வெளியீடு இதுவாகும். இது R.R.Bowker இன் நூல்விபர தகவல் வெளியீட்டுத் (Bibliographic Information Pubticalion System) தரவுத்தளத்திலிருந்து தயாரிக்கப்படுகின்ற ஒரு வெளியீடாகும். காந்த நாடாக்களில் சேமிக்கப்படுகின்ற பதிவேடுகள் கணினிச் செய் நிரல்கள் மூலம் பதிப்பிக்கப்பட்டு கணினிக் கட்டுப்பாட்டு கோப்பு முறையின்மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றது.

உள்ளடக்கம்: 2005 ஆகஸ்ட்டில் வெளியிடப்பட்ட 2005 - 2006 இற்குரிய பதிப்பானது முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டு ஐக்கிய அமெரிக்காவில் தற்போது வெளியிடப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கும் 1,868,000 செயற்படு தலைப்புகளையும் 2,500,000 செயற்படு சர்வதேச தராதர நூல்விபர எண்களையும் உள்ளடக்கியுள்ளது. இதில் 1,6800 புதிய தலைப்பு களும் 308,000 புதிய சர்வதேச தராதர நூல்விபர எண்களும் சேர்த்துக்கொள்ளப்பட் டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இப்பதிப்பானது எட்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது. முதல் ஐந்து தொகுதிகளும் அகரவரிசையில் ஒழுங்கு செய்யப்பட்ட தலைப்புச் சொல்லடைவைக் கொண்டுள்ளன. அடுத்த மூன்று தொகுதிகளும் அகரவரிசையில் ஒழுங்குசெய்யப்பட்ட ஆசிரிய சொல்லடைவைக் கொண்டுள்ளன. தொகுதி எட்டில் முதல் ஏழு தொகுதிகளிலும் பதிவுசெய்யப்பட்ட 76,000 நூல்களின் வெளியீட்டாளர்களின் விபரங்களைக் கொண்டுள்ள துடன் இதற்கான சொல்லடைவையும் கொண்டுள்ளது.

சொல்லடைவுப் பதிவுகள் சொல்லொழுங்கின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன், இத்தாலி, ஸ்பானிய மொழிகளிலுள்ள ஆரம்ப எழுத்துக் கள் (A, An, The) தவிர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், இணையாசிரியர், பதிப்பாசிரியர், துணைப்பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், இணை மொழி பெயர்ப்பாளர், தலைப்பு, தொகுதி எண், பதிப்பு, காங்கிரஸ் நூலக எண், தொடர், தகவல், பக்க எண், மொழி, விளக்கப்பட விபரம், வெளியீட்டு வருடம், நூல் கட்டின் தன்மை, விலை, ISBN வெளியீட்டாளர், கொள்வனவுக் கட்டளை எண், வெளியீட்டாளர் பெயர், வெளியீட்டு இடம், முதலிய தரவுகளைக் கொண்டுள்ளது. 5 என்ற குறியீட்டால் காட்டப்படும் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக இந் நூலில் சேர்க்கப்படும் நூல்களின் விபரத்தைக் குறிக்கிறது. தொழில்சார் சட்ட நூல் வெளியீடுகள், சந்தா நூல்கள், போன்றவை இந்நூலில் சேர்க்கப்படுவதில்லை. தொடர்புகளுக்கு: ISBN- 10: 0-8352-4732-5 ISBN -13: 978-0-8352-4732-0 Price: $859.00

http://www.booksinprint.com

இத்தளமானது Books in Print என்ற பெயரில் R.R.BOWKER என்பவரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நூல்கள் Audio Vidio போன்ற தகவல் சாதனங்களை அச்சிலிருப்பவை, கிடைத்தற் கரியவை, இனி அச்சிடப்படவுள்ளவை என்ற 3 வகையில் தேடல் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. பொதுவான பாடரீதியான தேடல் வசதியும் ஆசிரியர் தலைப்பு வெளியீட்டாளர் முதலிய பல்வேறு வகையான சொல்லடைவுத் தேடலிற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் நடைபெறும் முக்கிய நூல் கண்காட்சிகள் குறித்த விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

vii. British Book News [London:British Council,1940- Monthly]



வரலாறு: பொதுநலவாய நாடுகளிலும் பிரித்தானியாவிலும் வெளியிடப்படும் நூல்களின் விபரங்களை அறிய உதவுகின்ற ஒரு முக்கிய நூல் தேர்வுக் கருவியாகும். இவ் வெளியீடானது தேர்ந்தெடுக்கப்பட்ட தரம் வாய்ந்த நூல்களின் விபரங்களைக் கொண்டுள்ளது. கிட்டத் தட்ட 250 நூல்களின் விமர்சனங்களை ஒவ்வொரு இதழும் உள்ளடக்குகிறது. அவற்றின் பதிவுகள் பகுப்பாக்க முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவும் ஆசிரியர் பெயர், தலைப்பு, தொடர், பக்க விபரம், பதிப்பு விபரம், விலை போன்ற விபரங்களைத் தருகிறது.

viii. Time Literary Supplement [London:The Times Daily News Paper,1902- Weekly]

பிரித்தானியாவில் வெளியிடப்படும் சமூக விஞ்ஞானம் மனிதப் பண்பியல் தொடர்பான நூல்களின் விமர்சனங்களை உள்ளடக்கிய ஒரு நூல் தேர்வுக்கருவியாக கருதப்படுகிறது. இது செய்தித்தாள் வடிவிலமைந்த ஒரு வார வெளியீடாகும். இதில் உள்ளடக்கப்படும் விமர்சனங்கள் சிலசமயம் இரு பக்கங்களையும் தாண்டுவதுண்டு.

ix. Aslib Book List [London:Aslib, 1935- Monthly]

தொழினுட்பம் அறிவியல் தொடர்பான பொருட்துறைகளை உள்ளடக்கிய நூல்களின் விபரங்களைத் தருகின்ற ஒரு மாதாந்த வெளியீடாகும். இது பகுப்பாக்க ஒழுங்கில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

x. The Library of Congress Accession List: South Asia –1996. [New Delhi:Library of Congress Office, 1981- vol.1- monthly]

வரலாறு: இந்தியா, இஸ்லாமபாத், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் நூலகத்தின் அலுவலகங்களினால் வாங்கப்பட்டு பட்டியல்படுத்தப்படும் அனைத்து வெளியீடுகளையும் உள்ளடக்கும் மாத வெளியீடு இதுவாகும். இங்கு பெறப்படும் வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீடுகள் அனைத்தும் காங்கிரஸ் நூலகத்துக்கும், கூட்டுறவு ரீதியிலான நூலீட்டல் செயற்திட்டத்தில் பங்கு பற்றும் ஏனைய வட அமெரிக்க ஆய்வு நூலகங்களுக்கும் பகிரப்படுகிறது.

உள்ளடக்கம்: இப் பட்டியலில் தனிப்பொருள் நூல்கள், தொடர் வெளியீடுகள், கட்புல செவிப்புல பதிவுகள், தேசப்படங்கள், போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தான், பங்களா தேஷ், பூட்டன், பர்மா, கம்போடியா, இந்தியா, லாவோஸ், மலேசியா, மாலை தீவுகள், மொங்கோலியா, நேபாளம், பாகிஸ்தான், சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, திபெத் மொழிகளிலுள்ள வெளியீடுகளை உள்ளடக்கியுள்ளது. தொகுதி 1-16 வரையான வெளியீடுகள் நுண் தாள்களில் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

ஒழுங்கமைப்பு: முதலாவது பகுதியில் தனிப்பொருள் நூல்களும், தொடர் வெளியீடுகளும் ஒவ்வொரு மொழியின் கீழும் நாடுகள் வாரியாக அகரவரிசை ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. இரண்டாவது பகுதி ஏனைய சாதனங்களை உள்ளடக்கியுள்ளது. டிசம்பர் இதழில் வருடாந்த தொகுப்புச் சொல்லடைவு உள்ளடக்கப்படுகிறது. தனிப்பொருள் நூல்களுக்கும், பெரும்பாலான தொடர் வெளியீடுகளுக்குமான நூல்விபரப் பதிவுகள் காங்கிரஸ் நூலகத்தின் தரவுத் தளத்தில் சேமிக்கப்படுகிறது.

நூல்விபரப்பட்டியல் தளங்கள் [Bibliography Sites]

www.amazon.com

வரலாறு: அமெரிக்காவின் வோசிங்ரன் நகரிலுள்ள இலத்திரனியல் வர்த்தகக் கம்பனியாக அறியப்படும் இது இணையம் மூலம் தகவல் வளங்களைக் கொள்வனவு செய்வதற்கான பிரதான கம்பனிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. 1994இல் Jeff Bezos என்பவரால் உருவாக்கப்பட்ட இது 1995இல் முதன்முதலாக கணினி நேர்முக வடிவிற்கு மாற்றப் பட்டது.

Compete.com இன் கருத்துக்கணிப்பின் படி 2008இல் உலகம் முழுவதிலும் 615 மில்லியன் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ள இணையத்தளமாக இது கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: ஆரம்பத்தில் கணினிநேர்முக புத்தகக் களஞ்சியமாக மட்டுமே தொடங்கப் பட்ட இது விரைவில் VHS, DVD, CDs, MP3 Format, கணனி கணிமம் வீடியோ விளை யாட்டுகள், இலத்திரனியல் உபகரணங்கள், தளபாடங்கள், விளையாட்டுப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றுக்கும் பிரசித்தி பெற்ற ஒன்றாக மாறிவிட்டது. கனடா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, இத்தாலி, யப்பான் போன்ற நாடுகளில் தனித்தனியான இணையத்தளங்களை உருவாக்கியுள்ள இது குறிப்பிட்ட நாடுகளுக்கு கப்பல் போக்குவரத்தினூடாக தனது பொருட்களை உலகளாவிய ரீதியில் அனுப்பும் வசதி செய் திருக்கிறது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு பொருளுக்குமான தமது கருத்தை பாவனையாளர் அனுப்பக்கூடிய வகையில் இணையத்தளத்தை வடிவமைத்திருப்பது இதன் பிரசித்தி பெற்ற அம்சமாகக கருதப்படுகின்றது. தமது மதிப்பீட்டின்படி ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு ஸ்ரார் புள்ளியி லிருந்து ஐந்து ஸ்ரார் புள்ளி வரைக்குமான வாசகரது மதிப்பீட்டு அளவையையும் இது உள்ள டக்குகின்றது. இத்தகைய மதிப்பீட்டு அளவைத் திட்டமானது மக்கள் மத்தியில் குறிப்பிட்ட ஒரு பொருளின் செல்வாக்கை அளவிட உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களின் உள்ளே தேடுதல் (Search Inside the Book) என்பது இதன் முழுமையான பட்டியலில் உள்ளடங்கிய முழு நூல்களுக்குமான மூலச்சொற்களை பாவனையாளர் தேடுவதற்கான வாய்ப்பை வழங்குகின்ற இன்னொரு பிரதான சிறப்பம்சமாகும். 2003 ஒக்ரோபர் மாதம் 23ம் திகதியில் 33 மில்லியன் பக்கங்கள் அல்லது 1,20,000 தலைப்புகளுடன் தொடக்கப்பட்ட மூலச் சொற்களின் அடிப்படையிலான தேடுதல் வசதியானது தற்போது 2,50,000 நூல்கள் உள்ளடக்கப்பட்ட திட்டமாக வளர்ந்துள்ளது. இந்தத் தேடுகையை மேற் கொள்ளுவதற்கு உதவுமுகமாக கிட்டத்தட்ட 130 வெளியீட்டாளர்களுடன் இது இணைந்து பணிபுரிகிறது.

http://www.abebooks.com

இத்தளமானது வெளியீட்டாளர் பட்டியலைக் கொண்டுள்ளது. 13500 நூல் விற்பனையாளர்களின் 80 மில்லியன் நூல்களின் விபரத்தரவுகள் இத்தளத்தில் உள்ளன. ஆசிரியர், தலைப்பு, திறவுச் சொல் ISBN ஆகியவற்றின் அடிப்படையில் தேடல் மேற்கொள்ளலாம். நூல்களை online அடிப்படையில் வழங்கற் கட்டளை, கொடுப்பனவு, தெரிவு முறை மற்றும் அண்மைக்கால வெளியீடு, மிகச் சிறந்த வெளியீடுகள் ஆகியவற்றின் பட்டியலும் பெறக்கூடியதாக வுள்ளது.

http://www.hwwilson.com

H.W.wilson company வெளியீட்டாளர்களால் பராமரிக்கப்படும் இத்தளம் நூல் விபரச் சுட்டிகளின் பட்டியல்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. நூல் விபரத்தரவுகள். நூல் விமர்சனங்கள், சிறுவர் நூல்கள், நூலகத்துறைசார்ந்தவை, பொது நூலகத்திற்குரியவை என பல்வேறு நூல் விபரத்தளங்களை உள்ளடக்கிய இணையத்தளமாக இது உள்ளது.

http:// www.lu.com

"Libraries Unlimited என்ற பெயர் கொண்ட Green House Publishing Group" என்ற நிறுவனத்தின் அங்கத்துவ தளம் இதுவாகும். விடய ரீதியாகவும் தொடர்ரீதியாகவும் வாசகர் ரீதியாகவும் தேடல் செய்யக் கூடிய பல நூல் விபரப்பட்டியல்களின் ஒருங்கிணைந்த தளமாக இது விளங்குகின்றது. நூல்களுக்கு துணை நிற்கும் இணையதள வழிகாட்டிகளையும் ஒருங்கிணைக்கிறது.

http:// www.ebookcult.com.

இத்தளம் Ebookcult Digital Solutions என்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகிறது. மின்னூலை வாசிப்பதற்கு தேவையான Adobe Reader மென் பொருளை இலவசமாக பதிவிறக்கம் செய்ய முடிவதுடன் மின்னூல்களுக்கான மிகச் சிறந்த விபரப்பட்டியலையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.escholarlypub.com.

இணையத்தள விபரப்பட்டியலாக அமையும் இத்தளம் இலவச அனுமதி கொண்டதாக விளங்குகிறது. இதில் நூல் விபரப்பட்டியல், நூல் விபரத்தரவுத் தளங்கள் நூல் விபர வழிகாட்டிகள் என்பன உள்ளடங்கிய விபரப்பட்டியல் காணப்படுகிறது. K.H.Adrian. and W.B.J.Charles ஆகியோரால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் இத்தளம் 2005 ஏப்ரலில் உள்ளபடியான இத்தகைய தளங்களின் ஒருங்கிணைந்த தொகுதியாக உள்ளது.

9.214 தெரிவு செய்யப்பட்ட நூல்விபரப்பட்டியல்கள் [Selective Bibliographies]

பொதுவாக பொருள்சார் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட பொருட்துறை சார்ந்த நூல்விபரப்பட்டியல்கள் இவ்வகைக்குள் அடங்கும். இவற்றை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

* வாசகரின் சிறப்புத் தேவையை பூர்த்தி செய்யுமுகமாக தகவல் அமைப்புகளினால் தொகுக்கப்படுகின்ற சிறப்பு வாசிப்புப் பட்டிகள்.
* பலதரப்பட்ட பாவனையாளரின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற சிறந்த ஆக்கங்களைக் கொண்ட நூல்கள்.
* உசாத்துணை வளங்களுக்கான வழிகாட்டிகள்.
* வில்சன் கம்பனியால் விநியோகிக்கப்படுகின்ற தரமான பட்டியல் தொடர்கள்.

9.215 தனிநபருக்கான நூல்விபரப்பட்டியல்கள் [Personal Bibliographies]

ஒரு தனிநபரின் ஆக்கங்கள் அல்லது தனிநபரைப் பற்றி மற்றவர்கள் எழுதிய ஆக்கங்களின் தொகுப்பு இவ்வகைக்குள் அடங்கும். இலக்கியத் துறையில் இத்தகைய நூல்விபரப் பட்டியல்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. குறித்த துறையின் பொருட்துறை நிபுணர்களுக்கான முக்கிய தகவல் வளமாக இவை கருதப்படுகின்றன. ஆசிரிய நூல்விபரப் பட்டியல்கள், பொருள்சார் நூல்விபரப்பட்டியல்கள் என இவை இரு வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

* ஆசிரிய நூல்விபரப்பட்டியல்கள் [Author Bibliographies]

  ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் ஆக்கங்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடப்படும் நூல்விபரப்பட்டியல்கள் இவ் வகைக்குள் அடங்கும். அவரால் எழுதப்படும் நூல்கள், பருவ இதழ்க் கட்டுரைகள், நூல்களுக்கு அவர் ஆற்றும் பங்களிப்புகள், அவரால் பதிப்பிக்கப்பட்ட ஆவணங்கள், மொழிபெயர்ப்புகள், தகவல்கள் அனைத்தையும் இது உள்ளடக்கும். சிலசமயங்களில் ஆசிரிய நூல் விபரப்பட்டியல்கள் சுய நூல் விபரப்பட்டியல்கள் என அழைக்கப்படுவதும் உண்டு. பெரும்பாலான ஆசிரிய நூல்விபரப்பட்டியல்கள் சுருக்கமான தகவல்களைக் கொண்டிருப்பினும் கூட விபரமான முறையில் தொகுக்கப்படும் நூல் விபரப் பட்டியலானது பூரணமானதும் சரியானது மான ஒரு பாடத் துறையை இனங் காணுவதற்கு உதவும்.

* பொருள்சார் நூல்விபரப்பட்டியல்கள் [Subject Bibliographies]

  ஒரு தனிநபரைப்பற்றி செய்யப்படும் ஆய்வுகள் அனைத்தையும் உள்ளடக்கிய தொகுப்பு பொருள்சார் நூல்விபரப் பட்டியல்கள் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

9.216 நூல் ஆர்வலர் நூல்விபரப்பட்டியல்கள் [Bibliophilic Bibliographies]

நூல்களை மிக நேசிக்கின்ற அல்லது நூல்களைச் சேகரிக்கின்ற நபர் நூல்ஆர்வலர் எனப்படுவர். நூல்களின் கலைத்துவம், நூல்கட்டு, பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள், விளக்கப்படங்கள் போன்ற பௌதிகத் தன்மையின் சில தனித்துவங்களை இனங் கண்டோ அல்லது முதலாவது பதிப்புகளின் தொகுப்பு, பருவ இதழ்களின் முதலாவது இதழ்களின் தொகுப்பு போன்ற நூலின் உள்ளடக்கத்தின் ஒற்றுமைத் தன்மையின் அடிப் படையிலோ இவர்களின் சேகரிப்பு இருக்கக் கூடும் என்பதனால் இத்தகைய நூல்விபரப்பட்டியல்கள் பாதுகாக்கப்படக்கூடிய தகவல் வளங்களாக இனங்காணப்பட்டிருக்கின்றன.

9.217 ஆய்வுக்கட்டுரைகளுக்கான நூல்விபரப் பட்டியல்கள் [Bibliographies of Theses/ Dissertations]

ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களுக்கான மிக முக்கிய தகவல் வளங்களாக கருதப்படுவதனால் இவற்றுக்கான நூல்விபரக் கட்டுப்பாட்டில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. பல நாடுகள் தமது நாட்டில் செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளுக்கான தொகுப்புகளை வெளிக் கொணர்ந்திருக்கின்றன. பொதுவாகப் பல்கலைக்கழகங்கள் தமது ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுகின்றன. சில சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் சேவைகள் தமது வெளியீடுகளில் ஆய்வுக்கட்டுரைகளையும் உள்ளடக்குகின்றன. Dissertation Abstract International என்ற ஆய்வுக்கட்டுரைகளுக்கான சாராம்சம் என்ற வெளியீடானது எத்துறை சார்ந்த ஆய்வாளர்களும் பார்க்க வேண்டிய ஒரு தகவல் வளமாகும்.

9.218 கூட்டிணைப்புப் பட்டியல்கள் [Union Catalogues]

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நூலகங்களின் தகவல் வளத் தொகுதிகளை முழுமை யாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தொகுத்து வெளியிடப்படும் வெளியீடு இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. தொகுப்பில் உள்ளடக்கும் பிரதேசங்களின் அடிப்படையில் இவை உள்ளூர் சார்ந்தவை, பிரதேச ரீதியானவை, தேசிய ரீதியிலானவை என வகைப்படுத்தப்படுகின்றன. பட்டியல் தொகுப்பில் இவை உள்ளடக்கும் தகவல் வளங்களின் தன்மையின் அடிப்படையில் பருவ இதழ்களுக்கான கூட்டிணைப்புப் பட்டியல், நூலுருவற்ற சாதனங்களுக்கான கூட்டிணைப்புப்பட்டியல் என இவை வகைப்படுத்தப் படுகின்றன. இவற்றின் தொழிற்பாடுகளாக பின்வருவனவற்றைக் கருத முடியும்:

* ஆவணத்தின் அமைவிடத்தைக் கண்டுபிடிப்பதற்கான கருவியாகத் தொழிற்படல்.
* ஓர் ஆவணத்தின் நூல்விபரத் தரவுகளை அறிந்து கொள்ள உதவுதல்.
* தகவல் அமைப்புகளுக்கிடையிலான தகவல் வள இரவல் வழங்கும் திட்டத்துக்கு உதவுதல்.
* தகவல் வளங்களைத் தெரிவு செய்வதற்கான கருவியாகத் தொழிற்படல்.
* நூலகங்களுக்கிடையில் கூட்டுறவு முறையிலான தகவல் வள ஈட்டல் தெரிவு செயற்திட்டங்களை அடைவதற்கு உதவுதல்.
* ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் உள்ள தகவல் அமைப்புகளின் மொத்த தகவல் வளத் தொகுதியை இனங்கண்டு அவற்றின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து கொள்ள உதவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.219 **பருவ இதழ்ப் பட்டிகள்** [Periodical Lists]

ஆய்வுகளை வெளிக்கொணரும் முக்கிய தகவல் வளங்களாக கருதப்படும் பருவ இதழ்கள் புலமைசார் தொடர்பாடலுக்கான ஆதாரமாக இருப்பவை. இவற்றின் வெளியீட்டில் ஏற்பட்டுள்ள அபரிமித வளர்ச்சி காரணமாக இவற்றின் நூல்விபரக் கட்டுப்பாடு என்பது மிக கடினமானதாக உணரப்பட்டுள்ளது. எனவே நிறுவன ரீதியாகவோ, பொருட்துறை சார்ந்தோ இவற்றின் தொகுப்பு பல தகவல் அமைப்புகளின் முக்கிய செயற்பாடாக மாறியுள்ளது.

எடுத்துக்காட்டுகள்:

ULRICH'S International Periodical Directory. [New York: Bowker, 1932- Annual]

வரலாறு: பருவ வெளியீடுகளுக்கான நூலகர்களின் அருகில் எப்போதும் இருக்க வேண்டிய உசாத்துணைக் கருவியாக இது கொள்ளப்படுகின்றது. கிட்டத்தட்ட 65 வருடங்களாக வேறு எந்த வழிகாட்டிகளும் தராத அனுகுகைப் புள்ளிகளையும் சொல்லடைவுகளையும் வழங்கும் இவ் வழிகாட்டி தொழிற்றிறன் சார்ந்தவர்களின் தேர்வாக அமைகிறது. 2006ம் ஆண்டுக்குரிய இதனது 44வது பதிப்பானது 2005 நவம்பரில் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: தற்காலத்தில் விற்பனையில் உள்ள ஒழுங்கான கால இடைவெளியில் வெளி வருகின்ற, தொடர் வெளியீடுகள் என்ற வரையறைக்குள் உள்ளடங்கும் அனைத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வர்த்தக ரீதியிலான சஞ்சிகைகள் கல்விசார், புலமைத்துவ பருவ இதழ்கள், பொருட்துறை நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்ட தலைப்புகள், தனிப் பொருள் நூல்களுக்கான தொடர்கள், செய்தித்தாள்கள், செய்திக் கடிதங்கள், இலத்திரனியல் வெளி யீடுகள், ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகள் என்பவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரச நிறுவனங்களின் நிர்வாக வெளியீடுகள், நகைச்சுவை நூல்கள், புதிர்கள், விளையாட்டு நூல்கள் என்பன சிறு அளவில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் மட்டும் கிட்டத்தட்ட 1,86,100 பருவ இதழ்கள் 897 பொருட் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப் பட்டுள்ளன. இதில் 9600 பருவஇதழ்கள் புதியவை. 3,320 பருவ இதழ்கள் வெளியீடு நிறுத்தப்பட்டவை. சீடிரோமில் வெளியிடப் பட்ட 6000 தொடர் வெளியீடுகள், கணினியில் பார்க்கக்கூடிய 36,000இற்கும் மேற்பட்ட பருவ இதழ்கள், 5000இற்கும் மேற்பட்ட நாளாந்த வார செய்தித்தாள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 21,000இற்கும் மேற்பட்ட தொடர் வெளியீடுகளுக்கான குறியீடுகளையும் கிட்டத்தட்ட 82,800 சுருக்க விவரணங்களையும், 39,810 காங்கிரஸ் நூலக வகுப்பெண்களையும் இப்பதிப்பு உள்ளடக்கியுள்ளது.

ஒழுங்கமைப்பு: இதன் ஒழுங்கமைப்பு பின்வருமாறு அமைகிறது:

தொகுதி - 1 - 3 பகுப்பாக்கப் பொருட்பட்டி.

தொகுதி - 4 .....

தொகுதி - 5 சொல்லடைவுகள்

உலகம் முழுவதிலிருந்தும் வெளியாகும் கிட்டத்தட்ட 1,64,400 தொடர்வெளியீடுகள் பகுப்பாக்க ஒழுங்கில் 887 பொருட் தலைப்புகளின் கீழ் அகர ஒழுங்கில் தலைப்பு வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவுக்கும் டி.டி.சீயின் 21ம் பதிப்புக்கமைய வகுப்பெண் கொடுக்கப்பட்டுள்ளது. இடை நிறுத்தப்பட்ட தலைப்புகள் b என்ற அடையாள மிடப்பட்டுள்ளதுடன் கடந்த மூன்று வருடங்களில் கிட்டத்தட்ட 7559 தலைப்புகள் தரவுத் தளங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை u என்ற குறியீட்டினால் அடையாளமிடப்பட்டுள்ளதுடன் இனி வரப்போகும் 90 புதிய தலைப்புகளுக்கும் இந்த அடையாளமே கொடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பாவனையாளருக்கு உதவும் வகையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், ஸ்பானிஸ் ஆகிய நான்கு மொழிகளில் கருத்துப்பொருள்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பதிவும் வகுப்பெண், நாட்டுக்குரிய எண், சர்வதேச தராதர தொடரெண் (ISSN) காங்கிரஸ் நூலக வகுப்பெண், தலைப்பு, உபதலைப்பு, முதன்மைச் சொற்கள், நூல்விபர தரவு உட்பட 45 அம்சங்களை உள்ளடக்குகிறது. இந்தப் பதிப்பில் 20,935 வெளியீடுகள் On-line இலும் 4671 வெளியீடுகள் CD-ROM இலும் கிடைக்கக்கூடியதாக உள்ளன. இவை # என்று அடையாளமிடப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட சில பருவ இதழ் தளங்கள்

www.ulrichsweb.com

இத்தளமானது Ulrich பருவ இதழ் வழிகாட்டியின் இணைய வெளியீடு ஆகும். விரைவான தேடலை திறவுச் சொல் மூலம் தேடும் வசதியுடன் விடயரீதியாகவும் ஆசிரியர், விடயம், தலைப்பு, மொழி முதலிய பல்வேறு வழிமுறைகள் மூலமும் தேடல் செய்யும் வசதிகளைக் கொண்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட வாசகர்களுக்கு மாத்திரம் பயன்பாட்டு அனுமதியைக் கொண்ட இத்தளம் 1932ம் ஆண்டு முதல் வெளிவரும் Ulrich Periodicals Directory ன் மிக அண்மைக்கால தகவல்களை உடனுக்குடன் புதுப்பிப்பதுடன் அவற்றைப் பயனாளிகளுக்கும் அறிவிக்கின்றது.

200 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 130,000இற்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் 25 மில்லியனுக்கும் மேற்பட்ட தொடர்வெளியீடுகள் தொடர்பான விபரங்களை மிக விரைவாகப் பெற்றுக் கொள்ள விரும்புகின்ற நூலகர்களுக்கும் வாசகர்களுக்குமாக மிக முக்கிய தரவுத்தளமாக இது கருதப்படுகின்றது.

32,000இற்கும் மேற்பட்ட இலத்திரனியல் வளங்களை முழுமையாகப் பார்க்கக்கூடிய வகையில் தொடர்பிணைப்புகளை இது கொண்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். வர்த்தக ரீதியான சஞ்சிகைகள், கல்விசார், புலமைத்துவ பருவ இதழ்கள், பொருட்துறை நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்ட தலைப்புகள், தனிப்பொருள் நூல் சார்ந்த தொடர்கள், செய்தித்தாள்கள், செய்திக் கடிதங்கள், இலத்திரனியல் வளங்கள், ஒழுங்கான கால இடை வெளியின்றி வெளியிடப்படும் பருவ வெளியீடுகள் போன்றவை இதில் உள்ளடக்கப்படுகின்றன. இது வார அடிப்படையில் புதுப்பிக்கப்படுகின்றது.

http://www.doaj.org

இத்தளமானது இலவசமாக பார்வையிடக்கூடிய சுமார் 2800 ற்கு மேற்பட்ட மின் பருவ இதழ்களில் (E.Journals) தேடல் வசதி கொண்டுள்ளது. இப் பருவ இதழ்களை ஆங்கில அகரவரிசைப் படியாகவும் பாடரீதியாகவும் விடய ரீதியாகவும் தேடல் செய்யும் வசதி காணப்படுகின்றது. தற்போது இத்தளம் சுமார் 905 பருவ இதழ்களைக் கட்டுரைச் சுட்டி ரீதியாக தேடும் வசதி கொண்டுள்ளது. சுமார் 150000ற்கு மேற்பட்ட கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.2191 பொருள்சார் நூல்விபரப்பட்டியல்கள் [Subject Bibliographies]

குறித்த பொருட்துறை சார்ந்த வெளியீடுகளை தொகுத்து வெளியிடப்படும் நூல்விபரப்பட்டியல்கள் இப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. பொருள்சார் நூல்விபரப் பட்டியல் என்பது அனைத்துப் பொருட்துறைகளையும் உள்ளடக்கியிருப்பதற்குப் பதிலாக திடமாக வரையறை செய்யப்பட்ட ஒரு பொருட்துறை சார்ந்த ஆவணங்களின் விபரப் பட்டியல் ஆகும். இப் பொருட் துறையானது ஒரு நபராகவோ, ஒரு புவியியல் பிரதேசமாகவோ, சாதனங்களின் பௌதிக வடிவமைப்பாகவோ அதுவுமன்றி இலக்கிய வடிவமாகவோ அமையலாம். (Ranganathan 1974). நூல் விபரப்பட்டியலுக்கான பாவனையாளர் பொதுவாக ஆசிரியர் சார்ந்து தேடுகை நடத்துவதைவிட பொருட்துறை சார்ந்த தேடுதலிலேயே அதிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பர்.

பயன்பாடு

* குறிப்பிட்ட பொருட்துறையில் தயார்படுத்தப்பட்ட இலக்கியத் தேடுகைக்கு அல்லது ஆய்வுக்கு வசதி வழங்குவதன் மூலம் நேரத்தை மீதப்படுத்த உதவுதல்.
* ஓர் ஆசிரியரால் எழுதப்பட்ட அனைத்து ஆக்கங்களையும் ஓரிடத்தில் பார்ப்பதற்கு உதவுதல்.
* பரிச்சியமற்ற ஒரு துறையில் ஆய்வை மேற்கொள்ளும் ஆய்வாளருக்கு இரண்டாம் நிலைத் தகவல் வளங்களிலிருந்து முதல்நிலைத் தகவல் வளங்களுக்குச் செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளை களைய உதவுதல்.
* உசாத்துணை நூலகருக்கான மிகச் சிறந்த உதவுகருவியாகத் தொழிற்படல்.
* ஒரு சமூகத்தின் புலமைசார் வளர்ச்சியை கோடிட்டுக் காட்டும் கருவியாகத் தொழிற்படல்.

வரையறைகள்

* பொருள் சார் நூல்விபரப் பட்டியல்கள் பொதுவாக வரையறுக்கப்பட்ட வளங்களுடன் வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் உருவாக்கப்படும் ஒன்றாக இருப்பதால் இவை ஒருபோதுமே பூரணப்படுத்தப்பட்ட ஒரு வெளியீடாக கருதப்பட முடியாதவை.
* பெரும்பாலான நூல்விபரப் பட்டியல்கள் அவை வெளி வருமுன்னரேயே வழக்கற்றுப் போய்விடுகின்றன.
* பொதுவாக நூலாசிரியர்கள் சார்ந்து பெரும்பாலானோர் தாம் உசாத்துணைக்கு எடுத்துக் கொண்ட அனைத்து வளங்களையும் சரிபார்ப்பது இல்லை. எனவே நூல்விபரப் பட்டியலில் மேற்கோள்படுத்தப்பட்ட ஆவணங்களில் தவறுகள் இருப்பது சாத்தியமானது.

9.2192 தேசிய நூலகப் பட்டியல்கள் [National Library Catalogues]

அச்சிடப்பட்ட பட்டியல்கள் பொருள்ரீதியாகவோ, கால அடிப்படையிலோ, பௌதிக வடிவமைப்பிலோ, பிரதேச அடிப்படையிலோ, மொழி ரீதியாகவோ மட்டுப்படுத்தப்படுவதில்லை என்பதனால் பொது நூல் விபரப்பட்டியலாக பயன்படுத்தப்படக் கூடியவை. உலகளாவிய ரீதியில் உள்ள பிரதான தேசிய நூலகங்களினால் தொகுக்கப்படும் பட்டியல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பகத்தன்மை வாய்ந்ததுடன் மிகக் கவனமுடன் தொகுக்கப்படுபவை. காங்கிரஸ் நூலக பட்டியல்கள், பிரித்தானிய அரும் பொருளகப் பட்டியல்கள், இலங்கை தேசிய நூலகத்தின் பட்டியல்கள் போன்றன இவ்வகையில் பயன்மிக்க பட்டியல்களாகக் கருதப்படுகின்றன.

பயன்பாடு

- ✶ குறித்த காலப்பகுதியில், குறித்த நாடொன்றில் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த வெளியீடுகளின் விபரம்.
- ✶ குறிப்பிட்ட சஞ்சிகை ஒன்றின் நூல்விபரத் தரவுகள்.
- ✶ குறிப்பிட்ட நாடொன்றில் குறிப்பிட்ட மொழி சார்ந்து வெளியிடப்பட்ட வார செய்தி இதழ்கள் பற்றிய விபரம்.
- ✶ குறிப்பிட்ட நூல் வெளியீட்டாளரின் முகவரி.

எடுத்துக்காட்டுகள்

i. காங்கிரஸ் நூலகப் பட்டியல்கள்

அமெரிக்காவின் மிகப் பெரிய நூலகத்தினது பட்டியலாக இது உள்ளது. நூல்களுக்கான பதிவுகள் கூட்டு நிறுவனம் உட்பட ஆசிரியர் பெயரில் அகர ஒழுங்கிலும் பருவ இதழ்களுக்கான பதிவுகள் தலைப்பு ரீதியான அகர ஒழுங்கிலும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. பிரித்தானிய அரும்பொருளகப் பட்டியலிலும் பார்க்க இலகுவாக பயன்படுத்தப்படக் கூடியவையாக இவை உள்ளன. ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், தலைப்பு பதிப்பு விபரம், வெளியீட்டு விபரம் போன்ற அடிப்படை நூல்விபரத் தரவுகளுடன் காங்கிரஸ் நூலக பொருட் பகுப்பாக்கத்தை உள்ளடக்கியுள்ளன. காங்கிரஸ் நூலகத்தால் உருவாக்கப்பட்ட பட்டியல்களின் விபரம் வருமாறு:

1. A Catalogue of Books Represented by Library of Congress Printed Cards. 167 vols. Ann Arbor, 1942 - 46 Library of Congress Catalogues.
2. Supplement Card Issued from August 1942-1947, 42 Volumes, Ann Arbor,1948.
3. Library of Congress Author Catalogue, 1948 -1952, 24 Volumes, Ann Arbor,1955.
4. Library of Congress Author Catalogue, 1952-55, 30 Volumes, 1961.
5. Library of Congress Author Catalogue, 1958-1962, 54 Volumes,1963.
6. Library of Congress Author Catalogue, 1963-1967, 72 Volumes,1969.
7. Library of Congress Author Catalogue, 1956 -1967, Cumulation, 1970-72.

ii. பிரித்தானிய அரும்பொருளகப் பட்டியல்கள்

பிரித்தானிய நூலகத்தின் ஒரு பகுதியாக அதன் உசாத்துணைப் பகுதியாகத் தொழிற்படும் பிரித்தானிய அரும்பொருளகத்தின் பட்டியலானது உலகின் மிகப் பெரிய பட்டியலாகக் கருதப்பட முடியாதபோதும் கூட அதனது தரத்தில் உலகப் புகழ்பெற்ற தொன்றாக உள்ளது. நூல்விபரப் பட்டியலாளர்கள், நூல் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் அனைவரதும் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக இது கருதப்படுகின்றது. பிரதானமான பட்டியல்கள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Catalogue of Books Printed in England, Scotland, and Ireland, and of Books in English Printed Abroad to the Year 1640. London,1884, 3 Volumes.
2. Catalogue of Printed Books 1881-1900, in 95 Volumes.
3. Catalogue of Printed Books 1900-1905, 13 Volumes.
4. Catalogue of Printed Books 1931-54, 51 Volumes.
5. General Catalogue of Printed Books. 10 Year Supplement. 1956-65 London:Trustees of British Museum,1968. 50 Volumes.
6. General Catalogue of Printed Books. London:Trustees of British Museum, 1965 - 66. 263 Volumes.

நூலகத் தளங்கள் (Library Sites)

உலகளாவிய ரீதியில் பரந்து காணப்படும் நூலகங்கள் மற்றும் தகவல் மையங்களின் இணையத்தள நுழைவாயில்களாக விளங்குபவை அவற்றினால் பராமரிக்கப்பட்டுவரும் உத்தியோகபூர்வ இணையத்தளங்களாகும்.

இவை இணையப் பாவனையாளர்கள் என்ற பிரபஞ்ச வாசகர்களுக்கு (Global Reader) தகவல் சேவை வழங்கும் வகையில் உசாத்துணை வளமாக கருதப்படத்தக்கன. இந் நூலகங்களிலுள்ள ஆவணங்கள் / ஆவண விபரங்களை இலத்திரனியல் வடிவில் பெறத்தக்கதாக இத்தளங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில நூலகத்தளங்களின் விபரங்களை ஒரே பார்வையில் பட்டியலிடுகின்றன.

http://www.natlib.lk

இத்தளம் இலங்கைத் தேசிய நூலகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளமாக உள்ளது.

http://www.nationalarchives.uk

பிரித்தானியாவின் ஆவணக்காப்பகத்தினது இணையத் தளம் இதுவாகும்.

http://www.bl.uk

இத்தளம் பிரித்தானிய நூலகத்தின் உத்தியோகபூர்வ தளமாகும். ஆய்விற்குத் தேவையான தகவல் வளங்கள் யாவும் வகை சார்ந்து பட்டியலிடப்பட்டுள்ளதுடன் இலத்திரனியல் வளங்களுக்கான விசேட இணையதள நுழை வாயிலையும் இது கொண்டுள்ளது. பிரித்தானிய நூலகத்தின் அறிமுகம், சேர்க்கை, நூலகப்பட்டியல், வழங்கும் சேவைகள் என்பன குறித்த விபரங்களுக்கான இணைப்புக்களும் காணப்படுகின்றன.

http://www.libdex.com

இது நூலக இணைய தளங்களை பட்டியலிடும் நூலக சுட்டியாக விளங்குகின்றது. பிரதேச ரீதியாகவும் மூலச்சொல் முறையிலும் நூலக தளங்களை தேடல் செய்யும் வசதி காணப்படுகிறது. சுமார் 18000 நூலக தளங்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.webjunction.org

இத்தளம் 145 நாடுகளைச் சேர்ந்த 770 நூலகத் தளங்களுக்கான இணைப்பினை கொண்டுள்ளது. Thomas Dowlin என்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் இத்தளம் நாளாந்தம் புதுப்பிக்கப்படுகிறது. நூலகங்கள் மட்டுமன்றி நூலகம் சார் நிறுவன தளங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

9.3 சொல்லடைவுகள் [Indexes]

ஓர் ஆவணத்தின் அல்லது கோவையின் பொருளடக்க விபரங்களை அடையாளம் காண்பதற்கான அல்லது அப்பொருளடக்கங்களின் அமைவிடங்களை அறிவதற்கான குறிப்புக்களைக் கொண்டமைந்த ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குறிப்புதவு பட்டி சொல்லடைவு எனப்படுகிறது. நூல்கள் அல்லது பருவ இதழ்களில் உள்ள பெயர்கள், சொற்கள், பொருட்துறைகள், இடங்கள், எண்கள் போன்ற விபரங்களை அவற்றுக்குரிய சரியான பக்க எண்களுடன் அகரவரிசையில் அமைத்துத் தரும் பணியைச் சொல்லடைவு ஆற்றுகிறது. அகர வரிசை ஒழுங்கமைப்பே பொதுவானதாக இருப்பினும் கால ஒழுங்கு, எண் ஒழுங்கு, புவியியல் ஒழுங்கு என்பனவும் தேவைக்கமையப் பின்பற்றப்படுவதுண்டு.

9.31 சொல்லடைவு வகைகள்

9.311 முன் ஒருங்கிணைவுச் சொல்லடைவுகள் (Pre- Coordinate Indexes)

ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகள் உள்ள ஒரு சொல்லடைவுக் கோவையில், சொல்லடைவு படுத்தப்பட்ட ஒவ்வொரு சொற் கூறுகளிலும் உள்ள கருத்துப் பொருளை விளக்குகின்ற அல்லது அடையாளம் காட்டுகின்ற சொல்லடைவுகள் எனப்படுகின்றன.

* ஆசிரியர் சொல்லடைவுகள் (Author Indexes) நூலாசிரியரின் பெயரின் கீழ் பதிவுகளை ஒழுங்குபடுத்தும் சொல்லடைவுகள் இவையாகும்.
* நூல் சொல்லடைவுகள் (Book Indexes): நூல்களுக்கென தயாரிக்கப்படும் சொல்லடைவுகள் இவ்வகைக்குள் அடங்கும்.
* பருவ இதழ்ச் சொல்லடைவுகள் (Periodical Indexes):: பருவ இதழ்களில் வெளியாகும் கட்டுரைகளுக்கென தயாரிக்கப்படும் சொல்லடைவுகள். இவை பலவகைப்படும்.
* பொதுச் சொல்லடைவுகள் (General Indexes): பரந்த அறிவுத் துறையில் வெளியிடப்படுகின்ற பல பருவ இதழ்களை உள்ளடக்கி வெளியிடப்படும் சொல்லடைவுகள் பொதுச் சொல்லடைவுகள் எனப்படுகிறது. Reader's Guide to Periodical Literature, Social Science Index போன்றவை இவ்வகையைச் சார்ந்தது.
* பொருட் சொல்லடைவுகள் (Subject Indexes): ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்து வெளியாகும் புதிய நூல்கள், சிறு நூல்கள், மாநாட்டு அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்படும் சொல்லடைவுகள் பொருட்சொல்லடைவுகள் எனப்படுகின்றன. Education index, Library Literature போன்றன இவ்வகையைச் சார்ந்தவை.
* தனிப்பட்ட பருவ இதழ்களுக்கான சொல்லடைவுகள் (Index for Individual Periodical) : இவை தரத்திலும் பூரணத்துவத்திலும் பலதரப்பட்டவையாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக வருடாந்த ரீதியில் இவை விநியோகிக்கப்படுவனவாக உள்ளதுடன் குறித்த பருவஇதழ் வெளியீட்டாளர்கள் அதற்கான சொல்லடைவுகளை தயாரித்து விநியோகிக்காத சந்தர்ப்பங்களில் இவை அப்பருவ இதழைக் கொள்வனவு செய்து பாவனையாளருக்கு பாவனைக்கு விடும் தகவல் அமைப்புகளினால் தமக்கென தயாரிக்கப்பட வேண்டியுள்ளவையாக இருக்கும்.

* திரள்ச் சொல்லடைவுகள் (Cumulative Indexes) : இம்முறையில் பருவ இதழ்களின் ஒவ்வொரு இதழுக்கும் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் சொல்லடைவுகள் அனைத்தும் பின்னர் வருடாந்த ரீதியாகவோ அல்லது 5,10 வருடங்களுக்கொரு முறையோ ஒன்று சேர்த்து தொகுத்து ஏதாவது ஒரு ஒழுங்கு முறையில் ஒரு தொடராக வெளியிடப் படும்.

* கட்புல சொல்லடைவுகள் (Visible Indexes): தகவல் அமைப்பு ஒன்றினால் கட்புல சொல்லடைவுப் பேழைகளில் வைத்துப் பராமரிக்கப்படுகின்ற பருவஇதழ் பதிவுகள்.

* மேற்கோள் சொல்லடைவுகள் (Citation Indexes): ஒரு கட்டுரையை அல்லது ஆவணத்தை உருவாக்கும் போது குறிப்பு எடுக்கப்பட்ட அல்லது மேற்கோள் காட்டப்பட்ட நூல்களின் அல்லது கட்டுரைகளின் விபரங்கள் அடங்கிய தொகுப்பை எழுதப்பட்ட கட்டுரையின் அல்லது நூலின் இறுதிப்பகுதியில் அட்டவணையாகத் தரும் சொல்லடைவுகள். குறிப்பிட்ட பொருட்துறையில் உள்ள முதல்நிலை ஆய்வுக்குரிய கட்டுரைகளின் ஆசிரியர்கள் அல்லது தலைப்பு இங்கு பதிவுகளாக கொள்ளப்படுகின்றன. எழுதப்படும் கட்டுரைக்கு குறிப்பு எடுக்க உதவிய கட்டுரைகள் ஒவ்வொரு மேற்கோளின் கீழும் ஒன்றாக தொகுக்கப்படுகின்றன.

* செய்தித்தாள் சொல்லடைவுகள் (Newspaper Indexes): ஒரு செய்தித்தாளுக்கு தயாரிக்கப்படுபவை ஒன்றுக்கு மேற் பட்ட செய்தித் தாள்களுக்குத் தயாரிக்கப்படுபவை என இவை இருவகைப்படுகின்றன.

* தொகுப்பாக்கங்களுக்கான சொல்லடைவுகள் (Indexes for Composite works): கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் போன்ற தொகுப்பாக்கங்களுக்கென தயாரிக்கப்படும் சொல்லடைவுகள் இவ்வகைப்படும். காலத்தாலோ பொருட்துறையாலோ அல்லது தேச ரீதியாகவோ மட்டுப்படுத்தப்படாமல் மனிதப்பண்பியல், சமூக அறிவியல், இலக்கிய விமர்சனம் போன்ற விரிந்த துறைகளின் தொகுப்பாக்கங்களை அவற்றின் ஆசிரியர் பொருட்துறை தலைப்பு என்பவற்றின் கீழ் ஒழுங்குபடுத்தித் தரும் சொல்லடைவுகளாக இவை உள்ளன.

* பெயர்ச் சொல்லடைவுகள் (Name Indexes): நூலாசிரியர் பெயர்களை மட்டும் சொல்லடைவுப் பதிவுகளாகக் கொண்டமைந்த சொல்லடைவுகள்.

* சொல்லிசைவுத் தொகுதிகள் (Concordances): ஓர் ஆசிரியரின் ஆக்கங்களோ அல்லது ஓர் ஆவணத்தில் உள்ள கருத்துள்ள சொற்களோ சொற்றொடர்களோ முழுமையாக சொல்லடைவுபடுத்தப்படுகின்ற சொல்லடைவுகள்.

* தலைப்புச் சொல்லடைவுகள் (Title Indexes): ஆவணத்தின் தலைப்புகளை மட்டும் சொல்லடைவுப் பதிவாகக் கொண்டு தயாரிக்கப்படும் சொல்லடைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

9.312 பின் ஒருங்கிணைவுச் சொல்லடைவுகள் (Post Coordinate Indexes)

* இணைக்கப்பட்ட சொல்லடைவுகள் [Articulated Indexes]: சிக்கலான பொருட்பகுப்பாய் வின்றி வெறும் பொருட்தலைப்புகளிலிருந்து கணினிமுறையில் உருவாக்கப்படும் சொல்லடைவுகள்.

* குவாக் சொல்லடைவுகள் [Keyword-and- Context]: சொல்லடைவுப்பதிவின்போது பொருட்தலைப்புகள் ஒவ்வொரு தடவையும் முழுமையாக பதிவு செய்யப்படுகின்ற கணினி மயப்படுத்தப்பட்ட சொல்லடைவுகள்.

* குவிக் சொல்லடைவுகள் [Keyword-in-Context]: கட்டுரை ஒன்றின் தலைப்பிலிருந்து பெறப்படுகின்ற சொல்லடைவுகள் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பதிவும் தலைச்சொல், அவற்றைச் சுற்றியுள்ள ஏனைய சொற்கள், வழிகாட்டிக் குறிப்புகள் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். தலைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்படும் சொற்கள் தகவல் தேடுபவரைக் குறித்த கட்டுரைக்குப் பயனுள்ள வழியில் வழிகாட்டக்கூடியளவுக்குப் போதுமான தகவலைக் கொண்டதாக அமைந்திருக்கும். ஒவ்வொரு சொல்லும் தனித்தனியாகப் பார்க்கும்போது பொருட் தெளிவின்மையுடையதாக இருப்பினுங்கூட தலைச் சொல்லைச் சுற்றியுள்ள மற்றச் சொற்கள் தலைச் சொல்லின் பொருளை விளக்க உதவுவனவாகவும் இருக்கும் வகையில் இச்சொல்லடைவுகள் வடிவமைக்கப்படுகின்றன.

* குவோக் சொல்லடைவுகள் [Keyword-out-of-Context]: இம்முறையில் சொல்ல டைவாளரால் பயனுடையதாகக் கருதப்படுகின்ற எல்லா மூலச்சொல்லின் கீழும் கட்டுரைத் தலைப்புகள் முழுமையாகச் சொல்லடைவு படுத்தப்பட்டிருக்கும். மூலச் சொற்கள் சொற்கருவூலங்களிலிருந்தோ பொருட் தலைப்புகளிலிருந்தோ, ஆவணத் தலைப்புகளிலிருந்தோ தெரிவு செய்யப்படும்.

* பிறிசிஸ் சொல்லடைவுகள் [PRECIS]: காப்பு - சூழமைவுச் சொல்லடைவு முறைமை [Preserve Context Indexing System] என்ற பதத்தொடரிலுள்ள முதலெழுத்துகளின் தொகுப்பே PRECIS என அழைக்கப்படுகிறது.பொறிமுறை வாசிப்புப் பட்டியல் களுக்கான பொருட் சொல்லடைவுத் தரவுகளை வழங்குவதற்காக பிரித்தானிய தேசிய நூல் விபரப்பட்டியலினால் அபிவிருத்தி செய்யப்பட்ட சொல்லடைவு இதுவாகும். இது தொடர்புப் பகுப்பாய்விலிருந்தும் கருத்துக்கூறு பகுப்பாக்கத்தில் உள்ள குறிப்பிட்ட சில நுணுக்க முறைகளிலிருந்தும் நேரடியாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு முறையாகும்.

* முறைமாற்றுச் சொல்லடைவுகள் [Permuterm Indexes]: ஒவ்வொரு சொல்லடைவுச் சொல்லையும் ஒரு பதிவின் மூலமாகக் கருதி அவற்றைத் திரும்பத் திரும்ப பதிவு செய்கின்ற கணினிமுறை சார்ந்த அகரவரிசைச் சொல் லடைவுகள்.

* தரவுத் தளங்கள் [Data Bases]: ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த தகவல்களை அல்லது ஒன்றுடன் ஒன்று தொடர்புத் தன்மை வாய்ந்த பொருட்துறை சார்ந்த தகவல்களை தொலைத் தொடர்பு வழியாக அணுகக் கூடிய வகையில் கணினிக் கோவைகளில் சேமித்து வைக்கப்படும் சொல்லடைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு

* தகவல்களை பரவலாக்கம் செய்ய உதவுதல்.
* கணினி முறைமையின் கீழ் விரைவாக தகவல்களைப் பெற உதவுதல்.
* பருவ இதழ் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகளில் உள்ள தகவல்களுக்கான வழி காட்டியாகத் தொழிற்படல்.
* குறிப்பிட்ட பருவ இதழில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் ஒரே பொருட்துறை சார்ந்த தகவல்களை ஒன்றாகக் கொண்டுவர உதவுதல்.
* குறித்த துறை சார்ந்து பின்னோக்கிய தகவல் தேடுகைக்கு உதவுதல்.
* குறிப்பிட்ட இலக்கியம் சார்ந்து பின்னோக்கிய தேடுதலை துரிதப்படுத்த உதவுதல்.
* பொருட்துறை நிபுணர்களுடன் தனித்தனியாக தொடர்புகளைப் பேண உதவுதல்.

வரையறைகள்

* சொல்லடைவுகள் பலதரப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்படுவதனால் சொல்லடைவுக்குள் நுழைவதற்கு முன்னர் ஆரம்பத்தில் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை வாசிப்பது முக்கியமாகும்.
* சொல்லடைவுகளில் பயன்படுத்தப்படும் பொருட் தலைப்புகள் தெளிவற்றதாகவும், ஒத்த பொருளுள்ள பல பொருட் தலைப்புகள் பயன்படுத்தப்படினும் பாவனையாளர் பல பொருட்தலைப்புகளின் கீழ் தேடுதலை மேற்கொள்ள வேண்டிய தேவையுண்டு.
* குறிப்பிட்ட கட்டுரையானது அதற்குப் பொருத்தமான பொருட்தலைப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படாது இருக்கும் சமயங்களில் முதல் முயற்சியிலேயே தேடிய தகவலைப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் தேடுதலை மேற் கொள்வதும் மிகச் சிரமமானதாக மாறிவிடும்.
* குறித்த கட்டுரை பற்றிய விபரமானது குறிப்பிட்ட சில சொல்லடைவாக்க பருவஇதழில் உள்ளடக்கப்படும் கால எல்லை சிலசமயம் இரு வருடங்களையும் தாண்டிவிடும் என்பதால் உடனடித் தகவலை பெறுவது கடினமாக இருக்கும்.
* பாவனையாளரின் ஆர்வத் துறை சார்ந்த அனைத்து இலக்கியங்களையும் குறிப்பிட்ட சொல்லடைவாக்க பருவ இதழ் உள்ளடக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே பாவனையாளர் தனித்து ஒரு சொல்லுக்குப் பருவ இதழில் தங்கியிருக்க முடியாது.
* சொல்லடைவாக்க பருவ இதழை பயன்படுத்த முதல் அதில் உள்ளடக்கப்பட்ட பருவ இதழ் பற்றிய விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.
* கட்டுரையின் உள்ளடக்கத்தை சரியான முறையில் வெளிக் கொணரும் தன்மை சொல்லடைவுக்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள்

i. Readers Guide to Periodical Literature [New York: Wilson, 1900-]

வரலாறு: ஆய்வு உலகத்தைப் புரட்சிகரமாக்கிய சொல்லடைவு எனக் கருதப்படும் இது முன்பிருந்ததைவிடவும் ஆற்றல் வாய்ந்ததாக, பாவனைக்கு வசதியானதாக, நெகிழ்வுத் தன்மை மிக்கதாக உருவாக்கப்பட்டுள்ளது. பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், கல்விசார் நூலகங்கள் அனைத்துக்கும் பொருத்தமான பொதுநோக்கு ஆய்வுக் கருவியாகவும் புதிய ஆயிரியத்துக்கான (Millennium) சிறந்த உசாத்துணை வளமாகவும் Library Journal என்ற பருவ இதழினால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

உள்ளடக்கம்: மிக முக்கியமான பொருட்துறைகள் சார்ந்து ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப் படும் கிட்டத்தட்ட 400 பருவ இதழ்களை உள்ளடக்கி தற்போது இது வெளிவருகின்றது. WilsonWeb இணையத்தளத்தில் பார்க்கக்கூடியதாக இருப்பதுடன் WilsonDiscஎன்ற இலத்திரனியல் வளமாகவும் கிடைக்கிறது. தகுதியும் அனுபவமும் வாய்ந்த சொல்லடைவாளர்களால் உருவாக்கப்படுவதனால் இதன் சொல்லடைவாக்கமானது தரத்தில் உயர்ந்ததாகக் கணிக்கப் பட்டிருக்கிறது.

ஒழுங்கமைப்பு: ஆசிரிய, தலைப்பு, பொருட் சொல்லடைவுகள் அனைத்தும் ஒரே அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவும் பருவ இதழ்க் கட்டுரையின் தலைப்பு, திகதி, பக்கம், விளக்கப்படங்கள், உருவப்படங்கள் போன்ற முக்கிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. காலாண்டு ரீதியாகவும் ஆண்டு ரீதியாகவும் இச்சொல்லடைவு ஒன்றாகத் தொகுக்கப்படுகின்றது.

Readers Guide Full Text. Mega edition

www.hwwilson.com

நூலகவியல் தொழிற்துறையின் முன்னோடிச் சொல்லடைவாகக் கருதப்படுகின்றது. பலதரப்பட்ட வாசக சமூகத்துக்கும் பயன்தரக் கூடிய இலகுவான அணுகுகையுள்ள தரவுத்தளமாகக் கருதப்படுகின்றது.

பயன்பாடு

* 1983ம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 400 பருவ இதழ்களுக்கான சாராம்சங்களும் சொல்லடைவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலான பருவ இதழ்கள் பொருட்துறை நிபுணர்களின் மீளாய்வுக்கு உட்பட்டவை.
* சமூக அறிவியல் துறைசார்ந்த தொழிற்திறன் சார் அலுவலர்களினால் 50-150 இடைப்பட்ட சொற்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட சாராம்சங்கள் ஆய்வாளரைப் பொறுத்து தமது தேவைக்குப் பொருத்தமானதுதானா என்பதைத் தீர்மானிக்க உதவுகின்றன.
* 1995இலிருந்து கிட்டத்தட்ட 200 பருவ இதழ்க் கட்டுரைகள் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன.
* இந்தத் தரவுத்தளத்தில் தேடுகை மேற்கொள்வதற்கென வில்சன் பொருட்சொற்கருவூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வில்சனின் சீரான பெயர், பொருள் அதிகாரக் கோவைகள் தேடுகைகளை இலகுவாக்குகின்றன.

* ஏனைய இணையத்தளங்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கான வசதிகள் இருப்பதனால் தேவைப்படும் கட்டுரைகளை பெறக்கூடியதாக உள்ளது.

* அண்மைக்கால நிகழ்வுகள், வர்த்தகம், அறிவியல், கலையும் பொழுதுபோக்கும், மருத்துவமும் சுகாதாரமும், விளையாட்டு போன்ற அண்மைக்கால அபிவிருத்திகள் தொடர்பான கட்டுரைகளை வாசகர் இலகுவாக அடையாளம் காண்பதற்கு ஏற்ற வகையில் புதுப்புதுப் பொருட்தலைப்புகளை கொண்டிருக்கின்றது.

* WilsonWeb இணையத்தளத்தில் நாளாந்தமும் WilsonDisc சீடிரோமில் மாதாந்தமும் புதுப்பிக்கப்படுவதனால் மிக அண்மைக்காலத் தகவல்களை வாசகர் பெறக்கூடியதாக உள்ளது.

* தரவுத்தளத்தினுள்ள விசேடமாக வழங்கப்பட்ட இணைப்பினூடாக வாசகருக்குத் தேவையான கட்டுரையைப் பெற்றுக்கொள்வதற்கான "ஆவண வழங்கல்" வசதியைக் கொண்டிருக்கிறது.

* இந்தத் தரவுத்தளத்திலுள்ள நூலக இருப்புக்கான குறி காட்டியை (Library holdings indicator) எமது நூலகத்திலுள்ள OPAC உடன் இணைத்துவிடுவதன் மூலம் வாசகர் தரவுத் தளத்தில் தேடிப் பெறுகின்ற உசாத்துணைக் குறிப்புகள் நூலகத்திலுள்ள இறாக்கைகளில் இருக்கின்றதா என்பதை அறிய முடியும்.

ii. Humanities Index [New York:Wilson,1974- vol.1. Quarterly]

வரலாறு: Social Sciences and Humanities Index என்ற தலைப்பில் வெளிவந்த சொல்லடைவுக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட புதிய சொல்லடைவாக இது கருதப்படுகின்றது. அமெரிக்க நூலகங்களில் புலமைசார் வெளியீடுகளை இனங்காண்பதற்கான சிறந்த மூலமாகவும் மிகப் பரந்தளவில் பயன்படுத்தப்படும் சேவையாகவும் இந்த சொல்லடைவாக்க சேவை கருதப்படுகின்றது.

உள்ளடக்கம்: புதைபொருளாய்வியல், பிரதேச கற்கைகள், நாட்டுப் புறவியல், தொடர்பாடல், பால்நிலைக் கல்வி, ஊடகவியல், கலை, இலக்கியம், இசை,மொழி, தத்துவம், வரலாறு, சமயம் உட்பட மனிதப் பண்பியல் சார்ந்து கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட பருவ இதழ் கட்டுரைகளை இது உள்ளடக்குகின்றது.

ஒழுங்கமைப்பு: அகர வரிசை ஒழுங்கில் ஆசிரிய தலைப்புப் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. விசேட பொருட்துறை சார்ந்து பதிவுகளின் அமைவிடத்தை இலகுவில் தேடக்கூடிய வகையில் மிகக் கூடுதலான வழிகாட்டிப் பதிவுகளும் விசேட பொருட் தலைப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நூல் தொடர்பான மதிப்புரைகள் தனிப்பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவுக்கும் முழுமையான நூல்விபரத் தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. காலாண்டு ரீதியில் வெளியிடப்படும் இந்த வெளியீடானது வருடம் முடிவில் தொகுக்கப்பட்டு வருட வெளியீடாகவும் வெளியிடப்படுகின்றது. கிடைக்கக்கூடிய வடிவங்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அச்சு வடிவம்
2. இறுவட்டு வடிவம்
3. இணையத்தள வடிவம்

Humanities Full Text

www.hwwilson.com

சிறப்புக் கட்டுரைகள், நேர்காணல்கள், இரங்கல் செய்திகள், நூல்விபரப்பட்டியல்கள், கதைகள், கவிதைகள், நாடகங்கள் என்பவற்றின் மூல ஆக்கங்கள், நூல் மதிப்புரைகள், ஒலி ஒளிப்பதிவுகளுக்கான மதிப்புரைகள் உட்பட மனிதப்பண்பியல் சார்ந்து மிக முக்கியமான புலமைசார் வெளியீடுகளை உள்ளடக்குகின்ற தரவுத் தளமாகும் சிறப்பம்சங்கள்:

* 1995இலிருந்து 2000 வெளியீடுகளின் முழு விடயக் கட்டுரைகள்.
* 1984இல் இருந்து 550 வெளியீடுகளின் சொல்லடை வாக்கமும் சாராம்சங்களும்.
* 375 பருவ இதழ்கள் பொருட்துறை நிபுணர்களின் மதிப்பீட்டை கொண்டவை.
* Wilsonweb இல் நாளாந்தமும் Wilsondisc இல் மாதாந்தமும் புதுப்பிக்கப்படுபவை.

iii. British Education Index [Ed. by Phil Sheffield - Leeds:Leeds University Press, 2001.]

வரலாறு: இச் சொல்லடைவு 1954ல் கல்விநிறுவனங்களின் பாடசாலைகளின் நூலகங்களின் குழுவினால் முதன் முதல் உருவாக்கப்பட்டு 1972-1985 காலப்பகுதிவரை பிரித்தானிய நூலக நூல்விபரக் கோவைகள் பிரிவினால் வெளியிடப்பட்டது. 1986இல் இருந்து லீட்ஸ் பல்கலைக் கழகம் இப் பணியைத் தொடர்கிறது.

உள்ளடக்கம்: நிரந்தர கல்வித்துறைசார் ஆர்வத்தை தரக்கூடிய ஆங்கில மொழியில் பிரித்தா னியாவில் வெளியாகும் கட்டுரைகளையும் ஒரு குறிப்பிடத்தக்களவில் சர்வதேச ரீதியில் வெளியாகும் பருவ இதழ் கட்டுரைகளையும் பகுத்தாய்வு செய்து இது தயாரிக்கிறது. பருவ இதழ் கட்டுரைகள் தவிர முக்கியமான அறிக்கைகள் மாநாட்டு இலக்கியங்களையும் சொல்லடைவுபடுத்தும் முயற்சியையும் இது மேற்கொள்கிறது. கல்வியிலும் பயிற்சியிலும் துறைகளிலுள்ள ஆய்வு அறிக்கை மாநாடு அச்சுக்கு முந்திய வெளியீடுகள் என்பவற்றின் இணைய சேகரிப்பு தொடர்பான குறிப்புக்களையும் இது உள்ளடக்குகிறது. உயர்கல்வி நிதிச் சபையுடன் இணைந்த தகவல் அமைப்புக்கள் குழுவின் நிதியுதவியுடன் UK மின்னணு வியல் செய்நிரலின் ஒரு பகுதியாக BEI அலுவலகத்திற்குள்ளேயே உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. அது இப்போது BEI அலுவலகத்தின்கீழ் நேரடியாக இயங்குவதுடன் இணைய மூலம் இலவசமாக அணுகக் கூடியதாய் உள்ளது.

ஒழுங்கமைப்பு: 1986 முதல் இரண்டும் ஜ பயன்படுத்தியே சொல்லடைவு பயன்படுத்தப் படுகிறது. இணையமூலமாகவும் CD-Rom லும் இது கிடைக்கிறது. இதில் இரு பிரிவுகளாக பதிவுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆசிரியர் பட்டியின் தரவுகள், பிரதான ஆசிரியர், தலைப்பு, ஏனைய ஆசிரியர்கள், பருவ இதழ் தலைப்பு, தொகுதி, பகுதிஎண், திகதி, பக்கம், ஆவணத்தின் வகை, கல்வி மட்டம், தகுதி, பொருள், விளக்கம் என்பவற்றைக் கொண்டுள்ளது. ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்கள் ஆசிரிய தலைப்பின்கீழ் ஆக்கத்தலைப்பு வாரியாக அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சொல்லடைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்ட பருவ இதழ்களின் பட்டியல் நூலின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பருவ இதழ்களிற்கான வெளியீட்டாளர் பட்டியல் நூலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது.

iv. Social Science Index [New York: H.W.Wilson Company, 1974- vol.1, Quarterly]

வரலாறு: சொல்லடைவுகளின் உருவாக்கத்துக்குப் பெயர் பெற்ற Wilson கம்பனியினரின் பெறுமதி மிக்க வெளியீடுகளில் ஒன்றாக இது உள்ளது.

உள்ளடக்கம்: 2006ம் ஆண்டுக்குரிய இணையத்தளத் தகவலின் படி இச் சொல்லடைவானது கிட்டத்தட்ட 600 பிரதான சர்வதேச ரீதியில் ஆங்கிலமொழி பருவ இதழ்களை சொல்லடைவு படுத்துகிறது. மானுடவியல், பிரதேச ரீதியான ஆய்வு, சமூக ஆரோக்கியம், மருத்துவ கவனிப்பு, குற்றவியல், பொருளியல், குடும்பவியல், புவியியல், மூப்பியல், சர்வதேச உறவுகள், சட்டம், சிறுபான்மை, கல்வி, திட்டமிடல், பொதுநிர்வாகம், கொள்கை அறிவியல், நகர கல்வி, மனநோயியல், உளவியல், சமூகப்பணி, பொதுநலன், அரசியல், பெண் கல்வி போன்ற துறைகளில் வெளியாகும் பருவ இதழ் வெளியீடுகளை உள்ளடக்குகிறது. பிரதான சிறப்புக் கட்டுரைகள் தவிர மீளாய்வுக் கட்டுரைகள், விமர்சனங்கள், நேர்காணல்கள், வாழ்க்கை வரலாறுகள், நினைவுக் கட்டுரைகள் என்பனவும் சொல்லடைவுபடுத்தப்பட்டுள்ளன. விளம்பரங்கள், குறுங்கால எழுத்து மூலங்கள், கேலிச் சித்திரங்கள், ஆசிரிய தலையங்கங்கள், ஆசிரியருக்கான கடிதங்கள் (முக்கியமானவை தவிர) என்பன விலக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: ஆசிரிய பொருள் பதிவுகள் அனைத்தும் ஒரே அகரவரிசை ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன தலைப்புப் பதிவுகள் தயாரிக்கப்படுவதில்லை. பொருட் தலைப்புக்களின் உப பிரிவுகள் பின்வரும் ஒழுங்கை பயன்படுத்துகின்றது:

1) வரலாற்றுக்கால உப பிரிவுகள் கால அடிப்படையில்
2) கட்டுரையின் வடிவ அமைப்பிலான உபபிரிவுகள் அகர ஒழுங்கில்
3) புவியியல் சார்ந்த உப பிரிவுகள் அகரவரிசையில்

ஆசிரிய பொருட் தலைப்புக்களின் கீழ் தலைப்புக்கள் (ஆரம்ப உயிரெழுத்துக்கள் தவிர) முதலாவது சொல்லின் அடிப்படையில் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் வெளியீடானது தனக்கென சொந்தமாக ஒரு பொருள் அதிகாரக் கோவையைப் பேணுகின்றது. பொருள் தலைப்புக்கள் குறிப்பிட்ட அவ் ஆக்கத்திலும் உசாத் துணை நூல்களிலிருந்தும் Wilson இன் ஏனைய சொல்லடைவுகளிலிருந்தும் காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புக்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. ஒரு நபரின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளோ அல்லது நபர்களைப் பற்றிய நேர்காணல்களோ சொந்தப் பெயரில் சொல்லடைவு படுத்தப்படுகின்றன. நிறுவனங்களை விபரிக்கும் ஆக்கங்கள் அவற்றின் பெயரின் கீழ் பதியப்படுகின்றன. பயன்படுத்தப்படாத பொருட் தலைப்புக்களிலிருந்து பயன்படுத்துகின்ற பொருட் தலைப்பிற்கு பாவனையாளரை வழிகாட்டுவதற்கு "பார்க்க" வழிகாட்டிக் குறிப்புக்களும் ஒன்றிற்கொன்று தொடர்புடைய துறைகளிற்கு வழிகாட்டுவதற்கு "மேலும் பார்க்க" குறிப்புக்களும் பயன்படுத் தப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் நூல் மீளாய்வுகள் தனி அகர ஒழுங்கில் பிரதான சொல்ல டைவைத் தொடர்ந்து பட்டியல் படுத்தப்பட்டுள்ளன ஆசிரியர் பெயர் இல்லாதபோது தலைப்புப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது wilsonweb இணையத்தளத்தில் பார்க்கக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Social Sciences Full Text
[www.hwwilson.com]

சமூக அறிவியலின் கோட்பாடு சார்ந்ததும் பிரயோகம் சார்ந்தும் கருத்துநிலைகள், போக்குகள், முறைகள் பற்றி அறிந்து கொள்ளுமுகமாக தேடுகையை மேற்கொள்ளும் எண்ணற்ற வாசகருக்கான பெறுமதிமிக்கவளமாக இது கருதப்படுகின்றது. இது வெறுமனே நூல் தெரிவுக் கருவியாக மட்டும் தொழிற்படாது கட்டுரைகளை முழுமையாகப் பார்க்கக்கூடிய வாய்ப்புகளையும் கொண்டிருப்பதனால் உசாத்துணைக் கருவியாகவும் தொழிற்படுகின்றது.

Social Science Full Text தரவுத் தளத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் இன்னோர் இலத்திரனியல் உற்பத்தியான Social Science Index கட்டுரைகளின் சொல்லடைவுகளை மட்டும் உள்ளடக்கித் தயாரிக்கப்படுகின்றதேயன்றி சாராம்சங்களை உள்ளடக்குவதில்லை. அது போன்று இன்னோர் உற்பத்தியான Social Science Abstract சாராம்சங்களை மட்டும் உள்ளடக்கும் அதே சமயம் கட்டுரைகளிலுள்ள முழு விடயங்களையும் உள்ளடக்கு வதில்லை.

பயன்பாடு

* 1983ம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 620 பருவ இதழ்களுக்கான சாராம்சங்களும் சொல்லடைவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் 400 பருவ இதழ்கள் பொருட்துறை நிபுணர்களின் மீளாய்வுக்கு உட்பட்டவை.
* சமூக அறிவியல் துறை சார்ந்த தொழிற்திறன் சார் அலுவலர்களினால் 50-150 இடைப்பட்ட சொற்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட சாராம்சங்கள் ஆய்வாளரைப் பொறுத்து தமது தேவைக்குப் பொருத்தமானது தானா என்பதைத் தீர்மானிக்க உதவுகின்றன.
* 1995இலிருந்து கிட்டத்தட்ட 210 பருவ இதழ்க் கட்டுரைகள் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன.
* இந்தத் தரவுத்தளத்தில் தேடுகை மேற்கொள்வதற்கென வில்சன் பொருட் சொற் கருவூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.
* சமூக அறிவியல் துறையில் ஏற்படும் அண்மைக்கால மாற்றங்கள், கருத்துநிலைகள், போக்குகள் வளர்ச்சிகள் முறைகள் போன்றவற்றை இலகுவாக அறிவதற்கு ஏற்ற வகையில் இன்றளவிலும் உள்ள பொருட் தலைப்புகளைக் கொண்டிருக்கின்றது.

Wilson இன் புகழ்பெற்ற வெளியீடுகள்

Indexes

- Education Index Retrospective: 1929-1983
- Index to lega periodicals Retrospective: 1918-1981
- Readers Guide Retrospective: 1890-1982
- Art Index Retrospective: 1929-1984
- Humanities and Social Science Index: 1907-1984
- Biography Index
- Play Index

Databases

- Applied Science and Technology Full Text
- Biological and Agricultural Index Plus
- Science Full Text Plus
- General Science Full Text
- Wilson Biographies
- Biography Reference bank
- Readers' Guide Full Text
- Wilson OmniFile Full Text
- Art Full Text
- Book Review Digest Plus
- Short Story Index
- Bibliographic Index Plus
- Humanities Full Text
- Social Full Text
- Library Literature & Information Science Full Text
- Education Full Text

தொடர்புகளுக்கு
www.hwwilson.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூலச் சொல், பொருட்துறை, ஆசிரியர், தலைப்பு, வெளியீடு, கட்டுரையின் வகை போன்ற பல வழிகளில் தேடுதலை மேற் கொள்ள முடியும்.
* WilsonWeb இணையத்தளத்தில் நாளாந்தமும் WilsonDisc சீடி ரோமில் மாதந்தமும் புதுப்பிக்கப்படுவதனால் வாசகருக்கு மிக அண்மைக்காலத் தகவல்களை வாசகர் பெறக் கூடியதாக உள்ளது.
* தரவுத்தளத்தினுள்ள விசேடமாக வழங்கப்பட்ட இணைப்பினூடாக வாசகருக்குத் தேவையான கட்டுரையை பெற்றுக் கொள்வதற்கான "ஆவண வழங்கல்" வசதியைக் கொண்டிருக்கிறது.

v. Science Citation Index [Philadelphia: Institute of Scientific Information, 1963 - Quarterly-]

வரலாறு: 2004ம் ஆண்டு தொடக்கம் DVD வடிவத்தில் இது கிடைக்கிறது. மாதாந்தம் புதுப்பிக்கப்படுவதுடன் ஆண்டு ரீதியாக ஒன்றாகத் தொகுக்கப்பட்டு இரண்டு இறுவட்டுக்களில் கிடைக்கிறது. 1991 வரையான பதிவுகள் ஆசிரிய சாராம்சம் இன்றி கிடைக்கக்கூடியதாக உள்ளது. இதுமட்டுமன்றி விநியோகப் பங்காளிகளின் ஊடாக கணினி நேர்முக வடிவிலும் இது கிடைக்கிறது. வாராந்தம் புதுப்பிக்கப்படுகிறது. இணையத் தளத்தில் Dialog, DIMDI, STN ஆகியவற்றினூடாக பார்க்க முடியும்.

உள்ளடக்கம்: 100க்கும் மேற்பட்ட பொருட்துறைப் பரப்புகளை உள்ளடக்கி உலகம் முழுவதும் வெளியாகும் 3700 இற்கும் மேற்பட்ட முதல்தர புலமை சார் அறிவியல் தொழினுட்பப் பருவ இதழ்கள், அறிக்கைகள், காப்புரிமைகள், தனிப்பொருள் நூல்கள், நூல்கள் போன்றவற்றைப் பகுத்தாய்வு செய்து புதிய பழைய நூல்விபரக் குறிப்புகள், ஆசிரியர் சாராம்சங்கள், மேற்கோள்படுத்தப்பட்ட குறிப்புகள் முதலியவற்றுக்கான அணுகுகையை வழங்குகின்ற சாதனமாகும்.

ஒழுங்கமைப்பு: ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று தனித்தனிச் சொல்லடைவுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன:

* மேற்கோள் சொல்லடைவு (Citation Index): இது மேற்கோள் எடுத்தாளப்பட்ட ஆசிரியர் வாரியாக அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒவ்வோர் ஆசிரியரின் கீழும் பதிவுகள் வருட அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
* மூலச் சொல்லடைவு (Source Index): இது ஆசிரியருக்கான முழுமையான சொல்லடைவாகும்.
* முறைமாற்றுச் சொல்லடைவு (Permuterm Subject Indexd): மேற்கோள் சொல்லடைவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஆக்கங்களிலுமுள்ள தலைப்புகளிலிருந்து முக்கிய சொற்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இம் மூன்று சொல்லடைவுகளும் ஓர் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்கும் தனித்தனி வெளியிடப்படுவதுடன் நாலாவது காலாண்டுக்கான சொல்லடைவுகள் தனித்தனியாக ஒன்றுதிரட்டப்பட்டு திரள்ச் சொல்லடைவாக வெளியிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.314 பொருட் சொல்லடைவுகள்

i. Library Literature [An Index to Library and Information Science. New York: Wilson,1934-. Bimonthly]

வரலாறு: உலகம் முழுவதிலும் வெளியிடப்படும் நூலக தகவல் அறிவியல் துறை சார்ந்த வளங்களைச் சொல்லடைவுபடுத்தி உருவாக்கப்படும் ஓர் உசாத்துணை வளமாகும். வில்சன் சொல்லடைவில் உள்ளடக்கப்படுகின்ற நூலகவியல் துறை சாராத வளங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவில் உள்ளடக்குகின்றது.

உள்ளடக்கம்: நூல்கள், பருவ இதழ்கள், திரைப்படங்கள், படத் துணுக்குகள், நுண்படங்கள், நுண் அட்டைகள், நூலகவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவையும் உள்ளடக்கப் பட்டுள்ளன. அதேசமயம் அச்சு வடிவில் வெளியிடப்பட்ட சாதனங்களுக்கென உருவாக்கப் படும் நுண்வடிவங்கள் உள்ளடக்கப்படுவதில்லை.

ஒழுங்கமைப்பு: ஆசிரிய பொருட் பதிவுகள் ஒரே அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. வில்சனின் ஏனைய உற்பத்திகள் போன்று இச் சொல்லடைவும் சேவை அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றது.

Library Literature & Information Science Full Text
www.hwwilson.com

நூலகர்களால் நூலகர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள கற்பித்தல் கருவியாக இது கருதப் படுகின்றது. துரிதமாக மாற்றமடைந்து வருகின்ற நூலக தகவல் அறிவியல் துறையின் அண்மைக்கால போக்குகளைப் பிரதிபலிப்பதுடன் ஒவ்வொரு வருடமும் ஆங்கில, அந்நிய மொழிப் பருவ இதழ்கள், தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க பருவ இதழ்கள், மாநாட்டுக் குறிப்பேடுகள், சிறு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளுடன் 300 புதிய நூல்களையும் உள்ளடக் குகின்றது.

400 இற்கும் மேற்பட்ட தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளின் முழுப்பகுதியையும் விநியோகிக்கின்றது. 1997இலிருந்து 125க்கும் மேற்பட்ட கட்டுரைகளின் முழு உள்ளடக்கத் தையும் வெளியிடுகின்றது. Wilsonweb இல் நாளாந்தமும் wilsondisc இல் மாதாந்தமும் புதுப்பிக்கப்படுகின்றது. அச்சு வடிவிலும் சொல்லடைவு மட்டும் உள்ளடக்கப்பட்ட தரவுத் தளத்திலும் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

உள்ளடக்கப்படும் பொருட்துறைகள்: தன்னியக்கம், நூல் பராமரிப்பு, பட்டியலாக்கம், தணிக்கை, சிறுவர் இலக்கியங்கள், சுழற்சிமுறைகள், பகுப்பாக்கம், பதிப்புரிமை, நூலகக் கல்வி, இலத்திரனியல் தேடுகை, அரச உதவி, சொல்லடைவாக்கம், தகவல் தரகர்கள். இணைய கணிமம், நூலகச் சங்கங்கள், நூலக உபகரணங்களும் அதற்கான வழங்குனர் களும், ஆளணி நிர்வாகம், தகவல் வளப் பாதுகாப்பு, பொதுசனத் தொடர்பு, வெளியீட்டுத் துறை, அரிய நூல்கள், இணையத்தளங்கள் போன்ற பொருட் துறைகளை இது உள்ளடக் குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Current Contents [Philadelphia: Institute for Scientific Information]

வரலாறு: இது ஒரு வார வெளியீடு ஆகும். உலகில் வெளியிடப்படும் மிக முக்கியமான பருவ இதழ்களின் பொருளடக்கங்களை தந்துதவுகின்ற உசாத்துணை சாதனமாகும். இது பின்வரும் பதிப்புகளாக வெளியிடப்படுகின்றது:

* Physical Chemical and Earth Sciences
* Social & Behavioural Sciences
* Agriculture, Biology & Environmental Sciences
* Clinical Medicine
* Engineering Technology & Applied Sciences
* Arts & Humanities

உள்ளடக்கம்: ஒவ்வொரு இதழும் பின்வரும் விசேட அம்சங்களை உள்ளடக்குகின்றது:

* அண்மையில் வெளியிடப்பட்ட நூல்களின் பொருளடக்கங்கள்: இது புதிய, பல ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்களின் பொருளடக்கங்களைத் தருகின்றது. முழுமை யான நூல்விபரத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* தலைப்புச் சொல்லடைவு: ஒரு வாரத்திற்கான இதழில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு கட்டுரையிலிருந்து உள்ள முக்கிய சொற்களுக்கான சொல்லடைவைக் கொண்டது. குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த கட்டுரைகளின் அமைவிடத்தை மிக விரைவில் கண்டறிய இது உதவுகின்றது.
* ஆசிரியர் சொல்லடைவும் முகவரி வழிகாட்டியும்: தேவைப்படும் கட்டுரைகளை மீளவும் பிரதி எடுப்பதற்கு உதவும் வகையில் ஆசிரியர்களின் முகவரி விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* ஒவ்வொரு இதழிலும் உள்ளடக்கப்படும் பருவ இதழ்களின் வெளியீட்டாளரின் விபரங்களை இது உள்ளடக்குகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட சில சொல்லடைவுத் தளங்கள்

மேற்கோள் சொல்லடைவுத் தளம்
http://www.brainyquote.com

சிறந்த மேற்கோள்களின் சொல்லடைவுத் தளமாக இது விளங்குகின்றது. இம் மேற்கோள்களை விடயரீதியிலும் அகரவரிசை ரீதியிலும் மேற்கோளாசிரியரின் பெயர் ரீதியிலும் தேடுதல் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பிரசித்தி பெற்ற மேற்கோளாசிரியரின் பட்டியலும் காணப்படுகிறது. Brainmedia என்ற நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது.

பருவஇதழ்ச் சொல்லடைவுத் தளங்கள்

http://www.journalseek.net

இத்தளம் சுமார் ஒரு லட்சம் வரையிலான பருவ இதழ்களின் சொல்லடைவாக அமைகிறது. பிரதானமான 25 வகை சார்ந்து இவற்றுள் தேடல் செய்ய முடிகிறது. 3392 வெளியீட்டாளர்கள் இச் சொல்லடைவாக்கத்தில் இணைந்து கொண்டுள்ளனர் ஆயினும் இது கட்டுரைகளின் உள்ளடக்கத்தையோ சுருக்கத்தையோ பெற வெளியீட்டாளரின் அனுமதியையே நாடி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.pio.chadwyck.co.uk

இத்தளம் 300 ஆண்டுகள் வகை வெளியான பருவ இதழ்களை சொல்லடைவாக்கம் செய்து தருகின்றது. Proquest llc. என்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் இத்தளம் பருவ இதழ் களுக்கான ஆவணக்காப்பகம் போலத் தொழிற்படுகிறது. இலவச பரிசோதனை (Free trial) முறையில் தேடல் செய்து தேவையானவற்றை கட்டண அனுகுகை முறையில் பெறும் வசதியும் காணப்படுகிறது.

கட்டுரைச் சொல்லடைவுத் தளங்கள்

http://www.publist.com

தொழில் நுட்ப தர மேம்பாட்டை இலக்காக கொண்டு புதிய நுட்பங்களை அறிமுகம் செய்துவரும் இத்தளம் சஞ்சிகைகள் பருவ இதழ்கள் செய்திக் கடிதங்கள், என 150,000 வெளியீடுகளில் தேடல் செய்யும் வசதியைக் கொண்டுள்ளது. இதில் 4 பிரதான தரவுத் தளங்கள் உள்ளன. கட்டுரைத் தேடலுக்கும் மருத்துவத் தேடலுக்கும் உள்ள தரவுத்தளங்கள் மிகப் பெரியவையாக உள்ளன.

http://www.scopus.com

Elsevier என்ற வெளியீட்டாளரின் கட்டுரைச் சொல்லடைவுத் தளமாக இது அமைகிறது. கட்டுரைகளையும் சுருக்கங்களையும் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள ஏற்ற வகையில் சாதாரண தேடலுக்கும் மேற்பட்ட தேடலுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. வாழ்க்கை அறிவியல் சார்ந்த 3400 விடயத் தலைப்புகளிலும் பௌதீக அறிவியல் சார்ந்து 5500 விடய தலைப்புகளிலும் மருத்துவ அறிவியல் சார்ந்து 5300 தலைப்புகளிலும் சமூக விஞ்ஞானம் சார்ந்து 2500 தலைப்புகளிலும் தேடல் செய்ய முடியும். பதிவு செய்யப்பட்ட வாசகர்கள் மாத்திரமே சுருக்கங்களை பதிவிறக்கம் செய்யவும் முடியும்.

சொல்லிசைவுத்தொகுதித் தளங்கள் (Concordances)

http://www.dundee.ac.uk

இத்தளமானது University of Dundee பல்கலைக்கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது The wels concordances என்ற பெயரில் ஆங்கில சொல்லிசைவுத் தொகுதிகளை உருவாக்க ஊக்குவிக்கும் வகையில் அவற்றை உருவாக்கும் மென்பொருளையும் அறிமுகம் செய் துள்ளதுடன் உருவாக்கப்பட்ட சொல்லிசைவுத் தொகுதிகளின் தொகுப்பினையும் கொண்டு உள்ளது. http://www.concordance.com

இத்தளம் சொல்லிசைவுத் தொகுதிகளின் தொகுப்பாக உள்ளது. பைபிள் ஷேக்ஷ்பியர் முதலிய பல தலைப்புக்களின் கீழ் சொல்லிசைவுத் தொகுதிகள் இதில் ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.studylight.org

இத்தளமும் சொல்லிசைவுத் தொகுதிகளின் தொகுப்பாக உள்ளது. இதிலுள்ள பிரதான நான்கு சொல்லிசைவுத் தொகுதிகள் கிறீஸ்தவ புனித நூல் சார்ந்தவையாகவும் சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட சொற்களின் தொகுதிகளாகவும் உள்ளன. விசேடமாக குறுக்கு உசாத்துணை வசதிகளையும் இவை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

9.4 சாராம்சங்கள் [Abstracts]

குறித்த ஒரு விரிவான தகவலை அதன் தகவல் உள்ளடக்கம் சிதையாத வகையில் முக்கிய அம்சங்களைச் சுருக்கித் தருபவை சாராம்சங்கள் அல்லது சுருக்கங்கள் எனப்படும்.

குறித்த நூல் கட்டுரை அல்லது அதையொத்த ஒன்றின் உள்ளடக்கத்தினை அதன் முக்கிய அம்சங்களை மாறாத வகையில் விளங்கும் வகையில் சுருக்கமாக விபரிப்பது சுருக்கம் - ODLIS.

முதல்நிலைத் தகவல் வளங்களான நூல்கள், பருவ இதழ்க்கட்டுரைகள், ஆய்வு அறிக்கைகள், சொற்பொழிவுகள், மாநாட்டு இலக்கியங்கள், நேர்காணல்கள் போன்றவற்றில் உள்ள தகவல்களை அதே ஒழுங்கில் ஆசிரியரின் மொழியில் தர முனைவதே சாராம்சங்கள் ஆகும். ஒரு மூல ஆவணத்தை சுலபமாக அணுகமுடியாத பாவனையாளருக்கு உதவுவதே சாராம்சத்தின் இலக்கு ஆகும். அத்துடன் இத்தகைய சுருக்கங்களின் தொகுதிகள் ஆய்வாளர்களுக்கு தகவல் தேடலில் ஒரு முழு ஆவணத்தை முழுமையாக வாசிப்பதால் ஏற்படும் நேர விரயத்தைத் தவிர்க்க உதவுகின்றன.

இவை சுட்டும் சாராம்சங்கள், விளக்கச் சாராம்சங்கள் என இருவகைப்படும்.

சுட்டும் சாராம்சங்கள் ஆவணம் தரும் தகவலை சுருக்கமாக தருவது ஆகும். இவை மூல ஆவணத்தை அப்படியே பிரதிபலிக்க முடியாதவை என்பதனால் ஆய்வாளருக்கு பெரிதும் உதவுவதில்லை. அதேசமயம் நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவையை மேற்கொள்வதற்கு பெரிதும் பயன்படுபவை.

விளக்கச் சாராம்சங்கள் நீண்டவையாகவும் முக்கிய தரவுகளை வழங்கக்கூடியவையாகவும் இருப்பதனால் ஆய்வு நோக்கில் மூல ஆவணத்தை பார்க்க வேண்டிய அவசியம் இருப்பதில்லை. விளக்கச் சாராம்சங்கள் பொதுவாக ஆவணத்தின் வியாபகத் தன்மை, நோக்கம், பயன்படுத்தப்பட்ட முறைகள் ஆய்வின் கண்டுபிடிப்புகள் அவற்றின் முடிவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

பயன்பாடு

* தகவல்களை பரவலாக்கம் செய்ய உதவுதல்.
* முடிவுப் பாவனையாளர்களால் அவர்களுக்குத் தேவையான தகவல்களை தெரிவு செய்ய உதவுதல்.
* கணினி முறைமையின் கீழ் விரைவாக தகவல்களைப் பெற உதவுதல்.
* புதிய அறிவுடன் பாவனையாளர் தம்மை காலத்துக்குக்காலம் புதுப்பித்துக் கொண்டிருக்க உதவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

* குறிப்பிட்ட கட்டுரையானது தனது தகவல் தேவைக்குப் பொருத்தமானதா இல்லையா என்பதை சுட்டிக்காட்டுவதன் மூலம் தேவையற்ற தேடுகையையும் நேர விரயத்தையும் தடுக்க உதவுதல்.
* குறிப்பிட்ட மொழியில் எழுதப்பட்ட ஒரு கட்டுரைக்கு பாவனையாளருக்கு தெரிந்த மொழியில் சாராம்சம் ஒன்றை உருவாக்குவதனூடாக ஓரளவிற்காவது மொழித் தடையை நீக்க உதவுதல்.
* சொல்லடைவாக்கத்தை மேம்படுத்த உதவுதல்.
* குறிப்பிட்ட பருவ இதழில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் ஒரே பொருட்துறை சார்ந்த தகவல்களை ஒன்றாகக் கொண்டுவர உதவுதல்.
* தகவல் சாராம்சமாக உருவாக்கப்பட்டிருப்பின் மூல ஆவணத்துக்குரிய பதிலீடாக தொழிற்படுதல்.
* குறித்த கட்டுரை சார்ந்து மீளாய்வு ஒன்றை தயாரிப்பதற்கான உதவு கருவியாகத் தொழிற்படல்.
* குறித்த துறை சார்ந்து பின்னோக்கிய தகவல் தேடுகைக்கு உதவுதல்.
* குறிப்பிட்ட இலக்கியம் சார்ந்து பின்னோக்கிய தேடுதலை துரிதப்படுத்த உதவுதல்.

வரையறைகள்

* சாராம்சங்கள் பலதரப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்படுவதனால் அதற்குள் நுழைவதற்கு முன்னர் ஆரம்பத்தில் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை வாசிப்பது முக்கியமாகும்.
* சாராம்சங்களில் பயன்படுத்தப்படும் பொருட்தலைப்புகள் தெளிவற்றதாகவும், ஒத்த பொருளுள்ள பல பொருட் தலைப்புகள் பயன்படுத்தப்படினும் பாவனையாளர் பல பொருட்தலைப்புகளின் கீழ் தேடுதலை மேற்கொள்ள வேண்டிய தேவையுண்டு.
* குறிப்பிட்ட கட்டுரையானது அதற்குப் பொருத்தமான பொருட்தலைப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படாது இருக்கும் சமயங்களில் முதல் முயற்சியிலேயே தேடிய தகவலைப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் தேடுதலை மேற்கொள்வதும் மிகச் சிரமமானதாக மாறிவிடும்.
* குறித்த கட்டுரை பற்றிய விபரமானது குறிப்பிட்ட சில சாராம்சப் பருவஇதழில் உள்ளடக்கப்படும் கால எல்லை சிலசமயம் இரு வருடங்களையும் தாண்டிவிடும் என்பதால் உடனடித் தகவலை பெறுவது கடினமாக இருக்கும்.
* பாவனையாளரின் ஆர்வத் துறை சார்ந்த அனைத்து இலக்கியங்களையும் குறிப்பிட்ட சாராம்சப் பருவ இதழ் உள்ளடக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே பாவனையாளர் தனித்து ஒரு சாராம்சப் பருவ இதழில் மட்டும் தங்கியிருக்க முடியாது.
* சாராம்சப் பருவ இதழைப் பயன்படுத்த முதல் அதில் உள்ளடக்கப்பட்ட பருவ இதழ் பற்றிய விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள்

i. Chemical Abstracts [Easton:American Chemical Society, 1907 - vol1- Weekly]

வரலாறு: Review of American Chemical Research என்ற வடிவில் 1897-1906 காலப்பகுதியில் Journal of the American Chemical Society இன் ஒரு பகுதியாக வெளியிடப்பட்ட இது 1907இல் இருந்து இன்றைய வடிவில் உள்ளது. வேதியியல் மற்றும் வேதியியல் பொறியியல் துறை சார்ந்து உலகின் மிகப் பெருமளவிலான வேதியியல் வெளியீடுகளில் இருந்து சாராம் சங்களையும் சொல்லடைவுகளையும் இது உள்ளடக்குகின்றது. உலகின் அதிகாரபூர்வ சாராம்சப் பருவ இதழாக மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் வெளியிடப்படுகின்ற வேதியியல் சார்ந்த பருவ இதழ்களிலிருந்து சாராம்சங்களை உருவாக்குகின்ற பரந்த சேவையாகவும் இது கருதப்படுகின்றது. தகவலை அதிகமாகக் கொண்டிருக்கும் தன்மை, துல்லியத்தன்மை, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட தன்மை, புலமைத்துவ பாங்கு அதிகமான சொல்லடைவு உருவாக்கம் என்பன இதன் சிறப்பம்சங்களாகும்.

உள்ளடக்கம்: ஆங்கிலத்தில் வெளியாகின்ற பருவ இதழ்க் கட்டுரைகள், காப்புரிமை விபரங்கள், மீளாய்வுகள், தொழிநுட்ப அறிக்கைகள், தனிப்பொருள் நூல்கள், மாநாட்டுத் தொடர்கள், கருத்தரங்குத் தொடர்கள், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் ஆகியவை தொடர்பான சாராம்சங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு வாராந்த வெளியீடும் இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்று சாராம்சங்களையும் பகுதி 2 வெளியீடுகளுக்கான சொல்லடைவையும் கொண்டுள்ளது. இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட பகுப்பாக்கத் திட்டத்தின் அடிப்படையில் 80 பொருட்துறைப் பிரிவுகளுக்குக் கீழ் பதிவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருட்துறைப் பிரிவின்கீழும் பருவ இதழ்க் கட்டுரைகள் மற்றும் மாநாட்டுக் கட்டுரைக ளுக்கான சாராம்சங்கள் முதலாவதாகவும், புதிய நூல்களின் அறிவிப்புகள் இரண்டாவதாகவும் காப்புரிமைகள் சார்ந்த சாராம்சங்கள் மூன்றாவதாகவும் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு இதழும் மூலச் சொற்களுக்கான சொல்லடைவு, எண்ணிடப்பட்ட காப்புரிமைக்கான எண்ணிடப்பட்ட சொல்லடைவு, காப்புரிமைகளுக்கான சொல்லிசைவுத் தொகுதி, ஆசிரிய சொல்லடைவு என்பவற்றைக் கொண்டுள்ளன.

ii. Dissertation Abstract International - 2001 [Michigan: University Microfilm International, 1941 - Monthly].

வரலாறு: வட அமெரிக்காவிலும் உலகம் முழுவதிலுமிருந்து 550 அங்கத்துவ நிறுவனங்களினால் UMI க்கு சமர்ப்பிக்கப்படும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் சாராம்சங்களை இது உள்ளடக்குகிறது. இதன் முதலாவது தொகுதி 1941ல் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்: இது பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது:

A - மனிதப் பண்பியலும் சமூக அறிவியலும்
B - அறிவியலும் பொறியியலும்
C - உலகப் பொதுத்துறைகள்

பகுதி Aயும் Bயும் வடஅமெரிக்க நிறுவனங்களாலும் உலகிலுள்ள ஏனைய நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட மாதாந்த வெளியீடாகும். பகுதி C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976 ம் ஆண்டில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டு ஐரோப்பிய ஆய்வுக்கட்டுரைகளின் ஒரு பகுதியை உள்ளடக்குவதுடன் 1989 இல் இருந்து உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்ட ஒரு காலாண்டு வெளியீடாகவும் வெளியிடப்படுகிறது.

பகுதி - A

1 - தொடர்புகளும் கலைகளும்
2 - கல்வி
3 - மொழி, இலக்கியம், மொழியியல்
4 - தத்துவம் மதம் இறையியல்
5 - சமூக அறிவியல்

பகுதி - B

1 - உயிரியல் துறைகள்
2 - புவிச் சரிதவியல்
3 - சுகாதார சூழல் அறிவியல்
4 - பௌதீகவியல்
5 - உளவியல்

பகுதி - C உலகப் பொதுத்துறைகள்

ஒழுங்கமைப்பு:

பதிவுகள் ஆய்வுக்கட்டுரைகளின் ஆசிரியரால் தெரிவு செய்யப்படுகின்ற பொருள் துறைகளின் அடிப்படையில் அகரவரிசையில் ஒழுங்குசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு பொருள் வகையின் கீழும் ஆசிரிய அடிப்படையில் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

iii. Library and Information Science Abstract [London: Library Association,1950-.- Bi-monthly]

வரலாறு: இலண்டன் நூலக சங்கத்தின் பெறுமதி மிக்க வெளியீடாகக் கருதப்படும் இது இரு மாதங்களுக்கொருமுறை வெளியிடப்படுகின்றது.

உள்ளடக்கம்: நூலகவியல், தகவல் அறிவியல் மற்றும் நூலகர்களின் ஆர்வத்துறைகளாக உள்ள நூல் வெளியீடு, நூல் விற்பனை, பிரதியாக்கம் போன்ற பொருட்துறைகளை உள்ளடக்குகின்றது. கிட்டத்தட்ட 400 பருவ இதழ்கள், மாநாட்டு பறிப்புகள், நூல்கள், மற்றும் சிறுநூல்களிலிருந்து கட்டுரைகளை சாராம்சப்படுத்துகின்றது.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு இதழும் பகுப்பாக்கப் பகுதி, ஆசிரியர் சொல்லடைவு, அகரவரிசைப் பொருட் சொல்லடைவு ஆகிய மூன்று பகுதிகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. வகுப் பெண்ணுடன் பொருட்தலைப்புகளும் உப தலைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரிய மற்றும் பொருட் சொல்லடைவுகள் வருடாந்த ரீதியில் தொகுத்து வெளியிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட சில சாராம்சங்களுக்கான இணையத் தளங்கள்

http://www.abstracts.com

சுருக்கத் தளங்களுக்கான இணையதள விபரத் தொகுப்பாக அமையும் இத்தளம் மிகச் சிறந்த சுருக்க வழிகாட்டித் தரவுத் தளங்களை வரிசைப்படுத்துகின்றது. மில்லியன் கணக்கிலான சுருக்கங்களின் தொகுதியாக இது விளங்குகின்றது.

http://www.csa.com/factsheet/LISA

இத்தளம் Library and Information Science Abstract என்ற நூலக தகவல் விஞ்ஞானம் சார்ந்த சுருக்கத் தளமாக அமைகிறது. இது 1969 முதல் இன்று வரையான சுமார் 68 நாடுகளைச் சேர்ந்த 440 பருவ இதழ் கட்டுரைகளின் சுருக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இவை சுமார் 22 மொழிகளில் உள்ளன. இரு வாரங்களுக்கு ஒரு முறை Update செய்யப்படுகிறது. 2007 டிசம்பரில் சுமார் 303, 263 சுருக்கங்களை உள்ளடக்கியிருந்தது. தேடலுக்கேற்ற அகராதிச் சுட்டி, பயன்படுத்துவோருக்கான வழிகாட்டிக் குறிப்புக்கள் இதில் இணைப்பிலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பத்து

இலங்கை உசாத்துணை சாதனங்கள்

10.1 அரசாங்க வெளியீடுகள் [Government Publications]

இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற உத்தியோகபூர்வமான வெளியீடுகள் அரசாங்க வெளியீடுகள் எனப்படும். எந்த ஒரு நாட்டிலும் ஒரு அரசாங்கம் அதிகாரபூர்வமான வெளியீட்டாளராக இருந்து அரசாங்க அறிக்கைகள், சட்டங்கள், விசேட ஆணைக்குழு அறிக்கைகள் போன்றவற்றை வெளியிடுகின்றது. இவ் வெளியீடுகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகள்
2. பாராளுமன்றம் சாராத வெளியீடுகள்

10.11 பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகள் [Parliamentary Publications]

* ஹன்சாட் (Hansard): இவை தேசிய அரசுப் பேரவையால் நடாத்தப்படும் விவாதங்களின் உத்தியோகபூர்வ பதிவேடுகள் ஆகும். இவ்விவாதங்களே பின்னர் சட்டங்களாக உருவெடுக்கின்றன.
* பருவகால ஆணைப் பத்திரங்கள் [Sessional Papers]: அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் அச்சிடப்படும் அதிகாரபூர்வமான அறிக்கைகளின் சுருக்கமாக இவை உள்ளன. குறிப்பிட்ட பருவகாலத்தில் விவாதிக்கப்பட்ட அறிக்கை என்பதால் இப்பெயரில் வழங்கப்படுகிறது. உ-ம்: உயர்கல்விக் குழுவின் அறிக்கை



ஹன்சாட

சட்ட அறிக்கைகள்


குடியாட்சியறிக்கை


நிர்வாக அறிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சட்ட அறிக்கைகள் [Acts] : அரசாங்கத்தால் வெளியிடப்படும் புதிய அரசாங்கச் சட்டங்களின் அதிகாரபூர்வ வெளியீடுகள் ஆகும். 1957 வரை இவை சட்டங்களையும் சட்ட மூலங்களையும் உள்ளடக்கிய சட்டம் சார்ந்த ஆவணங்கள் [Legislative Enactments and Acts of Ceylon] என்ற பெயரில் தொடர் தொகுதிகளாக வெளிவந்தன. அதற்குப் பின்னர் இலங்கைச் சட்டங்கள் என்ற பெயரில் தனித்தனிப் பிரசுரங்களாக வெளிவருகின்றன. எ-டு: Acts of Sri Lanka.
* இலங்கைக் குடியாட்சி அறிக்கை [Ceylon Civil List]: இது ஒழுங்கற்ற ஒரு வெளியீடாகும். நிர்வாகக் கோவை தொடர்பான அறிக்கைகளை இது உள்ளடக்குகின்றது.
* பாராளுமன்றத் தொடர்கள் [Parliamentary Series]: தேசிய அரசுப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற குறிக்கப்பட்ட ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை இது உள்ளடக்கும்.
* வரவு செலவுத் திட்ட உரை [Budget Speech]: குறிப்பிட்ட ஆண்டிற்கான வரவு செலவு தொடர்பான விபரங்களையும் அவ்வாண்டில் துண்டு விழும் தொகையை அறியப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் உள்ளடக்கி ஒவ்வொரு ஆண்டும் நிதியமைச்சரினால் வழங்கப்படும் உரை.
* வர்த்தக கணக்காய்வு தொடர்கள் [Trading Account Series]: ஒவ்வொரு நிதியாண்டும் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்தக் கணக்குகளை கணிக்கும் ஓர் அறிக்கையாகும்.

10.12 **பாராளுமன்ற வெளியீடுகள் அல்லாதவை** [Non Parliamentary Publications]

இவை பல்வேறு அமைச்சுக்கள், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், போன்றவற்றின் வெளியீடுகளாகும்.



* நிர்வாக அறிக்கைகள் [Administrative Reports]: பல்வேறு அமைச்சின் கீழுள்ள திணைக்களத் தலைவர்களினால் அல்லது பணியாளர்களினால் வெளியிடப்படுகின்ற வருடாந்த அறிக் கைகள் இதில் அடங்கும். அத்துடன் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள அரசாங்க அதிபர்களின் அறிக்கைகளும் அடங்கும். இவை பின்வரும் 5 பகுதிகளாக வெளியிடப்படுகின்றன:

 1. குடியுரிமை
 2. வருமானம்
 3. நீதி சம்பந்தப்பட்டது
 4. கல்வி அறிவியல் கலை
 5. பொது வேலை

இவை ஒழுங்கற்ற வெளியீடுகளாக இருப்பினும் ஆய்வாளருக்கு ஒரு முக்கியசாதனமாகும்.

* இலங்கை அரசாங்க வர்த்தமானி [Government Gazette]: ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் வெளியிடப்படுகின்ற இது இலங்கை அரசாங்கத்தின் வாராந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு ஆகும். இது ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது பகுதி மேலும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

பகுதி 1

1. பொதுத் தகவல்கள், இலங்கை அதிபரால் செய்யப்பட்ட நியமனங்கள்.
2. விளம்பரங்கள், அரசாங்க நியமன வெற்றிடங்கள்.
3. காப்புரிமைகள் வர்த்தக சின்னங்களின் விபரங்கள்.

பகுதி 2 சட்டம் சம்பந்தப்பட்ட தகவல்கள்.

பகுதி 3 நிலம் காணி சம்பந்தப்பட்ட தகவல்கள்.

பகுதி 4 உள்ளூராட்சி வெற்றிடங்களும் கேள்விப் பத்திரங்களும்.

பகுதி 5 வெளியீடுகளின் அட்டவணை.

பதிவு செய்யப்பட்ட நூல்கள் பருவ இதழ்கள் செய்தித் தாள்கள் போன்றவற்றைக் கொண்டு தொகுக்கப்பட்ட தொகுதிகளாக உள்ள இவ் அட்டவணையானது 10 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆங்கில அகர வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

* அதிவிசேட வர்த்தமானி [Extra ordinary Gazette]: இது அரச அனுமதியுடன் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற சில தீர்மானங்கள் அடங்கிய வெளியீடாகும்.
* தொழிலாளர் வர்த்தமானி [Labour Gazette]: இந்த வர்த்தமானியானது தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், சம்பளம், வேலை சம்பந்தமான விடயங்கள் போன்ற வற்றை உள்ளடக்கியுள்ளது.
* திணைக்கள வெளியீடுகள் [Departmental Publications]: ஒவ்வொரு திணைக்களங் களாலும் திணைக்களம் சார்ந்த தகவலை உள்ளடக்கி வெளியிடப்படும் வெளியீடு களாகும். எ-டு விவசாயத் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், புதை பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் போன்றவை.
* குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்: இத் திணைக்களம் மூன்று முக்கிய வருடாந்த வெளியீடுகள் மூலம் புள்ளிவிபரத் தகவல்களை வழங்குகிறது.

  1. இலங்கை ஆண்டு நூல் [Sri Lanka Year Book]
  2. இலங்கை புள்ளிவிபரச் சுருக்கம் [Statistical Abstract of Sri Lanka (BLUE BOOK)]
  3. இலங்கை புள்ளிவிபர கையடக்க நூல் [Statistical Pocket Book of Sri Lanka]

தனக்கென சொந்தமான அச்சகத்தைக் கொண்டுள்ள இது, இம் மூன்று வெளியீடுகள் தவிர வேறு பல வெளியீடுகளையும் வெளியிடுகிறது.

i. இலங்கை ஆண்டு நூல் [கொழும்பு: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 1948– வருடாந்த வெளியீடு]

இலங்கையின் உத்தியோகபூர்வ பதிவேடுகளிலிருந்து தொகுக்கப்பட்ட சமூக, பொருளாதார, பொதுநிலைப்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்களை ஆண்டுரீதியாகத் தொகுத்துத் தரும் ஓர் உசாத்துணை சாதனமாகும். வருடாந்த பொது அறிக்கைகளை உள்ளடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் சமூக, வரலாற்று, கலாசார, புவியியல், அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களையும் இது உள்ளடக்குகிறது. இதன் முதலாவது வெளியீட்டில் 1936-46 காலப்பகுதி சுருக்கமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 1960ம் ஆண்டிலிருந்து மூன்று மொழிகளிலும் இது வெளியிடப்படுகிறது.

ii. Ceylon Blue Book 1821-1938. Annual



ஆரம்ப காலத்திலிருந்து 1820 வரை இவ் வருடாந்த புள்ளிவிபரத் தொகுப்பு காலனித்துவ செயலாளரின் பொறுப்பில் இருந்தது. 1921-24 காலப்பகுதியில் இது தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பொறுப்பிலும், 1925-29 வரை புள்ளிவிபர அலுவலக அமைப்புகள் திணைக்களத்தின் பொறுப்பிலும், 1930-32 வரை பதிவாளர் திணைக்களத்தின் பொறுப்பிலும், 1933-36 வரை பதிவாளர் திணைக்களமும் வர்த்தக புலனாய்வு இயக்குனர் இருவரதும் இணைந்த பொறுப்பிலும், 1937-38 வரை வர்த்தக தொழில் திணைக்களத்தின் பொறுப்பிலும் இருந்தது. பொதுவாக இவ் வெளியீட்டின் பொருட்டு செயலாளரினால் படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டுக் கையெழுத்துப் பிரதிகளாகக் காலனித்துவ நாட்டுக்கு அனுப்பப்படும் இவ் வெளியீடானது இலண்டனிலுள்ள காலனித்துவ செயலாளர் திணைக்களத்தால் தொகுக்கப்படுகிறது. 1862ம் ஆண்டின் பின்னர் இலங்கையிலேயே வருடாவருடம் அச்சிடப்பட்ட இது இரண்டாம் உலகப்போரின் போது 1939ம் ஆண்டுக்கான வெளியீடு தொகுக்கப்படத் தேவையில்லை என அரச செயலாளரிடமிருந்து இலங்கை ஆளுனருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலுடன் நிறுத்தப்பட்டது.

iii.புள்ளிவிபரச் சுருக்கம் [Statistical Abstract] [கொழும்பு: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், 1949–]

வரலாறு: அமைச்சுகள், அரச திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடன் வெளியிடப்படும் இது 1938ம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்ட இலங்கை Blue book இல் உள்ள தகவல்களை உள்ளடக்கும் அதே சமயம் அதில் இல்லாத தகவல்களையும் உள்ளடக்கி வெளியிடப்படும் ஒரு புள்ளிவிபர வெளியீடு ஆகும். இதன் முதலாவது பதிப்பு 1937-48 காலப் பகுதியை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. 1961ல் வெளியிடப்பட்ட 13வது பதிப்பிலிருந்து சிங்களம், ஆங்கிலம் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுகிறது.

உள்ளடக்கம்: சனத்தொகை, வேலைவாய்ப்பு, விவசாயம், கல்வி, வர்த்தகம் கைத்தொழில், தட்பவெப்பநிலை, தொடர்பு ஊடகம், சமூகநிலைமைகள் போன்ற பரந்துபட்ட பொருட்துறைகளின் புள்ளிவிபரத் தகவல்களை இது உள்ளடக்குகிறது. ஒவ்வொரு வருடமும் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டு, சமகாலப்படுத்தப்பட்டு, இயன்றளவு கடந்த வருடத் தகவல்களை நடப்பு வருடத்தில் தர முயற்சி செய்கிறது. ஆய்வாளர்களுக்கு உதவும் பொருட்டு சாத்தியமான இடங்களில் தகவல்கள் ஐந்து வருட தொடராக வழங்கப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில் புள்ளிவிபர இலக்கங்கள் அண்மித்த இறுதி இலக்கத்துக்கு முழுத்தானமாக்கப்பட்டுள்ளது. சகல புள்ளிவிபரங்களும் டிசம்பர் 31ல் முடிவடைந்த கலண்டர் வருடங்களுக்கு உரியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. **இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் புள்ளிவிபரக் கையடக்க நூல்** [Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka] [**கொழும்பு: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்க அமைச்சு,** 1967– ISBN: 955-577-032-8]

புள்ளிவிபரத் தரவுகளைப் புதுப்பித்து இன்றைய நிலைக்கேற்பத் திருத்தியமைத்து கூடியவரை அண்மைக்காலத் தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுகிறது. இதிலுள்ள தகவல்கள் புவியியல், சனத்தொகையும் வாழ்நிலைப் புள்ளிவிபரங்களும், சமூக நிலைமைகள் - வீட்டு வசதி, வேலை வசதி, சுகாதாரம், கல்வி, உயர்கல்வி, சமூகசேவை, கிராம அபிவிருத்தி போன்றன, விவசாயம், கைத்தொழில், வியாபாரம், போக்குவரத்தும் செய்தித் தொடர்பும், தேசிய கணக்குகள், பொதுநிதி, உள்ளூராட்சி, பிரயாணம், பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், விசேட அம்சங்கள் என 13 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

v. Ferguson's Srilanka Directory [Colombo: The Associated Newspapers of Ceylon, 1859-]


THE
CEYLON DIRECTORY:
CALENDAR,
AND
COMPENDIUM OF USEFUL INFORMATION,
FOR
1874-75.

ஒப்சேவர் பத்திரிகையின் பதிப்பாசிரியராக இருந்த Alistair Mackenzie Ferguson என்பவரால் 1859ம் ஆண்டு ~ Ceylon Summary of Useful and Plantation Gazettee For 1859 என்ற பெயரில் இது தொகுக்கப்பட்டது. இது பின்னர் Ferguson Ceylon Directory எனவும் இலங்கை குடியரசான பின்பு Ferguson Sri Lanka Directory எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அளவிலும் வடிவத்திலும் கடந்த கால பதிப்புகளிலிருந்தும் இது வேறுபடுகிறது.

1992-1993க்குரிய இப்புதிய 125வது பதிப்பானது மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது.

பகுதி - 1 பொது வழிகாட்டி

பகுதி - 2 பெருந்தோட்டங்களுக்கான வழிகாட்டி

பகுதி - 3 முகவரிகளுக்கான பொது வழிகாட்டி

பெறப்படக்கூடிய தகவல்கள்

1. பொதுத்தகவல்
   - ✶ கலண்டர், விடுமுறை நாட்கள், தேசிய சமய விழாக்கள், தேசிய தினங்கள்.
   - ✶ இலங்கையின் ஆறுகள், குளங்கள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள்.
   - ✶ நாணயங்கள், நிறைகளும் அளவைகளும்.
   - ✶ கடந்த கால ஆளுனர்கள் பிரதமர், அதிபர்கள் பெயரும் காலமும்.
   - ✶ கடந்த கால தலைமை நீதிபதி, காலனித்துவ செயலாளர் பெயர்கள்.
   - ✶ வரலாற்று நிகழ்வுகள்.
   - ✶ அரசியலமைப்பின் வளர்ச்சி, அரசியல் கட்சிகள் பற்றிய விபரம்.
   - ✶ குடித்தொகை தரவுகள், மழைவீழ்ச்சி, வெப்பநிலை பற்றிய விபரங்கள்.
2. உத்தியோகபூர்வ தகவல்கள் அரசியலமைப்பு, தூதுவர்கள் பற்றிய தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உள்ளூராட்சி தகவல்கள், ஆளுனர் பெயர், அமைச்சரவை, உள்ளூராட்சி சம்பந்தமான தகவல்கள்.
4. அஞ்சல் தகவல்கள்.
5. சுற்றுலா

   சுற்றுலா முகவர் நிலையங்களின் முகவரி, விமான சேவை, ஓய்வு விடுதிகள், விருந்தினர் விடுதிகளின் பட்டியல்.

   சுற்றுலாப் பயணிகள் வருகை நாடு வாரியாக.
6. வங்கிகள்

   வரலாறு, அலுவலர் விபரம், முகவரி, பிரதேச அலுவலகங்கள்.
7. வர்த்தக நிறுவனங்களின் பட்டியல்.
8. பொது நிறுவனங்களின் பட்டியல்.
9. பகுப்பாக்க ஒழுங்கில் அமைந்த நிறுவனங்களின் பட்டியல்.
10. நிறுவனங்களின் முகவரி, அங்கத்தவர் விபரம், நோக்கம் போன்றவை.
11. கல்வி சார் நிறுவனங்களின் விபரங்கள்.
12. வர்த்தகம்.
13. கைத்தொழில் நிறுவனங்களின் முகவரி, உற்பத்திப் பொருட்கள்.
14. விவசாயம்.
15. பெருந்தோட்டம்.
16. நபர்களின் முகவரிகள்.
17. வெளியூர் முகவரிகள்.

காலனித்துவ காலம் முதல் இன்றுவரையிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள வர்த்தக சமூகத்தினரிடையே பிரபல்யம் பெற்று விளங்கும் இவ் வழிகாட்டி இலங்கை பற்றி பயனுள்ள சரியான தகவல்களின் சுரங்கமாக உள்ளது. எனினும் ஒழுங்கான கால இடைவெளியில் இது வெளிவராமையால் உசாத்துணை சாதனமாக இதைத் தெரிவு செய்வதில் தயக்கநிலை காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

vi. இலங்கை தேசிய நூல்விபரப் பட்டியல். [Sri Lanka Nationa Bibliography] **(கொழும்பு: தேசிய நூலக சேவைகள் சபை, 1963–]**



வரலாறு: இலங்கை தேசிய நூல்விபரப்பட்டியலின் ஆரம்ப வடிவமானது 1885ம் ஆண்டின் அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள் போன்றவற்றின் அதிகார பூர்வ பதிவேடாக அரச வர்த்தமானியின் பகுதி -5ல் வெளியிடப்பட்டது. 1962ல் தேசிய சுவடிக்காப்பகத் திணைக்களத்தின் தேசிய நூல்விபரப்பட்டியல் பிரிவு அமைக்கப்பட்டதன் பின்பு 1963ம் ஆண்டில் முதலாவது தொகுதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் பட்டது. இது ஒரு காலாண்டு வெளியீடாகும். 1973ம் ஆண்டிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை இப்பணியை மேற்கொண்டு மாதாந்த வெளியீடாக வெளிவருகிறது.



உள்ளடக்கம்: கட்டாய நூல்வைப்புச் சட்டத்தின் அடிப்படையில் பெறப்படுகின்ற இலங்கை வெளியீடுகளை உள்ளடக்கமாக கொண்டிருக்கிறது. நூல்களுடன் பருவ இதழ்களின் முதலாவது இதழும், பத்திரிகையின் முதலாவது வெளியீடும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: இப்பட்டியல் முறையே சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நூலின் ஒவ்வொரு பகுதியும் பகுப்பாக்கப் பகுதி ஒன்றையும் அதனுடன் இணைந்த வகையில் ஆசிரிய தலைப்பு, பொருட் சொல்லடைவையும் கொண்டிருக்கும். பகுப்பாக்கப் பகுதி தூயி தசமமுறைப் பகுப்புத் திட்டத்தை பின்பற்றுகிறது. பொருட் சொல்லடைவு சங்கிலித் தொடர் சொல்லடைவைப் பின்பற்றுகிறது. நூல்விபரப் பட்டியலின் இறுதியில் இலங்கை பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்படுகின்ற நூல்களின் விபரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வாசகரின் இலகுவான பாவனையைக் கருத்தில் கொண்டு நூலின் பிற்பகுதியில் ஆசிரிய, பொருள் சொல்லடைவு கொடுக்கப்பட்டுள்ளது.

vii. A Bibliography of Ceylon: A Systematic Guide to the Literature on the Land, People, History and Culture [Compiled by H.A.I. Gonetileke .-2nd Unchanged Edition. - Zug : Switzerland, Inter Documentation Company, 1973. 5vols]



உள்ளடக்கம்: இலங்கை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள ஆர்வமுடையவர்களுக்கு உதவும் வகையில் இலங்கையின் ஆரம்ப காலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலான இலங்கையின் நிலம், மக்கள், வரலாறு கலாச்சாரம் தொடர்பாக மேற்கு மொழிகளில் வெளியிடப்பட்ட இலக்கியங்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத் துத் தரும் சிறந்த உசாத்துணை வளமாக கருதப்படுகிறது. முதல் இரு தொகுதிகளிலும் ஆங்கிலத்தை பிரதானமாக கொண்ட 16 மொழிகளிலான 11,630 பதிவுகளும் ஏனைய மூன்று தொகுதிகளிலும் 6445 பதிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இதிலுள்ள பதிவுகள் எந்தவொரு பகுப்பாக்கத் திட்டத்துக்கும் பொருந்தி வராமையைக் கருத்தில் கொண்டு, இதன் ஆசிரியரால் இதற்கென விசேடமாக வடிவமைக் கப்பட்ட பகுப்பு முறையில் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் உப பிரிவுகளுடன் 30 பிரதான பிரிவுகளின் கீழ் இப்பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. பதிவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு ஆக்கமும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது. இதில் கொடுக்கப்பட்ட ஆசிரிய சொல்லடைவு 4 பகுதிகளைக் கொண்டது. தனிப்பட்ட ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாளர், மொழிபெயர்ப்பாளர் என்போருக்கு முதலாவது பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. புனைபெயர் ஆக்கங்கள், கூட்டு நிறுவனங்கள், பெயர் அறியா ஆக்கங்கள் ஆகியவற்றுக்குத் தனித்தனிப்பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கை தொடர்பான நூல்களைக் கொண்டுள்ள நூலகங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்கள் தனியாக அட்டவணைப் படுத்தப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பருவ இதழ்களுக்கெனக் கொடுக்கப்பட்ட சுருக்கப் பெயர்களுக்கான அட்டவணையானது இலங்கையில் வெளியிடப்பட்ட பருவ இதழ்களின் விபரங்களை அறிய உதவுகிறது.

ix. நூல் தேட்டம்: குறிப்புரையுடனான நூல் விபரப் பட்டியல் தொகுதி 3,2005 [என். செல்வராஜா.– தொகுதி 1.– ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 2002–]

வரலாறு: ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலாகக் கருதப்படும் இதனது முதலாவது தொகுதி 2002இல் வெளிவந்தது. இதன் இரண்டாவது தொகுதி 2004 இலும் மூன்றாவது தொகுதி 2005இலும் வெளியிடப்பட்டது. தொகுதிக்கு ஆயிரம் நூல்கள் என்ற வகையில் இதுவரை 3000 நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்: இந்த மூன்றாவது தொகுதியில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களதும் வெளியீட்டாளர்களதும் ஆயிரம் நூல்கள் பற்றிய நூல்விபரத் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. துண்டுப் பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி ஒளிப்பதிவு நாடாக்கள், இறு வட்டுகள் என்பன இத் தொகுப்பில் உள்ளடக்கப்படவில்லை. பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள் என்பனவும் இத்தொகுப்பில் தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் தனி ஆவணமாகக் கருதும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்பு மலர்கள், கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. குறித்த நூலொன்றின் பல்வேறு பதிப்புகள் வெளிவரும் சமயங்களில் அவை தனித்தனிப் பதிவாகக் கருதப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள் பதிப்புகள் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இத்தொகுதியானது பகுப்பாக்கப்பகுதி, தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என மூன்று மூன்று பிரிவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

பிரிவு 1: பகுப்பாக்கப்பகுதி - நூல் பற்றிய பிரதான பதிவுகள் பொருள் வாரியாக வகைப் படுத்தப்பட்டு தொடரெண் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. நூல் பற்றிய தரவுகள் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற் பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம் , சர்வதேச தராதர நூல் எண்ணும் தரப்பட்டுள்ளது. வளை அடைப்புக்குறிக்குள் நூலினை அச்சிட்டோரின் விபரம் உள்ளடக்கப் பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் நூல் பற்றிய சுருக்கக் குறிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தொகுதியிலிருந்து அரிய நூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது. பதிவுகள் தூயி தசமப் பகுப்புத் திட்டத்தின் பிரதான வகுப்பை அடிப்படையாகக் கொண்டது.

பிரிவு 11: தலைப்பு வழிகாட்டி: பதிவுகள் சொல்லொழுங்கின் அடிப்படையில் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 111: ஆசிரிய வழிகாட்டி: ஆசிரியர்,பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர், புனைபெயர்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இயற்பெயரையும் புனைபெயர் இரண்டிலும் எழுதும் ஆசிரியர்களின் பதிவுகளுக்கு பார்க்க மேலும் பார்க்க வழிகாட்டிப்பதிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Bibliography of Bibliographies [A Guide to Catalogue, Indexes, Bibliographies and Bio Bibliographies in Sri Lanka. Compiled by Leelangi Wanasundara. Colombo: National Library, 1990. ISBN 955-9011-55-3]

இலங்கை நூலக விஞ்ஞானத் துறைக்குக் கிடைத்த அரிய பங்களிப்பாகவே இது கருதப்படுகின்றது. 1832-1987 காலப் பகுதியை உள்ளடக்கியது எனினும் 1948க்குப் பிற்பட்ட இலக்கியங்களே கூடுதல் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. நூலகங்களினால் வெளியிடப்படும் நூல்வரவுப் பட்டிகளோ அல்லது இலங்கை நூலகச் சங்கத்தினால் பரீட்சை அடிப்படையில் தொகுக்கப்படும் நூல்விபரப் பட்டியல்களோ இதில் உள்ளடக்கப்படவில்லை. இத்தொகுப்புக்கான பிரதான உசாத்துணை வளமாக H.A.I. குணதிலகாவின் Bibliography of Ceylon பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதைவிட ஆரம்பகால நூல்களின் விபரங்கள் கொழும்பு மியூசிய நூலகத்திலும், தேசிய ஆவணக் காப்பக நூலகத்திலும் பெறப்பட்டிருக்கின்றன.
ஒழுங்கமைப்பு: இது நான்கு பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பிரிவு 1. பொருட்சொல்லடைவு. UN Macro Thesaurus இல் உள்ள சொற்களைப் பயன்படுத்திப் பதிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சொற்கருவூலச் சொற்களுடன் பொருந்திவராத தலைப்புகளுக்கு விசேட சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பதிவுகள் அனைத்தும் UN பொருட்தலைப்புகளின் கீழ் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பொருட் தலைப்பின் கீழும் நூல்விபரப்பட்டியலின் சுருக்கத் தலைப்பு அகரவரிசையில் குறிக்கப்பட்டுள்ளது.

பிரிவு 2. பட்டியல்களும் சொல்லடைவுகளும்

பிரிவு 3 நூல்விபரப் பட்டியல்கள்

பிரிவு 4. சுய நூல்விபரப்பட்டியல். தனிநபர்களதும் நிறுவனங்களதும் வெளியீடுகள் இதில் உள்ளடக்கபபட்டுள்ளன. பதிவுகள் ஆங்கில அமெரிக்க விதியைப் பின்பற்றித் தயாரிக்கப் பட்டுள்ளன.

Union List of Current Periodicals in Universities, Postgraduate Institutes and Graduate Institutes of Sri Lanka - 2002. University of Peradeniya Library Publication - 8

வரலாறு: இலங்கையின் கல்வி, ஆய்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை மையமாகக் கொண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பருவ இதழ் சேகரிப்பை விருத்தி செய்வதற்கான அடிப்படையாக இது விளங்குகிறது. பல்கலைக்கழக நூலக அமைப்பில் வாசகருக்குப் பருவ இதழ்களின் சிறந்த பாவனையை வழங்குவதும், பருவ இதழின் பொருளடக்க விபரங்களை பரிமாற்று அடிப்படையில் பயன்படுத்துவதும், வாசகருக்குப் பருவ இதழ்க் கட்டுரைகளை வழங்குவதுமே இப்பட்டியலின் நோக்கமாகும். இதன் முதல் பட்டியல் 1993ல் தொகுக்கப்பட்டது. இரண்டாவது பட்டியல் 1994லும் மூன்றாவது பட்டியல் 1997 லும் நான்காவது பட்டியல் 2002லும் தொகுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்: இலங்கையிலுள்ள 13 பல்கலைக்கழகங்கள், 6 பட்டப் பின்படிப்பு நிறுவனங்கள், 5 பட்டப் படிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றால் பெற்றுக் கொள்ளப்படும் 3858 பருவ இதழ் களின் விபரங்கள் அகர வரிசை ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. கொள்வனவுக் கட்டளைகள் உறுதிப்படுத்தப்படாமையால் நூலக தகவல் அறிவியல் நிறுவனத்தின் (NI-LIS) பருவ இதழ்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

ஒழுங்கமைப்பு: ஒவ்வொரு பதிவும் பல்கலைக்கழகத்தின் சுருக்கப் பெயர், நூலகத்தில் பருவ இதழின் அமைவிடம் (பிரதான நூலகம்,கிளை நூலகம்) இறுதியாக பெற்றுக்கொண்ட தொகுதி, வெளியிடப்பட்ட ஆண்டு, ஈட்டல் முறை போன்ற விபரங்களை உள்ளடக்கி பருவ இதழ் தலைப்புகளின் கீழ் அகர வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

Union List of Periodical Holdings of Health Science Libraries in Sri Lanka. [2nd ed. ed. by W.R.G. De Silva and A.N.J. De Cruse. Colombo: Health Literature Libraries and Information Services(Hellis). ISBN 955-9021-12-5]

இலங்கையிலுள்ள மருத்துவம் சார்ந்த நூலகங்களினால் பெறப்படும் பருவ இதழ் பற்றிய விபரங்களைத் தொகுத்துத் தரும் உசாத்துணை சாதனம் இதுவாகும்.

இதன் இரண்டாவது பதிப்பானது பின்வரும் விசேட அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

1. மதுபானம், மருந்து தகவலுக்கான நிலைய நூலகம், களனிப் பல்கலைக்கழக மருத்துவ நூலகம், சுகாதார அமைச்சு நூலகம், மருத்துவ தாதிப் பயற்சிப் பாடசாலை நூலகம், ஆகிய நான்கு நூலகங்களின் பருவ இதழ் இருப்புகள் இதன் இரண்டாவது பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. 1461 பருவ இதழ் தலைப்புகளிலிருந்து 2வது பதிப்பில் 1830 ஆக உயர்ந்துள்ளது.
3. பதிவுகள் வெறும் தொகுதி, வெளியிட்ட வருடம் ஆகிய தரவுகளை மட்டுமன்றி மேலும் பல புதிய தகவல்களை உள்ளடக்கியுள்ளன.
4. சாத்தியமான இடங்களில் ISSN எண் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கமைப்பு: அறிவியல் சார் பருவ இதழ்களுக்கான உலகப் பட்டியல் நியமங்களின் அடிப்படையில் அகர வரிசை ஒழுங்கு பின்பற்றப்பட்டுள்ளது. முழுமையான தலைப்பு தடித்த எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு தலைப்பினதும் மூலச் சொற் களின் அடிப்படையில் அகர வரிசை ஒழுங்கு பின்பற்றப்பட்டுள்ளது. பெயரடைகள், இணைப்புச் சொற்கள், பிரதிப் பெயர்கள் போன்றன கருத்தில் கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு பதிவும் தலைப்பு, வெளியிட்ட இடம், வெளியீட்டாளர், வெளியீட்டு திகதி, பருவ இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு, பருவ இதழ் வெளிவரும் கால இடைவெளி, குறிப்புகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாகப் பெறப்பட்ட பருவ இதழ் இருப்புப் பற்றிய விபரங்கள் ஒற்றைப் பதிவாகவும், முழுமையற்ற இருப்புகள் அரைப் புள்ளியால் வேறுபடுத்தியும் காட்டப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகப் பெறப்படும் பருவ இதழ்களுக்குத் திறந்த பதிவும் நிறுத்தப்பட்ட பதிவுகளுக்கு மூடிய பதிவும் பின்பற்றப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Periodical Article Index. [Colombo: National Library and Documentation Centre, vol. 1,no.1, 1998- Quarterly – ISSN 1391-3387.]



தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் வெளியிடப்படும் இப் பருவ இதழ் சொல்லடைவானது இலங்கையில் வெளியிடப்படும் பருவ இதழ்களிலுள்ள கட்டுரைகளுக்கான பட்டியலைக் கொண்டது. சிங்கள, ஆங்கில, தமிழ் மொழிகளில் வெளியிடப்படும் பருவ இதழ் கட்டுரைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் தேசிய நூலகத்தினால் பெறப்படுகின்ற பருவ வெளியீடுகள், தேசிய நூலக சேகரிப்புக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பருவ வெளியீடுகள், சர்வதேச தரப்படுத்தப்பட்ட இலக்கமிடல் திட்டத்தின் கீழ் சுய விருப்பத்தின் பேரில் வைப்பிலிடப்பட்ட பிரதிகள் என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Sri Lanka Science Index- 1986 [Compiled by Mrs.W.G.S Wimalasena. Colombo: Sri lanka Scientific and Technical Information Centre(SLSTIC), Natural Resources Energy and Science Authority of Sri Lanka (NARESA), Vol.1,no.1 1977- Quaterly.]



வரலாறு: இலங்கை இயற்கைவள சக்தி விஞ்ஞான அதிகார சபையின் அறிவியல் தொழில்நுட்ப தகவல் நிலையத்தினால் காலாண்டு ரீதியில் தொகுக்கப்படும் இச்சொல்லடைவின் முதலாவது தொகுதி 1977ல் வெளிவந்தது.

உள்ளடக்கம்: ஸ்ரீலங்காவில் வெளியிடப்படுகின்ற பருவ இதழ்கள் அறிக்கைகள் செய்தித் தாள்களிலிருந்து வெளியாகும் அறிவியல் தொழில்நுட்பத் துறை சார்ந்த தகவல்களைப் பதிவு செய்கின்ற ஓர் உசாத்துணை சாதனம் இதுவாகும். அத்துடன் அறிவியல் தொழில் நுட்பத் துறைக்கு தொடர்புத்தன்மையுடைய சமூக அறிவியல் கட்டுரைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவில் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்காவைப் பற்றி வெளி நாட்டு இதழ்களில் வெளியாகும் கட்டுரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இயற்கை அறிவியல், பிரயோக அறிவியல் என்பவற்றுடன் தொடர்புடைய பொருட் தலைப்புக்கள் UDCஅடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன (பரந்த பொருட் தலைப்புக்களில் ஆசிரிய அகர வரிசையில்). ஒவ்வொரு பதிவுக்கும் தொடர்எண் வழங்கப் பட்டுள்ளது. ஆங்கிலம் சிங்களம் என இரு பிரிவுகளாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதியில் ஆசிரிய சொல்லடைவு வழங்கப்பட்டுள்ளது. சொல்லடைவு படுத்துவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பருவ இதழ்கள் நூலின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. 1983 தொடக்கம் SLSI என்ற தரவுத்தளங்களில் இச் சொல்லடைவு சேமிக்கப்படுவதுடன் ஒவ்வொரு பதிவும் ஆசிரியர், தலைப்பு, பருவ இதழ் பெயர்தொகுதி எண், இதழ் எண், மாதம், வருடம், பக்கங்கள் ஆகிய நூல்விபரத் தகவல்களைக் கொண்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Conference Index [கொழும்பு: தேசிய நூலகசேவைகள் சபை, 1988]

3வது சர்வதேச ஆசிய தேசிய நூலகங்களின் இயக்குனர்களுக்கான மாநாட்டில் இத்தகைய சொல்லடைவு ஒன்றின் உருவாக்கம் பற்றி வலியுறுத்தப்பட்டது. மலேசியா போன்ற நாடுகளில் மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுப்பட்டறைகள் என்பன தேசிய நூலகத்தில் பதியப்படுவதுடன் மாநாட்டு வெளியீடுகளின் ஒரு பிரதியும் நூலகத்துக்கு அனுப்பப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையின் ஒரு பிரிவாக 1985ல் உருவாக்கப்பட்ட சமூக அறிவியல் ஆவணவாக்க நிலையமும் இம்முயற்சியை மேற்கொண்டு 1976-86 காலப் பகுதியில் நடைபெற்ற மாநாடுகள் தொடர்பான சொல்லடைவை 1988ல் வெளியிட்டது. 1987-90க்கான சொல்லடைவு 1992ல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இச்சொல்லடைவானது சமூக அறிவியல் சார்ந்த மாநாட்டு விபரங்களை மட்டுமே உள்ளடக்குகின்றது. அமைச்சுகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் அமைப்புகள், தேசிய சர்வதேசிய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. மாநாடு தவிர முக்கியமான கருத்தரங்குகள், ஆய்வுப் பட்டறைகள், சர்வதேச நிறுவனங்களினால் நிதியுதவி செய்யப்பட்ட பயிற்சி நெறிகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: 1976-86 காலப்பகுதிக்கான சொல்லடைவில் 2,153 பதிவுகள் உள்ளது. ஒவ்வொரு பதிவும் தலைப்பு, திகதி, தொடர், நிதியுதவி, ஒழுங்கமைப்பாளர் போன்ற விபரங்களை உள்ளடக்குகின்றது. AACR - 11 *விதியினடிப்படையில் சில திருத்தங்களுடன் பதிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நூலின் தொடக்கத்தில் சுருக்கக் குறியீடுகளுக்கான அட்டவணையும் இறுதியில் தூயி தசமப் பகுப்புத் திட்டத்தைப் பின்பற்றி சில மாற்றங்களுடன் தொகுக்கப்பட்ட பொருட்சொல்லடைவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பதினொன்று

நிறுவன வளங்கள்

11.0 நிறுவன வளங்கள்

குறித்த ஒரு நோக்கத்தை அல்லது பல நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக மக்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பே நிறுவனம் எனப்படுகின்றது. நிறுவனங்களிடமிருந்து பின்வரும் வழிமுறைகளினடிப்படையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்:

* நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள்.
* நிறுவனத்திற்குள்ளே இயங்கும் நூலகங்கள் போன்ற சேவை அமைப்புகள் மற்றும் உள்ளக அறிக்கைகள்.
* நிறுவனத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகள்.
* வேண்டுகோளின் அடிப்படையில் நிறுவனத்தினால் வழங்கப் படும் வசதிகள் (எ-டு. உபகரணங்களை வாடகைக்கு விடுதல்)

நிறுவன வளங்களை நான்கு பிரதான பிரிவுகளுக்குள் வகைப் படுத்த முடியும்

1. வர்த்தக நிறுவனங்கள்
2. கல்விசார் நிறுவனங்கள்
3. உத்தியோகபூர்வ நிறுவனங்கள்
4. தொழில்சார், ஆய்வு நிறுவனங்கள்

11.1 வர்த்தக நிறுவனங்கள்

உற்பத்திப் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் இத்தகைய நிறுவனங்கள் முழுக்க முழுக்க இலாப நோக்கில் இயங்குபவையாகும். இத்தகைய நிறுவனங்களினால் வெளியிடப் படும் வழிகாட்டிகள் கையேடுகள் மூலமாக குறித்த நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி எண், உற்பத்திப் பொருட்கள், சேவைகள், பணியாளர்கள், ஆய்வு முயற்சிகள் போன்ற விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

பயன்பாடு

* உற்பத்திப் பொருட்கள் சேவைகள் தொடர்பான விசேட தகவல்களைப் பெறுதல்,
* உற்பத்திகள், ஆய்வுகள், அபிவிருத்தி தொடர்பான தகவல்களைப் பெறுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உதவி கேட்கும் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் விசேட தகவல்களை வழங்குதல்.

வரையறைகள்

* தங்களது சொந்த உற்பத்திப் பொருட்களுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து ஏனைய நிறுவனங்களின் பொருட்கள் தொடர்பான ஆலோசனை வழங்கத் தயங்குதல்'
* தாம் உதவ முன் வரும் சந்தர்ப்பங்களில் தமது உற்பத்திப் பொருட்களை தாம் உதவ நினைப்பவர்கள் வாங்க வேண்டும் என எதிர்பார்க்கும் தன்மை

எடுத்துக்காட்டுகள்

KOMPASS: [2Vols; London: Croydon,Annual]

ஒழுங்கமைப்பு: முதலாவது தொகுதி பிரிட்டனில் உள்ள குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் விநியோகஸ்தர்களது விபரங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது. உற்பத்திகள் சேவைகளுக்கான அகரவரிசைச் சொல்லடைவு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலியன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. பகுப்பாக்கப் பிரிவில் உள்ள பகுப்பாக்க எண்ணைப் பயன்படுத்தி குறிப்பிட்ட விநியோகஸ்தரின் பெயர், முகவரி என்பவற்றைப் பெறமுடியும்.

இரண்டாவது தொகுதி குறித்த கம்பனி பற்றிய விரிவான தகவலைக் கொடுக்கிறது. கம்பனிகளுக்கான அகரவரிசைச் சொல்லடைவு கம்பனியின் அமைவிடம் போன்ற விபரங் களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் கம்பனியின் பெயர், முகவரி, தொலைபேசி எண், இயக்குனர் பெயர், அலுவலக நேரம், வங்கிகள் நிறைவேற்றதிகாரிகள் பெயர், பங்கு முதலீடு, அலுவலக எண்ணிக்கை, வர்த்தகத்தின் தன்மை போன்ற விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

பெல்ஜியம், லக்ஸம்பேர்க், டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி, ஹொலண்ட், மேற்கு ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ஹொங்கொங், யப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின், நோர்வே, சுவீடன், சுவிற்சர்லாந்து, தாய்வான் போன்ற நாடுகளில் உள்ள நிறுவனங்களின் விபரங்கள் தனித்தனி தொகுதிகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

11.2 கல்விசார் நிறுவனங்கள்

பல்கலைக்கழகங்கள், பல்தொழினுட்பக் கல்லூரிகள், கல்லூரிகள், ஆய்வு அபிவிருத்தி நிறுவனங்கள் போன்றவை இதற்குள் உள்ளடங்கும்.

பயன்பாடு

* தொழில் நுணுக்கங்கள், உபகரணப் பாவனை தொடர்பான நிபுணத்துவ ஆலோசனையை பெறுதல்.
* மிகவும் முன்னேற்றகரமான, ஆழமான பொருட்துறைகள் தொடர்பான தகவலை வழங்குதல்.
* குறிப்பிட்டதுறை சார்ந்த மிக அண்மைக் கால கல்விசார் ஆய்வுகளின் விபரங்களை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒப்பந்தப் பணிகள் அல்லது கிடைக்கக்கூடிய வசதிகள் மூலம் தகவலை வழங்குதல்.
* நூலக சேவைகளை வழங்குதல்.

வரையறைகள்

* தொலைபேசியினூடாக தனிப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணுதல் சிரமம் தருவதொன்று.
* பல்கலைக்கழகங்கள் மிகப் பெரும் பொருட்துறைகளுடன் சம்பந்தப்படுவதனால் உத்தியோகபூர்வ தொடர்புகளைப் பேணுதல் சிரமமானது என்பதுடன் பல்கலைக்கழ கங்களின் பரந்த பணி தொடர்பான முழுத் தகவல்களையும் அறிந்து கொள்வதும் கடினமானதாகும்.
* விடுமுறை தினங்களில் தொடர்பாடல் சிரமமானதாகும்.

எடுத்துக்காட்டுகள்

Research Centers Directory.2Vols.

வரலாறு: விவசாயம், வானியல், நடத்தையியல், அறிவியல், உயிரியல், புவிச்சரிதவியல், வர்த்தகமும் பொருளியலும், கணினியியல், கல்வி, பொறியியலும் தொழில்நுட்பமும், அரசியல் பொது விவகாரங்கள், மானுடவியலும் சமயமும், தொழிலாளர் தொழில் உறவுகள், சட்டம், மருத்துவம், பௌதிகம், புவியியல், பிரதேச, பிராந்திய கற்கைகள் போன்றவற்றுள் நிரந்தர அடிப்படை தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளும் இலாப நோக்கற்ற பல்கலைக்கழக தொடர்புடைய 8300 ஆய்வு நிறுவனங்களுக்கான வழிகாட்டியாக இது விளங்குகிறது.

ஒழுங்கமைப்பு: 1960 ம் ஆண்டு இந்த வழிகாட்டி உருவாக்கப் பட்ட காலம் முதற்கொண்டு அகரவரிசையில் 16 பொருள் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட இவ்வழிகாட்டி 10 வது பதிப்பிலிருந்து நிகழ்கால ஆய்வு நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கிறது. 5 பெரிய வகுப்புக் களின் கீழ் 17 பிரிவுகளில் இது ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

1. வாழ்க்கை அறிவியல்
   * விவசாயம், மனைப்பொருளியல், போசாக்கு
   * உயிரியல் விஞ்ஞானம், பராமரிப்பு, புவிச்சரிதவியல்
   * மருத்துவ விஞ்ஞானம்
2. பௌதிக அறிவியலும் பொறியியலும்
   * வானவியலும் அண்டவியலும்
   * கணினியும், கணிதவியலும்
   * பொறியியலும் தொழில்நுட்பமும்
   * பௌதிகவியலும் பூமியியலும்
3. தனியார் பொதுக் கொள்கையும் விவகாரங்களும்
   * வர்த்தகமும் பொருளாதாரமும்
   * அரசாங்கமும் பொதுவிவகாரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தொழிலாளர் கைத்தொழில் உளவுசார்
* சட்டம்

4. சமூக கலாசார கற்கைகள்
   * வா
   * நடத்தையியலும் சமூகவியலும்
   * கல்வி
   * மானுடவியலும் சமயமும்
   * பிரதேச, பிராந்திய கற்கைகள்

5. பல்துறை ஒழுங்கமைப்பு நிலையங்கள்
   * பல்துறை செய்திட்டங்கள்
   * ஆய்வு ஒருங்கமைப்பு அலுவலகங்கள்

முதலாவது தொகுதி முதல் 7 பொருள் துறைகளையும், இரண்டாவது தொகுதி மிகுதி 10 துறைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பதிவும் தொடரெண், நிறுவனத்தின் பெயர், ஆய்வுநிலையத்தின் பெயர், முதலெழுத்துப் பெயர் இருப்பின் உ-ம் அந்த விபரம், முகவரி, தொலைபேசி எண், நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, நிறவனத்தின் இயக்குனர் பெயர், நிறுவனம் இணையாக தொழிற்படுகிறதா போன்ற விபரம் நிறுவனத்திற்கான நிதி விற்பனை உதவிகள், அலுவலர்கள், ஆய்வின் பெறுமதி, ஆய்வுத்துறை, விசேட உபகரண வசதி (கணினி மயமாக்கப்படல்) வெளியீடுகளும் சேவைகளும், கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிநெறிகள் போன்றவாறும் உதவும் செயற்பாடுகள், நூலக வசதிகள் போன்ற விபரங்களை கொண்டுள்ளன. வாசகருக்கு உதவும் வகையில் ஆய்வு நிலையங்களுக்கான அகரவரிசை சொல்லடைவு, ஆய்வு நிலையங்களின் சுருக்க விளக்கப் பெயர் சொல்லடைவு, நிறுவன சொல்லடைவு, விசேட வசதிகள் தொடர்பான சொல்லடைவு, பொருள் சொல்லடைவு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

11.3 உத்தியோகபூர்வ நிறுவனங்கள்

தேசிய உள்ளூர் அரச திணைக்களங்கள் நூலக தகவல் சேவைகள், உட்பட நிர்வாக ரீதியில் அரசாங்கத்துடன் இணைந்து இயங்கும் நிறுவனங்கள் இவ்வகைக்குள் அடங்கும், புள்ளிவிபரம், சட்டவாக்கம் உட்பட அனைத்து உத்தியோகபூர்வ தகவல்களுக்கும் இத்தகைய வளங்கள் உதவக்கூடியவையாகும்.

பயன்பாடு

* புள்ளிவிபரம் சட்டவாக்கம் உட்பட தேவைப்படும் தகவல் அனைத்தையும் வழங்குதல்.
* அரசாங்க வேலைகள் தொடர்பான அனைத்து கிளைகளுடனும் இணைந்த தகவலை வழங்குதல்.

வரையறைகள்

* மிகப் பெரும் நிறுவனங்களில் தொலைபேசியினூடாக குறிப்பிட்ட நபரைத் தொடர்பு கொள்வது கடினமான தொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பெரும்பாலான திணைக்களங்கள் தமது தனித்தியங்குவதன் காரணமாக தமது பிரிவுக்கு வெளியே என்ன நடைபெறுகிறது என்ற அறிவு இல்லாதவர்களாக இருப்பதே இயல்பாகும்.
* சில சமயங்களில் தொலைபேசியின் ஒரு மையத்திலிருந்து பல இணைப்புக்களுக்கு நகரவேண்டியிருப்பதுடன் இது நேரத்தை வீணடிக்கும் செயலாகவும் உணரப் பட்டுள்ளது.

எடுத்துக்காட்டுகள்

Britan 2001. 52nd Edition. The Official Yearbook of the United Kingdom [London:The Stationary Office,1940-. ISBN: 0 11 621279 9]

வரலாறு: இது முதன்முதலில் 1940ல் வெளியிடப்பட்டது. பிரித்தானியாவின் அண்மைக்காலத் தகவல்களை வழங்குகின்ற மிகச் சிறந்த உசாத்துணை வளமாக இது கருதப்படுகிறது. அத்துடன் அரசாங்கக் கொள்கைகளின் பிரதான அம்சங்களையும் இது உள்ளடக்குகிறது. அரச திணைக்களங்கள் முகவர் நிலையங்கள் உட்பட கிட்டத்தட்ட 250 நிறுவனங்களின் முழு ஒத்துழைப்புடன் இது தொகுக்கப்பட்டுள்ளது. 50 வருடங்களுக்கு மேலாக வீடுகள் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் நூலகங்கள் உலகம் முழுவதிலுமுள்ள வர்த்தக ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றின் இறாக்கைகளை அலங்கரிக்கும் சிறந்த உசாத்துணை வளமாக இது நோக்கப்படுகிறது.

உள்ளடக்கம்: இன்றைய பிரிட்டனைப்பற்றி அறிவதற்கான அதிகாரபூர்வ வழிகாட்டியாக இது அமைகிறது. தெளிவும் நேரடித்தன்மையும் நிறைந்த இந்த ஆண்டு நூலானது பிரித்தானிய தேசத்தின் வாழ்வின் ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெறும் அம்சங்களை விபரிப்பதுடன் தேவைப்படும் இடங்களில் மிகப்பிந்திய புள்ளிவிபரங்களையும் வழங்குகிறது. பொருட் துறைகள் பொருளாதாரம், வர்த்தகம், தொழில், சக்தி, அறிவியல், பொதுநிதி முதற்கொண்டு ஊடகம், கலாச்சாரம், நிதி, உடல்நலம், சூழல் பாதுகாப்பு வரை உள்ளடக்குகிறது. இந்தப் புதிய பதிப்பானது இணைய விரிவாக்கம் அசையும் தொடர்பாடலின் வளர்ச்சி உட்பட அறிவியல் தொழினுட்பத்தின் அண்மைக்கால வளர்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. அட்டவணைகள் விளக்கப் படங்கள் தேசப்படங்கள் வரிப்படங்கள் என்பவற்றுடன் இன்றைய பிரிட்டனைப் பற்றிய 150க்கும் மேற்பட்ட புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு: இது பின்வரும் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. பிரிட்டனும் மக்களும்
2. அரசும் வெளிநாட்டு விவகாரங்களும்
3. சமூக கலாச்சார விவகாரங்கள்
4. சூழலும் போக்குவரத்தும்
5. பொருண்மிய விவகாரங்கள்

வாசகருக்கு மேலதிக தகவல்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு பாடப்பிரிவின் இறுதியிலும் பிரதான புள்ளிவிபர வெளியீடுகளும் முக்கிய ஆவணங்களும் பட்டியல்படுத்தப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Grant Register. [London:Macmillan, 1989 -91. Every Two Years]

பட்டப்பின்படிப்பு மேற்கொள்பவருக்கும், தொழில் சார், உயர்மட்ட வாழ்க்கைத் தொழில் சார் பயிற்சி தேவைப்படுபவருக்கும் சர்வதேச, தனியார் நிறுவனங்களினாலும், அரச முகவர் நிலையங்களாலும் வழங்கப்படுகின்ற நிதி உதவி பற்றிய தகவல்களை வழங்குகின்ற உசாத் துணை சாதனமாக விளங்குகிறது. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ளவர்களுக்கு வழங்கப்படக்கூடிய பட்டங்கள் பற்றிய முழுமையான உடனடித்தகவலை வழங்குவதை நோக்காகக் கொண்டதாகும். எனினும் பட்டியல் படுத்தப்பட்டுள்ள பெரும்பாலான உதவிகள் சர்வதேச ரீதியில் பிரயோகப்படுத்தக் கூடியவையாக இருப்பதுடன் சர்வதேச புலமைப்பரிசிலையும், பரிமாற்ற வாய்ப்புகளையும் தேடும் ஏனைய நாடுகளின் மாணவர்களுக்கு பயன்தரக்கூடிய உசாத்துணை சாதனமாகும். பின்வரும் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

* புலமைப்பரிசில், ஆதார ஊதியம், ஆய்வு நன்கொடை.
* பரிமாற்ற வாய்ப்புகள், ஆய்வு கால கற்கை, பரிசு, பயண உதவித்தொகை.
* உபகரணம், வெளியீடு, மொழிபெயர்ப்புக்கான உதவித் தொகை, கூட்டங்கள், கற்கை நெறிகள், மாநாடுகள் என்பவற்றிற்கு சமுகமளிப்பதற்கான உதவு தொகைகள்.
* கலைத்துவம், அறிவியல்சார் செயல்திட்டங்கள் அனைத்துக்குமான உதவுதொகை.
* போட்டிகள், பரிசுகள் போன்றவற்றுக்கு.
* தொழில்சார், வாழ்க்கைத்தொழில்சார் பரிசு.
* அகதிகள், சிறுபான்மைக்குழுக்கள், எதிர்பாராத நிதிப் பிரச்சினைகள் எதிர்நோக்கும் மாணவர்.

11.4 தொழிற்றிறன்சார்,ஆய்வு நிறுவனங்கள்

தனித்தனித் தொழில்களில், வர்த்தகங்களில் ஈடுபடுபவர்களுக்கு உதவுவதற்கும், குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த அறிவை மேம்படுத்தவும் இத்தகைய நிறுவனங்கள் உருவாக்கப்பட் டுள்ளன. தொழில் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், சபைகள், ஆய்வு நிறுவனங்கள் போன்றவை இதற்குள் உள்ளடங்குகின்றன.

பயன்பாடு

* ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த அல்லது தொழில் சார்ந்த, அல்லது வர்த்தகம் சார்ந்த நிபுணத்துவ தகவல்களை வழங்குதல்.
* விசேட நூலக தகவல் வளங்களையும் சில சமயங்களில் ஆய்வு வசதிகளையும் வழங்குதல்.

வரையறைகள்

* மட்டுப்படுத்தப்பட்ட சேவையை சில நிறுவனங்கள் கொண்டிருக்கக்கூடும்.
* அங்கத்தவர் அல்லாதோருக்கு தகவல் வழங்குவதை மறுக்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பன்னிரெண்டு

மனித வளங்கள்

மனித வளங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

12.1 பொருட்துறை நிபுணர் [Subject Specialist]

கோட்பாடு சார்ந்த அறிவினைத் தமக்குள் தேக்கி வைத்திருக்கும் கல்விசார் உத்தியோகத்தர் முதற்கொண்டு அனுபவ அறிவு நிரம்பப்பெற்ற உடல் உழைப்பைப் பிரதானமாகக் கொண்ட தொழில் முயற்சியாளர் வரை மனித வளங்கள் பலதரப்படும். எடுத்துக்காட்டாக விவசாய விஞ்ஞானம் தொடர்பாக உயர் கல்வி பெற்ற உத்தியோகத்தரை விட அனுபவ அறிவுடைய உள்ளூர் விவசாயியை விவசாயம் சார்ந்த சிறந்த மனித வளமாகக் கருத இடமுண்டு. இதைப்போன்றே கைவினைத் தொழிலின் நெளிவு சுழிவுகளைப் பயிற்றப்பட்ட கைவினைத் தொழிலாளரிடம் அதிகம் பெற்றுக் கொள்ளும் போது அவர்களை சிறந்த மனித வளமாக கருத இடமுண்டு.

12.2 கட்புலனாகாக் கல்லூரிகள் [Invisible Colleges]

குறிப்பிட்ட அறிவுத் துறையில் அல்லது செயற்திட்டத்தில் அல்லது குறிப்பிட்ட பணி ஒன்றில் ஒன்றாகப் பணிபுரிகின்ற துறைசார் நிபுணர் கூட்டத்தின் தனிப்பட்ட தொடர்புகள், ஆவணப் பரிமாற்றங்கள், கூட்டங்களில் சமுகமளித்தல், அவர்களுடனான தனிப்பட்ட கலந்துரையாடல்கள், தேனீர் மேசை உரையாடல்கள் போன்றவை உலகம் முழுவதிலும் உள்ள ஒரே துறை சார்ந்த அறிவுஜீவிகளை ஒன்றிணைக்கும் வல்லமை வாய்ந்ததாகும். இவர்களிடையே நடைபெறும் நெருக்கமான தொடர்பாடல்கள் கட்புலனாகாக் கல்லூரிகள் என்ற பதத்தால் குறிப்பிடப்படுகின்றது.

12.3 புதுமைச்சங்கிலி [Innovation Chain]

மனிதனது கண்டுபிடிப்புகளால் பெறப்படும் அறிவானது ஒன்றில் உற்பத்திப் பொருளாக அல்லது சேவையாக மக்களுக்குப் போய்ச் சேருகிறது. கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் மக்கள் ஆரம்பத்தில் மிகக் குறைவாகவே இருப்பர். கண்டுபிடிப்புகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான ஆதாரங்கள், புள்ளி விபரங்கள் போன்றவற்றை தேடுவதனூடாக ஒரு புதிய வாசக சமூகம் உருவாக இடமுண்டு. இவர்கள் மனித வளங்களினூடாகவும் இத்தேடுதல் நடைபெறும் வாய்ப்புண்டு என்பதனால் கண்டுபிடிப்புகள் ஆரம்பத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் உழைக்கும் அத்தனை பேரும் இங்கு மனித வளங்களாக கருதப்படுவர்.

12.4 தகவல் இடைத்தரகர்கள் [Information Interme Diaries]

தகவல் தேடுபவருக்கும் தகவலுக்கும் இடையில் பொருத்தப்பாடு ஒன்றை கொண்டு வருபவர்கள் இவர்கள். இப் பொருத்தப்பாட்டை மிக விரைவாகவும் நிறைவாகவும் செய்ய வேண்டிய கடப்பாடு இவர்களுக்கு உண்டு என்பதனால் இவர்களிடம் குறித்த சில ஆளுமைப் பண்புகளும் திறன்களும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அவர்களுக்கு இருக்கும் பணிகளை விட மிகக் கூடுதலான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தகவலுக்குள் ஊடுருவுதல் தகவல் உற்பத்தியாளருக்கும் தகவல் நுகர்வோருக்கும் இடையிலுள்ள அனைத்து தடைகளையும் அகற்றுதல் என்ற இரு கடமைகளையும் ஆற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருப்பதன் காரணமாக அவர்களின் நிலையில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாக மாறியிருக்கிறது. கைத்தொழிலுக்கு பிந்திய சமூகம் ஒன்றின் தகவல் இடைத்தரகர்களது பங்கு பின்வருமாறு அமைகிறது:

தொழிற்பாடுகள்	பங்கு
தகவல் உருவாக்கம்	கலைஞர், வடிவமைப்பாளர் அறிவியலாளர் கட்டடக் கலைஞர் புள்ளி விபரவியலாளர்
தகவல் ஒழுங்கமைப்பு தகவல் அனுப்புகை	நிறுவன முகாமையாளர் நிறுவனங்களின் செயலாளர், தொலைபேசி இயக்குனர், அஞ்சல் அலுவலர், இதழியலாளர், கல்வியாளர், விற்பனைப்பிரதி நிதிகள், தகவல் தொழிநுட்பவியலாளர்
தகவல் சேமிப்பும் மீள் வழங்கலும்	கோப்புகளை பராமரிப்போர், நூலகர்கள், கணினி செய்நிரலாளர்
தகவல் பாவனை	தகவல் அமைப்பின் அனைத்துப் பாவனையாளரும்
தகவல் பிரயோகம்	சட்டவியலாளர், மருத்துவர், உளவளத்துணையாளர், கணக்கியலாளர்கள் வெளியீட்டாளர்கள்
தகவல் உற்பத்தி தகவல் கையாள்கைத் திறன்	விளம்பரத்துறையில் பணிபுரிவோர், பொதுசனத் தொடர்பு அலுவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பதின்மூன்று

தகவல் சேவை நிறுவனங்கள்

தகவல் சேவைகள் என்பது வாசகனுக்கு நேரடியாக தகவலை அல்லது தகவல் தொடர்பான விபரங்களை வழங்குகின்ற நிறுவனங்களாகும். இது தொலைபேசியின் ஊடாக வினவப்படும் வினாக்கள் தொடங்கி கணினி ஊடாக உருவாக்கப்படும் அச்சு வடிவ விபரங்கள் வரை பல தரப்பட்டனவாக இருக்க முடியும். பெரும்பாலான நூலகங்கள் தமது இயலாற்றலுக்கு ஏற்ப இத்தகைய சேவைகளை வழங்குகின்றன. இது நூலகங்களுக்கு நூலகங்கள் வேறுபடலாம். பருவ இதழ் பொருளடக்க விபரங்கள், நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவைகள், தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் என்பன இவ்வகைக்குள் அடங்கும் சில எடுத்துக்காட்டுகளாகும். இங்கு வர்த்தக ரீதியில் கிடைக்கக் கூடிய சில சேவைகள் தொடர்பான தகவல்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

பயன்பாடு

* வாசகனுக்கு தேவையான பொருட்துறை சார்ந்த அண்மைக் கால விபரங்கள் அடங்கிய நூல்விபரப்பட்டியல்களை வழங்குதல்.
* ஒழுங்கான கால இடைவெளியில் கட்டுரைகளுக்கான சாராம்சங்களையும் உள்ளடக்கி வாசகனுக்கு தேவைப்படும் பொருட்துறை தொடர்பான அண்மைக்கால தகவல் வளங்களின் விபரங்களை தொகுத்து வழங்குதல்.
* சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஆவணம் ஒன்றின் பிரதியை வழங்குதல்.

வரையறைகள்

* பணத்தையும் நேரத்தையும் விரயமாக்காத சேவைகளே பயனுடையதாகும்.
* பெரும்பாலான சேவைகள் அதன் ஆரம்பக் கட்டங்களிலேயே நிற்கின்றன.
* அபிவிருத்தியடைந்த சேவைகள் நூலகங்களின் நிதியாற்றலுக்கு அப்பால் நிற்கின்றன.
* பின்னோக்கிய விபரத்தேடுகையை மையமாகக் கொண்ட சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அதாவது குறிப்பிட்ட சில வருடங்களின் தகவல்களை மட்டுமே கணினி மயப்படுத்தியிருக்கின்றன.
* தகவல் சேவைகள் தேடிக் கொடுக்கும் தகவலைக் கொண்ட ஆவணங்கள் குறிப்பிட்ட நூலகத்தில் இருந்தால் மட்டுமே அச்சேவையினால் பயனுண்டு. அல்லது சேவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் நிறுவனங்கள் அத் தகவலைக் கொண்ட ஆவணங்களை வழங்குவதனூடாகவோ அல்லது தேவைப்படும் தகவலை பிரதி செய்து கொடுப்பதனூடாகவோ தான் வாசகனுக்கு பயனுண்டு.

* வெளிநாடுகளிலிருந்து சேவையைப் பெற விரும்புபவர்கள் வெளிநாட்டு நாணயத்தில் சேவைக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

எடுத்துக்காட்டுகள்

BIOSIS [Biosciences Information Services]

* பொருட்பரப்பு: நுண்ணுயிரியல், தாவர விலங்கு அறிவியல், உயிர் மருத்துவம், விவசாயம், மருந்தியல், புவிச்சூழலியல், உயிர்வேதியியல், உயிர்ப்பொறியியல், உயிர் பௌதிகம் போன்ற வாழ்க்கை அறிவியலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும்.
* தகவல் வளங்கள்: அறிவியல் பருவ இதழ்கள்,நூல்கள் கருத்தரங்குக் கட்டுரைகள், கடிதங்கள் குறிப்புகள், அரசாங்க அறிக்கைகள், ஓரளவு பிரசித்தி வாய்ந்த வர்த்தக பருவ இதழ்கள், மீளாய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை.
* தேடும் முறை: தலைப்புகளிலிருந்து பெறப்படும் மூலச் சொற்கள், மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட மூலச் சொற்கள் மூலமும் பொருட்துறை சார்ந்தும் தேடுகையை மேற் கொள்ள முடியும்.
* சேவைகள்: அண்மைக்கால வெளியீடுகளுக்கான முன்னறிவிப்புத் தேடுதல் சேவைகள், 5"x3" அட்டைகளில் வருடத்துக் கொருமுறை நடப்புத் தகவல் அறிவிப்பு சேவை தொடர்பான விபரங்களை தனிப்பட்ட ரீதியில் வழங்குதல்.
* கிடைக்குமிடம்: Professional Services Department, Biosciences Information Service, 2100 Arch Street, Philadelphia, Pennsylvania, 19103,USA

MEDLARS [Medical Literature Analysis and Retrieval System]

* பொருட்பரப்பு: சர்வதேசரீதியில் உள்ளடக்கப்பட்ட 28 உயிர் மருத்துவ தரவுத் தளங்களின் ஒரு குடும்பமாகவே மெட்லாஸ் விளங்குகிறது. உலகளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 73 நாடுகளில் 30 மொழிகளில் எழுதப்பட்ட பருவ இதழ் கட்டுரைகளின் ஒரு தொகுப்பு இதுவாகும். வெளிநோய் சிகிச்சை, பொதுச் சுகாதாரம், புவியியல் எல்லைகளைக் கடந்த மருத்துவ ஆய்வு, கல்வி தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதுடன் முறை சார்ந்த மருத்துவக் கல்வி, கிராமிய மருத்துவமனைகளின் வடிவமைப்பு, கிராமிய ஆரம்பப் பாடசாலைகளின் உடல்நலக் கல்வி, விலங்கு மருத்துவம், மருத்துவ தாதித் தொழில் போன்ற விரிந்த ஆய்வுத் துறைகள் தொடர்பான கட்டுரைகளையும் இது உள்ளடக்குகிறது. அத்துடன் உடல் நல பராமரிப்பு, நச்சியல் ஆய்வு, புற்று நோய், சனத்தொகைக் கல்வி, மருத்துவ ஒழுக்கவியல் போன்ற துறைகளில் விசேட தரவுத் தளங்களையும் கொண்டுள்ளது. இவை அனைத்தும் சேர்ந்தே மெட்லாஸ் என்ற பெயருக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தகவல் வளங்கள்: Index Medicus என்ற பருவ இதழ் சொல்லடைவில் உள்ளடக் கப்படுகின்ற பருவ இதழ்கள்.
* தேடும் முறை: 1966ல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆளுநர் [Medical Subject Headings] என்ற சொற்கருவூலத்தின் அடிப்படையில் தேடுதல் முறை அமைந்துள்ளது.
* சேவைகள்: 1966ம் ஆண்டு வரைக்கும் தேடுதல் மேற் கொள்ளக்கூடிய வகையிலான பின்னோக்கிய தகவல் தேடுகைச் சேவையை இது கொண்டிருக்கிறது. 60 நாடுகளி லிருந்து பெறப்படும் 2300க்கும் மேற்பட்ட பருவ இதழ்கள் பகுத்தாய்வு செய்யப்பட்டு ஆளுநர் சொற்கருவூலத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு கட்டுரைக்கும் சராசரி 13 மூலச் சொற்கள் தெரிவு செய்யப்பட்டு சொல்லடைவுபடுத்தப்படுவதனூடாக எமக்கு கிடைப்பதே Index Medicus சொல்லடைவாக்க சேவையாகும். இது அச்சு வடிவிலும் கணினி சேவை மூலமும் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பதின்நான்கு

தகவல் சேவைகள்

14.0 அறிமுகம்

தகவல் நிறுவனம் ஒன்றினால், குறிப்பிட்ட தகவல் தனிநபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ தேவைப்படும் என முன்கூட்டியே எதிர்பார்த்து அவர்களுக்கு வழங்கும் சேவை தகவல் சேவை எனப்படுகின்றது. இவற்றை மரபுரீதியானவை, ஆவணப்படுத்தல் சார்ந்தவை என இரண்டாகப் பிரிக்கலாம்:

* மரபுரீதியானவை: இரவல் வழங்குதல், ஆவண விநியோகம், பாவனையாளர் கல்வி, மரபு ரீதியான உசாத்துணை சேவை போன்றவை.
* ஆவணப்படுத்தல் சார்ந்தவை: நூல்விபரப்பட்டியல் தயாரித்தல், ஆவணவாக்கப்பட்டி தயாரித்தல், நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவை, தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம். பிரதியாக்க சேவை, மொழிபெயர்ப்புச் சேவை போன்றன.

14.1. பொதுச்சேவைகள்

இரவல் வழங்குதல், தகவல் சாதனங்களை வாசகருக்கு ஒதுக்கீடு செய்தல், நூலகங்களுக்கிடையில் நூல் இரவல் வழங்கல், விரிவாக்க சேவை போன்றவற்றை பொதுச் சேவைகளுக்குள் உள்ளடக்கலாம். பொதுச் சேவைகளில் மிக முக்கியமானது இரவல் வழங்கும் சேவையாகும். நூல்கள் வாசகரினால் இரு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது. ஒன்று நூலகத்துக்குள்ளே வாசித்தல். இரண்டாவது நூலகத்துக்கு வெளியே வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசித்தல். இதில் முன்னையது உசாத்துணைச் சேவை எனப்படுகின்றது. மற்றையது இரவல் வழங்கும் சேவை எனப்படுகின்றது.

இரவல் வழங்கும் செய்முறையில் பின்வரும் அம்சங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன:

* வாசகரைப் பதிவு செய்தல்
* நூல்களை இரவல் வழங்குதல்
* வாசகர் கோரும் நூல்களை அவர்களுக்கென ஒதுக்கி வைத்தல்
* நூல்களுக்கு வழங்கப்பட்ட கால எல்லையைப் புதுப்பித்தல்
* மீளப் பெற வேண்டிய நூல்கள் பற்றி அவதானித்தல்
* நூலகங்களுக்கிடையிலான நூல் பரிமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இரவல் வழங்கல் நடைமுறை தொடர்பான புள்ளிவிபரங்கள் பதிவேடுகளைப் பராமரித்தல்.

14.1 இரவல் வழங்கும் முறைகள்

இரவல் வழங்கும் முறைகளில் பலதரப்பட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன.

14.11 பேரேட்டுப் பதிவு முறை

வாசகருக்கென்று ஒரு சில பக்கங்களை ஒதுக்கி அதில் இரவல் வழங்கும் விபரங்களைப் பதியும் முறை இதுவாகும். பதிவேட்டின் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது.

தொ. எண்	வ. திகதி	ஆசிரியர்	தலைப்பு	பெ. திகதி	நூலகர் ஒப்பம்

14.12 அட்டைப் பதிவு முறை

ஒரு அட்டைக்கு ஒரு நூல் என்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட அட்டைப் பதிவு முறையே பின்னாட்களில் பிறவுணி, நியூவார்க் என்ற இரு புகழ் பெற்ற அட்டைப் பதிவு முறைகளுக்கு அடிப் படையாக அமைந்தது.

14.121 பிறவுணி இரவல் வழங்கல் முறை

Boston Bureau நூலகம் ஒன்றில் பொறுப்பாளராக இருந்த Nine. E. Brownie என்ற அமெரிக்கப் பெண்மணியினால் முதன் முதலாக இம்முறை உருவாக்கப்பட்டது. ஆனால் இம்முறை அமெரிக்காவில் பின்பற்றப்படவில்லை. பிரித்தானியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இம்முறை மிகப் பெருமளவில் பின்பற்றப்படுகின்றது.

தேவைப்படும் சாதனங்கள்

அங்கத்தவர் அனுமதி அட்டை

நூலகத்தின் கொள்கைக்கமைய அங்கத்தவர் அட்டையும் அமையும். யாழ் பல்கலைக்கழக நூலகம் முதலாம் ஆண்டு பட்டப் படிப்பு மாணவருக்கு இரு அங்கத்துவ அட்டைகளும், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு மூன்று அங்கத்துவ அட்டைகளும், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு நான்கு அங்கத்துவ அட்டைகளும், இறுதியாண்டு மாணவருக்கு ஆறு அங்கத்துவ அட்டைகளும் ஒதுக்கியுள்ளது. இதுவே யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகருக்கு இரு அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படுகின்றன. நூல் அட்டைகளைச் செருகக் கூடிய வகையில் 3"x 2" அளவில் பை வடிவத்தில் தயாரிக்கப்படும் இவ் அட்டைகள் தடித்த தாள்களிலோ, பிளாஸ்ரிக் வடிவத்திலோ தயாரிக்கப்படலாம். அட்டையின் பின்புறம் நூலகத்தின் இலச்சினை பொறிக்கப்படலாம்.

நூல் பை

நூல் அட்டையைச் செருகக் கூடிய வகையில் நூலின் பின்புற மட்டையின் கீழ்ப்புற வலது மூலையில் நூல் பை ஒட்டப்படுகிறது. நூல் அட்டையையும் நூல் பையையும் வேறுபடுத்தி இனங்காணக் கூடிய வகையில் இரண்டையும் இரு வேறு நிறங்களில் உருவாக்குவது சிறந்தது.

மாதிரி

2

அறிவாலயம்
இணுவில்
அங்கத்தவர்
அனுமதி அட்டை
(மாற்றிப் பாவிக்க
முடியாது)

அங். இல ....
பெயர்: ....
முகவரி............................
....
ஒப்பம் ....

3"

2

அழைப்பெண்...................
வரவுப் பதிவெண்..............
ஆசிரியர்...........................
....
தலைப்பு ....

3"

அங்கத்தவர் அனுமதி அட்டை நூல் பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை இரவல் கொடுக்கும் முறையினை Charging System என்றும் நூல்களை மீளப் பெறும் முறையினை Discharging System என்றும் அழைப்பர்.

இரவல் வழங்கும் செய்முறை (Charging Procedure)

நூலின் பிற்பகுதியில் திகதிப் பதிவுத்தாள் ஒட்டப்பட்டு அதனுள் உள்ள பையுள் நூல் அட்டை செருகப்பட்டிருக்கும். வாசகர் இரவல் பெற அனுமதிக்கப்படும் நூல்களின் எண் ணிக்கைகளுக் கேற்ப அட்டைப்பை வழங்கப்படும். இதை அங்கத்தவர் அனுமதி அட்டை (Reader's Ticket) என அழைப்பர்.

அங்கத்தவர் தான் இரவல் பெறத் தெரிவு செய்த நூல்களுடன் அங்கத்தவர் அனுமதி அட்டையையும் வாசகர் சேவைப் பிரிவில் கையளிப்பர். நூல் அட்டைகள் தவறுதலாக வேறு நூலின் பையில் செருகப்படும் வாய்ப்பு இருப்பதனால் நூலகர் நூலிலுள்ள நூல்விபரம் தாங்கிய அட்டையை நூலுடன் ஒப்பிட்டுப் பார்த்து இரண்டும் சரியாயின் நூல் அட்டையை எடுத்து அங்கத்தவர் அனுமதி அட்டையுள் செருகி தான் பொறுப்பேற்ற பின்னர் நூலில் மீள ஒப்படைக்க வேண்டிய திகதியைக் குறித்து அங்கத்தவரிடம் நூலை ஒப்படைப்பார். பொறுப்பேற்ற வாசகர் அட்டைகள் அங்கத்தவர் அனுமதி அட்டை வைப்பதற்கான பிரத்தி யேகமான பேழையில் மீள ஒப்படைக்க வேண்டிய திகதியின் கீழ் பொருள் வாரியாக வரவுப் பதிவெண் ஒழுங்கில் அடுக்கிவைக்கப்படும். திகதியைக் குறிப்பிடும் அடையாள அட்டை கள் அங்கத்தவர் அனுமதி அட்டையிலும் சற்று உயரமானதாக இருக்கும், இவற்றின் உதவி யால் நூலகர் அங்கத்தவர் மீளப்பெறும் திகதியை இனங்காண்பது இலகுவாகின்றது. வாச கரிடம் ஒப்படைக்கப்படும் நூல் மீளவும் நூலக வாயில் பகுதியில் கடமையாற்றும் பரி சோதகரால் பார்வையிடப்படுகிறது.

மீளப் பெறும் முறை (Discharging System)

நூல்கள் மீள ஒப்படைக்கப்படும் போதும் நூல் வருமதியாகவுள்ள திகதியின் கீழ் அத் திக திக்குரிய அட்டைக் கூட்டத்தினுள் பொருள்வாரியாக சேர்விலக்க ஒழுங்கில் அடுக்கப் பட்டிருக்கும் அனுமதி அட்டையை மீண்டும் நூலினுள் செருகி அங்கத்தவர் அட்டையை அங்கத்தவரிடம் ஒப்படைப்பார். அதன் பின்னர் வாசகர் வேறொரு நூலையோ அதே நூலையோ மீண்டும் இரவல் எடுக்க உரித்துடையவராவார்.

நன்மைகள்:

1. இம் முறை சுலபமானது.
2. சிக்கனமானது.
3. நேர விரயம் குறைந்தது.
4. ஒரேயொரு பதிவு மட்டும் பின்பற்றப்படுவதால் விநியோகம் மிகவும் விரைவாக செய்யப்பட முடியும்.
5. நூலினை உரிய நேரத்தில் திருப்பிக் கொடுக்காதவிடத்து ஞாபகக் கடிதம் அனுப்புதல் இலகுவானது.
6. எந் நேரத்திலும் எந்த நூல் இரவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும்.
7. நூல் ஒன்றினைத் தேவைப்படுவோருக்கு ஒதுக்கி வைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நூல்களை மீண்டும் துரித கதியில் பாவனைக்கு விடுதல் இலகுவானது.
9. வாசகர் அட்டை நூலகத்தில் இருப்பதால் எத்தகைய நூல்கள் மிக அதிகமாக சுழற்சிக்கு விடப்படுகின்றன என்பதை அறிய முடியும்.
10. இம் முறையில் நூல்களை இரவல் பெறுவதற்கு விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையோ அல்லது கையெழுத்து போடப்பட வேண்டியதேவையோ இல்லை.
11. குற்றப்பணம் கணித்தல் சுலபமானது.
12. சுழற்சிக்கு விடப்படுகின்ற நூல்கள் பற்றிய புள்ளி விபரத் தரவுகளை தயாரிப்பது இலகுவானது.
13. வாசகர் அட்டை நூலகத்தில் இருக்கும் வரை ஒரு நூல் எவரிடம் உள்ளது என்பதை இலகுவாக அறியலாம்.

தீமைகள்

1. அங்கத்துவ அட்டைப் பையும் நூல் அட்டையும் தொலைந்தால் எவ்வித நிரந்தரப் பதிவும் கிடையாமல் போகும்.
2. அட்டைகளை கையினால் ஒழுங்கு செய்ய வேண்டி இருப்பதனால் அதிக நேரம் செலவாகின்றது.
3. அட்டைகளை ஒழுங்கு செய்வதிலும் நூல்களை மீளப் பெறுவதிலும் பிழைகள் ஏற்பட இடமுண்டு.
4. ஒரு வாசகரின் அட்டைப் பையினுள் வேறொருவரின் நூல் பெற்ற அட்டை வைக்கப் பட்டால் யார் நூல் எடுத்தது என அறிவது கடினம்.
5. நாளாந்தம் திகதி வாரியாக அட்டைகளை அடுக்கா விட்டால் நூல்களை மீளப்பெறும் போது நூல் அட்டையைத் தேடி எடுத்தல் மிகவும் சிரமமாக இருக்கும்
6. இம்முறையினை நடை முறைப்படுத்த பல நூலக உத்தியோகத்தர்களும் விநியோகத் தட்டுக்களும் பெரிய முகப்பு மேசையும் தேவைப்படுவதனால் சிறிய நூலகங்கள் இம் முறையைப் பின்பற்றுவது கடினம்.
7. விநியோகத் தட்டுக்கள் சீரான முறையில் ஒழுங்கு செய்யப்படாவிட்டால் சில நேரங் களில் நீண்ட வரிசை (Queue) ஏற்படவும் அதனால் நேர விரயமும் ஏற்படும்.

14.122 நியூவார்க் முறை [Newark Charging System]

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள New Jersey என்ற மாநிலத்தில் Newark என்ற பொதுசன நூலகத்தில் கடமையாற்றிய John Cotton Dana என்ற பெண்மணியினால் 1900 ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்நூல் இரவல் வழங்கும் முறை அந்த நூலகத்தின் பெயரிலேயே இன்று அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா போன்ற நாடுகளிலுள்ள நூலகங்களினால் பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்தியாவிலுள்ள கல்லூரி நூலகங்களில் ஒரு சில மாற்றங் களுடன் இது பாவனையில் இருந்து வருகின்றது. இம் முறைக்கு தேவையான உபகரணங்கள்:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாலயம்

இணுவில்

விதிமுறைகள்

1.

2.

3.

பொது நூலகம்
கொக்குவில்

1. நூல் பை:- தடித்த தாள்களாலான இப்பை நூலினது மட்டையின் உட்புறத்தில் ஒட்டப் பட்டிருக்கும். இது நூல் அட்டையை தன்னுள் கொள்ளக் கூடியதாக இருக்கும் .

இணுவில் அறிவாலயம்

அழைப்பெண் .... வதிவெண்..............

ஆசிரியர் ....

தலைப்பு ....

இந் நூல் கீழே குறிக்கப்பட்ட திகதியில் மீள ஒப்படைக்கப்பட வேண்டியதாகும்

2. நூல் அட்டை :- 4" x 2" அளவிலான இவ் அட்டையில் நூலாசிரியர் பெயர், நூலின் பெயர், சேர்வுஎண், பகுப்புஎண் ஆகிய விபரங்கள் குறிக்கப்பட்டு கீழே 5 நிரல்கள் பிரிக்கப்பட்டிருக்கும். அதில் முறையே திகதி, வாசகர் பெயர், வாசகர் அங்கத்துவ இலக்கம், வாசகர் கையொப்பம், மீளப்பெறும் திகதி ஆகிய விபரங்கள் குறிக்கப் படும்.

இரவல் வழங்கும் செய்முறை

இரவல் பெறும் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் அங்கத்துவ அட்டை வழங்கப்படும். இது இரு மடிப்புள்ளதாக உட்புறம் பின்புறம் என்பனவும் பயன்படுத்தக் கூடியதாக வடிவ மைக்கலாம். இது வாசகரை அடையாளம் கண்டு கொள்ள உதவியாக இருக்கும். இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டையில் நூலகத்தின் பெயர், இரவல் பெறுபவரின் எண், முடிவு திகதி, கைமாற்றம் செய்து கொள்ள முடியாது என்ற அறிவுறுத்தலுடன் பின்வரும் நூல்கள் எனக்கு இரவல்கொடுக்கப்பட்டுள்ளன என கையொப்பம் இடப்படும்.

இரவல் வழங்கும் பகுதி ஊழியர்களுக்கான கோவைகளும் உபகரணங்களும் :

* அங்கத்துவ பத்திரங்கள்: இது இரவல் வழங்கும் பகுதியினால் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.
* இரவல் பெறுபவரின் கடன் பதிவேடு : இதில் இரவல் பெறுபவரின் பத்திரங்கள் கட்டப்பட்ட ஒரு பதிவேட்டில் அல்லது தனித்தனித் தாளில் இருக்கும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தொடர்பு எண் ஒன்று கொடுக்கப்படும், தனியானதொரு அங்கத்துவ பதிவேடு இல்லாதவிடத்து நூலகம் ஒன்றில் குறிப்பிட்ட வருடம் ஒன்றில் எத்தனை அங்கத்தவர்கள் நூலகத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளார்கள் என்பதையும் முழு அங்கத்தவர் தொகை எத்தனை என்பதனையும் அறிய முடிகின்றது. இதே போல் அங்கத்தவர்களில் எத்தனை பேர் தமது அங்கத்துவத்தை இழந்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.
* பிணைப் பதிவேடு (Security Deposit): சில நூலகங்கள் அங்கத்தவரிடம் இருந்து பிணைப் பணத்தைப் பெற்று நூல்களை வழங்குகின்றன. இதுமீளச் செலுத்தப்பட வேண்டுமாகையால் இது சார்ந்த பதிவேடே அவசியமாகின்றது, இப்பதிவேடு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும். பிணைப்பணம் கொடுக்கப்பட்ட திகதி, முகவரி, பிணைப்பணத் தொகை, திருப்பிக்கொடுக்கப்பட்ட பிணைப் பணப் பற்றுச்சீட்டு எண்ணும் திகதியும், பெற்றுக் கொண்ட முழுப்பணம், கையிருப்பிலுள்ள மிகுதிப்பணம்:
* அட்டைப் பேழைகள்:'6x4" தட்டுக்களில் அட்டைகள் ஒழுங்குபடுத்தப்படும். இரவல் வழங்கப்படும் நூல்களையும் அங்கத்துவ எண்ணிக்கையையும் பொறுத்து தட்டுக்களின் எண்ணிக்கை வேறுபடும்.
* அங்கத்துவ அட்டைகளும் வடிவங்களும் துணைச் சேவைகளும்: அங்கத்துவ பத்திரங்கள், நூலக விதிகளின் பிரதிகள், புள்ளி விபர அட்டைகள், பதிவேடுகள், நினைவூட்டல் பத்திரங்கள் அல்லது அட்டைகள்.

செய்முறைகள்

அங்கத்தவர்கள் தாம் இரவல் பெற விரும்பும் நூல்களுடன் தமது அங்கத்துவ அட்டைகளை முகப்பு மேசையில் சமர்ப்பிப்பர். அங்கத்துவ அட்டையில் நூல்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய திகதி பொறிக்கப்படும். அதே போன்று நூல் அட்டையிலும் திகதிக் குறியீட்டுத் தாளிலும் குறிக்கப்படும். திருப்பிக் கொடுக்க வேண்டிய திகதிக்கு எதிராக அங்கத்தவரது எண் கொடுக்கப்படும். அங்கத்தவரது அட்டையில் இரவல் எடுத்துச் செல்லப்படும் நூல்களும் அங்கத்துவ அட்டையும் வாசகனிடம் கையளிக்கப்படும். நூல் அட்டை, நூல் திருப்பிக் கொடுக்க வேண்டிய திகதிக்குப்பின்னால் ஒழுங்குபடுத்தப்படும். நூல்கள் மீளப்பெறுமிடத்து நூல் அட்டை, நூல் அட்டைப் பேழையிலிருந்து எடுக்கப்பட்டு அங்கத்துவ அட்டையிலும் நூல் அட்டை யிலுள்ள சேர்வு எண், வகுப்பு எண் ஒரே தன்மையிலுள்ளதா என சரிபார்க்கப்பட்டு நூல்களை மீளப்பெற்றமைக்கு அறிகுறியாக நூல் அட்டையிலுள்ள திகதி இரத்துச் செய்யப்பட்டு நூலக அலுவலரின் கையொப்பமும் இடப்பட்டு நூல் மீளப் பெறப்பட்டு விட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உறுதி செய்யப்படும். மீளப்பெறப்பட வேண்டிய திகதிக்கு மேல் வாசகர் நூலை வைத்திருப்பராயின் அதற்கான குற்றப்பணம் அறவிடப்படும். நூல்கள் பெறப்பட்டதும் நூல் அட்டை, நூல் பையில் இடப்பட்டு வாசகரது அங்கத்துவ அட்டை வாசகரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

நன்மைகள்

* Brownie முறை போலல்லாது இரவல் வழங்கப்படும் நூல் பற்றி நிரந்தரப் பதிவு பின்வரும் முறைகளில் வைக்கப்படுகின்றது:
  1. இரவல் வழங்கப்பட்ட நூலின் வகை.
  2. ஒவ்வொரு வாசகருக்கும் விநியோகிக்கப்பட்ட நூலின் தொகை.
* ஒரு குறிப்பிட்ட நூல் நூலகத்திற்கு எப்போது திரும்பும் என்பதனையும் அது எவரிடம் இருக்கிறது என்பதனையும் அறிவது இலகுவாகின்றது.
* இம் முறையில் உள்ளது போலன்றி நூல் அட்டைகளை வைக்கும் வாய்ப்பு இதில் இருக்காது. ஏனெனில் பிரதிப் பதிவுகள் நூலகத்தில் இருப்பதால் அங்கத்தவர் அட்டை தொலைந்தாலும் கூட நூல் பற்றிய விபரங்களை அறியலாம்.
* இம் முறையில் நூல்களை ஒதுக்கீடு செய்தல் இலகுவாகின்றது.
* வாசகர் அட்டையிலிருந்து கூடுதலாகப் பாவிக்கப்பட்ட நூல்களையும் அந் நூலின் தன்மைகளையும் அறிய முடியும்.

தீமைகள்

* நூலிரவல் வழங்கும் செய்முறை அதிக நேரத்தை எடுக்கின்றது.
* நெருக்கடியான நேரங்களில் வாசகர்கள் நீண்ட வரிசையில் நின்று நேரத்தை வீணாக்க வேண்டியுள்ளது.
* நூல் மீளப்பெறும் போது பல்வேறு படிமுறைகள் கையாளப் படுவதனால் வாசகர் நேரம் பேணப்படுகிறது. எனவே நூலக முறையின் அடிப்படைக் கொள்கையில் ஒன்றான வாசகர் நேரம் பேணுக என்பது சாத்தியமில்லை எனினும் இது ஒரு பாதுகாப்பான முறை எனக்கருதப்படுகின்றது.

14.123 துளை அட்டை இரவல் வழங்கும் முறை:- (Punch Card Charging System)

தேவையான உபகரணங்கள்

1. கணினி அல்லது இயந்திரமயமாக்க உதவும் பொறிகள்.
2. தன்னியக்க துளை இயந்திரம்.
3. Plastic பொருளினாலான அங்கத்துவ அட்டைகள்.
4. நூல் ஒன்றிற்கு இரண்டு என்ற வகையில் துளையிட்ட அட்டைகள்.
5. ஒவ்வொரு நூலுக்கும் ஒரு நூல் பை.

நூல் ஒன்றை இரவல் வழங்கும் போது நூலக உத்தியோகத்தர் இரு துளையிட்ட அட்டைகளில் ஒரு துளையிட்ட அட்டையை தன்னியக்க துளை இயந்திரத்தில் இட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு அட்டைகள் மீதும் வாசகரது அங்கத்துவ எண்ணையும் நூலின் சேர்வு எண், வகுப்பு எண் ஆகியவற்றையும் பதிவார். இதில் ஒன்று இரவல் கொடுக்கப்பட்ட நூலினைத் தெரிந்து கொள்வதற்காக நூலகத்தில் வைக்கப்படும். மற்றய அட்டை நூல் பையில் இடப்பட்டிருக்கும். இது புத்தகம் எந்தத் திகதியில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வாசகர் அறிந்து கொள்வதற்கு உதவும்.

நூல்கள் மீளப்பெறப்படும் போது நூல்களிலிருந்து துளையிட்ட அட்டைகள் எடுக்கப்பட்டு இயந்திரத்தின் உதவியுடன் நூலகத்திலுள்ள பிரதிகள் ஒப்பு நோக்கப்படுகின்றன. ஒப்பு நோக்கப்படாத அட்டைகள் நூலகத்திற்கு வர வேண்டிய நூல்களைக் குறிப்பிடும். இவை இயந்திரத்தின் உதவியினால் கோவைப்படுத்தப்பட்டு நூல்கள் வர வேண்டிய திகதியின் படி மேலதிக வரவுகளைக் குறிப்பிடும். இதனால் நூல்களைத் திரும்ப கொடுக்காத வாசகர்கள் அறியப்படுவதுடன் நினைவூட்டல் கடிதம் அனுப்பவும் வகை செய்கின்றது.

அனுகூலங்கள்

1. Brownie முறை போன்று நூல்கள் கொடுக்கப்பட்ட விபரம் தெரிய உதவுகின்றது.
2. நூல்களை மீளப்பெறும் போது பொறிகள் பயன்படுத்தப்படுவதனால் வாசகரது நேரம் மிக உச்ச நிலையில் பேணப்படுகின்றது.
3. வாசகருக்கான நூல் ஒதுக்கீடு இம் முறையில் மிக இலகுவானது.
4. நினைவூட்டல் கடிதம் அனுப்புதல் மிகவும் இலகுவானது.

தீமைகள்

1. இம் முறை அதிக செலவுள்ளது.
2. நூல்களை இரவல் வழங்கும் செய்முறை நீண்ட செயற்பாடுகளை உடையது.
3. இம் முறையைப் பின்பற்றுவதற்கு மிகவும் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் தேவை.
4. நூல்களைத் திரும்பக் கொடுக்காதவர்களுக்கு மறு அறிவித்தல் கொடுத்தல் நீண்ட செய்முறை ஆகும். அதாவது வாசகரது அங்கத்துவ பதிவேடுகளையும் அவர்களது பெயர், முகவரிகள், பொறிகளின் உதவியுடன் அறிய வேண்டியிருப்பதனால் இது ஒரு நீண்ட செயற்பாடாகக் கருதப்படுகின்றது.

14.124 அடையாளச்சீட்டு வழங்கல் முறை (Token Charging System)

இம் முறையானது 1954ம் ஆண்டு மே மாதம் Westminister பொது நூலகத்தினால் பாவனைக்கு கொண்டுவரப்பட்டது. செயல் முறையில் இது மிகவும் எளிமையான முறை ஆகும். இங்கிலாந்தில் அநேகமான நூலகங்கள் இம் முறையைப் பின்பற்றுகின்றன. Eson, Ewel போன்ற பொது நூலகங்களும் இம் முறையைப் பின்பற்றுகின்றன. இம் முறை சாதாரணமாக பொது இடங்களில் கூட பின்பற்றப்படுவதைக் காணலாம். எ-டு: Cycle Par. நேர்மையும் நூல்கள் அடையாளச் சீட்டுக்கள் முதலியவற்றில் கவனமும் உடைய வாசகர்களைக் கொண்ட நூலகங்களில் மட்டுமே இது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட முடியும். ஒவ்வொரு வருட முடிவிலும் வாசகரினால் அடையாளச் சீட்டுக்கள் யாவும் திரும்ப ஒப்படைக்கப்படும். புதுப்பிக்கப்பட்ட வாசகர் அட்டைகளும், அடையாளச் சீட்டுகளும் வாசகர்களுக்கு வழங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். அடையாளச் சீட்டுக்களைத் தொலைத்த வாசகர் குறிப்பிட்ட தொகையைச் செலுத்து வதற்குக் கோரப்படுவார் எனினும் ஒரு வருடத்தில் 3தடவைக்கு மேல் இந்த வசதி அனுமதிக் கப்படமாட்டாது.

தேவையான உபகரணங்கள்

1. திகதிக் குறியீட்டுத் தாள்: ஒவ்வொரு நூலினதும் பறக்கும் தாளில் இது ஒட்டப் படும்.
2. வாசகர் அட்டை: Browni முறையைப் போன்ற ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகக் கூடிய வாசகர் அட்டை வாசகருக்கு விநியோகிக்கப்படும்.
3. அடையாளச் சீட்டுகள்: 3 - 4 "x 2" அளவுடைய செலுலோயிட்டினால் தயார் செய்யப் பட்ட நீல நிறமுடைய 3 அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்படும். அத்துடன் முகப்பு மேசையில் புதிய வாசகருக்கு விநியோகிப்பதற்கும் தொலைத்த வாசகருக்கு திரும்ப வழங்குவதற்குமென மேலதிக அடையாளச் சீட்டுக்களும் வைத்திருக்கப்படும்.

செய்முறை

வாசகர் இரவல் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு நூலுக்கும் ஓர் அடையாளச் சீட்டை முகப்பு மேசையில் கையளிப்பார். முகப்பு மேசையில் உள்ளவர் வாசகர் அட்டையை சரிபார்ப்பதுடன் திரும்பக் கொடுக்க வேண்டிய திகதியை திகதிக் குறியீட்டுத்தாளில் குறிப்பிடுவார். நூல்களைத் திரும்ப ஒப்படைக்கும் போது வாசகரது அடையாளச் சீட்டு திரும்பவும் வாசகனைப் போய் சேரும். திரும்ப ஒப்படைக்க வேண்டிய திகதி சரிபார்க்கப்பட்டு காலஎல்லை கூடியதாயின் குற்றப்பணம் அறவிடப்படும்.

நன்மைகள்

1. இங்கு பதிவேடுகளை பராமரிக்கும் வேலை இல்லை. எனவே நேரம் சேமிக்கப் படுகின்றது.
2. காகிதாதிகளும் சக்தியும் மீதப்படுத்தப்படுகிறது.
3. நூலகரின் அனுமதியுடன் மேலதிக அடையாளச் சீட்டுக்களை வழங்குவதன் மூலம் மேலதிக விபரங்களை சுலபமாகப் பெறலாம்.
4. அடையாளச் சீட்டுக்களைத் தொலைத்தால் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதால் இயல்பாகவே அடையாளச் சீட்டுக்கள் கவனமாகப் பாதுகாக்கப்படும்.
5. இம் முறை தோல்வி அடையும் வாய்ப்பு ஏற்பட்டால் கூட அடையாளச் சீட்டிலிருந்து அட்டை வடிவ முறைக்கு மாறுவதற்கு எவ்வித சிரமமும் ஏற்படாது.

தீமைகள்

1. இம் முறையில் ஒரு நூலை இரவல் பெற்றுச் சென்ற வாசகர் பெயர், குறிப்பிட்ட நூல் எப்போது இரவல் வழங்கப்பட்டது போன்ற விபரங்களை அறிய முடியாது.
2. நேர்மையற்ற வாசகர்கள் நூலை திரும்ப ஒப்படைக்காமல் விடுவதற்கான சாத்தியம் உண்டு என்பதால் இது ஒரு பாதுகாப்பற்ற முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இம்முறையில் திரும்பப் பெறப்படவேண்டிய கால எல்லை அதிகமாகும் போது நினைவூட்டல் கடிதம் அனுப்பவோ நூல்களை வாசகருக்கு ஒதுக்கீடு செய்யவோ முடியாது.

14.125 ஒளிப்பட வழங்கல் முறை (Photo Charging System)

அமெரிக்காவின் வோஸிங்டன் நகரிலுள்ள அமெரிக்க விவசாயத்துறை நூலகத்தின் முன்னாள் நூலகரான றல்ப் ஆர்.ஷோ (RalphR. Shaw) என்பவரால் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1940ம் ஆண்டு Beary பொது நூலகத்தில் இவர் நூலகராக இருந்த பொழுது சுழற்சிப்பதிவேடுகளை நுண்படங்களாகப் பதிவு செய்வதற்குரிய ஒளிப்படக் கருவி பற்றிய தகவல்களை இவர் அறிமுகப்படுத்தினார். 1947ம் ஆண்டு சென் பிரான்சிஸ்கோவில் (St. Francisco) நடைபெற்ற அமெரிக்க நூலக சங்க மாநாட்டில் Remington Rand Corporation என்ற அமைப்பிலுள்ள நூலகப் பிரிவினால் ஒளிப்பட முறையில் இரவல் வழங்குவதற்கரிய பொறியின் முதலாவது மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது. இலண்டனிலுள்ள Wands worth பொது நூலகத்தால் 1955ம் ஆண்டு இது முதன்முதல் பயன்படுத்தப்பட்டது. பின்பு பிரித்தானியாவிலுள்ள பெரும்பாலான நூலகங்களினால் இது பாவனைக்கு கொண்டு வரப்பட்டது.

தேவைப்படும் உபகரணங்கள்

நூல்களுக்கு: பறக்கும் தாளின் வலது பக்க மூலையில் ஆசிரியர், தலைப்பு, அழைப்பு எண், நூல்வரவுப் பதிவெண் என்பவை தரமான மையால் எழுதப்படும். அத்துடன் நூல் உறையும் நூலுக்கு இணைக்கப்படும்.

வாசகருக்கு: வாசகர் அட்டையில் வாசகர் விபரங்கள் பதியப்படும்.

நூலக அலுவலருக்கு:

1. ஒளிப்பட இரவல் வழங்கும் பொறி: Recorda of Junior Micro Filmer, Diebold Portable Micro Film Camera, Remington Rand Photo Charger 11/2" x 2"x2" போன்ற மாதிரிகள் பாவனையில் இருந்திருக்கின்றன.
2. 10 m.m படச்சுருள்: இது 250', 100', 50' என பல்வேறு நீளங்களில் பயன்படுத்தப்படலாம்.
3. தன்னியக்க செய்முறைப்படுத்தல் உபகரணங்களைக் கொண்டிராத ஒளிப்பட இரவல் வழங்கும் பொறிகளாயின் நுண்படங்களை செய்முறைக்காக ஆய்வுகூடங்களுக்கு அனுப்புவதற்கான பாதுகாப்பு உறைகள்.
4. நுண்பட வாசிப்புக்கருவி.
5. அவசர நேரத்தில் பொறிகளுக்குத் தேவைப்படுகின்ற மின்னியல் உபகரணங்கள்.
6. திகதியும் எண்ணும் இடப்பட்ட பரிவர்த்தனை அட்டைகள் (Transaction Cards).

இரவல் வழங்கும் முறை

நூலிரவல் பெறுபவர் முகப்பு மேசையில் நூலையும் அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிப்பார். முற்திகதியும் எண்ணும் இடப்பட்ட பரிவர்த்தனை அட்டை, அடையாள அட்டை என்பவை நுண்பட மாக்கியில் வைக்கப்பட்டு இரவல் வழங்கப்படும் நூல் நுண்பட வடிவில் பதியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்படச்சுருள் முழுவதும் படமாக்கப்பட்ட பின்னர் புதிய சுருள் நுண்படமாக்கியில் போடப்படும். நூல் அட்டையினுள் பரிவர்த்தனை அட்டை வைக்கப்பட்டு நூல் வாசகனிடம் ஒப்படைக்கப்படும். மீள ஒப்படைக்கப்படும்போது பரிவர்த்தனை அட்டையிலுள்ள தொடரெண் இலகுவில் தெரியக் கூடிய வகையில் நூல் முகப்பு மேசையில் உள்ளவரால் திறந்து வைக்கப்பட்டு அதிலுள்ள மீள ஒப்படைக்கும் திகதி சரிபார்க்கப்பட்டு பரிவர்த்தனை அட்டை நூல் உறையினுள்ளிலிருந்து மீள எடுக்கப்பட்டு தொடரெண் ஒழுங்கில் ஒரு பெட்டியில் ஒழுங்குபடுத்தப்படும்.

நன்மைகள்

1. நூல் வழங்குவதில் அதிக விரைவு பின்பற்றப்படுவதனால் முகப்பு மேசையில் அதி களவு நேரம் காத்திருக்கவேண்டிய தேவை இல்லை. மனித செய்முறை மூலம் நேரக்கூடிய தவறுகளும் இங்கு திருத்தப்படுகின்றன.
2. காகிதாதிகள், அலுவலர் நேரம்,வாசகர் நேரம் என்பன சேமிக்கப்படுகின்றன.
3. இரவல் வழங்கப்பட்ட நூல்களுக்கான நிரந்தர பதிவேடுகள் பராமரிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு.
4. இப்பகுதியில் வேலை செய்வதற்கு தொழிற்றிறன்சார் அலுவலர்கள் தேவைப்பட மாட்டார்கள். பொறிமுறைச் செயற்பாட்டுக்கு சாதாரண அலுவலர்களே போது மானது.
5. முன் எண்ணிடப்பட்ட பரிவர்த்தனை அட்டைகள் இருப்பதன் காரணமாக இரவல் வழங்கப்பட்ட நூல்களுக்கான புள்ளி விபரப் பதிவுகளை சரியாகவும் வேகமாகவும் எடுப்பதற்கு இம்முறை உதவும்.
6. நூல் பெறும் செய்முறையில் தேவையற்ற தலையீடுகளை இம்முறை குறைப்பதனால் தவறுகள் நேரும் வாய்ப்பு குறைவு. புதிய வாசகர்கள் ஒழுங்கான அங்கத்துவ அட்டை யைப் பெற முன்பே அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தின் உதவியுடன் நூல்களை இரவல் பெறக்கூடிய வாய்ப்புண்டு.

தீமைகள்

1. நூல் அட்டைப் பதிவு இல்லாத காரணத்தால் ஒரு நூலின் அமைவிடத்தை அறிவது கடினம். நுண்பட வாசிப்புக் கருவியின் ஊடாக முழுப்படச்சுருளையும் வாசிப்பதன் மூலமே ஒரு நூலின் அமைவிடத்தை அறிய முடியும்.
2. நூலை ஒதுக்கீடு செய்வது மிகவும் சிரமமானது.
3. வாசகர் நூலை இரவல் பெற்றமைக்கான எந்தப்பதிவும் வாசகனிடம் இருக்காது.
4. மீளப் பெறப்பட்ட நூல்களுக்கான பதிவுகள் பேணப்படுவதில்லை.
5. இரவல் வழங்கப்பட்ட நூல்களுக்கான சரியான பதிவேடுகள் இல்லாத காரணத்தால் இருப்பெடுத்தல் சாத்தியமற்றது.
6. புள்ளிவிபரங்கள் மொழி வாரியாகவோ வாசகர் வாரியாகவோ வயது அடிப்படையிலோ அல்லது பால் அடிப்படையிலோ பேணப்படமுடியாது.
7. பரிவர்த்தனை அட்டைகள் தவறான இடத்தில் வைக்கப்பட்டால் அல்லது தொலைக்கப் பட்டால் நூலை இரவல் வழங்கிய திகதியை அறிவது கடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.126 கணினிமயப்படுத்தப்பட்ட இரவல் வழங்கல் முறை (Computer Charging System)

சிசெஸ்ரர் நூலகங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் இரவல் வழங்கல் முறையில் சுழற்சிப் பதிவேடுகள் கணினிமயப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

தேவைப்படும் உபகரணங்கள்:

1. 3"x2" அளவிலான நூல் அட்டைகள்
2. 3"x2" அளவிலான வாசகர் அட்டைகள்
3. கணினி
4. 3 வாசிப்புக் கருவிகள்
5. துளைநாடா ஒன்று
6. அரத்தாள்

செய்முறை: வாசகர் அட்டைகளையும் நூல் அட்டைகளையும் கணினியில் செலுத்தி விபரங்கள் எடுக்கப்பட்டபின்னர் நூல்கள் வாசகரிடம் ஒப்படைக்கப்படும். மீளப் பெறப்படும் போது வாசிப்புக் கருவியின் உதவியுடன் விபரங்கள் பெறப்பட்டு நூல்கள் மீளப்பெறப்படும். இந் நடவடிக்கையை இலகுவாகச் செயற்படுத்துவதற்கு பல்வேறு இரவல் வழங்கும் பகுதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மிகக்கூடுதலான வாசகருக்கு இலகுவாகக் குறைந்த நேரத்தில் நிறைந்த சேவையை ஆற்ற முடியும்.

நன்மைகள்

1. இதன்மூலம் திருப்பி ஒப்படைக்கப்படாத நூல்களின் விபரங்களை கட்புல அட்டவணையைப் பயன்படுத்தி துரிதமாக அறிவதற்கு வாய்ப்பு உண்டு.
2. துரித இயந்திர சேவையின் மூலமாக மனித வலுவினால் ஏற்படக்கூடிய தாமதத்தையும் தவறுகளையும் தவிர்க்கும் வாய்ப்பு உண்டு.
3. திருப்பிக் கொடுக்கப்பட்ட திகதிப் பதிவேடு நூல் தெரிவுக்கு ஓர் உதவு கருவியாக விளங்குகின்றது.
4. நூல்களின் பாவனையையும் வாசகர்களின் விபரங்களையும் இலகுவாக அறிய உதவுகின்றது.
5. சரியான நூலை சரியான வாசகனுக்கு கொடுக்க உதவுகின்றது.

தீமைகள்

1. இம்முறை மிகுந்த செலவினத்தை உடையது.
2. நேரடியாக நூல்களை இரவல் வழங்குவதோ மீளப் பெறுவதோ துரிதமாக மேற்கொள்ளப்படமுடியும் என்பது சாத்தியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பதினைந்து

உசாத்துணைச் சேவை

15.0 அறிமுகம்

நூலகவியல் பஞ்சசீலக் கொள்கைகளில் முதலாவதும் முக்கியமானதுமாகக் கருதப்படுவது நூல்கள் பாவனைக்கே என்ற விதியாகும். இவ்விதி முறைப்படி செயற்பட வேண்டுமாயின் நூல்கள் பின்வருமாறு இருவகையில் வாசகரால் பாவிக்கப்படல் வேண்டும்:

* நூலகத்துக்கு வெளியே பயன்படுத்தல்
* நூலகத்துக்குள்ளே பயன்படுத்தல்

முதலாவது வகைப் பயன்பாட்டுக்கு இரவல் வழங்கும் சேவையின் அவசியம் உணரப் படும் அதேசமயம் இரண்டாவது வகைப் பயன்பாட்டுக்கு உசாத்துணை சேவை மிக அவசியமானதாகும்.

பரந்த நோக்கில் பார்க்கும்போது வாசகனுக்கு நூலக அலுவலர்களினால் வழங்கப்படுகின்ற எந்த உதவியுமே உசாத்துணைச் சேவை என்று அழைக்கப்படுகிறது. வாசகனை நூலகத் துக்கு அறிமுகம் செய்தல், சரியான நூலுக்கு அவனை வழிகாட்டுதல், வாசகனால் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல் போன்ற அனைத்துமே உசாத்துணை சேவையாகத்தான் கருதப்படுகிறது. இன்னொரு வகையில் ஒரு உசாத்துணை நூலகரால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுமே உசாத்துணைச் சேவையாகத்தான் கருதப்படுகின்றது. பல்வேறு தேவைகளின் அடிப்படையில் தகவலைத் தேடுகின்ற ஒரு வாசகனுக்கு நூலகத்துக்குள்ளேயே வழங்கப்படும் தனிப்பட்டரீதியிலான நேரடி உதவியே உசாத்துணைச் சேவை ஆகும்.

15.1 வரைவிலக்கணம்

உசாத்துணைச்சேவை என்றால் என்ன? இதற்குப் பலர் வரைவிலக்கணம் கொடுத்திருக் கிறார்கள்.

கலாநிதி எஸ்.ஆர். இரங்கநாதனின் கருத்துப்படி, "ஒரு நூலகத்தில் ஒரு வாசகனையும் அவனுக்குத் தேவையான ஒரு நூலையும் சரியான நேரத்தில் சரியான முறையில் இணைத்து விடும் செய்முறையே உசாத்துணை சேவை ஆகும். சரியாகவும் விரைவாகவும் வாசகனது பொருள் ஆர்வத்துறை தொடர்பான தகவலைக் கொண்ட ஆவணத்தைத் தேடிக் கண்டுபிடிப் பதற்கு ஒவ்வொரு வாசகருக்கும் செய்யும் தனிப்பட்ட உதவியே இது" என்று அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hutchin என்பவரது கருத்துப்படி, பல்வேறு தேவையின் அடிப்படையில் தகவலைத் தேடும் ஒரு நூலக பாவனையாளருக்கு நூலகத்திற்குள்ளே வழங்கப்படுகின்ற தனிப்பட்ட முறையிலான நேரடி உதவியும் தகவலை இலகுவாகத் தரக்கூடிய வகையில் வழங்கப்படும் நேரடிச் சேவையும் உசாத்துணைச் சேவையாகும்.

William A. Katz என்பவரது கருத்துப்படி, ஒரு சாதாரண வினாவுக்கு விடையளிப்பது தொடக்கம் நூல் விபரத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை வழங்குவது வரை இது பலதரப்பட்ட பணிகளை உள்ளடக்கிய தொன்று. மரபுரீதியான அல்லது ஆகக் குறைந்த சேவை, மிதமான அல்லது மத்திய அளவான சேவை, தாராளமய அல்லது உயர் அளவான சேவை என மூன்று வகையான சேவைகளை இவர் இனங்காண்கிறார்.

Louis Shores என்பவரது கருத்துப்படி, ''இராணுவம் ஒன்றுக்குப் புலனாய்வு போன்றதுதான் தகவல் சேவைக்கு உசாத்துணைச் சேவை ஆகும்''.

ALA அகராதியின் படி, 'படிப்பதற்கும் ஆய்வில் ஈடுபடுவதற்கும் என நூலக வளங்களைப் பயன்படுத்துவதற்கும் தேவையான தகவலைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும் வாசகருக்கு வழங்கப்படும் தனிப்பட்ட உதவியுடன் நேரடியாகத் தொடர்புபடும் பணிகள் அனைத்தும் உசாத்துணை சேவை எனப்படும்'.

Alan M.Rees என்ற அறிஞரின் கருத்துப்படி, 'உசாத்துணை வளங்களை அடிப்படையாகக் கொண்டு வாசகனால் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க முயல்வதே உசாத்துணைசே வை ஆகும்'.

ஒரு நூலகத்தில் உசாத்துணைப் பணிக்குப் பொறுப்பாக இருக்கின்ற நூலகரினால் ஆற்றப் படுகின்ற பணிகள் யாவும் உசாத்துணைப்பணி என்றும் கூறுவர். இவை அனைத்தையும் நோக்கும்போது ஒரு நூலகத்தினால் வழங்கப்படும் அனைத்துச் சேவைகளும் உசாத்துணை சேவை எனலாம்.

15.2 உசாத்துணை சேவையின் நோக்கங்கள்

உசாத்துணை சேவையின் முக்கிய நோக்கம் பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முறையில் வாசகனையும் நூலையும் இணைத்துவிடுதல் என்பதாகும். இச் செயற்பாடு செவ்வனே நடைபெறுவதற்கு வாசகனைப் பற்றிய அறிவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவிற்கு நூல்களைப் பற்றிய அறிவும் முக்கியமாகும். கவர்ச்சிகரமான நூலகக் கட்டடம், வசதியான நூலக தளபாடங்களும் உபகரணங்களும், நூலக ஆவணங்களின் பகுப்பாக்க ஒழுங்கமைப்பு, பல் நோக்கத் தேவையை திருப்திப்படுத்தக் கூடிய பட்டியல், நூல்களுக்கான திறந்த அணுகை, பொருத்தமான இடத்தில் பொருத்தமான தகவல் வளங் களைத் தெரிவு செய்வதற்கு உதவுகின்ற வழி காட்டிகள், நேரத்தைச் சேமிக்கக் கூடிய நூல் இரவல் வழங்கல் முறைகள், அமைதியான சூழல், கண்ணைக் கவரும் வண்ணப் படங்கள், இயற்கைக் காட்சிகள் அனைத்துமே ஒரு வாசகனையும் நூலையும் இணைத்துவிடுவதிற் பெரும் பங்கு வகிக்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் நூலகங்களுக்கும், எமது நாட்டி லுள்ள சிறப்பு நூலகங்களுக்கும் இது பொருந்தும் என்பதும் அனுபவ ரீதியான உண்மை என்பதில் சந்தேகமில்லை. எமது நூலகங்களில் இன்று எழுகின்ற அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்று போதியளவு நூல்கள் இல்லை என்பதாகும். இன்னொன்று தரமான நூல்கள் இல்லை என்பதாகும். நூலே இல்லாதபோது வாசகனையும் நூலையும் எவ்வாறு இணைத்துவிடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வினா எழுவது தவிர்க்க முடியாத ஒன்று. இங்கு தான் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக, நாம் கற்ற அறிவிலிருந்து மாற்றீடுகளைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக ஆகின்றோம். எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்குவது சாத்தியமில்லை. அதேசமயம் வாசகனுக்குத் தேவைப்படும் நூல் எமது நூலகத்தைச் சுற்றியமைந்த ஏனைய நூலகங்களில் இருக்கிறதா என்பதை அறிந்து சொல்வது எமது கடமையாகும். இங்கு தான் நூலகரின் அறிவுத் தளம் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அறிவும் சமூக உணர்வும் மிக்க ஒருவரை நூலகராகக் கொண்ட நூலகமானது தனது நூல் இருப்புப் பற்றி பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை.

ஆனால் எம்மிடையே உள்ள பெரும்பாலான பாடசாலை நூலகங்கள், பொதுநூலகங்களை எடுத்தால் அவற்றின் பின்தங்கிய நிலையையும் மனதிற் கொண்டே ஆக வேண்டும். எனவே சேவை புரிதல் எங்ஙனம் என்னும் எண்ணப்பாடு தவறானது. உள்ளதைக் கொண்டு உயர்ந்த சேவையாற்றும் நிலையில் எமது பெரும்பாலான நூலகங்கள் இருக்கின்றன. எனவே ஏடுகளில் சொல்லப் பட்டது போன்று நூலக வசதியில் ஒன்று குறையினும் சேவை வழங்குவது சாத்தியமில்லை என்று எண்ணுவதைத் தவிர்த்துத் தற்கால சூழ்நிலைகளுடன் ஒத்துப் போகும்படி எவ்வாறு வழங்குவது என்பதற்கான மாற்றீடுகளைக் கண்டறிந்து அவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் தான் சமூகத்தின் முன்னேற்றமே தங்கியுள்ளது. இதில் இன்னொன்றையும் கவனிக்கலாம். போதிய வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தும் சில நூலகங்கள் எவ்வித சேவைகளையும் வழங்குவதாகத் தெரியவில்லை. குறைந்தது ஒரு நூல் பற்றிய தகவலைக் கேட்டாற் கூட எத்தனை பேர் முகமலர்ச்சியுடன் எழுந்து சென்று உதவி செய்கின்றனர் என்று இலகுவாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம். வாசகனுக்கு உதவி செய்வதற்கு நிதிப் பற்றாக்குறையைக் காரணங் காட்டுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

15.3 உசாத்துணை சேவையின் பண்புகள்

* குறைந்த மட்டம் தொடக்கம் கூடிய மட்டம் வரை தகவல் செயற்பாடுகளின் அனைத்து மட்டங்களுடனும் உசாத்துணை சேவை செல்வாக்கு வகிக்கின்றது.
* சரியான நேரத்தில் சரியான தகவலையோ ஆவணத்தையோ பெறுவதற்கு இது உதவுவதனால் தகவல் அணுகுகைக்கும் அதேசமயம் வாசகரின் நேரத்தை மீதப்படுத்தவும் இது உதவுகின்றது.
* ஒரே மாதிரி பல ஆய்வுகள் செய்வதைத் தடுப்பதற்கு ஆய்வாளருக்கு உதவுகிறது. அத்துடன் அவர்களது ஆய்வுகளையும் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் தொடரவும் இது உதவுகிறது.
* தீர்மானம் மேற்கொள்பவர்கள் சரியான தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களைப் பெறுவதற்கு உதவுகிறது.
* தகவல் நிறுவனம் ஒன்றின் உச்சப்பயன்பாட்டுக்கு இது வழி சமைப்பதனால் இது ஒரு முக்கிய சேவையாகக் கருதப்படுகிறது.
* இச்சேவையை ஆற்றுவதற்கு மனிதத்துவ உணர்வு அவசியமாகக் கருதப்படுவதால் மனிதர்களிடம் நற்பண்பை விருத்தி செய்ய இது உதவுகிறது.
* நூலகவியல் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இது நன்கு உதவுகிறது.
* முதலாவது விதிக்கமைய சரியான வாசகனையும் அவனுக்குப் பொருத்தமான சரியான நூலையும் இணைத்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இரண்டாவது விதிக்கமைய வாசகன் தனக்குத் தேவையான சரியான நூலை கண்டு பிடிக்க உதவுகிறது.
* மூன்றாவது விதியின் படி ஒவ்வொரு வாசகனுக்கும் ஒவ்வொரு நூலுக்குமான பிரசார கராக நூலக அலுவலர் தொழிற்படுமாறு செய்கிறது.
* நான்காவது விதியின் படி சரியான நூலுக்கு வழி காட்டு வதனூடாக மிக விரைவாக வாசகனுக்குரிய தகவல் தேவையைப் பூர்த்தி செய்ய வழிகாட்டுகிறது.
* ஐந்தாவது விதியின் படி தொகையிலும் தரத்திலும் பலதரப்பட்டு உருவிலும் உள்ளடக்கத்திலும் பலதரப்பட்டு குவிந்திருக்கும் தகவல் சாதனங்களில் தமக்குப் பொருத்த மானவற்றை தேடிக்கண்டு பிடிக்க உதவுகின்றது.

15.4 வளர்ச்சிப்போக்கு

நூலக அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டங்களிலேயே தனிப்பட்ட உதவி வாசகனுக்கு வழங்கப்பட்டதெனினும் தகவல் நிறுவனம் ஒன்றின் அடிப்படைத் தொழிற்பாடாகக் கருதப்பட்ட காலம் முதற்கொண்டே உசாத்துணை சேவை என்ற கருத்துநிலை தோற்றம் பெற்றது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க பிரித்தானிய நூலகர்கள் கோட்பாடு ரீதியற்றமுறையில் உசாத்துணைசேவைகளை ஒழுங்கான முறையில் வழங்கி வந்துள்ளதாக அறிய வருகின்றது. 1876இல் Samuel Green என்பவரால் உசாத்துணை சேவை என்பது பட்டியலாக்கம் மற்றும் உசாத்துணை சாதனங்களைப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் வாசகனுக்குக் கொடுக்கப்படும் தனிப்பட்ட ரீதியிலான விளக்கம் எனப் பொருள் கூறப்பட்டது. ஆனால் 1930ம் ஆண்டளவில்தான் James I. Wayer என்பவரால் முதன்முதலில் உசாத்துணை சேவைக்கான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறை ஆராயப்பட்டது. அதுபோல் 1940 களில் கலாநிதி S.R இரங்கநாதனால் உசாத்துணை சேவை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட 2ம் உலகப் போரின் பின்னர் தான் நூலகங்கள் உசாத்துணை சேவையை ஆரம்பித்தது எனலாம்.

1971ம் ஆண்டளவில் கல்லூரி நூலகங்கள் ஆய்வு நூலகங்கள் என்பவற்றில் ஒரு கருத்துக் கணிப்பை மேற்கொண்ட Florence Blakely என்ற அமெரிக்கப் பெண்மணி உசாத்துணை நூலகரின் பணிகளாகப் பின்வருவன அமைந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார்:

* நூலகங்களுக்கிடையிலான இரவல் வழங்கும் சேவை.
* பொது மக்களுக்கான ஆவண சேவை.
* நடப்புப் பருவ இதழ்கள் செய்தித் தாள்கள் போன்றவற்றை நுண்வடிவமாக்குதல்.
* நூலகச் சுற்றுலா.
* நூலக அறிவுறுத்தல்.
* தொடர் வெளியீடுகளுக்கான பட்டியல்களைப் பராமரித்தல்.
* உசாத்துணை சாதனங்களுக்கான நூல் தெரிவும் காட்சிப் படுத்தலும்.
* ஆய்வுக்கட்டுரைகளுக்கான பூர்வாங்கப்பணிகளை மேற்கொள்ளல்.
* வாசிப்புப் பகுதியை மேற்பார்வை செய்தல்.
* வாசகர்களுக்கான விசேட கோப்புக்களைப் பராமரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நூலக வெளியீடுகளுக்குப் பங்களிப்புச் செய்தல்.
* செய்தித் தாள்களில் உள்ள விபரங்களை வெட்டிச் சேகரித்தல்.

இதன் அடிப்படையில் பார்க்கும்போது ஒரு நூலகரால் செய்யப் படும் அனைத்துப் பணிகளுமே உசாத்துணைப்பணி எனப்படும். ஆனால் விசேட நோக்கில் மிக ஆழமாகப் பார்க்கும்போது மேற் கூறிய சேவைகள் அனைத்தையும் நூலக தகவல் சேவை என்ற பொதுப் பெயருக்குள்ளே அடக்கி விடமுடியும். அதுபோன்று வாசகனுக்குத் தனிப்பட்ட முறையில் செய்கின்ற உதவிகள் யாவுமே வாசகர் சேவை எனக் கூறிவிடலாம். வாசகர் வழிகாட்டல் சேவை, வாசகர் ஆலோசனைச் சேவை, வாசகர் அறிவுறுத்தல் சேவை என்பவற்றை உசாத்துணை சேவையின் ஓர் அங்கமாகக் கொள்ளலாமே தவிர இவை மட்டும் உசாத்துணை சேவையாக முடியாது. நுணுக்கமான முறையில் ஆராய்ந்து பார்க்கும்போது உசாத்துணை வளங்களை அடிப்படையாகக் கொண்டு வாசகனால் கேட்கப்படுகின்ற வினாக்களுக்கு விடையளிக்க முயல்வதே உசாத்துணை சேவை என AlanM.Ree என்ற அறிஞர் கூறுகின்றார்.

ஆனால் நூலக உணர்வும் நூல் உணர்வும் மிகக் குறைவாக இருக்கின்ற நூலகங்களில் வாசகன் வினவும் வரை காத்திருப்பதானது பயன்தரத் தக்கதல்ல. வாசகன் எம்மை நோக்கி வரும்வரை காத்திருக்காது நாம் வாசகனை நோக்கி நகருவதே பொருத்தமானது. இந்த வகையில் நோக்கின் வாசகனை மையப்படுத்தி வாசகனது வேண்டுகோளின் அடிப்படையில் நாம் உதவும் சேவையும் வாசகன் கேட்காமலேயே நாம் உதவும் சேவையும் இணைந்ததே உசாத்துணை சேவை என்ற முடிவுக்கு வரலாம்.

15.5 உசாத்துணை சேவை ஏன்?

நூலக விதிமுறைகள் பற்றிய விளக்கக் கையேடுகள், அறிவித்தல் அட்டைகள், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல்கள், திறந்த அணுகுமுறை போன்ற வசதிகள் தாராளமாக இருக்கும்போது தனிப்பட்ட முறையில் வாசகனுக்கு உதவும் தேவையில்லை என்ற சிந்தனையுடன் நூலகம் பற்றிய மேலார்ந்த அறிமுகத்துடன் தமது பணியை முடித்துக் கொள்ளும் வளர்ந்த பல நூலகங்களை நாம் கண்கூடாகப் பார்க்க முடியும். பின்வரும் காரணங்கள் உசாத்துணை சேவையின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன:

* நூல்களின் செயற்கைத் தன்மை: சாதாரண நூல்களை எடுத்துக் கொண்டால் ஒரே பொருட்துறை சார்ந்து ஒரே மாதிரியான பல நூல்கள் இருக்கும்போது அதில் பொருத்த மானதையும் சரியானதையும் தேர்ந்தெடுக்கும் வல்லமை எல்லா வாசகருக்கும் இல்லை. அதே போன்று அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், ஆண்டு நூல்கள் போன்ற உசாத் துணை சாதனங்களோ அல்லது நுண்வடிவங்கள், படத் துணுக்குகள், சீடிரோம்கள் போன்ற உபகரணப் பாவனையுள்ள சாதனங்களோ செயற்கைத் தன்மை வாய்ந்தவை. இவற்றிலிருந்து வாசகனுக்குத் தேவைப்படும் தகவலைத் தேடிப் பொறுக்கியெடுத்தல் கடினமான அறிவுசார் பணியாகும். ஒருவரின் தனிப்பட்ட உதவியின்றி இவற்றைப் பயன்படுத்தல் மிகவும் சிரமமானது.
* பட்டியலின் செயற்கைத் தன்மை: நூல்களை அதன் ஆசிரியரின் கீழ் அல்லது தலைப் பின் கீழ் அதுவுமன்றி ஆக்கத்தை உருவாக்கிய நிறுவனத்தின் கீழ் பதிவதற்குப் பின்பற்றப்படும் பட்டியலாக்க விதிமுறைகள் வாசகனுக்குப் புதிரையும் குழப்பத்தையும் ஏற்படுத்துபவை. நூலாசிரியரின் பெயர்களின் கீழ் ஒரு நூலின் விபரங்கள் பதியப்பட்டு ஒழுங்குபடுத்தப்படும் செய்முறையில் பல செயற்கைத் தன்மைகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டாக உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியரான பேனாட் ஷோவை பட்டியலாக்க முறையில் ஷோ,பேனாட் என பதிந்து அதன் கீழ் அவரது ஆக்கங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தினால் வாசகன் பட்டியலாக்க அறிவுடன் நூலகத்துக்கு வருவான் என நினைப்பது தவறானது. பேனாட் ஷோ என்ற பெயரில் அவரது ஆக்கங் களைத் தேடும் வாசகனுக்கு இச் செய்முறை குழப்பத்தையே ஏற்படுத்தும். அதே போன்று திருக்குறளை குறள் என்ற பிரபல்யமான பெயரில் பதியப் போகின்றோமா அல்லது திருக்குறள் என்ற பெயரில் அதுவுமன்றி திருக்குறளை இயற்றியவராகக் கருதப்படும் திருவள்ளுவர் என்ற பெயரில் பதியப்போகின்றோமா என பட்டியலாளர் எடுக்கும் முடிவுகள் வாசகனுக்குத் தெரிவதற்கு நியாயமில்லை. அதே போன்று பார்க்க, மேலும் பார்க்க குறிப்புகள் வாசகனுக்கு குழப்பத்தைத் தரும் ஒன்று. இதனால் பட்டியலாக்கமே அர்த்தமற்றது என்ற முடிவுக்கு நாம் வந்து விடக் கூடாது. அறிவை முறைப்படி ஒழுங்குபடுத்துவதற்கும், அதைப் பதிந்து வைத்திருப்பதற்கும் பட்டிய லாக்கம் பகுப்பாக்கம் என்ற இரு அம்சங்களும் மிக அவசியமானவை. வாசகனின் நேரத்தைப் பேணுவதற்கு இவை எங்களுக்கு உதவுபவை என்ற எண்ணப் பாங்கை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டுமேயன்றி வாசகன் நூலகவியல் கற்பதற்கு நூலகம் வரவில்லை என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

* பகுப்பாக்க ஒழுங்கமைப்பின் செயற்கைத் தன்மை: வாசகனுக்கு குழப்பத்தைத் தரும் இன்னோர் அம்சம் நூல்களில் நாம் பொறித்திருக்கும் அழைப்பு எண்கள். நூல்களுக்கான வகுப்பெண்ணும் அந்த நூலை எழுதிய ஆசிரியர் பெயரின் முதல் மூன்று எழுத்துக் களும் இணைந்து தோற்றம் பெறுவதே அழைப்பு எண்ணாகும்.

  எ-டு பாரதியார் கவிதைகள்

அழைப்பு எண்	894.81116 பாரதி
வகுப்பெண்	894.81116
ஆசிரியர் குறியீடு	பாரதி

  இந்த அழைப்பு எண்கள் வாசகரைப் பொறுத்து மிகுந்த செயற்கைத் தன்மை வாய்ந்தவை. இந்த அழைப்பு எண்களின் தொடர்புத் தன்மையை விளங்கப்படுத்தி வாசகனுக்குத் தேவைப்படும் நூல்களை எடுப்பதற்கு அவனுக்கு தனிப்பட்ட ரீதியிலான உதவி அவசியமாகும்.

* முறிந்த ஒழுங்கு: நூலக இறாக்கைகளில் ஒரே வகுப் பெண்ணைக் கொண்ட நூல்கள் பலதரப்பட்ட பிரிவுகளிலும் அப்பிரிவுக்குரிய அமைவிட விபரத்துடன் ஒழுங்குபடுத் தப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக இலங்கை அரசியல் வரலாறு என்ற தலைப்பில் மூன்று நூல்கள் நூலகத்துக்கு வந்திருப்பின் அவை மூன்றும் ஓரிடத்தில் இறாக்கைப் படுத்தப்படாது AR என்ற குறியீட்டுடன் ஆவணப்பகுதியில் ஒன்றும். R என்ற குறியீட்டுடன் உசாத்துணைப் பகுதியில் ஒன்றும் S என்ற குறியீட்டுடன் இரவல் வழங்கும் பகுதியில் ஒன்றுமாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். இத்தகைய பாவனைச் சொற்களின் பயன்பாடு வாசகனைப் பொறுத்துக் குழப்பத்தை ஏற்படுத்துபவை.

* வாசகனின் உளவியல் தன்மை: நூலகத்தில் நாம் ஏழு வகையான வாசகரை இனங் கண்டு கொள்ள முடியும் என ஆசியாவின் நூலகவியல் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர்.இரங்கநாதன் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தாழ்வு மனப்பாங்குடைய வாசகர்: நாம் ஏதாவது போய்க் கேட்டால் எமக்கு ஒன்றுமே தெரியாது என நூலகர் நினைத்து விடுவாரோ, எமது அறியாமை பலவீனம் என்பன அவர்களுக்கு தெரிந்து விடுமோ என நினைக்கும் வாசகர் கூட்டம் எம்மவர் மத்தியில் மிக அதிகமாக உண்டு. சற்று நேரம் அவர்களை உறுத்து நோக்கினால் போதும், குறித்த சில காலத்துக்கு எமது கண்ணிலேயே இவர்கள் படமாட்டார்கள். இவர்களை நூலகர் இனங்கண்டு அவரின் அறியாமையைப் போக்கி அவரை நிரந்தர வாசகராக ஆக்கும் பொறுப்பு நூலகருக்கு உண்டு.

2. உயர்வு மனப்பான்மையுடைய வாசகர்: நூலகம் என்பது தகவல் சுரங்கம் அள்ள அள்ள குறையாத நீருற்று இது. சில வாசகர்கள் இதற்கு முரண்பட்டவர்கள். நூலகத்திலுள்ள அறிவுப் பதிவேடுகளை விடவும் தமது மூளையில் அதிகம் உண்டு என தம்மைப் பறைசாற்றிக் கொள்பவர்களை எமது அன்றாட வாழ்வில் நாம் கண்டு கொண்டு தான் இருக்கிறோம். இத்தகையவர்களைக் கண்டு மனம் சலிக்காது இந்திய தேசிய கவி எனப் போற்றப்படும் தாகூரின் வார்த்தையில் சொல்வதானால் ''நண்பனே, நாயகனே மனிதனிடமிருந்து கிடைக்கும் பொது அவமதிப்பின் மத்தியிலும் கூட அதனைத் தாங்கி அவனுக்குச் சேவை செய்யும் மனத்துணிவை எனக்கு கொடு'' என்ற எண்ணத்துடன் சேவையைத் தொடருவது தான் நூலக உணர்வு மிக்க நூலகரின் கடமையாகும்.

3. கூச்ச சுபாவம் உள்ள வாசகர்: பொதுவாக பயந்த சுபாவமுள்ள இவ்வாசக வகையினர் நூலக அலுவலர்களிடம் உதவி கோரக் கூச்சப்படுபவர்கள். எவரையும் எதுவும் கேட்காமல் நூலக இறாக்கைகள், நூலகப் பட்டியல் போன்றவற்றுடன் தடுமாறுபவர்கள். இவர்கள் எம்மிடம் எதுவித உதவியும் கோரமாட்டார்கள். அதேசமயம் தாமும் பயன்பெறமாட்டார்கள். இவர்களுக்கு உதவுவதற்கு நூலகர் அறிவு சார் தளத்திலிருந்து உணர்வு சார் தளத்துக்கு இறங்குதல் மிக முக்கியமானதாகும். இவர்கள் தம்மை நாடி வருவார்கள் என எதிர்பார்த்து நேரத்தை விரயமாக்காமல் சுயமரியாதை அந்தஸ்து, தகுதி போன்றவற்றைக் களைந்து ஒருபுறம் வைத்து விட்டு இவர்களை நூலகர்களே தேடிப் போகவேண்டும்.

4. சுயநலமிக்க வாசகர்: இவர்கள் தாம் மட்டும் பாவிப்பதற்காக குறித்த நூலை எடுத்து வேறு தட்டுகளில் ஒளித்து வைத்து விடுவார்கள். தவறான இடத்தில் வைக்கப்படும் நூல்கள் தொலைந்த நூல்களுக்குச் சமமானது என்பதனால் இவர்களை மிகக் கவனமாகக் கையாள வேண்டும்

5. நூல் திருடர்கள்: நூல்களிலிருந்து தேவையான பக்கங்களைக் கிழித்தோ, வெட்டியோ சில சமயம் கண்ணுக்குள் மண்ணைத் தூவிவிட்டு முழுப் புத்தகமாகவோ அபகரித்துச் சென்று விடுபவர்கள். இவர்களிடம் எவ்வித கருணையும் காட்டக் கூடாது என்பதுடன் இவர்கள் மீது எமது பார்வை எந்நேரமும் படும்படி நாம் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

6. நுண்ணறிவுள்ள வாசகர்: இவர்களுடன் பழகுவது மிகவும் கடினமானது. நூலகத்தை, நூலக சாதனங்களை, நூலக வசதிகளை, நூலக சேவைகளை அணுவணுவாக அறிந்து வைத்திருப்பவர்களும் அதனை முழுமையாகப் பயன்படுத்து பவர்களும் இவர்கள் தான். ஒளிவு மறைவின்றி கூறுவதானால் நூலக சேவையின் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி இவர்களுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. நூலக செயற்பாடுகளும் இவர்களை மையமாகக் கொண்டே திட்டமிடப்படுகின்றன.

7. சாதாரண வாசகர்: நூலக வாசகர்களில் பெரும்பாலானோர் இவர்களே. இவர்களுக்கு தேவைப்படுவதை மட்டும் கேட்பார்கள்.

15.6 வகைகள்

பொதுவான சேவைகள்

* யார் எது எங்கே எப்போது எப்படி போன்ற கேள்விக்கு விடையளித்தல்.
* சிறப்புத் தகவல்களை வழங்குதல்.
* ஆவணங்களின் அமைவிடத்தை அறிந்துகொள்ள உதவுதல்.
* நூலகப் பட்டியலை பயன்படுத்துவதற்கு உதவுதல்.
* உசாத்துணை நூல்களைப் பயன்படுத்த உதவுதல்.
* நூலக அறிவுறுத்தல்கள்.
* நூலகங்களை எப்படிப் பாவிப்பது என்பதற்கான அறிவுறுத்தல்.
* நூலகப் பட்டியல்கள், உசாத்துணைக் கருவிகள் என்பவற்றின் பயன்பாடு.
* நூலக அங்கத்தவர்களையும் அதிதிகளையும் நூலகத்தைச் சுற்றிப் பார்வையிட அழைத்துச் செல்லல்.
* நூல்களை ஒதுக்கீடு செய்தல்.
* புதிய நூல்களையும் அண்மைக்கால பருவ இதழ்களையும் காட்சிப்படுத்தல்.
* நூலக கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தல்.

சிறப்புச் சேவைகள்

* நூலகங்களுக்கிடையிலான நூலிரவல் வழங்குதல்.
* அங்கத்தவர் அல்லாதோருக்கும் நூலகத்தைப் பார்வையிட அனுமதியளித்தல்.
* நூலக வெளியீடுகளைத் தயாரித்தல் அல்லது தயாரிப்பதற்கு உதவி செய்தல்.
* சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் சேவைகள்.
* நூல்விபரப்பட்டியல்களைத் தொகுத்தல்.
* பத்திரிகைத் துணுக்குகளை பராமரித்தல்.
* துண்டுப்பிரசுரங்கள் அறிக்கைகள் போன்ற கோவையைப் பராமரித்தல்.
* ஆவண மீளுருவாக்கவியல் சேவைகள்.
* ஆற்றுப்படுத்தல் சேவைகள்(நூலகத்திற்கு வெளியே தகவல்பெற வழிப்படுத்தல்).
* தாய்நிறுவனத்தின் கடந்தகால, நிகழ்கால செயற்பாட்டு நோக்கங்கள் போன்றவற்றின் விபரங்கள் செயற்பாடு போன்றவற்றைச் சேகரித்து வைத்தல்.

கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் உசாத்துணை சேவையை இரண்டு வகையாகப்பிரிக்கிறார்.

* குறுங்கால உசாத்துணைசேவை - உடனடி உசாத் துணைசேவை
* நீண்டகால உசாத்துணைசேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.61 நூலக அறிமுகச் சேவை

உசாத்துணைச் சேவையில் முக்கியமானது வாசகனை நூலகத்துக்கு அறிமுகப்படுத்தல் ஆகும்.

நூலகத்துக்கு நூலகம் ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதிலும், சேவைகளை வழங்கு வதிலும் வேறுபட்ட முறைகள் பின்பற்றக் கூடும். எனவே நூலகத்துக்குப் புதிதாக வரும் வாசகர்களுக்கு நூலக விதி முறைகள், சேவைகள் என்பவை பற்றிய அறிமுகம் அத்தியா வசியமானது. புதிய வாசகர்களை நூலகரோ அல்லது நூலக அலுவலர்களோ கூட்டிச் சென்று நூல்களின் தன்மை, நூல்கள் வைக்கப்பட்டிருக்கும் பிரிவுகள், நூலுருவற்ற சாதனங்கள் இருக்குமாயின் அவை பற்றிய விளக்கம், பட்டியலைப் பாவிக்கும் முறைகள், நூலக விதிமுறைகள், அங்கத்தவராகச் சேருவதற்கான ஒழுங்குமுறைகள் போன்ற அனைத்து விபரங்களையும் பொறுமையுடன் கற்றுக் கொடுக்க வேண்டும். விரிவுரை மண்டபத்தில் ஓரிரு விரிவுரைகளுடன் இந்த அறிமுகத்தை முடித்துக் கொள்ளும் போக்கே எம்மிடையே அதிகம் காணப்படுமொன்று. நூலக அறிமுக சேவையைப் பெரிய நூலகங்கள் சரிவரச் செய்வதில்லை என்ற எண்ணப்பாடு வாசகர்களிடையே பரவலாக உண்டு. நூலக விதிமுறைகள் பற்றிய விளக்கக் கையேடுகள், அறிவித்தல் அட்டைகள், ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல், திறந்த அணுகுமுறை போன்ற வசதிகள் தாராளமாக இருக்கும் போது வாசகருக்குத் தனித்தனி அறிமுகம் தேவையற்றது என்று நினைத்துக் கொண்டு ஒரு மேலார்ந்த அறிமுகத்துடன் நாம் ஒதுங்கிக் கொள்கின்றோம்.

15.62 வாசகர் அறிவுறுத்தல் சேவை

தகவல் கட்டுமீறல் அல்லது தகவல் வெடிப்பு என்ற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித சமூகத்தில் தரமான நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிப்பது சுலபமான தொன்றல்ல. அதற்குச் சரியானதொரு வழிகாட்டுதல் மிக அவசியமாகும். அதிலும் குழந்தைகள், சிறுவர், மாணவர், பெண்கள், முதியோர் எனச் சமூகத்தின் அனைத்து மட்ட வாசகருக்கும் சேவை புரிய வேண்டிய ஒரு நூலகத்தில் வாசகருக்கான வழிகாட்டுதல் என்பது மிக மிக அவசிய மாகும்.

வாசகர் அறிவுறுத்தல் சேவை அல்லது வாசகர் வழிகாட்டுதற் சேவை என்பது நூலகத்துக்கு வரும் வாசகரின் தரத்தை அறிந்து அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தல் ஆகும். இச் சேவையைச் செவ்வனே புரிவதற்கு நாம் நூலக வாசகர் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும்.

எமது நூலகங்களில் இன்று எழுகின்ற அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்று போதியளவு நூல்கள் இல்லை என்பது. இன்னொன்று தரமான நூல்கள் இல்லை என்பது. நூலே இல்லைப் பின் எவ்வாறு வாசகனையும் நூலையும் இணைத்து விட முடியும் என்ற வினா எழுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இங்கு தான் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக, நாம் கற்ற அறிவிலிருந்து மாற்றீடுகளைக் கண்டு பிடிக்க வேண்டியவர்களாக ஆகின்றோம். நூல்களைப் பணம் கொடுத்து வாங்கிப் போடும் ஆற்றல் எமக்கு இல்லையெனில் வாசகனுக்குத் தேவைப் படும் நூல் வேறு எந்த நூலகத்தில் இருக்கின்றது என்பதை அறிந்தாவது சொல்ல முடியும். இதனைத் தான் ஆற்றுப்படுத்தல் சேவை என்ற பதம் குறிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.63 குறுங்கால உசாத்துணைசேவை

மிகவும் குறுகிய நேரத்தில் உசாத்துணை வினாக்களுக்கு விடையளிக்கும் சேவை உடனடி உசாத்துணைசேவை எனப்படும் (Ready Reference Services). இச் சேவையானது உசாத்துணை அலுவலரது அறிவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

1. வினாவுக்கான விடையை நேரடியாக வாசகனுக்குச் சொல்லுதல்.
2. சரியான உசாத்துணை வளத்தை வாசகருக்கு வழங்குதல்.
3. நூல்களை பயன்படுத்தும் முறையை வாசகனுக்கு பயிற்றுவித்தல்.

15.64 நீண்டகால உசாத்துணைசேவை

ஒரு வாசகனினால் கேட்கப்படும் கேள்விக்கு 1/2 மணித்தியாலத்திலோ ஒரு வாரத்திலோ அளிக்கப்படும் சேவை. உசாத்துணைசாதனங்கள் மட்டுமன்றி ஏனைய சாதனங்கள் அல்லது சில சமயங்களில் நூலகத்தில் இல்லாத தகவல்களை நூலகத்திற்கு வெளியே பெற்றுக்கொள்ளல் என்பன.

* கேள்வியின் தன்மை (எ-டு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் இயந்திரமயமாக்கல்),
* உசாத்துணை வளங்கள் (எ-டு: பருவகால இதழ்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் புதிய தகவல் புதியஅபிவிருத்திகள் பற்றிய சிறப்புத்தகவல்களாக இருத்தல்),
* காலம் (எ-டு: மிகவும் அண்மைக்கால தகவலாகவோ கடந்த காலத் தகவலாகவோ இருக்கலாம்),
* தகவலின் தன்மை (எ-டு: குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக ஒருவரின் கருத்தாகவோ, பலவித தகவல் மூலங்களிலிருந்து சேகரிக்கப்படவேண்டிய தகவலாகவோ, அன்னிய மொழிகளிலிருந்து தேடப்படும் தகவலாகவோ, நூலகத்தில் இல்லாத ஒரு பருவ இதழிலிருந்து பெறப்பட வேண்டிய தகவலாகவோ இருக்கலாம்),

என்பவற்றின் அடிப்படையிலேயே நீண்டகால உசாத்துணை சேவை வழங்கப்படுகிறது.
உசாத்துணை வினாக்களின் வகை

* வழிகாட்டும் வகை
  உ-ம்: பட்டியலாக்கப் பகுதி எங்கே உள்ளது?
* பொது வகை (Fact Type Questions)
  இலங்கையின் மிக உயரமான மலை பற்றிய விபரம் வேண்டும்.
* தனித்துவ வகை
  தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கைச் சரித்திரத்தின் பெயர் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை வினாக்களுக்குப் பதிலளிக்கும் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பதினாறு

சிறப்புச் சேவைகள்

16.1 நூலக விரிவாக்க சேவைகள்

பொது சன நூலகங்களினால் வழங்கப்படக் கூடிய சேவைகளில் முக்கியமானதாகக் கருதப் படுவது நூலக விரிவாக்க சேவையாகும். விரிவாக்க சேவைகள் ஏனைய நூலகங்களினாலும் மேற்கொள்ளப்படக் கூடியது எனினும் பொதுசன நூலகத்தைப் பொறுத்து இது மிகமிக இன்றியமையாதது. ஒரு விசேட நூலகத்தையோ அல்லது ஆய்வு நூலகத்தையோ நாம் எடுத்துக் கொண்டால் தகவல் தேவையின் நிர்ப்பந்தம் அவரை அங்கு போகத் தூண்டும் என்ற வகையில் அங்கு வாசகரை ஈர்ப்பதற்கு நாம் எவ்வித சிரமத்தையும் எதிர் கொள்ளத் தேவையில்லை. அங்கு விரிவாக்க சேவைகளை விட வேறு முக்கிய சேவைகளில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கும். பொது சன நூலகத்தைப் பொறுத்துச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் இன, மத, வயது வேறுபாடின்றிச் சேவை செய்ய வேண்டிய கடப்பாடு உண்டு. இதற்கு அவர்களை நூலகத்தின் பால் ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமானது. முக்கியமான விரிவாக்க சேவைகளில் சில

16.11 வாசிப்பு வட்டம்

வாசிப்பு வட்டம் என்னும்போது பொதுவான பொருட்துறைகளில் ஆர்வமுள்ளோரை ஒன்று சேர்த்து அவர்களுக்கென வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல் வேண்டும். வாசிப்பு வட்டங்களுக்குத் தேவையான நூல்களையும் வாசிப்பு வட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான இடத்தையும் தேர்ந்தெடுத்து வாசிப்பு வட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற வழிவ குக்க வேண்டும். வாராந்த மாதாந்த ரீதியில் நடைபெறும் இத்தகைய கருத்தூட்டல்களுக்கு உதவுமுகமாக நூலகங்கள் தமக்கென சிறியளவிலாவது கருத்தரங்கு மண்டபம் ஒன்றையும் கொண்டிருக்குமாயின் வாசிப்பு வட்டம் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே அவற்றுடன் தொடர்பான நூல்களை அம் மண்டபத்தின் ஒரு பகுதியிலேயே காட்சிப்படுத்தின் வாசகர்களுக்கு இலகுவாக இருக்கும்.

16.12 கல்வியற்றோருக்கான வாசிப்பு

அபிவிருத்தியடைந்து வரும் பெரும்பாலான நாடுகளில் கல்வியறிவற்றோரின் தொகை அதிகமாக இருப்பது மட்டுமன்றி இவர்கள் பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் மிகவும் பின் தங்கியோராக இருப்பதை இனங் காண முடிகின்றது. இவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி ஏனையோரைப் போன்று இவர்களையும் சமூகத்தின் மேல் நிலைக்குக் கொண்டு வர வேண்டிய பணி பொது நூலகங்களையே சாரும். இச் சேவையின் மூலம் கல்வியறிவற்றோரும் கல்வி பெற, தகவலைப் பெற, பொழுது போக்க, அகத் தூண்டலுக்கு உதவ, மீளுருவாக்கத்திற்கு உதவ முடியும். இச் சேவையின் மூலம் மிகச் சிலராவது எழுதவும் படிக்கவும் தூண்டப்படக் கூடும். அவ்வாறு அவர்கள் தூண்டப் பட்டுக் கல்வியறிவு ஊட்டப்பட்டவர்களாக மாறிய பின்னர் அவர்களை மேலும் ஊக்குவிக்க வழிகாட்டலாம். இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போன்று முதுமையில் கல்வி விட்டாற் போச்சு என்ற நிலை உருவாக விடாது மேலும் மேலும் முதியோர்க்கான வழிகாட்டல் உதவியை மேற்கொள்ளுதல் அவசிய மாகும்.

16.13 ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு

உள்ளூரிலுள்ள கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ளும் கருத்தரங்குகள், கூட்டங்கள் போன்ற வற்றுக்குப் பொருத்தமான இடத்தை வழங்குவதன் மூலமும் கருத்தரங்கிற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும் சமூகத்தின் மேல் மட்ட அங்கத்தவர்களுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளல் ஒரு பொது சன நூலகத்தின் கடமையாகக் காணப்படுகின்றது. சமூகத்தின் வளர்ச்சி அச்சமூகத்தின் மேல் மட்ட அங்கத்தவர்களின் ஆதரவிலும் தங்கியுள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. இவர்களுடன் கூடுமானவரை நல்லுறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் நூலகம் சமூகத்தின் புத்தி ஜீவிகள் நிலையமாக மாறுவதற்கு இத்தகைய சேவை வழிவகுக்கும்.

16.14 பொதுச் சொற்பொழிவுகள்

சமூகத்தின் கல்வித் தரம் வாய்ந்தவர்களை அணுகி அவர்கள் மூலமாகப் பொதுச் சொற்பொழி வுகளை ஒழுங்கு செய்யலாம். சொற்பொழிவுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்துறை அண்மைக்காலத்திற்கு உரியதாக இருத்தல் அவசியம். இங்கும் கூட முன்னர் குறிப்பிட்டவாறு கருத்தரங்கு மண்டபத்தின் ஒரு புறத்தில் சொற்பொழிவிற்கான பொருட்துறை சார்ந்த புத்தகங்களைக் காட்சிப்படுத்தலாம். இந் நிகழ்வானது சமூக ரீதியிற் பரந்தளவுக்கு விளம்பரப் படுத்தப்படுவதுடன் ஒவ்வொரு சொற்பொழிவிலும் அச் சொற்பொழிவுடன் தொடர்புடைய நூல்களின் விபரங்களும், தற்போது அவற்றில் எவையெவை நூலகத்தில் இருக்கின்றன என்ற விடயமும் அறிவிக்கப்படல் அவசியம்.

16.15 கலாசார நிகழ்வுகள்

மக்களை ஈர்க்கக்கூடிய முயற்சிகளில் ஒன்றாகக் கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். நாடகம் திரைக்காட்சி போன்றவற்றை ஒழுங்கு செய்து சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் பங்குபற்றச் செய்தல் வேண்டும். நூலகப் பக்கமே திரும்பிப் பார்க்காத ஒருவரைத் தன்னும் நூலகப் பக்கம் வரப்பண்ணுவதில் நாம் வெற்றியடைவோமானால் அது நூலகத் தொழிலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

16.16 நூல் கண்காட்சிகள்

வெறுமனே நூல்களை மட்டும் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்து கூடியவரை ஏனைய ஆவ ணங்களான நுண்வடிவங்கள், பருவ இதழ்கள், கட்புல செவிப்புல ஆவணங்கள் வரைபடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றையும் கண்காட்சியில் பார்வைக்கு வைப்பதன் மூலம் நூலகம் என்பது வெறுமனே கதைப்புத்தகம் வாசிப்பதற்குரிய இடம் மட்டுமே என்ற கருத்துநிலையை மாற்ற முடியும்.

16.17 சிறுவர்க்கான கதை நேரம்

நூலக விரிவாக்க சேவையில் அதி கூடிய கவனம் செலுத்த வேண்டிய அம்சமாக இது கருதப்படுகின்றது. இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் ஏனைய வளர்முக நாடுகளுக் கில்லாத ஒரு வரப்பிரசாதம் என்பது உண்மை. எனினும் வெறும் எழுத்துக்களையும் எண்க ளையும் மட்டுமே நாம் படிக்கின்றோமே தவிர அறிவை வளர்த்துக் கொள்பவர்கள் எம்மில் வெகு சிலரேயாவர். 85 வீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் எழுத வாசிக்கத் தெரிந்தவர் எனப் புள்ளி விபரம் கூறுகின்றது. இவர்களில் சுயமாகச் சிந்தித்து ஒரு விடயத்தைத் தீர ஆலோசித்து விடை காண்பவர் எத்தனை பேர். சுயமான கற்றலுக்கு உதவக்கூடிய ஒரே நிறுவனம் பொது நூலகமே என்பதை எவரும் மறுக்க முடியாது. சுயமாகக் கற்றல் என்பதைச் சிறுவர்கள் மூலம் தான் நாம் செயற்படுத்திக் காட்ட முடியுமே தவிர இன்றைய இளம் தலைமுறைக்கு தனியார் கல்வி என்பது வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகி விட்டது. சிறுவர்களை நல்ல வழிக்கு வழிகாட்டுவதன் மூலம்தான் சுய சிந்தனையுள்ள எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும் என்பதை மனதில் இருத்தி சிறுவர்க்கான சேவை முறைகளை பொது நூலகங்கள் விரிவுபடுத்த வேண்டும். இதைச் செய்து பலனும் கண்டபின்பே எமது மக்களில் 85 வீதமானோர் படித்தவர்கள் என்று எமைப் பறை சாற்றிக் கொள்வதில் பலனுண்டு அர்த்தமும் உண்டு. ஊர்களில் நடைபெறும் திரு விழாக்கள், பண்டிகைகளின்போது நடை பெறும் பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகளுக்கான தகவல்களை உடனுக்குடன் வழங்கக் கூடியவர்களாக எம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். சிறுவர் பகுதியைக் கொண்ட நூலகங்களில் பொதுசன நூலகம் முக்கியமானது. ஏனைய நாடுகளைப் போன்று சிறுவர்களுக்கென இங்கே விசேட நூலகங்கள் எதுவுமில்லை என்பதை இங்கு நாம் மனதில் கொள்ள வேண்டும்.

16.18 நூலக விளம்பரம்

எம்மவர் மத்தியில் சிலருக்கு நூலகம் என்பது ஏதோ நெருங்க முடியாத இடம், மேதாவிகள், விற்பன்னர்கள், பெரிய மனிதர்கள் மட்டுமே செல்லக் கூடிய இடம் என்ற ஓர் உணர்வு உண்டு. அதேபோன்று நூலகம் செல்வது வேலை மினைக்கேடு என்று எண்ணுபவர்களும் எம்மிடையே உள்ளனர். நூலகத்தில் நூலை இரவல் பெறுவதற்கு கட்டணம் செலுத்தி அங்கத்தவராக மாறவேண்டும். காசு கட்டிப் படித்து அறிவு பெற்று ஆக வேண்டியது ஒன்றுமில்லை எனப் பின் தங்குபவர்களும் எம்மிடையே உள்ளனர். நூலகத்தால் பயன் அதிகம் எனக் கருதி அதனைப் பயன்படுத்த விழைவோர் கூட அதனைச் சரிவரப் பயன்படுத் துவதில்லை. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களில் நூலகம் செல்பவர்களின், நூலக உணர்வு பெற்றவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டே எண்ண முடியும். நூலகங்களின் அமைப்பு, நடைமுறை, பணிமுறை, பயன்பாடு என்பன தெரியாமல் அல்லது தெரிந்து கொள்ள இயலாமல், அல்லது தெரிந்து கொள்ள விரும்பாமல், தெரிந்து கொள்ள முயலாமல் இருப்பதற்கு காரணம் மக்களுக்கும் நூலகங்களுக்குமிடையே காணப்படும் பெரியதொரு தொடர்பு இடைவெளி தான். இதனை நிவர்த்தி பண்ணுவதற்குச் சிறந்த முறை நூலக வாரம் கொண்டாடுதல். இதனை நூலகங்களின் வசதிக்கேற்பச் செய்யலாம். கண்காட்சிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபண்ணுதல், அண்மைக்காலங்களில் வெளியான நூல்களைக் காட்சிக்கு வைத்தல், நூலகத்தின் பணிகள் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களைத் தொகுத்துச் செய்திக் கடிதங்களாக, அறிக்கைகளாக நூலக உறுப்பினர்களுக்கும் வாசகருக்கும் விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் இதனை நடைமுறைப்படுத்தலாம்.

வசதியும் வாய்ப்பும் அற்ற நூலகங்களினால் இன்றைய நிலையில் செய்யப்படக்கூடியது ஆண்டுக்கொரு தடவை நூலகவாரம் கொண்டாடுவது தான். இந் நிகழ்வின் போது நூலகம் சம்பந்தமான சுவரொட்டிகளை ஊரின் முக்கிய இடங்களில், கல்வி நிலையங்களுக்கு அருகில், கண்ணைக் கவரும் முறையில் வெளியிடுவது அதிக பயனைக் கொடுக்கும். இதன் மூலம் நூலகவியல் விதியின் மூன்றாவது விதியாகிய நூலுக்கொரு ஆள் என்ற விதியை நிறைவேற்ற முடியும்.

16.2 பத்திரிகைத் துணுக்குகளை வெட்டி ஒட்டுதல்

பத்திரிகைகள் பொதுவாக அனைத்து நூலகங்களினாலும் வாங்கப்படுபவை. ஆனால் பெரும்பாலான நூலகங்கள் இவற்றை வாங்கி வாசகர் பார்வைக்கு வைத்து ஒரு மாதமோ இரு மாதங்களோ சென்ற பின்னர் அவற்றை பழைய கடைக்குத் தள்ளி விடுவதே நடைமுறையாக உள்ளது. எமது நாட்டின் வரலாற்றை எடுத்துக் கூறும் முக்கிய தகவல் மூலமாக இன்றும் பத்திரிகைகள் இருக்கின்றன. இன்றைய செய்தித்தாள் நாளைய கழிவுத்தாள் என்ற கருத்துநிலை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும். வரலாறு மட்டுமன்றி சமூக பொருளாதார கலாசார மாறுதல்கள் அனைத்தையும் பத்திரிகைகள் தானே தாங்கி நிற்கின்றன. மக்களின் குறை நிறைகளை வெளிக்கொணரும் சாதனமாக மட்டுமன்றிப் புதிய கருத்துக்களைப் பரப்புதல், உலகின் பலதரப்பட்ட நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் போன்ற பணிகளையும் எம்மூர்ப் பத்திரிகைகள் ஆற்றுகின்றன. இப்பத்திரிகைகளை பொருளடிப்படையில் முக்கியத்துவம் பெறும் கட்டுரைகள் செய்திகள் போன்றவற்றை வெட்டியெடுத்து பழைய நோட்டுப் புத்தகமோ, வர்த்தமானிப் பத்திரிகையோ எதுவென்றாலும் கால அடிப்படையில் ஒட்டி அகர வரிசைப் பொருட் தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தலாம். சமூகத்திற்கு மிகவும் அவசியமான பொருளாதார அபிவிருத்திக்கான மாற்றீடுகள், அண்மைக்கால நூல் வெளியீடுகள், பெண்களுக்கான சிறு தொழில் முயற்சிகள், விவசாயம் தொடர்பாக உள்ளூர் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இனமுரண்பாடுகள் போன்றவை துணுக்குகள் சேகரிப்பதற்கான பொருட்தலைப்புகளின் சிலவாகும். பொதுசன நூலகங்கள் குறிப்பிட்ட பொருட்தலைப்புகளை தெரிந்தெடுத்த பின்னர் தமக்குள் கலந்து பேசி இப் பணியைச் செய்வதன் மூலம் ஒரே மாதிரியான ஆக்கங்கள் உருவாவதைத் தடுக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் உயர் மட்ட ஆய்வுகளை மேற் கொண்டுள்ள ஆய்வாளர்களைக் கூட எமது நூலகம் நோக்கி இழுக்க முடியும். பத்திரிகைகளைக் கொண்டு சிறந்த தகவல் வலயம் ஒன்றை உருவாக்கக் கூடிய வல்லமை நிதிப்பற்றாக்குறையையும் போதிய வசதிகளின்மையையும் அடிப்படைப் பண்பாகக் கொண்ட நூலகங்களினால் திறம்பட ஆற்றப்பட முடியுமாயின் அது அங்கு கடமை புரியும் நூலகரின் தனிப்பட்ட ஆற்றலிலேயே தங்கியிருக்கும் என்பது தெளிவு.

16.3 அண்மைக்கால தகவல் அறிவிப்புச் சேவை

புதிதாக வெளிவரும் தகவல் சாதனங்களில் இருந்து புதிய தகவல்களை வாசகர்களுக்கு தெரியப்படுத்துவதை மையமாகக் கொண்டது. தகவல் வெடிப்பு காலகட்டத்தில் வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமூகத்தில் கணத்துக்குக் கணம் தகவல் உற்பத்தி பல்கிப் பெருகுகின்றது. இவற்றை ஒவ்வொரு வாசகரும் தனித்து தேடி யெடுப்பது என்பது சிரமமானது. இத்தகைய சந்தர்ப்பத்தில் இச்சேவையானது புதிய தகவல் பற்றி வாசகன் அறிந்து கொள்ள உதவுகின்றது.

வர்த்தக நோக்கத்துடன் பல பிரசுரிப்பு நிறுவனங்கள் இச்சேவையை வழங்குகின்றன. எ-டு: British Library Document Supply Centre, SWETS, Uncover போன்றவை.

நோக்கங்கள்

* குறிப்பிட்ட வாசகர் தமது பாட சம்பந்தமான அண்மைக் காலத் தகவல்களை தொடர்ச்சியாக உடனுக்குடன் அறிய உதவுகிறது.
* குறிப்பிட்ட நிறுவனமோ அல்லது நிறுவனத்தின் ஒரு பகுதியோ இரட்டிப்பான ஆய்வுகள் செய்வதை தவிர்க்க முடிகிறது.
* கணினி மயமாக்கப்பட்ட சேவைகளின் புதிதாக நடை முறைப்படுத்தப்படும் தகவல் மீட்புத் தொழினுட்பத்தை நூலக பாவனையாளர் மத்தியில் அறிமுகப்படுத்த உதவுகிறது.
* காலப்போக்கில் இச்சேவையானது நூலகங்களுக்கிடையில் கூட்டுறவு ஒன்றுக்கு வழிகாட்டி தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்க வலையமைப்பு ஒன்றினை உருவாக்க ஏதுவாக அமைகிறது.

அண்மைக்கால தகவல் அறிவிப்புச் சேவையின் வடிவங்கள்

* அண்மைக்கால பருவ இதழ்கள் உட்பட நூலகத்தால் அல்லது தகவல் நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்படும் புதிய தகவல் சாதனங்களைக் காட்சிக்கு வைத்தல்.
* அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அச்சு வடிவ சாதனங்கள் பருவ இதழ்களின் உள்ளடக்கங்களைச் சுழற்சிக்கு விடுதல்.
* பத்திரிகைத் துணுக்குகளை வெட்டிச் சேகரித்தல்.
* ஒழுங்கான முறையில் அண்மைக்கால ஆய்வுகளை நடைமுறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை வெளிக் கொணரும் முறையில் செய்திக்கடிதங்களை வெளியிடுதல்.
* ஒரு குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த வாசகர் மத்தியில் விநியோகிக்கக்கூடிய வகையில் செய்தி அறிக்கைகளை வெளியிடுதல்.
* செய்திக் கடித வெளியீட்டுக்காகவும், ஏனைய புதிய தகவல்களுக்காகவும் பாவனையாளர் மத்தியில் பொது அறிவிப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு அறிவிப்புப்பலகையை உபயோகித்தல்.
* சொல்லடைவாக்க சாராம்சப்படுத்தல் பருவ இதழ்களின் அண்மைக்கால இதழ்கள் வெளியிடுதல்.

16.4 தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் [Selective Dissemination of Information]

நூலக விஞ்ஞானிகளையும், நிபுணர்களையும் கவர்ந்த இயந்திரமயமாக்கப்பட்ட சேவைகளில் ஒன்று தான் CAS/SDI சேவையாகும். வாசகர்களின் தேவைகளை முன்கூட்டியே அறிந்து அவர்களின் தேவைகளுக்கிணங்க அண்மைப்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் வழங்கும் சேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 1958ம் ஆண்டு H.P.Luhn என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பெரும் பாலான வர்த்தக அரசாங்க தகவல் சேவை நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஏற்பட்ட தொழினுட்ப வளர்ச்சிகளின் பயனாக கணினிமயமாக்கப்பட்ட சேவைகளின் ஒன்றே இது. இத்தகைய சேவையானது ஆராய்ச்சி யாளர்கள், விஞ்ஞானிகள் நவீன வாசகர் தத்தம் தேவைக்கேற்ப அண்மைக் காலத் தகவல்களை உடனுக்குடன் பெறுவதற்கு உதவுகின்றது.

அண்மைக்கால அறிவிப்புச் சேவையானது வாசகர் தொகுதியைமையமாகக் கொண்டு செயற்படும் அதே சமயம் தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் தனித்த வாசகனது தகவல் தேவையை பூர்த்தி செய்வதை மையமாகக் கொண்டதாகும். ஒரு வாசகனது தகவல் தேவையை முன் கூட்டியே அறிந்து அது எந்தத் தகவல் வளங்களில் இருப்பினும் அது சம்பந்தமான தகவலை தேர்ந்தெடுத்து உடனுக்குடன் தெரியப்படுத்தல் ஆகும். இந்தச் சேவையானது அது தொடங்கப்பட்ட காலம் முதற் கொண்டே பெரும்பாலான வர்த்தக, அரச, தகவல் சேவை நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கணினி மயப்படுத்தப்பட்ட சேவைகளில் ஒன்றாகக் கருதப்படினும் கணினியின் பாவனை இல்லாத வளர்முக நாடுகளின் நூலகங்களில் இது பயிற்றப்பட்ட ஊழியர்களால் மனித ரீதியாக ஆற்றப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

16.5. மொழிபெயர்ப்புச் சேவை

காலங்காலமாக மனித சமூகம் பெற்றிருந்த அறிவும் அனுபவமும்நிறைந்த அறிவுக் களஞ்சியம் எம்மிடையே உண்டு. எமது பல அனுபவங்களுக்கு அதில் பதிவு இருக்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகள் தமது ஆய்வு அபிவிருத்திப் பணிகளை முடுக்கி விடுவதும் எம்போன்ற வளர்முக நாடுகள் தமது துரித வளர்ச்சி வீதத்தைப் பிரதிபலிப்பதற்காக அவற்றைப் பயன்படுத்துவதும் அறிவு அத்தியாவசிய மூல வளம் என்ற கருத்துநிலையின் தோற்றத்துக்கு இட்டுச் சென்றிருக்கிறது. திரிபில்லாது, பாரபட்சமில்லாது அறிவினை ஆளுக்கு ஆள், நாட்டுக்கு நாடு பரப்புதல் நூலகங்களின் குறிப்பாக பொதுசன நூலகங்களின் முக்கிய பணியாக உள்ளது. ஒரு சமூகம் தகவலை மையமாகக் கொண்டு பின்னப்பட்டிருக்குமாயின் அறிவு ஒரு சர்வதேச மூலவளமாக கருதப்படுமாயின் அதனைப் பயன்படுத்துவோர் அம் மூலவளத்தினை அணுகச் சம அருகதையுடையோராக இருத்தல் அவசியம். ஆனால் இவ் இலட்சியத்தை அடைய முடியாதபடி மொழித் தடை, பொருளாதாரத் தடை, தொழில் னுட்ப அறிவு மீதான தடை போன்றன இயங்குகின்றன. மேற்கூறிய அனைத்துத் தடைகளிலும் மொழித் தடையை நீக்குவதற்கு மிகச் சிறிதளவு பங்களிப்பையாவது நூலகர் வழங்க முடியும். தனிப்பட்ட ஒரு வாசகனுக்காக நேரத்தைச் செலவழிக்க முடியாது போனாலும் பொதுவான நடப்பு விடயங்களை, மொழிபெயர்ப்புச் செய்து காட்சிப்படுத்துவது உகந்தது.

எம்மிடையே மொழிபெயர்ப்புச் சேவை என்பது வளர்ச்சியடைந்த பெரிய நூலகங்களினால், அல்லது ஆய்வு நூலகங்களினால் வாசகரின் கோரிக்கையடிப்படையில் ஆற்றப்படுவது என்ற எண்ணப்பாடு உண்டு. போதிய நிதி வசதி, நூலக வசதியைக் கொண்ட எத்தனை நூலகங்கள் இவற்றைச் செய்கின்றன என்றால் விடை கேள்விக் குறியே. நூலக உணர்வும் சமூக மேம்பாட்டுக்காக உழைக்கும் உணர்வும் எம்மிடையே சிறிதளவு இருந்தாலும் வச தியிருந்து பெரிய நூலகங்களினால் மறுக்கப்படுகின்ற, தட்டிக் கழிக்கப்படுகின்ற, சேவை களை இச் சமூகத்துக்கு பொது சன நூலகர்களால் வழங்க முடியும். சமூகத்தில் இலைமறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாக இருக்கும் பரந்த அறிவும் அனுபவமும் வாய்ந்த சமூக உணர்வு மிக்க அங்கத்தவர்களை இனங்கண்டு அவர்களை அணுகி அவர்கள் உணரும்படி செய்ய முடியுமாயின் அது நூலகருக்கும் நூலக சேவைக்கும் அதனால் இச் சமூகத்துக்கும் கிடைத்த வெற்றி என்றே கூற முடியும். பெரும்பாலும் சில வளர்ச்சியடைந்த பெரிய விசேட நூலகங்களிலேயே இச் சேவைகள் ஆற்றப்படக்கூடும் என்ற கருத்துநிலை நிலவினும் எவ்வித வசதியுமற்ற சிறிய பிரதேசசபை நூலகங்களில் இச்சேவைகள் நூலகரினால் தனித்து மேற்கொள்ளப்படுவதைக் காணும்போது சேவை புரிவதற்கான மனநிலை தான் அவசியமே தவிர நூலக வசதிகள் இரண்டாம் நிலையே என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

கலைச்சொல் விளக்க அகராதி

சாராம்சப்படுத்தல் சேவைகள் (Abstracting Services): *அண்மைக்காலங்களில் வெளிவந்த ஆவணங்களின் சாராம்சங்களைத் தயாரித்தலும், பரப்புதலும், வர்த்தக அல்லது தொழிற்றுறை நிறுவனங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்கென விசேடதுறை சார்ந்த சாராம்சங்களைத் தயாரித்தல், சந்தாதாரர்களுக்கு ஓர் ஒழுங்கு முறையில் சாராம்சங்களைத் தயாரித்து வழங்குதல் முதலிய சேவைகள்.*

சாராம்சங்கள் (Abstracts): *ஓர் ஆவணத்தின் பொருளை விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் மிகச் சுருக்கமாகத் தயாரிக்கப்பட்டதாகவும், ஆவணத்தைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடிய வகையில் போதுமானளவுக்கு நூல்விபரத் தரவுகளைக் கொண்டதாகவும், பகுப்பாக்க ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் வெளியிடப்படுகின்ற பருவ இதழ் கட்டுரைகளின் அல்லது நூலின் சுருக்க வடிவங்கள்.*

சேர்வுப் பட்டிகள் (Accession Lists) : *மாதாந்த அல்லது காலாண்டு இடைவெளியில் வெளியிடப்படுகின்ற நூலகத்தின் புதிய நூல்களுக்கான பட்டியல்.*

தகவல் அணுகுகை (Access to Information): *ஓர் ஆவணத்தை அல்லது தகவல் சேமிப்பு வழிமுறைகளான சொல்லடைவுகள், நூல்விபரப்பட்டியல்கள், பட்டியல்கள், கணினி மின்முனைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதியும் வாய்ப்பும்.*

துணைச் சாதனங்கள் (Accompanying Materials): *குறிப்பிட்ட ஆவணத்துடன் சேர்த்துப் பயன்படுத்தும் நோக்குடன் தயாரிக்கப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டு வரும் தேசப்படத் தொகுதிகள், ஒளிநாடாக்கள், கணினிக் கணிமங்கள்.*

நிறைவேற்று விதிகள் (Acts): *நீதி பரிபாலனத்தினால் நிறைவேற்றப்பட்டு பாராளுமன்றத்தினாலும் அரச நிறுவனங்களினாலும் கௌரவிக்கப்படுகின்ற சட்டவிதிகள், ஒழுங்குவிதிகள், நடைமுறை விதிகள் என்பன.*

தழுவல்கள் (Adaptations): *ஏதாவது ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு நூலின் மூலப்பதிப்பைத் தழுவி அல்லது அதனை விடவும் திருத்தப்பட்ட வடிவத்தில் மீள எழுதப்படுகின்ற ஓர் ஆக்கங்கள்.*

விவசாய தகவல் அமைப்பு (AGRIS): Agricultural Information System *என்ற ஆங்கிலச் சொற்றொடரின் முதலெழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சொல். ஐ.நா உணவு விவசாய தாபனத்தின் 16வது கருத்தரங்கில்(1971) விவசாய தொழினுட்பத் துறைக்கென*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்ட சர்வதேச தகவல் அமைப்பான இது 120க்கும் மேற்பட்ட தேசிய, பிராந்திய, சர்வதேச அமைப்புகளினூடாக விவசாயத் தகவல்களைத் திரட்டுகிறது. அத்துடன் அச்சுருவிலும் கணினி வடிவிலும் அமைந்த Agrindex என்ற மாத வெளியீட்டையும் வெளியிடுகிறது.

செருகேடுகள் (Albums):: ஒளிப்படங்கள், கையெழுத்துகள், செய்தித் துணுக்குகள், முத்திரைகள் என்பவற்றைச் சேகரித்து வைக்கக் கூடிய நூல் வடிவ உறைகளும், இசைத்தட்டுகளைப் பாதுகாத்து வைக்கக் கூடிய அலங்கார அட்டைகளையுடைய நூலுறைகளும் இதில் அடங்கும்.

12795

ஐந்தொகுதிகள் (Almanacs): பயன் தரக்கூடிய பல்லின புள்ளிவிபர தகவல்களை உள்ளடக்கி ஆண்டு தோறும் வெளியாகும் வெளியீடுகள்.

அகரவரிசைச் சொற்கருவூலங்கள் (Alphabetical Thesauri): ஒவ்வொரு சொல்லடைவுச் சொல்லின் கீழும் வியாபகக் குறிப்பு, படிநிலையமைப்பு தொடர்புகள், துணைத் தொடர்புகள் போன்றவற்றைக் காட்டக்கூடிய வகையில் அமைக்கப்பட்டதும், சொற்கருவூலத்தின் பிரதான பகுதி அகரவரிசை முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுமான சொற் கருவூலங்கள்.

பகுபாய்வுமுறை நூல்விவரப்பட்டியல்கள் (Analytical Bibliographies): கையெழுத்துகள், பிரதான சொற்கள், நீர்வரிக்குறி போன்ற நூலின் பௌதிக இயல்புகளை ஆராய்ந்து அது பற்றிய பதிவுகளை மேற்கொள்ளும் முறைசார்ந்த நூல்விவரப் பட்டியல்கள்.

குறிப்புரை நூல்விவரப்பட்டியல்கள் (Annotated Bibliographies:) குறிப்புரை விளக்கங்களுடன் நூல்விவரப் பதிவுகளைக் கொண்ட நூல்விவரப்பட்டியல்.

ஆண்டறிக்கைகள் (Annual Reports): ஒரு நிறுவனத்தினதும் அதனைச் சார்ந்த துணைநிறுவனங்களதும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு கடந்த வருடத்தில் நடைபெற்ற அலுவலகப் பணிகளை மதிப்பீடு செய்து நடப்பு வருடத்தில் தயாரித்து வெளியிடப்படும் அறிக்கைகள்.

பெயர் குறிப்பிடப்படாத வெளியீடுகள் (Anonymous Publications): படைப்பாளரின் பெயர் ஆவணத்தின் தலைப்பு பக்கத்திலோ, உறையிலோ, முன்னுரையிலோ, வேறு எப்பகுதியிலுமோ காண முடியாத வெளியீடுகள்.

தொகை நூல்கள் (Anthologies): இலக்கிய வடிவத்திலோ அல்லது கருத்துப்பொருளிலோ ஒரே தன்மையான அம்சங்களைக் கொண்ட ஆவணங்கள். அல்லது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட சுருக்கங்களின் தொகுப்பு.

துளை அட்டைகள் (Aperture Cards): நுண்படங்களை ஒன்றாக தொகுத்து வைப்பதற்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட அட்டைகள்.

பிரயோகக் கணிமம் (Application Software):: பாவனையாளர் தாம் விரும்பியபடி தரவைச் செய்முறைப்படுத்தவும் தமக்குத் தேவையான பலன்களைப் பெறவும் உதவும் வகையில் வடிவமைக்கப்படும் கணிமங்கள். சொல் செய்நிரலாக்கக் கணிமம், தரவுத்தளக் கணிமம், விரிதாள் கணிமம், தொலைத் தொடர்புக் கணிமம், கற்பித்தல் கணிமம், ஒருங்கிணைந்த கணிமம், வரைகலைக் கணிமம், பயிற்சிக் கணிமம், விளையாட்டுக் கணிமம், போலச் செய்தல் கணிமம், ஆசிரியக் கணிமம், மேசைப் பதிப்பு வெளியீட்டுக் கணிமம், ஒலி - ஒளிக் கணிமம், பல்லூடகக்.கணிமம் எனப் பலதரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திறன்சார் நூல்கள் (Art Books: வரைபடங்கள், ஓவியங்கள், சித்திரங்கள், ஒளிப்படங்கள், கோட்டு வரைபடங்கள் போன்ற பலதரப்பட்ட அம்சங்களுடன் தொடர்புடைய நூல்கள்.

இணைக்கப்பட்ட சொல்லடைவுகள் (Articulated Indexes): சிக்கலான பொருட் பகுப்பாய்வின்றி வெறும் சொற்றொடர்களிலிருந்து கணினி முறையில் உருவாக்கப்படும் பொருட் சொல்லடைவுகள்

கலைப்பொருள்கள் (Artefacts): இயற்கையான பொருளிலிருந்து வேறுபட்டதாக தனிநபரோ அல்லது குழுவோ இணைந்து பணிசெய்வதனால் உருவாக்கப்படுகின்ற அல்லது திருத்தியமைக்கப்படுகின்ற பொருள். அழகியல் மதிப்பைப் பேணும் பொருட்டு உருவாக்கப்படுபவை கலைப் பொருட்கள் எனப்படுகின்றன.

கட்டுரைகள் (Articles): பருவஇதழில் வெளியீடு செய்வதற்கென எழுதப்படும் ஆக்கங்கள்.

இணைக்கப்பட்ட சொல்லடைவுகள் (Articulated Indexes): சிக்கலான பொருட் பகுப்பாய்வின்றி வெறும் சொற்றொடர்களிலிருந்து கணினி முறையில் உருவாக்கப்படும் பொருட் சொல்லடைவுகள்..

ஒலி - ஒளிகள் கணிமம் (Audio/Video Software): ஒலி, ஒளிப்பதிவுகளை உருவாக்கவோ, கட்டுப்படுத்தவோ, இயக்கவோ பயன்படும் பிரயோகக் கணிமம். கணினியின் Versatility யை இது கணிசமான அளவு அதிகரிக்கிறது. எ-டு Adope premier , Cool 3D.

செவிப்புல கட்புல சாதனங்கள் (Audio Visual Materials): தகவலை ஒலிமூலமும் ஒளிமூலமும் பதிவு செய்து உருவாக்கப்படும் சாதனங்கள். கிராமபோன் பதிவுகள், நாடாக்கள், படத்துணுக்குகள் போன்ற நூலுருவற்ற சாதனங்கள்.

படைப்பாளர் சாராம்சங்கள் (Author Abstracts): குறிப்பிட்ட ஆவணத்தின் படைப்பாளரால் அவரது ஆவணத்துக்குத் தயாரிக்கப்படும் சாராம்சங்கள்.

படைப்பாளர் சொல்லடைவுகள் (Author Indexes): நூலாசிரியரின் பெயர்களின்கீழ் சொல்லடைவுப் பதிவுகளை ஒழுங்குபடுத்தி தயாரிக்கப்படும் சொல்லடைவுகள்.

ஆசிரிய நூல்விவரப் பட்டியல் (Author Bibliographies): குறிப்பிட்ட ஆசிரியரின் ஆக்கங்கள் அனைத்தையும் தொகுத்து வெளிவரும் நூல்விவரப் பட்டியல்கள். ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு, அவரது ஆக்கங்கள் பற்றிய விமர்சனம் என்பவற்றையும் இது உள்ளடக்கும்.

ஆசிரிய கணிமம் (Authoring Software): பாவனையாளரின் குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்யக்கூடிய கணிமம் உற்பத்தி வர்த்தக ரீதியில் இல்லாத காரணத்தால் ஆசிரிய கணிமம் கணினி செய்நிரல் ஒன்றை உருவாக்குவதற்கான உறைபொதியை (Shell) வழங்குகிறது. தனிப்பட்ட ரீதியில் ஒரு செய்நிரலை உருவாக்குவதற்கு பாவனையாளர் ஒரு கணினி செய்நிரலாளராக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை இல்லாமல் பண்ணுவதே இந்த மென்பொருளில் கிடைக்கும் நன்மையாகும். சில ஆசிரிய செய்நிரல்கள் ஒலி, ஒளி தகவல்களை உருவாக்கவும் பயன்படுத்தவும் ஏற்ற ஆற்றலை கொண்டிருக்கின்றன.

சுயசரிதை (Auto-Biography): ஒரு நபர் தனது வாழ்க்கை வரலாற்றைத் தானே எழுதி வெளியிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் பதிவேடு (Autograph: நூல் வர்த்தகத்தில் அட்டைகள், ஆவணங்கள், கடிதங்கள், கையெழுத்துப்பிரதிகள் போன்றவை எழுதியவரின் கையெழுத்துடன் வெளிவருதல்.

விவிலிய சொல்லிசைவுத் தொகுதிகள் (Biblical Concordances): பைபிள் சொற்களுக்கு வழிகாட்டும்பொருட்டு உருவாக்கப்பட்ட சொல்லடைவுகள்.

நூல்விவர தரவுத் தளம் (Bibliographic Database): ஆசிரியர், தலைப்பு, பொருட்துறை அல்லது மூலச் சொல் சார்ந்து தகவலை மீளப் பெறக்கூடியவகையில், ஆவணங்கள் தொடர்பான நூல்விபரத் தகவல்களைக் கொண்ட பதிவேடுகளை உள்ளடக்கிய தரவுத் தளம்.

நூல்விவர தகவல் சேவைகள் (Bibliographic Information Services): வாசகரின் கோரிக்கையின் அடிப்படையில் நூல்விவர தகவல்களை அல்லது தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்ற தொடர் வெளியீடுகளை உள்ளடக்கிய நூல்விவரப்பட்டியல்களை தயாரித்து வழங்கும் செய்முறை.

நூல்விவரப்பட்டியல்கள் (Bibliographies): நூல்களையும் ஏனைய சாதனங்களையும் முறைப்படுத்தப்பட்ட வகையில் விபரித்து பகுப்பாக்கம் செய்து பதிவுகளை படிப்பதற்கு ஏற்ற வகையிலும் குறிப்பு எடுப்பதற்கு உதவும் வகையிலும் தர்க்க ரீதியாகவும் பயனுள்ள வகையிலும் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் வெளியீடு நூல்விபரப்படடியல் எனப்படும்.

நூல்விவரப் பட்டியல்களுக்கான நூல்விவரப் பட்டியல் (Bibliography of Bibliographies): பொதுத்துறை சார்ந்து அல்லது குறிப்பிட்ட சிறப்புத்துறை சார்ந்து வெளியிடப்பட்ட நூல்விபரப் பட்டியல்களின் விபரங்கள். ஆசிரியர், பொருட்துறை, நிறுவனம் போன்ற அம்சங்களின் ஊடாக பயனுள்ள நூல்விபரப் பட்டியலுக்கு வாசகரை வழிப்படுத்துகின்ற நூல்விபரப் பட்டியல்களைத் தொகுத்து வெளியிடப்படுபவை. இப்பட்டியலில் குறிப்பிடப்படும் நூல்விபரப்பட்டியல்கள் தனிநூலாகவோ நூலின் ஒரு பகுதியாகவோ பருவ இதழ்க் கட்டுரையின் ஒரு பகுதியாகவோ அல்லது ஏதாவது ஒரு வடிவில் வெளியிடப்படும் ஆவண மாகவோ இருக்கும்.

வாழ்க்கை வரலாற்று அகராதி (Biographical Dictionary): முக்கிய நபர்களின் வாழ்க்கை விபரங்களை அகர வரிசையில் ஒழுங்குபடுத்தித் தரும் உசாத்துணைச் சாதனம்.

வாழ்க்கை வரலாற்று வளங்கள் (Biographical Resources): வாழக்கை வரலாற்றுத் தக வல்களுக்கென பலதரப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஐந்தொகுதிகள், வாழ்க்கை வரலாற்று அகராதிகள், அகராதிகள், வழி காட்டிகள், கலைக்களஞ்சியங்கள், கைந்நூல்கள், செய்தித் தாள்கள், வரலாற்று நூல்கள், விமரிசனங்கள் போன்றவை.

உயிர் அறிவியல் தகவல் சேவை (BIOSIS): Bio-Sciences Information Services என்பதன் சுருக்க வடிவம். நுண்ணுயிரியல், தாவர விலங்கு அறிவியல், உயிர் மருத்துவம், விவசாயம், மருந்தியல், புவிச்சூழலியல், உயிர்வேதியியல், உயிர்ப்பொறியியல், உயிர் பௌதிகம் போன்ற வாழ்க்கை அறிவியலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத்துறை சார்ந்த தகவலை வழங்கும் சேவை அமைப்பு.

பூர்ச்சமரப் பட்டை (Birch Park): வட இந்தியாவின் சில பகுதிகளில் எழுதப்படும் ஒரு பொருளாக பயன்படுத்தப்பட்ட போஜபத்ரா என அழைக்கப்படும் ஒருவகை மரத்தின் பட்டைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரஅச்சு நூல் (Block Book): தகவல்களை அல்லது தகவல்களுடன் படங்களையும் உள்ளடக்கி மரக்கட்டைகளின் ஒருபுறத்தில் மட்டும் அச்சிடப்படுகின்ற நூல். 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இத்தகைய மர அச்சு நூல்கள் உருவாக்கப்பட்டன.

நூல்கள் (Books): பருவ இதழ் அல்லாத, குறைந்தது 49 பக்கங்களைக் கொண்ட அச்சிடப்பட்ட வெளியீடுகள் அனைத்தும் நூல் எனற பெயர் பெறும். (யுனெஸ்கோ)

நூலுருச் சாதனங்கள் (Book Form Materials): பொறிகள், அச்சுக்கூடங்களின் உதவியுடன் உருவாக்கப்படுகின்ற அனைத்து ஆவண வடிவங்கள்.

நூற்சொல்லடைவுகள் (Book Indexes): நூல்களுக்கு தயாரிக்கப்படும் சொல்லடைவுகள்.

வரவு செலவுத் திட்ட உரைகள் (Budget Speeches): குறிப்பிட்ட ஆண்டில் அரசின் வரவு செலவுகளுக்கிடையிலான இடை வெளியை நிரப்புவதற்கான ஆலோசனைகளை விளக்கி நிதியமைச்சரினால் தேசிய அரசுப் பேரவையில் நிகழ்த்தப்படும் உரை.

சீடிரோம் (CDROM): லேசர் கதிர்கள் மூலம் பெருமளவு தகவல்களைச் சேமிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட 43/4" விட்டமுள்ள வட்டவடிவ பிளாஸ்ரிக் தட்டு சீடிரோம் எனப்படுகின்றது. வாசிக்க மட்டுமேயான நினைவகத்தைக் கொண்ட இறுவட்டு எனப் பொருள்படும் Compact Disk Read Only Memory என்ற பெயரின் முதலெழுத்துக்களைத் தொகுத்து உருவாக்கப்பட்ட பெயர்.

கோட்டுப் படம் (Chart): குடித்தொகை, விலைவிபரங்கள், உற்பத்தி, வெப்பநிலை போன்ற புள்ளிவிபரப் பதிவேடுகளை வளைவுகள், கோடுகள் மூலம் தெளிவாகக் காட்டும் படங்கள்.

சிறுவருக்கான நூல் (Children's Book: 12-13 வரையான குழந்தைகளுக்கென விளக்கப்படங்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்ற நூல். இளையோருக்கான புனைகதை நூல்கள் புனை கதையற்ற நூல்கள், அரிச்சுவடி நூல்கள், பட நூல்கள், கதைகள் போன்றவை. பொது நூலகங் களில் இவை சிறுவர் சேகரிப்புடனும் கல்விசார் நூலகங்களில் இவை பாடத்திட்ட சேகரிப்பு களுடனும் அடுக்கப்பட்டிருக்கும்.

பகுப்பாக்க சொல்லடைவுகள் (Classified Indexes): பகுப்பாக்க திட்டத்தின் அடிப்படையில் சொல்லடைவுச் சொற்களை ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் சொல்லடைவுகள்.

வர்த்தக நூல்விவரப் பட்டியல்கள் (Commercial Bibliographies): நூற் தேர்வுக்கு மிகவும் பயனுடையதாக கருதப்படுகின்ற வர்த்தக நோக்கத்திற்காக மட்டும் வெளியிடப்படுகின்ற பல்வேறு வெளியீட்டு நிறுவனங்களினால் போட்டிஅடிப்படையில் வெளியிடப்படுகின்ற நூல்விபரப் பட்டியல்கள்.

தொடர்பு ஊடகங்கள் (Communication Media): பொதுசனத் தொடர்பு செய்முறையின் போது தரவுகளை செய்தி வகையில் பொதுமக்களிற்கு ஊடுகடத்துகின்ற ஊடகங்கள்.

கழகக் கோவைகள் (Company Files): நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை பேணுவதற்கென வர்த்தக தொழிற்றுறை ஆய்வு மற்றும் தொழிற்துறை சார் நிறுவன நூலகங்களினால் பயன்படுத்தப்படும் கோவை.

கருத்துரைகள் (Compendia): ஒரு விடயத்தின் முக்கிய கருத்துக்களை மட்டும் தொகுத்து வெளியாகின்ற சிறிய சுருக்கப் பதிப்புக்கள் இவை பொழிப்புரை சாரம் எனவும் அழைக் கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாக்கங்கள் (Composite Works): *பதிப்பாசிரியர் ஒருவரால் வெவ்வேறு பட்ட ஆசிரியர்களின் ஆக்கங்கள் ஒரே தொகுதியாக ஆக்கப்பட்டு வெளியிடப்படல். இங்கு ஒவ்வொரு ஆசிரியரின் பங்களிப்பும் தனித்தனியாகவோ அல்லது ஒரு முழு அங்கத்தினதும் ஒரு பகுதியாகவோ அமைக்கப்பட்டிருக்கும்.*

கணினிகள் (Computers): *தரவுகளை ஏற்று அதனை நினைவகத்தில் சேமித்துவைத்து கட்டளை கொத்துக்களினால் கொடுக்கப்படும் கட்டளைகளிற்கேற்ப செயலாற்றி பாவனையாளரின் தேவைக் கேற்ப முடிவுகளை மீள வழங்கக் கூடிய ஒரு மின்னனுவியற் பொறி.*

கணினி முறை நுண்வடிவங்கள் (Computer Output Microforms): *தாள்களில் பிரதிபண்ணப்படும் செலவை விட குறைந்த செலவில் மிகை வேகத்தில் கணினி முறையில் நேரடியாக பிரதி பண்ணப்படுகின்ற நுண் வடிவங்கள்.*

சொல்லசைவுத் தொகுதிகள் (Concordances): *கருத்துள்ள சொற்களின் படி ஓர் ஆசிரியரின் ஆக்கங்கள் அல்லது நூல்களில் உள்ள சொற்களும் சொற்றொகுதிகளும் முழுமையாக சொல்லடைவு படுத்தப்படல்.*

மாநாட்டு இலக்கியங்கள் (Conference Literature): *ஒரு மாநாட்டில் வாசிக்கப்பட்ட அல்லது மாநாட்டிற்காக தயார் செய்யப்பட்ட கட்டுரைகள்.*

ஒருங்கிணைவுச் சொல்லடைவுகள் (Coordinated Indexes): *ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகள் உள்ள ஒரு சொல்லடைவுக் கோவையில் சொல்லடைவுபடுத்தப்பட்ட ஒவ்வொரு செ ாற்கூறுகளிலும் உள்ள கருத்துப் பொருளை விளக்குகின்ற சொல்லடைவுகள்.*

கலாசாரப் பொருட்காட்சி (Cultural Exhibition): *கலைத்துறை சார்ந்த பொருட்துறைகளில் (சிற்பம், ஓவியம், நுண்கலைகள் போன்றவை) உள்ள கலைத்துறை சார்ந்த சாதனங்களைப் பொதுசன பார்வைக்காக ஒழுங்குபடுத்தல்.*

திரட் சொல்லடைவுகள் (Cumulative Indexes): *பருவஇதழ்களிற்கு தயாரிக்கப்படும் அட்டவணைகள் அனைத்தையும் ஒழுங்கு முறையாகத் தொகுத்து வெளிவரும் அட்டவணை கள்.*

நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவை (Current Awareness Service): *வாசகர்களின் பொருட்துறை சார்ந்த தேடுகைக்கு உதவும் வகையில் அண்மைக்காலத் தகவல்களை அல்லது வெளியிடப் பட்ட இலக்கியங்களை வழங்குகின்ற சேவை. புதிதாக வெளிவரும் தகவல் சாதனங்களில் இருந்து புதிய தகவல்களை வாசகர்களுக்கு தெரியப்படுத்துவதை இது மையமாகக் கொண்டது. வர்த்தக நோக்கத்துடன் பல பிரசுரிப்பு நிறுவனங்கள் இச்சேவையை வழங்குகின்றன. எ-டு* British Library Document Supply Centre. SWETS, UNCOVER *போன்றவை.*

நடப்பு உசாத்துணை வளங்கள் (Current Reference Sources): *நடைமுறை நிகழ்வுகளை உடனுக்குடன் வாசகருக்கு தெரியப்படுத்தும் வகையில் பத்திரிகைகள் அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து சேகரிக்கப்படும் செய்திச் சுருக்கங்களை வார அடிப்படையில் வெளியிடுதல் உ-ம் ஐந்தொகுதிகள்.*

தரவு (Data): *மக்கள், பொருட்கள், நிகழ்வுகள் கருத்துநிலைகளைப் பிரதிபலிப்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு வடிவங்கள் தரவு எனப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவுத்தளங்கள் (Data Bases): *தொலைத் தொடர்பு அல்லது தூர மின்முனைத் தொடர்புகள் வழியாக அனுப்பக்கூடிய கணினி சேவைகளின் சேமித்து வைக்கப்படுகின்ற தகவல்கள் ஒவ்வொரு தகவல் தரவுத் தளமும் பொதுவாக ஒரு பொருட் துறையை அல்லது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சார்பு விடையத் தொகுதிகளை கொண்டிருப்பதுடன் இவற்றினை பயன்படுத்துவதற்கு கட்டணம் அறவிடப்படுகிறது.*

தரவுத்தள முகாமைத்துவ அமைப்புக்கள் (Database Management Systems) *தரவுத்தளங்களின் உருவாக்கத்திற்கும் பராமரிப்புக்குமென உற்பத்திசெய்யப்படுகின்ற செயற்திட்டங்கள் அடங்கிய தொகுப்பு.*

தரவு நூல்கள் (Data Books): *புள்ளிவிபர தகவல்களை மட்டும் கொண்ட நூல்கள்.*

வரிப்படங்கள் (Diagrams): *பிரதிநிதித்துவப்படவேண்டிய கருத்துப்பொருளை பொதுவான வெளியுருவ அமைப்பாகத் தருவது.*

அகராதிகள் (Dictionaries): *ஒருமொழியில் வழங்குகின்ற சொற்களை அகரவரிசையில் நிறுத்தி அவற்றிற்கு பொருள் கூறும் நூல்கள்.*

சுருக்கத் தொகுப்புக்கள் (Digests): *தனிப்பட்ட விடயம் ஒன்றின் தகவல்களின் அல்லது விடயச் சார்பு தகவல்களின் சுருக்கங்களை தொகுத்து வெளியீடு செய்தல்.*

வழிகாட்டிகள் (Directories): *சீரான ஒழுங்குமுறையில் பெயர்களை, நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை முறைப்படுத்தி, அகரவரிசைப்படுத்தி வெளியாகும் வெளியீடுகள். இவை நிறுவன ஸ்தாபனங்களின் பெயர், முகவரி, தொலைத்தொடர்பு எண், நடவடிக்கைகள் வழங்கப்படும் சேவைகள், ஊழியர்களின் விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும்.*

வழிகாட்டிகளுக்கான வழிகாட்டிகள் (Directories Of Directories) *வாசகருக்கு பயனுள்ள வகையில் தெரிவு செய்யப்பட்ட வழி காட்டிகளின் விபரங்களைத் தொகுத்து நூலுருவில் வெளியிடப்படும் வெளியீடுகள். இந் நூலில் குறிப்பிட்ட துறைசார்ந்த அல்லது பொது அடிப்படையிலான வழிகாட்டிகளின் பெயர்கள் பொருள் அடிப்படையில் அல்லதுஅகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்படல்.*

கல்விசார் சமூக வழிகாட்டிகள் (Directories of Leared Society) *அறிவியல் சார்ந்த நிறுவனங்களான பல்கலைக்கழகங்கள், தொழில்கல்வி நிறுவனங்கள், அரும் பொருளாக்கங்கள், பிரசித்திபெற்ற நூலகங்கள் போன்றவற்றின் பெயர், முகவரி, முக்கிய அதிகாரிகளின் பெயர், கல்வித்தகைமைகள் போன்ற பல்வேறு தகவல்களை வழங்குகின்ற உசாத்துணை நூல்கள்.* எ-டு - world of learning

விளக்க ஆய்வுக் கட்டுரைகளுக்கான நூல் விவரப்பட்டியல் (Dissertation Bibliographies): *உலகில் வெளியாகின்ற விளக்க ஆய்வுக் கட்டுரைகளின் விபரங்களை தொகுத்து வெளியிடப்படும் நூல் விவரப் பட்டியல்கள்.*

ஆவணம் சார்ந்த மூலங்கள் (Documentary Sources): *நூலுருவில் உள்ள அல்லது நூலுருவற்ற அனைத்து தகவல் மூலங்களும் ஆவணம் சார்ந்த வளங்களில் அடங்கும்.*

தொகுக்கும் கணிமம் (Editing Software): *செய்நிரலின் தவறுகளை திருத்தவும் மாற்றங்களை மேற் கொள்ளவும் பாவனையாளருக்கு உதவுகின்ற பிரயோக கணிமம்..* எ-டு Notepad, wordpad *போன்றவை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்களஞ்சியங்கள் (Encyclopaedias): உலக அறிவியல் துறை சார்ந்த பொதுத்தகவல்களை உள்ளடக்கிய அல்லது ஒரு குறிப்பிட்ட சிறப்புத்துறை சார்ந்த முக்கிய பொதுத்தகவல்களை வழங்குகின்ற, விளக்கக்கட்டுரைகளை முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பில் தருகின்ற ஆக்கம். இது பெரும்பாலும் பல தொகுதிகளாக வெளியிடப்படுகின்றது.

கலைக்களஞ்சிய அகராதிகள் (Encyclopaedic Dictionaries): சிறப்பு விடயத்தை சார்ந்ததாக பெறப்படுகின்ற சொற்களின் கருத்தை மட்டும் தருவதுடன் நின்றுவிடாது அவற்றின் விளக்கங்களையும் கொண்டுள்ள அகராதிகள். இவை கலைக் களஞ்சியங்கள் போன்று சொற்களின் பொருளையும் கொண்டிருக்கும்.

கலைக்களஞ்சிய ஆண்டு நூல்கள் (Encyclopaedic Yearbooks): கலைக்களஞ்சியங்களில் சேர்த்துக்கொள்ளப்படாத புதிய தகவல்களை சேகரித்து ஒழுங்குபடுத்தி ஆண்டு தோறும் வெளியாகும் நூல்கள். இவை புதிய தகவல்களை மட்டுமன்றி கலைக் களஞ்சியங்களில் ஏற்கனவே தரப்பட்ட தகவல்களை நூல் வடிவில் தருவதுடன் கலைக்களஞ்சியங்களின் பிற் சேர்க்கையாகவும் தொழிற்படுகின்றன.

குறுங்கால எழுத்து மூலங்கள் (Ephemera Materials): குறுங்காலப் பெறுமதியுடைய துண்டுப் பிரசுரங்கள், துணுக்குகள் போன்றவை.

சுருக்கக் குறிப்புகள் (Epitomes): ஓர் ஆக்கத்தின் சுருக்கப்பதிப்பு. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக சில பெரிய ஆக்கத்தில் இருந்து முக்கியமான பகுதிகளை மட்டும் சுருக்கமாகவோ எடுத்து ஆக்கப்படும் ஆக்கங்கள்.

நூலிலிருந்து எடுத்த பகுதிகள் (Excerpts): பலதரப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் ஓர் ஆவணத்திலிருந்து பிரதி செய்யப்படுகின்ற சில உரைப் பகுதிகள்.

இயல்வாய்ப்பு அறிக்கைகள் (Feasibility Reports): ஒரு நூலகத்தின், தகவல் நிலையத்தின் அல்லது ஆவண வாக்க நிலையத்தின் தொழில் திறன்சார் தகைமைகளை பரீட்சித்துப் பார்ப்பதன் பொருட்டு நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட முடியும் எனக் கருதப்படுகின்ற செயல்பாடுகள் உள்ளடக்கிய அறிக்கைகள்.

திரைப்படத் துணுக்குகள் (Film Strips): பொதுவாக 16mm அல்லது 35mm அளவுள்ள 50 க்கு கூடுதலான கட்டங்களில் படங்களை கொண்டிருக்கின்ற படத்துண்டுகள். நேரடி விம்பங்கள் கறுப்பு வெள்ளையிலோ அல்லது நிறத்திலோ அமைந்திருக்கும்.

புவியியல் அகராதிகள் (Gazetteers): நெடுங்கோடுகள், அகலக்கோடுகள், நதிகள், மலைகள் போன்ற புவியியல் சார்ந்த தகவல்களை அகரவரிசைப்படுத்தி வழங்குகின்ற ஓர் உசாத்துணை சாதனம். இது வருடாவருடம் புதிய தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றது.

பொது அகராதிகள் (General Dictionaries): ஒரு மொழியில் வழங்குகின்ற எல்லா சொற்களுக்கும் பொருள் தருகின்ற அகராதிகள்.

பொதுக்கலைக் களஞ்சியங்கள் (General Encyclopaedias): பொருள் அடிப்படையில் அல்லது பெயர் அடிப்படையில் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டு உலக அறிவின் எல்லாப் பொருட்துறைகளிலுமுள்ள முக்கியமான தகவல்களைத் தருகின்ற உசாத்துணை சாதனங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது ஆண்டு நூல்கள் (General Yearbooks): நடப்பு ஆண்டில் நடைபெறுகின்ற பொதுவான நிகழ்வுகளை சுருக்கமான முறையில் அல்லது புள்ளிவிபர வடிவில் ஒழுங்கு படுத்தி வருடம் ஒரு முறை வெளியிடப்படுகின்ற நூல்கள். இவை ஆண்டு முடிவிலோ அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலோ வெளியிடப்படும்.

புவியியல் சாதனங்கள் (Geographic Materials): புவியியல் வளங்கள் பொதுவாக வரைபுகளை உள்ளடக்குபவை. பெரும்பாலான புவியியல் வளங்கள் கூட்டுமுயற்சியின் மூலமே உருவாக்கப்படுபவை. தேசப்படங்கள், தேசப்படத்தொகுதிகள் [Maps & Atlases], புவியியல் அகராதிகள் [Gazetteers], வழிகாட்டி நூல்கள் [Guide Books] என இவற்றை பின்வரும் மூன்று பிரிவுக்குள் உள்ளடக்கலாம்:

அரச வழிகாட்டிகள் (Government Directories): பலதரப்பட்ட அரச திணைக்களங்களில் கடமைகளையும், சேவைகளையும் அங்கு தொழில் புரிகின்ற பெயர் முகவரி விபரங்களையும் தருகின்ற உசாத்துணை நூல்கள்.

அரச வர்த்தமானிகள் (Government Gazettes): வார இறுதியில் அதாவது ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இலங்கை அரசினால் வெளியிடப்படுகின்ற ஒரு வார வெளியீடு. இது 5 பகுதிகளைக் கொண்டது.

1. பொதுத்தகவல்கள், விளம்பரங்கள், வர்த்தகச்சின்னங்கள் போன்ற விபரங் களையும்,
2. சட்டம் சம்பந்தமான விபரங்களையும்,
3. நிலம், காணிசம்பந்தமான தகவல்களையும்,
4. உள்ளூராட்சி வெற்றிடங்கள், கேள்விப்பத்திரங்களையும்,
5. பதிவுசெய்யப்பட்ட நூல்கள் பருவ இதழ்கள், பத்திரிகைகள் போன்ற வெளியீடுகளின் அகரவரிசைப்படுத்தப்பட்ட சொல்லடைவையும் கொண்டிருக்கும்.

அரச வெளியீடுகள் (Government Publications): அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற அல்லது அரச அமைப்பின் அதிகாரத்தின் கீழ் வெளியிடப்படும் வெளியீடுகள்.

வரைபடங்கள் (Graphs): எண் வடிவ தரவுகளை பட வடிவில் உருப்படுத்திக் காட்டும் படங்கள். இவை நிரல் வரைபடங்கள், கோட்டு வரைபடங்கள், கோணவிகித வரைபடங்கள் என மூன்று வகைப்படும்.

வழிப்படுத்தும் நூல்கள் (Guide Books): பிரயாணம் செய்பவர் களுக்கு பயனளிக்கும் வகையில் உல்லாசப் பிரயாண விடுதிகள், உள்ளூர் பிரயாண விபரங்கள், அரசாங்க வச திகள், புவியியல் சம்பந்தமானவிபரங்கள் என்பவற்றை உள்ளடக்கி விளக்கப்படங்களுடன் வெளியாகும் வெளியீடுகள்.

தகவல் மூலங்களுக்கான வழிகாட்டிகள் (Guide to Information Sources): காலத்துக்கு காலம் வெளிவரும் தகவல் சாதனங்களின் விபரங்களைத் தொகுத்து வெளியிடப்படும் வெளியீடுகள்.

கைநூல்கள் (Hand Books): சிறப்புத் துறைசார்ந்த கருத்துப் பொருளுடன் தொடர்புடைய செய் முறையாளர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு எழுதப்படுகின்ற சிறப்புப் பொருள் பற்றிய குறிப்புக்களை கொண்டமைந்த கையடக்க நூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப அச்சு நூல்கள் (Incunabula): *1501ம் ஆண்டுக்கு முன்பாக அச்சிடப்பட்ட நூல்கள்.*

சொல்லடைவுகள் (Indexes): *ஒரு ஆவணத்தின் அல்லது கோவையின் பொருளடக்க விபரங்களை அடையாளம் காண்பதற்கான அல்லது அப்பொருளடக்கங்களின் அமைவிடங்களை அறிவதற்கான குறிப்புகளை கொண்டமைந்த ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட குறிப்புதவு பட்டி.*

சுட்டும் சாராம்சங்கள் (Indicative Abstracts): *ஆவணத்தில் பொருளடக்கத்தையும் வியாபகத்தையும் மட்டும் வாசகருக்கு சுட்டிக் காட்டுகின்ற சாராம்சங்கள்.*

தகவல் (Information): *முறைப்படுத்தப்பட்ட கருத்துருவங்களினால் அல்லது அவற்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பதிவேடுகளினால் கொண்டு செல்லப்படுகின்ற அல்லது கொண்டுசெல்லப்பட எண்ணுகின்ற செய்தி.*

தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்கள் (Information Analysis & Consolidation Products): *ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியாகும் குறிப்பிட்டதுறை சார்ந்த அல்லது சிறப்புப் பொருள் சார்ந்த தகவல்களை சேகரித்து அவற்றை ஒழுங்குபடுத்தி ஆய்வாளருக்கு ஆய்வுபற்றிய அடிப்படைத் தகவல்களை வழங்குவதற்கு உதவும் வெளியீடுகள்.*

தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்புச் சேவைகள் (Information Analysis & Consolidation Services) *தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்களை பாவனையாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப தயாரித்து வழங்குதல்.*

தகவல் தொடர்பு (Information Communication): *உருவாக்கப்பட்ட தகவல்களை பாவனையாளருக்கு அனுப்புவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொடர்வழிகள்.*

தகவல் கட்டுமீறல் (Information Explosion): *ஒரே துறைசார்ந்த ஆக்கங்கள் எண்ணிறைந்த அளவில் வெளியீடு செய்யப்படுவதன் காரணமாக தகவல் ஒழுங்குபடுத்தலில் ஏற்படக்கூடிய சிரமங்கள்.*

தகவல் இடைத்தரகர்கள் (Information Intermediaries): *தகவலையும் தகவல் தேடுபவர்களையும் பொருத்தமான முறையில் இணைத்து விடுகின்ற தொழிலை மேற்கொள்பவர்களான நூலகர்கள் விரிவாக்க சேவை அலுவலர்கள் போன்றோர்.*

தகவல் வளங்கள் (Information Resources): *தகவல் பாவனையாளர்கள் தமது தகவல் தேவையை பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்துகின்ற ஆவணம் சார்ந்த, ஆவணம் சாராத வளங்கள்.*

தகவல் சேவை (Information Service): *நூலகங்களின் அல்லது தகவல் நிலையங்களில் காணப்படுகின்ற தகவல் வளங்களின் உதவியுடன் வாசகருக்கு எதிர்பார்ப்பின் அடிப்படையிலோ அல்லது வேண்டுகோளின் அடிப்படையிலோ வழங்கப்படுகின்ற சேவை. இது தொலைபேசியின் ஊடாக வினவப்படும் வினாக்கள் தொடங்கி கணினி ஊடாக உருவாக்கப் படும் அச்சு வடிவ விபரங்கள் வரை பல தரப்பட்டனவாக இருக்க முடியும். பருவ இதழ் பொருளடக்க விபரங்கள், நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவைகள் தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் என்பன இவ்வகைக்குள் அடங்கும் சில எடுத்துக்காட்டுகளாகும்.*

தகவல் முறைமைகள் (Information Systems): *தகவல் பாவனையாளருக்கு தகவல்களை வழங்கும் நோக்குடன் அறிவை சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், சேமித்தல், பரப்புதல் போன்ற செய்முறைகளை மேற்கொள்கின்ற தொடர்பு அமைப்புகளில் ஒன்று.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

தகவல் அமைப்பு வளங்கள் (Information System Resources): ஒரு தகவல் அமைப்பின் நோக்கங்களையும், கொள்கைகளையும் திறம்பட மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைகின்ற ஆவணங்கள், நூலக அலுவலர்கள், நூலக கட்டடங்கள், தளபாட வசதிகள் போன்றவை.

தகவல் தொழினுட்பம் (Information Technology) 1. பொருள் சார்ந்த, எண் சார்ந்த, படம் சார்ந்த, வாய்மொழி மூல தகவல்களின் ஈட்டல், செய்முறை,சேமிப்பு, பரிமாற்றம், பரவலாக்கம் போன்ற அனைத்து செய்முறைகளையும் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் பதம். இத்தகைய தகவல்களில் செய்முறை பொறிமுறை சார்ந்ததாகவோ, வேதியியல் அல்லது உயிர்வேதியியல். சார்ந்ததாகவோ இலத்திரனியல் சார்ந்ததாகவோ இன்றைய கால Zen இலத்திரனியல் சார்ந்த தாகவோ இருக்கலாம்: 2. தகவல் கையாள்கையிலும் செய்முறையிலும் பயன்படுத்தப்படும் அறிவியல் தொழினுட்ப பொறியியல் துறைகளும், முகாமைத்துவ நுணுக்கங்களும், கணினிப் பிரயோகங்களும் மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் அவற்றுடன் இணைந்த சமூக பொருளாதார கலாச்சார விடயங்களுக்கும் இடையிலான இடைத்தாக்கமும் இணைந்ததே தகவல் தொழினுட்பம்.

தகவல் இடமாற்றம் (Information Transfer): குறிப்பிட்ட ஒருவரால் உருவாக்கப்படுகின்ற தகவல் ஏனையோருக்கு போய்ச் சேர்வதற்காக மேற்கொள்ளப்படும் செய்முறைகள்.

தகவல் பயன்பாடு (Information Transfer): உருவாக்கப்பட்ட தகவல்களை அல்லது ஏற்கனவே தகவல் அமைப்புகளில் சேகரித்து வைக்கப்பட்ட தகவல்களை பாவனையாளர் பயன்படுத்தும் செய்முறை.

விளக்கச் சாராம்சங்கள் (Informative Abstracts): ஒரு கட்டுரை தொடர்பாக விளக்கமான தகவல்களை கொடுப்பதுடன் அக்கட்டுரையின் மூலம், கட்டுரை தொடர்பான தரவுகள், அடிப்படை விவாதங்கள் போன்றவற்றையும் வழங்கும் சாராம்சங்கள்.

கல்வெட்டுகள் (Inscriptions): நாணயங்களிலோ கற்களிலோ புராதன காலங்களில் செதுக்கு முறையிலோ அல்லது பொறித்தோ வைக்கப்பட்ட எழுத்து மூலங்கள்.

நிறுவன வழிகாட்டிகள் (Institutional Directories): நிறுவனங்களினால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்ற நிறுவனங்களின் பணிபுரியும் அலுவலர்களின் பெயர் விபரங்களையும், நிறுவனத்தின் செயல்பாடுகள் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்கும் வெளியீடுகள்.

இடைத்தர பாவனையாளர் (Intermediate Users): ஒரு தகவல் அமைப்பின் முடிவுப் பாவனையாளருக்கு பகுத்தாய்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழங்குவதிலும் செய்முறைப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகின்ற இப்பணியை திறம்பட செய்வதற்கு தகவல் அமைப்பின் வளங்களை பயன்படுத்துகின்ற தகவல் பாவனையாளர்.

கட்புலனாகாக் கல்லூரிகள் (Invisible Colleges): ஒரே அறிவுத்துறை சார்ந்த நிபுணர்களின் அல்லது ஒரு செயல் திட்டத்தில், பணி முறைத்திட்டல் வேலை செய்கின்ற மக்களுக் கிடையிலான மிக நெருங்கிய தொடர்பு வலை அமைப்பு.

'குவிக்' சொல்லடைவுகள் (KWIC Indexes): சொற்களின் தொடர்ச்சியான முறைமாற்று அடிப்படையில் உருவாக்கப்படும் சொல்லடைவுகள் இதில் தலைப்புகளும், முக்கிய வச னங்களும் அகர வரிசை ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கும். மூலச் சொற்கள் தலைப்புக்களிற்கிடையில் நிலையான தன்மையில் அமைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குவோக்' சொல்லடைவுகள் (KWOC Indexes): இம் முறையில் சொல்லடைவாளரால் பயனுடையதாகக் கருதப்படுகின்ற எல்லா மூலச் சொற்களின் கீழும் கட்டுரைத் தலைப்புகள் முழுமையாக சொல்லடைவுப்படுத்தப்பட்டிருக்கும். மூலச் சொற் கருவூலங்களிலிருந்தோ, பொருள் தலைப்புகளிலிருந்தோ, ஆவண தலைப்புகளிலிருந்தோ தெரிவு செய்யப்படும்.

துண்டுப் பத்திரிகைகள் (Leaflets): ஒரு முறை மடிக்கப்பட்ட தாள்களில் சிறிய நூல்களுக்கு கொடுக்கப்படுவது போல் தொடர்வரிசையில் பக்க எண் இடப்பட்டு இரண்டு அல்லது நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் அச்சிடப்பட்டு தைக்கப்படாமல் - கட்டப்படாமல் வெளியீடு செய்யப்படுகின்ற வெளியீடுகள்.

இணைப்பு சேவை (Liaison Service): ஒரு வியாபார நிறுவனம் பயனுள்ள வியாபாரத்தை மேற்கொள்ளும் பொருட்டு தேவைப்படும் தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதற்காக தகவல் நிலையங்களினால் செயல்திட்டங்களும் சேவைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இத்தகைய சேவைகளையும், செயல்திட்டங்களையும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்காக வியாபார நிறுவனத்திற்கும் தகவல் நிலையத்திற்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்துவது இச் சேவையின் நோக்கமாகும்.

நூலக சுழற்சிப் பணிகள் (Library Circulation Works): நூலக பாவனையாளருக்கு கோரிக்கையின் அடிப்படையில் ஆவணங்களை இரவலாகக் கொடுக்கும் செய்முறை.

நூலக விரிவாக்க சேவைகள் (Library Extension Services): நூலக உணர்வு இல்லாத சமூக அங்கத்தவர்களை நூலகத்தின் பால் ஈர்ப்பதற்குரிய நடவடிக்கைகளான வாசக வட்டம் ஒழுங்குபடுத்தல், கல்வியறிவற்றோர்க்கான வாசிப்பு, சொற்பொழிவுகள், பொருட்காட்சிக் கலந்துரையாடல் போன்ற செயல்பாடுகளும், வைத்தியசாலைகள், சிறைக்கூடங்கள் பொழுது போக்கு விடுதிகள் போன்றவற்றிற்கு நூல்களை வழங்குதலும் விரிவாக்க பணிகளுள் உள்ளடங்கும்.

நூலக வெளியீடுகள் (Library Publications): நூலகத்தின் நோக்கம், சட்டதிட்டங்கள், செயல் பாடுகள் போன்ற வற்றை வாசகர் அறிந்து கொள்ளும் பொருட்டு நூலகத்தினால் பருவ கால அடிப்படையில் வெளியிடப்படும் வெளியீடுகள்.

நூலக விளம்பரம் (Library Publicity): மக்களுக்கும் நூலகங்களுக்கு மிடையே காணப்படும் பெரியதோர் இடைவெளியை நிவர்த்தி பண்ணி நூலகங்களின் அமைப்பு நடைமுறை, பணிமுறை, பயன்பாடு போன்றவற்றை சமூக அங்கத்தவர்கள் அறிந்து கொள்வதன் மூலம் அவர்களை நூலகத்தின் முழுநேர வாசகர்களாக உருவாக்கும் நோக்குடன் அவர்களை நூலகத்தின்பால் ஈர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடும் எ-டு கண்காட்சி களை ஒழுங்கு பண்ணுதல், நூலக வாரம் கொண்டாடுதல், அண்மைக் காலங்களில் வெளியான நூல்களைக் காட்சிக்கு வைத்தல், நூலகத்தின் பணிகள் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களைத் தொகுத்துச் செய்திக் கடிதங்களாக, அறிக்கைகளாக நூலக உறுப்பினர்களுக்கும் வாசகருக்கும் விநியோகித்தல் போன்றவை

இலக்கிய மீளாய்வு (Literature Reviews): ஒரு குறிப்பிட்ட தனித்துவமான விடயத்துறையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியீடு செய்யப்பட்ட இலக்கியங்களை தேர்ந்தெடுத்து அவற்றை மதிப்பாய்வு செய்து அத்துறையின் நடைமுறை முக்கியத்துவத்தையும் தற்கால நிலைமையையும் பற்றி எழுதப்படுகின்ற அறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட கால உசாத்துணைச் சேவை (Long Range Reference Service): *நீண்ட கால அடிப் படையில் வாசகரின் தகவல் தேவையை நிறைவு செய்தல்.*

பேரினச் சொற்கருவூலங்கள் (Macro Thesauri): *பரந்த பொருள் துறைகளை சொற்கருவூலப் பொருளடக்கமாக கொண்ட சொற்கருவூலங்கள்.*

சஞ்சிகை (Magazine): *புலமைத்துவம் சாராத பாங்கில் பலதரப்பட்ட ஆசிரியர்களால் பலதரப்பட்ட பொருட்துறைகள் சார்ந்தும் எழுதப்படுகின்ற கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவரும் பருவ இதழ். பெரும்பாலான சஞ்சிகைகள் விளக்கப்படங்களை அதிகளவில் உள்ளடக்கியதாகவும் விளம்பரங்களைக் கொண்ட தாகவும் தரங்குறைந்த தாளில் அச்சிடப் படுவதுமாகவும் இருக்கும். இதில் உள்ளடக்கப்பட்ட கட்டுரைகள் ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்குள் மிகச் சுருக்கமாக எழுதப்பட்டவையாகவும் மேலதிக வாசிப்புக்கு உதவக் கூடிய வகையில் நூல்விபரத் தரவுகளை உள்ளடக்காததாகவும் இருக்கும். பெரும்பாலான சஞ்சிகைகள் மாதாந்த அல்லது வாராந்த ரீதியில் வெளியிடப்படுபவையாகும். சிறுவர் சஞ்சிகைகள், இலத்திரனியல் சஞ்சிகைகள், பொது ஆர்வச் சஞ்சிகைகள், பெண்கள் சஞ் சிகைகள், செய்திச் சஞ்சிகைகள் எனப் பலவகைப்படும்.*

காந்த நாடாக்கள் (Magnetic Tapes): *கணினிகளாலும் ஏனைய பொறிகளாலும் அறியப்படக் கூடிய, தகவல் பதிவு செய்யப்படுகின்ற, காந்தப் பொருட்களினால் மேற் பூச்சிடப்பட்ட பிளாஸ்ரிக் நாடாக்கள்.*

முகாமைத்துவ, உற்பத்தித்திறன் சார் சுருக்கத் தொகுப்பு (Management/Productive Digest): *நிறுவனங்களின் அபிவிருத்திக்கு முன்னேற்றத்திற்கு உதவும் பொருட்டு முகாமைத்துவம் சார்பாக வழங்கப்படும் சுருக்கத் தொகுப்புகள்.*

முகாமைத்துவ தகவல் சேவைகள் (Management Information Services): *முகாமைத்துவ போட்டி நிலையை விருத்தி செய்வதற்கும் ஆய்வு அபிவிருத்தி திட்டமிடலிற்கு உதவி செய்வதற்கும் முகாமைத்துவத்திற்கு வழங்கப்படுகின்ற சிறப்பு சேவைகள்.*

கையெழுத்துப் படிகள் (Manuscripts): *அச்சுக்குப் போவதற்கு முன்பாக ஆசிரியரால் எழுதப் படுகின்ற அல்லது தட்டச்சு செய்யப்படுகின்ற ஆக்கங்கள்.*

தேசப்படங்கள் (Maps): *பூமியின் நிலப்பரப்பினது பௌதிக அம்சங்களை அரசியல் ஆதிக்க பிரதேசங்களை காட்டுகின்ற தள உருவமைப்பு படங்கள்.*

பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் (Mass Media): *பொதுசன தொடர்பை மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற ஒலிபரப்பு, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற சாதனங்கள்.*

மருத்துவ இலக்கியப் பகுப்பாய்வு மற்றும் மீள்பெறுகை முறைமை (MEDLARS: Medical Literature Analysis and Retrieval System) *சர்வதேசரீதியில் உள்ளடக்கப்பட்ட 28 உயிர் மருத்துவ தரவுத் தளங்களின் ஒரு குடும்பமாகவே மெட்லாஸ் விளங்குகிறது. உலகளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 73 நாடுகளில் 30 மொழிகளில் எழுதப்பட்ட பருவ இதழ் கட்டுரைகளின் ஒரு தொகுப்பு இதுவாகும். வெளிநோய் சிகிச்சை,பொதுச் சுகாதாரம், புவியியல் எல்லைகளைக் கடந்த மருத்துவ ஆய்வு, கல்வி தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதுடன் முறை சார்ந்த மருத்துவக் கல்வி,கிராமிய மருத்துவமனைகளின் வடி வமைப்பு, கிராமிய ஆரம்பப் பாடசாலைகளின் உடல்நலக் கல்வி, விலங்கு மருத்துவம்,மருத்துவ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதித் தொழில் போன்ற விரிந்த ஆய்வுத் துறைகள் தொடர்பான கட்டுரைகளையும் இது உள்ளடக்குகிறது. அத்துடன் உடல் நல பராமரிப்பு, நச்சியல் ஆய்வு, புற்றுநோய், சனத்தொகைக் கல்வி,மருத்துவ ஒழுக்கவியல் போன்ற துறைகளில் விசேட தரவுத் தளங்களையும் கொண்டுள்ளது. இவை அனைத்தும் சேர்ந்தே மெட்லாஸ் என்ற பெயருக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

நினைவுக் குறிப்பு (Memorandum): வருங்காலப் பயன்கருதிய நிகழ்ச்சிப் பதிவுக் குறிப்புகள்.

நுண் அட்டைகள் (Micro Cards): ஒளிப்பட முறையிலான பிரதியாக்க முறையான இம்முறையில் சாதாரண அளவிலான ஒரு நூலின் 80 பக்கங்கள் வரை பிரதி செய்ய முடியும். பாவனை குறைந்த நூல்களுக்கு இது மிகவும் சிக்கனமான முறையாக இருப்பதுடன் இதிலுள்ள விபரங்களை வாசிப்புக் கருவியின் துணையின்றி வாசிக்க முடியும்.

நுண் தாள்கள்: 75 x 125 MM அளவுடைய ஒளிபுகக் கூடிய தட்டையான செவ்வக வடிவிலமைந்த ஆவணப் பிரதியாக்க ஒளிப்படத் தாள். இத் தாள்களில் உள்ள விம்பங்கள் நிரைகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதுடன் ஆவணத்தின் ஒவ்வொரு பக்கமும் அல்லது ஒரு சோடிப் பக்கங்கள் ஒரு கட்டத்தில் பதிவு செய்யப்பட முடிவதால் சிறிய இடத்தில் எண்ணிக்கையில் கூடிய கட்டங்களில் கூடுதலான விபரங்களை பதிவு செய்ய முடிகிறது.

நுண்பட வாசிப்புக் கருவி (Micro Film Reader): நுண்பதிவேடுகளை உருப்பெருக்க ஒளி எறிவு முறை மூலம் ஒளிபுகக் கூடிய அல்லது ஒளிபுகா தள கண்ணாடித் திரையின் உதவியுடன் வாசிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி. இதனுடைய நுண்வடிவ அளவுகளை சாதாரண அளவுகளில் பிரதிபண்ணக் கூடிய வசதிகளும் அமைந்திருக்கும்.

நுண்படங்கள் (Micro Film): கண்ணறைகளுள்ளபடங்களில் உருவாக்கப்படும் நுண் ஒளிப் படங்கள். இவை 16 அல்லது 35 mm அகலமுள்ளதாக பல்வேறு பட்ட நீளங்களில் (அதாவது விம்பங்களின் எண்ணிக்கையை பொறுத்து) நேர்ப் பிரதியாகவோ அல்லது எதிர்மறைப் பிரதியாகவோ அமைந்திருக்கும். இம் முறையில் ஒளிப்படக் கருவியின் துணை கொண்டு உருவாக்கப்படும் விம்பங்களை கொண்ட படச்சுருள்கள் திறந்த சுற்றுக்களிலோ அல்லது தடித்த தாள்களிலோ சுற்றப்பட்டிருக்கும். இவை நுண் வடிவ வாசிப்புக் கருவியின் துணை கொண்டுதான் வாசிக்கப்பட முடியும். செய்தித்தாள்கள், பொறியியல் சார்ந்த வரைபடங்கள் போன்றவற்றை பிரதி பண்ணுவதற்கும் 70 MM அகலமுள்ள நுண்படங்கள் பயன்படுத் தப்படுகின்றன.

நுண்வடிவ உபகரணங்கள் (Micro Form Equipments): நுண்வடிவங்களில் உள்ள விம்பங்களைப் பெரிதாக்கிக் காட்ட உதவும் கருவிகள். நுண்வடிவ வாசிப்பு கருவிகளிலுள்ள கண்ணாடி வில்லைகளுக்கு மிக நெருக்கமாக நுண்வடிவங்கள் வைக்கப்படும் போது அதில் உள்ள விம்பங்களை கண்ணால் பார்த்து வாசிக்கக் கூடியளவிற்கு பெரிதாக உருப்படுத்திக் காட்ட இவை உதவுகின்றன.

நுண்வடிவங்கள் (Micro Forms): தட்டையான சுருள்வடிவப் படங்களில் அல்லது தாள்களில் பதிவு செய்யப்படுகின்ற நுண்பதிவேடுகளை குறிப்பதற்கு பாவிக்கப்படுகின்ற பொதுச் சொல். ஓர் ஆவணம் மிகக் குறுகிய வடிவமைப்புக்கு மாற்றப்படும் போது அவை நுண்வடிவங்கள் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண் அச்சுகள் (Microprints): இது அச்சிடுதல் முறையை பயன்படுத்தி மீள் உருவாக்கம் செய்யப்படுகின்ற "15" '22.5" அளவிலான அட்டைகளில் ஒளி புகா முறையைப் பயன்படுத்திப் பெறப்பட்ட அச்சு வடிவங்களைக் கொண்ட நுண்வடிவமாகும். இவ் அட்டைகளில் பதிவு செய்யப்படுகின்ற ஆவணத்தின் நூல் விபரத்தரவுகள் சாதாரண அளவுள்ள கண்ணுக்கு புலனாகக் கூடிய எழுத்துக்களாக அமைந்திருக்கும்.

நுண் சொற்கருவூலங்கள் (Micro Thesauri): தனிப்பட்ட ஒரு பொருள் சம்பந்தப்பட்ட சொல் லடைவுச் சொற்களின் தொகுதி. எ-டு: தகவல் விஞ்ஞான சொற்கருவூலம்.

மாதிரி (Model): ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள், ஒலி ஒளிப்பதிவுகள் என்ற மூன்று வகைக் குள்ளும் வகைப்படுத்த முடியாத நூலுருவற்ற தகவல் வளங்களில் ஒன்றே மாதிரி உருவ மைப்புகள் ஆகும். உண்மையான உருவங்களை தகவல் அமைப்பில் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் மாதிரி உருவமைப்புகள் சிறந்ததொரு தகவல் வளமாகக் கருதப்படுகின்றன.

தனிப்பொருள் நூல்கள் (Model): பருவ வெளியீடு அல்லாத ஓரினப் பொருள் சம்பந்தமாக மேற் கொள்ளப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகள் அல்லது நூல்கள்.

ஒரு மொழி சொற்கருவூலங்கள் (Monolingual Thesauri): ஒரு மொழியில் தயாரிக்கப்படும் சொற்கருவூலங்கள்.

சலனப் படம் (Motion Picture): தகவல் வளங்களின் முக்கிய அங்கமாக கருதப்படும் இவை தற்காலத்தில் 70mm,35mm ,16mm அளவுகளில் விற்பனையில் உள்ளன. 16mm வடிவமைப்பே தகவல் அமைப்புக்கு உகந்த தாகும். இவை வேகம் குறைந்தவை. சிறியவை. ஒரு சுற்று கிட்டத்தட்ட ஓரிரு நிமிடங்களை மட்டுமே கொண்டவை.

பல்லூடக கணிமம் (Multimedia Software): அச்சுக்கள் வரைபுகள், வண்ணங்கள், படங்கள், காட்சி வில்லைகள், ஒலி, அசைவு போன்ற அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்படும் செய்நிரல்களாக இவை இருக்கின்றன.

பன்மொழி சொற்கருவூலங்கள் (Multiple Thesauri): இரு சம கருத்துள்ள சொல்லடைவுச் சொற்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் கொண்டிருப்பதுடன் அவற்றிற்கிடையிலான தொடர்புகளும் ஒரு மொழியின் பாவனையில் அமைந்திருக்குமாறு உருவாக்கப்படும் சொற்கருவூலங்கள்.

பெயர்ச் சொல்லடைவுகள் (Name Indexes) நூலாசிரியர் பெயர்களை மட்டும் சொல்லடைவுப் பதிவுகளாகக் கொண்ட சொல்லடைவுகள். பொதுவாக ஓர் ஆக்கத்தின் இறுதிப்பகுதியில் அந்த ஆக்கத்தில் பயன்படுத்தப்பட்ட பெயர்களும் அந்தப் பெயர்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்ட பக்க எண்ணும் அகரவரிசை ஒழுங்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

தேசிய நூல்விபரப் பட்டியல்கள் (National Bibliographies): தேசிய நூல்விபரப் பட்டியல் என்ற பதம் குறிக்கும் உண்மையான கருத்து நூலின் வடிவம், மொழி, பொருள், வெளியீட்டு நிறுவனம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது வெளியிடப்பட்ட, வெளியிடப்படாத, வியாபார ரீதியான, வியாபார ரீதியற்ற அனைத்து ஆவணங்களுக்குமான பதிவேடு என்பதாகும்.

செய்திக் கடிதங்கள் (News Letters): நிறுவனங்களில் வெளியிடப்படுகின்ற நிறுவனங்களது செய்திகளை தாங்கி வருகின்ற சுருக்க வெளியீடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித் துணுக்குகள் சேவை (Newspaper Clipping Service): செய்தித் தாள்களில் வரும் செய்திகளை பொருள் அடிப்படையில் சேகரித்து தொகுத்து பாவனையாளருக்கு வழங்குதல்.

செய்தித் தாள்கள் (Newspapers): பருவ ரீதியாக வெளியிடப்படுகின்ற மிகவும் அண்மைக் கால செய்திகளை தாங்கி வருகின்ற செய்தித் தாள்கள்.

நூலுருவற்ற சாதனங்கள் (Non Book Materials): கட்புல செவிப்புல சாதனங்கள், நுண்வடிவங்கள் போன்ற நூல் வடிவங்களிற்குள் அமையாத விசேட கையாளுகை தேவைப்படுகின்ற நூலக வளங்கள்.

ஆவணம் சாராத மூலகங்கள் (Non Documentary Sources): தொடர்பு முறையில் ஒரு பகுதியாக குறிப்பாக அறிவியல், தொழில்நுட்பத்துறைகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற தகவல் மூலங்களான நிறுவனங்கள் மனித மூலங்கள் போன்றவற்றை குறிக்கும்.

பாராளுமன்றம் சாராத வெளியீடுகள் (Non Parliamentary Publications அமைச்சுக்களின் கீழ் இயங்கும் பல்வேறு திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள்,சபைகள் போன்றவற்றால் வெளியீடு செய்யப்படுகின்ற வெளியீடுகள்.

ஓலைச்சுவடிகள் (Ola Leaves): தாள்களின் கண்டுபிடிப்புக்கு முன்னர் தெற்கு மற்றும் தென் கிழக்காசிய நாடுகளில் பயன்படுத்தப்பட்ட எழுது சாதனங்களில் முக்கியமானவை.

ஒரு தொகுதிக் கலைக்களஞ்சியங்கள் (One Volume Encyclopaedias): உலக அறிவியல்த்துறை சார்ந்த பொதுத்தகவல்கள் அல்லது சிறப்புத்தகவல்களை சுருக்கி பாவனையாளர் இலகுவாக கையாளக்கூடிய வகையில் கையடக்கப் பிரதிகளாக வெளியிடப்படும் கலைக் களஞ்சியங்கள்.

நேர்முக தகவல் அமைப்புகள் (Online Information Systems): வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள், தொழில் நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றினால் உருவாக்கப்படும் தரவுத் தளங்களை மிகத் தொலை தூரத்திலுள்ள தகவல் தேடுபவர் தொலைத் தொடர்பு இணைப்பு மூலமாக பயன்படுத்துவதற்கு வழிவகைகளை மேற்கொள்ளும் அமைப் புகள். எ-டு டயலாக், டேற்றாஸ்ரார் இன்பொலின்.

கணினிமுக பொது அணுகுகைப் பட்டியல் (Online Public Access Catalogue - OPAC) எனச் சுருக்கமாக அழைக்கப்படுவது. பயிற்றப்பட்ட உசாத்துணை நூலகரின் உதவியை வாசகர் சுலபமாக பெற்றுக் கொள்ள உதவும் வகையில் உசாத்துணைப் பகுதிக்கு அண்மையில் வைக்கப்படுகின்ற பொதுக் கணினி முனைகளூடாகவோ அல்லது பணியிடங்களூடாகவோ அணுகத் தக்கவகையில் இருக்கின்ற ஒரு தகவல் அமைப்புக்குச் சொந்தமான நூல்களையும் ஏனைய சாதனங்களையும் விபரிக்கின்ற நூல்விபரப் பதிவேடுகளைக் கொண்ட தரவுத் தளம்.

ஒளிபுகா நுண்வடிவங்கள் (Opaqe Microforms) இந்த நுண்வடிவங்களை அவற்றில் பிரதிபலிக்கும் ஒளியின் உதவியுடன் வாசிக்க முடியும். கருத்துரையாளர்கள் புதிய கருத்துக் களையும், கண்டு பிடிப்புக்களையும் தம்மைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்ற இவர்கள் புதிய உருவாக்க உத்திகளின் மூலம் தொடர்பாளராக செயல்படுகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொக்குவில்

அச்சில் இல்லாத வெளியீடுகள் (Out-of-Print Publications): *நூலாசிரியர் - வெளியீட்டாளர்களிடம் விற்பனைக்கு எவ்வித பிரதிகளும் இல்லாத வெளியீடுகள், இவற்றில் மறு பதிப்பு முயற்சிகள் மிக அரிதாகும்.*

ஓவியங்கள் (Paintings): *கலைப்பாரம்பரியத்தின் எடுத்துக்காட்டுகளாக விளங்கும் ஓவியங்கள் மிகச் சிறந்த தகவல் சாதனங்களில் ஒன்றாக கருதப்படுகின்றன. ஓவியங்களை வரைவதற்கு துணி, தாள், முரம், கண்ணாடி போன்றன பயன்படுத்தப்படுகின்றன.*

சிறு நூல்கள் (Pamphlets): *சர்வதேச பட்டியலாளர் மகாநாட்டில் தீர்மானித்தபடி 49 பக்கங்களையும், அதற்கு குறைவான பக்கங்களையும் கொண்ட சிறு பிரசுரங்கள் சிறு நூல்கள் எனப்பட்டன.*

பைபிரஸ் (Papyrus) : *கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எகிப்தியர்களால் பயன்படுத்தப்பட்ட எழுதப்படு பொருள். நைல்நதிக்கரையில் பைபிரஸ் எனப்படும் கிட்டத்தட்ட பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வரை வளரும் கோரை போன்ற ஒரு வகையான புல்லை அறுத்துப் பட்டை உரித்து, ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி வெயிலில் உலர்த்தி, ஒவ்வொரு தாளையும் ஒன்றோடொன்று ஒட்டிச் சேர்த்து நீண்ட சுருளையாக்கி எழுதப் பயன்படுத்தினர். ஒரு பெரிய சுருளை சுமார் 20 தாள்களைக் கொண்டதாக இருந்தது. இரண்டு அங்குலம் முதற்கொண்டு பதினைந்து அங்குலம் வரையில் இந்தப் பைபிரஸ் தாள்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. எகிப்தியரைப் போன்று எகிப்புக்கு அண்மையிலிருந்த கிரேக்கர், பினிஷியர், உரோமர், எபிரேயர், ஆர்மீனியர், அராபியர் ஆகியோருக்கும் பைபிரஸ் தாள்கள் எழுதுபொருளாகப் பயன்பட்டதாக வரலாறு கூறுகின்றது. கிட்டத்தட்ட கி.பி. 7ம் நூற்றாண்டு வரை பைபிரஸ் தாள்களில் எழுதும் வழக்கம் நீடித்திருக்கிறது.*

விலங்குத் தோல் (Parchment): *பார்ச்மென்ட் என அழைக்கப்படும் பதப்படுத்தப்பட்ட விலங்குத் தோல் மத்திய ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவின் இஸ்லாமிய நாடுகளில் 199 j.F காலத்திலிருந்தே எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

பாராளுமன்ற விவாத அறிக்கைகள் (Parliamentary Debates): *தேசிய அரசுப் பேரவையின் ஆணையின் கீழ் வெளியிடப்படுகின்ற, தேசிய அரசுப் பேரவையில் நடைபெறும் விவாதங்களை பதிவு செய்து வெளிவரும் வெளியீடுகள்.*

காப்புரிமைகள் (Patents): *காப்புரிமை அலுவலகங்களினால் வெளியீடு செய்யப்படுகின்ற, வடிவமைப்புகள், செய்முறைகள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய வெளியீடுகள்.*

பருவ இதழ் சொல்லடைவுகள் (Periodical Indexes): *பருவ கால அடிப்படையில் வெளியிடப்படுகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பருவ இதழ்களில்அல்லது பருவ இதழ் தொகுதிகளில் வெளிவரும் கட்டுரைகளுக்கான சொல்லடைவுகள்.*

பருவ இதழ்ப் பட்டி (Periodical List): *ஆய்வுகளை வெளிக் கொணரும் முக்கிய தகவல் வளங்களாக கருதப்படும் பருவ இதழ்கள் புலமைசார் தொடர்பாடலுக்கான ஆதாரமாக இருப்பவை. இவற்றின் வெளியீட்டில் ஏற்பட்டுள்ள அபரிமித வளர்ச்சி காரணமாக இவற்றின் நூல்விபரக் கட்டுப்பாடு என்பது மிக கடினமானதாக உணரப்பட்டுள்ளது. எனவே நிறுவன ரீதியாகவோ, பொருட்துறை சார்ந்தோ இவற்றின் தொகுப்பு பல தகவல் அமைப்புகளின் முக்கிய செயற்பாடாக மாறியுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ இதழ்கள் (Periodicals): குறிப்பிட்ட தலைப்பைக் கொண்டதாகவும் ஒழுங்கான கால இடைவெளியில் வெளியிடப் படுவதும், இறுதி இதழ் வெளியீடு பற்றி முன்கூட்டியே அறிவிக்கப்படாததுமான வெளிவருகின்ற ஒரு வெளியீடு.

புறநிலை கணிமம் (Peripheral Software): கணினியிலிருந்து கணிணியுடன் இணைக்கப் பட்ட சாதனங்களுக்கு செலுத்தப்படும் அறிவுறுத்தல்களை கட்டுப்படுத்தும் பணியை மேற்கொள்கின்றன. கணினிக்கு அமைக்கப்பட்ட படிக்கட்டுமான நினைவக சிப்பில் சேமிக்கப்படுகிறது.

முறைமாற்று சொல்லடைவுகள் (Permuted Indexes): ஒவ்வொரு சொல்லடைவு சொற்களையும் அல்லது ஏனைய விடய பொருட்களையும் ஒரு பதிவின் மூலமாக கருதி அவற்றை திரும்ப திரும்ப பதிவு செய்கின்ற கணினி முறை சார்ந்த அகரவரிசை சொல்லடைவுகள்.

தனிப்பட்ட நூல் விபரப்பட்டியல்கள் (Personal Bibliographies): ஒரு ஆசிரியரைப்பற்றியும் ஆசிரியரது ஆக்கங்கள் பற்றியும் தயாரிக்கப்படுகின்ற பட்டி. இலக்கிய துறையில் இந்நூல் விபரப் பட்டியல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒலிமுறை நாடா (Phonotape): காந்த நாடாக்களில் உள்ள ஒலிப்பதிவுகள்.

ஒளிப்பட சாதனங்கள் (Photographic Materials): ஒளித்தாக்கத்திற்குட்படும் இரசாயன மூலகங்களில் ஒளிச் செயற்பாடு மேற்கொள்வதன் மூலம் ஒளிப்பட விம்பங்கள் உருவாக்கப் படுகின்றன. இந்த விம்பங்களைத் தாங்கும் குழம்பு ஆரம்பத்தில் முட்டை வெள்ளைக்கரு வாகவோ, கொலோடியன் கரைசலா கவோ, கஞ்சிப்பசையாகவோ இருந்து பின்னர் வச்சிரமாக மாறியிருக்கிறது. விம்பங்களைத் தாங்கும் பின்புல பொருட்களில் தாள்கள், ஒளிப்பட இழைகள், கண்ணாடி, உலோகங்கள் என்பன முக்கியமானவை. பொதுவாக நூலகங்களில் காணப்படும் ஒளிப்பட சாதனங்களில் 1840-1860 காலப் பகுதிகளில் பயன்பட்ட உப்புத்தாள் அச்சுகள், 1850-1920 காலப்பகுதிகளில் பயன்பட்ட அல்புமின் அச்சுகள், 1890-1910 காலப் பகுதிகளில் பயன்பட்ட கொலோடியன் அச்சுகள் 1870களில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று வரை மேலாதிக்கம் செய்யும் வச்சிர அச்சுகள் என்பன உள்ளடங்குகின்றன.

விளம்பர அட்டை (Poster): மிகப் பெரிய ஒற்றைத் தாள்களில் ஒரு பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்டோ எழுதப்பட்டோ (விளம்பரங்கள் , அறிவிப்புகள்) சுவர்களில் அல்லது விளம்பரப் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கொள்கை வகுப்பாளர் - திட்டவியலாளர் (Policy Makers /Planners): பொறியியல் வடிவமைப் புகள், உற்பத்தி செய்முறைகள், சந்தைப்படுத்தல், நிர்வாகம் போன்ற தகவல்களுக்குரிய வாசகர்களான முகாமையாளர், கைத்தொழிலாளர், அலுவலர்கள், சிறுதொழில் முயற்சியாளர், விரிவாக்க அலுவலர் போன்றோர் இதில் அடங்குவர். இவர்கள் பெரும்பாலும் கைத்தொழில் சார்ந்த தகவல்களின் பாவனையாளராக கருதப்படுகின்றனர்.

முன் ஒருங்கிணைவுச் சொல்லடைவு (Pre Co-ordinate Index): ஆவணங்களை சொல்ல டைவுப்படுத்தும் போது இரு சொற்களின் சேர்க்கையை சொல்லடைவுப் பதிவுகளில் காட் டக்கூடிய கணினி முறைச் சொல்லடைவுகள். ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகள் உள்ள ஒரு சொல்லடைவுக் கோவையில், சொல்லடைவு படுத்தப்பட்ட ஒவ்வொரு சொற்கூறுகளிலும் உள்ள கருத்துப் பொருளை விளக்குகின்ற அல்லது அடையாளம் காட்டுகின்ற சொல்ல டைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிசிஸ் சொல்லடைவுகள் (Precis Indexes): பொருள் தலைப்புகளின் சொல்லாக்க முறைகளில் ஒன்று. இது தொடர்புப் பகுப்பாய்விலிருந்தும், கருத்துக்கூறு பகுப்பாக்கத்தில் உள்ள குறிப்பிட்ட சில நுணுக்க முறைகளிலிருந்தும் நேரடியாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு சொல்லடைவு முறையாகும். ஆங்கிலத்தில் (PRESERVE CONDEXT INDEX SYSTEM) (காப்பு சூழமைவு சொல்லடைவு முறை) என்ற தொடரிலுள்ள தலைப்பு எழுத்துகளின் தொகுப்புதான் PRECIS என அழைக்கப்படுகிறது. இது பிரித்தானிய தேசிய நூல் விபரப்பட்டியலினால் பொறிமுறை வாசிப்புப் பட்டியல்களிற்கான பொருள் சொல்லடைவு தரவுகளை வழங்குவதற்கான அபிவிருத்தி செய்யப்பட்ட தொன்று. அத்துடன் தேசிய நூல் விபரப்பட்டியலின் அகரவரிசையினாலான பொருள் சொல்லடைவு உருவாக்கத்திற்கும் பயன்படுகிறது.

முதல் நிலை ஆவணங்கள் (Primary Documents) கலைச்சொல் விளக்க அகராதி: ஆவணப் பதிவுச் செய்முறைக்கு உட்படுத்தப்படாத வாசகரின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்கின்ற ஆவணங்கள், உண்மையான ஆய்வு அபிவிருத்திகளை, அவற்றின் புதிய பிரயோகங்களின் விளக்கங்களை, அல்லது பழைய கருத்துக்களுக்கான புதிய விளக்கங்களை உடனுக்குடன் தாங்கி வரும் வெளியீடுகள் அனைத்தும் முதல்நிலைத் தகவல் வளங்கள் எனப்படுகிறது.

அச்சிடப்பட்ட சொல்லடைவு (Printed Index): நூலுருவில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்ற சொல்லடைவுகள்.

தனியார் நூலகங்கள் (Private Librarie): தனியாரினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள் சமூகத்தின் பொதுசன அங்கத்தவர்கள் பயன்படுத்துவதற்கு உரிமையில்லாத ஒரு சமூகத்தால் அல்லது தனிக்குழு அல்லது கழகம் அல்லது ஏனைய ஒழுங்கமைப்பு நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள்.

சங்க நடவடிக்கை குறிப்பேடுகள் (Proceedings): ஒரு சமூகத்தின் அல்லது நிறுவனத்தின் சந்திப்புகள் அல்லது கூட்டங்களில் அறிக்கையாகவோ, சுருக்கமாகவோ வழங்கப்படுகின்ற அல்லது படிக்கப்படுகின்ற கட்டுரைகளின் வெளியிடப்பட்ட பதிவேடு.

விபரத்திரட்டுகள் (Profiles): தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்க சேவையை வழங்கும் பொருட்டு பயன்படுத்துவதற்காக தனிப்பட்டவர்களின் அல்லது ஒரு குழுவின் சிறப்புத் துறை சார்ந்த விபரங்களை தொகுத்து ஒழுங்குபடுத்தி வைத்திருக்கின்ற தொகுப்பேடுகள்.

வெளியீட்டுச் சேவை (Publishing Service): தகவல் அமைப்புகளின் செயல்பாடுகள், நடவடிக்கைகள் தெரிவு படுத்தும் பொருட்டு தயாரிக்கப்படும் துண்டுப் பிரசுரங்கள் செய்திக் கடிதங்கள், பருவ இதழ்கள் போன்றவற்றை சில தகவல் அமைப்புகள் தாமே வெளியீடு செய்கின்றன.

அரிய நூல்கள் (Rare Books): விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்வதற்குக் கடினமான நூல்கள். புராதன நூல்களின் விற்பனையாளரிடம் பெரும்பாலும் ஒருசில பிரதிகளே கிடைக்கக்கூடியதாக இருக்கும். இத்தகைய நூல்கள் மிகப் பெறுமதி வாய்ந்தவை. நூலகங்களில் அரிய நூல்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு மிகப் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுவதுடன் இவற்றின் பாவனை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் வட்டம் (Reading Circle): பொதுவான பொருட்துறைகளில் ஆர்வமுள்ள அனைவரையும் ஒன்று சேர்த்து அவரவர்களுக்கான வாசக வட்டங்களை உருவாக்குதல். பொதுசன நூலகங்களின் முக்கிய பணியாக கருதப்படும் இச்சேவையில் வாசக வட்டங்களிற்கு தேவையான நூல்களையும் வழங்கல்.

கல்வியறிவு அற்றோருக்கான வாசிப்பு (Reading To Illiterates): பொதுசன நூலகங்களின் முக்கிய பணியாக கருதப்படுகின்ற நூலக விரிவாக்க சேவைகளில் ஒன்றான இச் சேவையில் கிராமிய மட்டத்திலுள்ள கல்வியறிவற்ற சமூக உறுப்பினர்கள் கல்வி பெற தகவல் பெற, பொழுதுபோக்கு அகத்தூண்டுதலுக்கான மீள் உருவாக்கத்திற்கான முயற்சிகளை தூண்டுவதற்காக மேற்கொள்ளப்படும் சேவை.

உடனடி உசாத்துணை வளங்கள் (Ready Reference Resources): வாசகர் ஒருவரால் கேட்கப்படும் உசாத்துணை வினாக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்குள் விடையளிக்கக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்ட சுருக்கத் தகவல்களைக் கொண்ட சாதனங்கள். ஆண்டுநூல்கள், ஐந்தொகுதிகள், கலைக் களஞ்சியங்களுக்கான அனுபந்தங்கள் போன்றவை விரிவான தகவல்களைத் தராது உண்மைத் தரவுகளைக் கண்டறிவதற்கென தொகுக்கப்படுபவை. சொல்லப்பட வேண்டிய தகவலை ஓரிருவரிகளில் தரும் ஆற்றல் கொண்டவை.

உடனடி உசாத்துணை சேவை (Ready Reference Resources): உடனடி உசாத்துணை நூல்களின் உதவியுடன் வாசகரினால் கேட்கப்படும் உண்மை நிகழ்ச்சியுடன் தொடர்புடைய வினாக்களுக்கு மிகக் குறுகிய நோக்கத்தில் விடையளித்தல். இச்சேவை முறையில் காலம் என்பது மிக முக்கியமான காரணமாகும்

உண்மை உருவமைப்பு (Realia): வகுப்பறைப் பாவனைக்காக அல்லது காட்சிக்கு வைப்பதற்காக நூலகங்களினால் விலைக்குப் பெறப்பட்டோ அல்லது ஏனைய இடங்களிலிருந்து இரவல் பெறப்பட்டோ அதுவுமன்றி அன்பளிப்பாகப் பெறப்பட்டோ இருக்கும். கலைப் பொருட்கள், கருவிகள், உபகரணங்கள் போன்ற மனிதனால் உருவாக்கப்படுகின்ற அல்லது மாதிரிகள், உருவங்கள் போன்ற இயற்கையாக அமைந்த முப்பரிமாண உருவங்கள்.

உசாத்துணை வளங்கள் (Reference Resources): அறிவை விருத்தி செய்வதற்கும் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் வாசகரை வழிப்படுத்துவதற்கும் வசதியான பாவனைக்குமாக ஒழுங்கமைக்கப்பட்ட பலவகை தகவல்களை கொண்ட சாதனங்கள்.

உசாத்துணை சேவைகள் (Reference Services): உசாத்துணைப் பகுதியில் நியமிக்கப்படுகின்ற உசாத்துணை நூலகரால் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ அல்லது வேறு ஏதாவது இலத்திரனியல் வழிமுறைகள் ஊடாகவோ வாசகரது தகவல் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென ஆற்றப்படுகின்ற அனைத்துப் பணிகளும். கேட்கும் நூலகத்தினால் உசாத் துணைப் பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைப்பும் முன்னேற்பாடு களும்.

ஆற்றுப்படுத்தல் சேவை (Referral Service):: ஒரு நூலகத்திலுள்ள ஆவணங்களில் வாசகருக்கு தேவைப்படும் தகவல்களை இனங்கண்டு அவர்களை அந்த ஆவணங்களுடன் தொடர்பு படுத்தி விடுதல் அல்லது வாசகருக்கு வேண்டிய தகவல்களை அவை நூலகத்தில் இல்லாத விடத்து எங்கே யாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரங்களை அறிந்து அவர்களை வழிப்படுத்திவிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதியாக்க சேவை (Reprographic Service): *தகவல் அமைப்புகளினால் அதனது வாசகர்கள் அல்லது தகவல் பாவனையாளருக்கு வேண்டிய ஆவணங்களை அல்லது தகவல்களை மிகக்குறைந்தளவு கட்டணத்தில் மீள் பிரதி செய்து வழங்குதல்.*

ஆய்வு மேம்பாட்டு செய்தியறிக்கைகள் (Research in Progress Bulletins): *ஒரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் முன்னேற்றம் பற்றி காலத்துக்கு காலம் வெளியிடப்படுகின்ற செய்தியறிக்கைகள் ஒரு ஆய்வு நிறுவனத்தினால் அல்லது தகவல் அமைப்புக்களினால் அதனது தகவல் பாவனையாளருக்கு நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு முன்னேற்றம் பற்றிய விபரங்களை தெரிந்தெடுத்து செய்தியறிக்கை வடிவில் வழங்குதல்.*

ஆய்வுத் தனிப்பொருள் நூல் (Research Monograph): *உண்மையான ஆய்வுகளிலிருந்து உருவாக்கப்பட்டு அறிக்கைகளாக வெளியிடப்படும் வெளியீடுகள்.*

தடை செய்யப்பட்ட ஆவணங்கள் (Restricted Documents): *அரச ஆதிக்கத்திற்கு எதிராக செய்யப்படுகின்ற, அரசாங்கத்தினால் தூக்கி எறியப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற, பொதுவாக அந்தரங்கமாக அச்சிடப்படுகின்ற அரசியல் சார்பான தணிக்கை செய்யப்பட்ட வெளியீடுகள்.*

பின்னோக்கிய நூல் விபரப்பட்டியல்கள் (Retrospective Bibliographies): *அண்மைக்காலங்களில் வெளியீடு செய்யப்பட்ட நூல்களை பதிவு செய்கின்ற நடப்பு நூல் விபரப்பட்டியல்களிற்கு எதிர்மாறாக அவற்றிற்கு முந்தய வருடங்களில் வெளியான நூல்களை பதிவு செய்து வெளி யிடப்படும் நூல் விபரப்பட்டியல்கள்.*

பின்னோக்கிய தேடுதல் சேவை (Retrospective Search Service): *தகவல் பாவனையாளரின் தகவல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு தகவல் அமைப்பினால் கோரிக்கையின் அடிப்படையில் பின்னோக்கிய தேடுதலை மேற்கொள்ளுதல்.*

வளையச் சொல்லடைவுகள் (Ring Indexes): *இரசாயனத் துறை சார்ந்த சாராம்சங்களில் உள்ள தகவல்களை பெறுவதற்கு ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட சொல்லடைவுகள்.*

சுழல் முறைச் சொல்லடைவுகள் (Rotated Indexes): *சொல்லடைவு பதிவு ஒன்றில் விடயப் பொருள்களின் தலைப்பு சொற்றொடர்கள் அல்லது வசனங்கள் போன்றவை பதிவுகளாக எடுக்கப்படும் போது இப்பதிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சொல்லடைவு, மூலகம் முதலில் தோன்றுவதாகும். அதனுடன் தொடர்புடைய ஏனைய சொற்கள் அல்லது சொற்றொடர்கள் அதைத் தொடர்ந்து வருவதாகவும் உள்ள சொல்லடைவு. இது அகரவரிசைப்படுத்தப் பட்டது.*

அறிவியல் மேற்கோள் சொல்லடைவுகள் (Science Citation Indexes): *பிலடெல்பியாவில் உள்ள அறிவியல் தகவல்களிற்கான நிறுவனத்தினால் காலாண்டு இடைவெளியில் தொகுத்து வெளியிடப்படுகின்ற பருவ இதழ்க் கட்டுரைகள், நூல்கள், ஏனைய அறிவியல் சார்ந்த உசாத்துணைக் குறிப்புகள் போன்றவற்றிற்கான அச்சிடப்பட்ட சொல்லடைவு.*

அறிவியல் சார்ந்த தகவல் அமைப்புகள்: *அறிவியல் சார்ந்த தகவல்களை ஆவணப்படுத்தி பாவனையாளருக்கு வழங்குகின்ற ஆவணப்படுத்தல் அமைப்புகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலாளர்கள் (Scientists): *அறிவியல் சார்ந்த ஆய்வுத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள். இவர்கள் ஏற்கனவே நிலை கொண்டுள்ள அறிவியல் சார்ந்த கருத்துப் பொருள்களின் வியாபகத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் ஒரு குழுவாக இணைந்த அறிவியல் சார்ந்த ஆய்வுகள், மாநாடுகள் கருத்தரங்குகளை மேற்கொள்ளும் போது நிறுவன ரீதியான தகவல் மூலங்களாகக் கருதப்படுகிறார்கள்.*

இலச்சினைகள் (Seals): *ஓர் ஆவணத்தை அதிகாரபூர்வமுடையதாக்குவதற்குப் பயன் படுத்தப்படும் எதுவும் இலச்சினை என்ற பெயரால் வழங்கப்படுகின்றது. நூலுருவற்ற சாதனங்களில் மிக முக்கியமானது.*

இரண்டாம் நிலைத் தகவல் வளங்கள் (Secondary Information Resources): *முதல்நிலை ஆவணங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் அல்லது தரவுகளைக் கொண்டு ஆவணவாக்க செய்முறைக்காக தயாரிக்கப்படும் ஆவணங்கள் இதுவாகும்.*

இரண்டாம் நிலைப் பருவ இதழ்கள் (Secondary Periodicals): *முதல்நிலைத் தகவல் வளங்களில் உள்ள அபிவிருத்திகள் தொடர் பான அபிப்பிராயங்களை வழங்குதல் அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுதல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பருவ இதழ்கள் அனைத்தும் இரண்டாம் நிலை ஆவணங்களாக கருதப்படுகின்றன. எ-டு தாயகம்.*

தெரிவு நூல் விபரப் பட்டியல்கள் (Selective Bibliographies): *ஒரு குறிபிட்ட கருத்துப் பொருள் சார்ந்ததாக தெரிவு செய்யப்பட்ட இலக்கியங்களை மட்டும் பொருள் அடிப்படையில் முறைப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்ற நூல் விபரப் பட்டியல்கள். இவை குறிப்பிட்ட சிறப்பு வாசகர் பிரிவின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு பெறுமதியற்ற இலக்கியங்கள் விலக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட இலக்கியங்களின் விபரங்களை மட்டும் உள்ளடக்கி தயாரிக்கப்படுபவை ஆகும்.*

தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் பட்டியலாக்கம் (Selective Dissemination of Information): *பாவனையாளருக்கு அவர்களின் சிறப்புத்துறை சார்ந்த தகவல்களை பரவலாக்கம் செய்வதற்கு கணினிகளை பயன்படுத்துகின்ற தன்னியக்க தகவல் மீள் வழங்கல் முறையாகும். இம்முறையில் ஒரு தகவல் அமைப்பினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவணங்கள், உசாத்துணைக் குறிப்புக்கள், சாராம்சங்கள் அல்லது தரவுகள் போன்றவை.*

தயார் நிலை ஆவணங்கள் (Semi Published Documents): *அச்சுக்கு போகாத ஆனால் அச்சிடு வதற்கு தயார் நிலையில் வைக்கப்படுகின்ற ஆவணங்கள்.*

துணுக்கப் படிகள் (Separates): *ஓர் ஆவணத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது ஒரு கட்டுரையா கவோ உள்ள வெளியீடு பிரதியானது நூலாசிரியரின் சொந்தப் பாவனைக்காக மறு பதிப்பு செய்யப்படுதல்.*

பருவ வெளியீடுகள் (Serials): *சீரான வடிவத்தில், நிலையான தலையங்கத்துடன் கூடியதாக பகுதிகளாகவோ, தொடராகவோ, கால வரையறையின்றி தொடர்ந்து வெளிவருகின்ற வெளியீடுகள்.*

தொடர் வெளியீடுகள்: *கருத்துப் பொருளில் ஒன்றுக்கொன்று தொடர்பான தொகுதிகளை கொண்டதாக பொதுவாக ஒரே வெளியீட்டாளர்களினால் குறிப்பிட்ட விலையில் சீரான வடிவத்தில் ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளியீடு செய்யப்படுகின்ற வெளியீடுகளின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு தலைப்புகளை கொண்டதாக அமைந்த ஒரு பருவ வெளியீடு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொக்குவில்

பருவ கால ஆணைப் பத்திரங்கள்: அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் அச்சிடப்படுகின்ற, அரசாங்கத்தின் அதிகார பூர்வமான அறிக்கைகளின் சுருக்கங்கள் ஒரு புறிப்பிட்ட பருவத்தில் விவாதிக்கப்பட்ட விடயங்களை இது கொண்டிருக்கும்.

தொடர் (Series): கருத்துப் பொருளில் ஒன்றுக்கொன்று தொடர்பான தொகுதிகளை கொண்டதாக பொதுவாக ஒரே வெளியீட்டாளர்களினால் குறிப்பிட்ட விலையில் சீரான வடிவத்தில் ஒழுங்கற்ற கால இடை வெளியில் வெளியீடு செய்யப்படுகின்ற வெளியீடுகளின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு தலைப்புகளை கொண்டதாக அமைந்த ஒரு பருவ வெளியீடு.

ஆய்வு அபிவிருத்தி திட்டமிடற் சேவைகள் (Services for R&D Planning): நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வு அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான தகவல்களை வழங்குதல், சந்தைப்படுத்தல் சேவைகள், தொழில்நுட்ப பொருளாதார மதிப்பீடு, இயக்குனர் சபைக்கு அறிக்கை தயாரித்தல், தகவல் தொழில்நுட்ப இடமாற்றம் போன்றன இச்சேவை களில் அடங்கும்.

பருவ கால ஆணைப் பத்திரம் (Sessional Paper): அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் அச்சிடப் படுகின்ற, அரசாங்கத்தின் அதிகார பூர்வமான அறிக்கைகளின் சுருக்கங்கள் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் விவாதிக்கப்பட்ட விடயங்களை இது கொண்டிருக்கும்.

இறாக்கைப் பட்டிகள் (Shelf List): நூலக இறாக்கைகளில் நூல்கள் எவ்வாறு ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளதோ அந்த வகையில் நூல்களை பதிவு செய்து வைத்திருக்கும் பதிவேடுகள்.

தூண்டல் கணிமம் (Simulation Software): கணினி விளையாட்டு போன்றே தூண்டலும் உண்மையான வாழ்க்கை செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்பை தருவதுடன் புதிதாகப் பெறுகின்ற அறிவை பிரயோகிக்கவோ, முயற்சிக்கவோ, பரிசோதிக்கவோ உதவுகிறது.

காட்சி வில்லைகள் (Slides): காட்சி வில்லைகள் பலவித அளவுகளில் கிடைக்கிறது. மிக அதிக பாவனையில் இருப்பது 2"x2" அளவாகும். 35mm ஒற்றைக் கட்ட படங்கள் 35mm இரட்டைக்கட்ட படங்கள் 127mm படங்கள் அனைத்தும் ஒரே அளவுள்ள படச்சுருளில் எடுக்கப்படுவதனால் மூன்று அளவுகளையும் ஒரே உபகரணத்தின் துணைகொண்டு பார்க்க முடியும்.

சிறப்பு அகராதிகள் (Special Dictionaries): மொழியில் வழங்குகின்ற சொற்களில் ஒரு சொல் லின் குறிப்பிடப்பட்ட சிறப்பு பகுதியினை மட்டும் விளக்குவது.

சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் (Special Encyclopaedias): பொருள் வாரியாக அல்லது பெயர் வாரியாக அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட, சிறப்பு அறிவுத்துறை சார்ந்த முக்கியமான பொதுத் தகவல்களை மட்டும் தருகின்ற விளக்கக் கட்டுரைகளை கொண்டிருக்கும் கலைக் களஞ்சியங்கள்.

சிறப்பு சொல்லடைவுகள் (Special Indexes): பொது வழக்கற்ற சிறப்புப் பொருள் வகைகளுக்கு ஒரு முகப்பட்ட வழிகாட்டுதலை வழங்குகின்ற சொல்லடைவுகள்.

பொருள் ஆக்க விபரங்கள் (Specifications): தனி உரிமையாக கருதப்படுகின்ற துறைகளின் முழு வேலைப் பாடுகளையும் செய்யும் முறை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடு. எ-டு சிற்ப வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிதாள் கணிமம் (Spreadsheet Software): *தரவுகளை கட்டுப்படுத்தல், பகுத்தாய்வு செய்தல், பட்டியலாக்கல் போன்றவற்றிற்கு உதவுகிறது. எ-டு* Excel, Lotus, Lotus Notes

தராதரங்கள் (Standards): *எந்தவொரு நிறுவனமும் அதனது நோக்கங்கள்,கொள்கைகளை பூர்த்தி செய்யும்பொருட்டு மேற்கொள்கின்ற செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கென உருவாக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் அடங்கிய விபர ஏடு.*

விடயப் படிநிலை அறிக்கைகள் (State-Of-The-Art Reports): *குறிப்பிட்ட துறை சார்பாக வெளியாகின்ற அண்மைக்கால தகவல்களை சேகரித்து ஒழுங்குபடுத்தி அத்துறையின் வளர்ச்சி நிலை பற்றிய மதிப்பீட்டை ஆய்வாளர்களுக்கு கொடுக்கும் வெளியீடு.*

துண்டு நுண்படங்கள் (Strip Micro Films): *நுண்பட சுற்றுக்களில் இலகுவாக சுற்றுவதற்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட நீளம் குறைந்த நுண்படங்கள்*

பொருள் நூல் விபரப் பட்டியல்கள் (Subject Bibliographies): *சிறப்புப் பொருள்துறையுடன் தொடர்பு படுகின்ற நூல் விபரப்பட்டியல்கள். ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த ஆவணங்களின் விபரங்களை தொகுத்து இவை வெளியிடப்படும்.*

பொருள் அகராதிகள் (Subject Dictionaries): *ஒரு குறிப்பிட்ட பொருள் சார்ந்த சொற்களின் கருத்தை விளக்குவதுடன் அச் சொற்களுக்கான பொருளையும் சுருக்கமாக தருகின்ற அகராதி வகைகள்.*

பொருள் கலைக்களஞ்சியங்கள் (Subject Encyclopaedias): *குறிப்பிட்ட துறை சார்ந்த சிறப்புத் தகவல்களின் முறைப்படுத்தப்பட்ட சுருக்கம்.*

பொருள் சொல்லடைவுகள் (Subject Indexes): *ஆவணங்களின் பொருளை மட்டும் சொல் லடைவுப் பதிவுகளாக கொண்ட சொல்லடைவுகள்.*

துணைச் சேவைகள் (Supporting Services): *ஒரு தகவல் அமைப்பின் ஆவண அணுகுகைப் பொறிநுட்பமும் இணைப்புப் பொறிநுட்பமும் சிறப்பான முறையில் தொழில்படுவதற்கு உதவுகின்ற சேவை முறைகள்.*

கருத்தரங்குகள் (Symposia): *குறிக்கப்பட்ட கருத்துப் பொருள் தொடர்பாக எழுதப்படுகின்ற சிறப்புக் கட்டுரைகள் வாசிப்பதற்காக ஒழுங்கு செய்யப்படும் மா நாடுகள்.*

முறைப்படுத்தப்பட்ட நூல் விபரப் பட்டியல் (Systematic Bibliographies): *நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, எண்ணிடப்பட்ட பின்னர் நூல் விபர தரவுகள் தருக்க முறை ஒழுங்கிலோ அல்லது ஏனைய பயனுள்ள ஒழுங்கமைப்பிலோ ஒழுங்குபடுத்தப்படும் நூல் விபரப் பட்டியல்கள்.*

முறைப்படுத்தப்பட்ட சொற்கருவூலங்கள் (Systematic Thesauri): *சொற்கருவூலங்களின் பிரதான பகுதி முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் செய்யப்பட்டுள்ள சொற்கருவூலங்கள்.*

முறைமை மென் பொருள் (Systems Software): *கணினியின் வன்பொருள்களைக் கட்டுப் படுத்துவதற்கென உருவாக்கப்பட்டவையாக இருப்பதுடன் வன்பொருள் பகுதிகளுக்கும் பிரயோக மென் பொருள்களுக்குமிடையே இணைப்பூடகமாகச் செயல்படுவது. முறைமை கணிமம்களில் ஐந்து வகையுண்டு. செயற்படு பொறியமைவு கணிமம், இணைப்பி, மொழி மாற்றி, தொகுப்பி, புறநிலைச் சாதன கணிமம், தவறு போக்கும் கணிமம், தொகுக்கும் கணிமம் போன்றவை முறைமை கணிமம்களுக்குள் உள்ளடங்கும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணைகள் (Tables): நிரல் ஒழுங்கில் தொடர் வரிசைப்படுத்தப்பட்ட தரவுகளின் (எழுதப்பட்ட சொற்கள், குறியீடுகள், எண்கள் அல்லது இவற்றின் சேர்க்கை) உருவ அமைப்பு.

பட்டயத்தகடுகள் (Tablets): களிமண், கல், மரம், ஈயம் போன்ற பொருட்களினால் செய்யப் பட்டு மெழுகினால் மூடப்பட்ட புராதன எழுதுவதற்கு பயன்படும் சாதனங்கள்.

பேசும் நூல்கள் (Talking Books): கட்புலனற்றோர் படிப்பதற்கென நாடாக்களில் பதிவு செய்யப்படுகின்ற ஒலி நூல்கள்.

வகுப்பு தொகுப்பு முறைச் சொல்லடைவுகள் (Taxconomic Indexes) பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கும் உயிரியலாளர்களுக்கும் வழிகாட்டுவதற்காக வடிவமைக் கப்பட்ட சொல்லடைவுகள்.

ஆசிரிய வழிகாட்டி நூல்கள் (Teacher's Guide Books): கற்பித்தல் முறைகள் தொடர்பான ஆசிரியர்களுக்கு விளக்கம் கொடுக்கின்ற வழிகாட்டி நூல்கள்.

தொழிநுட்ப அறிக்கைகள் (Technical Reports): அறிவியல் சார்ந்த ஆய்வு அபிவிருத்தி சம்பந்தமாக அண்மைக்கால நிலைமைகளை மேற்கொள்கின்ற அறிவியல் கட்டுரைகள் மொழி பெயர்ப்புகள் போன்றன.

தொலைத்தொடர்பு கணிமம் (Telecommunication Software): தொலைபேசி ஊடாக தொலைதூரத்தில் உள்ள கணினிகளுடன் தொடர்பு கொள்வதன் பொருட்டு மொடம் ஒன்றை பயன்படுத்துவதற்கு இந்த வகை கணிமம் பாவனையாளருக்கு அவசியமாக கருதப்படுகிறது. எ-டு Outlook Express, Microsoft outlook, Internet browser..

மூன்றாம்நிலைத் தகவல் வளங்கள் (Tertiary Information Resources): இரண்டாம் நிலை ஆவணங்களின் விவரங்களைத் தொகுத்து வெளியிடப்படும் வெளியீடுகள். எ-டு குறிப்பிட்ட துறை சார்ந்த ஆவணங்களின் விவரங்களைத் தொகுத்து வெளியாகும் நூல் விவரப்பட்டியல்களின் விபரங்களைத் தொகுத்து வெளிவரும் நூல் விவரப்பட்டியல்.

பாட நூல்கள் (Text Books): பரீட்சை நோக்கை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் பாடவிதானத்துக்கமைய எழுதப்பட்டு வெளியிடப்படும் நூல்கள்.

இசைப்பொருள் நூல் விவரப்பட்டியல்கள் (Textual Bibliographies): இசைத்துறைசார்ந்த சிறப்பு சொல்லடைவுகளான இசை, இசைத்துறை சார்ந்த ஆய்வாளருக்கு பண்ணின் பொருள், இசை ஒத்திசைவு, பண்ணிசைப்பு, சுர ஒழுங்கிசை போன்றவற்றை ஞாபகப்படுத்தக்கூடிய ஆனால் அவற்றிற்கு பெயர் கூறமுடியாத வழிகாட்டிகள் ஆகும்.

சொற்கருவூலங்கள் (Thesauri): உலக அறிவின் சிறப்புப் பகுதிகளை மட்டும் உள்ளடக்குகின்ற சொற்பொருள் ஆய்வியல் சார்ந்ததும் தனித்துவ பொருள் சார்ந்ததுமான சொற்களை கொண்டமைந்த கட்டுப்படுத்தப்பட்ட, இயக்கவிசையுள்ள ஆவணப்பதிவு மொழி.

ஆய்வேடு - விளக்க ஆய்வுக் கட்டுரை (Thesis/Dissertation): மேற்பார்வையாளர் ஒருவரின் வழிகாட்டுதலின் கீழ் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்வதற்காக எழுதப்படுகின்ற ஆய்வு நூல்கள். வழிகாட்டுபவரின் மேற்பார்வையின்கீழ் முதுநிலைப் பட்டத்துக்காக அல்லது கலாநிதிப் பட்டத்துக்காக பல்கலைக்கழகத்தை அல்லது கல்வி சார்ந்த நிறுவனமொன்றைச் சேர்ந்த மாணவர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் ஆய்வின் முடிவில் எழுதப்படும் அறிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்புச் சொல்லடைவுகள் (Title Indexes): *ஆவணங்களின் தலையங்கங்களை மட்டும் சொல்லடைவுப் பதிவுகளாக கொண்டு தயாரிக்கப்படும் சொல்லடைவுகள்.*

அடையாளச்சீட்டு வழங்கல் முறை (Token Charging System): *இம் முறையானது 1954ம் ஆண்டு மே மாதம் Westminister பொது நூலகத்தினால் பாவனைக்கு கொண்டு வரப்பட்டது. செயல் முறையில் இது மிகவும் எளிமையான முறை.*

வர்த்தக வியாபார வழிகாட்டிகள் (Trade Bibliographies): *வர்த்தக வியாபார நிறுவனங்களின் விபரங்களையும் நிறுவனங்களின் பணி புரியும் அலுவலர்களின் பெயர், முகவரி, ஏனைய விபரங்களை கொண்ட முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்ட வழிகாட்டிகள்.*

வர்த்தக இலக்கியங்கள் (Trade Literature): *குறிப்பிட்ட உற்பத்தி பொருட்களதும், அவற்றின் அபிவிருத்தி பற்றியும் தகவல்களைக் கொடுக்கின்ற வெளியீடுகள் உற்பத்தியாளருக்குரிய சேவைகள், செய்முறைகள், உற்பத்தி உபகரணங்களின் விளக்கப்படங்கள் போன்றவையும் இவ் இலக்கியங்களில் உள்ளடக்கப்படுகின்றன.*

மொழி பெயர்ப்புகள் (Translations): *ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட ஆக்கங்கள்.*

மொழி பெயர்ப்புகளிற்கான சாராம்சச் சேவை (Translation Abstracting Service): *நூலகங்களில் உபயோகமாக உற்ற மொழி பெயர்ப்பு ஆக்கங்களிற்கான சாராம்சங்களை தயாரித்து அதனை தொகுத்து வழங்குதல்.*

மொழி பெயர்ப்பு சேவை (Translation Service): *கோரிக்கைகளின் அடிப்படையில் வாசகருக்கு தேவையான கட்டுரைகளையோ கட்டுரையின் ஒரு பகுதியையோ மொழி பெயர்ப்பு செய்து வழங்குதல்.*

ஒளி புகுவடிவங்கள் (Transparencies): *ஒளியுருப்படிவக் கருவியின் துணையுடன் ஒளி மூலம் படித்தறியக் கூடிய கறுப்பு வெள்ளை அல்லது நிற வடிவிலான விம்பங்கள் உள்ள படங்கள்.*

ஒளிபுகு நுண்வடிவங்கள் (Trasparent Micro Forms): *இவற்றின் ஊடாக செல்லும் ஒளியின் உதவியுடன் வாசிக்க முடியும்.*

பொழிப்புகள் (Treaties): *ஒரு குறிப்பிட்ட பொருட்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளை முறையாகவும் விளக்கமாகவும் தருவதே பொழிப்புகள் ஆகும்.*

போக்கு அறிக்கைகள் (Trend Reports): *குறிப்பிட்ட துறை சார்பாக ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளிவந்த ஆய்வு இலக்கியங்களின் விபரங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தித் தொகுத்து வழங்குவதன் மூலம் அத்துறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளரின் ஆரம்பத் தேவையை பூர்த்தி செய்யும் வெளியீடுகள். இவ் அறிக்கைகள் வெறுமனே நூல்களில் உள்ள தகவல்களைத் தொகுத்து வழங்குவதுடன் நின்றுவிடாது குறிப்பிட்ட காலத்தில் அத்துறையின் வளர்ச்சி பற்றிய நூலாசிரியரின் கருத்துக்களையும் உள்ளடக்கும்.*

கற்பித்தல் கணிமம் (Tutorial Software): *இவை பாவனையாளர் ஒருவருக்கு புதிய திறன் ஒன்றை கற்பிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியரின் உதவியின்றி அறிவைப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் முயற்சியில் தனித்தியங்கும் கற்கையாளரை இவை உருவாக்குகிறது. எ-டு: Typing Editor

கூட்டிணைப்புப் பட்டியல்கள் (Union Catalogues): பல நூலகங்களுக்குப் பொதுவானதாகவும், அந்த நூலகங்களிலுள்ள எல்லா ஆவணங்களுக்குமுரிய பட்டியல் பதிவுகளை பட்டியல் பதிவுகளில் அந்தந்த ஆவணம் கிடைக்கக்கூடிய நூலகத்தின் விபரங்களையும் உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்படும் முறைப்படுத்தப்பட்ட அல்லது சீரான ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் பட்டியல்கள்.

அனைத்துலக நூல் விவரப்பட்டியல் (Universal Bibliographies): சர்வதேச ரீதியில் வெளியிடப்படுகின்ற அனைத்து நூல்களுக்குமான நூல் விவரப்பட்டியல். சர்வதேச ஆவணப் பதிவாக்க சம்மேளத்தினால் இவ்வாறான நூல் விவரப்பட்டியலை தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதெனினும் இதுவரை இம் முயற்சி கைகூடவில்லை.

வெளியிடப்படாத ஆவணங்கள் (Unpublished Documents): ஆய்வுகூடக் குறிப்பேடுகள், நாட்குறிப்பேடுகள், தனிப்பட்டவர்களுக்கு எழுதப்படும் முக்கிய கடிதங்கள், நிறுவனங்களின் கோப்புகள், உள்ளக ஆய்வு அறிக்கைகள், உருவப்படங்கள் வாய்மொழி வரலாறுகள், நாணயங்கள் போன்ற வெளியிடப்படாத தகவல் வளங்களும் முதல்நிலைத் தகவல் வளங்களாகக் கருதப்படுகின்றன.

வெல்லம் (Vellum): புராதன காலத்தில் எழுது பொருளாகப் பயன்படுத்தப்பட்ட கன்றுத் தோல். ஆறு வாரங்களுக்கு மேற்படாத கன்றின் தோலை எடுத்துச் சுத்தப்படுத்தி, பாதுகாத்து, பளபளப்பாக்கி இளங்கன்றுத் தோல் பயன்படுத்தப்படுகிறது.

ஒளிப்பதிவு நாடாக்கள் (Video Cassettes): ஒளிப்பதிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படும் ஒளிப்பதிவு நாடாக்கள்.

ஒளித்தட்டுகள் (Video Discs): பிரதிபலிக்கக்கூடிய உலோகப் பூச்சினாலான ஒலி அசைவு களையும் ஒளித் தகவல்களையும் சேமிக்கக் கூடிய தன்மைவாய்ந்த பிளாஸ்ரிக்கால் ஆன தட்டுகள்.

ஒளிநாடாப் பதிவுகள் (Video Recordings): காந்த நாடாக்களில் உள்ள ஒளி, ஒலிசார்ந்த இலத்திரனியல் பதிவு முறைகள்.

கட்புல சொல்லடைவுகள் (Visible Indexes): கட்புல சொல்லடைவுப் பேழைகளில் வைத்துப் பராமரிக்கப்படுகின்ற பருவ இதழ்கள், பொருட்பட்டி போன்றவற்றுக்கான பதிவுகள்.

இணையத் தளம் (Web Site): உலகிலுள்ள அனைத்துத் தகவல்களையும் இணையத்துடன் இணைக்கும் சாதனம். இணையத்தின் நூலகம் எனப்படக்கூடியளவுக்கு பலதரப்பட்ட தகவல்களையும் சேமித்து வைத்திருப்பது இணையத் தளம் எனப்படுகின்றது.

வார வெளியீடுகள் (Weekly Publications): வாரத்திற்கு ஒரு முறை வெளிவருகின்ற செய்தித் தாள்கள், பருவ இதழ்கள் உட்பட அனைத்து பருவ வெளியீடுகளும் இதில் உள்ள டங்கும்.

சொல் செயலாக்கும் கணிமம் (Word Processing Software): மிகவும் பிரபல்யமான பாவனையாளருக்கு முதன்முதலில் அவசியமாக கருதப்படும் கணிமம். ஆவணங்களை புதுப்பித்தல், திருத்தல், மாற்றியமைத்தல், வடிவமைத்தல் போன்ற பணிகளை இலகுவாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. தற்காலத்தில் பாவனையிலுள்ள இத்தகைய கணிமம்கள் எழுத்து பிழை திருத்தங்கள், சொற் கருவூலங்கள், கலைச்சொல் அகராதிகள் போன்றவையும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

ஆண்டு நூல்கள் (Year Books): ஒரு குறிப்பிட்ட நடப்பு வருடத்தில் நடைபெறும் சம்பவங் களையும் முன்னேற்றங்களையும் பற்றிய மிக அண்மைக்காலத் தகவல்களைச் சுருக்க விவரணமாகவோ அல்லது புள்ளி விபர வடிவிலோ ஒழுங்குபடுத்தி ஆண்டு தோறும் வெளியீடு செய்யப்படுகின்ற உசாத்துணை நூல்கள்.

மஞ்சள் புத்தகம் (Yellow Book): பிரெஞ்சு அரசாங்கத்தால் வெளியிடப்படும் அரசாங்க அறிக்கை. மஞ்சள் வர்ண தாளில் வெளியிடப்படுவதனால் இப்பெயர் இதற்கு வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு நூல் விபரப்பட்டியல்

(Bibliography)

Aslib Book List (1935). London:Aslib, Monthly.

Atherton, Pauline (1977). *Hand Book of Information Systems and Services.* Paris:Unesco.

Bates, Marcia J. (1989). 'Bibliography'. In: *Encyclopaedia Britannica* . 15th ed. Vol. 3. Chicago: Encyclopaedia Brittanica.

Bhattacharya, G. (1978). *Information Science: A Unified View Through a Systems Approach.* Calcutta :IASLIC.

Bliss, Henry Evlin (1977). *Bibliographic Classification.* New York: H.W Wilson.

BIOSIS Biosciences Information Services.

Book Review Digest. (1908). New York: H.W.Wilson, 1908- Monthly.

Books in Print (1948). New York: Bowker, 1948-, Annual.

Bookwise CD ROM. London:Book Data Ltd.

Braman, S. (1989). *Defining Information: An Approach for Policy Makers. Telecommunication Policy. 13(3)*, pp. 233-242.

Brillouin, L. (1956). *Science and Information Theory,* New York: Academic Press, pp xi.

Britain 2001 (1940). 52nd Edition. The Official Yearbook of the United Kingdom. London:The Stationary Office,1940-. ISBN: 0 11 621279 9

Britain, J.M. (1970). *Information and Its Users.* Bath: Bath University.

Britanncia Book of the Year. (1938). Chicago: Encyclopaedia Britannica,1938-, Annual.

British Book News (2006). London: British Council,1940- Monthly.

British Books in Print (1982). The Reference Catalogue of Current Literature-1982, 2 Vols.Edited by J;Whitaker.- London:Whitaker, Irregular.

British Education Index (2001). Ed. by Phil Sheffield.- Leeds: Leeds University Press, 2001.

British National Bibliography (2005). London: Council of the British National Bibliography.

British Standard Institution Year book. London. Annual

Buckland, M.K. (1991). 'Information as Thing'. *Journal of the American Society for Information Science. 42(5)*, pp. 351-60.

CAB Thesaurus. (2005). Wallingford, CABI Publising,

Cabeceiras, James (1991). *The Multimedia Library: Materials Selection and Use.* 3rd ed. London: Academic Press. p. 22-23.

Ceylon Blue Book (1821-1938). Annual

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chamber's Biographical Dictionary (1988). Rev. ed. by Jo. Throne and T.C. Colocoh. Edinburg: Chambers.

Chambers World Gazetteer (1988). Cambridge: Chambers.

Chemical Abstracts. (1907). Easton: American Chemical Society,Vol 1-, Weekly.

Commonwealth University Year Book. (2006). London: Association of Commonwealth Universities, 1914- Annual.

COPE: Laboratory Equipment, Scientific Glassware & Instrument. London: COPE

Cumulative Book Index (1898) : A World List of Books in the English Language. New York : H.W.Wilson, 1898- Monthly.

Current Contents. Philadelphia: Institute for Scientific Information.

Devarajan,G. (1995). *Library Information Users and User Studies.* New Delhi: Beacon Books, 1995.

Devinsa Abstract [Development Information Network for South Asia] Colombo: Committee on Studies for Cooperation in Development in South Asia Coordinating Center, Marga,1987- Bi Annual.

Dewey, Melvil (2003). *Dewey Decimal Classification and Relative Index.* New York: OCLC.

Dissertation Abstract International – 2001(1941). Michigan: University Microfilm International, 1941-Monthly.

Encyclopaedia Americana (1976). 30 Vols. New York: Grolier.

Encyclopaedia of Associations (1956). Detroit:Gale Research Center Annual.

Encyclopaedia of Information and Library Science (1993).10 Vols.Ed. by Isvari Korea, Gad David Ojuando and Khalid Kamal Faruqi (1993). New Delhi: Akashdeep Publishing House,1993. ISBN: 7158-285-0 (set).

Encyclopaedia of Library and Information Science (1968). New York : Marcel Dekker, 1968- Vol.1

Encyclopeadia Britanica (1989). 'Macropedia Vol 26'. Chicago:Encyclopeadia Britanica, p. 478.

Encyclopeadia of Information and Library Science (1993). Vol. 5. New Delhi: Akashdeep Publishing, pp.1529.

Ennis, P.H. (1964). *The Study of Use and Users of Recorded Knowledge.* Library Quarterly, 34, Oct. pp. 305-14.

Europa World of Learning (2006). Oxon: Routledge. Annual.

Europa World Year Book (2006). Oxon: Routledge. Annual.

Famous First Facts (1998). 5rd Edition. by Joseph Nathan Kane. New York: Wilson.

Ferguson's Sri Lanka Directory (1859). Colombo: The Associated News Papers of Ceylon, 1859.

Futas, Elizabeth, Ed. (1984). *Library Acquisition Policies and Procedures.* 2nd Ed. Phonenix : Oryx Press.

Garvin, David (1971). *Information Analysis Center and Library.* Special Libraries 62. pp.17-23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

George, Anderia (1975). *Information in 1985: A Forecasting Study of Information Needs and Resources.* Paris:OCD.

Gidwani, N.N. (1968). Periodical Literature. *Encyclopaedia of Library and Information Science.* Vol. 11. New York; Dekker.

Gonetileke, H.A.I. (1973). *A Bibliography of Ceylon: A Systematic Guide to the Literature on the Land,* People, 5 Vols.

Guha, B. (1978). *Documentation and Information.* Calcutta: World Press.

Guinness World Record (2003). Gullane- 2003. ISBN 085112-1470.

Gunasekara, P.C.D.S. (2003). 'Existing Collection Development Practices in University Libraries in Sri Lanka'. *Journal of the University Librarian's Association of Sri Lanka.* Vol. 7, Dec.

Hand Book of Chemistry (1967). Compiled and Edited by N.A. Lange, Revised 10th Edition, New York: McGraw-Hill.

Harrison, K.C. (1960). *First Steps in Librarianship.* London: Crafton.

Harrod, L.M. (1987). *Harrod's Librarians' Glossary of Terms Used in Librarianship Documentation and the Book Craft and Reference Book.* Compiled by Ray Prytherch, 6th ed.. London: Gower, pp.253.

Hayes, R.M. (1993). 'Measurement of Information'. *Information Processing and Management. 29(1),* pp.1-11.

Hayes, R.M. (1969). 'Information Science in Librarianship'. *Libri.19(3).* pp. 216-236.

Hernon, Peter and Purcell, Garyr (1982). *Developing Library Collections of US Government Publications.* London: JAI Press.

http:// www.ebookcult.com. . Accessed on 10-04-2009.

http:// www.lu.com. Accessed on 10-04-2009.

http://www.abebooks.com. Accessed on 10-04-2009.

http://www.abstacts.com. Accessed on 12-10-2008.

http://www.amazon.com Accessed on 12-10-2008.

http://www.atlapedia.com. Accessed on 10-04-2009.

http://www.cabi.org/cabthesaurus. Accessed on 10-04-2009.

http://www.a-z-dictionaries.com. Accessed on 10-04-2009.

http://www.bl.uk. Accessed on 12-10-2007.

http://www.booksinprint.com. Accessed on 10-04-2009.

http://www.brainyquote.com. Accessed on 12-10-2008.

http://www.britannica.com. Accessed on 10-04-2009.

http://www.browserwatch.world.com. Accessed on 10-04-2009.

http://www.concordance.com. Accessed on 12-10-2008.

http://www.csa.com/factsheet/LISA. Accessed on 12-10-2008.

http://www.doaj.org. Accessed on 12-10-2007.

http://www.dundee.ac.uk. Accessed on 12-10-2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.earthcalendar.net. Accessed on 10-04-2009.

http://www.engnetbase.com. Accessed on 10-04-2009.

http://www.escholarlypub.com. Accessed on 10-04-2009.

http://www.europaworld.com. Accessed on 10-04-2009.

http://www.geographynetwork.com. Accessed on 10-04-2009.

http://www.geohive.com. Accessed on 10-04-2009.

http://www.glossarist.com. Accessed on 10-10-2007.

http://www.guinnessworldrecords.com. Accessed on 10-10-2007.

http://www.handbooks.uwa.edu.au. Accessed on 10-10-2007.

http://www.hwwilson.com. Accessed on 10-10-2007.

http://www.infolistings.com. Accessed on 10-10-2007.

http://www.infoplease.com. Accessed on 10-10-2007.

http://www.infowebworld.com. Accessed on 10-10-2007.

http://www.internetworldstats.com. Accessed on 10-10-2007.

http://www.journalseek.net. Accessed on 12-10-2008.

http://www.keesings.com. Accessed on Accessed on 12-10-2008.

http://www.libdex.com. Accessed on 12-10-2007.

http://www.lu.com/odlis. Accessed on 12-10-2008.

http://www.matisse.net/files/glossary. Accessed on 10-10-2007.

http://www.m-w.com. Accessed on 10-10-2007.

http://www.nationalarchives.uk. Accessed on Accessed on 12-10-2008

http://www.natlib.lk. Accessed on 12-10-2007.

http://www.nobelprize.org. Accessed on 10-10-2007.

http://www.oldyearbooks.com. Accessed on 10-10-2007.

http://www.onelook.com. Accessed on 10-10-2007.

http://www.pio.chadwyck.co.uk. Accessed on 12-10-2008.

http://www.publist.com. Accessed on 12-10-2008.

http://www.scopus.com. Accessed on 12-10-2008.

http://www.searchsystems.net. Accessed on 10-10-2007.

http://www.statesmans yearbook.com. Accessed on 10-10-2007.

http://www.studylight.org. Accessed on 12-10-2008.

http://www.routledgereference.com. Accessed on 12-10-2009.

http://www.ulrichsweb.com. Accessed on 12-10-2007.

http://www.unep.org/geo/yearbook. Accessed on 10-10-2007.

http://www.webjunction.org. Accessed on 12-10-2007.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://www.wikimapia.com. Accessed on 10-10-2007.

http://www.wikipedia.org. Accessed on 10-10-2007.

http://www.worldoflearning.com.

http://www.worldwhoswho.com.

Huff, William. A. (1961). *Indexing, Abstracting and Translation Services.* Library Trends. X.

Human Development Report (1990). New York: UNDP, Humanities Full Text www.hwwilson.com. Accessed on 12-10-2007.

Humanities Index. New York: Wilson,1974- Vol.1. Quarterly.

Hutchins, Margaret (1944). *Introduction to Reference Work.* Chicago: American Library Association.

Indian Books in Print (1967). New Delhi: Indian Bibliographies Bureau.

Indian National Bibliography (1957). Calcutta: Central Reference Library of Indian National Library.

Indiana: A Bibliography of Bibliographical Sources (1989). by M.K.Jain. New Delhi: Concept Publishing Company, ISBN: 81-7022-230-3.

International Encyclopaedia of Social Science (1967). 16 Volumes & Index / Edited by L. Sills.- New York: Collier & Macmillan.

International Encyclopeadia of Information and Library Science (2003). Ed. by John Feather and Paul Sturges. Oxon:Routledge.

International Who's Who (2006). Oxon: Routledge.

International Federation of Library Associations and Institutions. 1995-2000. Reading.

www.ifla.org. (Accessed on 01-07-2006).

Katz, William. A. (1978). *Introduction to Reference Work.* 3rd ed. New York: McGraw Hill.

Keesing's Records of World Events. London: Keesings,1931- Monthly.

Kelly's Post Office London Directory. London: Kelly's, 1800-.

Kevin Eikenberry, Kevin (2002). *Kevin Publishes Unleash Your Potential,* A Free Weekly Ezine Designed to Provide Ideas, Tools, Techniques and Inspiration to Enhance your Professional Skills.

KOMPASS: 2 Vols; London: Croydon, Annual.

Krishankumar (1984). *Reference Service.* New Delhi: Vikas. p. 98.

Lancaster, F.W. (1978). *Toward Paperless Information Systems.* New York: Academic Press.

Lancaster, F.W. (1979). *Evaluation of Information Retrieval Systems: Characteristics Testing and Evaluation.* New York: John Wiley.

Lazar, Peter (1992). *Information System Design and Management.* Bangalore: Sarada Ranganathan Endowment for Library Science.

Library and Information Science Abstract. London: Library Association,1950-. Bimonthly.

Library Literature & Information Science Full Text. www.hwwilson.com.

Library Literature: An Index to Library and Information Science. New York: Wilson,1934-. Bi-Monthly.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Library of Congress Classification.

Library of Congress Subject Headings. Washington: Library of Congress, 1909-1914.

Licklider, J.C.R. (1965). *Libraries of the Future.* Mass, MIT, Cambridge.

Line, M.B. and Sandison (1974). 'Obsolescence and Changes in the Use of Literature in Time'. *Journal of Documentation.* Vol. 30 (3), pp. 282-350.

Malalasekera, G.P. (2000). *Malalasekera English-Sinhala Dictionary.* Rev. Edition. Colombo: M.D. Gunasena.

Mayes, P. ed. (1978). *Periodical Administration in Libraries.* London: Clive Bingley.

McCredie, Maureen and Rice, Ronald, E. (1999). 'Trends in Analysing Access to Information Cross Disciplinary Conceptualizations of Access'. *Information Processing and Management. 35(1).* pp. 45-76.

McGarry, Kevin, J. (1971). *The Changing Context of Information: An Introductory Analysis.* London: Clive Bingley.

McGarry, Kevin, J. (1974). *Communication, Knowledge and Librarian.* London, Butterworths.

McGraw-Hill Encyclopaedia of Science and Technology. NewYork: McGraw Hill,1960-.

Meadows, A.J. Gordon, M & Singleton, A. (1982). *Dictionary of New Information Technology.* London: Kogan Page.

MEDLARS Medical Literature Analysis and Retrieval System.

Mittal, R.L. (1983). *Library Administration: Theory and Practice,* 5th ed.-New Delhi: Metropolitan Book, 1983.

Moyle, D. (1976). *The Teaching of Reading.* 4th ed. London: Ward Lock Educational.

New Encyclopaedia Britannica (1974), 15th ed. Chicago: Encyclopaedia Britannica, 30 Vols.

Nisonger, Thomas (2000). 'Collection Development in an Electronic Environment'. *Library Trends. Vol.48(4),* Spring.

NISSAT (1982). *National Information Systems for Science and Technology : A Profile.* New Delhi: DST.

Oxford Advanced Learners's Dictionary of Current English (1989). London: Oxford University Press, p. 611.

Oxford Dictionary of Quotations (1999). London: Oxford. p. 44-45.

Oxford English Dictionary (1989). Second Edition. Edited by J. A. Simpson and E. S. C. Weiner. Oxford: Clarendon Press.

Oxford English Dictionary. 1st Edition / ed. by A.H. Murray.- Oxford: Oxford University Press,1933- 12 Vols.

Parker, C.C. and Turley, R.V. (1975). *Information Sources in Science and Technology,* Butterworths, London, p.112.

Peggy Johnson (1989). 'Collection Development Officer: A Reality Check - A Personal View'. *Library Resources and Technical Services, Vol. 33(2).* April, p.153-60.

Price, Derek De Solla (1986). *Little Science, Big Science and Beyond.* New York: Colombia University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rajagopalan, T.S and Rajan,T.N. (1986). *Agenda for National Information Policy. Handbook of Libraries, Archives & Information Centres in India.* Vol. 3- *Information Policies, Systems and Networks* (1986), Information Technology Publications, New Delhi, p. 24.

Random House Webster's College Dictionary (1995). New York: Random House,1995.

Ranganathan, S. R. (1961). *Reference Service*, 2nd ed. Bombay: Asia Publishing House,1961.

Ranganathan, S.R. (1967). *Colon Classification.* 7th Edition. Bangalore: Sarada Ranganathan Endowment for Library Science.

Ranganathan, S.R. (1933). *Colon Classification Scheme.* 1st ed. Bangalore: Sarada Ranganathan Endowment for Library Science.

Readers Guide Full Text. Mega editionwww.hwwilson.com.

Readers Guide to Periodical Literature. New York: Wilson,1900-.

Reitz, Joan. M. (2006). *Online Dictionary for Library and Information Science.* reitzj@wcsu. edu. Accessed on 10-06-2007).

Research Centers Directory. 2 Vols.

Richard, Fothergill and Butchart, Ian. (1978). *Non Book Materials in Libraries: A Practical Guide.* London Clive Bingley.

Rowley, J.E. and Turner, C.M.D. (1978). *The Dissemination of Information.* London: Andre Deutsch.

Samassekou, Adama (2004).'World Summit on the Information Society: The First Step Towards a Genuine Shared Knowledge Society'. *IFLA Journal.* Vol. 30, No.1.

Saracevic,T. (1970). *Introduction to Information Science.* New York: Bowker.

Saur,K.G. (1997). *The Public Library Services: IFLA/UNESCO Guidelines for Development.* IFLA Publications.

Science Citation Index. Philadelphia: Institute of Scientific Information, 1963- Quarterly.

Sears List of Subject Headings. New York: Wilson,1923-.

Seetharama, S. (1980). *Data Centers in India: An Overview.* DRTC Refresher Seminar. 12.

Seetharama, S. (1990). *Guidelines for Planning Libraries and Information Centers.* Calcutta: IASLIC.

Senge (1990). Cited by Sumana Jeyasuriya, Geeta Yapa and Rosemary Redden. *Library Instructional Program: Manual for Teacher Librarians.* Colombo: National Institute of Library and Information Sciences, University of Colombo, 2002. p. 43.

Shera, Jesse, H. (1976). *Introduction to Librarary Science: Basic Elements of Library Science.* Littletone: Libraries Unlimited. p. 14.

Shores, Louis. (1954). Basic Reference Sources. Chicago: American Library Association.

Social Science Index. New York: H.W. Wilson Company, 1974- Vol.1, Quarterly.

Social Sciences Full Text. [www.hwwilson.com] . Accessed on 12-10-2007.

Sri Lanka Conference Index (1988). கொழும்பு: தேசிய நூலகசேவைகள் சபை.

Sri Lanka National Atlas (1988). Colombo: Survey Department.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka National Bibliography (1962). Colombo: Sri Lanka National Library Services Board, Bibliographic Services.

Sri Lanka Periodical Article Index. Colombo: National Library and Documentation Centre, Vol. 1, no.1, 1998- Quarterly - ISSN 1391-3387.

Sri Lanka Science Index (1986). Compiled by Mrs.W.G.S Wimalasena. Colombo: Sri Lanka Scientific and Technical Information Centre (SLSTIC), Natural Resources Energy and Science Authority of Sri Lanka (NARESA), Vol.1, No.1 1977- Quaterly.

Sri Lanka Standard Yearbook (1986). Colombo: Sri Lanka Standard Institution, 1986.

Lawson, Harry, W. (1985). *Standards for Fats and Oil.* Vol. 5. Westport: AVI Publishing Company.

Standards for Public Libraries (1973). Pullach/Munchen: Verlag Dokumentation, IFLA.

Statesmen Yearbook (1864). London: Macmillan. Annual.

Stokes, Roy. B. (1968). 'Bibliography'. *Encyclopaedia of Library and Information Science.* New York; Dekker.

Stueart, Robert. D. (1981). *Library Management.* Colorado: Libraries Unlimited.

Teskey, F.N. (1989). 'User Models and World Models for Data, Information and Knowledge'. *Information Processing and Management, 25(1),* 7-14.

The New Palgrave Dictionary of Economics (1987). 4 Vols. Ed. by Jogn Eatwell, Murray Migate and Peter Newman. London: Macmillan. ISBN:0-935859-10-1.

The Cambridge Fact Finder. Ed. by David Crystal. New Delhi : Foundation Books.

The Europa International Foundation Directory. London: Europa,1992-.

The Grant Register. London: Macmillan, 1989-91. Every Two Years.

The Library of Congress Accession List: South Asia -1996. New Delhi: Library of Congress Office, 1981- Vol.1- Monthly.

The Oxford Dictionary of Quotations. 5th ed. by Elizabeth Knowles.- Oxford: University Press, 1999.

Thompson, Elizabeth. H. (1943). *ALA Glossary of Library Terms with a Selection of Terms in Related Fields.* Chicago: American Library Association.

Time Literary Supplement. London: The Times Daily Newspaper,1902- Weekly.

ULRICH'S International Periodical Directory. New York: Bowker, 1932- Annual.

UNESCO (1972). 'Birch Bark Book of Ancient Novgorod'. *Unesco Courier.* July,1972. pp. 11.

Unesco IBE Education Thesaurus.

UNESCO Statistical Yearbook. Paris: Unesco:1991.

UNESCO (1979). *Inter-Governmental Conference on Scientific and Technological Information for Development,* Paris. UNISIST-II,May28-June,1979. Main Working Document.

Union List of Current Periodicals in Universities, Postgraduate Institutes and Graduate Institutes of Sri Lanka-2002. University of Peredeniya Library Publication-8.

Union List of Periodical Holdings of Health Science Libraries in Sri Lanka. 2nd ed. ed. by W. R.G. De Silva and A.N.J de Cruse. Colombo: Helth Literature Libraries and Information Services (Hellis). ISBN 955-9021-12-5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United States, Department of Commerce. (1973). *Memorandam of Information Industry.*

Universal Decimal Classification.

Wanasundara, Leelangi (1990). *Bibliography of Bibliographies: A Guide to Catalogue, Indexes, Bibliographies and Biobibliographies in Sri Lanka.* Compiled by Colombo: National Library, 1990. ISBN 955-9011-55-3].

Webser's Third New International Dictionary of the English Language (1971). Unabridged. Merriam: Springfield.

WEBSTER'S Third New International Dictionary of the English Language (1909). 1st Edition.- Springfield:Mass Marriam.

Weisman, H.M. (1972). *Information Systems Services and Centers.* New York: Beker and Hayes.

Whitaker's Almanac (2004). London: The Stationary Office, Annual.

Who Said What When (1988): The Chronological Dictionary of Quotations. London: Bloomsburry Publishing. p.77.

World Almanac and Book of Facts. New York: Newspaper Enterprise Association, 1868- Annual.

அபிதான சிந்தாமணி *(1981).* இரண்டாவது மீளாய்வுப் பதிப்பு.- புதுடெல்கி: ஆசிய கல்விச் சேவைகள்.

அபிதான கோசம்*(1902). யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம்.*

அறிவியல் கலைச்சொல்லகராதி *(1997-). தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.*

ஆங்கில தமிழ்ச் சொற்களஞ்சியம் *(1965).* English – Tamil Dictionary.- 1st ed.by Dr.A. Chidamparanatha Chettiar. Madras: University of Madras. 1965.

இலங்கை ஆண்டு நூல் *(1948-).* கொழும்பு: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வருடாந்த வெளியீடு.

இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் புள்ளிவிபரக் கையடக்க நூல் *(1967-).* Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka. கொழும்பு: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்க அமைச்சு, ISBN: 955-577-032-8.

கந்தையாபிள்ளை, ந.சி. *(1948).* நூலகங்கள். சென்னை: ஆசிரியர் நூற்பதிப்பு கழகம்.

கழகத் தமிழ் அகராதி *(1964-).* திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.

காசிநாதன், நடன *(1989).* கல்லெழுத்துக் கலை. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

காங்கிரஸ் நூலக பகுப்பாக்கம்.

கிருஷ்ணகுமார், இ. *(1995).* களிமண் பதிவுகள் முதல் கணினிப் பதிவுகள் வரை: நூலக தகவற் சேமிப்பு ஊடகங்களின் வளர்ச்சிப்போக்கு. *யாழ்ப்பாணம்: அகிலம். பக். 6-7.*

சண்முகலிங்கம், குழந்தை ம. *(2005).* 'நுழைபுலம்'. இணுவில் அறிவாலயம் திறப்புவிழாச் சிறப்பு மலர். *இணுவில்: இணுவில் திருவூர் ஒன்றியம், பக். 3.*

சதுரகராதி *(1928). வீரமாமுனிவர், மதுரை: இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்.*

சம்பந்தன், மா.சு. *(1976). அச்சுக்கலை. சென்னை:தமிழர் பதிப்பகம். ப. 10.*

செல்வராஜா, என். *(2002-).* நூல் தேட்டம்: தொகுதி 1. ஐக்கிய இராச்சியம் : அயோத்தி நூலக சேவைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி. An Etymological and Comparative Lexicon of the Tamil Language. *நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.*

தமிழ் ஆங்கில கலைச்சொற்தொகுதி - *சமூக விஞ்ஞானம் (1961). கொழும்பு: அரசகரும மொழித் திணைக்களம்.*

தமிழ்ச்சொல்லகராதி *(1910-). ஸ்ரீ. கதிரவேற்பிள்ளை. மறுபதிப்பு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

தமிழ் - தமிழ் அகரமுதலி *(1985-). தொகுப்பாசிரியர்: மு.சண்முகம்பிள்ளை. சென்னை: தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்.*

தில்லைநாயகம்,வே. (1978). இந்திய நூலக இயக்கம். *சென்னை: பாரி நிலையம், பக். 70.*

தொல்காப்பியம்: பொருளதிகாரம் *(1934). முதற்பாகம்- சென்னை: சாது அச்சுக்கூடம்.*

நந்தி (2005). 'வீடு, கோவில், பாடசாலை, நூலகம்'. இணுவில் அறிவாலயம் திறப்புவிழாச் சிறப்பு மலர். *இணுவில்: இணுவில் திருவூர் ஒன்றியம், 2005. பக். 10.*

நூல் தேட்டம்: குறிப்புரையுடனான நூல் விபரப் பட்டியல்-தொகுதி 3, *2005.*

புள்ளிவிபரச் சுருக்கம் *(1949-).* [Statistical Abstract] *கொழும்பு: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.*

வாழ்வியல் களஞ்சியம் *(1986-). தஞ்சாவூர் : தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

வின்சுலொவின் ஆங்கில - தமிழ் அகராதி *(1996). 3வது திருத்தி* பெருப்பிக்கப்பட்ட பதிப்பு. *நியூடெல்லி: ஆசிய கல்விச் சேவைகள்.*

வேங்கடசாமி,மயிலை சீனி. (1948). 'பண்டைக்கால எழுதுகருவிகள்'. செந்தமிழ்ச் செல்வி. *டிசம்பர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொக்குவில்

அ

அகரவரிசைச் சொற்கருவூலங்கள் 114, 115, 250
அகராதிகள் xviii, 8, 28, 29, 30, 53, 60, 90, 99, 100, 101, 103, 104, 106, 109, 110, 142, 145, 162, 235, 252, 255, 256, 257, 271, 272, 276
அச்சில் இல்லாத வெளியீடுகள் 265
அச்சிடப்பட்ட சொல்லடைவு 267, 269
அனைத்துலக நூல் விவரப்பட்டியல் 275
அறிவியல் சார்ந்த தகவல் அமைப்புகள் 269
அறிவியல் மேற்கோள் சொல்லடைவுகள் 269
அட்டவணைகள் xvii, 25, 72, 77, 85, 99, 114, 120, 121, 123, 126, 128, 135, 152, 211, 254, 273
அரச வர்த்தமானிகள் 257
அரச வழிகாட்டிகள் 137, 257
அரச வெளியீடுகள் 160, 257
அரிய நூல்கள் 187, 267

ஆ

ஆசிரிய நூல்விவரப் பட்டியல் 251
ஆசிரிய வழிகாட்டி நூல்கள் 273
ஆசிரிய கணிமம் 61, 251
ஆய்வேடு - விளக்க ஆய்வுக் கட்டுரை 273
ஆய்வு மேம்பாட்டு செய்தியறிக்கைகள் 269
ஆய்வு அபிவிருத்தி திட்டமிடற் சேவைகள் 271
ஆய்வுத் தனிப்பொருள் நூல் 269
ஆவணம் சார்ந்த மூலங்கள் 255
ஆவணம் சாராத மூலகங்கள் 264
ஆற்றுப்படுத்தல் சேவை 239, 268
ஆண்டறிக்கைகள் 71, 250
ஆண்டு நூல்கள் 29, 92, 127, 132, 133, 138, 235, 256, 257, 276
ஆரம்ப அச்சு நூல்கள் 258

இ

இயல்வாய்ப்பு அறிக்கைகள் 71, 86, 256
இலக்கிய மீளாய்வு 260
இசைப்பொருள் நூல் விவரப்பட்டியல்கள் 273
இடைத்தர பாவனையாளர் 259
இணைப்பு சேவை 260
இணையத் தளம் 176, 275
இணைக்கப்பட்ட சொல்லடைவுகள் 179, 251
இறாக்கைப் பட்டிகள் 271
இரண்டாம் நிலைப் பருவ இதழ்கள் xvii, 83, 270
இரண்டாம் நிலைத் தகவல் வளங்கள் xvii, 26, 83, 270

உ

உசாத்துணை சேவைகள் xiii, 268
உசாத்துணை வளங்கள் xii, xiii, xiv, xviii, 24, 28, 29, 62, 89, 90, 127, 148, 149, 240, 254, 268
உயிர் அறிவியல் தகவல் சேவை 252
உடனடி உசாத்துணை சேவை 268
உடனடி உசாத்துணை வளங்கள் xviii, 29, 127, 268
உண்மை உருவமைப்பு 268

ஒ

ஒருங்கிணைவுச் சொல்லடைவுகள் 177, 179, 254
ஒரு மொழி சொற்கருவூலங்கள் 263
ஒரு தொகுதிக் கலைக்களஞ்சியங்கள் 264
ஒலி - ஒளிகள் கணிமம் 251
ஒலிமுறை நாடா 266
ஒளிநாடாப் பதிவுகள் 275
ஒளிபுகா நுண்வடிவங்கள் 264
ஒளிபுகு நுண்வடிவங்கள் 274
ஒளிப்பட சாதனங்கள் 266
ஒளிப்பதிவு நாடாக்கள் 202, 275
ஒளித்தட்டுகள் 275

ஓ

ஓவியங்கள் 20, 22, 25, 28, 30, 34, 35, 37, 38, 44, 48, 49, 61, 99, 251, 265
ஓலைச்சுவடிகள் xii, 43, 264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க

கருத்தரங்குகள் 22, 49, 206, 210, 243, 272
கருத்துரைகள் 52, 75, 84, 85, 253
கலாசாரப் பொருட்காட்சி 254
கல்விசார் சமூக வழிகாட்டிகள் 255
கல்வியறிவு அற்றோருக்கான வாசிப்பு 268
கல்வெட்டுகள் 20, 38, 39, 202, 259
கழகக் கோவைகள் 253
கட்புல சொல்லடைவுகள் 178, 275
கட்புலனாகாக் கல்லூரிகள் xviii, 213, 259
கற்பித்தல் கணிமம் 61, 250, 274
கலைப்பொருள்கள் 251
கலைக்களஞ்சியங்கள் xviii, 28, 29, 53, 59, 90, 91, 92, 143, 235, 252, 256, 264, 272
கலைக்களஞ்சிய அகராதிகள் 256
கலைக்களஞ்சிய ஆண்டு நூல்கள் 256
கலைத்திறன்சார் நூல்கள் 251
கணினி முறை நுண்வடிவங்கள் 254
கணினிகள் 3, 254
காட்சி வில்லைகள் 22, 25, 30, 48, 56, 58, 62, 263
காந்த நாடாக்கள் 37, 57, 261
காப்புரிமைகள் 5, 161, 186, 192, 197, 265
'குவோக்' சொல்லடைவுகள் 260
'குவிக்' சொல்லடைவுகள் 259
குறுங்கால எழுத்து மூலங்கள் 184, 256
குறிப்புரை நூல்விவரப்பட்டியல்கள் 250
கூட்டிணைப்புப் பட்டியல்கள் 171, 275
கைநூல்கள் 257
கையெழுத்துப் படிகள் 46, 261
கையெழுத்துப் பதிவேடு 252
கொள்கை வகுப்பாளர் - திட்டவியலாளர் 266
கோட்டுப் படம் 253

ச

சலனப் படம் 263
சஞ்சிகை 175, 261
சாராம்சங்கள் xviii, 29, 30, 62, 88, 90, 181, 185, 190, 191, 192, 249, 251, 258, 259, 270
சாராம்சப்படுத்தல் சேவைகள் 171, 238, 249
சிறு நூல்கள் xvii, 55, 74, 158, 162, 177, 187, 265
சிறப்பு அகராதிகள் 100, 110, 271
சிறப்பு சொல்லடைவுகள் 271
சிறப்புக் கலைக்களஞ்சியங்கள் 271
சிறுவருக்கான நூல் 253
சுயசரிதை 251
சுருக்கக் குறிப்புகள் 256
சுருக்கத் தொகுப்புக்கள் 255
சுழல் முறைச் சொல்லடைவுகள் 269
சுட்டும் சாராம்சங்கள் 190, 258
செய்திக் கடிதங்கள் 67, 70, 172, 173, 189, 263
செய்தித் தாள்கள் 36, 53, 159, 197, 200, 234, 252, 264, 275
செய்தித் துணுக்குகள் சேவை 264
செருகேடுகள் 250
செவிப்புல கட்புல சாதனங்கள் 251
சேர்வுப் பட்டிகள் 249
சொல்லசைவுத் தொகுதிகள் 254
சொல்லடைவுகள் xviii, 29, 30, 60, 62, 90, 96, 100, 143, 150, 161, 172, 177, 178, 179, 180, 181, 186, 187, 193, 249, 251, 252, 253, 254, 258, 259, 260, 263, 265, 266, 267, 269, 271, 272, 273, 274, 275
சொல் செயலாக்கும் கணிமம் 60, 275
சொற்கருவூலங்கள் xviii, 60, 111, 113, 114, 115, 116, 250, 261, 263, 272, 273

த

தயார் நிலை ஆவணங்கள் 270
தலைப்புச் சொல்லடைவுகள் 161, 178, 274
தடை செய்யப்பட்ட ஆவணங்கள் 82, 269
தகவல் பயன்பாடு 4, 259
தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்புச் சேவைகள் 258
தகவல் பகுப்பாய்வு ஒன்றிணைப்பு ஆக்கங்கள் xvii, 29, 85, 86, 258
தகவல் சேவை xiii, xix, 176, 215, 218, 235, 247, 252, 258
தகவல் முறைமைகள் 258
தகவல் மூலங்களுக்கான வழிகாட்டிகள் 257
தகவல் அமைப்பு வளங்கள் 259
தகவல் அணுகுகை 249
தகவல் இடமாற்றம் 259
தகவல் இடைத்தரகர்கள் xix, 214, 258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொழினுட்பம் 10, 259
தகவல் தொடர்பு 63, 258
தகவல் வளங்கள் x, xii, xiii, xiv, xvi, xvii, 13, 19, 21, 22, 23, 24, 26, 27, 26, 27, 28, 29, 30, 66, 83, 87, 89, 154, 176, 216, 217, 258, 267, 270, 273
தகவல் கட்டுமீறல் xii, 4, 5, 21, 32, 239, 258
தனிப்பட்ட நூல் விபரப்பட்டியல்கள் 266
தனிப்பொருள் நூல்கள் xvii, 52, 75, 84, 168, 186, 192, 263
தரவு நூல்கள் 255
தரவுத்தளங்கள் 111, 155, 189, 255
தரவுத்தள முகாமைத்துவ அமைப்புக்கள் 255
தராதரங்கள் 5, 272
திரைப்படத் துணுக்குகள் 256
திரட் சொல்லடைவுகள் 254
துளை அட்டைகள் 250
துணைச் சாதனங்கள் 249
துணைச் சேவைகள் 272
துணுக்கப் படிகள் 270
துண்டு நுண்படங்கள் 272
துண்டுப் பத்திரிகைகள் 260
தூண்டல் கணிமம் 61, 271
தெரிவு நூல் விபரப் பட்டியல்கள் 270
தெரிவு செய்யப்பட்ட தகவல் பரவலாக்கம் பட்டியலாக்கம் 270
தேசப்படங்கள் 135, 145, 146, 161, 163, 164, 168, 211, 257, 261
தேசிய நூல்விபரப் பட்டியல்கள் 158, 263
தொழிநுட்ப அறிக்கைகள் 192, 273
தொடர்பு ஊடகங்கள் 2, 253, 261
தொடர் வெளியீடுகள் xvii, 53, 56, 66, 165, 168, 172, 270
தொலைத்தொடர்பு கணிமம் 61, 273
தொகை நூல்கள் 250
தொகுப்பாக்கங்கள் 52, 75, 84, 254
தொகுக்கும் கணிமம் 60, 255, 272

ந

நடப்பு உசாத்துணை வளங்கள் xviii, 90, 148, 149, 254
நடப்புத் தகவல் அறிவிப்புச் சேவை 218, 254
நிறுவன வழிகாட்டிகள் 137, 259
நிறைவேற்று விதிகள் 249
நினைவுக் குறிப்பு 262
நீண்ட கால உசாத்துணைச் சேவை 261
நுண்படங்கள் 53, 187, 262, 272
நுண்பட வாசிப்புக் கருவி 262
நுண் அச்சுகள் 263
நுண்வடிவங்கள் 36, 53, 187, 235, 243, 254, 262, 264, 274
நுண்வடிவ உபகரணங்கள் 262
நுண் அட்டைகள் 55, 187, 262
நுண் சொற்கருவூலங்கள் 263
நுண் தாள்கள் 262
நூலக சுழற்சிப் பணிகள் 260
நூலக விரிவாக்க சேவைகள் xiii, xix, 242, 260
நூலக விளம்பரம் 244, 260
நூலக வெளியீடுகள் 260
நூலுருச் சாதனங்கள் 47, 253
நூலுருவற்ற சாதனங்கள் 239, 251, 264
நூல்விவரப்பட்டியல்கள் 250, 252
நூல்விவரப் பட்டியல்களுக்கான நூல்விவரப் பட்டியல் 252
நூல்விவர தகவல் சேவைகள் 252
நூல்விவர தரவுத் தளம் 252
நூற்சொல்லடைவுகள் 253
நேர்முக தகவல் அமைப்புகள் 264

ப

பருவ இதழ்ப்பட்டி 265
பருவ இதழ் சொல்லடைவுகள் 62, 265
பருவ இதழ்கள் xvii, 5, 11, 25, 28, 36, 53, 66, 67, 68, 83, 131, 158, 159, 165, 172, 173, 181, 183, 185, 186-189, 193, 197, 200, 204, 205, 216, 217, 234, 243, 246, 257, 265, 266, 267, 270, 275
பருவ வெளியீடுகள் 53, 66, 161, 172, 173, 205
பருவகால ஆணைப் பத்திரம் 271
படைப்பாளர் சாராம்சங்கள் 251
படைப்பாளர் சொல்லடைவுகள் 251
பகுபாய்வுமுறை நூல்விவரப்பட்டியல்கள் 250
பகுப்பாக்க சொல்லடைவுகள் 253
பன்மொழி சொற்கருவூலங்கள் 263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12795

பாராளுமன்றம் சாராத வெளியீடுகள் 195, 264
பாராளுமன்ற விவாத அறிக்கைகள் 265
பிறிசிஸ் சொல்லடைவுகள் 179, 267
பின்னோக்கிய நூல் விபரப்பட்டியல்கள் 269
பின்னோக்கிய தேடுதல் சேவை 269
பிரயோகக் கணிமம் 250, 251
பிரதியாக்க சேவை 218, 269
புவியியல் சாதனங்கள் xviii, 29, 90, 145, 148, 257
புவியியல் அகராதிகள் 30, 53, 145, 256, 257
புறநிலை கணிமம் 60, 266
பூர்ச்சமரப் பட்டை 252
பெயர் குறிப்பிடப்படாத வெளியீடுகள் 250
பெயர்ச் சொல்லடைவுகள் 178, 263
பேசும் நூல்கள் 273
பேரினச் சொற்கருவூலங்கள் 261
பைபிரஸ் 20, 25, 35, 40, 41, 42, 43, 45, 47, 265
பொருள் நூல் விபரப் பட்டியல்கள் 272
பொருள் அகராதிகள் 99, 109, 272
பொருள் ஆக்க விபரங்கள் 271
பொருள் சொல்லடைவுகள் 272
பொருள் கலைக்களஞ்சியங்கள் 272
பொழிப்புகள் 52, 84, 274
பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் 261
பொது அகராதிகள் 100, 256
பொது ஆண்டு நூல்கள் 127, 257
பொதுக்கலைக் களஞ்சியங்கள் 256
போக்கு அறிக்கைகள் 86, 274

ம

மஞ்சள் புத்தகம் 276
மரஅச்சு நூல் 253'
மாநாட்டு இலக்கியங்கள் 190, 254
மாதிரி 22, 25, 26, 30, 50, 51, 76, 128, 133, 138, 146, 219, 220, 228, 233, 263
முறைப்படுத்தப்பட்ட நூல் விபரப் பட்டியல் 272
முறைப்படுத்தப்பட்ட சொற்கருவூலங்கள் 272
முறைமாற்று சொல்லடைவுகள் 266
முறைமை மென்பொருள் 272
முகாமைத்துவ தகவல் சேவைகள் 261
முன் ஒருங்கிணைவுச் சொல்லடைவு 266
முதல் நிலை ஆவணங்கள் 267
மூன்றாம்நிலைத் தகவல் வளங்கள் xvii, 87, 273
மொழி பெயர்ப்பு சேவை 274
மொழி பெயர்ப்புகள் 85, 273, 274

வ

வரிப்படங்கள் 72, 211, 255
வர்த்தக நூல்விவரப் பட்டியல்கள் 253
வர்த்தக வியாபார வழிகாட்டிகள் 137, 274
வர்த்தக இலக்கியங்கள் xvii, 80, 161, 274
வழிப்படுத்தும் நூல்கள் 257
வழிகாட்டிகள் xvii, xviii, 29, 30, 80, 88, 90, 136, 137, 138, 142, 161, 163, 170, 207, 255, 257, 259, 273, 274
வளையச் சொல்லடைவுகள் 269
வகுப்பு தொகுப்பு முறைச் சொல்லடைவுகள் 273
வரவு செலவுத் திட்ட உரைகள் 253
வழிகாட்டிகளுக்கான வழிகாட்டிகள் 255
வரைபடங்கள் 54, 72, 98, 134, 148, 153, 156, 202, 243, 251, 257, 262
வாசகர் வட்டம் 268
வாழ்க்கை வரலாற்று வளங்கள் 143, 252
வாழ்க்கை வரலாற்று அகராதி 252
வார வெளியீடுகள் 161, 275
விடயப் படிநிலை அறிக்கைகள் 272
விளம்பர அட்டை 266
விளக்கச் சாராம்சங்கள் 190, 259
விளக்க ஆய்வுக் கட்டுரைகளுக்கான நூல் விவரப்பட்டியல் 255
விவசாய தகவல் அமைப்பு 249
விவிலிய சொல்லிசைவுத் தொகுதிகள் 252
விபரத்திரட்டுகள் xvii, 85, 267
விலங்குத் தோல் 265
விரிதாள் கணிமம் 60, 250, 272
வெளியிடப்படாத ஆவணங்கள் 82, 275
வெளியீட்டுச் சேவை 267

பொது நூலகம்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்வளங்களும் சேவைகளும்

Information Resources and Services

அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி

தகவல் யுகமொன்றில், 'தகவல் கட்டுமீறல்' என்ற கருத்து நிலையால் மனித சமூகம் திணறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறிந்துகொள்ள, கற்க, கற்பிக்க, கருத்தைத் தெரிவிக்க, பொழுதுபோக்க, ஆராய, புதிதாக அறிய, பிழைதிருத்த, மதிப்பிட என்று பலதரப்பட்ட நோக்கங்களுக்காக நூலகத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொரு வாசகனுக்கும் உள்ளடக்கத்தின் அடிப்படையில் ஆய்வுக்குதவும் அடிப்படை வளங்கள் முதற்கொண்டு யார், எது, எங்கே, எப்போது, எப்படி, ஏன் என்ற கேள்விகளுக்கு விடை தேடுவதற்கு உதவுகின்ற உசாத்துணை வளங்கள் வரையும், உருவமைப்பின் அடிப்படையில் அன்றைய ஓலைச்சுவடிகள் முதற்கொண்டு இன்றைய இணையத்தளம் வரையும் தகவல் வளங்களின் பயன்பாட்டைப் பிரித்தறியும் அறிவு மிக மிக இன்றியமையாதது. இவ் அறிவினை அடைய வழிகாட்டுவதாக இந் நூல் அமைகின்றது.

இந் நூலில் உள்ள பதினாறு அத்தியாயங்களின் மூலம் தாள்களில் உருவான சாதனங்கள் மட்டுமே நூலகத்திற்கு உரியவை என்ற தவறான கருத்துநிலை களைந்தெறியப்படுவதுடன் எம்மைச் சுற்றியுள்ள தகவல் வளங்களையும் சேவைகளையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தவும் வழியேற்படும்.

அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் நூலகராக பணியாற்றும் இவர் தனது சிறப்பு இளமாணிப் பட்டத்தினை யாழ் பல்கலைக்கழகத்திலும், நூலக தகவல் விஞ்ஞானத் துறையில் (BLIS) இளமாணிப் பட்டத்தினை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், ADIS எனும் முதுமாணிப் பட்டத்தினை இந்திய புள்ளிவிபரவியல் நிறுவனத்தின் ஒரு பகுதியான பெங்களூரிலுள்ள ஆவணவாக்கல் ஆய்வு மற்றும் பயிற்சி மையத்திலும் பெற்றவராவார். நூலகவியலின் அனைத்துப் பரப்புகளிலும் ஆழ்ந்தகன்ற ஆய்வறிவைப் பெற்ற இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: நூலகவியல்

ISBN 978-955-659-170-5

9 789556 591705

விலை ரூபா 900.00

#356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org